# நாலடியார்

## மூலமும் உரையும்

D. தினதயாளு நாயுடு B. A.

பி. எல். அருணாசல முதலியார் & பிரதர்ஸ்,
வெளியிட்டது.

ஸ்ரீ

# நாலடியார்

"ஔவைக்குறள்" உரையாசிரியர்

**D. தினதயாளு நாயுடு B. A.**

இயற்றிய உரையுடன்

பி. எல். அருணாசல முதலியார் & பிரதர்ஸ்,
15, படவட்டம்மன் கோயில் தெரு,
பிரம்பூர் பேரக்ஸ் போஸ்டு, சென்னை.

முதற் பதிப்பு—ஜூன் 1943.

சென்னை
வித்தியா ரத்நாகரம் அச்சுக்கூடம்.

# உள்ளுறை


| பொருள் | பக்கம் |
|---|---|
| முன்னுரை | vii |
| நூல் | 1 |
| கடவுள் வாழ்த்து | 2 |

## 1. அறத்துப்பால்

### 1. துறவறவியல்

| | |
|---|---|
| 1. செல்வநிலையாமை | 3 |
| 2. இளமைநிலையாமை | 11 |
| 3. யாக்கைநிலையாமை | 19 |
| 4. அறன்வலியுறுத்தல் | 27 |
| 5. தூய்தன்மை | 34 |
| 6. துறவு | 41 |
| 7. சினமின்மை | 48 |

### 2. இல்லறவியல்

| | |
|---|---|
| 8. பொறையுடைமை | 56 |
| 9. பிறர்மனைநயவாமை | 62 |
| 10. ஈகை | 68 |
| 11. பழவினை | 75 |
| 12. மெய்ம்மை | 81 |
| 13. தீவினையச்சம் | 88 |

## 2. பொருட்பால்

### 1. அரசியல்

| | |
|---|---|
| 14. கல்வி | 95 |
| 15. குடிப்பிறப்பு | 101 |
| 16. மேன்மக்கள் | 107 |
| 17. பெரியாரைப் பிழையாமை | 113 |
| 18. நல்லினஞ்சேர்தல் | 119 |
| 19. பெருமை | 124 |
| 20. தாளாண்மை | 130 |

| பொருள் | பக்கம் |
|---|---|
| **2. நட்பியல்** | |
| 21. சுற்றந்தழால் | 136 |
| 22. நட்பாராய்தல் | 142 |
| 23. நட்பிற்பிழைபொறுத்தல் | 148 |
| 24. கூடாநட்பு | 154 |
| **3. இன்பவியல்** | |
| 25. அறிவுடைமை | 160 |
| 26. அறிவின்மை | 165 |
| 27. நன்றியில்செல்வம் | 172 |
| **4. துன்பவியல்** | |
| 28. ஈயாமை | 177 |
| 29. இன்மை | 183 |
| 30. மானம் | 189 |
| 31. இரவச்சம் | 194 |
| **5. பொதுவியல்** | |
| 32. அவையறிதல் | 200 |
| **6. பகையியல்** | |
| 33. புல்லறிவாண்மை | 205 |
| 34. பேதைமை | 211 |
| 35. கீழ்மை | 216 |
| 36. கயமை | 221 |
| **7. பன்னெறியியல்** | |
| 37. பன்னெறி | 227 |
| **3. காமத்துப்பால்** | |
| **1. இன்பதுன்பவியல்** | |
| 38. பொதுமகளிர் | 233 |
| **2. இன்பவியல்** | |
| 39. கற்புடைமகளிர் | 239 |
| 40. காமநுதலியல் | 246 |
| பிழைத்திருத்தம் | 253 |
| செய்யுண் முதற் குறிப்பு | 254 |

# நாலடியார்

## வழிபடு கடவுள் வணக்கம்

தண்ணார் கடற்கடந்த தாவில்சீர் சுந்தரன்
றிண்ணோ ரடிமைத் திறம்புனையு—நண்ணியமெய்ச்
சேவகன்றன் சேவடியே செம்மைத் துணைநல்கு
நாவகன்ற நாலடியோ தற்கு.

# முன்னுரை

"வெள்ளாண் மரபுக்கு வேதமெனச் சான்றோர்கள்
எல்லாருங் கூடி யெடுத்துரைத்த—சொல்லாய்ந்த
நாலடி நானூறு நன்கினிதா வென்மனத்தே
சீலமுட னிற்க தெளிந்து."

சங்கமருவிய நூல்களுள் ஒன்றாய், உரையாசிரியருள்ளிட்ட பேராசிரியர்களும் கம்பநாடருள்ளிட்ட பெரும்புலவர்களும் எடுத்தாண்ட பெருமை வாய்ந்ததாய், வேளாண் வேதமெனப் பாராட்டப்பட்டதாய் விளங்குவது நாலடியார். இதனை இயற்றியவர் சைன முனிவர்களென்றும், பாண்டிய அரசனை யறிவுறுத்தும் நிமித்தம் எண்ணாயிரவர் இயற்றிய பாக்களில் அழிந்தனபோக ஒழிந்தனவற்றுட் சிறந்தவையான நானூறு பாக்களை 'நாலடியார்' என்னும் மகுடஞ் சூட்டிப் "பதுமனார்" என்ற பிற்காலத்துப் புலவர் ஒருவர் வகுத்தருளினார் என்றும் வரலாறு கூறுவர். இந்நூலின் செவ்விய நடையும், திண்ணிய கருத்தும், ஊன்றிக் கற்பார்க்குப் புலனாம்.

இது சங்ககாலத்து நூலாதலின் இற்றைக்கு இரண்டாயிரம் யாண்டுகட்கு முன்னர் இயற்றப்பட்டதென்க. இதன்கண் குறிப்பிட்ட சில வழக்க வொழுக்கங்கள் பிற்காலத்தி லிறந்தனபோலும்.

நாலடியாரின் பாக்கள் பல, புறத்திரட்டு * என்னும் தொகைநூலில் எடுத்தாளப்பட்டுள்ளன. இது பிற்காலத்தில் ஒரு புலவரால் திருக்குறளின் அதிகாரமுறையைத் தழுவிப் பல நூற்களின்றும் திரட்டப்பட்டதாகும்; மற்றைத் தொகை நூற்கள்போலல்லாது தான் எடுத்தாளும் நூலின் பெயரைக் குறிப்பிடும் தனிப்பெருமையுடையது. அதிற் கண்ட பாடபேதங்கள் இந்நூற் பதிப்புக்குப் பெரிதும் உதவின. அந்நூலுள் அடங்கிய நாலடியாரின் செய்யுட்கள் இந்நூலுள் ஆங்காங்குக் குறிப்பிடப்பட்டுள்ளன.

* இந்நூலை ஸ்ரீ S. வையாபுரிப்பிள்ளையவர்கள் பதிப்பித்துள்ளார்.

இந்நூலுக்குச் சிற்றுரை எழுதுமாறு என்னைத் தூண்டியும் ஊக்கங் குறைந்தவிடத் தென்னையூக்கியும் உதவிய பதிப்பாளர்க்கு என் நன்றி யுரித்து. இவ்வரிய பணியில் என்னை யுய்த்த முழுமுதற் பொருளுக்கு என்றும் கடமைப் பட்டவனாவேன். இந்நூற்குரை பெரியோர்களே செய்தற் குரியர்; ஆதலின் இவ்வுரையிற் குற்றங் குறைகள் இருப்பன வியப்பன்று; அவற்றைக் களைந்து குறைபெய்து வாசித்தல் அப் பெரியோர் கடனன்றோ?

சென்னை,
10-5-1943.

D. தீனதயாளு.

உ

கடவுள் துணை

# நாலடியார்

"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியோ டேலாதி என்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு."

என ஆன்றோரால் வரையறுக்கப்பட்ட சங்கநூற் பதினெண் கீழ்க்கணக்கில் முதன்மையாகக் கொள்ளப்பட்டது நாலடி நானூறு என்னும் நூலாகும். இது திருக்குறளோடு ஒப்ப மதிக்கப் பட்டுச் சங்க கால முதற்கொண்டு எல்லா ஆசிரியர்களாலும் பயில வழங்கப்பட்டு வருவது. இதன் பெருமையை "ஆலும் வேலும் பல்லுக் குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி" என்ற வசனத்தாலும்,

"நாலடி வள்ளுவ ராமேயிப் பாலை நடந்தபெருங்
காலடி மேலடி மானடி யேகட் டுரலிற்பட்ட
பாலடி சில்வெண்ணெ யுண்டோ னரங்கன் பனிவரையில்
வேலடி முள்ளுக் குபாயமிட் டேகும் விரகுநன்றே."

என்ற உடன்போக்குத் துறைச் செய்யுளாலும் நன்கறியலாம்.

இந்நூல் நான்கடியாலாகிய வெண்பாவால் யாக்கப்பட்டதாதலின் அளவு நோக்கி நாலடி என்ற பெயர் பெற்றது. 'திருக்கோவையார்' 'திருஞானசித்தியார்' என்ற நூற்பெயர் போலச் சிறப்பு நோக்கி 'ஆர்' விகுதி பெற்று நின்றது. நான்காகிய அடிகளாலாகியது எனப் பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக் காரணப் பெயர்.

இந் நூலை இயற்றினவர் ஒருவரல்ல; சமணப் புலவர்கள் பலர் இயற்றியவற்றின் தொகை நூலாம். இதனைத் தொகுத்தவர் பதுமனார் என்றும் அவர் இதற்குப் பால் இயல் வகுத்து உரை கண்டனர் என்றும் உரைப்பர். இதன்கண், சமண சமயக் கொள்கைகள் மலிந்து வழங்கும். ஆசிரியர் நச்சினார்க்கினியர் தமது சிந்தாமணியுரையில் 'பிறரும் இச்சமயத்தார் "சிறுகா பெருகா முறை பிறழ்ந்து வாரா" (நாலடி—110) என்றதனானும் உணர்க.' என்றுரைத்ததே இதனை வற்புறுத்தும்.

---

# நாலடியார்

## கடவுள் வாழ்த்து

அஃதாவது தான் எடுத்துக்கொண்ட காரியம் இனிது முடிதற் பொருட்டுத் தான் வழிபடு கடவுளையேனும், ஏற்புடைய கடவுளையேனும் வழுத்துதல். இது நீதிநூலாதலின் ஆசிரியரது வழிபடு கடவுளாகிய அருகக் கடவுளைக் குறித்தது. இதனை இயற்றினவர் இந்நூலைத் தொகுத்த பதுமனார் என்ப.

வானிடு வில்லின் வரவறியா வாய்மையாற்
கானிலந் தோயாக் கடவுளை—யாநிலஞ்
சென்னி யுறவணங்கிச் சேர்துமெம் முள்ளத்து
முன்னி யவைமுடிக வென்று.

இதன் பொருள் :—வான் - மேகத்தில், இடு - தோன்றுகின்ற, வில்லின் - இந்திரவில்லை ஒத்த, வரவு - பிறப்பு உண்டாதலை, வாய்மையால் - உண்மையறிவால், அறியா - உணர்ந்து, கால் நிலம் தோயா - நிலத்தில் தம் பாதம் படிதலில்லாத, கடவுளை - அருகமூர்த்தியை, சென்னி - எமது சிரம், நிலம் உற - பூமியிற் படியுமாறு, வணங்கி - வழுத்தி, முன்னியவை - யாம் உரைக்க நினைத்தவையான அறம் பொருள் இன்பமென்னும் முப்பால்களும், முடிக என்று—இனிது முடிவுபெறுதல் வேண்டும் என்று நினைத்து, யாம் சேர்தும் - நாம் அடைவோம் என்றவாறு.

வருதல் - உலகில் உடம்புடன் பிறத்தல். மேகத்தில் தோன்றி மின்னல் மறைதல்போல், உலகில் பிறந்து உடல் மாயும் என்னும் தத்துவம் விளக்க, வில்லின் வரவு என்றார்; இன் - ஒப்புப்பொருளின் ஐந்தன் உருபு; தொழில் உவமை. பிறப்பின் தத்துவத்தை அறிதல் உண்மை ஞானத்தினால் மட்டில் முடியும் என்பது கூற, வாய்மையால் அறியா என்றார். அறியா, 'செய்யா' என்னும் எச்சம்.

இனி * "மற்றவன் தேவனாகி வானிடு வில்லின் தோன்றி" என்றதற்கு 'இந்திரவில்லை ஒப்பத் தேவர்கள் தோன்றி மறைவார்கள்' என நச்சினார்க்கினியர் உரை கூறி இச்செய்யுளை மேற்கோள் காட்டியதால், வில்லைப்போல் தோன்றும் கடவுள் வருகையை அறிந்து, எனப் பொருள் கொள்ளினுமாம்.

வான் - இடவாகு பெயராக மேகத்தைக் குறித்தது. கானிலந் தோயாக் கடவுள் - அருக மூர்த்தி. நிலம் தோயா, நிலம் உற என வந்தவை முரண்தொடை. மெய்ம்மை - ஆகுபெயர். மெய்ம்மையால் அறியா என மாறுக.

---

* சிந்தாமணி.

# 1. அறத்துப்பால்

அஃதாவது விதித்தவை கொள்ளலும், விலக்கியவை தள்ளலும். மனித வாக்கத்துக்கு இன்பமும் உறுதியும் தரவல்லன நால்வகைப் புருடார்த்தங்களாம். அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன. அவற்றுள் அறமும், பொருளும், இன்பமும் எய்த வீடு எய்தப்பெறும் ஆதலாலும், அவ் வீடுதான் மனதாலும், வாக்கினாலும் அறிய முடியாதாகலானும், அதனை நீக்கி மற்றை மூன்றினையே ஆன்றோர் பயில வழங்குவர்.

அவற்றுள் அறமாவது, இம்மை, மறுமை, வீடு, மூன்றினையும் அளிக்கத் தக்கது; ஆன்றோரால் செய்ய வேண்டும் என விதிக்கப்பட்டவற்றைச் செய்தலும், கூடாதென விலக்கப்பட்டவற்றை நீக்குதலும் ஆகும்.

## துறவறவியல்

அவ் அறந்தான், இல்லறம், துறவறம் என இருவகைப்படும். இவ் இரண்டனுள் துறவறமே சிறந்ததாய் வீடு பேற்றுக்கு ஏணியாய் அமைந்திருத்தலின், துறவறத்தை முற்பட உரைத்தார்.

---

## முதல் அதிகாரம். செல்வ நிலையாமை

அஃதாவது செல்வம் நிலையில்லாமல் அழியும் தன்மையது. துறவின் நிலையை அடைதற்கு ஒருவற்கு அவனது செல்வமும், இளமையும், உடல் வனப்பும் இடையூறாகும் என்றும், அவற்றின் நிலையாமை அறியின், அவற்றை வெறுத்துத் துறவின்கண் விருப்புறுவான் என்றும் கருதி, முதலில் செல்வத்தின் அழியும் தன்மையை உரைக்கலாயினார்.

1. அறுசுவை யுண்டி யமர்ந்தில்லா ளூட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும்—வறிஞராய்ச்
சென்றிரப்ப ரோரிடத்துக் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று.

இ-ள். அறுசுவை-அறுவகைச் சுவையுடைய, உண்டி-உணவை, அமர்ந்து-விரும்பி, இல்லாள்-மனைவி, ஊட்ட - ஊட்டுதல் செய்ய, மறு சிகை - மற்றொரு கவளத்தை, நீக்கி - தள்ளி, உண்டாரும் - உண்டவர்களும், வறிஞராய் - தரித்திரராய், ஓரிடத்து - வேறோரிடத்தில், சென்று-போய், கூழ்-கூழினை, இரப்பர்-பிச்சை எடுப்

பார்கள், எனில் - என்றால், செல்வம் ஒன்று-செல்வம் என உரைக்கப்படுவதொன்று, உண்டு ஆக - நிலையாக உள்ளது என, வைக்கற்பாற்று-மனதில் கருதப்படத் தக்கது, அன்று-அல்ல எ-று.

அறுசுவைப் போசன பதார்த்தங்களை மனையா ளூட்ட அருந்திய செல்வர்களும் ஓரிடத்திற் போய்க் கூழை இரந்துண்பாரானால் செல்வம் ஒரு பொருளாக மதிக்கத் தகுந்ததல்ல என்றபடி.

அறு சுவையாவன : இனிப்பு, புளிப்பு, கைப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு. இவை கலந்த உண்டி என்க. அமர்தல் - விரும்புதல். "அகனமர்ந்து செய்யாள் விரும்பும்" * என வருதலும் காண்க. நாயகன் நலன் கருதி அவன் விரும்புவனவற்றையே அறிந்து மனைவி ஊட்டுதலின் அமர்ந்து என்றார். பணியாளர் பலரிருப்பினும் மனைவியே ஊட்டப் பெறுதல் செல்வத்தின் செருக்கு என்க. உண்ணும் பொருள் பல சுவையினவாய், ஒவ்வொரு வகையில் ஒரு கவளமே பசியை அடக்கி விடுதலின், மறு கவளம் வேண்டாம் என மறுத்தலைக் குறிக்க, 'மறு சிகை நீக்கி' என்றார். சிகை - கூந்தலின் முடி ; அதுபோல உண்டியின் கவளம் எனப் பொருள்பட்டது, உவம வாகுபெயர்.

சிகை படைத்த சாதமென்றும் ஒரு பிடி சோறென்றும் உரைப்பர் ; முற்சிகை நீக்கிப் பிற்சிகை யுண்டாருமெனக் கொள்ளினு மமையும்.

இல்லாள்-இல்லுக்கு உரியவள். மறு சிகை-பண்புத்தொகை, வினைத் தொகை யல்ல. கூழ்-பொதுவாக உணவைக் குறித்தது. உண்டு-உள்ளது ; குறிப்பு வினைப் பெயர். சென்று கூழ் இரப்பர் என மாறுக. (1)

2. துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்கால் போல வரும்.

இ-ள். அகடு-நடுநிலைமை, உற-பொருந்த, யார்மாட்டும்-யாவரிடத்தும், செல்வம்-ஐசுவரியம், நில்லாது-நிற்காது, சகடம்-தேரின், கால்போல்-உருளையைப்போல, வரும்-கீழ் மேலாகவும் மேல் கீழாகவும் வருமாதலால், துகள்-குற்றம், தீர்-நீங்கிய, பெரும் - பெரிய,

* குறள்—84.

செல்வம்-ஐஸ்வரியம், தோன்றியக்கால்-கிடைத்தால், தொட்டு-அது கிடைத்த காலந்தொடங்கி, பகடு-எருமை, நடந்த-உழுத (பயனால் கிடைத்த), கூழ் - உணவை, பல்லாரோடு - பலருடன், உண்க - யாவனும் உண்ணக் கடவன் எ-று.

செல்வமானது யாவரிடத்து நில்லாது தேர்ச் சக்கரம்போலக் கீழ்மேலாய் மேல்கீழாய் வருமாதலால், செல்வங் கிடைத்தால் பலருடனு முண்ணக்கடவன் என்பதாம். செல்வம் நிலைத்திராதாதலின், அதனை ஈட்டுவதும் தீவினை ஒழித்து ஈட்டுக என்பார் 'துகள் தீர் செல்வம்' என்றும், அஃது உண்டாகிய நாண்முதலே நல்வழியில் செலவிட வேண்டுமெனத் 'தோன்றியக்கால் தொட்டும்' என்றும் உரைத்தார். செல்வத்தைப் பல நெறியிலும் ஈட்டுதல் கூடுமெனினும், 'மேழிச் செல்வம் கோழை படாது' என்னு முதுமொழிக் கிணங்கப் பகடு நடந்த கூழினை உணர்த்தினார். பகடு நடந்த கூழ் - எருமை உழுது அதனால் அடையப்பெற்ற உணவு. கூழ்-உணவினைக் குறித்தது. விருந்து உறவினரை உட்படுத்தப் 'பல்லாரோடு உண்க' என வந்தது. சகடக்கால்-தேருருளை; உவமையணி. சகடம் - வட சொல்.

தோன்றியக்கா லென்பது வினையெச்சம்; பெயரெச்சமாகில் ஒற்றுமிகாது. சகடக்கால் - ஆறன் தொகை. உண்க - விதித்தற் பொருளின் வியங்கோள். மாட்டு-மாடு, ஏழனுருபு. இஃது இன்னிசை வெண்பா. (2)

3. *யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரு—மேனை
வினையுலப்ப வேறாகி வீழ்வர்தாங் கொண்ட
மனையாளை மாற்றார் கொள.

இ-ள். யானை-யானையினது, எருத்தம்-பிடரி, பொலிய-(தான் இருத்தலால்) பிரகாசிக்க, குடை-வெண்குடையின், நிழற்கீழ்-நீழலின்கீழே, சேனை-சதுரங்க சேனைக்கும், தலைவராய்-முதல்வராய், சென்றோரும்-உலாவிச் சென்ற அரசர்களும், ஏனைவினை-தீவினை, உலப்ப-கெடுக்க, வேறாகி-அந்நிலையினின்றும் வேறுபட்டு, தாம் - தாங்கள், கொண்ட - இல் வாழ்க்கைக்குத் துணையாகக் கொண்ட, மனையாளை-மனைவியையும், மாற்றார்-பகைவர், கொள - கைக்கொள்ளும்படி, வீழ்வர்-நலிந்து தாழ்வடைவார்கள் எ-று.

* புறத்திரட்டு—430.

சதுரங்க சேனைக்குத் தலைமை பெற்றிருந்தவர்களும் நல்வினை நீங்கத் தீவினையின்பயனால் தங்கள் பதவியை இழந்ததோடு தங்கள் மனைவியையும் பகைவர் கைக்கொள்ளும் இழிய நிலையை அடைவார்கள். உம்மை உயர்வு சிறப்பும்மை.

சதுரங்கமாவன: யானை, குதிரை, தேர், காலாள் என்பன. எருத்து - கழுத்தின் முன் இடம். தலைவர்கள் ஆங்கு அமருவதால் எருத்தம் அழகுபெற்றதெனில். தலைவர்களது அழகு சொல்லாமலே விளங்கும். பொலிய-பொலியுமாறு: காரியப் பொருளில் வந்த வினை எச்சம். மனையாளை அன்றி மற்றைச் செல்வமும் இழப்பர் என எச்சவும்மை தொகுத்தலாயிற்று.

தலைவராகச் செய்த நல்வினையை அழிக்கும் தீவினை எனக் கூறவும் அஞ்சி 'ஏனைவினை' என்றார். இனி ஏனைவினை-நல்வினை, உலப்ப - வற்றிப்போக எனக் கொள்வதுமாம். மாற்றார் - மாறுபட்டவர், பகைவர். (3)

4. நின்றன நின்றன நில்லா வெனவுணர்ந்
தொன்றின வொன்றின வல்லே செயிற்செய்க
சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன்
வந்தது வந்தது கூற்று.

இ-ள். வாழ்நாள் - ஆயுள்கள், சென்றன சென்றன - போயின போயின, செறுத்து - கோபித்து, உடன்-விரைவுடன், கூற்று - இயமன், வந்தது வந்தது - வந்தான் வந்தான் (ஆதலால்), நின்றன நின்றன - பொருந்தி நின்றனவாகிய பொருள்கள், நில்லா என - நிலை பெற்றிரா என, உணர்ந்து-அறிந்து, ஒன்றின ஒன்றின - முடிக்கக் கூடிய செயல்களை (தருமத்தை), செயின்-செய்யக்கருதின், வல்லே-சீக்கிரத்தில், செய்க - செய்யக்கடவன் எ-று.

ஆயுள்கள் போயின, இயமன் விரைந்து வந்தான்; நின்றனவான செல்வங்கள் நில்லாவெனவறிந்து, பொருந்திய தருமங்களைச் செய்யக்கருதினால் சீக்கிரஞ் செய்யக்கடவன் என்றவாறு. சென்றன சென்றன - வந்தன வந்தன, இவை விரைவின்கண் இரட்டித்தன. இவை முறையே நிகழ்காலமும், எதிர்காலமும் குறிப்பவை தெளிவு பற்றி இறந்தகாலத்தில் வந்தன. தேவர்களை இருதிணையினும் கூறுவது மரபாதலின் 'கூற்றுவந்தது' என ஈண்டு அஃறிணை வினைபெற்றது. உடலையும் உயிரையும் கூறுசெய்தலின் கூற்று எனப்பெயர் வந்தது. செயின் வல்லே செய்க என மாறுக. (4)

5. என்னுனு மொன்றுதங் கையுறப் பெற்றக்காற்
பின்னுவ தென்று பிடித்திரா—முன்னே
கொடுத்தா ருயப்போவர் கோடிறீக் கூற்றந்
தொடுத்தாறு செல்லுஞ் சுரம்.

இ-ள். என்னுனும் - யாதாகிலும், ஒன்று - ஒருபொருள், தம்-தமது, கை - கையில், உற - பொருந்த, பெற்றக்கால் - பெற்றால், பின் ஆவது என்று-பின் நமக்குப் பயன்படுவதாகும் என்று கருதி, பிடித்திரா - பிடித்திராமல், முன்னே - முற்பட்டு, கொடுத்தார் - கொடுத்தவர்கள், கோடு-தன் செய்கையிற் கோட்டம், இல்-இல்லாத, தீ - பொல்லாத, கூற்றம் - இயமன், தொடுத்து - பாசத்தாற்கட்டி, செல்லும் - கொண்டுபோகும், சுரம் - பாலைவனத்தினது, ஆறு - வழியை, உயப்போவர் - பிழைத்துப் போவார்கள் எ-று.

காலையின் மலர்ந்த மலர் மாலையி னுலர்ந்தழியுமாறுபோற் செல்வமழிதல்பற்றி முன்னே கொடுத்தல் வேண்டும் என்றார். எக்காலத்தேனும் எப்பொருளேனும் கிடைத்ததைத் தன் ஆயுளில் கொடுத்தவன் நரகதுன்பம் இன்றி நல்வினைப்பயனால் வீடுபெறுவான் என்றபடி. கையிற் பெறுவன தனக்கேயன்று "செல்வத்தின் பயனே யீதல்" * என்றபடிக் கிடைத்தவற்றைப் பிறர்க்குத் தருதலே சிறப்பென்றார். பின் ஆவது - பின் நாளில் (முதுமையில்) பயன்படுவது. அதனைப் பிறர்க்குக் கொடுக்காமல் சேமித்து வைக்கின்றதைக் குறிக்கப் 'பிடித்து' என்றார். கூற்று தன் நடுநிலைமையில் மாறாமல் நல்லார் அல்லார் என்று வேற்றுமை கருதாமையால் கோடு இல் என்றும், தீவினைப்பயனை அடையச் செய்வதில் இரக்கம் காட்டாமையின் 'தீக்கூற்று' என்றும் குறித்தார். உய-உய்ந்து, சுரம-பாலையின் வழி, வடசொல். (5)

6. இழைத்தநா ளெல்லை யிகவா பிழைத்தொரீஇக்
கூற்றங் குதித்துய்ந்தா ரீங்கில்லை—யாற்றப்
பெரும்பொருள் வைத்தீர் வழங்குமி னாளைத்
தழீஇந்தழீஇந் தண்ணம் படும்.

இ-ள். இழைத்த - தமக்களவு செய்த, நாள் - நாள்கள், எல்லை-தம்மளவை, இகவா - கடத்தலில்லை, கூற்றம் - இயமனை, பிழைத்து-தப்பி, ஒரீஇ-நீங்கி, குதித்து-அவன் ஆட்சியைக்கடந்து, உய்ந்தார்-பிழைத்தவர்கள், ஈங்கு-இவ்வுலகத்து, இலலை - இல்லை, (எனவே)

* புறம்.

நாளை-நாளையே, தழீஇந் தழீஇம்-தழீஇந் தழீஇமென்னு மோசையுடனே, தண்ணம்-பிணப்பறை, படும் - ஒலிக்குமாகையால், ஆற்ற-மிகவும், பெரும் - பெரிய, பொருள் - பொருளை, வைத்தீர் - தேடி வைத்தவர்களே, வழங்குமின் - அப்பொருளை அனைவர்க்கும் கொடுங்கள் எ-று.

இழைத்த-அளவிட்ட. கூற்றத்தைப் பிழைத்து ஒரீஇ குதித்து உய்ந்தார் என்க. உய்ந்தார் - வினைப்பெயர். ஒரீஇ - ஒருவி; சொல்லிசை யளபெடை. தழீஇம் - இயற்கை யளபெடை, அடுக்கிவந்து ஒலிக்குறிப்புந் தந்தது. தண்ணம்-தண்ணுமை என்னும் சாக்காட்டுப்பறை. நாளை - நெருங்கிய எதிர்காலத்தைக் காட்டவந்த குறிப்புச்சொல்.

தண்ணம் தழீஇம் படும் என்று வேறுவகையால் மரணத்தைக் காட்டுவதால் இது பிறிது மொழிதலணி. இப்பாவில் எதுகையும் மோனையும் தொடர்பின்றி வந்துள்ளன. இது பலவிகற்ப நேரிசை வெண்பா. (6)

7. தோற்றஞ்சான் ஞாயிறு நாழியா வைகலுங்
கூற்ற மளந்துநுந் நாளுண்ணு—மாற்ற
அறஞ்செய் தருளுடையீ ராகுமின் யாரும்
பிறந்தும் பிறவாதா ரில்.

இ-ள். தோற்றம்-விளக்கம், சால்-மிகுந்த, ஞாயிறு-சூரியனை, நாழியா - அளவுக் கருவியாக, வைகலும் - தினந்தோறும், கூற்றம்-இயமன், அளந்து - அளவிட்டு, நும் - உங்களுடைய, நாள் - ஆயுளை, உண்ணும் - உண்பானுகையால், ஆற்ற-மிகவும், அறம்-தருமத்தை, செய்து - பண்ணி, அருளுடையீராகுமின் - கிருபையுடையீராகுங்கள் (இன்றேல்) யாரும் - யாவரும், பிறந்தும் - மனிதப் பிறப்பிற் பிறந்தும் (அறஞ்செய்யாராகில்), பிறவாதாரில் - பிறவாதவர்களில் (வைத்தெண்ணப்படுவர்) எ-று.

தோற்றம்-விளக்கம் "தோற்றஞ்சால் தொகுபொருள்" * என்றதுபோல; உதித்தல் என்னும்பொருள் ஈண்டுச் சிறப்பில்லை. சால்-உரிச்சொற்றிரிபு. சூரியனை நாழிகையாகவும், மனிதனது வாழ்நாள் உண்ணும் தானியமாகவும் கொள்க. இஃது ஏகதேச உருவக அணி.

பிறந்தவர், வினைப்பயனை நுகர்ந்து இறுதியான சுவர்க்கத்தை அடையும் வழியை முயல்வார்கள் ஆதலின், அம் முயற்சிக்குத்

* கலித்தொகை.

துணையான அறத்தைச் செய்யாவிடின், பிறவியின் பயனையடைய முடியாதென்பது கருதிப் 'பிறவாதாரில்' என்றார். எண்ணப்படும் என்ற வினை வருவிக்க. "பேசாத நாளெல்லாம் பிறவாநாளே" (தேவாரம்) என்றதும் காண்க. (7)

8. * செல்வர்யா மென்றுதாஞ் செல்வுழி யெண்ணாத
புல்லறி வாளர் பெருஞ்செல்வ—மெல்லிற்
கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போற் றோன்றி
மருங்கறக் கெட்டு விடும்.

இ-ள். செல்வர் - செல்வமுள்ளோர், யாமென்று - நாமென்று, தாம்-தாங்கள், செல்வுழி-செல்லுமிடத்து (உள்ளோரை), எண்ணாத-மதியாத, புல்-அற்ப, அறிவாளர்-அறிவுடையாரது, பெரும்-பெரிய, செல்வம் - ஐசுவரியம், எல்லில் - இராக்காலத்தில், கரும் - கரிய, கொண்மூ - மேகமானது, வாய்திறந்த - வாய்விடப்பட்ட, மின்னுப் போல்-மின்னலைப்போல, தோன்றி - உண்டாகி, மருங்கு - இருந்த இடமும், அற-தெரியாதபடி, கெட்டுவிடும்-கெட்டுப்போம் எ-று.

செல்வுழி-செல்லும் திசையில், உள்ளோரை என ஒருசொல் வருவிக்க. செல் உழி எனப்பிரித்து வகரமாகிய மெய்யீற்று உடம்படுமெய் தந்து கூறுக. தம் செல்வத்தின் பெருமிதத்தால் பிறரை மதியாமை கருதிப் 'புல்லறிவாளர்' என்றார். எல்-சண்டு, இரவு. இரவில் இருள்மிகுந்த மேகத்தின் அகத்தில் மின்னல் ஒளியைக் காட்டி மறைதல்போல, நல்வினையின் இடையில் செல்வம் தோன்றி மறையும் என்றவாறு. மின்னல், செல்வத்தின் நிலையின்மைக்குத் தொழிலுவமை. மின்னல்தோன்றி மறையின் முன் காணப்பெற்ற மேகமும் காணப்பெறாமைபோல, செல்வம் தோன்றி மறைந்தபின் முந்திய நிலையினும் தாழ்மை உண்டாகும் என்க. மருங்கு - அருகு, சண்டு இடம். (8)

9. † உண்ணா னொளிநிறா னோங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தானென் றெண்ணப் படும்.

இ-ள். உண்ணான் - உண்ணாதவனாகவும், ஒளி - பிரகாசத்தை, நிறான் - நிறுத்தாதவனாகவும், ஓங்கு - மேம்பட்ட, புகழ்செய்யான்-

* புறத்திரட்டு - 343. எல்லிக்-என்றும் பாடம்.
† ,, 341.

கீர்த்திக்குரியவற்றைச் செய்யாதவனாகவும், துன் - அடைதற்கு, அரும்-அரிய, கேளிர் - சுற்றத்தாருடைய, துயர்-துன்பத்தை, களையான் - நீக்காதவனாகவும், கொன்னே - பயன் கருதாமல், வழங்கான்- கொடாதவனாகவும், பொருள் - திரவியத்தை, காத்து - காத்துக் கொண்டு, இருப்பானேல் - இருப்பானானால், அஆ - ஐயோ, இழந்தானென்று - இவன் பொருளை யிழந்தானென்று, எண்ணப்படும்-யாவராலும் எண்ணப்படுவான் எ-று.

பொருளைத் தேடிச் செலவிடாது வைத்துக் காத்திருந்தவன் பொருளை யிழந்தானென்று யாவராலும் நினைக்கப்படுவான் என்பதாம். ஒளி-ஒருவன் வாழ்நாளிலே எல்லாராலும் நன்கு மதிக்கப்படுதல். புகழ்-இறந்தபிறகும் இவ்வுலகில் என்றும் அழியாமல் நிற்கும் கீர்த்தி; இது மறுமைக்கும் உதவும் செயல். இதனை "ஒளிமாழ்கும் செய்வினை," (653) "ஒளியொருவற்குள்ள வெறுக்கை" (971) என்ற திருக்குறள் உரைகளிற் காண்க.

உண்ணான், நிறான், செய்யான், களையான், வழங்கான் என்பன வினையாலணையும் பெயர், எச்சமாக வந்தன. அடைதற்கு அரிய உறவினரென்று விளக்கத் 'துன்னருங் கேளிர்' என்றார். கொன்னை - பயனின்மை காட்டும் இடைச்சொல்: பிரதிபலன் கருதாது என்றபடி; இனிக் கொன்னே காத்திருப்பான் எனினுமாம். வழங்குதல் - மிகுதியாகக் கொடுத்தல். அஆ வென்றது - அருளின்கட் குறிப்பு, விட்டிசைத்ததனால் தனிக்குறில் முதலில் நேரசையாயிற்று. (9)

10. * உடாஅது முண்ணாதுந் தம்முடம்பு செற்றுங்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார்—கொடாஅது
வைத்தீட்டி னாரிழப்பர் வான்றோய் மலைநாட
உய்த்தீட்டுந் தேனீக் கரி.

இ-ள். வான்-ஆகாயத்தை, தோய்-அளாவும், மலை-மலைகளடங்கிய, நாட - நாட்டையுடைய (பாண்டியனே), உடாஅதும் - உடுக்காமலும், உண்ணாதும் - உண்ணாமலும், தம் - தங்களுடைய, உடம்பு- உடலை, செற்றும் - வருத்தியும், கெடாஅத - பலன் கெடுதலில்லாத, நல்-நன்மையாகிய, அறமும் - தருமங்களையும், செய்யார் - செய்யாதவர்களாய், கொடாஅது - ஏழைகளுக்கு யாதுங்கொடாது, வைத்து- சேமித்து, ஈட்டினார்-மேலும்மேலும் பொருளைச் சம்பாதித்தவர்கள், இழப்பர்-அப்பொருளை இழப்பார்கள், தேன்-மலர்த்தேனை, உய்த்து-

* புறத்திரட்டு-342.

ஆராய்ந்து கொணர்ந்து, ஈட்டும் - சேர்த்துவைக்கும், ஈ-தேனீ, கரி-அதற்குச் சான்று ஆகும் எ-று.

காலைமுதல் மாலைவரை பலபூக்களில் குடைந்து தானுமுண்ணாது தேனீ சேமித்தபோதினும், அத்தேனைப் பிறர் களவாடுதல் போலப் பிறருக்குக் கொடாமல சேமித்து மேலும் மேலும் சேர்க்கும் செல்வத்தையும் பிறர் கைக்கொள்வர் என்றது உவமையணி. பிறர்க்கு ஈயாவிடினும் தானே யாயினும் நுகர்தல் இன்மைகாட்ட, உடாதும், உண்ணாதும் செற்றும் என்றார். உடலை வருத்தல்-பசியை அடக்கி அவ்வழிப் பொருளை மிகுதிப்படுத்தல். தருமஞ் செய்தார்க்கு அழியாத நன்மை பயத்தலால் 'கெடாத' என்றும், எஞ்ஞான்றும் தீமை தாராதெனை 'நல்' என்றும் கூறினார். வைத்து-சேமித்து. "ஈயா தீட்டில் தீயார் கொள்வர்" என்ற ஔவையார் (கொன்றைவேய்ந்தன்) வாக்கும் ஒப்புநோக்குக.

உடாஅதும், முதலிய அளபெடை மூன்றும் செய்யுளிசை நிறைக்கவந்தன; அவை அடுத்து வந்தமையால் அளபுத்தொடையாம்.

நாட்டுக்கு வளம் தருவது புனல்; அதனைத் தருவது மலையாதலால் மலைநாட என்றார். இச் செய்யுட்கள் பாண்டிய மன்னனைக் குறித்துச் செய்தவை என்பது ஆன்றோர் வசனம்; ஆதலின் பாண்டியன் எனப் பொருளுரைக்கப்பட்டது. இங்ஙனம் ஓர் ஆண்மகனை முன்னிலைப்படுத்தி உரைத்தல் ஆடூஉ முன்னிலை எனப்படும்.

செல்வநிலையாமை முற்றிற்று.

## 2-ஆம் அதிகாரம். இளமை நிலையாமை

அஃதாவது இளமைப்பருவம் நிலை நில்லாமையாம். துறவுக்கு இடையூறான செல்வம் நிலைத்திராமை உரைத்து, அச்செல்வம் இல்வழியும இளமைப் பருவத்தில் சிற்றின்பத்தை விழைதல் இயல்பு ஆதலின், அவ் இளமைபபருவமும் நிலைத்தலின்றி அழியும் என விளக்குவதற்கு, 'செல்வ நிலையாமை'க்குப் பின் இது வைக்கப்பட்டது. இளமை - பதினாறுமுதல் முப்பத்திரண்டு ஈறு ஆன யௌவன பருவம்.

11. * நரைவரு மென்றெண்ணி நல்லறி வாளர்
குழவி யிடத்தே துறந்தார்—புரைதீரா

* புறத்திரட்டு 358. புரைதீர்ந்த என்றும் பாடம்.

மன்னு விளமை மகிழ்ந்தாரே கோலூன்றி
இன்னுங் கெழுந்திருப் பார்.

இ-ள். நரை-முதுமைப்பருவம், வருமென்று-வருவது நிச்சய மென்று, எண்ணி-நினைத்து, குழவியிடத்தே-இளமைப் பருவத்தில், துறந்தார் - சிற்றின்பங்களை நீக்கினவர், நல் - சிறந்த, அறிவாளர்-விவேகிகள் ஆவர், புரை - குற்றம், தீரா - நீங்காத, மன்னு - நிலைபெறாத, இளமை - இளமைப் பருவத்தை, மகிழ்ந்தார் - இச்சித்து நுகர்ந்தவர்கள், கோல் - தடியை, ஊன்றி - ஊன்றிக் கொண்டு, இன்னுங்கு-துன்பத்துடன், எழுந்திருப்பார்-எழுந்திருப் பார்கள் எ-று.

இளமையில் துறந்தவர்களே பேரின்பம் அடைவர்; அல்லாத வர் வலிகுன்றித் துன்பத்தினுழல்பவர்கள் என்றவாறு. நரை-மயிர் வெளுத்தல்; அதற்குக் காரணமான மூப்புக்கு ஆகுபெயராயிற்று. குழவி - இளமைப்பொருள் தரும் குழ * என்னும் உரிச்சொல் இகர விகுதிபெற்றது. தீரா இளமை, மன்னு இளமை எனக. தீயிற் புகை தோன்றி யழிதல்போல இளமையு மழிதலான் மன்னு இளமை யென்றார். இன்னுங்கு-ஒருசொல். தான் எழுதற்கும் ஆற்றாத நிலை குறிக்கக் கோல் ஊன்றி என்றார். துறந்தார், மகிழ்ந்தார் - வினையா லணையும் பெயர். (1)

12. நட்புநா ரற்றன நல்லாரு மஃகினா
ரற்புத் தளையு மவிழ்ந்தன—வுட்காணாய்
வாழ்தலி னூதிய மென்னுண்டாம் வந்ததே
ஆழ்கலத் தன்ன † கலி.

இ-ள். நட்பு - நண்பர்களின், நார்-பாசங்களும், அற்றன - நீங்கின, நல்லாரும்-மகளிரும், அஃகினார்-அன்பிற் குறைந்தார், அற்பு-(சுற்றத்தாரின்) அன்பாகிய, தளையும் - பந்தங்களும், அவிழ்ந்தன-நெகிழ்ந்தன, ஆழ்-முழுகும், கலத்தன்ன-கப்பலோசைபோல், கலி-உறவினரழுமோசை, வந்ததே - உண்டாயிற்று (ஆதலால்), வாழ்த லின் - சிற்றின்பத்தில் வாழ்தலினால், ஊதியம்-பலன், என் - யாது, உண்டாம்-உண்டாகும், உள் - உன்னுள்ளே, காணாய் - ஆய்ந்துபார் என்றவாறு.

---

* "மழவுங் குழவு மிளமைப் பொருள" —(தொல்-உரிச்)
† கலுழ் என்றும் பாடம்.

சிற்றின்பத்தில் வாழ்ந்து உயிர் நீங்கும்போது, உற்றார் உறவினரது அன்பும் ஆதரவும் அற்றுப்போகும்; ஆதலின், அவ் வாழ்க்கையை விரும்பாதே என்றபடி.

நட்பு - நண்பர்கள், பண்பாகுபெயர்; அவர்கள் பலராதலின் அற்றன எனப் பன்மைவந்தது. நல்லாள்-இலக்குமி, அது பன்மையில் பொதுப்பெயராக மகளிரைக் குறித்தது. அற்பு - அன்பு, சுற்றத்தாருடையது. அன்பினால் உண்டாகும் உறவு கயிறுபோல் பிணிக்கப்பட்டு விடுபடுதல் அருமை என்று காட்ட, நார், தளை என்றும், அவையும் இறக்கும்போது ஒழியும் என்பது காட்ட, அற்றன அவிழ்ந்தன என்றும் கூறினார். மரக்கலம் மூழ்கும்போது தத்தமது உயிரைக் காத்துக்கொள்ள உண்டாக்கும் * ஆரவாரம் போல, ஒருவன் மரணத்தில் அவனைச் சூழ்ந்தவர் அழுகுரல் எழுப்புவர் என்றது உவமை அணி. கலி - ஓசை, துயரமுமாம். கலுழ் என்றும் பாடம், துன்பம் என்னும் பொருளது. (2)

13. சொற்றளர்ந்து கோலூன்றிச் சோர்ந்த நடையினரா
பற்கழன்று பண்டம் பழிகாறு—மிற்செறிந்து [ய்ப்
காம நெறிபடருங் கண்ணினார்க் கில்லையே
ஏம நெறிபடரு மாறு.

இ-ள். சொல்-சொற்கள், தளர்ந்து - குழறி, கோல் - தடியை, ஊன்றி - ஊன்றிக்கொண்டு, சோர்ந்த - தள்ளாடிய, நடையினராய்- நடையை யுடையவராய், பல்-பற்கள், கழன்று-உதிர்ந்து, பண்டம்- உடலாகிய பண்டம், பழிகாறும் - பழிக்கப்படுமளவும், இல் - இல் வாழ்க்கையில், செறிந்து - அழுந்தி, காமநெறி - ஆசைவழியே, படரும் - நடக்கும், கண்ணினார்க்கு - நோக்கத்தை யுடையவர்க்கு, ஏமம்-தமக்குக் காவலாகிய, நெறி-முத்திவழியில், படரும்-நடக்கும், ஆறு-விதம், இல்லையே-உண்டாகாதே எ-று.

காமத்துறையில் உழல்கின்றவர்களது உயிர்க்கு முத்திநெறி யில்லை என்பதாம். ஏகாரம்-இரக்கத்தைக் குறித்தது. சொல் தளர்தல் முதலியன மூப்பின் குணம். பண்டம்-ஆகுபெயராய் உடலை உணர்த்

* "பண்ணார் களிறேபோல் பாயோங் குயர்நாவாய்
கண்ணார் கடன்மண்டிக் காற்றிற் கவிழுங்கால்
மண்ணார் மணிப்பூணோய் மக்க ளுறுந்துன்பம்
நண்ணா ருழந்தின் நான்கா மடியன்றே." (சிந்தா)
என்பது மொப்பு நோக்குக.

தியது. பழிகாறும்-பழிக்குமளவும், காறும்-எல்லையை உணர்த்தும் இடைச்சொல். இல்-ஆகுபெயர். வாழ்க்கையைக் குறித்தது. கண்ணினார்-நோக்கத்தை யுடையவர்; குறிப்புப் பெயர். ஏமம்-காவல்; மேலும் பிறவியினின்றும் காப்பது, ஆவது முத்திநெறியாகிய துறவு; ஏமம் இப்பொருளில் வருவது "எல்லாவுயிர்க்கு மேமமாகிய" என்ற புறப்பாட்டால் (கடவுள் வாழ்த்து) அறிக. (3)

14. * தாழாத் தளராத் தலைநடுங்காத் தண்டூன்றா
வீழா விறக்கு மிவண்மாட்டுங்—காழிலா
மம்மர்கொண் மாந்தர்க் கணங்காகுந் தன்கைக்கோ
லம்மனைக்கோ லாகிய ஞான்று.

இ-ள். அம்மனைக்கோல் - தன் தாயின் கைக்கோலானது, தன் கைக்கோல் - தன் கையின்கோலாக, ஆகியஞான்று-இனிமேல் ஆன காலத்தில், தாழா - தாழ்ந்து, தளரா - தளர்ந்து, தலை - தலையை, நடுங்கா-அசைத்து, தண்டு-அததடியை, ஊன்றா-ஊன்றி, வீழா - வீழ்ந்து, இறக்கும் - மரணமாகும், இவள்மாட்டும் - இவளிடத்திலும், காழ்-உறுதி, இலா-இல்லாத, மம்மர் - மயக்கம், கொள் - கொண்ட, மாந்தர்க்கு-மனிதர்க்கு, அணங்கு-துன்பம், ஆகும்-உண்டாகும் எ-று.

இது மங்கைப்பருவத்து ஒருத்தியின் அழகில் மயங்குவோரை அவளது இளமை நிலையாமையைக் குறித்து நின்றது. இப்போது இவள் அழகினள என்றாலும், இவளது தாய் ஊன்றிக்கொள்ளும் கோலை இவளும (வயது முதிர்வதால்) ஏந்துகின்ற காலத்து மூப்புக் குணங்களால அழிவாள், ஆதலின் இவளைக்கண்டு மயங்கவேண்டா என்றபடி.

அம் மனைகோல் தன் கைக்கோல் ஆகிய ஞான்று தாழா இறக்கும் இவள் என்க. தாழா முதலியன உடன்பாட்டு வினையெச்சம். விறக்கும் எனினுமாம்; † விறத்தல் - அஞ்சுதல். காமம் நிலையும் உறுதியு மற்றதெனக் 'காழிலா மம்மர்' என்றார். அணங்கு-காம நெறியால் உயிர் கொள்ளும் தேவமாது; ஈண்டு அவளால் உண்டாகும் துன்பத்தைக் குறித்தது. அம்மனைக்கோல் - இவ்விடத்து உயர்திணைக்கண் ஒற்று மிகுந்தது விகாரம். (4)

---

* புறத்திரட்டு-360.

† விறப்பே வெரூஉப் பொருட்டு மாகும். (தொல்-உரி.)

15. எனக்குத்தா யாகியா ளென்னையீங் கிட்டுத்
தனக்குத்தாய் நாடியே சென்றா—டனக்குத்தா
யாகி யவளு மதுவானாற் றாய்த்தாய்க்கொண்
டேகு மளித்திவ் வுலகு.

இ-ள். எனக்கு - என்னை, தாயாகியாள் - ஈன்றவள், என்னை - என்னை, ஈங்கு-இவ்விடத்து, இட்டு-பெற்று வைத்திட்டு, தனக்கு - தனக்கும், தாய்-ஒரு தாயை, நாடி-தேடி, சென்றாள்-இறந்து போயினாள், தனக்கு-அத் தாய்க்கு, தாயாகியவளும்-தாயாயிருந்தவளும், அதுவானால்-அத்தன்மையளாய்ச் சென்றால், இவ்வுலகு-இவ்வுலகில் பிராணிவர்க்கமானது, தாய்-தாயை, தாய்க்கொண்டு-தேடிக்கொண்டு, ஏகும்-போகும், அளித்து-ஏழைமையுடையது எ-று.

இவ்வுலகில் பிராணிவர்க்கம் ஒவ்வொன்றும் தாயைத் தேடிக் கொண்டுபோகும் ஏழைமையுடையது என்பதாம். இட்டுச் சென்றாள்-ஈன்று உலகிற் கிடத்தி இறந்தாள் என்றவாறு: மங்கல வழக்கு. எனவே இளமையில் இறந்தாள் என்றார், இளமை நிலையாதது என்றும் புலப்படுத்துகின்றது. இறந்தவர் மீண்டும் பிறத்தல் நிச்சயமாதலின், தாய் நாடிச் சென்றாள் என்று உரைத்தார். தாயைத் தாய்க்கொண்டு என்புழி தாய-தாவி என்ற வினையெச்சம். அளித்து-குறிப்பு வினைமுற்று. உலகு-ஆகுபெயர். இச் செய்யுள் எள்ளல் அடியாகப் பிறந்த நகைச்சுவை கூடியது. (5)

16. * வெறியயர் வெங்களத்து வேன்மகன் பாணி
முறியார் நறுங்கண்ணி முன்னர்த் தயங்க
மறிகுள குண்டன்ன மன்னா மகிழ்ச்சி
யறிவுடை யாளர்க ணில்.

இ-ள். வெறி-வெறியாடலை, அயர் - செய்கின்ற, வெம்-வெய்ய, களத்து-பலிக்களத்து, வேன்மகன் - பூசாரி, பாணி-கையில், முறி-தளிர், ஆர் - நிறைந்த, நறும் - மணக்கும், கண்ணி-மாலை, முன்னர்-தன்முன்னாக, தயங்க - அசைந்துதொங்க, மறி-ஆடு, குளகு - உணவாக, உண்டன்ன-(அம்மாலைத்தளிரை) உண்டாற்போலும், மன்னா-நிலைபெறாத, மகிழ்ச்சி - நிலையாத மகிழ்ச்சி, அறிவுடையாளர்கண்-விவேகிகளிடத்தில், இல்-இல்லை எ-று.

ஆடுகொண்ட மகிழ்ச்சி அறிவுடையாளர்களிடத்திலில்லை என்பது எச்சம். மாலைத் தளிரை உண்டு மகிழும் ஆடு அதனால் நேரும் முடிவினை யறியாததுபோல், இளமையில் நுகரும் இன்பத்தால்

* புறத்திரட்டு - 359.

நேரும் அழிவினை அறிவிலார் நினையார் என உவமையணி காண்க. வெறி-ஆவேசம் கொண்டு ஆடுதல். இது முருகக்கடவுளுக்கு எடுக்கும் விழா. களம்-பலிக்களம். வேல் மகன்-முருகனுக்கு அறிகுறியாக வேலாயுதம் கையில் ஏந்திய பூசாரி. பாணி - கரம்; வடசொல். குளகு - விலங்கின் உணவு. மறியின் மகிழ்ச்சி கணப்போதேனு நில்லாமைபற்றி 'மன்னு' என்றார். (6)

17. பனிபடு சோலைப் பயன்மர மெல்லாங்
கனியுதிர்ந்து வீழ்ந்தற் றிளமை—நனிபெரிதும்
வேற்கண்ண ளென்றிவளை வெஃகன்மின் மற்றிவளுங்
கோற்கண்ண ளாகுங் குனிந்து.

இ-ள். இளமை - இளமைப் பருவமானது, பனி - குளிர்ச்சி, படு - பொருந்திய, சோலை - சோலையில், பயன் - பலனைத்தரும், மரமெல்லாம்-எல்லா மரங்களிலும், கனி-பழங்கள், உதிர்ந்து-உதிர்ந்து, வீழ்ந்தற்று-விழுங்காற்போலும் தன்மையது, நனி-மிக, பெரிதும் - பெரிய, வேல் - வேலை நிகர்த்த, கண்ணளென்று - கண்களையுடையவளென்று, இவளை - இப் பெண்ணை, வெஃகன்மின் - இச்சியாதிருங்கள், மற்று-பின்னர், இவளும்-இப் பெண்ணும், குனிந்து - கூனியாகி, கோல்-கோலாகிய, கண்ணளாகும் - கண்ணை யுடையவளாவாள் எ-று.

இதுவும் அழகுடைய ஒருத்தியின் இளமையைக்கண்டு விரும்ப வேண்டாமென்று அறிவுறுத்துவது. சோலைக்கு அழகு கொடுக்கும் பழங்கள் இருக்கும்வரையில் அனைவரும் அச்சோலையை நாடுகின்றனர்; பழங்கள் உதிர்ந்துவிடின், அதனை நாடுவதில்லை; அதுபோல ஒரு நங்கைக்கு வனப்பைத்தரும் இளமை இருக்கும் வரையில் அனைவரும் காமுறுவர்; அவளது இளமை மாறியபோது அவளை நாடுவாரில்லை என்றவாறு. உவமையணி.

"கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை" * யாதலால் கண்ணின் அழகு கூறினார்; அது மற்றை யுறுப்புக்களின் வனப்புக்கும் உபலக்ஷணம். கண்ணள், குறிப்பு வினைப்பெயர். வேல்போலும் கண் என்றும், கோலாகிய கண் என்றும் கொள்க: முன்னது உவமைத்தொகை, பின்னது உருவகம். கண்ணின் உதவியிழந்து, கோலையே கண்ணாகக்கொண்டு தட்டுத் தடுமாறித் திரிவது கருதிக் 'கோற் கண்ணள்' என்றார். இது பிறிதினவிற்சியணி. இதன் எள்ளல்

* நான்மணிக்கடிகை.

நகைச்சுவை உய்த்துணர்க. வெஃகன்மின், எதிர்மறை ஏவல் வினை. மற்று - வினைமாற்று எனினுமாம். (7)

18. பருவ மெனைத்துள பல்லின்பா லேனை
இருசிகையு முண்டீரோ வென்று—வரிசையா
னுண்ணாட்டங் கொள்ளப் படுதலால் யாக்கைக்கோ
ளெண்ணா ரறிவுடை யார்.

இ-ள். பருவம்-வயது, எனைத்து-எவ்வளவு, உள-ஆகியிருக்கின்றன, பல்லின்-பற்களினுடைய, பால்-வலிமைப்பகுதி, ஏனை - எவ்வளவு, இருசிகையும் - இருவேளையில் உண்ணும் கவளங்களையும், உண்டீரோ-புசித்தீரோ, என்று - எனக்கேட்டு, வரிசையால் - முறைமையாக, உள் - உள்ளத்து, நாட்டம்-ஆராய்ச்சி, கொள்ளப் படுதலால் - பிறரால் செய்யப்படுதலால், யாக்கை - உடலினது, கோள் - இளமைத்தன்மையை, அறிவுடையார் - விவேகமுடையார், எண்ணார்-பொருளாக நினையார் எ-று.

ஒருவரைக் குசலம் வினவும்போது அவரது தேகநிலை, முதலியன வினவுதல் இயல்பு. அவ்வித விசாரணை அவரது தேகநிலையின்மையும், இளமை நிலையின்மையும் குறிப்பித்தபடியாம். பருவம் - பிராயம். எனைத்து - குறிப்பு வினைமுற்று. பல்லின்பாலாவது, மென்று தின்னலும் நன்கு பேசுதலும். சிகை - கவளம், முன்னர் "மறுசிகை"* போல, காலை மாலையாகிய இருபொழு துண்டியைக் குறித்தலின் இருசிகை என்றார். இருபொழுதேனும் உணவில்லா விடில் உடல் நலம் குறைவு என்றாகும். உள் நாட்டம் - உள்ளத்து ஆராய்ச்சி, நாட்டம்-தொழிற்பெயர். யாக்கை-எழுவகைத் தாதுக்களால் கட்டப்பட்டது: தொழிலாகுபெயர். கோள்-தன்மை, அதிகாரம் நோக்கி இளமையின் தன்மை எனப்பட்டது. (8)

19. மற்றறிவா நல்வினை யாமிளைய மென்னாது
கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்ம்மின்
முற்றி யிருந்த கனியொழியத் தீவளியா
னற்கா யுதிர்தலு முண்டு.

இ-ள். முற்றி - முதிர்ந்து, இருந்த - இருந்த, கனி - பழங்கள், ஒழிய - நீங்க, தீவளியால் - தீக்காற்றால், நல் - நல்ல, காய் - காய்கள், உதிர்தலும்-விழுதலும், உண்டு-உண்டு, யாம்-நாம், இளையம்-இப்

---

* நாலடி—1.

போது இளமை வயதுடையோம், நல்வினை-தருமத்தை, மற்று - இனிமேல், அறிவாம்-அறிந்துசெய்வோம், என்னாது-என்று நினையாது, கைத்து-கையகத்து, உண்டாம்-(செல்வம்) உண்டாயிருக்கும், போழ்தே - காலத்திலேயே, கரவாது - ஒளிக்காமல், அறம் - தருமத்தை, செய்ம்மின்-செய்யுங்கள் எ-று.

முதிர்ந்த கனிகள் இருக்கவும் பழுக்காத காய்கள் காற்றினால் உதிர்வதுமுண்டு, அதுபோல முதியவர் இருக்க இளம் வயதினர் கூற்றினாற் கொண்டுபோகப்படுகின்றனர்; ஆதலின் வயோதிகத்தில் நல்லறம் செய்வோம் * என இளமையை வீணே கழிக்கலாகாது என்றபடி. இது பிறிது மொழிதலணி. எடுத்துக் காட்டுவமை என்பாருமுளர்.

மற்று-பிற்காலத்தில் என்றபடி, வினைமாற்றுமாம். நல்வினை - நல்லறம்; அறிதலாவது அறிந்து இயற்றுதல். இளையம் என்னாது - இளமை நிலையாது என்றறிந்து. கைத்து-கையகத்துள்ளது: குறிப்பு வினைப்பெயர். போழ்தே-ஏகாரம் தேற்றம், அதனால் இளமையும் செல்வமும் நிலையாமை கூறப்பட்டது. தீவளி-சூறாவளி. (9)

20\. ஆட்பார்த் துழலு மருளில்கூற் றுண்மையாற்
தோட்கோப்புக் காலத்தாற் கொண்டுய்ம்மின்-பீட்பிதுக்கிப்
பிள்ளையைத் தாயலறக் கோடலான் மற்றதன்
கள்ளங் கடைப்பிடித்த னன்று.

இ-ள். ஆள் - ஆயுள்முடிந்த ஆட்களை, பார்த்து - தவறாது தேடிப்பார்த்து, உழலும் - திரியும், அருள் - தயை, இல் - இல்லாத, கூற்று - இயமன், உண்மையால் - இருக்கின்றானாதலால், தோட்கோப்பு - (தருமமென்னும்) கட்டமுதை, காலத்தில் - இளமைப் பருவத்தில், கொண்டு-தேடிக்கொண்டு, உய்ம்மின் - பிழையுங்கள், பீள்-கருப்பத்தை, பிதுக்கி - பிதுங்கச்செய்து, தாய்-தாயானவள், அலற-அழ, பிள்ளையை - சிசுவை, கோடலால்-கொண்டுபோதலால், மற்று அதன் - அந்த யமனது, கள்ளம் - வஞ்சத்தை, கடைப்பிடித்தல் - உறுதியா யறிந்துகொள்ளுதல், நன்று - நல்லது எ-று.

ஆயுள் முடிந்தவர்களைக் கொண்டுபோக நமன் காத்திருக்கின்றான். "நாளை நாளை என்பீராகில் நமனுடை முறைநாளென்பது

---

* "நற்செய்கை, ஆற்றுக்துணையு மறமறவே னன்னெஞ்சே
கூற்றம் குடில்பிரியா முன்"
என்ற அறநெறிச்சாரமும் காண்க.

மறியீர் நம்முடை முறைநாள் என்பது மறியீர்"* ஆதலின் விரைவில் தருமம் செய்துகொள்க என்றவாறு. வயது முடிந்ததும் காலம் தாழ்த்தாது உயிரை முடித்தலின் 'அருளில் கூற்று' என்றார்.

தோள்கோப்பு - தோளில் கோக்கப்படுவது, நெடுவழிச் செல்வோர் வழிப்பயன் கருதிக் கட்டுச்சோறு தோளின்மேல் சுமந்து செல்வது வழக்கமாதலின் கட்டுச்சோற்றுக்கு ஆகுபெயராயிற்று. மறுமையுலகத்துக்குப் பயன்தரும் கட்டுச்சோறு தருமம் † ஆதலின் ஈண்டு உவமையாகு பெயராயிற்று.

ஈற்றிரண்டடியும் கூற்றின் கொடுமையைக் கூறிற்று. பீள் - கருப்பம், பருவம் முதிர்வதன் முன்னர் பிரசவ வேதனையாலும், பிறந்த குழவி யிறத்தலால் உண்டாம் துயராலும் தாயலறுதல் கொள்க. பிள்ளையைக் கோடலால் என்க. கோடல்-தொழிற்பெயர். கொள் பகுதி, முதல் நீண்டது. கடைப்பிடித்தல்-அறிந்து மனம் உறுதிபடுதல். (10)

இளமை நிலையாமை முற்றிற்று.

## 3-ஆம் அதிகாரம். யாக்கை நிலையாமை

அஃதாவது - சரீரம் நிலை நில்லாமையாம். இளமையில் சிற்றின்பம் நுகர்தற்கும், இளமை மாறிய பின்னரும் அதில் அழுந்திக் கிடப்பதற்கும் கருவியாக இருத்தல் சரீரம் ஆதலின் அதன் அழியுந்தன்மையும் உரைத்துத் துறவின் அவசியத்தை வற்புறுத்தலாயிற்று. இனி, இச்சையை உண்டாக்கும் மாதரது யாக்கை நிலையாமை உரைத்தது எனினுமாம். அதனால் இளமை நிலையாமைக்குப் பின் இது வைக்கப்பட்டது. யாக்கை - கட்டப்படுதல். கை - தொழிற்பெயர் விகுதி. எழுவகைத் தாதுக்களால் கட்டப்பட்டதாதலால் உடலுக்கு ஆகுபெயராயிற்று.

---

* கபிலரகவல்.

† "இறுகிறுகத் தோட்கோப்புக் கொள்ளார்"—(நாலடி 328.)

"வேற்றுவரில்லா நுமரூர்க்கே செல்லினும் வெகுண்டீர் போல
வாற்றுணாக் கொள்ளா தடிபுறத்து வைப்பீரே யல்லிர்போலும்
கூற்றங்கொண் டோடத் தமியே கொடுநெறிக்கட் செல்லும்போழ்தின்
ஆற்றுணாக் கொள்ளீ ரழகலா தறிவொன்று மிலிரேபோலும்."

—சிந்தாமணி.

21. * மலைமிசைத் தோன்று மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர்—நிலமிசைத்
துஞ்சினா ரென்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லா
லெஞ்சினா ரிவ்வுலகத் தில்.

இ-ள். மலை - மலையின், மிசை - மேல், தோன்றும் - உதிக்கும், மதியம்போல் - முழுச் சந்திரனைப்போல, யானை - யானையின், தலை மிசை-தலைமேல், கொண்ட - கொள்ளப்பட்ட, குடையர்-குடையை யுடைய மன்னர்களும், நிலமிசை - பூமியின்கண், துஞ்சினாரென்று- இறந்தாரென்று, எடுத்து - பிறராலெடுத்து, தூற்றப்பட்டார் - இகழப்பட்டார்கள், அல்லால்-அல்லாமல், எஞ்சினார்-உயிரோடிருந்தார், இவ்வுலகத்து-இந்த வுலகத்தில், இல்-ஒருவரு மில்லை எ-று.

யானைமேலேறிய அரசர்களும் இறந்தார்களென்று சொல்லப் பட்டார்களே யல்லாமல் இவ்வுலகத்தில் உயிரோடு வாழ்ந்தவர்கள் ஒருவருமில்லை † என்பதாம். இதனால் யாக்கை நிலையாமை பெறப் படும். அரசர்க்குச் சந்திரவட்டக் குடை சின்னமாகும். மலை யானைக்கும், மதியம் குடைக்கும் உவமையாகக் கொள்க. பிறரால் எளிதில் கடக்கலாகாமையாலும் பெருமை உடைமையாலும் மலை யானைக்கு உவமமாயிற்று. தண்ணென் றிருத்தலாலும், அதன் ஆட்சியில் அனைவரும் மகிழ்தலாலும், வட்டவடிவமா யிருத்த லாலும் மதி குடைக்கு உவமமாயிற்று ; உவமையணி.

நிலமிசை ஏழனுருபு. துஞ்சினார்-இறந்தார்; மங்கல வழக்கு. தூற்றப்பட்டார் - பிறவினை. என்றும் வாழ்தல் இல்லாமையால் தூற்றப்படுதலாயிற்று. (1)

22. வாழ்நாட் கலகா வயங்கொளி மண்டிலம்
வீழ்நாள் படாஅ தெழுதலால்—வாழ்நா
ளுலவாமு னெப்புர வாற்றுமின் யாரு
நிலவார் நிலமிசை மேல்.

இ-ள். வாழ்நாட்கு - வாழும் நாள்களுக்கு, அலகாய் - அளவை யாக, வயங்கு-பிரகாசிக்கும், ஒளி-கிரணங்களையுடைய, மண்டிலம் -

---

* புறத்திரட்டு-370.

† "கொலையானை மேலோர் குளிர்வெண் குடைக்கீழ்ப்
பலயானை மன்னர் பலர்போற்ற வந்தான்
மலையாகம் போழாக மற்றிவனே சாய்ந்தான்
நிலையாமை சால நிலைபெற்ற தன்றே." —சூளாமணி.

சூரியன், நாள்வீழ் படாஅது-நாள் உதியாமையின்றி, எழுதலால் - தவறாமல் உதயமாதலால், வாழ்நாள்-வாழுநாள், உலவாமுன்-கெடா முன், ஒப்புரவு - தருமத்தை, ஆற்றுமின - செய்யுங்கள், நிலமிசை மேல் - நிலத்தின்மேல், யாரும் - யாவரும், நிலவார் - நிலைக்கமாட் டார் எ-று.

சூரியன் மக்களின் வாழ்களை நாட்களென்னும் அளவையால் அளக்கின்றான். அவன் உதயமாவதிலும், அந்த நாட்களை உண் டாக்குவதிலும் தவறுவதில்லை. ஆகலின் யாரும் உலகில் நிலைபெற் றிருப்பார் இல்லை எனவே தருமத்தைச் செய்யத் தவறவேண்டா என்றவாறு. ஞாயிற்றை நாழியாக முன்னரும் (நாலடி-7) கூறப் பட்டது. மண்டிலம் - சூரியன், வடசொல். வீழ்நாள் படாஅது - நாள்வீழ் படாஅது என மாறுக. நாள் உண்டாகலில் விழுதலின்றி என்றபடி; விழுதலாவது தோன்றுமை; எனவே உதியாமை யின்றி எனப்பட்டது; தவறாமல் என்றபடி. படாஅது - இசை நிறை அளபு. ஒப்பு-உரவு எனப்பிரிக்க: உலகத்தார் ஒப்பிய வண்மை யான அறம். ஒரு சொல்லாகக்கொண்டு உலகநடை என்பாரு முளர். மிசைமேல் - மீமிசைச் சொல். நிலவார் - நிலை என்னும் பண்படியாகப் பிறந்த எதிர்மறைக் குறிப்புவினை. (2)

23. * மன்றங் கறங்க மணப்பறை யாயின
அன்றவர்க் காங்கே பிணப்பறையாய்ப்—பின்றை
ஒலித்தலு முண்டாமென் றுய்ந்துபோ மாறே
வலிக்குமா மாண்டார் மனம்.

இ-ள். மன்றம் - மணமண்டபத்தில், கறங்க - ஒலிக்க, மணப் பறையாயின - மணக்கோலத்திற்கான பறைகள், அன்று - அன் றைக்கே, அவர்க்கு - அம்மணமக்களுக்கு, ஆங்கே அவ்விடத்தே, பிணப் பறையாய் - பிணக் கோலத்திற்குக் கொட்டும்பறையாய், பின்றை-பின்பு, ஒலித்தலும்-சப்தித்தலும், உண்டாமென்று-உண் டாகுமென்று நினைத்து, மாண்டார் - பெரியோர்கள், மனம்-உள்ளம், உய்ந்துபோம் - பிழைத்துப்போகிற, ஆறு - துறவு வழியை, வலிக் கும் - துணிந்து நிற்கும் எ-று.

மன்றம்-சபை. ஈண்டு, மணவினைக்குக்கூடிய இடம். அன்று - அந்தநாளே, பின்றை-சற்றுப்பொறுத்து என்றபடி; மரணம் உண் டாகும் கால அண்மையைக் குறித்தது. மணக்கோலமே பிணக்

* புறத்திரட்டு - 371.

கோலமாகும் என்றதனால் யாக்கை நிலையாமை பெறப்படும். பறை - சாக்காட்டு செய்தற் பறை. உய்ந்துபோதல் - பிறவியினின்றும் பிழைத்தல். ஆறு - வழி; ஈண்டுத்துறவு. வலித்தல் - துணிதல். மாண்டார் - மாட்சிமையுடையார்; மாண்பு என்னும் பண்படியாகப் பிறந்த குறிப்பு வினையாலணையும் பெயர். (3)

24. சென்றே யெறிப வொருகால் சிறுவரை
நின்றே யெறிப பறையினை—நன்றேகாண்
முக்காலைக் கொட்டினுண் மூடித்தீக் கொண்டெழுவர்
செத்தாரைச் சாவார் சுமந்து.

இ-ள். சென்று-(இறந்த இடத்தில்) போய், பறையினை-பிணப் பறையை, ஒருகால் - ஒருமுறை, எறிப - அடிப்பார்கள், சிறுவரை-சற்றுநேரம், நின்று - நிறுத்தி, எறிப - (அப்பறையினை) இரண்டா முறை யடிப்பார்கள், முக்காலை - மூன்றுமுறை, கொட்டினுள் - அடித்த மாத்திரத்தில், மூடி - பிணத்தைச் சீலையால் மூடி, தீ - நெருப்பை, கொண்டு-சட்டியிற்கொண்டு, செத்தாரை-இறந்தவரை, சாவார்-இனி யிறப்பவர்கள், சுமந்து-தோள்களிற் சுமந்து, எழுவர் - மயானத்திற்கெழுவர், நன்றேகாண் - இது வெகு நன்று எ-று. காண் - அசை.

இறந்தபொழுது மும்முறை பறையடித்தலும், மூன்றுமுறைக் குப் பிணத்தை இடுகாட்டுக்கு எடுத்துச் செல்லுதலும் மரபு. சிறு வரை நின்று-காலந்தாழ்த்தி என்றபடி. கொட்டு-முழக்கு. இறந்த பிணத்தைச் செத்தார் என உயர்திணையில் கூறியது, இழிவுபற்றி வந்த திணைவழுவமைதி. சாவார்-இனிமேற் சாகின்றவர். "இனி மேற் சாம்பிணம்" * என்றார் பிறரும். ஏகாரம் இரண்டும் அசை. நன்றே - இகழ்ச்சிக்குறிப்பு; எள்ளல்பற்றிய நகைப்பு. இதனால் யாக்கை நிலையாமை வற்புறுத்தப்பட்டது. (4)

25. கணங்கொண்டு சுற்றத்தார் கல்லென் றலறப் [டண்
பிணங்கொண்டு காட்டுய்ப்பார்க் கண்டு—மணங்கொண்
டுண்டுண்டுண் டென்னு முணர்வினாற் சாற்றுமே
டொண்டொண்டொ ணென்னும் பறை.

இ-ள். சுற்றத்தார்-இனத்தார், கணங்கொண்டு-கூட்டங் கூடிக் கொண்டு, கல்லென்று - கலீலென்னுஞ் சப்தமுண்டாக, அலற - புலம்ப, பிணம்-சவத்தை, கொண்டு - எடுத்துக்கொண்டு, காடு - இடு

* பட்டினத்தார்.

காட்டில், உய்ப்பார் - செலுத்துபவரை, கண்டும் - பார்த்திருந்தும், மணங்கொண்டு - விவாகஞ் செய்துகொண்டு, ஈண்டு-இவ்வுலகத்தில், உண்டு உண்டு உண்டு என்னும் - (இல்வாழ்க்கையில் இன்பம்) உண்டு உண்டு உண்டு என்னும், உணர்விலான் - சிற்றறிவினனுக்கு, டொண் டொண் டொண் என்னும் - டொண் டொண் டொண் என்னும் (ஓசையுள்ள), பறை-சாப்பறை, சாற்றும்-(சரீரநில்லாமையை) அறிவிக்கும் எ-று.

இனத்தாரழப் பிணத்தைக் கொண்டு போவாரைக் கண்டிருந்தும் இல்வாழ்க்கையை விரும்பினவனுக்குச் சரீர நில்லாமையைச் சாப்பறை யறிவிக்கும் என்பதாம். கல் என்பதும், டொண் டொண் டொண் என்பதும் ஒலிக்குறிப்பு. துணிவுபற்றிப் பின்னது மும்முறை வந்தது. காடு - இடுகாடு. உய்ப்பார் - வினையாலணையும் பெயர், இரண்டனுருபு தொகைபெற்று நின்றது. ஈண்டு - உலகில். பிறர் உரைத்தும், பிறர் இறத்தலைக் கண்ணுற் கண்டும், இன்பம் உண்டு என நிச்சயித்து மணப்பவனது துணிவு காட்ட உண்டு என மும்முறை வந்தது. பறை என்னும என்றது தற்குறிப்பேற்ற அணி. உணர்விலானுக்கு என்க. நான்கன் தொகை. உணர்விலான்-உணர்வில்லாதவன் என இகழ்ச்சிப் பொருளில் வந்தது. (5)

26. நார்த்தொடுத் தீர்க்கிலெ னன்றாய்ந் தடக்கிலென்
பார்த்துழிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென்
றோற்பையு ணின்று தொழிலறச் செய்தூட்டுங்
கூத்தன் புறப்பட்டக் கால்.

இ-ள். தோற்பை - தோலாலாகிய பையின், உள் - உள்ளே, நின்று - இருந்து, தொழில் - இருவினைகளையும், அற - முற்றாக, செய்து-பண்ணி, ஊட்டும் - உண்பிக்கும், கூத்தன் - உயிரென்னும் கூத்தன், புறப்பட்டக்கால் - வெளிப்பட்டுவிட்டால், நார் - நாரினால், தொடுத்து - (அவ்வுடலைக்) கட்டி, ஈர்க்கிலென் - இழுத்தாலென்ன, நன்று - நன்றாக, ஆய்ந்து - சுத்திசெய்து, அடக்கில் என் - அடக்கம் செய்தாலென்ன, பார்த்தஉழி - கண்ட இடத்தில், பெய்யிலென் - போட்டாலென்ன, பல்லோர் - பலரும், பழிக்கிலென் - பழித்தாலென்ன எ-று.

உயிர் போனபின்பு உடலை எவ்விதஞ் செய்யினும் பயனில்லை என்பதாம்; யாக்கையின் இழிவு கூறியபடி. தோலாலாகிய பை என்க; மூன்றன் தொகை. பண்டத்தை அடக்கிய பைபோல்

உறுப்புக்களை உள்ளடக்கி யிருத்தலின், உடலுக்கு உவமவாகு பெயர். உடலிருந்தன்றி வினையியற்ற முடியாதென 'நின்று' என்றார். தொழில் - வினை; நன்மை, தீமை என இரண்டும் கொள்க. அறச் செய்தல் - முழுவதும் இயற்றுதல். அற - இடைச் சொல், வினை யெச்சமன்று. உயிர் உடலால் வினையை இயற்றி, மீண்டும் உடலே அவ்வினையின் பயனை நுகரச் செய்வதால், செய்து ஊட்டும் என்றார். உடலோடு பொருந்தியவரை யவ்வுடலுக் கேற்றவற்றைச் செய்தலும், அவ்வுடலை நீத்து வேறு உடல் பெற்றால் அதற்கேற்பச் செய்தலும் நோக்கி உயிரைக் கூத்தன் என்றார். உருவக அணி. புறப்படலாவது உடலை நீத்தல். ஆய்தல் - மாசு முதலியன நீக்குதல்: 'கீரை ஆய்தல்' எனப் பரவை வழக்கும் காண்க. பார்த்த உழி, அகரம் தொகுத்தல். உழி பார்த்து என்றும், பார் துழி என்றும் பிரித்து, இடம் பார்த்து, பூமியிற் குழியில் என்றும் பொருள் உரைப்பர். (6)

27. படுமழை மொக்குளிற் பல்காலுந் தோன்றிக்
கெடுமிதோர் யாக்கையென் றெண்ணித்—தடுமாற்றந்
தீர்ப்பேம்யா மென்றுணருந் திண்ணறி வாளரை
நேர்ப்பார்யார் நீணிலத்தின் மேல்.

இ-ள். மழை - மழை நீரில், படு - தோன்றுகின்ற, மொக்குளில் - குமிழியைப்போல, பல்காலும் - பலகாலமும், தோன்றி - உண்டாகி, கெடும் - அழியும், ஓர் - ஒரு, யாக்கை இது என்று - உடலிதுவாம் என்று, எண்ணி - நினைத்து, தடுமாற்றம் - பிறவியா லுண்டாகும் துன்பத்தை, தீர்ப்போம் - நீக்குவோம், யாமென்று - நாமென்று, உணரும் - அறியும், திண் - வலிய, அறிவாளரை - விவேகிகளை, நீள் - நீண்ட, நிலத்தின்மேல் - பூமியிடத்து, நேர்ப் பார் - நேரானவர், யார் - எவர் எ-று.

மழை நீரில் உண்டாகின்ற நீர்க்குமிழி தோன்றி மறைதல் போல உடலும் உலகிடைப் பிறந்து மடிகின்றது என உவமைப் பொருள் காண்க. இது தொழில் பற்றிய உவமை. இன் - உவம உருபு. மழை படு என மாற்றுக. படுதல் - தோன்றுதல். இனிப் படு மழை-பெய்யும் மழை என்று முரைப்பர். யாக்கை-தொழி லாகு பெயர். அதன் இழிபு கூற ஓர் என அடைமொழி வந்தது. வினையினால் மாறிப் பிறந்து துன்பமும் மயக்கமும் உண்டாதலின் தடுமாற்றம் என்றார். நேர்ப்பார் - ஒப்பாவார். யார் என்ற வினா,

எவருமிலர் என்ற சொல்லெச்சம் பெற வந்தது; யாருமிலர் என்றபடி. தடுமாற்றம் தீர்த்தலாவது, இனிமேற் பிறவா வழி யாதென்று ஆராய்தல். (7)

28. யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர் தாம்பெற்ற
யாக்கையா லாய பயன்கொள்க—யாக்கை
மலையாடு மஞ்சுபோறு் றோன்றிமற் றாங்கே
நிலையாது நீத்து விடும்.

இ-ள். யாக்கையை-உடலை, யாப்புடைத்தா-கட்டுப்பாடுடைய தாக, பெற்றவர்-அடைந்தவர்கள், தாம்-தாங்கள், பெற்ற-அடைந்த, யாக்கையால்-அவ்வுடலால், ஆய-ஆகிய, பயன்-நற்பயனை, கொள்க - கொள்ளக்கடவர்கள், (ஏனெனில்) யாக்கை - உடலானது, மலை - மலையில், ஆடும்-சஞ்சரிக்கும், மஞ்சுபோல்-மேகம்போல, தோன்றி- தோற்றமாகி, ஆங்கே - தோன்றிய விதமே (விரைந்து), நிலையாது- நிலைபெறாமல், நீத்துவிடும் - உயிர் நீங்கக் கெட்டுவிடும் எ-று.

துறவுக்கும் உடல் வலி வேண்டுமாதலின் உடல் வலி பெற்ற வர்கள், துறவு பூண்டு நற்கதிக்கு முயல்க என்பார் 'யாப்புடைத்தா' என்றார்; யாப்பு-வலிமை. யாக்கையால் - பிறவியால் எனினுமாம். மலையில் மேகம் கணத்தில் தோன்றி மறுகணத்தில் கலைவதுபோல உடலும், கணத்தில் தோன்றி மறையும் எனத் தொழில் பற்றிய உவமமாயிற்று. யாக்கைக்கு மேகத்தை உவமப்படுத்தி, உலகத் துக்கு மலை என வெளிப்படையாகக் கூறாமையால், இஃது ஏகதேச வுருவகமாம். மற்று-வினை மாற்று. ஆங்கு - தோன்றியதுபோல என்ற குறிப்பும் விரைந்து என்ற குறிப்பும் தாநின்றது. நீக்கல் - நீக்குதல், ஈண்டு உயிரைக் குறித்தது. (8)

29. * புன்னுனிமே னீர்போ னிலையாமை யென்றெண்ணி
இன்னினியே செய்க வறவினை—யின்னினியே
நின்றா னிருந்தான் கிடந்தான்றன் கேளலறச்
சென்றா னெனப்படுத லால்.

இ-ள். இன்னினியே - இப்பொழுதே, நின்றான் - நின்றிருந் தான், இருந்தான் - வீற்றிருந்தான், கிடந்தான் - படுத்திருந்தான், தன்-தன்னுடைய, கேள்-இனத்தவர், அலற-புலம்ப, சென்றான் - இறந்தான், எனப்படுதலால்-என்று சொல்லப்படுதலால், புல்-புல் லின், நுனிமேல் - நுனியிடத்து, நீர்போல் - பனி நீரைப்போல, நிலையாமையென்று - சரீரமானது நிலையில்லாத் தன்மையதென்று,

* புறத்திரட்டு - 372.

எண்ணி - நினைத்து, இன்னினியே-இப்பொழுதே, அறவினை - தருமத்தை, செய்க - செய்யக் கடவீர் எ-று.

புல்லின் நுனியில் நீர் நிலைத்து நிற்றல் கடினம்; அதுபோல் உலகில் உடல் பிழைத்தல் அரிது என்க. உவமையணி. இனி, உடலில் உயிர் இருத்தலும் அரிது எனினுமாம். இன்னினி - இனி இனி என்க; இடைச்சொல் தெளிவுபற்றி யிரட்டித்து வந்தது; இக்கணமே என்றபடி. அறமாகிய வினை என்க. நின்றான் முதலிய வினை, உடலோடு வாழ்ந்த காலத்து அறம் ஒழிய மற்றவற்றைச் செய்தான் என்னும் குறிப்புத் தோன்ற வந்தன. கேள்-கேண்மை, ஈறு கெட்டது: பண்பாகு பெயர். சென்றான்-மங்கலவழக்கு. (9)

30\. * கேளாதே வந்து கிளைகளா யிற்றோன்றி
வாளாதே போவரான் மாந்தர்கள்—வாளாதே
சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து.

இ-ள். மாந்தர்கள்-மனிதர்கள், கேளாது-கேளாமல், வந்து - வந்து, கிளைகளாய் - உறவினர்களாய், இல் - மனை வாழ்க்கையில், தோன்றி - பிறந்து, மரன் - மரத்தில், சேக்கை - கூட்டை, ஒழிய - விட்டு, வாளாது - சொல்லாது, சேண் - நெடுந்தூரம் ஆகாயத்தில், நீங்கு - நீங்கும், புட்போல - பறவையைப்போல, யாக்கை - உடலை, தமர்க்கு - உறவினர்களுக்கு, ஒழிய நீத்து - ஒழித்து விட்டு, வாளாது - சொல்லாது, போவார் - இறந்துபோவார்கள் எ-று.

மாந்தர்கள் பிறத்தலும் இறத்தலும், புட்கள் கூட்டில் தங்குவதும் அதனை நீங்குவதும் ஒக்கும் † என்றவாறு. உவமையணி. ஒரு குலத்தில் ஒருவன் பிறப்பதற்கு முன்னும், இறக்கும்போதும் அவன் அக்குடியிலிருப்போரது அனுமதி பெறுவதில்லை என்று காட்டக் 'கேளாதே' என்றும் 'வாளாதே' என்றும் உரைத்தார். கிளைகள்-சுற்றத்தார். மரத்தில் வளரும் கிளைகள்போல் குலத்தில் வளரும் மாந்தர்; உவமவாகு பெயர். இல்-குலம். தோன்றுதல்-பிறத்தல். வாளா-இடைச்சொல். து - சாரியை, ஏகாரம் அசை. சேக்கை-கூடு, தங்கும் இடம். மரனில் சேக்கையை ஒழிய என்க. சேண்-தொலைவு, ஈண்டு ஆகாயம்.. (10)

யாக்கை நிலையாமை முற்றிற்று.

---

* புறத்திரட்டு - 373.

† "குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்போ டுயிரிடை நட்பு."—குறள் 338.

## 4-ஆம் அதிகாரம். அறன்வலியுறுத்தல்

அஃதாவது தருமத்தின் பலனை யறிவித்தல். முன் கூறிய செல்வம் முதலியவற்றின் நிலையின்மை உணர்ந்த பின்னர் பொருள் இன்பம் முத்திகளுக்கு நிலையுடையதான அறத்தின் உயர்வைக் கூறினர். அதிகாரத்தொடர்பும் இதனால் விளங்கும்.

31. அகத்தாரே வாழ்வாரென் றண்ணாந்து நோக்கிப்
புகத்தாம் பெறூஅர் புறங்கடை பற்றி
மிகத்தாம் வருந்தி யிருப்பரே மேலைத்
தவத்தாற் றவஞ்செய்யா தார்.

இ-ள். அகத்தாரே - இவ் அகத்தில் இருப்பவர்களே, வாழ்வா ரென்று - சிறப்புடன் வாழ்பவர்களென்று, அண்ணாந்து - தலை நிமிர்ந்து, நோக்கி - அவர்களது வீட்டுச் சிறப்பினைப் பார்த்து, மேலை-முற்பிறப்பில், தவத்தால்-தவம் செய்யாத காரணமாக, தவம்-பிற்பிறப்பில் நற்றவம், செய்யாதார் - செய்யாதவர்கள், தாம் புக - தாமுள்ளே நுழைய, பெறூஅர் - பெறுதவர்களாய், மிக - மிகவும், தாம்-தாங்கள், வருந்தி - வருத்தமுற்று, புறங்கடை - தலைவாயிலை, பற்றி - பிடித்து, இருப்பர் - நின்று இருப்பார்கள் எ-று.

முற்பிறப்பில் தவஞ் செய்திருந்தாலன்றிப் பிற்பிறப்பில் தவஞ்செய்யவோ பொருளுடன் வாழவோ இயலாதென்பது கருதி, 'மேலைத் தவத்தால் தவஞ்செய்யாதார்' என்றார். தவமாவது-அறம் உட்பட்ட நல்வினை. அகத்தார் - குறிப்பு வினைப் பெயர். இச் சொற்கு, இல் வாழ்வார் என்றும், அகத்து ஆர் எனப் பிரித்து, வீட்டில் இருப்பவர் யார் என்றும் பொருள் கூறுப. இல்லத்தின் சிறப்பும் உயர்வும் மிகுதியாதலின் அண்ணாந்து என்றார். பெறூஅர் - இசைநிறை யளபு. (1)

32. ஆவாநா மாக்க நசைஇ யறமறந்து
போவாநா மென்னப் புலைநெஞ்சே—யோவாது
நின்றுஞற்றி வாழ்தி யெனினுநின் வாழ்நாள்கள்
சென்றன செய்வ துரை.

இ-ள். புலை - புன்மையான, நெஞ்சே-மனமே, அறம்-தருமம் செய்தலை,* மறந்து-மறந்து விட்டு, ஆக்கம்-செல்வத்தை, நசைஇ -

* "தவமுந் தவமுடையார்க் காகும் அவமதனை
அஃதிலார் மேற் கொள்வது."—குறள் 262.

விரும்பி, போவாம் - அச் செல்வத்தை அடையச் செல்வோம், ஆவாம் - அதனால் நாம் மேன்மேலும் செல்வப் பெருக்கு அடைவோம், என்னு-என்று, ஓவாது - சிறிதும் ஓய்வில்லாமல், நின்று-நிலையாக இருந்து, உஞற்றி-பொருள் செய்வதில் முயன்று, வாழ்தி - வாழ்கின்றாய், எனினும் - என்றாலும், நின் வாழ் நாட்கள் - அவ் விதம் கழிந்த நின் ஆயுட் காலம், சென்றன - வீணாகவே கழிந்தன. செய்வது - இனி நீ அறஞ் செய்யக் கூடியது, உரை - யாதென உரைப்பாய் எ-று.

இது நெஞ்சறிவுறாஉ; ஆயுள் முழுவதும் செல்வத்தை நாடி யறத்தை மறந்த ஒருவன் அந்திம காலத்தில் என் செய்வாய் என்று தன் நெஞ்சினை வினவுகின்றபடி. பொருள் செய்யும் வேட்கையில் அறத்தை மறந்தானென 'அற மறந்து' என்றார். எவ்வகையிலும் மேன்மை அடைவோம் என்ற நிச்சயத்தை உணர்த்த ஆவாம் நாம் எனத் தொடங்கினர். ஆவாம்—(பெருக்கம்) ஆகுவோம். 'ஆதும்' என்றும் வழங்கும். போவாம் - பொருள் செய்யப் புகுவாம் என்ற வாறு. தருமத்தை மறத்தலின் புலை நெஞ்சே என்றார். நசை என்னும் பெயர், அளபெடுத்து வினையாக வருதலின், சொல்லிசை யளபெடை. (2)

33. வினைப்பயன் வந்தக்கால் வெய்ய வுயிரா
மனத்தி னழியுமாம் பேதை—நினைத்ததனைத்
தொல்லைய தென்றுணர் வாரே தடுமாற்றத்
தெல்லை யிகந்தொருவு வார்.

இ-ள். பேதை - அறிவில்லாதவன், வினைப்பயன் - தீவினைப் பலன், வந்தக்கால் - வந்தால், வெய்ய - கொடிதாக, உயிரா - பெருமூச்செறிந்து, மனத்தின் - மனத்தின்கண், அழியும் - அழுங்குவான், அதனை - அத் தீவினைப் பலனை, நினைத்து - ஆராய்ந்து, தொல்லையதென்று - முற்பிறப்பின் வினைப்பயன் என்று, உணர்வாரே - அறிபவர்களே, தடுமாற்றத்து - பிறவித் துன்பத்தின், எல்லை-அளவை, இகந்து ஒருவுவார்-கடந்து நீங்குவார்கள் எ-று.

அறிவிலலாதவன் தீவினை வந்தால் மனத்தினிணைந்தழிவான். அத்தீவினை முன்வினைப்பயனென் றறிந்தவர்களே பிறவித் துன்பத் தளவைக் கடப்பார்கள் என்பதாம். பேதை-பண்பாகுபெயர். வெய்ய-உரிச்சொல் திரிபு. தடுமாற்றம்-பிறவித் துன்பம்; முன், 27-ஆம் செய்யுளிற் போல். முன் வினைப் பயன் என்பது உணர்ந்ததும், இப்பிறப்பிலாயினும் அறத்தைச் செய்யத் தவறார் என்பது குறிப்பு.

34. * அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தாற்
பெரும்பயனு மாற்றவே கொள்க—கரும்பூர்ந்த
சாறுபோற் சாலவும் பின்னுதவி மற்றதன்
கோதுபோற் போகு முடம்பு.

இ-ள். பெறல் - பெறுதற்கு, அரும் - அரிய, யாக்கையை - உடலை, பெற்ற - அடைந்த, பயத்தால் - பலனால், பெரும் - பெரிய, பயனும்-தருமப்பலனையும், ஆற்றவே - மிகவே, கொள்க-கொள்ளக் கடவர், உடம்பு - மானிடசரீரம், கரும்பு-கரும்பிலிருந்து, ஊர்ந்த - (ஆலையாற்) பரவிய, சாறுபோல்-சாற்றைப்போல, சாலவும்-மிகவும், பின் - மறுமைப்பயனை, உதவி - கொடுத்துப் பிற்காலத்துதவியாம், மற்று-பிறகு, அதன் - அக்கரும்பின், கோதுபோல் - சக்கைபோல, போகும்-அவ்வுடல் அழிந்துபோகும் எ-று.

உண்பதற்கினிய கரும்பு தன்னகத்தில் இனிய சாற்றினைக் கொண்டிருப்பதுபோல, பெறுதற்கரிய உடலின்கண் நல்வினை செய்து மறுமைப்பயன் அடையும் ஆற்றல்கொண்டு உளது என்றும், ஆலையினால், அக்கரும்பின்சாறு வெளியாவதுபோல், மறுமைப் பயனும் நல்வினையினால் உண்டாகும் என்றும், சாறுபிழிந்த பிறகு கரும்பு வெறும் சக்கையாகிறதுபோல, உடலும் பயனின்று போகும் என்றும், உவமையை விரித்து உரைத்துக்கொள்க. பின்- மறுமை; ஆகுபெயர். மற்று-வினைமாற்று. கோது - ‡ சக்கை. எவ் வகைப் பிறப்பினும் மக்கட்பிறப்பு † மேலாகையால், அரும்பெறல் யாக்கை யென்றார். (4)

35. $ கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்
துரும்பெழுந்து வேங்காற் றுயராண் டுழவார்
வருந்தி யுடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்காற் பரிவ திலர்.

இ-ள். கரும்பு-கரும்பை, ஆட்டி - ஆலையிலாட்டி, கட்டி-அதன் சாற்றிலிருந்தெடுத்த வெல்லக்கட்டியை, சிறுகாலை - (பதன் கெடு வதற்கு) முன்பே, கொண்டார் - எடுத்துக்கொண்டவர்கள், துரும்பு- அக்கரும்பின் சக்கை, எழுந்து-தீயாலெழுந்து, வேங்கால் - வேவுங்

* புறத்திரட்டு - 33.
‡ "கோதென் றுண்டிலன்"—(கம்ப-பால-தாடகை-56)
† "மக்களுடம்பு பெறற்கரிது"—(அறநெறிச்சாரம்)
$ புறத்திரட்டு - 34.

காலத்தில், ஆண்டு - அவ்விடத்து, துயர்-துன்பத்தால், உழவார்-வருந்தமாட்டார், உடம்பின் - உடம்பாலாகிய, பயன்-தருமப்பலனை, வருந்தி - பிரயாசைப்பட்டு, கொண்டார் - கைக்கொண்டவர்கள், கூற்றம்-இயமன், வருங்கால் - வரும்போது, பரிவது - வருந்துவது, இலர் - இல்லாதவர்களாவார்கள் எ-று.

மேற்பாட்டிற் கூறியதுபோல, கரும்பு உடலுக்கும், கருப்பஞ் சாறும் அதன் வெல்லமும், நல்வினைக்கும் உவமையாகக் கூறப் பட்டன. இதில் உவம உருபு வாராமையின் இஃது எடுத்துக் காட்டுவமையாம். சாறுபிழிந்த பின்னர் கருப்பஞ் சக்கையை எரித் தல் மரபு; நல்வினையாகிய துறவறம் முற்றிய பின்னர் உடலை எரித்த லன்றி வேறுபயன் இல்லை என்றார். துரும்பு-சக்கை. எழுதல்-தீயில் வெந்தெழுதல். வேவுங்கால் - இடைகுறைந்தது. உடம்பின்பயன் நல்வினை : துறவறம். * பரிதல்-துன்புறுதல். (5)

36. இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
யொருவுமின் றீயவை யொல்லும் வகையான்
மருவுமின் மாண்டா ரறம்.

இ-ள். இன்றுகொல்-(இயமன்வருதல்) இன்றைக்கோ, அன்று கொல் - நாளைக்கோ, என்றுகொல்-என்றைக்கோ, என்னாது - என்று கருதாமல், பின்றையே - பின்னேயே, கூற்றம் - இயமன், நின்றது - நிற்கின்றது, என்று எண்ணி-என்று நினைத்து, தீயவை-பாவங்களை, ஒருவுமின்-நீக்குங்கள், மாண்டார்-பெரியோரால் சொல்லிய, அறம்-தருமங்களை, ஒல்லும் வகையால் - இயன்ற அளவில், மருவுமின் - பொருந்திச் செய்யுங்கள் எ-று.

இயமன் பின்னே நிற்கிறானென்றெண்ணி அதருமத்தை நீக் கித் தருமத்தைச் செய்யுங்கள் என்பதாம். இன்று, அன்று என்பன முறையே இளமையையும், முதுமையையும் குறித்தன. எக்கண மேனும் மரணம் வருதல் கூடும் என்பதை வலியுறுத்தப் 'பின் றையே நின்றது' என்றார்; துணிவும் தெளிவும்பற்றி இறந்தகாலத் தில் வந்தது காலவழுவமைதி. கொல்-ஐயம்; இடைச்சொல். † ஒல்

* "பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்"—சிலப்பதிகாரம்.

† "ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்"—குறள் (33) பரிமே-உரை.

லும் வகையான் - இயன்றவரையில்; அஃதாவது பொருளளவிற்கு இல்லறமும், யாக்கைநிலை யளவிற்குத் துறவறமும் செய்தல். (6)

37. † மக்களா லாய பெரும்பயனு மாயுங்கா
லெத்துணையு மாற்றப் பலவானுற்—றொக்க
உடம்பிற்கே யொப்புரவு செய்தொழுகா தும்பர்க்
கிடந்துண்ணப் பண்ணப் படும்.

இ-ள். ஆயுங்கால் - ஆராயுமிடத்து, மக்களால் - மனித சரீரத்தால், ஆய-உண்டாகிய, பெரும் - பெரிய, பயனும் - விளைவும், எத்துணையும் - எவ்வளவும், ஆற்ற-மிக, பலவானுல் - பலவகையானவை என்றால், தொக்க-பொருந்திய, உடம்பிற்கே-உடலுக்கே, ஒப்புரவு-ஏற்ற நன்மையை, செய்து - பண்ணி, ஒழுகாது - நடவாமல், உம்பர்-சுவர்க்கத்தில், கிடந்து - இருந்து, உண்ண - இன்பம் நுகர்வதற்கு, பண்ண - தருமங்கள்செய்ய, படும் - தகும் எ-று.

மானிட சரீரத்தைக்கொண்டே அறமும், துறவும் முடியுமாதலின் 'பயன்பல' என்றார். மக்கள், உடம்புக்கு ஆகுபெயர். அரிய பயனை அடைவதைவிட்டு உடலை அலங்கரித்தல் வேண்டா என்றும், அப்பயனை அடைந்தால் சுவர்க்க இன்பத்தை நுகர்தல் முடியும் என்றும் கூறினார். ஒப்புரவு - ஒப்பிய உரமுடையவை; உடலுக்கு என்றதால் ஏற்ற நன்மை எனப்பட்டது; அவையாவன: அணி, ஆடை, சாந்தம், உண்டி முதலிய சிற்றின்ப அனுகரணங்கள். (7)

38. உறக்குந் துணையதோ ராலம்வித் தீண்டி
இறப்ப நிழற்பயந் தாஅங்—கறப்பயனுந்
தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறி தாப் போர்த்து விடும்.

இ-ள். உறக்கும் - கிள்ளியெடுக்கும், துணையது - அளவினையுடையதாகிய, ஓர் ஆலம்வித்து - ஒரு சிறிய ஆலம்விதை, ஈண்டி-நெருங்கிவளர்ந்து, இறப்ப-மிகவும், நிழல் - நிழலை, பயந்தாஅங்கு-கொடுத்ததைப்போல, அறம் - தருமத்தின், பயனும்-பலனும், தான் சிறிது ஆயினும் - (அது செய்யப்பட்ட) அளவு சிறியதாயிருந்தாலும், தக்கார்-பெரியோர்கள், கைப்பட்டக்கால் - கையிற்பட்டால், வான்-ஆகாயமும், சிறிதா - சிறியதாகத் தோன்றும்படி, போர்த்து விடும்-பரந்துவிடும் எ-று.

† புறத்திரட்டு - 35.

ஆலம்விதை உருவத்திற் சிறிதாயினும் வளர்ந்து * பெருநிழலைத்தரும், அதுபோல் ஒருவன் உத்தமர்க்குத் தருமம்செய்யின் அது † வானையுங் கடந்த அளவுக்குப்பரவும் என்றபடி; உவமையணி. உறக்கல்-கையாற் கிள்ளியெடுக்கும் அளவு. பயந்தாஅங்கு-தருதல் போல, அளபெடை இசை நிறைக்கவந்தது. இறப்ப - மிகவும், வானும் சிறியதாகத் தோன்றும்படிப்பரவும் என்றவாறு. உம்மை-இழிவு சிறப்பு. (8)

39. வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்.

இ-ள். வைகலும் - நாள்தோறும், வைகல்-நாள்கழிதலை, தம் - தம்முடைய, வாழ்நாள்மேல் - ஆயுள்களின்மேல், வைகுதல்வைத்து-செலவுநாளாகவைத்து, வைகலை - அந்த நாட்கள் கழிதலை, உணராதார் - அறியாதவர்கள், வைகலும் - நாள்தோறும், வைகல்வர - தம் வாழ்நாள் கழிவுவர, கண்டும்-பார்த்தும், அஃது-அதனை, உணரார்-அறியார், வைகலும் - நாள்தோறும், வைகலை - கழியும் நாட்களை, வைகுமென்று - மேலும்மேலும் வளர்ந்திருக்கும் என்று, இன்புறுவர்-இன்பம் நுகர்ச்சியில் பொருந்தியிருப்பார்கள் எ-று.

நாள்கள் செல்லச் செல்லத் தம் ஆயுளின் நாட்கள் கழிவது அறியாதவர்கள், அந்நாட்கள் மேலும் மேலும் வளர்ந்து தம் வாழ்நாளையும் வளரச்செய்யும் என்று நினைத்து இன்பத்தை நுகர்வதிலேயே பொருந்தி இருப்பார்கள் என்றபடி. வைகல் - விடிதல், தங்குதல், கழிதல் ‡ என்ற பொருள்களில் வந்தது. வந்த சொல்லும் பொருளும் மீண்டும் பன்முறை வந்தது. இன்பு - ஈண்டு ஆகு

---

* "தெள்ளிய வாலின் சிறுபழத் தொருவிதை
....................பெரும்படையொடும்
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே"—(நற்றொகை)

† " ...............நான்மறை யாளர்கைத்
தானமென்னத் தழைத்தது நீத்தமே "—(கம்ப-பால-ஆற்று-5)

"வியந்தவர் வெருக்கொள விசும்பி னோங்கினு
னுயர்ந்தவர்க் குதவிய வுதவி யொப்பவே"-(கம்ப-பால-வேள்வி-35)

‡ வைகினது என்றதற்குக் கழியாநின்றது, என நச்சினார்க்கினியர் (சிந்) உரைத்ததும் ஒப்பிடுக.

பெயராய் அதன் நுகர்ச்சியைக் குறித்தது. இது சொற்பொருட்பின் வருநிலையணி * யாம். இஃது அகவல் வெண்பா. (9)

40. † மான வருங்கல நீக்கி யிரவென்னு
மீன விளிவினால் வாழ்வேன்ம—னீனத்தா
லூட்டியக் கண்ணு முறுதிசேர்ந் திவ்வுடம்பு
நீட்டித்து நிற்கு மெனின்.

இ-ள். ஈனத்தால் - இழிவான தொழில்களால், ஊட்டியக்கண்ணும் - உணவினை ஊட்டிய இடத்தும், உறுதி - வலிமை, சேர்ந்து - பொருந்தி, இவ்வுடம்பு - இவ்வுடல், நீட்டித்து - நெடுநாள், நிற்கு மெனின் - நிற்குமானால், மானம் - மானமாகிய, அரும் - பெறுதற்கு அரிய, கலம் - ஆபரணத்தை, நீக்கி - தள்ளி, இரவென்னும் - யாசக மென்னும், ஈனம் - மிக ஈனமான, இளிவினால் - செய்கையால், மன் - மிகவும், வாழ்வேன் - உயிர்வாழ்வேன் எ-று.

இவ்வுடல் மட்டில் அழியாமல் நிலைத்திருக்கும் என்ற நிச்சய மிருந்தால், ஈனமாய் இரந்தாயினும் அதனைக் காப்பாற்றி உயிர் வாழலாம் என்றபடி. நல்வினை செய்தாலும் உடல் அழிவது திண்ண மாதலின், அதன் வளர்ச்சிக்கு மானத்தை இழந்து இரத்தல் இழிபு என்றும், உடலை வளர்ப்பதைவிட அறத்தை வளர்ப்பதே சிறப்பு என்றும் குறிப்பாக உணர்த்தினர்.

மானம் - தன்னிலைமையில் தாழாமையும், வினையால் தாழ்வுண் டானால் உயிர் வாழாமையுமாம். மான அருங்கலம் இருபெயரொட்டு, உருவக அணி. உடலுக்கு நகைகள்போல உயிருக்கு அணி மானம் என்க. அதனைப்பெறும் அருமை கருதி, 'அருங்கலம்' என்றார். இளிவு - செய்கை, தாழ்மையுமாம். வாழ்வேன்மன் - இகழ்ச்சிக் குறிப்பு; மாய்கிலேன் என எதிர்நிலைப்பொருள் தருதலின், மன் என்னும் இடைநிலை ஒழியிசைப்பொருளது. நீட்டித்து நிற்றல் - ஆயுள் நீண்டு பல்லாண்டாக வாழ்தல். (10)

அறன்வலியுறுத்தல் முற்றிற்று.

---

* 'சொல்லுக சொல்லின்' என்னும் குறளுரை (200) காண்க.
† புறத்திரட்டு - 1187.

## 5-ஆம் அதிகாரம். தூய்தன்மை

அஃதாவது பரிசுத்தமல்லாத தன்மை. அறத்தைச்செய்ய விரும்பும் மனதையும் கெடுத்துப் பிறபொருள்களில் உய்க்கும் தீய குணம். அவ்வாறு செய்வது பெரும்பாலும் மகளிரது வனப்பே யாதலின், அவர்களது சரீரத்தின் இழிபினை உரைப்பதாகும். அறத்தை விரும்புவோர், தூய்மையற்ற அவர்களை விலக்கல் வேண்டு மென இவ்வதிகாரத்தை 'அறன்வலி யுறுத்த' லின்பின் வைக்கப் பட்டது. தூயதன்மை என்றும் பாடம். பொருள் அதுவே.

41. *மாக்கேழ் மடநல்லா யென்றரற்றுஞ் சான்றவர்
நோக்கார்கொ னொய்யதோர் துச்சிலை--யாக்கைக்கோ
ரீச்சிற கன்னதோர் தோலறினும் வேண்டுமே
காக்கை கடிவதோர் கோல்.

இ-ள். யாக்கைக்கு - உடலிற்கு, ஓர் ஈ - ஓர் ஈயினது, சிறகு - சிறகை, அன்னது - ஒப்பாகிய, ஓர்-ஒரு, தோல் - தோலானது, அறினும்-மிகச்சிறிய அளவில் அறுபட்டாலும், காக்கை-காகத்தை, கடிவது-துரத்துதற்கு, ஓர்-ஒரு, கோல்-தடி, வேண்டுமே - வேண்டு மல்லவா ஆதலால், மா - மாமரத்தின் தளிர், கேழ் - நிறத்தையும், மடம் - இளமையையுமுடைய, நல்லாய் - நங்காய், என்று - என்று புகழ்ந்து, அரற்றும் - வாய்விட்டு இரங்குகின்ற, சான்றவர் - பெரி யோர்கள், நொய்யது - அற்பமாகியதான, ஓர் துச்சிலை - ஓர் உடலை, நோக்கார் கொல் - ஆராய்ந்து பார்க்கமாட்டார்களோ! எ-று.

இது பெண்களின் சரீர இழிவினைக்கூறியது. மிகச் சிறிய அளவுக்குச் சரீரத்தில் தோல் அறுந்து புண்பட்டாலும், அதைக் கொத்தித் தின்னக் காக்கைகள் சூழ்ந்துகொள்ளும் மாமிசபிண் டத்தையுடையது உடல்; பெண்களின் அழகை வியக்கும் உத்தமர், அத்தகைய உடலின் இழிவைக் கவனிப்பதில்லைபோலும் என்றவாறு. யாக்கையின்கண் தோல் அறினும் என்க. யாக்கைக்கு என்றது உருபு மயக்கம். தோலின் மிகச்சிறிய அளவு என்று காட்ட 'ஈச்சிற கன்னதோல்' என்றார், ஈயின் சிறகு மிகச் சிறிதாகலின். கடிதல்- துரத்துதல். வேண்டுமே - ஏகாரம் இரக்கப்பொருளது. மாக்கேழ்- மாவின்கேழ் என்க. மா முதலாகுபெயராய் மாமரத்தின் இளந் தளிர்க்கு வந்தது. இனிச் சிறந்த நிறத்து நல்லாய் எனினுமாம்.

* புறத்திரட்டு - 403. புக்கிலை என்றும் பாடம்.

கேழ்-கெழு * என்னும் உரிச்சொல் முதல் நீண்டு ஈற்றுகரம் கெட்டது. மடமை-பேதைமை, பெண்களின் நாற்குணத்தொன்று, உபலக்ஷணமாக மற்றவையும் கொள்க. நல்லாய்-விளி. தான் விரும்பும் மங்கையின் அன்பு பெறுமையால் அராற்றுதல். † சான்றவர் - தூர்க்குணர் என்று எதிர்மறைப் பொருளில் வந்தது, வஞ்சகப் புகழ்ச்சி, எள்ளல் நகைச்சுவையும் காண்க. கொல்-ஐயம் தரும் இடைச்சொல். குச்சில் - புக்கிடம் உடலைக்குறித்தது. புக்கில் எனினுமதுவே பொருள். (1)

42. தோற்போர்வை மேலுந் துளைபலவாய்ப் பொய்ம்மறைக்கு
மீப்போர்வை மாட்சித் துடம்பானுன்—மீப்போர்வை
பொய்ம்மறையாக் காமம் புகலாது மற்றதனைப்
பைம்மறியாப் பார்க்கப் படும்.

இ-ள். உடம்பு-சரீரம், தோல்-தோலாகிய, போர்வைமேலும்-போர்வையின் மேலிடத்தும், துளை - துவாரங்கள், பலவாய் - பல இருப்பனவாய், பொய் - தன்னிடத்துள்ள மலங்களை, மறைக்கும்-மறைத்துவைத்திருக்கும், மீப்போர்வை-மேற்போர்வையினால், மாட்சித்து-பெருமையுடையது, ஆனால் - என்றால், மீப்போர்வை-மேலே போர்த்த போர்வையால், பொய் - மலங்களை, மறையா - மறைத்தும், காமம் - விருப்பத்தை, புகலாது - செய்யாது, அதனை - அவ்வுடலை, பைம்மறியா - உட்பக்கம் வெளிப்பக்கமாகும்படித் திருப்பிய பைப் போல, பார்க்கப்படும் - நோக்கத்தகும் எ-று.

உடலுக்கு அழகு செய்வது தோலும் ஆடையும்; வெளிப் பார்வைக்கு அழகுகாட்டும் பட்டுப்பையைப் போன்றது; அப் பையின் உட்புறம் வெளிப்பக்கம் வரும்விதம் மாற்றினால் அதன் உள் காணப்பெறும் விகாரத் தோற்றம்போல் ‡ உடலின் உட்

* "குருவுங் கெழுவு நிறனாகும்மே'....(தொல் உரிச்)

† முன்னின் மொருவர் முகத்தினும் வாயினும்
கன்னின் றுருகக் கலந்துரைத்துப்—பின்னின்
றிழித்துரையாச் சான்றோரை யஞ்சியே தேவர்
விழித்திமையா நின்ற நிலை.

என்ற அறநெறிச்சாரத்தில் 'சான்றோர்' இப்பொருளில் வருதலும் காண்க.

‡ "மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து
மிக்கோ யிதனைப் புறமறிப்பாராய்"—(மணிமே)

" பைம்மறியாப் பார்க்கப் பருந்தார்க்கும் தகைமைத்து "
(இறையனாருரை)

புறமும் குடல் முதலியவற்றால் வெறுக்கத்தக்க தோற்றத்தைக் கொடுக்கும் என்றபடி.

தோலைப் போர்வையாக உரைத்தது உருவகவணி. துணைபல- நவத்துவாரங்கள், 'பொய்-அழுக்கு முதலியன இடக்கரடக்கல் என் பதுமாம். போர்வையால் மாட்சித்து என்க. மாட்சித்து - குறிப்பு வினைமுற்று. மறையா-"செய்யா" என்னும் எச்சம். காமம்-விருப்பம். புகலல் - செய்தல், இனிக் காமம் புகலாது * புனைந்துரையாது எனினுமாம்; காமநுகர்ச்சியை விரும்பாது என்று உரைப்பாரு முளர். (2)

43. தக்கோலந் தின்று தலைநிறையப் பூச்சூடிப்
பொய்க்கோலஞ் செய்ய வொழியுமே—யெக்காலு
முண்டி வினையு ளுறைக்கு மெனப்பெரியோர்
கண்டுகை விட்ட மயல்.

இ-ள். எக்காலும் - எந்நாளும், உண்டி - உணவென்னும், வினையுள் - தொழிலால், உறைக்குமென - உறுதிபெறுமென்று, பெரியோர் - பெரியோர்கள், கண்டு - உண்மையை அறிந்து, கைவிட்ட - வெறுத்துவிட்ட, மயல் - செத்தையான உடலின் மலம், தக்கோலந் தின்று - தாம்பூலந்தின்று, தலை நிறைய - கூந்தல் நிறைய, பூச்சூடி- பூவைத்தரித்து, பொய்க்கோலம் - பொய்யாகிய அழகை, செய்ய - செய்தால், ஒழியுமே - நீங்குமோ எ-று.

உணவூட்டுவதனால் வளர்வது சரீரம் என்று அதனைப் பெரியோர் வெறுத்துவிட்டனர்; அவ்வுடலின் அழுக்கு வாசனைப் பொருள்களாலும் புற அலங்காரத்தாலும் மாறுவதில்லை என்றபடி.

தக்கோலம் - வால்மிளகு, வாசனைப் பண்டங்கள் ஐந்தனுள் ஒன்று, † இது கூறவே மற்றவற்றையும் உபலக்ஷணத்தால் குறித் தது. தலை - ஈண்டுக் கூந்தலைக் குறித்தலால் ஆகுபெயர். உடலின் அழுக்கை மறைக்கும் அழகு எனப் 'பொய்க்கோலம்' என்றார். உறைக்கும - வன்மைபெறும். உறு, பகுதி. கைவிடல் - வெறுத்து விலக்குதல் - மயல் - செத்தை - ஏகாரம் எதிர்மறைப் பொருளில் வந்த வினா. (3)

---

* புனைந்துரைத்தல் பெருமைதோன்றப் பலபடப் புகழ்ந்துரைத்தல்
"காமஞ் செப்பாது கண்டது மொழிமோ"—(குறுந்-2)
என்றது மொப்பிடுக.

† "தக்கோலம் தீம்பூத் தகைசாலி லவங்கங்
கற்பூரஞ் சாதியோ டைந்து".

44. தெண்ணீர்க் குவளை பொருகயல் வேலென்று
கண்ணில்புன் மாக்கள் கவற்ற விடுவெனோ
உண்ணீர் களைந்தக்கா னுங்குசூன் றிட்டன்ன
கண்ணீர்மை கண்டொழுகு வேன்.

இ-ள். உள்-உள்ளிருக்கும், நீர்-நீரினை, களைந்தக்கால் - எடுத்து விட்டால், நுங்கு - நுங்கை, சூன்றிட்டன்ன - தோண்டியதை ஒத்த, கண் - கண்களுடைய, நீர்மை-குணத்தை, கண்டு - பார்த்து, ஒழுகுவேன்-துறவொழுக்கத்தில் நடப்பேன், தெள்-தெளிந்த, நீர்-நீரில் மலரும், குவளை-நீலோற்பலமும், பொரு - ஒன்றை ஒன்றை எதிர்க்கும், கயல் - கெண்டைமீனும், வேல் - வேலாயுதமும், என்று-எனப் பாராட்டி, கண்ணில் - ஞானக்கண்ணில்லாத, புல் - அற்பமான, மாக்கள் - மனிதர்கள், கவற்ற - என் மனதைக் கவலைப்படுத்த, விடுவனோ-யான் துறவறத்தை விடுவேனே எ-று.

இது பெண்களின் கண்ணழகைப் பழித்துத் துறவினை வற்புறுத்தியது. நுங்கின் நீரைக்குடைந்து எடுத்தபின் காணும் தோற்றத்தின் கண்கள் என, 'நுங்கு சூன்றிட்டன்ன' என்றார்; உவமையணி. நீர்மை-தன்மை, ஒழுகுவேன் தன்மை வினையாலணையும் பெயர். கண்ணைக் குவளை என்றும் கயல் என்றும் வேலென்றும் உவமித்து மகிழ்வார் என்றபடி. குவளை முதலியன உவமவாகுபெயரெனினுமாம், அழகினால் ஒன்றையொன்று மாறுபட்டு விளங்கும் கண்கள் என்பதற்குப் 'பொருகயல்' என்றார். இவ்வாறு நங்கையரை நயப்பவர்கள் பகுத்தறிவிழந்த ஐயறிவினர் என்பதற்கு மாக்கள் * என்றார். கண்-ஞானக்கண். ஓகாரம்-எதிர்மறை வினா. (4)

45. முல்லை முகைமுறுவன் முத்தென் றிவைபிதற்றுங்
கல்லாப்புன் மாக்கள் கவற்ற விடுவெனோ
எல்லாருங் காணப் புறங்காட் டுதிர்ந்துக்க
பல்லென்பு கண்டொழுகு வேன்.

இ-ள். எல்லாரும் - யாவரும், காண-அறிய, புறங்காட்டு - சுடுகாட்டில், உதிர்ந்து உக்க - மிகவும் உதிர்ந்துகிடக்கும், பல் என்பு-பல்லாகிய எலும்பை, கண்டு-பார்த்து, ஒழுகுவேன் - தவநெறியில் நடப்பேன், முறுவல் - அப்பற்களை, முல்லைமுகையென்று - முல்லையரும்பென்றும், முத்தென்று - முத்தென்றும், இவை - இம்மொழிகளை, பிதற்றும் - உவமையாகச் சொல்லும், கல்லா - கல்வியறியாத,

* மாவு மாக்களு மையறி வினவே. (தொல், மரபு)

புல்-அற்பமான, மாக்கள்-மனிதர்கள், கவற்ற-என்மனதைக் கவலைப் படுத்த, விடுவேனோ-யான் துறவறத்தை விடுவேனோ எ-று.

இதுவுமது. இறந்த பிணத்தின் பற்கள் எலும்புகளாகக் கிடக்க, அப்பற்களை முத்தென்றும் முல்லையரும்பு என்றும் கூறுவர் அறி விலார் என்றபடி. முல்லையின் முகை என்க. முகை வடிவு நிறம் பற்றியும், முத்துநிறம் பற்றியும், வந்த உவமை. உதிர்ந்துக்க-ஒருபொருட் பன்மொழி. என்ற இவை எனப்பிரிக்க; அகரம் தொகுத்தல். (5)

46\. * குடருங் கொழுவுங் குருதியு மென்புந்
தொடரு நரம்பொடு தோலு—மிடையிடையே
வைத்த தடியும் வழும்புமா மற்றிவற்று
ளெத்திறத்தா ளீர்ங்கோதை யாள்.

இ-ள். குடரும்-குடலும், கொழுவும்-கொழுப்பும், குருதியும்-உதிரமும், என்பும் - எலும்பும், தொடரும் - ஒன்றோடொன்று தொடர்ந்த, நரம்பொடு - நரம்புடன், தோலும் - தோலும், இடை இடையே - இவற்றுக்கு நடு நடுவாக, வைத்த - வைக்கப்பட்ட, தடியும் - தசையும், வழும்பும் - நிணமும், ஆம் - ஆகிய, இவற்றுள்-இவைகளுள், ஈர்ங்கோதையாள்-குளிர்ந்தமாலையை யுடையவள், எத் திறத்தாள் - எந்தப் பகுதியை யுடையவள் எ-று.

அழகுடையவள் என்று கருதப்படுபவளது, சரீரம், குடல், தசை முதலியவற்றால் ஆகியவை, அவ்வுறுப்புக்களில் எதுதான் அவள் அழகை உண்டாக்குவது என்றபடி. இதன்கண் உறுப்புக் களை விவரித்து அருவருப்பு உண்டாக்குதல் அறிக. ஈர்ம்கோதை-குளிர்ந்தமாலை; அவளுடைய அழகுக்கு உபலக்ஷணம். கோதை யாள்-குறிப்பு வினைப்பெயர். எத்திறத்தாள் - என்ன தன்மையினள் எனினுமாம். வினா - எதிர்மறைப்பொருள். (6)

47\. ஊறி யுவர்த்தக்க வொன்பது வாய்ப்புலனுங்
கோதிக் குழம்பலைக்குங் கும்பத்தைப்—பேதை
பெருங்கோளி பெய்வளா யென்னுமீப் போர்த்த
கருந்தோலாற் கண்விளக்கப் பட்டு.

இ-ள். பேதை-அறிவில்லாதவன், ஊறி - மலங்களூறி, உவர்த் தக்க - வெறுக்கத்தக்க, ஒன்பதுவாய்ப்புலனும் - நவதுவார விடங்

---

* புறத்திரட்டு - 405.

களினும், கோதி - கொழித்து, குழம்பு - மலக்குழம்பை, அலைக்கும்-வெளிப்படுத்தும், கும்பத்தை - உடலான குடத்தை, மீப்போர்த்த-மேலே மூடிய, கரும்-பெருமை பொருந்திய, தோலால்-தோலினால், கண் - கண்களுக்கு, விளக்கப்பட்டு - விளக்கம் பொருந்தி, பெரும்-பெரிய, தோளி - தோள்களையுடையவளை, பெய்வளாய்-இடப்பட்ட வளையல்களை யுடையவளை, என்னும்-என்று சொல்லுவான் எ-று.

உடலின் தூய்தன்மையைக் கூறுகிறது. உடற்குள் உண்டாம் அசுத்தங்களெல்லாம் ஒன்பது வாயிலானும் வெளிப்படுகின்றது உண்மையாதலின் ‘அலைக்கும் கும்பம்’ என்றார். குழம்பு - இடக்கரடக்கல். பேதை - ஈண்டு ஆண்பால், தோளி, வளாய் - விளி. தோளும் கண்ணும் பெருத்திருத்தல் இலக்கணம். வளைபெய்தவள் என மாறினுமாம். கருமை-பெருமை. கண்விளக்கம் பெறுதலாவது, கவரப்படுதல். என்னும்-செய்யுமென்னும் முற்று. (7)

48. பண்ட மறியார் படுசாந்துங் கோதையுங்
*கண்டுபா ராட்டுவார் கண்டிலர்கொன்—மண்டிப்
பெடைச்சேவல் வன்கழுகு பேர்த்திட்டுக் குத்தன்
முடைச்சாகா டச்சிற் றுழி.

இ-ள். பண்டம்-உடலாகிய பொருளினது இழிவை, அறியார்-அறியாதவர்களாய், படு - பூசப்பெற்ற, சாந்தும் - சந்தனத்தையும், கோதை - மாலையையும், கண்டு - பார்த்து மகிழ்ந்து, பாராட்டுவார்-உடலைப் புகழ்கின்றவர்கள், முடை - நாறுகின்ற, சாகாடு - உடலான பண்டியின், அச்சு-உயிரான அச்சு, இற்று உழி - முறிந்த இடத்து, வன்கழுகு-வலிய கழுகுகள், பெடை-பெட்டையும், சேவல்-சேவலுமாக, மண்டி-நெருங்கி, பேர்த்திட்டு - அவ்வுடலைப் புரட்டி, குத்தல்-குத்திப் புசிப்பதை, கண்டிலர் கொல்-பார்த்தவரில்லையோ எ-று.

சரீரம் விழுந்ததும் அதைக் கழுகுகள் முதலியன கொத்தித் தின்னும்; இத்தகைய சரீரத்தைப் பாராட்டுவதில் என்னபயன் என்றபடி. பண்டம் - பொருள்; உடலுக்கு உவமவாகுபெயர். படுசாந்து - வினைத்தொகை. படுதல்-பூசுதல்; “பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை” † என்றதுபோல. கோதை - மாலை, கூந்தலுமாம். கண்டு-அவற்றால் ஆன அழகைக்கண்டு எனினுமாம். கொண்டு என்ற பாடத்துக்கு, அணிந்துகொண்டு தம் உடலையே வியப்பவர் என்க. பாராட்டுவார் - வினையாலணையும் பெயர். கொல் - ஐயத்தின்

* கொண்டு என்றும் பாடம். † கலித்தொகை.

வந்தவினு. வன்கழுகின் பெடைச்சேவல் என்க; உம்மைத்தொகை. முடை - புலால். சாகாடு, சகடம் என்பதன் திரிபு என்பர்; அச்சு - வண்டியின் மையக்கட்டை, இவை உருவகமாக முறையே உடலையும் உயிரையும் குறித்தன. இற்றுழி-அகரம் தொகுத்தல்-பாராட்டுவார் குத்தலைக் கண்டிலரோ என்க. (8)

49. கழிந்தா ரிடுதலை கண்டார்நெஞ் சுட்கக் [ரைப்
குழிந்தாழ்ந்த கண்ணவாய்த் தோன்றி—யொழிந்தா
போற்றி நெறிநின்மி னிற்றிதன் பண்பென்று
சாற்றுங்கொல் சாலச் சிரித்து.

இ-ள். கழிந்தார்-இறந்தவர்களது, இடு-(இடுகாட்டில்) சிதறிக் கிடந்த, தலை - தலைகள், கண்டார் - பார்த்தவர்களுடைய, நெஞ்சு-நெஞ்சம், உட்க - அஞ்சும்படி, குழிந்து ஆழ்ந்த - குழிந்து ஆழம் பட்ட, கண்ணவாய் - கண்களையுடையனவாக, தோன்றி - தோற்றத்தைக்கொண்டு, ஒழிந்தாரை-சாவாதிருந்தவரை, போற்றி - பொறிகளைத் தீயவழிச்செல்லாது பாதுகாத்து, நெறி-துறவு மார்க்கத்தில், நின்மின்-நில்லுங்கள், இதன் பண்பு-இவ்வுடலினது தன்மை, இற்று என்று - இத்தன்மையது என்று, சால - மிகவும், சிரித்து-நகைத்து, சாற்றுங்கொல் - சொல்வனபோலும் எ-று.

கழிந்தார்-இறந்து சென்றவர். ஒழிந்தார்-(இறவாமல் உயிருடனிருக்கும்) ஏனையவர். இரண்டும் வினையாலணைந்த பெயர். ஒழிந்தார் எனவே அவரும் இனிமேலிறப்பவர் என்று தொனித்தல் காண்க. கண்ண - குறிப்பு வினைப்பெயர். நகைத்தல், யாக்கையின் நிலை இவ்வாறு அழியும் தன்மையது என்று எள்ளி என்க. எள்ளல் நகை என்றேனும், பிறனது பேதைமையைக் குறித்த நகைப்பு என்றேனும் கொள்க. இற்று - இத்தன்மைத்து; குறிப்பு வினை முற்று. சாற்றும் என்றது தற்குறிப்பேற்றவணி. (9)

50. உயிர்போயார் வெண்டலை யுட்கச் சிரித்துச்
செயிர்தீர்க்குஞ் செம்மாப் பவரைச்—செயிர்தீர்ந்தார்
கண்டிற் றிதன்வண்ண மென்பதனாற் றம்மையோர்
பண்டத்துள் வைப்ப திலர்.

இ-ள். உயிர்போயார் - இறந்தவர்களுடைய, வெண்டலை-(இடு காட்டிற் கிடக்கும்) வெண்மையாகிய தலைகள், உட்க-பார்த்தவர்கள் அஞ்சுமாறு, சிரித்து-நகைத்து, செம்மாப்பவரை - சிற்றின்பத்தில் மயங்கிக் கிடக்கின்றவரை, செயிர் - அம்மயக்கமாகிய குற்றத்தை,

தீர்க்கும் - நீக்கும், செயிர் - குற்றத்தினின்றும், தீர்ந்தார் - நீங்கின வர்கள், கண்டு - பார்த்து, இதன்வண்ணம் - இவ்வுடம்பின் வகை, இற்று - இத்தன்மையையுடையது, என்பதனால் - என்று கருதுவ தால், தம்மை-தம் உடலை, ஓர்பண்டத்துள்-ஒரு பொருளாக, வைப்ப திலர் - வைத்து மதித்தலில்லாதவராவர் எ-று.

போயார் - போயினவர், தெரிநிலை வினைப்பெயர். வெண்டலை, இறந்தபின் தோல், தசை முதலியன அழிந்த தலைகள். பற்கள் தெரியக்கிடத்தலைச் சிரித்ததாகக் கூறியது தற்குறிப்பேற்ற அணி. செம்மாப்பவர்-மயங்கியவர்; ஒருசொல். வண்ணம்-அழியும் தன்மை. பண்டத்துள் - பண்டமாக, உருபு மயக்கம். தம்மை - தாம் என்பது உயிரையும் உணர்வையும் குறிப்பது, ஈண்டு உடலின்மேல் நின்றது. தம்மை மதியார் எனவே, துறவறத்தைக் கடைப்பிடிப்பர் என்க.

தூய்தன்மை முற்றிற்று.

## 6-ஆம் அதிகாரம். துறவு

அஃதாவது உடலாகிய அகப்பற்றும், செல்வமுதலிய புறப் பற்றும் துறந்துவிடுதல்: செல்வ முதலியன நிலையாமை அறிந்து, அறத்தின் பெருமையும் உணர்ந்து, அதற்கு இடையூறாகிய தூய்மை யற்றவற்றை விலக்கி, எஞ்சிய பற்றுக்களையும் களைதல். அதிகார முறைமையும் இதனால் விளங்கும்.

51. * விளக்குப் புகவிருண் மாய்ந்தாங் கொருவன்
றவத்தின்முன் னில்லாதாம் பாவம்—விளக்குநெய்
தேய்விடத்துச் சென்றிருள் பாய்ந்தாங்கு நல்வினை
தீர்விடத்து நிற்குமாந் தீது.

இ-ள். விளக்கு - தீபம், புக-பிரவேசிக்க, இருள் - இருட்டு, மாய்ந்தாங்கு - கெட்டாற்போல, ஒருவன் - ஒருவன் செய்யும், தவத் தின் முன்-தவத்திற்கு எதிரில், பாவம்-தீவினை, நில்லாது-நிற்காது, விளக்கு - அத்தீபத்தின், நெய் - தைலம், தேய்விடத்து - குறைந்த போது, இருள் - இருட்டு, சென்று-போய், பாய்ந்தாங்கு - பரந்தது போல, நல்வினை - புண்ணியம், தீர்விடத்து - நீங்கினபோது, தீது- பாவம், நிற்கும்-எதிர்வந்து நிற்கும் எ-று.

தவம்-ஈண்டுத்துறவறம். தவம் விளக்காகவும், நல்வினை அவ் விளக்கின் நெய்யாகவும், பாவம் இருளாகவும் கொள்க. உவமையணி.

* புறத்திரட்டு - 273.

விளங்கச்செய்வது விளக்கு; தொழிலாகுபெயர். ஒருவன் தவம் செய்வதற்கும் முற்பிறப்பில் நல்வினை செய்திருக்க வேண்டு* மென்பது சமணமதக் கொள்கை. அந்நல்வினை நிற்கும் துணையும் தவம் கைகூடிப் பாவம் விலகும் என்றும், அது தீர்ந்தபோது பாவம் மீண்டும் சேரும் என்றும் கொள்க. புக - காரணப்பொருளில் வந்த வினையெச்சம். ஆங்கு-உவமவுருபு. தீது-குறிப்புவினைப்பெயர். (1)

**52.** நிலையாமை நோய்மூப்புச் சாக்காடென் றெண்ணித்
தலையாயார் தங்கருமஞ் செய்வார்—தொலைவில்லாச்
சத்தமுஞ் சோதிடமு மென்றாங் கிவைபிதற்றும்
பித்தரிற் பேதையா ரில்.

இ-ள். தலையாயார் - உயர்ந்தோர்கள், நிலையாமை - (செல்வ மிளமை சரீரமிவை) நிலைத்திராமையும், நோய்-வியாதியும், மூப்பு-விருத்தாப்பியமும், சாக்காடு என்று - மரணமுமுள்ளன என்று, எண்ணி - நினைத்து, தம் - தமது, கருமம் - காரியமாகிய தவத்தை, செய்வார் - செய்வார்கள், தொலைவில்லா - முடிவில்லாத, சத்தமும்-எழுத்தியலும், சோதிடமும் - எண்ணியலும், என்ற - எனப்பட்ட, இவை-இவைகளை, பிதற்றும்-விடாமற் சொல்லித் திரியும், பித்தரின்-பித்தர்களைப்போல, பேதையார்-அறிவீனர், இல்-இல்லை எ-று.

செல்வத்துக்கு நிலையாமையும், இளமைக்கு நோயும் மூப்பும், யாக்கைக்குச் சாக்காடும் உண்டாம் எனினுமாம். கருமம்-நல்வினை, அதிகாரம் நோக்கித் தவம் எனப்பட்டது. தொலைவு-முடிவு. தலைமை ஆயவர் என்க, பண்படியாகப் பிறந்த குறிப்புவினைப்பெயர். சத்தம், சோதிடம்-வடசொல்; முறையே எண்ணையும் எழுத்தையும் † குறிக்கும். இலக்கண நூல், சோதிட நூல் என உரைப்பாருமுளர். ஆங்கு-அசை.

நூல்களைக் கற்றல் பரம்பொருளை ‡ அறிவதற்கே ஆதலின் அதனை அடைதற்குப் பற்றுக்களைத் () துறத்தல்வேண்டும் அன்றி,

* "மேலைத் தவத்தாற் றவஞ்செய்யா தார்" —(நாலடி-31) என்ற செய்யுளும் அதன் உரையும் காண்க.

† எண்ணென்ப வேனை யெழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு. —(குறள்-392)

‡ கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின். —(குறள்-2)

() பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. —(குறள்-350)

நூல்களே முடிந்தபொருள் என அவ் ஆராய்ச்சியிலேயே வீணே நாள்கழித்தல் பிழை என்றார். கற்றும் பயனடையாக் கற்றறிமூடர் என விளக்கப் பித்தர் என்றும் பேதையர் என்றும் உரைத்தார். (2)

53. * இல்ல மிளமை யெழில்வனப்பு மீக்கூற்றஞ்
செல்வம் வலியென் றிவையெல்லா—மெல்ல
நிலையாமை கண்டு நெடியார் துறப்பர்
தலையாயார் தாமுய்யக் கொண்டு.

இ-ள். தலையாயார்-உயர்ந்தோர்கள், இல்லம்-இல்வாழ்க்கையும், இளமை-இளமைப்பருவமும், எழில்-வளர்ச்சியும், வனப்பு-அழகும், மீக்கூற்றம் - பிறரிடம் மேம்பட்ட சொல்லும், செல்வம்-பொருளும், வலி-வன்மையும், என்ற - என்று உரைக்கப்பட்ட, இவையெல்லாம்- இவைகளெல்லாம், நிலையாமை - நில்லாமையை, மெல்ல-நிதானமாக, கண்டு-பார்த்து, தாம் - தாங்கள், உய்யக்கொண்டு - கடைத்தேறும் வழியைக் கைக்கொண்டு, நெடியார் - தாமதங் கொள்ளாதவர்களாய், துறப்பர் - இருவகைப்பற்றையும் விடுவர் எ-று.

இல்-இல்லறவாழ்க்கைக்கு ஆகுபெயர்; அம்-சாரியை. இளமை- காமம் நுகர்தற்கேற்ற யௌவனபருவம். எழில்-வளர்ச்சி; வனப்பு எனக்கொண்டு மிக்க அழகு என்பது சிறப்பின்று. மீக்கூற்றம்- கூறப்படுவது, செல்வாக்கு; தொழிற்பெயர். செல்வம் ஈண்டுச் சிற்றின்பத்துக் குதவுவனவற்றையே குறித்தது. வலி: உடல்வலி, மனவலி, நட்புவலி என்பன. என்ற-அகரம் தொகுத்தது. என்று எனக்கொள்ளின் எண் இடைச்சொல்லாக்கி, இல்ல முதலியவற் றோடும் கூட்டுக. மெல்லக்கண்டு - நாடோறும் ஆராய்ந்து அறிந்து. அறிந்தபின்னர் காலங்கழிக்காமல் துறப்பார் என, நெடியார் என்றார்; எதிர்மறை முற்றெச்சம். துறத்தல், அகமும் புறமும் என்க. (3)

54. துன்பம் பலநா ளுழந்து மொருநாளை
இன்பமே காமுறுவ ரேழையா—ரின்ப
மிடைதெரிந் தின்னாமை நோக்கி மனையா
றடைவொழிந்தா ரான்றமைந் தார்.

இ-ள். ஏழையார்-அறிவில் ஏழைமையுடையவர்கள், பலநாள்- பலகாலமும், துன்பம் - துயரத்தை, உழந்து - அநுபவித்தும், ஒரு நாளை - ஒருநாளில் அடையும், இன்பமே - சுகத்தையே, காமுறுவர்- விரும்புவார்கள், ஆன்று-அறிவில் பெருகி, அமைந்தார் - அடங்கிய மனத்தினர், இன்பம் - இல்வாழ்க்கையின்பத்தை, இடை - வேறு

* புறத்திரட்டு - 418.

பாட்டை, தெரிந்து-அறிந்து, இன்னாமை-துன்பத்தையும், நோக்கி-கவனித்துப் பார்த்து, மனைஆறு-இல்வாழ்க்கை வழியின், அடைவு-சம்பந்தத்தை, ஒழிந்தார் - நீங்கினார் எ-று.

இல்வாழ்க்கையில் அழுந்தினவர் எப்போதும் துன்பத்தையே அடைந்தும் என்றேனும் ஒருநாள் இன்பத்தைப் பெறுவோம் என்ற நோக்கம் உடையவர்கள் என்பது விளக்க, 'உழந்து ஒருநாளை இன்பமே காமுறுவர்' என்றார். இனி ஒரே ஒருநாள் மட்டில் நுகரும் இன்பம் என உரைப்பாருமுளர். அறிவில் ஏழைமை உடையவர், ஏழையர். இடை-இடையூறு என்பதன் ஈறுகெட்டது எனினுமாம். இனி, இடை (நடு) நிலையில் நன்கு ஆய்ந்து என்பாரு முளர். நூல்களைப் பரக்கக்கற்றவர் என ஆன்று என்றும், அக் கல்விக்கேற்ப * அடங்கிய மனத்தை உடையவர் என அமைந்தார் என்றும் உரைத்தார். ஆன்றமைந்தார் - வினைப்பெயர். ஆன்று - அகன்று என்பதன் மரூஉ. (4)

55. † கொன்னே கழிந்தன் றிளமையு மின்னே
பிணியொடு மூப்பும் வருமாற்—றுணிவொன்றி
என்னொடு சூழா தெழுநெஞ்சே போதியோ
நன்னெறி சேர நமக்கு.

இ-ள். துணிவு-துணிதலை, ஒன்றி-பொருந்தி, என்னொடு-என்னுடனும், சூழாது-செய்யவேண்டியவற்றை ஆலோசியாது, எழும்-இன்பப்பொருளை நாடி எழுகின்ற, நெஞ்சே - மனமே, இளமையும்-இளமைப்பருவமும், கொன்னே - பயனில்லாமல், கழிந்தன்று - கழிந்துபோயிற்று, இன்னே - இப்பொழுதே, பிணியொடு - பிணியுடன் கூடிய, மூப்பும்-கிழத்தன்மையும், வரும்-வந்துசேரும், ஆல்-அதனால், நமக்கு - நமக்கு, நன்னெறி - துறவாகிய நல்வழி, சேர - கிடைக்க, போதியோ - செல்வாயோ எ-று.

துறவு நெறியில் செல்லாமலே இளமையும் கழிந்தது, மூப்பும் வந்தது ; இனியேனும் துறவினை நாடுவாயோ என ஆன்மா மனத்தை வினவியபடி ; நேஞ்சறிவுறூஉ. இளமையும்: உம்மை, செல்வ முதலிய வற்றையும் குறித்தலின் இறந்தது தழுவியது. சூழ்தல் - நல்வழி அடையும் நெறியை ஆராய்தல். எழுதல் - சிற்றின்ப நுகர்தற்கு என்க. போதியோ, வினவோடிரக்கம் தோன்றியது. நமக்கு, ஆன் மாவுக்கும் மனத்துக்கும். (5)

* " ஆன்றவிந் தடங்கிய சான்றோர் "—(புறம்) என்றதும் ஒப்பிடுக.
† புறத்திரட்டு - 41.

56. மாண்ட குணத்தொடு மக்கட்பே றில்லெனினும்
பூண்டான் கழித்தற் கருமையாற்—பூண்ட
மிடியென்னுங் காரணத்தின் மேன்முறைக் கண்ணே
கடியென்றார் கற்றறிந் தார்.

இ-ள். மாண்ட - பெருமை பொருந்திய, குணத்தொடு - நற்குணத்தொடு, மக்கட்பேறு - மக்களைப்பெறுதல், இல்லெனினும் - (மனைவிக்கு) இல்லை என்றாலும், பூண்டான் - விவாகம் புரிந்தவன், கழித்தற்கு - அவளைவிட்டு விலகுவதற்கு, அருமையால் - அரிதாதலால், பூண்ட - தான்கொண்ட, மிடியென்னும் - துன்பம் என்னும், காரணத்தின் - காரணம்பற்றியும், கற்றறிந்தார் - பெரியோர்கள், மேன்முறைக்கண்ணே - மேலாகிய துறவறவொழுக்கத்தின் நிமித்தம், கடியென்றார் - (மணஞ்செய்யு முன்னமே இல்வாழ்க்கையை) விட்டுவிடு என்றார்கள் எ-று.

இளமையில் துறத்தலை வற்புறுத்துவது சமண நூல் ஆதலின், இது மணப்பதன் முன் துறப்பது நலம் என்றது. மனைவிக்கு நற்குணமும், மக்கட்பேறும் இருப்பின் மணந்த பின் துறத்தல் முடியாதெனு, 'கழித்தற்கருமை' என்றார். உம்மை இழிவு சிறப்பு; அவை பொருந்திய இடத்துத் துறத்தல் குற்றமாம் என்க. குணமாவன, கற்பு முதலியன. மிடி - பிறப்பினால் உண்டாகிய துன்பம், துறவே சிறந்ததெனக் காட்ட 'மேன்முறை' என்றார். இனி, இரட்டுற மொழிதலென்னும் உத்தியால், மேல் முறைக்கண் - மேன்மையான நூலின்படி கடியை (விவாகத்தை)க் கடி (வெறுத்து விடு) எனக் கூறினார் எனவும் பொருள் கொள்க. ஈண்டுக் கடி, மணம் என்றும், வெறு என்றும் இரு பொருள் படும். இது பிறிதிலை நவிற்சியணி. பூண்டான் - வினைப்பெயர். (6)

57. *ஊக்கித்தாங் கொண்ட விரதங்க ளுள்ளுடையத்
தாக்கருந் துன்பங்க டாந்தலை வந்தக்கா
னீக்கி நிறூஉ முரவோரே நல்லொழுக்கங்
காக்குந் திருவத் தவர்.

இ-ள். ஊக்கி - முயன்று, தாம் - தாங்கள், கொண்ட - மேற்கொண்ட, விரதங்கள் - தவங்கள், உள் உடைய - முழுவதும் கெடும்படி, தாக்கு - தடுப்பதற்கு, அரும் - அரிய, துன்பங்கள் - துயரங்கள், தலை - தம்மிடத்தில், வந்தக்கால் - வந்து சேர்ந்தால், நீக்கி - அத்துன்பங்களைத் தள்ளி, நிறூஉம் - தங்களைத் தவ ஒழுக்கத்திலே

* புறத்திரட்டு - 272.

நிறுத்தும், உரவோரே-மனவலி யுடையோரே, நல்லொழுக்கம்-நல்ல துறவு ஒழுக்கத்தை, காக்கும் - தவறாமற் காப்பாற்றும், திருவத் தவர் - சிறப்பினை யுடையார் எ-று.

அரிய முயற்சியினாலே எய்தப் பெறுவன விரதமாதலின், 'ஊக்கிக்கொண்ட' என்றார். விரதம் - நோன்பு, இது நன்ஞானம் பெறும் நிமித்தம் பட்டினி கிடத்தல் முதலியன. விரத மேற் கொள்வோர்க்கும் அகத்திலும் புறத்திலுமிருந்து இடையூறு உண் டாதலின் உள்ளநடைய என்றார். தலை வந்தக்கால் எனக் கூட்டி 'மிகுந்து' எனப் பொருள் கொள்வதுமாம். நிறுஉம் - இன்னிசை யளபெடை. திருவத்தவர் - அத்து, அ, சாரியை; திருவுடையார் என்றபடி. தாங்க அரும் எனினுமாம்; வலித்தல் விகாரம். (7)

58. * தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தா—லும்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொ லென்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்.

இ-ள். தம்மை - தீமை ஒன்றும் செய்யாத தங்களை, இகழ்ந் தமை - இகழ்ந்து பேசினவற்றை, தாம் பொறுப்பதன்றி - தாங்கள் பொறுத்துக் கொள்வதல்லாமல், எம்மை இகழ்ந்த - காரணமன்றி எம்மை இகழ்ந்து பேசிய, வினைப் பயத்தால் - தீவினையின் பலனால், உம்மை - மறுபிறப்பில், எரிவாய் - தீ நிரம்பிய, நிரயத்து - நரகத் தில், வீழ்வரென்று - வீழ்வார்களோ என்று, பரிவதூஉம்-இரக்கங் கொள்வதும், சான்றோர் - பெரியோர்கள், கடன் - கடமை எ-று.

உள்ளத்துறவுடையவர்கள், தம்மைக் காரணமின்றி இகழ்ந்த வரை மன்னிப்பதன்றி, அச் செய்கையால் அவர்க்குத் தீவினை நேருமோ என இரக்கங்கொள்வர் என்றபடி. இகழ்ந்தமை, பொறுப் பது - தொழிற் பெயர்கள். எம்மை-தன்மைப் பன்மை. உம்மை, மறுமை - இம்மைக்கு எதிர்மொழி. எரிவாய் - வினைத் தொகை. எரி வாய்ந்த என்றேனும், எரிகின்ற வாயை உடைய என்றேனும் கொள்க. பொறுப்பது - எதிரதன் உம்மைத் தொகை; பரிவதூ உம், எச்ச உம்மை - இன்னிசை அளபு. (8)

59. † மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை யவாவினைக்—கைவாய்க்

* புறத்திரட்டு - 249.

† புறத்திரட்டு - 447. 'விலங்காது' என்றும் பாடம்.

கலங்காமற் காத்துய்க்கு மாற்ற லுடையான்
*விலங்காமல் வீடு பெறும்.

இ-ள். மெய்-உடலும், வாய்-வாயும், கண்-கண்ணும், மூக்கு - நாசியும், செவி - காதும், என - என்னும், பேர் பெற்ற - பெயர் கொண்ட, ஐவாய் - ஐந்து வழிகளுடைய, வேட்கை - விருப்பத்தையும், அவாவினை - விரும்பியவற்றை அடைய இச்சையையும், கலங்காமல் - மனம் கலக்கமடையாது, கைவாய் - துறவாகிய ஒழுக்கத்தினால், காத்து - தடுத்து, உய்க்கும் - தன் மனதை நடத்தும், ஆற்றலுடையான் - வல்லமை யுடையான், விலங்காமல் - தவறாது, வீடு - பிறவியினின்றும் நீக்கத்தை, பெறும் - அடைவான் எ-று.

ஐம்பொறிகளையும் ஐம்புலன்களிற் செல்லாமற் காக்கும் வல்லமை யுடையவன் பிறவிப் பிணி நீங்கப்பெறுவான் என்பதாம். மெய் முதலியன பஞ்ச இந்திரியங்கள். இவற்றை வாயிலாகக் கொண்டு வேட்கையும் அவாவும் புகுந்து துறவு நிலையைக் கெடுக்கும் என்க. வாய்-குறிப்புப் பெயரெச்சம். வேட்கை-ஒரு பொருளை நாடும் பற்றுள்ளம். அவா-அப்பொருளை அடைய மேன்மேலும் உண்டாகும் இச்சை. கை-ஒழுக்கம், ஈண்டுத் தவ ஒழுக்கம். காத்தல்-தடுத்தல் என்னும் பொருட்டு. வீடு - விடுபடுதல் - தொழிற் பெயர். பெறும்-செய்யுமென் முற்று, ஆண்பால் முதல் கொண்டது.

60. †துன்பமே மீதூரக் கண்டுந் துறவுள்ளா
ரின்பமே காமுறுவ ரேழையா—ரின்ப
மிசைதொறு மற்றத னின்னாமை நோக்கிப்
பசைதல் பரியாதா மேல்.

இ-ள். ஏழையார்-அறிவில்லார், துன்பமே-சிற்றின்ப நுகர்ச்சியால் துன்பத்தையே, மீதூர - மேன்மேலும் வர, கண்டு - பார்த்தும், துறவு-துறவறத்தை, உள்ளார்-நினையாதவராய், இன்பமே - சிற்றின்பத்தையே, காமுறுவர் - இச்சிப்பார், மேல் - மேலாயினோர், இன்பம்-சிற்றின்பம், இசைதோறும்-பொருந்துந்தோறும், அதன்-அதனால் உண்டாகும், இன்னாமை-துன்பத்தையே, நோக்கி-பார்த்து, பசைதல்-அவ்வின்பத்திற் பொருந்துதலை, பரியாது-இச்சியார் எ-று.

ஏழைமை - அறிவின்மை மேல் நின்றது. மீது ஊர்தல் - மேலும் அதிகரித்தல். காமம் உறுவர் என்க; இடைக் குறை.

---

* விலங்காது என்னும் பாடம்.

† நாலடியார் 54-ம் செய்யுளும் அதன் உரையும் ஒப்பிடுக.

இன்னாமை - * துன்பம்; மேல், பண்பாகு பெயராய் மேலோரை உணர்த்திற்று; சொல் அளவில் அஃறிணை யாதலின் பரியாது என அஃறிணை வினைபெற்றது. (10)

துறவு முற்றிற்று.

## 7-ஆம் அதிகாரம். சினமின்மை

அஃதாவது கோபமில்லாதிருக்குந் தன்மை. துறவுக்கு இடையூறு செய்வனவற்றுள் சினமே கொடியதாகலானும், சினம் கொள்வார் தவம் குலையுமாதலானும், அதனை விலக்குதல் அவசியம் என்றார். அதனால் இது துறவின்பின் வைக்கப்பட்டது.

61. † மதித்திறப் பாரு மிறக்க மதியா
மிதித்திறப் பாரு மிறக்க—மிதித்தேறி
யீயுந் தலைமே லிருத்தலா லஃதறிவார்
காயுங் கதமின்மை நன்று.

இ-ள். மதித்து - தம்மைப் பெருமைபடுத்தி, இறப்பாரும் - செல்பவரும், இறக்க - செல்வாராக, மதியா - மதியாமல், மிதித்து - சிறுமைபடுத்தி, இறப்பாரும் - செல்பவரும், இறக்க - செல்வாராக, ஈயும்-ஈயும், மிதித்து ஏறி - காலால் மிதித்து ஒருவர்மேல் ஏறி, தலைமேல்-சிரசின்மேல், இருத்தலால் - இருப்பதனால், அஃது-அவ்வாறு இருப்பதை, அறிவார் - அறிபவர்கள், காயும் - கொளுத்தும், கதமின்மை-கோபம் கொள்ளாதிருத்தல், நன்று-நல்லது எ-று.

ஒருவர் புகழ்தலும் இகழ்தலும் தவவொழுக்கத்தினர்க்கு வருத்தம் தருவதன்று என்றபடி. மதித்தல் - பெருமையாகக் கருதிப் புகழ்தல். இறத்தல் - கடத்தல், ஈண்டுச் செல்லுதலின் மேனின்றது. அடுத்தடுத்து அதே பொருளில் வந்தது சொற்பின்வரு நிலையணி. மதியா - எதிர்மறை வினை எச்சம், துவ்விகுதி தொகுத்தல். மிதித்தல் - காலால் துவைத்தல் முதலிய இழிபும் கொள்க. ஈயும் - உம்மை, இழிவு சிறப்பு. சிறியோர் பெரியோர் என்ற வேற்றுமையின்றி ஈ அவர்கள்மேல் ஏறுவது கண்டு அதனைக் கோபிப்பவர் இல்லை; அதுபோல ஈக்கு இணையானவர் தம்மை இகழின் அதற்குக் கோபம் கொள்ளார் என்னும் உவமைக்

* "இன்னாமை வேண்டின் இரவொழிக"
"கீழ்மை யகற்று"—(ஔவையார்.) என்றதும் ஒப்பிடுக.

† புறத்திரட்டு - 317.

கருத்து உய்த்துணர்க. கதம்-மிக்க சினம். அஃது-அத்தன்மை; ஆவது, பெரியோரிடம் அற்பர்க்கு மதிப்பின்மை. (1)

62. தண்டாச் சிறப்பிற்றம் மின்னுயிரைத் தாங்காது
கண்டுழி யெல்லாந் துறப்பவோ—மண்டி
அடிபெயரா தாற்ற விளிவந்த போழ்தின்
முடிகிற்கு முள்ளத் தவர்.

இ-ள். அடி - வைத்த காலை, பெயராது - பெயர்த்து வைக்கலாகாதபடி, ஆற்ற - மிகவும், இளிவு - இழிவு, மண்டி - தம் தவத்தைக் குலைக்க நெருங்கி, வந்த போழ்தும் - வந்து பொருந்திய பொழுதிலும், முடிகிற்கும்-உயிரை விடாமல் தவத்தை முடிக்கும் ஆற்றலுடைய, உள்ளத்தவர் - மன உறுதியுடையவர்கள், தண்டா - ஒழியாத, சிறப்பின் - பெருமையுடைய, தம் இன் உயிர் - தமது ஆருயிரை, தாங்காது - தரியாது, கண்ட உழி எல்லாம் - தம் துறவுக்குச் சிறுமை உண்டாயின இடங்களிலெல்லாம், விடுவரோ - கோபம் மிகுந்து, (அவ்வுயிரை) விடுவார்களோ (விடார்) எ-று.

'உற்ற இடத்தில் உயிர் வழங்கும் தன்மை' யுடையர்போல், தவ வலி யுடையவர்கள் அவ்வாறு இகழ்ச்சியைக் கருதி வெகுண்டு உயிர் விடுதல் இல்லை. அவ்வாறு உயிர் விடுதல், மானத்தைக் காத்தல் நிமித்தம்; அது செய்வது இல்லறத்தார்க்கே உரியது, துறவினர்க்கு மானமும், அதற்குக் குறை உறுங்கால் எழும் கோபமும் விடுதலே ஏற்றது ஆதலின், "உயிர் விடுவரோ" என்றார்.

தவஞ் செய்தற்குக் கருவியாதலின், 'இன் உயிர்' என்றார். கண்ட உழி என்க; அகரம் தொகுத்தல். காண்பது, பிறர் தம் தவத்துக்குச் சிறுமை செய்தல். சிறுமையைக் கருதிக் கோபம் எழுதல் இயல்பாதலானும அதிகார அடைவு நோக்கியும் 'கோபம் மிகுந்து' என உரைக்கப்பட்டது. பெருந் துயரத்தினால் கைகால் அயர்தல் இயல்பாதலின், 'அடி பெயராது' என்றார்; இது கையாறு என்னும் மெய்ப்பாடு. முடிகிற்கும் - முடிக்கவல்ல; தன் வினை பிற வினைப்பொருளில் வந்தது. கில்-ஆற்றற் பொருளது. (2)

63. * காவா தொருவன்றன் வாய்திறந்து சொல்லுஞ்சொ
லோவாதே தன்னைச் சுடுதலா—லோவாதே
ஆய்ந்தமைந்த கேள்வி யறிவுடையா ரெஞ்ஞான்றுங்
காய்ந்தமைந்த சொல்லார் கறுத்து.

* புறத்திரட்டு - 165.

இ-ள். ஒருவன் - ஒரு மனிதன், தன்வாய் - தனது வாயை, காவாது திறந்து-அடக்காமல் பேசத்தொடங்கி, சொல்லும்-பிறரை இகழ்ந்து உரைக்கும், சொல் - கடும் சொற்கள், தன்னை - அவ்வாறு பேசியவனையும், ஓவாது - ஒழியாமல், சுடுதலால் - வருத்துவதால், ஆய்ந்து-பல நூலாராய்ந்து, அமைந்த - நிரம்பிய, கேள்வி - கல்வி, அறிவுடையார் - விவேகமுடையார், எஞ்ஞான்றும்-எக்காலத்திலும், காய்ந்து அமைந்த - வெப்பமுற்றமைந்த சொற்களை, கறுத்து - வெகுண்டு, சொல்லார் - சொல்லமாட்டார்கள் எ-று.

வாய்காவாது திறந்து என்க. வாய் - ஈண்டுநா; ஆகுபெயர். காத்தல்-பயனில் சொல்லும் வெகுளிச்சொல்லும் கூறாதபடித் தடுத்துக் கொள்ளுதல். * "யாகாவா ராயினு நாகாக்க" என்றதுபோல. சினம், இகழப்பட்டவனையே யன்றித் தன்னையும் † கொல்லும் என்க; இறந்தது தழுவும் எச்சவும்மை தொகுத்தல். சொல்லின் கொடுமை - சுடுதலுக்கு இணையாக உரைத்தார்; "வாயினாற் சுட்ட வடு" ‡ என்றது போல. கற்றலேயன்றி, ஆன்றோர் உரைப்பக் கேட்டலும் கல்வி முறையாதலின், கேள்வி யறிவுடையோர் என்றார். அமைதல் - கற்றதனாற் புலன்கள் அடங்கியிருத்தல். எஞ்ஞான்றும்- உம்மை, எஞ்சாமைப் பொருளது; சினந்து - கடுமொழி கூறும் அளவுக்கு ஒருவன் தன்னை வருத்தியபோதும் என்றபடி. இனி, ஒருவன் என்றது தவவொழுக்கத்தா னொருவன் என்றும் பொருள் கூறுப. அமைந்த-வினையாலணைந்தபெயர். கறுத்து-$வெகுண்டு. (3)

64. நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்
வேர்த்து வெகுளார் விழுமியோ—ரோர்த்ததனை
உள்ளத்தா னுள்ளி யுரைத்துரா வூர்கேட்பத்
துள்ளித்தூண் முட்டுமாங் கீழ்.

இ-ள். நிகரல்லார் - தமக்கு ஒப்பு இல்லாதவர்கள், நேர்த்து - தம்மை எதிர்த்து, நீரல்ல - தகுதியற்ற சொற்களை, சொல்லியக்கால் - உரைத்தால், வேர்த்து - அதற்காக மனம் புழுங்கி, விழுமியோர் - அறிவிற் சிறந்த பெரியோர்கள், வெகுளார் - கோபியார், கீழ் - கீழ் மக்களோ எனின், அதனை - அத்தகைய வசை மொழியை, உள்ளத்தால் - மனதால், ஓர்த்து - ஆராய்ந்து, உள்ளி - மீண்டும் மீண்டும் நினைத்து, ஊர் - ஊரார், கேட்ப - கேட்குமாறு, உரைத்து - அம்மொழிகளை எடுத்துச் சொல்லி, துள்ளி - குதித்து,

* குறள்-127. † குறள்-805. ‡ குறள்-129.
$ கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள. (தொல் - உரிச்.)

உராய் - சுவர் முதலியவற்றில் உராய்ந்து, தூண் - தூணிலும், முட்டும் - முட்டிக் கொள்வர் எ-று.

நேர்த்துச் சொல்லியக்கால் என்று கூட்டுக. நேர்ந்து, ஓர்ந்து என்பன வலிந்து வந்தன, விகாரம். நீர் - நீர்மை, ஈறு கெட்டது. அல்ல - குறிப்பு வினைப்பெயர். விழுமம் - சிறப்பெனப் பொருள் படும் * உரிச்சொல். கீழ்-கீழ்மக்கள்; பண்பாகு பெயர்; முன்பு, 'மேல்' † என்றதுபோல், அஃறிணை வினைபெற்றது. கீழோர் தமக்குற்ற தீங்கினை, அது நிகழ்ந்த வெகுநாளைப் பின்னும் நினைந்து மனமழுங்குவர் என்று காட்ட, 'உள்ளி' என்றும், 'உரைத்து' என்றும் வந்தன. தம்மைப் பிறர் இகழ்ந்தது மறைத்தல் வேண்டுமென்பதும் கருதாது தாமே பிறர்க்கு விளம் பரப்படுத்தும் பேதையரென 'ஊர் கேட்பத் துள்ளி' என்றார். தூணில் முட்டிக்கொள்ளுதல் - சினத்தினால் இது செய்வதென அறியாது செய்வது. இதனால் அவர்களது பேதைமை அறியப்படும்.

இது கீழோர் மேலோர்களது தன்மையை நன்கு உரைப்பதனால் தன்மை நவிற்சியணி. (4)

65. ‡ இளையா னடக்க மடக்கங் கிளைபொரு
ளில்லான் கொடையே கொடைப்பய—னெல்லா
மொறுக்கு மதுகை யுரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை.

இ-ள். இளையான் - இளமையுடையவன், அடக்கம் - சிற்றின் பத்தில் ஐம்பொறிகள் செல்லாமல் அடக்குதலே, அடக்கம் - அடக் கம் எனப்படும், கிளை - வளரும், பொருள் - செல்வம், இல்லான் - இல்லாதவன், கொடையே - ஈகையே, கொடை பயன் - ஈகையாகிய பயனை உடையது, எல்லாம் - யாவும், ஒறுக்கும் - அழிக்கவல்ல, மதுகை - வலிமையும், உரன் - செவ்வி அறியும் அறிவும், உடை யாளன் - ஆள்பவன் உடைய, பொறுக்கும் - சினமின்றிப் பொறுத் துக்கொள்ளும், பொறையே - பொறுமையே, பொறை - பொறுமை யாகும் எ-று.

வயது முதிர்ந்து உடல் மெலிந்தவன் சிற்றின்பத்தை வெறுத் தலும், பொருளுடையவன் ஈதலும், வலியற்றவன் பொறுத்திருத்

---

* நாலடி 60. உரை காண்க

† "விழுமமுஞ் சீர்மையுஞ் சிறப்பு மிடும்பையும்."—(தொல். உரிச்.)

‡ புறத்திரட்டு - 163.

தலும் வியப்பில்லை; ஆனால் யௌவனத்தில் பொறிகளை அடக்கியிருத்தலும், பொருளில்லா ஏழை தருமஞ் செய்தலும், உலகத்தையே அழிக்கும் ஆற்றலுடையவன் சினமின்றிப் பொறுத்தலுமே அருமை என்க. இளையான் - யௌவன பருவத்தினன். அடக்கமே, கொடையே, பொறையே என்க; ஏகாரம் பிரிநிலை. கிளை பொருள், வினைத் தொகை. கிளைத்தல் - மேன்மேலும் வளர்தல். இல்லான் எதிர்மறைக் குறிப்புப் பெயர். கொடையாகிய பயன் என்க. இனிக் கொடையின் பயனெனினுமாம். எல்லாம் ஒறுக்கும் மதுகை - உலகையே அழிக்கும் * ஆற்றல். உரன் - பகைவரை வெல்ல உதவும் காலம், இடன், வலி யிவற்றை அறிதல். இனி, முன்னிரண்டடியை ஈற்றடிக்கு எடுத்துக்காட்டாகக் கொண்டு, இதனை எடுத்துக் காட்டுவமை அணி என்பர் பிறர்.

இது துறவற வியலில் கூறப்படினும், துறவுநிலை பெறுவோரும் சினமின்மை வேண்டுமாதலின் பொதுவாகக் கோடலே பொருந்தும். இவ்வாறு அனைவர்க்கும் உறுதியான 'கல்வி' முதலியவற்றைத் திருவள்ளுவனார் 'அரசியலில' கூறியிருத்தலும் காண்க.

66. † கல்லெறிந் தன்ன கயவர்வா யின்னாச்சொ
லெல்லாருங் காணப் பொறுத்துய்ப்ப—ரொல்லை
இடுநீற்றாற் பையவிந்த நாகம்போற் றத்தங்
குடிமையான் வாதிக்கப் பட்டு.

இ-ள். இடு-மந்திரித்து எறியும், நீற்றால்-திருநீற்றால், ஒல்லை - விரைவில், பை-படம், அவிந்த-அடங்கிய நாகம்போல்-நாகத்தைப் போல், தத்தம் - தங்கள் தங்களுடைய, குடிமையால் - உயர் குடிப் பிறப்பின் தன்மையால், வாதிக்கப்பட்டு - ஒறுக்கப்பட்டு, கயவர் - கீழானவர், வாய் - வாயில் வரும், கல் - கல்லை, எறிந்த அன்ன - எறிந்தாற் போலும், இன்னாச் சொல் - துன்பம் தரும் சொற்களை, எல்லாரும் - யாவரும், காண - அறிய, பொறுத்து - உயர்ந்தோர் சகித்து, உய்ப்பர்-தமது விரதத்தை நன்கு செலுத்துவர் எ-று.

மந்திரித்த விபூதிக்கு அடங்கும் பாம்புபோல் தம் குடிமைத் தன்மைக்கு அடங்கி உத்தமர் சினம் கொள்ளார் என்க; உவம வணி. கல் எறிந்தன்ன சொல்-கல்லால் உடலுக்கு ஊறு செய்தாற் போன்ற

* "எல்லை நீத்த உலகங்கள் யாவுமென்
சொல்லி னாற்சுடு வேன்" (கம்ப - சுந் - சூளா - 18.) எனக் கற்புக்கரசியாகிய சானகியார் உரைத்தமையும் ஒப்பிடுக.

† புறத்திரட்டு - 164.

துன்பம் செவிக்குத் தரும் சொல். இரட்டுற மொழிதலால், கல் எறிந்ததால் எடுத்த பாம்பின் படம் இடுநீற்றால் அடங்கும் என்று உரைப்பதுமாம். இடுதல் - ஈண்டுத் தொலைவிலிருந்து எறிதல். நாகம், (மலை, மரம் எனப் பொருள் படும்.) நகத்தில் வசிப்பது; தத்திதாந்த வடசொல். கயவர்-குணங்க ளொன்றுமில்லாக் கீழோர். இன்மை - துன்பம். பொறுத்து - எழும் கோபத்தை அடக்கி. உய்த்தல் - தாம் கொண்ட ஒழுக்கத்தைச் செலுத்துதல். குடிமை-குல வொழுக்கம்; துறவு எனினுமாம்; வருணாச்சிரமம் எனக் கூறி இடர்ப்படுவாரு முளர். ஒல்லை உய்ப்பர் எனினுமாம். (6)

67. ‡ மாற்றாராய் நின்றுதம் மாறேற்பார்க் கேலாமை
ஆற்றாமை யென்னா ரறிவுடையார்—ராற்றாமை
நேர்த்தின்னா மற்றவர் செய்தக்காற் றாமவரைப்
பேர்த்தின்னா செய்யாமை நன்று.

இ-ள். மாற்றாராய் - பகைவராய் இருந்து, தம் மாறு - தம் முடைய பகைமையை, நின்று ஏற்பார்க்கு - எதிர்கொள்ள நிற் பவர்களிடத்தில், ஏலாமை - அப் பகைமையைச் செலுத்தாமையை, அறிவுடையோர் - மேலோர், ஆற்றாமை - அச் செய்கையை ஆற்ற லில்லாமை, என்னார் - என்று பழிக்கமாட்டார்கள், (ஆகையால்) அவர் - பகைமை உடையவர், மற்று - மீண்டும், நேர்த்து - நேர்முகப் பட்டு (எதிர்த்து), ஆற்றாமை - பொறுமையற்று, இன்னா - துன்பச் செயலை, செய்தக்கால் - செய்த போதிலும், தாம் - நல்லொழுக்க முடையவர்கள், அவரை - அப் பகைவர்க்கு, பேர்த்து - எதிராக, இன்னாசெய்யாமை-துன்பம் செய்யாதிருத்தல், நன்று-நன்மை எ-று.

மனவலி உடையவரே சினத்தை ஆள்பவராதலின், அவர்கள் எதிர்த்து இன்னா செய்யாமை அவர்களது ஆற்றலைக் காட்டுமன்றி, அஃதில்லை எனப்படாது என்றபடி. மாறு - ஈறு திரிந்த பண்புச் சொல். நின்று - எதிர்த்து என்றபடி. ஆற்றாமை - முன்னது ஆற்றலில்லாமை; பின்னது பொறுமையின்றி; எச்சம். நேர்த்து - நேர்முகமாகி, எதிர்த்து; பண்பின் குறிப்பு வினை எச்சம். (7)

68. * நெடுங்கால மோடினு நீசர் வெகுளி
கெடுங்கால மின்றிப் பரக்கு—மடுங்காலை
நீர்கொண்ட † வெப்பம்போற் றானே தணியுமே
சீர்கொண்ட சான்றோர் சினம்.

‡ புறத்திரட்டு - 163.
* புறத்திரட்டு - 166. † வெம்மைஎன்றும் பாடம்.

இ-ள். நீசர் - கீழ் மக்களுடைய, வெகுளி - கோபம், நெடுங் காலம் - வெகு நாட்களாக, ஓடினும் - சென்றாலும், கெடுங்காலம் - கோபம் அடங்கும் காலம், இன்றி-இல்லாமலே, பரக்கும்-வளர்ந்து நிற்கும், சீர் - சிறப்பை, கொண்ட - கொண்டுள்ள, சான்றோர் - பெரியோரது, சினம்-கோபம், அடும்-காய்ச்சும், கால-பொழுது, நீர் கொண்ட - நீர் அடையப்பெறும், வெப்பம்போல் - சூட்டைப் போல், தானே - தனக்குத் தானே, தணியும் - ஆறும் எ-று.

நீசர் - கயவர். நெடுங்காலம் - கோபம் நீடித்தகாலம். கெடுங் காலம் - அது தணியும் சமயம். தானே என்றது அவர்க்குப் பிறர் அமைதி கூறவேண்டா என்றபடி. தண்ணீர் விரைவில் சூடு ஏறாது, ஏறினும் வெகு விரைவில் ஆறிவிடும்; அதுபோல் சான்றோர் கோபம் கொள்ளினும் விரைவில் ஆறுவர் என்றபடி; எடுத்துக்காட் டுவமை அணி. (8)

69. * உபகாரஞ் செய்ததனை யோராதே தங்க
ணபகார மாற்றச் செயினு—முபகாரந்
தாஞ்செய்வ தல்லாற் றவற்றினாற் றீங்கூக்கல்
வான்றோய் குடிப்பிறந்தார்க் கில்.

இ-ள். உபகாரம்-உதவி, செய்த அதனை - செய்ததை, ஓராது-நினையாமல், தம்கண்-உதவிசெய்த தம்மிடத்து, அபகாரம் - தீங்கை, ஆற்ற-மிகவும், செயினும்-செய்தாலும், தாம்-தாங்கள், உபகாரம்-மீண்டும் உதவியை, செய்வதல்லால் - செய்வதல்லது, தவற்றினால்-தமக்குச்செய்த குற்றத்தால், தீங்கு-பொல்லாங்கை, ஊக்கல்-செய்ய முயலுதல், வான்-பெருமை, தோய் - நிறைந்த, குடிப்பிறந்தார்க்கு-நற்குடியிற் பிறந்தார்க்கு, இல்-இல்லை எ-று.

உபகாரம், அபகாரம். வட சொல். செய்த அதனை என்க; அகரம் தொகுத்தல். தம் கண்ணே எனப் பிரிநிலை ஏகாரம் தொகுத்தல். தம், தாம், உதவி செய்த குடிப் பிறந்தோரைக் குறித் தன. உபகாரம் பெற்றவர் செயினும் என எழுவாய் தருக. தவறு-உபகாரம் மறந்த குற்றம், உருபு மயக்கம், இனித் தவறியே னும் செய்யார் எனினுமாம்; "தீய வழுக்கியும் வாயாற் சொலல்" † என்றதுபோல. ஊக்கல் - ஊக்குதல், முயலுதல். ‡ வான் தோய் குடி - இலக்கணை. வானம் - மிக்க உயரம் குறித்தது. (9)

---

* புறத்திரட்டு—167.

† குறள் - 139. ‡ குறள் - 272.

70. * கூர்த்துநாய்க் கௌவிக் கொளக்கண்டுந் தம்வாயாற்
பேர்த்துநாய் கௌவினா ரீங்கில்லை—நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்காற் சொல்பவோ
மேன்மக்க டம்வாயான் மீட்டு.

இ-ள். கூர்த்து - கோப மிகுந்து, நாய் கௌவிக்கொள - நாய் ஒருவர் தசையைக் கடித்துக்கொள்ள, கண்டும் - துன்பத்தை அடைந்தும், பேர்த்து - மாறுபட்டு, தம் - தம்முடைய, வாயால் - வாயினால், நாய் - கடித்த நாயை, கௌவினார் - கடித்தவர், ஈங்கு - இவ்வுலகில், இல்லை - இல்லை, கீழ் மக்கள் - கீழானவர்கள், நீர்த்தன்றி - தகுதியுள்ள சொற்களே யில்லாமல், கீழாய - இழிவான சொற்களை, சொல்லியக்கால் - சொன்னால், மேன்மக்கள் - உயர்ந்தவர்கள், தம வாயால் - தங்கள் வாயால், மீட்டு - மறித்து, சொல்பவோ - அத்தகைய சொற்களைச் சொல்வார்களோ (சொல்லார்) எ-று.

கடிக்கும் நாயை வெருட்டலன்றி மறித்துக் கடித்தல் மனிதர் இயல்பல்ல என்றபடி. கூர்த்து - மிகுந்து, உரிச்சொல்; அதிகாரத்தால் சினம் மிகுந்து என்க. காணுதல் - நோய் உறுதல். பேர்த்து, மீட்டு, எதிராக மறித்து. நீர்த்து - நீர்மை யுடையது. குறிப்பு வினைப் பெயர். கீழாய - ஆகு பெயர்; பன்மை விகுதி பெற்றது. சொல்ப - உயர்திணைப் பன்மை. ஓகாரம், எதிர்மறை வினா. வாய் நன்மொழிகளையே பேசும் இயல்பு காட்ட வாயால் சொல்பவோ என்றார். இஃது எடுத்துக்காட்டுவமை யணி. (10)

சினமின்மை முற்றிற்று. துறவறவியல் முற்றிற்று.

---

## இல்லறவியல்

அறத்தில் முதன்மையான துறவின் இயல்பு கூறிய பின்னர், அதன்கண் ஒழுக இயலாதவர் இல்லறத்தில் ஒழுகவேண்டும் என, அதன் இயல்பு கூறுகின்றார். இல்லறமாவது - இம்மை, மறுமைப் பயன்களை நுகர்வதற்கு ஒத்த பண்பும், கற்புமுடைய மனைவியொடும் செய்யப்படும் அறம்.

---

* புறத்திரட்டு - 318.

நீர்த்தகை யில்லார் நிரம்பாமைத் தம்நலியில்
கூர்த்தவரைத் தாம்நலிதல் கோளன்றால் சான்றோர்க்குப்
பார்த்தோடிச் சென்று கதம்பட்டு நாய்கௌவிற்
பேர்த்துநாய் கௌவினா ரில். —(பழமொழி)

## 8-ஆம் அதிகாரம். பொறையுடைமை

அஃதாவது பொறுமையுடன் இருத்தல். துறவினரைக்காட்டிலும் இல்லறத்தாரே துன்பத்தில் அதிகம் அழுந்துபவர், அத்துன்பத்தைப் பொறுத்தல் அவசியமென்பது காட்ட இதனை முதலில் அமைத்தார். மேல் அதிகாரத்தில் உரைத்த சினத்தை அடக்குதலுக்கும் பொறுமை வேண்டியதாதலான் அதன்பின் வைக்கப்பட்டதென்க.

71. கோதை யருவிக் குளிர்வரை நன்னாட
பேதையோ டியாது முரையற்க—பேதை
உரைப்பிற் சிதைந்துரைக்கு மொல்லும் வகையான்
வழுக்கிக் கழிதலே நன்று.

இ-ள். கோதை - மாலைபோல் விழும், அருவி - நீர் அருவிகள் பாயும், குளிர்-குளிர்ந்த, வரை-மலைகள் பொருந்திய, நாட-நாட்டையுடைய பாண்டியனே, பேதையோடு - அறிவிலானுடன், யாதும் - ஒன்றையும், உரையற்க - சொல்லாதிருப்பாயாக, பேதை - அறிவில்லான், உரைப்பில் - எதைச் சொன்னாலும், சிதைந்து - வரம்பு கடந்து, உரைக்கும் - சொல்வான் (ஆதலால்), ஒல்லும் - பொருந்தும், வகையால் - விதத்தால், வழுக்கி - தப்பி, கழிதல் - (அவனை விட்டு) நீங்குதல், நன்று - நல்லது எ-று.

கோதை - மாலை; கோதையாகிய அருவி என்றேனும், கோதையை ஒத்த அருவி என்றேனும் கொள்க; வரையும் நாடும் வளமையைக் குறித்தன. வரை நாட, * "மலை நாட" என்றது போல்; ஆடூஉ முன்னிலை. பேதை - அறிவிலி; பண்பாகு பெயர். உரைப்பின், சொல்லக் கேட்டவற்றை அப் பேதை மீண்டும் உரைத்தால். சிதைந்து - மாறுபடுத்தி. வழுக்குதல் - கை விடுதல். (1)

72. நேரல்லார் நீரல்ல சொல்லியக்கான் மற்றது
தாரித் திருத்த றகுதிமற்—றோரும்
புகழ்மையாக் கொள்ளாது பொங்குநீர் ஞாலஞ்
சமழ்மையாக் கொண்டு விடும்.

இ-ள். நேரல்லார் - நேர்மைக் குணமில்லாதவர், நீரல்ல - நற்குணமில்லாச் சொற்களை, சொலலியக்கால்-சொன்னால், மற்று அது - அக் குணமற்ற சொல்லை, தாரித்திருத்தல் - பொறுத்திருத்தல், தகுதி - ஏற்றதாகும், மற்று - அதற்கு வேறாகிய பொறுமையில்

* நாலடி - 10.

லாமையை, பொங்கு - மிகுந்த, நீர் - நீர் சூழ்ந்த, ஞாலம் - பூமியி லுள்ளோர், புகழ்மையா - புகழ்ச்சிக்குக் காரணமாக, கொள்ளாது - கருதாமல், சமழ்மையா - பழித்தற்குக் காரணமாக, கொண்டுவிடும் - எண்ணி விடுவர் எ-று.

நேர்மை, நீர்மை - தகுதி; பண்பு. தாரித்தல் - பொறுத்தல். புகழ்மை, கமழ்மை - பண்பு. நீர் கடலுக்கு இலக்கணை. ஆகு பெயருமாம். ஞாலம் - 'உலகமென்ப துயர்ந்தோர் மேற்றே' என்ற லால் மேலோரைக் குறித்தது. இனி, ஆகு பெயரெனக் கொண்டு உலகத்தின ரெனினுமாம். ஞாலம், சொல்லளவில் அஃறிணை யாத லின் அஃறிணை வினை பெற்றது. மற்று, ஒரும்-அசை. (2)

73. * காதலார் சொல்லுங் கடுஞ்சொ லுவந்துரைக்கு
மேதிலா ரின்சொலிற் றீதாமோ—போதெலா
மாதர்வண் டார்க்கு மலிகடற் றண்சேர்ப்ப
ஆவ தறிவார்ப் பெறின்.

இ-ள். மாதர் - விருப்பமுடைய, வண்டு - வண்டுகள், போதெ லாம் - மலர்களிலெல்லாம், ஆர்க்கும் - ஒலிக்கும், மலி - நிறைந்த, கடல் - கடலின், தண்-குளிர்ந்த, சேர்ப்ப - கரையையுடைய பாண்டி யனே, ஆவது - தமக்கு உண்டாகும் தீமைகளை, அறிவார் - அறிய வல்லவரை, பெறின் - அடைந்தால், காதலார் - தம்மிடம் உள்ளன் புடையோர், சொல்லும் - சொல்கின்ற, கடுஞ் சொல் - காதுக்குக் கொடுஞ் சொல், ஏதிலார் - பகைவர், உவந்து உரைக்கும் - மகிழ்ந்து சொல்லும், இன் சொல்லின் - இனிய சொல்லைப் பார்க்கிலும், தீதாமோ - குற்றமாகுமோ எ-று.

காதலார்-உள்ளன்புடைய நண்பர் முதலியோர். அவர் கடுமை யாக உரைப்பினும், நன்மையே பயக்கும், அன்பிலார் இனிமையாகக் கூறினும் துன்பமே † தரும் என்றபடி. தீதாமோ-ஆகாது என்று எதிர்மறைப்பொருள் கொண்டது. ஆவது அறிதல்-தனக்கு நன்றும் தீதும தருவனவற்றை ஆய்ந்து அறியும் பண்பு; அது பெறுதல் அருமை யாதலின், பெறின் என்றார். மாதர், காதல்; ‡ உரிச் சொல்; வண்டு, மலர்த் தேனிடத்தும், தன் பேடையிடத்தும் விருப் பம்; அழகு என்று முரைப்பர். சேர்ப்ப - ஆடூஉ முன்னிலை. (3)

---

* புறத்திரட்டு - 319.

† "மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனையவர்
பேசுற்ற வின்சொற் பிறிது."—(நன்னெறி - 2.)

‡ "மாதர் காதல்"—(தொல் - உரிச்.)

74. * அறிவ தறிந்தடங்கி யஞ்சுவ தஞ்சி
உறுவ துலகுவப்பச் செய்து—பெறுவதனு
லின்புற்று வாழு மியல்புடையா ரெஞ்ஞான்றுந்
துன்புற்று வாழ்த லரிது.

இ-ள். அறிவது-அறியத்தக்கதை, அறிந்து-கற்றுத் தெரிந்து, அடங்கி-அடக்கமாகிய பொறுமை கொண்டு, அஞ்சுவது - அஞ்சத் தகுவதற்கு, அஞ்சி-பயந்து, உறுவது - செய்யத் தகுவதை, உலகு - உலகத்தார், உவப்ப - மகிழ, செய்து - செய்து, பெறுவதனுல் - அவற்ருல் பெறும் பலனுல், இன்புற்று - இன்பமடைந்து, வாழும் - வாழுகின்ற, இயல்புடையார் - குணமுடையார், எஞ்ஞான்றும் - எந் நாளும், துன்புற்று-துன்பமடைந்து, வாழ்தல் - வாழ்வது, அரிது - அருமையாகும் எ-று.

அறிவது - கற்கத் தகுவது, "கற்றவர் கண்ட தடக்கம்" ஆதலின் அறிந்து அடங்கி என்ருர். அடக்கத்தால் கற்றலும் அஞ்சுதலும் உண்டாம்; ஆதலின், சிங்க நோக்காக இடையில் வைத்தார். அடங்குதல்-பொறுமை உடைமை. அஞ்சுதல், பழி பாவங்களுக்கு. பெறுதல், பலன்; பொருளுமாம். அரிது, இல்லை என்றபடி. அறிவது முதலியன தொழிற் பெயர்; சாதி யொருமை. உலகு-வடசொற் றிரிபு. (4)

75. † வேற்றுமை யின்றிக் கலந்திருவர் நட்டக்காற்
றேற்ரு வொழுக்க மொருவன்க ணுண்டாயி
னாற்றுந் துணையும் பொறுக்க பொருனயிற்
ஞற்ருதே தூர விடல்.

இ - ள். இருவர் - இரண்டு நண்பர்கள், வேற்றுமை - மன வேறுபாடு, இன்றி - இல்லாது, கலந்து - பொருந்தி, நட்டக்கால் - நட்பு பூண்டால், ஒருவன்கண்-இருவருள் ஒருவனிடத்து, தேற்ரு - தெளியாத, ஒழுக்கம் - நடக்கை, உண்டாயின் - உண்டானுல, ஆற்றும் துணையும்-இயன்ற அளவும், பொறுக்க - மற்றவன் பொறுக்கக் கடவன், பொருனயில்-பொறுக்க முடியாவிடில், தூற்ருது-(அவன்) குற்றத்தைப் பிறர்க்கு உரைக்காமல், தூரவிடல் - அவனைத் தொலை வில் விட்டு நீங்குக எ-று.

வேற்றுமை - நீ நான் என்ற வேறுபாடு. தேற்ரு வொழுக்கம் - அறியாமல் ஒழுகுதல் என்றேனும், பிறர்க்கு அறிவிக்கலாகாத ஒழுக்கம் என்றேனும் கொள்க. உண்டாதல் அருமை கருதி, 'உண்

* புறத்திரட்டு - 62. † புறத்திரட்டு - 945.

டாயின்' என்றார். பொறுனையின் - பொறுத்தல் கடினம் என்பது குறிப்பு. தூற்றுதல்-பிறரறியப் பழித்தல். தூர விடல்-அறவே விலக்குதல் என்றபடி, உலக வழக்கு. பொறுக்க, விடல், வியங் கோள். (5)

76. இன்னா செயினு மினிய வொழிகென்று
தன்னையே தானோவி னல்லது—துன்னிக்
கலந்தாரைக் கைவிடுதல் கானக நாட
விலங்கிற்கும் விள்ள லரிது.

இ-ள். கானக நாட - காட்டைச்சார்ந்த வளப்பமுள்ள நாட்டை யுடைய அரசனே, இன்னா - துன்பந்தரும் செய்கையை, செயினும்- (தம் நண்பர்) செய்தாலும், இனிய ஒழிக - இன்பந் தருவனவாய்க் கருதி நீக்கத்தகுந்தன, என்று - எனமனம் தேர்ந்து, தன்னையே- தன் தீவினையையே, தான் நோவின் அல்லது - தான் நொந்துகொள் ளுதலன்றி, துன்னி-நெருங்கி, கலந்தாரை-நட்புக் கொண்டவர்களை, கைவிடுதல்-சோரவிடலாகாது ஏனெனில், விள்ளல்-(நட்புக்கொண்ட பின்) பிரிதல், விலங்கிற்கும்-ஐயறிவுடைய மிருகங்களுக்கும், அரிது- அருமையாகும் எ-று.

காட்டின்வளம் நாட்டிலும் கிடைக்கும் செழிப்புடையது என்க. நாட, குறிப்பு வினைப்பெயர், விளி; ஆடூஉ முன்னிலை. இனிய-குறிப்பு வினைமுற்று எச்சம். ஒழிக என்று என்க; அகரம் தொகுத்தல். தன்னை நோதல், முன்னைத் தீவினையையும், தான் ஆராயாது தகா தவர்பால் நட்புக் கொண்டதையும் என்க. கைவிடுதல் - தல் ஈற்று வியங்கோளென்ப. விலங்கிற்கும்-உம்மை, இழிவு சிறப்பு. * "பகைக் தாரைத், தீர்தலிற் றீப்புகுத னன்று" என்றார் பிறரும். (6)

77. † பெரியார் பெருநட்புக் கோடலுஞ் செய்த
அரிய பொறுப்பவென் றன்றோ—வரியரோ
ஒல்லெ னருவி யுயர்வரை நன்னாட
நல்லசெய் வார்க்குத் தமர்.

இ-ள். ஒல்லென் - ஒல்லென்னும் ஓசையுடைய, அருவி - யாறு கள்பாயும், உயர் - உயர்ந்த, வரை - மலைகளடுத்த, நன்னாட - நல்ல நாட்டையுடைய அரசனே, தாம் - தாங்கள், செய்த-செய்த, அரிய- பொறுத்தற்கு அரிய குற்றங்களை, பொறுப்ப - பொறுப்பார்கள், என்று அன்றோ-என்றல்லவோ, பெரியார்-மேலோர்களுடைய, பெரு நட்பு - சிறந்த நட்பினை, கோடல் - விரும்பிக்கொள்ளுதல், நல்ல -

* நான்மணிக்கடிகை. † புறத்திரட்டு - 946.

நன்மைகளை, செய்வார்க்கு - செய்பவர்களுக்கு, தமர் - சுற்றத்தார், அரியரோ - கிடைத்தற்கு அருமையாவரோ எ-று.

பெரியார் - பெருமை உடையார், குறிப்புப்பெயர். கோடல் - தொழிற்பெயர். அரிய, பெரிய-குறிப்புப்பெயர். அரிய-பொறுத்தற் கருமையானவை, ஈண்டுக் குற்றங்கள். குற்றஞ் செய்தவரைப் பொறுத்து அணைப்போர் பெரியோர்; எனில் நன்மையே செய் வோரை அவர் நட்புக்கொள்ளுதல் எளிது என்றபடி. தமர் அரியரோ (அருமையன்று) என்க. ஓல் - ஒலிக்குறிப்பு. நாட - ஆடூஉ முன்னிலை. (7)

78. *வற்றிமற் றூற்றப் பசிப்பினும் பண்பிலார்க்
கற்ற மறிய வுரையற்க—வற்ற
மறைக்குந் துணையார்க் குரைப்பவே தம்மைத்
துறக்குந் துணிவிலா தார்.

இ-ள். வற்றி - உடல் உலர்ந்து, ஆற்ற - மிகவும், பசிப்பினும்- பசித்தாலும், பண்பிலார்க்கு - பொறுமைக்குண மில்லாதவர்க்கு, அற்றம்- தம் வறுமையை, அறிய-தெரியும்படி, உரையற்க-சொல்லா திருப்பாயாக, தம்மை-தம்முயிரை, துறக்கும்-விட்டுவிடும், துணிவு இலாதார் - மனஉறுதி இல்லாதவர், அற்றம் - தம் வறுமையை, மறைக்கும் துணையார்க்கு-நீக்குந்தன்மை உடையவர்க்கு, உரைப்ப- சொல்வார்கள் எ-று.

பண்பு - அதிகாரம் நோக்கிப் பொறுமைக்குணம் என்க; அஃதாவது, பிறர் துயரைப்பொறுத்து அருளுதல். அஃதிலாரிடம் உயிரைவிடத் துணிந்தவர் தம் வறுமையை உரையார் என்றபடி. அறிய, தம் வாயாலும், உடற்கூறு காட்டியும் தெரியச்செய்து. அற்றம்-துன்பம், ஆவது வறுமை. உலகில் பற்றுடையவர் தம்மை அளிப்பவர்க்குக் குறைகூறுப என்றவாறு. மறைக்கும் துணை-நீக் குந்தன்மை; துணையார், அதனை உடையவர். இனி, மறைக்கும் - மறுக்கும் எனப் பொருள் கூறுவர்; அவ்வுரை சிறப்பின்று. (8)

79. இன்பம் பயந்தாங் கிழிவு தலைவரினு
மின்பத்தின் பக்க மிருந்தைக்க—வின்ப
மொழியானை கண்டாலு மோங்கருவி நாட
பழியாகா வாறே தலை.

இ-ள். அருவி - யாற்றுவளம், ஓங்கு-உயர்ந்த, நாட - நாட்டை யுடைய அரசனே, இன்பம் பயந்த - இன்பத்தைத் தந்த, ஆங்கு-

* புறத்திரட்டு - 1189.

அவ்விடத்தில், இழிவு-தாழ்வு, தலைவரினும்-அதிகரித்து வந்தாலும், இன்பத்தின் - இன்பத்தினது, பக்கம் - சார்பிலே, இருந்தைக்க-ஒழுகின உனக்கும், இன்பம் - அவ்வின்பமானது, ஒழியாமை - நீங்காது, கண்டாலும்-நுகர்ந்தாலும், பழியாகா - பழிப்பு உண்டாகாத, ஆறே-நெறியே, தலை-சிறந்ததாகும் எ-று.

இல்லறத்தில் இன்ப நுகர்ச்சி, பழியில்லாதிருப்பின், நலம்; பழி உண்டாயின் அதனை விலக்குதல் நலம் என்றபடி. பயந்த ஆங்கு என்க; அகரம் தொகுத்தல்; இனி, இன்பம் காட்டியதுபோல் காட்டி இழிவுதரினும் எனலுமாம். இருந்தை - இருந்த நீ, வினைப் பெயர், நான்கனுருபும், அகரச்சாரியையும் பெற்றது. நாட, விளி, ஆடூஉ முன்னிலை. ஏகாரம்-பிரிநிலை. காணுதல்-ஈண்டு, நுகர்தல். (9)

80. * தான்கெடினுந் தக்கார்கே டெண்ணற்க தன்னுடம்பி
னூன்கெடினு முண்ணார்கைத் துண்ணற்க—வான்கவிந்
வையக மெல்லாம் பெறினு முரையற்க [த
பொய்யோ டிடைமிடைந்த சொல்.

இ-ள். தான்கெடினும் - தான் அழிவதாயிருப்பினும், தக்கார்-உத்தமருடைய, கேடு-அழிவினை, எண்ணற்க-நினையாதிருப்பாயாக, தன்னுடம்பின் - தன்னுடலின், ஊன்கெடினும் - பசியால் மெலிந்து தசைவற்றினாலும், உண்ணார் - உண்ணப்படாதார், கைத்து - கைப் பொருளை, உண்ணற்க - பசியாற்ற உண்ணாதிருப்பாயாக, வான் கவிந்த-ஆகாயம் கவிழ்ந்துள்ள, வையகமெல்லாம்-உலக முழுவதும், பெறினும் - அடைவதா யிருந்தாலும், பொய்யோடு - பொய்யுடன், இடைமிடைந்த - இடையிடையில் நெருங்கிய, சொல் - மொழியை, உரையற்க-சொல்லா திருப்பாயாக எ-று.

தக்கோர்-தகைமை உடையவர்; அவர் கெடுவதால் தனக்குற்ற கெடுதி விலகுவதாயினும் அவர் கேடு எண்ணற்க என்க; செய்வதே யன்றி நினைத்தலுங்கூடாது என்றபடி. பசியினால் மெலிந்து ஊன் கெடுதல். உண்ணார்-உண்ணத்தகாதார்; குரு முதலியவர், அவரது கைப்பொருள் பெற்றுண்ணில் பாவமென்ப. † கைத்து - கையகத்தது, பொருள், குறிப்புப்பெயர். இது கேடு, பசி, முதலியவற்றைப் பொறுத்தலைக் கூறுதலின் இவ்வதிகாரத்தில் வைக்கப்பட்டது. (10)

பொறையுடைமை முற்றிற்று.

---

* புறத்திரட்டு - 310.

† உயிர்சென்று, தான்படினு முண்ணார்கைத் துண்ணாப்
பெருமையிற் பீடுடைய தில்.—(இனி-நாற்பது)

## 9-ஆம் அதிகாரம். பிறர்மனை நயவாமை

அஃதாவது காம மயக்கத்தால் பிறருடைய மனைவியை இச்சியாதிருத்தல். சினத்தையும் பிறர் செய்யும் குற்றம் குறைகளையும் பொறுத்து இல்லறம் நடத்துபவன், காமத்தையும் பொறுக்கவேண்டும் என்றும், காமத்துள் கொடியது பெண்களை-பிறர் மனைவியரை-இச்சித்தலே ஆதலின், அத்தகைய காமத்தையும் அடக்கிக்கொள்க என்றும் உரைத்தார். அதிகாரமுறையும் இதனால் விளங்கும்.

81. அச்சம் பெரிதா லதற்கின்பஞ் சிற்றளவா
னிச்ச நினையுங்காற் கோக்கொலையா—னிச்சலுங்
கும்பிக்கே கூர்த்த வினையாற் பிறன்றார
நம்பற்க நாணுடை யார்.

இ-ள். (பிறர் மனைவியரை இச்சித்துச் செல்லும்போது) அச்சம் - (பிறர் கண்டுவிடுவதால் உண்டாகும்) அச்சம், பெரிது ஆல் - மிக்கது ஆதலாலும், அதற்கு-அதன் வழியாக நுகரும், இன்பம்-சிற்றின்பம், சிறறளவு ஆல் - சிறிய அளவினை உடையதாதலாலும், நிச்சம் - நாடோறும், நினையுங்கால் - தம் இழிய ஒழுக்கத்தை எண்ணுமிடத்து, கோ - அரசன் விதிக்கும், கொலை ஆல் - கொல்லப்படும் தண்டனை அடைவதாலும், நிச்சலும் - எந்நாளும், கும்பிக்கே - நரகத்துக்கே, கூர்த்த - பொருந்திய, வினை ஆல் - தீவினையைப் பயத்தலாலும், நாண் உடையார் - நாணத்தை உடையவர்கள், பிறன் - அயலானுடைய, தாரம் - மனைவியை, நம்பற்க - இச்சியாதிருப்பார்களாக எ-று.

அச்சத்துடன் அடைந்தும், நுகரும் இன்பம் சிறிது என அதன் தாழ்மையை உரைத்தார். ஆல்-காரண எச்சப்பொருள்; எண் உம்மை தொக்கன. பிறர்மனை நயத்தலால் இம்மையில் கொலைத்தண்டனையும் மறுமையில் நரகமும் * உறும் என்றபடி. அக்காலத்தில் பெண்டிர் பழிகொண்டாரைக் கைகால் குறைத்தலாகிய தண்டனைகள் விதித்தனராதலின் 'கோக்கொலை' என்றார். கூர்த்த - உரிச்சொற்றிரிபு. நாண் - செய்யக்கூடாதவற்றில் உள்ளம் ஒடுங்குதல். † நம்புதல் - இச்சித்தல், உரிச்சொல். (1)

---

* தங்கிருட் போதில் தலைசென் றயல்மனை
யுங்கு மகிழ்ந்தா ளவளிவள் காணெனச்
செங்கனலே யென வெம்பிய செம்பினிற்
பொங்கனற் பாவைகள் புல்லப் பெறுவீர்.—(சூளாமணி)

† "நம்பு மேவு நசையா கும்மே"—(தொல் - உரிச்)

82. *அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்
பிறன்றார நச்சுவார்ச் சேரா—பிறன்றார
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்
றச்சற்தோ டிந்நாற் பொருள்.

இ-ள். பிறன் - அயலானுடைய, தாரம்-மனைவியை, நச்சுவார்-இச்சிப்பவர்களை, அறம் - தருமமும், புகழ் - கீர்த்தியும், கேண்மை-நட்பும், பெருமை - மேன்மையும், இந்நான்கும் - ஆகிய இந்த நாற்பொருளும், சேரா - அடையமாட்டா, பிறன் - பிறனுடைய, தாரம்-மனைவியை, நச்சுவார்-விரும்புபவர்களை, அச்சத்தோடு - பயத்தோடு, பகை - விரோதமும், பழி - இகழ்ச்சியும், பாவம்-அதருமம், என்ற-என்று சொல்லிய, இந்நாற்பொருள் - இந்த நாற்பொருள்களும், சேரும் - அடையும் எ-று,

முற்பிறப்பிற் செய்த அறமும், அதனலாகிய புகழும், இம்மையில்கொண்ட நட்பும், தன்குடியின் பெருமையும் ஆகியவை ஒருவன் பிறர்மனை நயக்க இழப்பன் என்க; இவற்றுக்குமாறாக, முறையே பாவமும், பழியும், பகையும், அச்சமும், அவனை அடையு† மென்க. செய்யுளாதலின் இவை நான்கும் பிறழுவந்தன ; மாற்று நிலையணி. என்ற-அகரம் தொகுத்தல். (2)

83. ‡புக்க விடத்தச்சம் போதரும் போதச்சந்
துய்க்கு மிடத்தச்சந் தோன்றாமற் காப்பச்ச
மெக்காலு மச்சந் தருமா லெவன்கொலோ
உட்கான் பிறனில் புகல்.

புக்க இடத்து - பிறன் மனையாளிடம் போகும்போதும், அச்சம் - அச்சமுண்டாகின்றது, துய்க்கும் இடத்து - அவள்பால் இன்பத்தை நுகரும்போதும், அச்சம் - அச்சம், போதரும் போதும் - அவ்விடத்தினின்றும் திரும்பிவரும்போதும், அச்சம் - அச்சம், தோன்றாமல்-பிறர்க்கு தெரியாதபடி, காப்பு-தன் களவொழுக்கத்தை மறைத்துக் காத்தலில, அச்சம் - அச்சம், (இவ்வாறு) எக்காலும்-எப்பொழுதும், அச்சம் - அச்சத்தையே, தருமால் - அவ்வொழுக்கம் தருவதென்றால், உட்கான்-அச்சம் இல்லாதவனாய், பிறன்-பிறனது,

* புறத்திரட்டு - 149.

† "பகைபாவ மச்சம் பழியென நான்கும்
இகவாவா மில்லிறப்பான் கண்"—(குறள்)

‡ புறத்திரட்டு - 150.

இல் - மனைவியின்பால், புகல் - செல்லுதல், எவன்கொல் ஓ - என்ன பயன் கருதியோ எ-று.

ஓகாரம், இரக்கத்தோ டிழிவைக்காட்டியது. இல் - ஆகுபெயராய் மனைவியைக் குறித்தது. * புகல்-இடக்கரடக்கல், துய்த்தலும் அது. இனிப்பிறன் இல்லத்துள் தீயெண்ணத்துடன் புகுதல் என்னும் பொருள் தோன்றுவதும் காண்க. காத்தல் - பிறரறியாவண்ணம் மறைத்தல். உட்கான்-தெரிநிலை முற்றெச்சம். (3)

84. காணிற் குடிப்பழியாங் கையுறிற் கால்குறையு
மாணின்மை செய்யுங்கா லச்சமா—நீணிரயத்
துன்பம் பயக்குமாற் றுச்சாரி நீகண்ட
இன்ப மெனக்கெனைத்தாற் கூறு.

இ-ள். ஆண் இன்மை - ஆண் தன்மைக்கு மாறுபட்டதாகிய பிறர் மனை நயத்தலை, செய்யுங்கால் - செய்யும்பொழுது, அச்சம் ஆம் - அச்சத்தைத் தரும், காணில் - பிறர் பார்த்துவிடில், குடி - தான் பிறந்த குலத்துக்கு, பழி ஆம் - இகழ்ச்சி உண்டாகும், கை உறில் - அப்போது பிறரால் கைப்பற்றப்பட்டால், கால் குறையும் - அரச தண்டனை உண்டாகும், நீள் நிரயம் - (அன்றியும்) நீடித்த நரகத்தில், துன்பம் - துயரத்தை, பயக்கும் - உண்டாக்கும், ஆல் அதனால், துச்சாரி - தீச் செய்கை புரிகின்றவனே, நீ கண்ட - நீ இவ்வாறு நுகர்ந்த, இன்பம் - சிற்றின்பம், எனைத்து - எத்தன்மையீது, எனக்கு கூறு - எனக்கு விளக்குவாய் எ-று. ஆல்-அசை.

ஆணின்மை, முன்னும் கூட்டுக. ஆண்மை, இன்மை என்க; ஆண்மை - நிறை, பொறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்பன. "பிறன் மனை நோக்காத பேராண்மை" † என்றது கருதியும், அதிகாரம் நோக்கியும், ஆணின்மை, பிறர் மனை நயத்தலெனப்பட்டது. புறப் பகையினும் அகப் பகையாகிய காமத்தை வெல்லுதல் அருமை கருதி அதனை ஆண்மை என்றார். செய்யுங்கால் - இடக்கரடக்கல். நீள் - கால நீடித்தலைக் குறித்தது. கால் குறைதல் - மேற் "கோக் கொலை" ‡ போல்; இலக்கணையாக அரச தண்டனை என்க. (4)

85. $ செம்மையொன் றின்றிச் சிறியா ரினத்தராய்க்
கொம்மை வரிமுலையா டோண்மரீஇ—யும்மை
வலியாற் பிறர்மனைமேற் சென்றாரே யிம்மை
அலியாகி யாடியுண் பார்.

---

* தினைத்துணையுந், தேரான் பிறனில் புகல்—(குறள்)

† குறள் - 148. ‡ நாலடி - 81. $ புறத்திரட்டு - 148.

இ-ள். செம்மை - நேர்மை, ஒன்று இன்றி - சிறிதும் இல்லாமல், சிறியார் - அற்பர்களது, இனத்தினராய் - கூட்டத்தில் சேர்ந்தவராய், கொம்மை - திரண்ட, வரி - சுணங்கமைந்த, முலையாள் - முலைகளை யுடைய பரத்தையின், தோள் - தோட்களை, மரீஇ - மருவி, வலியால் - தம் வலிமையினால், பிறர் மனைமேல் - பிறருடைய மனைவி மாரிடத்தும், உம்மை - முற்பிறப்பில், சென்றார் - சென்று அடைந்தவர்களே, இம்மை - இப்பிறப்பில், அலியாகி - நபுஞ்சகமடைந்து, ஆடி - கூத்தாடி, உண்பார் - அதன் ஊதியத்தால் உண்டு பிழைப்பவர்களாம் எ-று.

செம்மையின்மையாவது, பரத்தையரை நாடுவதன் பழி பாவங் கட்கஞ்சாமையும், பிறர் மனை நயத்தலால், தம் மனைவியரின் கற்பைக் காத்தல்போல அவரது கற்பையும் கருத வேண்டிய நடுநிலைமையின்மையுமாம். ஒன்று-எஞ்சாமை யும்மை தொகுத்தல், கொம்மை- இளமை, அழகு, வன்மை, பருமை முதலியன. சிறியார் - விடர், விட்டேற்றாளர் முதலியோர்; இவர் பரதை நயருட னிருப்பவர். சிறியாரின் உறவு கூறவே, முலையாள், பரத்தை எனப்பட்டது. இவளது கூட்டுறவுடன் அமையாது பிறர் மனைவியரையும் நாடியதன் தீங்கு உணர்த்த மரீஇச்சென்றார் என்றார். மரீஇ, சென்றார்- இடக்கரடக்கல்; முன்னது சொல்லிசை யளபெடை. வலி - உடல் வலியும், ஆள்வலியும், பொருள் வலியும். அலி- ஆணுறுப்பு மிகுந்து பெண்ணுறுப்புக் குறைந்த பிறவி. (5)

86. பல்லா ரறியப் பறையறைந்து நாட்கேட்டுக்
கல்யாணஞ் செய்து கடிபுக்க—மெல்லியற்
காதன் மனையாளு மில்லாளா வென்னொருவ
னேதின் மனையாளை நோக்கு.

இ-ள். நாள் கேட்டு - மணத்துக்கு நல்ல நாள் கேட்டறிந்து, பறை அறைந்து-மண வாச்சியம் ஒலிக்கச் செய்து, பல்லார் அறிய - (அந்த நல்ல நாளில்) பலரும் அறியும்படி, கல்யாணம் செய்து - விவாகம் செய்துகொண்டு, கடி - தன் காவலில், புக்க - அடைந்த, மெல் இயல் - மெல்லிய இயலும், காதல் - உள்ளன்பும் உடைய, மனையாளும் - தன் மனைவியும், இல்லாள் ஆ - இல்லத்தில் இருப்பவளாக, ஒருவன்-ஒரு நாயகன், ஏதில-அயலானது, மனையாளை - மனைவியை, நோக்கி-பார்த்து அடைதல், என்-எதன் நிமித்தம் எ-று.

கடி - உரிச் சொல். விவாகத்தின் பின் நாயகன் காவலில் மனைவி புகுதலின் 'கடி புக்க' என்றார். [illegible] மனைவி புற அழகும்,

மன அழகும் உடையவளென மெல்லியல், காதல் என்றார். அவட்குக் காதல் இருப்ப, இவனுக்கு இல்லை என்பது குறிப்பு. இல்லாள்-குறிப்பு வினைப்பெயர். நோக்கு - முதனிலைத் தொழிற் பெயர், இடக்கரடக்கல். தான் மணந்த விதமே பிறனும் மணந்திருப்பானாதலின், பிறன் மனை விழைதல் தகாதென்றவாறு. (6)

87\. அம்ப லயலெடுப்ப வஞ்சித் தமர்பரீஇ
வம்பலன் பெண்மரீஇ மைந்துற்று—நம்பு
நிலைமையி னெஞ்சத்தான் றுப்புரவு பாம்பின்
றலைநக்கி யன்ன துடைத்து.

இ-ள். அயல் - அயலார், அம்ப லெடுப்ப - தீ யொழுக்கத்தைப் பற்றிப் புறங்கூற, தமர் - உறவினர், அஞ்சி - என்ன நேருமோ என அஞ்சி, பரீஇ - வருந்தும்படி, வம்பலன் - அயலானுடைய, பெண் - மனையாளை, மரீஇ - தழுவி, மைந்து - மயக்கத்தை, உற்று - பொருந்தி, நம்பும்-விரும்பும், நிலைமை இல்-நிலை நீடித்தல் இல்லாத, நெஞ்சத்தான்-மனத்தை யுடையவனது, துப்புரவு-இன்ப நுகர்ச்சி, பாம்பின் - பாம்பினது, தலை-தலையை, நக்கியன்னது - நக்கி யின்பமடையுந் தன்மையை, உடைத்து - உடையது எ-று.

அம்பல் - வெளிப்படையின்றித் தமக்குள் முணமுணத்துப் பழித்தல். அயல் - அயலார், ஆகு பெயர். எடுப்ப - எடுத்தற்கு, பரீஇ, மரீஇ, வினை யெச்சம்; சொல்லிசை யளபெடை; பின்னது, இடக்கருமாம். பெண் - ஈண்டு மனைவி. நம்புதல் - இச்சித்தல், மேல் "நம்பற்க" * என்றதுபோல. தன் இச்சையிலும் தான் விரும்பியவளது இச்சையிலும் நிலையின்மை என்க. பாம்பின் தலை, பளபளப்புடன் வசீகரிக்க, அதனை நக்க முயல்வோர் உயிரிழத்தல் ஒப்ப, நங்கையர் அழகில் மயங்கியவர், உயிரையு மானத்தையும் இழப்பர் என்றபடி; உவமையணி. (7)

88\. † பரவா வெளிப்படாப் பல்லோர்கட் டங்கா
உரவோர்கட் காமநோ யோஒ கொடிதே
விரவாரு ளுணுப் படலஞ்சி யாது
முரையாதுள் ளாறி விடும்.

இ-ள். உரவோர்கண் - மனவுறுதி யுடையாரிடம் தோன்றும், காமநோய் - பிற மாதர்பால் எழும் இச்சையாகிய நோய், பரவா - வளராமலும், வெளிப்படா - வெளியாகாமலும், பல்லோர்கண் - பலரிடத்திலும், தங்கா-பொருந்தாமலும், விரவாருள்-அந்நோய் அடை

* நாலடி - 81. † புறத்திரட்டு - 290.

யப்பெறுதவருள், நாணு படலஞ்சி - வெட்கப்படுவதற்கு அஞ்சி, யாதும் உரையாது - ஒன்றும் வெளியே சொல்லப்பெறுது, உள்-அவரது மனதிலேயே, ஆறிவிடும் - அடங்கிவிடும், ஆதலின், ஓஒ கொடிதே-அந்நோய் அந்தோ மிகவும் கொடியதாம் எ-று.

பிறர் எவரும் அறிகிலாமையாலும், பிறர்க்கு எடுத்து உரைத்த லின்மையாலும் வெளிப்படா தங்கா, என்றார். விரவார் - காமத்தின் இயல்பு அறியாதவர். பழிக்கஞ்சி நாணுப்படல். மனவுறுதி யுடையார்க்கு இத்தகைய காமம் உண்டாகாது, உண்டாயினும் விரைவில் ஒழியும் என, காமநோய் என்றார். அதனுல் உண்டாகும் மனத்துயர் மிகுதியாதலின் ஓஒ கொடிது என்றார்; இசைநிறை யளபெடை. ஏகாரம் இரக்கப்பொருளது. நல்லோரையும் இவ்வளவு வருத்துத லால் அது கொடிது என்றபடி. (8)

89. * அம்பு மழலு மவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிச் சுடினும் புறஞ்சுடும்—வெம்பிக்
கவற்றி மனத்தைச் சுடுதலாற் காம
மவற்றினு மஞ்சப் படும்.

இ-ள். அம்பும் - அத்திரமும், அழலும் - நெருப்பும், அவிர் - விளங்கும், கதிர் - கிரணங்களையுடைய, ஞாயிறும் - சூரியனும், வெம்பி - கனன்று, சுடினும் - சுட்டாலும், புறஞ்சுடும் - புறமாகிய உடலைச்சுடும், காமம்-பெண்கள்பால் எழும் இச்சை, வெம்பி-கனன்று, மனத்தை - உள்ளத்தை, கவற்றி - கவலைப்படுத்தி, சுடுதலால் - சுடுகின்றபடியால், அவற்றினும் - அம்பு முதலியவற்றையும்விட, அஞ்சப்படும்-காமம் கொடிதென்று அஞ்சத்தகும் எ-று.

அம்பு முதலியவற்ருல் உண்டாகும் வெப்பம் ஆறினும், உள்ளத்து உண்டாம் காமம் ஆறுவதருமை நோக்கி அவற்றினு மஞ்சப் படும் என்றார். இதனுல் காமத்தை ஒழித்தல் வேண்டுமென்பது எச்சம். இது வேற்றுமையணி என்ப. கவற்றி - பிறவினை, வினை எச்சம். காமமே பிறர்மனை நயத்தற்குக் காரணமாதலின் இஃது இவ் அதிகாரத்தில் அடங்கியது. (9)

90. ஊருளெழுந்த வுருகெழு செந்தீக்கு
நீருட் குளித்து முயலாகு—நீருட்
குளிப்பினுங் காமஞ் சுடுமேகுன் றேறி
யொளிப்பினுங் காமஞ் சுடும்.

* புறத்திரட்டு - 89.

இ-ள். ஊருள்-தான் இருக்கும் ஊரில், எழுந்த - உண்டாகிய, உரு-அச்சந்தரும், கெழு - பிரகாசம் பொருந்திய, செந்தீக்கு-செவ் வண்ண நெருப்புக்கு அஞ்சி, நீருள்-தண்ணீரில், குளித்தும்-மூழ்கி யாயினும், உயல ஆகும்-பிழைக்கலாம், காமம்-காமமானது, நீருள்-தண்ணீரில், குளிப்பினும் - குளித்தாலும், சுடுமே-சுடாமல்விடாது, குன்றேறி - மலைமேலேறி, ஒளிப்பினும் - ஒளித்தாலும், காமம்-அக் காமம், சுடும்-சுடுதல் தவிராது எ-று.

ஊரில் பல இல்லங்களையும் அழிக்கும் நெருப்பாதலின் உரு கெழு தீ என்றார். * உரு-அச்சம். செம்மை-இயற்கை யடைமொழி. உயல்-உய்தல், தொழிற்பெயர். சுடுமே-ஏகாரம் இரக்கப்பொருளது. உம்மை இரண்டும், எச்சத்தோடு உயர்வு சிறப்பு. காமம், அதன் கொடுமை குறிக்க இரட்டித்து வந்தது. தூமத்தீயிற் பிழைத்தாலும் காமத்தீயிற் பிழைத்தலரிது என்றபடி. இதுவும் வேற்றுமையணி.

பிறர்மனை நயவாமை முற்றிற்று.

## 10 - ஆம் அதிகாரம். ஈகை

அஃதாவது கொடுக்குந்திறன். பொறுமையுடைய ஒருவன், பிறர்மனை நயவாமல், தன்னைப்போற் பிறரையும் கருதுபவன் ஆதலின், பிறர்படும் துயர் களையக்கொடுத்து உதவுவான். ஆதலின், இது முன் அதிகாரங்களுக்குப் பின்வந்தது.

91. † இல்லா விடத்து மியைந்த வளவினு
ளுள்ள விடம்போற் பெரிதுவந்து—மெல்லக்
கொடையொடு பட்ட குணனுடை மாந்தர்க்
கடையாவா மாண்டைக் கதவு.

இ-ள். இல்லா-தமக்கில்லாத, இடத்தும்-காலத்தும், இயைந்த-பொருந்திய, அளவினால் - அளவால், உள்ள இடம்போல்-பொருள் தோன்றியிருந்த காலத்தைப்போல, பெரிது - மிகவும், உவந்து - மகிழ்ந்து, மெல்ல - நிதானமாக, கொடையொடு - கொடுப்பதனோடு, பட்ட - பொருந்திய, குணன் - நற்குணங்கள், உடை - உடைய, மாந் தர்க்கு - மனிதர்க்கு ஆண்டை - சுவர்க்கவாசலின், கதவு-கதவுகள், அடையாவாம் - எப்பொழுதும் மூடப்படுவதில்லை எ-று.

---

* "உருவுட் காகும்" (தொல் - உரிச்)

† புறத்திரட்டு - 224.

கொடையுடையார் துறக்கம் எய்துவர் என்றபடி. இடம்-காலத்தைக் குறித்தது. பொருள் உள்ளகாலத்தின் மன ஆயாசமின்றிக் கொடுக்க இயைவதுபோல, அது குறைந்தகாலத்தும் ஆயாசமின்றிக் கொடுக்கும் இயல்பு என்க. ஈதலில் உவப்பும், கொள்வோர் திருப்தியடையும் காறும் கொடுக்கும் தன்மையும் கொள்க. ஆண்டை, துறக்கம்; தகுதி வழக்கு. (1)

92. முன்னரே சாநாண் முனிதக்க மூப்புள
பின்னரும் பீடழிக்கு நோயுள—கொன்னே
பரவன்மின் பற்றன்மின் பாத்துண்மின் யாதுங்
கரவன்மின் கைத்துண்டாம் போழ்து.

இ-ள். முன்னரே-நமது கண்முன்னே, சாம் நாள் - இறக்கும் காலமும், முனிதக்க மூப்பு-வெறுக்கத்தக்க கிழத்தன்மையும், உள - இருக்கின்றன, பின்னரும் - இன்னும், பீடு அழிக்கும் நோய்-பெருமையைக் குலைக்கும் வியாதிகளும், உள - இருக்கின்றன (ஆதலின்), கைத்து உண்டாம்போழ்து-கையகத்தில் பொருள் உண்டாயிருக்கும் பொழுது, கொன்னே-வீணாக, பரவன்மின்-மேலும் அதனை வளர்க்க அலையவேண்டாம், பாத்து உண்மின் - (அப்பொருளைப்) பகுத்துக் கொடுத்துண்ணுங்கள், யாதும் - இரவலர் விரும்பும் எதனையும், கரவன்மின் - இல்லை என்று மறுத்து ஒளிக்கவேண்டாம் எ-று.

உலகில் பலரும் இறத்தலும், மூத்தலும் நோயுறலும் கண்கூடாகக் காணப்படுதலால், 'முன்னரே உள' என்றார். நாள் - காலம். முனிதல் தக்க என்க; முதனிலை திரிந்த தொழிற்பெயர். பீடு, உடலின் வனப்பு, வலியாதிய பெருமை. பாத்து-பகுத்து என்பதன் மரூஉ; * பிரமசாரி, வானப்பிரத்தன், துறவி என்னு மூவர்க்கும், தென்புலத்தார் தெய்வம், விருந்து, ஒக்கல் என நால்வர்க்கும் பகுத்துத் தருதல். கைத்துண்டாம்போது - முன் 19-ம் செய்யுளிற்போல. (2)

93. † நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்
கொடுத்துத்தான் றுய்ப்பினு மீண்டுங்கா லீண்டு
மிடுக்குற்றுப் பற்றினு நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால்.

இ-ள். கொடுத்து-பிறருக்கு ஈந்து, தான் துய்ப்பினும்-தானும் நுகர்ந்தபோதிலும், செல்வம் - பொருள், ஈண்டும் கால் - வினைப்பயனால்) வளரும் காலத்தில், ஈண்டும் - வளரும், விடுக்கும் - (முற்பிறப்

---

* குறள் - 44. (பரிமேலுரை)

† புறத்திரட்டு - 225. 'தற் றுய்ப்பினும்' என்றும் பாடம்.

பிற் செய்து குறையாக) விடப்பட்ட, வினை-நல்வினை, உலந்தக்கால்-முடிந்த காலத்தில், மிடுக்குற்று - வலிமையுடன், பற்றினும்-இறுகப் பிடித்து வைத்தாலும், நில்லாது - அச்செல்வம் நிலைபெற்றிராது, நடுக்குற்று - வறுமையால் நடுக்கம் அடைந்து, தற்சேர்ந்தார் - தன்னைச் சேர்ந்தவருடைய, துன்பம் - துயரத்தை, துடையார் - நீக்க மாட்டார், (என்னே பேதைமை) எ-று.

ஆகூழாற் செல்வம் உண்டாதலும், போகூழால் அது நீங்குதலும் * நியதி ஆதலின், அச்செல்வத்தைப் பிறர்க்குக் கொடுத்தலாலும் தானுண்பதலாலும் குறையாது, ஆதலின் வறியோர்க்கு ஈயாமை ஏனோ என ஈயாதாரைக்கண்டு இரங்கியவாறு. நடுக்கு-வறுமையால் உடல் தளர்ந்து நடுங்குதல். துடைத்தல், பொருள் முதலிய கொடுத்து, துன்பத்துக்குக் காரணமாகிய வறுமை, நோய்களைப் போக்குதல். பற்றுதல்-இறுகப்பிடித்தல். தான், என்னும் ஒருமைக்குப் பன்மைவினை வந்தது மயக்கம். இது முன்னும் பின்னும் கூட்டிப் பொருள் செய்வதால் அடி மறிமாற்றிப் பொருள்கோள் என்ப. (3)

94. இம்மி யரிசித் துணையானும் வைகலு
நும்மி லியைவ கொடுத்துண்மின்—னும்மைக்
கொடாஅ தவரென்பர் குண்டுநீர் வையத்
தடாஅ வடுப்பி னவர்.

இ-ள். குண்டு - ஆழமுடைய, நீர் - கடல் சூழ்ந்த, வையத்து-உலகிலுள்ள, அடாஅ அடுப்பின் அவர் - தாமே அடுப்புக்கூட்டிச் சமையல் செய்யாதவர்கள், நும்மை-(தருமம் செய்யாவிடில்) உம்மை, கொடாஅதவர் - ஏழைக்குக் கொடுக்காத உலோபி, என்பர் - என்று பழிப்பர் (ஆதலின்), நும் - நுமது, இல் - அகத்தில், இயைவ - பொருந்தியுள்ள பொருளிலிருந்து, இம்மி அரிசி - இம்மி என்னும் ஒருவகை அரிசியின், துணையானும் - அளவாவது, வைகலும்-நாள் தோறும், கொடுத்து - இரப்பார்க்கு ஈந்து, உண்மின் - பிறகு உண்பீராக எ-று.

இம்மி அரிசி-மத்தங்காய்ப் புல்லரிசி என்பர் நச்சினார்க்கினியர்; தினை கடுகு என்பனபோலச் சிறுமையைக் குறிக்கின்றது. உம்மை-இழிவு சிறப்பு. நும்மில் - நும்மால் என வேற்றுமை மயக்கமாகப் பொருள் கூறினுமாம். இயைவ - வினையின்பெயர். அளபெடை,

* "ஆகூழாற் றோன்றும் மசைவின்மை கைப்பொருள்
போகூழாற் றோன்று மடி"—(குறள்-371)

செய்யுளிசை நிறைபு. துறவிகள், இரவலர் முதலியோர் தமக்கென அடுப்புக் கூட்டுதலில்லாதவர் ஆதலின் அடா அடுப்பினவர் என்றார்; வடமொழியில் அதிதி என்பதும் இப்பொருட்டு. (4)

95. * மறுமையு மிம்மையு நோக்கி யொருவற்
குறுமா றியைவ கொடுத்தல்—வறுமையா
லீத லிசையா தெனினு மிரவாமை
யீத லிரட்டி யுறும்.

இ-ள். மறுமை - மறுமைப் பயனையும், இம்மை - இப்பிறவிப் பயனையும், நோக்கி - கருதி, உறும் ஆறு - பொருந்திய வழியில், இயைவ - தம் ஆற்றலுக்கு ஏற்றவை, ஒருவற்கு - இரந்துவருபவனுக்கு, கொடுத்தல் - கொடுக்கக்கடவர், வறுமையால் - இல்லாமையினால், ஈதல்-அவ்விதம் கொடுத்தல், இசையாது எனினும்-முடியாவிட்டாலும், இரவாமை - தன் வறுமையால் பிறர்பால் இரந்துவாங்காமை, ஈதல் - கொடையின் பலனைப்போல், இரட்டி உறும் - இருமடங்கு நன்மை பொருந்தும் எ-று.

மறுமைப்பயன் - துறக்கம்; இம்மைப்பயன்-புகழ்; ஆகுபெயர். உறும் ஆறு-கைம்மாறு கருதாமல் ஏற்ற அளவுக்கு இன்சொலோடு தருதல். கொடுத்தல் - வியங்கோள். தான் கொடாவிடினும் † பிறனிடம் ஒன்று பெறாமையே பெருமை என்றபடி. (5)

96. ‡ நடுவூருள் வேதிகை சுற்றுக்கோட் புக்க
படுபனை யன்னர் பலர்நச்ச வாழ்வார்
குடிகொழுத்தக் கண்ணுங் கொடுத்துண்ணு மாக்க
ளுடுகாட்டு ளேற்றைப் பனை.

இ-ள். பலர்-பலரும், நச்ச-விரும்பிச்சூழ, வாழ்வார் - புகழோடு வாழ்கின்றவர்கள், நடு ஊருள்-ஊர் நடுவில், வேதிகைசுற்றுக் கோள் புக்க-மேடையினால் எப்புறமும் சூழ்ந்துகொள்ளப்பெற்ற, படுபனை-பழம் உண்டாகின்ற பெண் பனைமரத்தை, அன்னர்-ஒப்பாவர், குடி-தமது குடித்தனம், கொழுத்தக் கண்ணும்-செல்வத்தாற் கொழிவிய

* புறத்திரட்டு - 1188. ஒருவர்க்கு என்றும் பாடம்.

† "ஈயென்று நானொருவ ரிடநின்று கேளாத
வியல்புமற் றொருவ ரெனிடமீ
திடுவென்ற போதினி லிலையென்று சொல்லாம
லிடுகின்ற திறனும்..............."—என்ற (இராமலிங்க சுவாமிகள்) திருவாக்கும் ஒப்புநோக்குக."

‡ புறத்திரட்டு - 226. "வேதிகைச்" என்றும் பாடம்.

பொழுதும், கொடுத்து-இரவலர்க்கு ஈந்து, உண்ணு-தாமுமுண்ணாத, மாக்கள் - மனிதர்கள், இடுகாட்டில் - பிணங்களை இடுகின்ற மயானத்தில் வளரும், ஏற்றைப்பனை - ஒன்றும் காய்க்காத ஆண்பனை(யை ஒப்பாவர்) எ-று.

ஊர் நடுவில் மேடைசூழ்ந்த பனைமர மிருப்பின், பசித்தவர் பழத்தை அறுத்து மேடையில் இருந்து புசித்தல்போல, கொடையுடையாரை அடைந்தோர் அவரது ஆதரவில் * இன்பமுறுவர் என்றும், எவரும் செல்ல அஞ்சும் இடுகாட்டில் காய்க்காத பனை இருப்பின் யாரும் அதை விரும்பாமைபோல, உலோபிகள்பால் செல்வோரில்லை என்றும் உவமைப்பொருள் காண்க. நடுவூர்-முன்பின் தொக்க ஆறன்தொகை; இலக்கணப்போலி. படுபனை-வினைத்தொகை. படுதல்-(பழம்) உண்டாதல், எனவே பெண்பனையாம். வளமையால் கொழுத்ததென்க. ஐம்புலத்தாரையும் † ஓம்பல் வேண்டலின் கொடுத்து உண்ணு என்றார். ஏற்றை - ஆண்பெயர். ஆறறிவற்ற மக்கள் என்பதற்கு ‡ மாக்கள் என்றார். மாக்கள் - மிருகத்தன்மையுடைய மனிதர். (6)

97. $ பெயற்பான் மழைபெய்யாக் கண்ணு முலகஞ்
செயற்பால செய்யா விடினுங்—கயற்புலால்
புன்னை கடியும் பொருகடற் றண்சேர்ப்ப
என்னை யுலகுய்யு மாறு.

இ-ள். கயல்-கயல்மீனின், புலால்-புலால் நாற்றத்தை, புன்னை-புன்னைப் பூவின் மணம், கடியும் - நீக்கும், பொரு - அலைமோதும், தண்-குளிர்ந்த, கடல்-கடலின், சேர்ப்ப-கரையையுடைய அரசனே, பெயல் - பெய்தல், பால் - பகுதியாகிய காலத்தில், மழை பெய்யாக் கண்ணும் - மழை பெய்யாதபோதும், உலகம் - உயர்ந்தோர், செயற்பால-செய்யத்தக்க உதவிகளை, செய்யாவிடினும் - செய்யாதபோதும், உலகு - உலகமானது, உய்யும் ஆறு - பிழைக்கும் வழி, என்னை-எவ்விதம் எ-று.

காலத்தில் மழை தவறினாலும், உத்தமர்கள் கொடுத்தலில் தவறினாலும் உலகம் உய்தல் அருமை என்றபடி. இரண்டு கொள்

---

* "பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம்
நயனுடை யான்கட் படின்"—குறள் - 216.

† "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
கைம்புலத்தா றோம்பல் தலை"—குறள் - 43.

‡ "மாவு மாக்களு மையறி வினவே"—(தொல்-மரபு.)

$ புறத்திரட்டு - 222.

கைக்கும் ஒரு முடிபு தரப்பட்டதால் இது விளக்கணியாம். (தீபகாலங்காரம்.) மழையைப்போல் உயர்ந்தோர் கொடுப்பர் என உவமைப் பொருள் தொனித்தலுமறிக. கயல் - மீன்வகை; பொதுவாக, மீன் இனத்தைச் சுட்டியது. செயல் - தொழிற்பெயர். பால - குறிப்பு வினைப்பெயர். கயலும் புன்னையும் நெய்தனிலத்துக் கருப்பொருள். அலைகள் பொருகின்ற கடல் என்க. உலகு, முன்னது உத்தமரையும், பின்னது மன்பதையையும் குறித்தன. சேர்ப்ப-ஆறூஉ முன்னிலை.

98. *ஏற்றகை மாற்றாமை யென்னானுந் தாம்வரையா
ராற்றாதார்க் கீவதா மாண்கட—னாற்றின்
மலிகடற் றண்சேர்ப்ப மாறீவார்க் கீதல்
பொலிகட னென்னும் பெயர்த்து.

இ-ள். மலி-வளமை மிகுந்த, கடல் - கடலின், தண்-குளிர்ந்த, சேர்ப்ப - கரைகளை உடைய அரசனே, தாம் வரையார் - தாம் ஒரு வரையறை செய்து கொள்ளாதவராய், ஆற்றாதார்க்கு - கைம்மாறு செய்யும் ஆற்றலில்லாத ஏழைகளுக்கு, ஏற்றகை - இரந்துண்ண ஏந்திய அவர்கள் கையை, மாற்றாமை - மறுக்காமல், என்னானும்- எவ்விதத்திலேனும், ஈவதாம் - கொடுத்தலே, ஆண்கடன் - ஆண்மகனுக்குப் பொருந்திய கடமை, ஆற்றின் - அவ்வாறு கொடுத்தலில், மாறு ஈவார்க்கு-பிரதி உதவிசெய்யக் கூடியவருக்கு, ஈதல்-உதவுதல், பொலிகடன் - வளர்கின்ற கடன் கொடுத்தல், என்னும் பெயர்த்து - என்னும் பெயரை உடையது எ-று.

வளம் † மலி கடல் என்க - வினைத்தொகை. ஏற்ற-இரத்தற் கேந்திய; ஏற்றல்-இரத்தல். என்னானும்-உடலாலும், பொருளாலும், பிறவாலும் உதவுதலென்றபடி. வரைதல் - இன்னாருக்கு இத்துணை கொடுத்தல் என்றோ, தனக்கே இத்துணை வேண்டும் என்றோ, ஓர் அளவை குறித்தல் வரையார். மாறீவார் என்றது நோக்கி, ஆற்றாதார்-கைம்மாறு செய்யும் ஆற்றலிலாதார் எனப்பட்டது. பொலிதல், வளர்தல். ஈகை, இம்மையிற் பயன் கருதினால், (முதலும் பயனுமாகப் பின்னர் வரப்பெறுதலின்,) ‡ கடன் தருதல் என்றும், மறுமையில்

* புறத்திரட்டு - 223.

† "ஓர்க்கோலை சங்கம் ஒளிர்பவள மொண்முத்தம்
நீர்ப்படு முப்பினோ டைந்து."

‡ "வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து"—(குறள்-221)
என்பதன் கருத்தை இச்செய்யுள் தழுவியிருத்தல் காண்க.

துறக்கம் அடையக்கருதினால் * அறவிலை செய்தல் என்றும் ஆன்றோர் கூறுவர். (8)

99. இறப்பச் சிறிதென்னா தில்லென்னா தென்று
மறப்பயன் யார்மாட்டுஞ் செய்க—முறைப்புதவி
னையம் புகூஉந் தவசி கடிஞைபோற்
பைய நிறைத்து விடும்.

இ-ள். இறப்ப-(நம் கைப்பொருள்) மிகவும், சிறிது-சிறியது, என்னாது - என்று கருதாமலும், இல் - (இரப்போர்க்கு) இல்லை, என்னாது - என்று மறுக்காமல், என்றும் - எந்நாளும், அறப்பயன்-தருமமாகிய பலனை, யார்மாட்டும் - எல்லோருக்கும், செய்க-செய்யக் கடவர், (அவ்வாறு செய்தல்) முறை - முறைமையாக, புதவின் - வாயில்கள்தோறும், ஐயம் புகூஉம் - இரக்கச்செல்லும், தவசி - துறவியின், கடிஞைபோல்-பிச்சைப்பாத்திரம் (நிறைதல்) போல, பைய-சிறிது சிறிதாக, நிறைத்துவிடும் - (அறப்பயனை) நிறையச் செய்யும் எ-று.

சிறுதுளி பெருவெள்ளம்போல் சிறிது சிறிதாகச் செய்யும் அறமும் முடிவில் பூரணமடையும் என்க. யார்மாட்டும் - உம்மை, எஞ்சாமைப்பொருள். புதவின்-ஏழன் உருபு மயக்கம். ஐயம்புகுதல்-இரத்தல்; 'பிச்சை புகினுங் கற்கை நன்றே' † என்றதுபோல. புகூஉம்-செய்யுளிசை நிறை யளபெடை. தவசி-துறவி; ‡ அதிதியாதலின் இரத்தற்குரியவன். கடிஞை நிறைவதுபோல் அறப்பயன் நிரம்பப்பெறும்-உவமையணி. (9)

100. $ கடிப்பிடு கண்முரசங் காதத்தோர் கேட்ப
ரிடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்ப
ரடுக்கிய மூவுலகுங் கேட்குமே சான்றோர்
கொடுத்தா ரெனப்படுஞ் சொல்.

இ-ள். கடிப்பு - குறுந்தடியினால், இடு - அடிக்கப்பட்ட, கண்-கண் அகன்ற, முரசம் - பேரிகையின் ஒலியை, காதத்தோர் - காதவழியிலுள்ளோர், கேட்பர் - கேட்பார்கள், இடித்து - மேகம் இடியிடித்து, முழங்கியது-ஒலித்ததை, ஓர் யோசனையோர்- ஓர் யோசனை வழியிலுள்ளோர், கேட்பர் - கேட்பார்கள், சான்றோர்-உத்தமர்கள்,

* "ஆற்றுநர்க் களிப்போ ரறவிலை பகர்வோர்"—(மணிமே)
"அறவிலை பகரும் ஆஅய் அல்லன்"—(புறம்)

† முதுமொழிக் காஞ்சி. ‡ நாலடி - 94. உரை காண்க.
$ புறத்திரட்டு - 244.

கொடுத்தார் எனப்படுஞ் சொல் - இரப்போர்க்குக் கொடுத்தார்கள் என்று சொல்லப்படும் புகழ்ச்சொல், அடுக்கிய - ஒன்றின்மேலொன்றாக அடுக்கிய, மூவுலகும் - மூவுலகத்தினரும், கேட்கும் - கேட்பார்கள் எ-று.

முரசொலி ஒரு காதமும், இடியொலி ஓர் யோசனையும், கொடையாளர் புகழொலி மூவுலகும் கேட்கும் என ஒன்றன்மேலொன்று சிறப்பித் துரைத்தலின் இது மேன்மேலுயர்ச்சியணி. கடிப்பு - பறையடிக்கும் குறுந்தடி. கண் - பேரிகையின் நடுவிடம்; அடிக்கப்படும் பகுதி. காதம், ஏழரைநாழிகை வழி என்றும், யோசனை நான்குகாதம் என்றும் கூறுப. காதத்தோர், யோசனையோர் - பெயரடியாகப் பிறந்த குறிப்புப்பெயர். மூவுலகு, மேல், நடு, கீழ் உலகங்கள்; இடவாகுபெயர். கேட்குமே-ஏகாரம், தெளிவு. கொடுத்த அளவில் சான்றோராயினர் என்பது தொனி. சொல்-ஈண்டுப்புகழ்.

ஈகை முற்றிற்று.

## 11-ஆம் அதிகாரம். பழவினை

அஃதாவது முற்பிறப்புக்களிற் செய்த நல்வினை தீவினைகளாம். நல்லறம் செய்தவர்களே இப் பிறவியில் செல்வத்துடன் வாழ்பவராதலின், நல்லறத்துக்கு உறுதியாகிய ஈகையுடையாரே அச் சிறப்பினை எய்துவார் என்பது காட்ட, இஃது 'ஈகை'யின்பின் வைக்கப்பட்டது.

101. *பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாந் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையு மன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு.

இ-ள். பல் ஆவுள் - பல பசுக்களின் இடையில், உய்த்துவிடினும் - செலுத்திவிடப்பட்டாலும், குழகன்று - இளங்கன்று, தாய் - தன் தாயை, நாடிக் கோடலை-தேடிக்கொண்டு அடைவதில், வல்லது ஆம் - ஆற்றலுடையதாகும், தொல்லை பழவினையும் - (முற்பிறப்புக்களிற் செய்த) மிகவும் பழைய வினையும், தன் செய்த-தன்னைச்செய்த, கிழவனை - உரிமை உடையவனை, நாடிக் கொளற்கு-(உலகிற் பல சீவராசிகளிடை) தேடி அடைந்துகொள்வதற்கு, அன்ன தகைத்த-அத் தன்மையதானது எ-று.

* புறத்திரட்டு - 461. 'பல்லாவொளித்து' 'தான்செய்த' என்றும் பாடம்.

பிறப்புக்கள் பல எடுத்தாலும், வினையைச்செய்யும் ஆன்மா ஒன்றே, அஃது எவ்வகைப் பிறவி பெற்றாலும், அதனை அவ்வினை எளிதில் கண்டு பிடித்துவிடும் என்றபடி. இதனால் வினையினின்றும் தப்புதலரிது என்றவாறு.

ஆவுள்-இடப்பொருளது, உருபு மயக்கம். குழ-இளமை, உரிச்சொல். கோடல்-தொழிற்பெயர், நான்கன் பொருளது, உருபு மயக்கம். வினையின் பழமை உணர்த்தத் தொல்லை, பழவினை என்றார். தன்னைச்செய்த என்க. * கிழவன்-வினைப்பயனை ஏற்று நுகர்தற்குரியவனென்றேனும், வினைக்குத் தலைவன் என்றேனும் கொள்க. கிழமை-பகுதி, பண்பு. இஃது உவமையணி; கன்று - வினைக்கும், தாய் - ஆன்மா எடுத்த உடலுக்கும், பலவா-ஏனைச் சீவராசிகட்கும் உவமை.

102. உருவு மிளமையு மொண்பொருளு முட்கு
மொருவழி நில்லாமை கண்டு—மொருவழி
ஒன்றேயு மில்லாதான் வாழ்க்கை யுடம்பிட்டு
நின்றுவீழ்ந் தக்க துடைத்து.

இ-ள். உருவும் - அழகும், இளமையும் - இளமைப்பருவமும், ஒள்-ஒண்மையுடைய, பொருளும் - செல்வமும், உட்கும்-மதிப்பினால் பிறர் அஞ்சுதலும், ஒருவழி - ஒரு தன்மையதாக, நில்லாமை - நிலைபெற்றிராமை, கண்டும்-நேரில் அறிந்திருந்தும், ஒருவழி-எவ்வழியிலேனும், ஒன்றேயும் - ஒரு நல்வினையாவதும், இல்லாதான் - செய்து வைத்திராதவன், வாழ்க்கை-வாழ்தல், உடம்பு - சரீரத்தை, இட்டு-அடைந்து, நின்று - சிலகாலமிருந்து, வீழ்ந்தக்கது - வீழ்ந்தன்மையை, உடைத்து-உடையது எ-று.

உட்கு-செல்வாக்கினாற் பிறந்த அச்சம். ஒருவழி நிற்றலாவது, ஒருவரிடமே எக்காலத்திலும் பொருந்தியிருத்தல். ஒருவழி ஒன்றேயும்-ஒப்பற்ற நற்கதிக்குப் பொருந்திய ஒரு நற்செய்கையாவது, என்ன உரைத்தலுமாம். இட்டு என்றதால் நற்கருமம் செய்யாது வீணே இருந்தமை பெறப்படும். வீழ்ம் - வீழும் என்பதன் இடை உகரம் கெட்டது. (2)

103. † வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
அளந்தன போக மவரவ ராற்றான்
விளங்காய் திரட்டினா ரில்லைக்—களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில்.

---

* 'பழமுதிர் சோலை மலைகிழ வோனே'—(திருமுருகு)

† புறத்திரட்டு - 402.

இ-ள். விளங்காய் - விளங்கனியை, திரட்டுவார் - உருண்டையாகத் திரட்டினவர், இல்லை- இல்லை, களங்கனியை-களவின்கனியை, காரெனை-கறுப்பாக், செய்தாரும்-அமைத்தவரும், இல்-இல்லை (அது போல்), வளம் - செல்வம் முதலிய வளமை, பட - அடைய, வேண்டாதார்-விரும்பாதார், யார்-யாருளர், யாரும்-எவரும், இல்லை-இல்லை, அவரவர்-அவரவர் செய்த, ஆற்றால் - பழவினையினால், போகம்-அவரவர்க்கு இன்ப நுகர்ச்சி, அளந்தன-அளவிடப்பட்டுள்ளன எ-று.

வளம் - செல்வம்; நிலையாமையாகிய ஏனைய இளமை நலனும், யாக்கை நலனும் கொள்க. யார் யாருமில்லை - உம்மை, எஞ்சாமைப் பொருளது; வினாவும் விடையுமாக வந்தது, வற்புறுத்தற் பொருட்டு. அளந்தன-பிறவினையாக வந்த தன்வினை. கார்-பண்பு. விளங்கனிக்கும் களங்கனிக்கும் உருவமும் நிறமும் இயற்கையால் அமைந்தன போல, ஒவ்வொருவரது இன்ப நுகர்ச்சியும் வினையாலமைந்தது என்க. உவம உருபின்றி வந்ததால் இஃது எடுத்துக்காட்டுவமையணி. இதில் தனிச்சொல் மூன்றாமடியில் வந்தது காண்க. (3)

104\. உறற்பால நீக்க லுறுவர்க்கு மாகா
பெறற்பா லனையவு மன்னவா மாரி
வறப்பிற் றருவாரு மில்லை யதனைச்
சிறப்பிற் றணிப்பாரு மில்.

இ-ள். மாரி-மேகம், வறப்பின் - வறட்சியுற்று மழை பெய்யாவிடின், தருவாரும் இல்லை - அம்மழையைப் பெய்யவைப்பாரும் இல்லை, சிறப்பின் - அது சிறந்து மிகப்பெய்தால், அதனை - அம்மழையை, தணிப்பாரும் இல்லை-குறைப்பவருமில்லை, (அதுபோல) உறல்பால - வினைப்பயனால் பொருந்தும் துன்பங்களை, நீக்கல்-போக்குதல், உறுவர்க்கும் -முனிவர்கட்கும், ஆகா - இயலா, பெறல்பால் அனையவும் - பெறுவதாகிய பகுதியுடைய நன்மை எல்லாம், அன்ன ஆம் - அத்தன்மையவே (குறைக்கலாகா) எ-று.

உறல்-தீமை உறுதல், இவ்விடைச்சொல் தீமைப் பொருளையே பெரும்பாலும் காட்டுவது; "உற்றுழி உதவியும்" (புறம்) என்றதும் காண்க. அனையவும் - உம்மை, எஞ்சாமைப் பொருளது. ஏனைய மூன்று உம்மையும் உயர்வு சிறப்பு. இது நேர்நிரல் நிறையணியாம்; உவமவுருபின்றி வந்ததால் எடுத்துக்காட்டுவமையணியுமாம். (4)

105\. இனைத்துணைய ராகித்தந் தேசுள் ளடக்கிப்
பனைத்துணையார் வைகலும் பாடழிந்து வாழ்வர்

நினைப்பக் கிடந்த தெவனுண்டா மேலை
வினைப்பய னல்லாற் பிற.

இ-ள். பனை துணையார்-இன்ப நுகர்ச்சியில் பனையின் அளவின் பெருமை உடையவர்கள், வைகலும்-நாள் அடைவில், பாடு அழிந்து-பெருமை கெட்டு, தினை துணையாகி - தினையின் அளவின் சிறுமை அடைந்தவராய், தேசு-தம் ஒளியை, உள் அடக்கி-தமக்குள் அடங்கச்செய்து, வாழ்வர் - உயிருடன் வாழ்வார்கள், (இது) மேலை - முற்பிறப்பிற் செய்த, வினைப்பயன அல்லால் - தீவினையின்பயனை அல்லாமல், நினைப்ப கிடந்தது - காரணம் கருதப் பொருந்தியது, பிற-வேறாக, எவன் உண்டாம்-யாது உளது (ஒன்றுமில்லை) எ-று.

இம்மி என்றதுபோல, பனை, தினை, அளவைக் குறித்தன; பனை பெருமைக்கும், தினை சிறுமைக்கும் வரும். தேசு-ஒளி, ஆவன: அழகு, உடல்வலி, ஆற்றல் செல்வாக்கு முதலியன. மேலை - முற்பிறப்பு, ஆகுபெயர்; ஐயீறு பெற்றது. பிற நினைப்பககிடந்தது எவன் என மாறுக. எவன் - வினா. இஃது இடை குறைந்தும், அகரச் சாரியை பெற்றும், என், என்ன, என வருதலுமுண்டு. (5)

106. * பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் வீயவுங்
கல்லாதார் வாழ்வ தறிதிரேற்—கல்லாதார்
சேதன மென்னுமச் சேறகத் தின்மையாற்
கோதென்று கொள்ளாதாங் கூற்று.

இ-ள். பல் ஆன்ற - பல துறையினும் விசாலித்த நூற்களின், கேள்விப்பயன் - கேள்வியால் அடைந்த கல்வியின் பயனை, உணர்வார்-உணர்ந்து அறிந்த கல்வியாளர், வீயவும்-விரைவில இறக்கவும், கல்லாதார் - அத்தகைய கல்வியில்லாதவர்கள், வாழ்வது-உயிருடன இருப்பதைப் பற்றி, அறிதிரேல் - காரணம் அறிந்தீர்களென்றால், அகத்து - அவரது மனதில், சேதனம் என்னும் - அறிவு என்கின்ற, சேறு - சத்துள்ள பொருள், இன்மையால் - இல்லாமையால், கோது என்று - சத்தற்ற சக்கை எனறு கருதி, கூற்று-கூற்றுவன், கொள்ளாது - எடுத்துக்கொண்டு செல்லமாட்டான் எ-று.

கல்வி பல துறையினவாதலின் பல்லான்ற என்றார், ஆன்ற-அகன்ற என்பதன் மரூஉ; ஈண்டுக் குறிப்புப்பெயர்; நூலைக்குறித்தது. 'கற்றலிற் கேட்டலே நன்று' என்பதால் செவியுணர்வால் உண்டாகிய கல்வியை உரைத்தார். வீயல்-இறத்தல், சேறு-சாரம்,

* புறத்திரட்டு - 520 'அறிதிரே'—என்றும் பாடம்.

சத்து. அஃதில்லாத பொருளை விரும்புவதில்லை யாதலின் கூற்றுவன் கொள்ளான் என்க. * "கோதென் றண்டிலள்" என்றதும் அது. கல்லாரை இயமன் விரும்பாமைக்குக் காரணம் கற்பித்தலின் இஃது ஏதுத் தற்குறிப்பேற்ற வணியாம். (6)

107. இடும்பைகூர் நெஞ்சத்தா ரெல்லாருங் காண
நெடுங்கடை நின்றுழல்வ தெல்லா—மடம்பம்பூ
அன்னங் கிழிக்கு மலைகடற் றண்சேர்ப்ப
முன்னை வினையாய் விடும்.

இ-ள். அடம்பம் - அடம்பினுடைய, பூ - பூக்களை, அன்னம்- அன்னங்கள், கிழிக்கும் - கிழித்துவிளையாடும், அலை - அலைகள் பொருந்திய, தண் - குளிர்ந்த, கடல் - சமுத்திரத்தின், சேர்ப்ப - கரையையுடைய அரசனே, இடும்பை-வறுமைத்துன்பம், கூர்-மிக்க, நெஞ்சத்தார்-மனமுடையார், எல்லாரும்-யாவரும், காண - பார்த்து இகழும்படி, நெடும்கடை - பிறருடைய பெரிய வீடுகளின்முன், உழல்வது-வருந்தித் திரிவது, எல்லாம் - யாவும், முன்னை-முற்பிறப் பிற் செய்த, வினையாய்விடும்-தீவினைப்பயனும் விளையும் எ-று.

இடும்பை - வறுமையால் உண்டான துன்பம். இரத்தலின், பிறர் காணுதல் இகழ்ச்சி எனப்பட்டது. அடம்பு-ஒருவகைச் செடி, அம் சாரியை; இது நெய்தனிலத்தது. சேர்ப்ப-ஆடூஉ முன்னிலை. முன்னை - முற்பிறப்பு; ஆகுபெயர். முன் † பனைத்துணையாரும் பாடழிந்து கெடுவார் என உரைத்து, இப்பாட்டில் பிறவிமுதல் இரவலராயிருத்தலும் வினைவசத்தான் என்று விளக்கினர். (7)

108. அறியாரு மல்ல ரறிவ தறிந்தும்
பழியோடு பட்டவை செய்தல்—வளியோடி
நெய்த னறவுயிர்க்கு நீள்கடற் றண்சேர்ப்ப
செய்த வினையான் வரும்.

இ-ள். வளியோடி-காற்று வீசுவதனால் (அசைந்து), நெய்தல்- நெய்தற்பூக்கள், நறவு-தேனை, உயிர்க்கும்-சொரிகின்ற, நீள்-நீண்ட, தண்-குளிர்ந்த, கடல் - சமுத்திரத்தின், சேர்ப்ப - கரையையுடைய அரசனே, அறியாரும் - சிலர் விடயங்களை அறியாதவர்களும், அல் லர்-அல்லர், அறிவது - அறிதற்குரிய நூல்களின்பலனை, அறிந்தும்- அறிந்திருந்தும், பழியோடு-உலக நிந்தனையுடன், பட்டவை-பொருந் தியவற்றை, செய்தல்-சிலர் செய்வது, செய்த-அவர்கள் முன்செய்த, வினையால் - தீவினைப்பயனால், வரும் - விளைவதாகும் எ-று.

---
* கம்ப - பால - வேள்வி - 35. † நாலடி - 105.

கற்றுணர்ந்தோரும் பழிபட ஒழுகுதல் அவரது தீவினைப்பயன் என்றவாறு. அறியார், அல்லர் - வினையாலணைந்த பெயர்கள்; முன்னது தெரிநிலை, பின்னது குறிப்பு. அறிந்தும் - உம்மை உயர்வு சிறப்பு. ஓடி-ஓட, எச்சத்திரிபு, காரணப்பொருளது; இனிக் காற்றுச்சென்று நறவை (மணத்தை) வீசச்செய்யும் என்றும் உரைப்பர். நெய்தல்-பூவிசேடம். சேர்ப்ப-ஆடூஉ முன்னிலை. (8)

109. * ஈண்டுநீர் வையத்து ளெல்லாரு மெத்துணையும்
வேண்டார்மற் றீய விழைபய னல்லவை
வேண்டினும் வேண்டா விடினு முறற்பால
தீண்டா விடுத லரிது.

இ-ள். ஈண்டுநீர் - நெருங்கிய கடல்சூழ்ந்த, வையத்துள் - உலகில், எல்லாரும் - யாவரும், தீய-தீயனவாகிய துன்பங்களை, எத்துணையும்-எவ்வளவு சிறிதாகவேனும், வேண்டார்-விரும்பமாட்டார், விழை-யாவரும் விரும்புகின்ற, பயன் - நுகர்ச்சி, நல்லவை - நல்லனவாகிய இன்பங்களை (எனினும்,) வேண்டினும்-யாவரும் விரும்பினாலும், வேண்டா விடினும் - விரும்பாமல் வெறுத்தாலும், உறல்பால-வினையின்பயனால் பொருந்தற்குரிய இன்பதுன்பங்கள், தீண்டா-அவரவரை அடையாமல், விடுதல் - விட்டு விலகுதல், அரிது - அருமையாம் எ-று.

ஈண்டுநீர்-வினைத்தொகை; ஆகுபெயர். எல்லாரும்-உம்மை எஞ்சாமைப்பொருளது. எத்துணையும் - உம்மை, இழிவு சிறப்பு. மன்-அசைநிலை. உறுதல்-தீமை உறுதல். இன்ப துன்பங்களின் மிகுதியாகத் துன்பமே மனிதர் அடைதலாதலின் 'உறற்பால' என்றார். தீண்டும் - அரவம் கடித்தல்போல் தீண்டும் என்ற பொருளும் தொனிப்பது காண்க. அரிது - † இன்மைப் பொருளது. (9)

110. ‡ சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா
உறுகாலத் தூற்றுகா வாமிடத்தே யாகுஞ்
சிறுகாலைப் பட்ட பொறியு மதனா
லிறுகாலத் தென்னை பரிவு.

இ-ள். சிறுகாலை - கருவில் பொருந்திய அக்காலத்திலேயே, பட்ட-உடலுடன் உண்டாகிய, பொறியும் - வினையும், சிறுகா-பயன் விளைத்தலில் குறையமாட்டா, பெருகா-அதிகரிக்கவு மாட்டா, முறை

* புறத்திரட்டு - 464. † குறள் - 7. (பரிமே - உரை)
‡ புறத்திரட்டு - 463.

பிறழ்ந்து - முற்பிறப்பிற் செய்தவற்றின் வரிசையும் முன்பின் மாறி, வாரா-வரமாட்டா, உறுகாலத்து-துன்பம் பொருந்தும் சமயங்களில், ஊற்று - ஊன்றுகோல்போல உதவி, ஆகா - அத் துன்பத்தைத் துடைக்கமாட்டா, ஆம் இடத்தே - நன்மையாகும் சமயத்திலேயே, ஆகும் - தவறாமல் அமையும், அதனால் - ஆகையால், இறு காலத்து- தீவினையினால் கெடுதி அடைகின்ற சமயத்தில், பரிவு என்னை-இரங்குவது எதற்காக எ-று.

கருவிலே உருவமையும்போதே வினையுமுடன் அமையும் என்பது கொள்கையாதலின் சிறுகாலை என்றதற்கு அப்பொருள் கொள்ளப்பட்டது. "கருவிலே திருவுடையார்" என வழங்குதலு மறிக. சிறுகா, பெருகா என்றதனால் இருவினையும் கொள்க.

முன்னை வினைகளின் தொடர்ச்சியின்படியே நுகர்ச்சியாதலின், அவை பிறழ்வதின்று எனக்காட்ட 'முறை பிறழா' என்றார். உறுதல்-தீமையை. "உறற்பால" * என்றதுபோல, ஊற்று-ஊன்றுகோல்; விகாரம், ஈண்டு உவம ஆகுபெயர்; மூப்பில் உதவும் ஊன்றுகோல் போல் என்க. தீவினைப்பயன் துய்க்கும்போது நல்வினைப்பயன் இடையிட்டு அத்தீப்பயனை மாற்றாதோ என்னும் ஐயம் விலக்க ஊற்றாகா என்றும், நல்வினையும் தனியே நுகரப்படும் என்றற்கு ஆமிடத்தே ஆகும் என்றும் உரைத்தார். (10)

பழவினை முற்றிற்று.

## 12-ஆம் அதிகாரம். மெய்ம்மை

அஃதாவது உண்மையை உணர்தல். உண்மையாவது, பொருள்களின் இயற்கையான குணம். இது பழவினையால் அமைவதாதலின், அதன்பின் வைக்கப்பட்டது.

111. † இசையா வொருபொரு ளில்லென்றல் யார்க்கும்
வசையன்று வையத் தியற்கை—நசையழுங்க
நின்றோடிப் பொய்த்த னிரைதொடீஇ செய்ந்நன்றி
கொன்றாரிற் குற்ற முடைத்து.

இ-ள். நிரை-ஒழுங்காக அமைந்த, தொடீஇ-வளையலை யுடையவளே, இசையா ஒருபொருள் - தம்மாற் கொடுக்க இயலாத ஒரு பொருளை, இல் என்றல் - இரப்பார்க்கு இல்லை என (இரந்த அப்

* நாலடி - 104. † புறத்திரட்டு—240.

பொழுதே) உரைத்தல், யார்க்கும் வசையன்று - எவர்க்கும் பழிப்பு ஆகாது, வையத்து இயற்கை-அதே உலகத்தார் இயல்பாகும், நசை அழுங்க-இரப்பவன் ஆசை கெடும்படி, நின்று - கொடுப்பதாக முன் நின்று, ஓடி - நெடுங்காலம் கழித்து, பொய்த்தல் - இல்லை என்று மறுத்தல், செய்நன்றி-ஒருவர் செய்த உபகாரத்தை, கொன்றாரின்-மறந்துவிட்டவரது குற்றத்தைவிட, குற்றம் உடைத்து - மிகுந்த குற்றத்தை யுடையது எ-று.

ஆசைகாட்டி மோசஞ்செய்தல் பெருங்குற்றம் என்றபடி. இசையாப்பொருள் - கொடுக்க இயலாதவை. நசையழுங்க ஓடி என்க. ஓடுதல் - காலம் தாழ்த்தல். பொய்த்தல்-தவறுதல், "விண்ணின்று பொய்ப்பின்" * என்றதுபோல். நிரை தொடீஇ - தொடி, ஆபரண வகை, அதனை அணிந்தவள் என அன்மொழித்தொகை; அளபெடுத்தது விளி. இது பெண்ணை முன்னிலையாக்கியதால், மகடூஉ முன்னிலையாம். "உய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு" † என்றதனால் மிகக் கொடிய அக்குற்றத்தினும் கொடியது, கொடுப்பதாகச் சொல்லிப் பொய்த்தல் ‡ என்க. கொன்றாரினும் எனச் சிறப்பும்மை தொகுத்தல். (1)

112\. தக்காருந் தக்கவ ரல்லாருந் தந்நீர்மை
எக்காலுங் குன்ற லிலராவ—ரக்காரம்
யாவரே தின்னினுங் கையாதாங் கைக்குமாந்
தேவரே தின்னினும் வேம்பு.

இ-ள். யாவர்-எவர், தின்னினும்-தின்றாலும், அக்காரம்-கருப்பஞ்சாற்றுக்கட்டி, கையாது - கசக்காது, வேம்பு - வேப்பங்காய், தேவர்-தேவர்கள், தின்னினும் - தின்றாலும், கைக்கும் - கசக்கும், (அதுபோல) தக்காரும் - தகுதியுடைய பெரியோரும், தக்கவரல்லாரும் - தகுதியற்ற சிறியோரும், தம்-தமது, நீர்மை - குணங்களில், எக்காலும்-எந்நாளும், குன்றல் - குறைதல், இலராவர் - இல்லாதவராவர் எ-று.

தக்கார் - குறிப்பு வினையாலணைந்த பெயர்; அறிவு ஒழுக்கங்களால் தகுதி உடையவர் என்க. நீர்மை - இயற்கைக்குணம். அக்

* குறள் - 13. † குறள் - 110.

‡ "இசைவ கொடுப்பதூஉ மில்லென் பதூஉம்
வசையன்று வையத் தியற்கையே தன்றிப்
பசைகொண் டவனிற் பாத்துண்ணா தொழியின்
நசைகொன்றான் செல்லுலக மில்" (பழமொழி)என்பதும் ஒப்பிடுக.

காரம்-இனிப்புத்தரும் பண்டத்திற்கு இலக்கணை. அஃது யாவர்க்கும் இனிப்பைத்தரும்; வேம்போ, தேவர்க்கும் கசப்புத்தரும் என்க. இவை முறையே தக்கார்க்கும், அல்லார்க்கும் உவமை. உவம வாசகமின்றி வந்ததால், இஃது எடுத்துக்காட்டுவமையணி. உம்மை, சிறப்பு; முன்னது இழிவு, பின்னது உயர்வு. (2)

113. * காலாடு போழ்திற் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலராவர்—ஏலா
இடரொருவ னுற்றக்கா லீர்ங்குன்ற நாட
தொடர்புடையே மென்பார் சிலர்.

இ-ள். ஈர்ங்குன்ற - குளிர்ந்தமலைகள் அடுத்த, நாட - நாட்டையுடைய அரசனே, ஒருவர்-ஒருவர், காலாடுபோழ்தில்-(செல்வத்தால் சாயகால் உண்டாகிய காலத்து, கழி - மிகுந்த, கிளைஞர் - உறவினர், வானத்து - ஆகாயத்தில், மேலாடு-உயரச் சஞ்சரிக்கும, மீனில்-நட்சத்திரங்களைவிட, பலர் ஆவார் - அநேகராவார், ஒருவர்-அவ்வொருவரே, ஏலா-பொறுக்க இயலாத, இடர் - துன்பங்களை, உற்றக்கால்-அடைந்தால், தொடர்பு உடையேயாம் - அவருடன் உறவை உடையவர்களாவோம், என்பார் - என்று சொல்லுபவர்கள், சிலர் - வெகு சிலரே எ-று.

செல்வமுண்டானபொழுது பலரும் நெருங்குவதும், அது நீங்கும்போது அவரும் நீங்குவதுமான உலக இயற்கையைக் கூறினார். காலாடுதல் - 'சாயகால்', 'செலவாக்கு' என்பனபோல, செல்வத்தினால் உண்டாகும் ஆள்வினையைக் குறிக்கும்; இலக்கணை. மீனின்-ஐந்தனுருபு, ஒப்புப்பொருளது. உவமையணி. ஏலா - பொறுக்க இயலாத; ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். நாட, ஆடூஉ முன்னிலை. கிளை-உறவினர்க்கு உவமஆகுபெயர். (3)

114. † வடுவிலா வையத்து மன்னிய மூன்றி
னடுவண தெய்த விருதலையு மெய்து
நடுவண தெய்தாதா னெய்தும் உலைப்பெய்
தடுவது போலுந் துயர்.

இ-ள். வடுவிலா-குற்றமில்லாத, வையத்து-பூமியில், மன்னிய-நிலைபெற்ற, மூன்றில்-(அறம் பொருள் இன்பமென்னு) மூன்றனுள், நடுவணது - நடுவிற் குறித்த பொருள், எய்த - ஒருவன் அடைய, இருதலையும்-அதற்கு முன்னும பின்னும் குறித்த அறமும் காமமும், எய்தும் - அடைவான், நடுவணது - அப்பொருளை, எய்தாதான் -

* புறத்திரட்டு - 1168. † புறத்திரட்டு - 879.

அடையாதவன், உலை-கொல்லன் உலையில், பெய்து-இட்டு, அடுவது போலும் - காய்ச்சப்படுதலை ஒக்கும், துயர் - துன்பத்தை, எய்தும்- அடைவான் எ-று.

மன்னிய - நிலைபெற்ற, உயிர்க்குறுதி தருவன (புருடார்த்தங்கள்) ஆதலின். அவை, வீடு நீங்க ஏனை அறம், பொருள், இன்பம் என்பன. நடுவணது-இடைநின்றது; பொருள். பொருளைக்கொண்டு, அறம் செய்தலும், பின்னர் இன்பம் எய்தலும் கூடுமாதலின், * இருதலையும் எய்தும் என்றார். இருதலை - முன்னும் பின்னுமாகியவை. வடுவிலா என்றதனால் பொருளும் வடுவின்றி ஈட்டுதல் வேண்டுமென்பது தொனித்தல் காண்க. இஃது உவமையணி. எய்தாதான் துயர் எய்தும் என்க. அடுதல்-காய்ச்சுதல். (4)

115. † நல்லாவின் கன்றாயி னாகும் விலைபெறூஉங்
கல்லாரே யாயினுஞ் செல்வர்வாய்ச் சொற்செல்லும்
புல்லீரப் போழ்தி னுழவேபோன் மீதாடிச்
செல்லாவா நல்கூர்ந்தார் சொல்.

இ-ள். நல் ஆவின்-நல்ல சாதிப்பசுவின், கன்று ஆயின்-கன்றாக இருப்பின், நாகும்-இளம் கன்றும், விலை பெறூஉம் - மிக்க விலையை அடையும், (அதுபோல) கல்லாரே ஆயினும்-படியாதவர்களா யிருந்தாலும், செல்வர் - பொருளுடையார்களது, வாய் சொல்-வாயினின்றும் பிறக்கும் சொற்கள், செல்லும் - தகுதியற்றனவா யிருப்பினும் அனைவரும் ஒப்புமாறு நடக்கும், நல் கூர்ந்தார் - கற்றறிந்திருந்தும் வறுமையுடையவர், சொல் - மொழிகள், புல்-மிகக் குறைந்த, ஈரம் போழ்தின் - ஈரத்தையுடைய காலத்தில், உழவே போல் - நிலத்தை உழுதல்போல, மீது ஆடி - மேலளவில் பரந்து, செல்லாவாம் - பயனற்று நடை பெறமாட்டாவாம எ-று.

பசுவின் இளங்கன்று உடனே பயன்தராவிடினும் விலையில் உயர்ந்தது, அதுபோல, நற்பலன்தராவிடினும் செல்வர் சொல்லுக்கு மதிப்பு அதிகம் என்றும், ஈரம சிறிதிருந்தபோதிலும் நிலத்தை உழுவதால் பயனடையாமைபோல, அறவு பொதிந்த சொற்களா யிருப்பினும, வறிஞர்மொழி செல்லா என்றும் கொள்க. எடுத்துக் காட்டுவமையணி. செல்லுதல் - மதிப்புப்படல. புல ஈரம்-சிறிதளவு

* அறநெறியெல்லாம், பொருளிற் பிறந்துவிடும்.—(நான்மணி-5)

அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.—குறள் - 754.

† புறத்திரட்டு - 1169.

ஈரம் உடைமை; அப்பொழுது உழுவதால் ஆழமாக ஊன்றுவதில்லை என்க. மீதாடிச் செல்லா - நிலத்துக்காயின், கலப்பை மேலெழுந்த வாறாக ஆழமாக இறங்காமை என்றும், வறிஞர்க்காயின், பிறர் அவர் மொழியை உள்ளத்திற் கொள்ளாது புறக்கணித்து விடுதல் என்றும் சிலேடைப்பொருள் கொள்க. (5)

116. * இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினு மென்று
மடங்காதா ரென்று மடங்கார்—தடங்கண்ணா
யுப்பொடு நெய்பா றயிர்காயம் பெய்தடினுங்
கைப்பறா பேய்ச்சுரையின் காய்.

இ-ள். தடங்கண்ணாய்-விசாலமான கண்களையுடையவளே, உப்பொடு - உப்புடன், நெய்-நெய்யும், பால் - பாலும், தயிர் - தயிரும், காயம்-பெருங்காயமும், பெய்து-தனித்தனி இட்டு, பேய்ச்சுரையின் காய் - பேய்ச்சுரைக்காய்களை, அடினும் - சமைத்தாலும், கைப்பறா-தம் இயற்கையான கசப்பினின்றும் நீங்கா, (அதுபோல) மெய்ஞ்ஞானம் - உண்மை அறிவுணர்த்தும் நூற்களை, என்றும்-எந்நாளும், இடம்பட-விரிவாக, கற்பினும்-கற்றாலும், அடங்காதார்-இயற்கையில் மன அடக்கமில்லாதவர்கள், என்றும-எந்நாளும், அடங்கார்-அடங்க மாட்டார் எ-று.

மெய்ஞ்ஞானம் - உண்மையறிவு. தத்துவ சாத்திரமென்றுங் கூறுப. ஞானம், அதனை உணர்த்தும் நூல; காரிய ஆகுபெயர். கற்பினும் - கற்றல் பெரும்பாலும் இல்லை என்பது குறிப்பு; உம்மை, உயர்வு சிறப்பு. என்றும் கற்பினும் என்க. அடங்காதார் - தெரிநிலை வினைப்பெயர். அடக்கம்-மனமொழி மெய்களினது. கண்ணாய்-விளி; மகடூஉ முன்னிலை. ஒடு-உம்மைப்பொருளது. அறா-என்ற பன்மை நோக்கி, காய் பன்மையாகக் கொள்ளப்பட்டது. இதுவும் எடுத்துக் காட்டுவமையணி. (6)

117. † தம்மை யிகழ்வாரைத் தாமவரின் முன்னிகழ்க
என்னை யவரொடு பட்டது—புன்னை
விறற்பூங் கமழ்கானல் வீங்குநீர்ச் சேர்ப்ப
உறற்பால யார்க்கு முறும்.

இ-ள். விறல்-வலிமை உடைய, புன்னைபூ கமழ்-புன்னைமலர்கள் மணம் வீசுகின்ற, கானல்-சோலைகள் கூடிய, வீங்குநீர்-பெருகுகின்ற கடலின், சேர்ப்ப-கரையினையுடைய அரசனே, தம்மை இகழ்வாரை-

* புறத்திரட்டு - 992. † புறத்திரட்டு - 1097.

தம்மைக் காரணமின்றிப் பழிப்பவர்களை, தாம் அவரின்முன்-தாமே அவர் பழித்தற்கு முன்னதாகவே, இகழ்க - அவரை நிந்திக்க, அவரோடு - அவ்வா றிகழாமையால் அவர்களோடு, பட்டது என்னை-பொருந்தியது யாதோ, உறற்பால-தீமை நிகழ்வன, யார்க்கும்-எல்லோர்க்கும், உறும்-வினைமுற்றிய காலத்தில் நேரிடும் எ-று.

காரணமின்றி இகழ்பவனை எதிர்த்து அவனையே நிந்தித்தாலவனும் அடங்குவான் என்பது கருத்து. இதனால் சிறியோரை அடக்கும் முறை உரைத்தவாறு. அவரின் முன் - அவர் நிந்திக்கத் தொடங்குமுன்; இனி, அவராது இல்லத்தின் முன்னர் என்று உரைப்பதுமாம். அங்ஙனம் இகழ்வதால் தீவினை உண்டாம் எனின், அதுதானும் வினையால் நிகழ்வதென உறற்பால உறும் என்றார். விறற்புன்னை என்க. விறலாவது, தன் மணத்தினால், கடலின் புலால் நாற்றத்தையும் போக்குகின்ற வன்மை. சேர்ப்ப, ஆடூஉ முன்னிலை. (7)

118\. * ஆவே றுருவின வாயினு மாபயந்த
பால்வே றுருவின வல்லவாம்—பால்போ
லொருதன்மைத் தாகு மறநெறி யாபோ
லுருவு பலகொள வீங்கு.

இ-ள். ஆ - பசுக்கள், வேறு - வெவ்வேறு, உருவினவாயினும்-நிறத்தை யுடையனவாயினும், ஆ - அப்பசுக்கள், பயந்த-கொடுத்த, பால் - பாலெல்லாம், வேறு உருவின - வெண்மை நிறமன்றி வேறு வேறு நிறத்தையுடையன, அல்லவாம் - அல்லனவாம், பால்போல்-அப் பாலின் நிறம்போல, அறம்-அறத்தின்பயன், ஒருதன்மைத்து-ஒரு தன்மையை யுடையதாய், ஆகும் - பொருந்தும், ஆபோல்-அப் பசுக்கள்போல, ஈங்கு - இவ்வுலகில், நெறி-அவ் அறத்தைச்செய்யும் வழிகள், பல - பல, உருவு - உருவங்களை, கொளல் - கொள்ளத் தகும் எ-று.

எந்நிறத்தையுடைய பசுவும், வெண்ணிறத்துப் பாலையே தரும், அதுபோல் எவ்வகையால் தருமஞ் செய்தாலும், அதன்பயன ஒரு தன்மையதே என்க. உவமையணி. உரு - உருவம், நிறம் எனப் பொருள்படும் சொல். பசுக்கள் பல என்பது கருதி, பாலும் பன்மை வினையேற்றது. தன்மைத்து - குறிப்பு வினைமுற்று. அறம் ஆகும், நெறிகொளல் என்க. கொளல்-வியங்கோள். நெறிகளாவன-தானம், தவம், விரதம், கடவுள் குரவர் வழிபாடு முதலியன. (8)

* புறத்திரட்டு - 435.

119. யாஅ ருலகத்தோர் சொல்லில்லார் தேருங்கால்
யாஅ ருபாயத்தின் வாழாதார்—யாஅ
ரிடையாக வின்னாத தெய்தாதார் யாஅர்
கடைபோகச் செல்வமுய்த் தார்.

இ-ள். தேருங்கால் - ஆராயுமிடத்து, உலகத்து - உலகில், ஓர் சொல் - ஓரிகழ்ச்சிச் சொல்லேனும், இல்லார் - அடையப்பெறாதவர், யாஅர் - யாவர்தாம், உபாயத்தின் - நால்வகைத் தந்திரத்தாலும், வாழாதார் - வாழ்க்கையை நடத்தாதவர், யாஅர் - யாவர்தாம், இடையாக - தம் ஆயுளின் இடைக்காலத்தில், இன்னாதது - துன்பத்தை, எய்தாதார் - அடையாதவர், யாஅர் - யாவர்தாம், கடைபோக - வாழ்நாளின் முடிவளவும், செல்வம் - செல்வத்தை, உய்த்தார்-நுகர்ந்தவர், யாஅர்-யார்தாம் (ஒருவருமில்லை) எ-று.

உலகிற் பிறந்தோர் நிந்தைக்கும், துன்பத்துக்கும், தந்திரமாகிய வாழ்க்கைக்கும் உட்பட்டவர்; இவை யாவும் வினைப்பயன் என்பதாம். ஓர் சொல் - நிந்தைமொழி; புகழ் என்று பொருள் கொள்வது சிறப்பின்று. உலகத்து, தேருங்கால்-முன்னும் பின்னும் கூட்டுக; விளக்கணி. இல்லார் முதலியன வினையாலணைந்த பெயர். உபாயம்: சாம, பேத, தான, தண்டம் என்பன. எந்நாளும் இன்பமும், செல்வமும் நுகர்ந்தவரில்லை என்றற்கு இன்னாத தெய்தாதார், செல்வமுய்த் தார் என்றார். யாஅர்-இசைநிறை யளபு. (9)

120. * தாஞ்செய் வினையல்லாற் றம்மொடு செல்வதுமற்
றியாங்கணுந் தேரிற் பிறிதில்லை—யாங்குத்தாம்
போற்றிப் புனைந்த வுடம்பும் பயமின்றே
கூற்றங்கொண் டோடும் பொழுது.

இ-ள். யாங்கண் தேரினும் - எவ்வகையால் ஆராய்ந்து பார்த்தாலும், தம்மொடு செல்வது-அவரவர் இறந்தபின் அவர்களது உயிருடன் செல்வது, தாம் செய் - அவரவர் செய்த, வினை அல்லால்-நற்செய்கை தீச்செய்கை அல்லது, மற்று யாங்கணும் - எவ்வகையினும், பிறிது-வேறொன்று, இல்லை-உடன் செல்வதில்லை, (எனவே) கூற்றம்- இயமன், கொண்டு ஓடும்பொழுது - அவ்வுயிரைப் பற்றிக்கொண்டு விரைந்து செல்லும்போது, ஆங்கு தாம் போற்றி - அவ்வகையாக அவரவர் பாதுகாத்து, புனைந்த-ஆணியாதியால் அலங்கரித்த, உடம்பும்-உடலும், பயம் இன்றே-ஒரு பயனும் இல்லாததேயாம் எ-று.

* புறத்திரட்டு - 36.

ஆகையால் நல்வினையே இயற்றுமின் என்பது கருத்து. வினை-இருவினையும் கொள்க. யாங்கண் தேரினும் என மாற்றுக. தாம் என்றது - உடல் பிரிந்த உயிரினை. அதற்குத்துணை * யறமன்றிப் பிறிதின்று என்க. ஆங்கு - அசை. போற்றுதல், நோய் முதலிய அணுகாவண்ணம். புனைதல், மாலை, அணி, உடைகளாலும், உணவாதிகளாலும். ஏகாரம், தேற்றத்தோடிரக்கம். (10)

மெய்ம்மை முற்றிற்று.

---

## 13-ஆம் அதிகாரம். தீவினையச்சம்

அஃதாவது தீவினைக்கு அஞ்சுதல். உலகின் உண்மைப்பொருள்களின் தன்மை உணர்ந்த பின்னர், நன்மை தீமை உணர்ந்து தீயவற்றை அஞ்சி நீக்கலாகும். ஆதலின், இது "மெய்ம்மைக்கு"ப் பின் வந்துளது.

121. † துக்கத்துட் டூங்கித் துறவின்கட் சேர்கலா
மக்கட் பிணத்த சுடுகாடு—தொக்க
விலங்கிற்கும் புள்ளிற்குங் காடே புலங்கெட்ட
புல்லறி வாளர் வயிறு.

இ-ள். சுடுகாடு - மயானங்கள், துக்கத்துள்-துன்பமாகிய இல்வாழ்க்கையில், தூங்கி-மயங்கி, துறவின்கண் - துறவறத்திலே, சேர்கலா - சேர்ந்தொழுகாத, மக்கள் - மக்களின், பிணத்த - பிணங்களை யுடையன, புலன்கெட்ட - நல் அறிவுகெட்டு, புல்லறிவாளர் - அற்ப அறிவே உடையவருடைய, வயிறு - வயிறுகள், தொக்க - தொகுதியான, விலங்கிற்கும் - மிருகங்களுக்கும், புள்ளிற்கும்-பறவைகளுக்கும், காடு-உரிய இடுகாடுகளாவன எ-று.

இது புலால் மறுத்தல். துக்கம், அதற்குக் காரணமாகிய இல்வாழ்க்கை, தூங்குதல்-இன்பத்தில் மயங்கிக் கிடத்தல். துறவறத்திற் செல்லின் பாசம் ஒழியும் என்பது தொனி. துறவிகள் உடலைச் சேமித்துச் சமாதிசெய்தலும், ஏனையோர் உடலை எரித்தலும் மரபாதலின், சுடுகாடெனக் கூறினார். பிணத்த - பிணத்தை உடையன;

---

* "ஈட்டிய வொண்பொருளு மில்லொழியுஞ் சுற்றத்தார்
காட்டொடு நேரே கழிந்தொழிவர்—மூட்டு
மெரியி னுடம்பொழியு மீர்ங்குன்ற நாட
தெரியி னறமே துணை."—(அறநெறிச்சாரம்)

† புறத்திரட்டு - 261.

குறிப்பு வினைமுற்று. விலங்கும் புள்ளும் மிகுதியா யுண்ணப்படுத லின் தொக்க என்றார். தொகுதி-கூட்டம். அவை புசிக்கப்படுதலின் அவை இடப்பட்டகாடு என்க. புலம் - நன்மை செய்யப்புகுத்தும் அறிவு. அஃதில்லாவிடினும் புன்மையாகிய புலாலுண்டலையும் விலக் காமை கருதி, புலம்கெட்ட புல்லறிவாளர் என்றார். சுடுகாடு, மனிதர் வயிறு - இவ் இரண்டனுள் ஒன்றன் இழிபு கூறுதலின் இது வேற்றுமையணி. (1)

122. இரும்பார்க்குங் காலரா யேதிலார்க் காளாய்க்
கரும்பார் கழனியுட் சேர்வர்—சுரும்பார்க்குங்
காட்டுளாய் வாழுஞ் சிவலுங் குறும்பூழுங்
கூட்டுளாய்க் கொண்டுவைப் பார்.

இ-ள். சுரும்பு-வண்டுகள், ஆர்க்கும் - ஒலிக்கும், காட்டுளாய்-காட்டிற் பொருந்தி, வாழும் - வாழுகின்ற, சிவலும்-கவுதாரியையும், குறும்பூழும்-காடையையும், கூட்டுளாய் - கூட்டினுள்ளே, கொண்டு வைப்பார் - கொண்டடைத்து வைப்பவர்கள், இரும்பு - இரும்பினு லாகிய விலங்கு, ஆர்க்கும்-பூட்டிய, காலராய்-கால்களை யுடையவராய், ஏதிலார்க்கு-அயலாருக்கு, ஆளாய் - அடிமையாய், கரும்பு ஆர்-கரும்புகள் நிறைந்த, கழனியுள் - வயலிடத்தில், சேர்வர் - இழிதொழில் புரிய மறுபிறப்பில் அடைவார்கள் எ-று.

காட்டுள் வாழ்தல் - தம் இச்சையில் திரிந்துவாழ்தல். சிவல், குறும்பூழ் - புள்வகை; ஏனைப் புட்களுக்கும் உபலக்ஷணம். வைத்தல்-காவற்படுத்தல். இரும்பு, தளை; ஆகுபெயர். ஆர்த்தல், இறுகுதல், ஒலித்தலுமாம். காலர் - குறிப்பு வினைப்பெயர். ஏதிலார்-அயலார், பகைவருமாம். ஆளாதல் - அடிமைப்படுதல். அடிமைகளைக் காலில் தளையிட்டு விளைநிலத்தில் உழைக்கச்செய்தல் பண்டை வழக்கம். கரும்பு, நிலத்தின் செழுமையைக் குறித்தது. இதனால் புட்களைக் கூட்டிலடைத்தல் கூடாது * என்றபடி. (1)

123. † அக்கேபோ லங்கை யொழிய விரலழுகித்
துக்கத் தொழுநோ யெழுபவே—யக்கா

---

* "பூவைகிளி தோகைபுண ரன்னமொடு பன்மா
யாவையவை தங்கிளையி னீங்கியழ வாங்கிக்
காவல்செய்து வைத்தவர்கள் தங்கிளையி னீங்கப்
போவர்புகழ் நம்பியிது பொற்பிலது கண்டாய்."—(சிந்தா)

† புறத்திரட்டு - 262.

லலவனைக் காதலித்துக் கான்முரித்துத் தின்ற
பழவினை வந்தடைந்தக் கால்.

இ-ள். அக்கால் - முற்பிறப்பில், அலவனை - நண்டுகளை, காதலித்து - இச்சித்து, கான்முரித்து - அவற்றின் கால்களை முரித்து, தின்ற - உண்டதனால் விளைந்த, பழவினை - பழைய வினை, வந்தடைந்தக்கால் - பிற்பிறப்பின் வந்து சேர்ந்தால், அங்கை - அகங்கை, ஒழிய-தவிர, விரல்-விரல்கள், அழுகி-அழுகிப்போய், அக்கேபோல்-சங்குமணியைப்போல் வெளுத்து, துன்பம்-துயரத்தை விளைக்கும், தொழுநோய்-குஷ்டமென்னும் நோயினால், எழுப-உண்டாகப் பெறுவார்கள் எ-று.

இதுவும் புலால் மறுத்தல். அக்கேபோல்: நிறம்பற்றிய உவமம். அகம் கை என்க. துக்கத்தைத்தரும் தொழுவாகிய நோய் என விரிக்க. நோய் எழுப - நோய் எழப்பெறுவர்; செயப்பாட்டுவினை; இனி, திணைவழுவென்பதுமாம். அக்கால்-காலம் என்பதன் ஈற்றும் தொகுத்தல். அலவன்-நண்டு, ஏனைய உண்ணப் படுவனவற்றுக்கும் உபலக்ஷணம். தின்ற - காரணப் பொருளின் வந்த பெயரெச்சம். அடைந்தக்கால், வினையெச்சம். அலவன்கால் முரித்தது போல், இவரது விரல்கள் முரிக்கப்பெற்றுக் குட்டநோயுறுவரென்க.

124. * நெருப்பழற் சேர்ந்தக்கா னெய்போல் வதூஉ
மெரிப்பச்சுட் டெவ்வநோ யாக்கும்—பரப்பக்
கொடுவினைய ராகுவர் கோடாருங் கோடிக்
கடுவினைய ராகியார்ச் சார்ந்து.

இ-ள். நெய் போல் வதூஉம்-நெய்யும், நெருப்பு அழல்-நெருப்பின் வெம்மையை, சேர்ந்தக்கால் - அடைந்து கூடேறினால், எரிப்பச் சுட்டு - அதனை உண்டவர் உடலை வேகும்படிக் கொளுத்தி, எவ்வம் நோய் - துன்பத்தைத்தரும் நோயை, ஆக்கும்-உண்டாக்கும், (அது போல) கோடாரும் - நடுவு நிலைமையில் மாறாதவரும், கடுவினையர் ஆகியார் - மிகக் கொடிய செய்கையைச் செய்துள்ளவரை, சார்ந்து - சேர்ந்து பழகி, கோடி-தம் நடுநிலைமை தவறி, பரப்ப-மிகுந்த, கொடு வினையர் ஆகுவர்-கொடிய தீச்செயல் புரிபவராய் விடுவர் எ-று.

இது தீநட்பின் தீமை கூறியது. நெய்யும் என்ற உம்மை சிறப்பு; அதன் தண்மையையும், வெப்பம் ஆற்றும் பண்பினையும் உணர்த்தியது. போல்வதூஉம் - உரையசை; இனி நெய்யும் அதனை ஒத்த பிறவும் எனினுமாம். அளபு, இன்னிசை. கோடுதல் - வளை

* புறத்திரட்டு - 576.

தல்; "கோட்டமுகு" * என்றதுபோல. கோடார்-வினையா லணைந்த பெயர். ஆகியார் என்றதால், முன்னமே கொடுமை பல செய்துள்ளவ ரென்க. இஃது எடுத்துக்காட்டுவமையணி. (4)

125. † பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே
தானே சிறியார் தொடர்பு.

இ-ள். பெரியவர்-அறிவிற் பெரியவருடைய, கேண்மை - நட்பு, பிறைபோல-வளர் பிறைமதிபோல, வரிசை வரிசையா - முறையாக, நாளும்-நாள்தோறும், நந்தும்-வளரும், சிறியார் - அறிவில் சிறியவருடைய, தொடர்பு-நட்பு, வான் ஊர்-ஆகாயத்தில் செல்லும், மதியம் போல் - நிறைமதியைப்போல, வைகலும் - நாள்தோறும், தானே-தனக்குத்தானே, தேயுமே-குறைந்துவிடும் எ-று.

அறிவினால் பெரியவர், சிறியவர் என்க. கேண்மை, தொடர்பு, பண்பு. நாளும், வைகலும் என்றமையால் தினமும் வளர்ச்சியும் தேய்வும் உண்டாகும் என்க. வரிசை, கலையின் வளர்ச்சி தேய்வினைக் குறித்தபடி. ஊர்தல்-ஈண்டுச் செல்லுதல். மதியம் - நிறைமதி. பிறரது முயற்சியின்றித் தன்னளவிலேயே தேய்ந்து உவாமதிபோல் இல்லாமல் மறைந்தொழியும் என. தானே என்றார். மேல் ‡ "கனை கடல்" என்றதனோடும் ஒப்பிடுக. இஃது உவமையணி. சிறியவர் உறவு நீக்குக என்றதால் 'தீவினையச்சத்'தில் அடங்கியது. (5)

126. $ சான்றோ ரென மதித்துச் சார்ந்தாய்மற் சார்ந்தாய்க்குச்
சான்றாண்மை சார்ந்தார்க ணில்லாயிற்—சார்ந்தோய்கேள்
சாந்தகத் துண்டென்று செப்புத் திறந்தொருவன்
பாம்பகத்துக் கண்ட துடைத்து.

இ-ள். சான்றோர் - நற்குணங்கள் நிறைந்தவர், என மதித்து- என்று கருதி, மன் சார்ந்தாய் - (நட்புக்கொள்ளச் சிலர்பால்) மிகவும் சேர்ந்தாய், சார்ந்தாய்க்கு - அவ்விதம் சேர்ந்த உனக்கு, சார்ந்தார் கண்-நீ சார்ந்தவரிடத்தில், சான்றாண்மை - அந் நற்குணங்கள், இல் ஆயின் - இல்லாமற்போனால், அது - அச்செய்கை, ஒருவன் - ஒரு மனிதன், செப்பு அகத்து சாந்து உண்டு-ஒரு சிமிழினுள் கலவைச் சாந்து உள்ளது, என்று - எனக்கருதி, திறந்து - அச்சிமிழைத் திறந்துபார்க்க, அகத்து - அதனுள், பாம்பு கண்டது - ஒரு பாம்

* நாலடி - 131. † புறத்திரட்டு - 917.
‡ நாலடி - 138. $ புறத்திரட்டு - 956.

பிணைக்கண்ட தன்மையை, உடைத்து-உடையது ஆகும், ஆகையால், சார்ந்தோய் - இத்தகைய நட்பைச் சேர்கின்றவனே, கேள்-இதனைக் கேட்க எ-று.

சான்று-நடுநிலைமை, நற்குணம். சார்தல்-நட்புக்கோடல். சார்ந்தாய்க்கு-தெரிநிலை வினைப்பெயர், நான்கனுருபு பெற்றது. செப்புச் சிமிழிற் சந்தனம், மலர் முதலியன வைத்தல் வழக்கம். சந்தனமிருந்த செப்பென்று கருதுவதுபோல் நற்குணம் உடையவரென்று, அதனைத் திறந்தல நட்புக்கொள்ளுதலும், உள்ளே பாம்பைக் காண்டல், சான்றாண்மைக்கு மாறிய குணத்தை அறிதலுமாக உவமை கொள்க; உவமையணி. கண்டதுடைத்து என உபமானத்தை உபமேயமாகக் கூறியது காட்சியணி. ஆராயாத நட்பு * "தான் சாந்துயரந் தரும்" ஆதலின பாம்பை உவமித்தார். (6)

127. † யாஅ ரொருவ ரொருவர்த முள்ளத்தைத்
தேருந் துணைமை யுடையவர்—சாரற்
கனமணி நின்றிமைக்கு நாடகேண் மக்கண்
மனம்வேறு செய்கையும் வேறு.

இ-ள். சாரல்-மலைச்சாரலிலே, கனம்-பெரிய, மணி-அரதனங்கள், நின்று - நிலையாய் இருந்து, இமைக்கும் - ஒளிவிடும், நாட-நாட்டையுடைய அரசனே, கேள் - கேட்பாயாக, மக்கள் - மனிதர்களது, மனம் - மனத்தினெண்ணமும், வேறு - வேறு, செய்கையும்-அவரது ஒழுக்கமும், வேறு - வேறு, (ஆதலால்) ஒருவர் - ஒருவர், ஒருவர் தம் - பிறரொருவருடைய, உள்ளத்தை - மனத்தை, தேரும்-அறியும், துணைமையுடையவர்-அளவினையுடையவர், ஒருவர் யாஅர்-ஒருவர் யாவர் உளர் (இல்லை) எ-று.

ஒருவர் நினைத்தலும் செய்தலும் மாறுபடுதலின், அவர் மனத்தை அறிதல் அருமை என்றபடி. யாஅர் இசைநிறை அளபு; வினா இல்லை என்னும் பொருட்டு. இமைத்தல் - ஒளிவிடுதல். நாட - ஆடூஉ முன்னிலை. மனம் - மனதில் எழும் எண்ணம்; ஆகுபெயர். வினைவகையாலும் வேறுதல் ‡ உண்மையால் மனம், செய்கை வேறு என்றார்.

128. $ உள்ளத்தா னள்ளா துறுதித் தொழிலராய்க்
கள்ளத்தா னட்டார் கழிகேண்மை—தெள்ளிப்

---

* குறள் - 792. † புறத்திரட்டு - 959.

‡ "வினைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகு மாந்தர் பலர்"—குறள் - 514.

$ புறத்திரட்டு - 961. "கழிகிழமை" என்றும் பாடம்.

புனற்செதும்பு நின்றலைக்கும் பூங்குன்ற நாட
மனத்துக்கண் மாசாய் விடும்.

இ-ள். புனல் - அருவிநீர், தெள்ளி - மணிகளைக் கொழித்து, செதும்பு - சேற்றை, நின்று அலைக்கும் - இடைவிடாது வயலில் ஒதுக்கும், பூ-அழகிய, குன்றம் - மலைகள் அடுத்த, நாட - நாட்டையுடைய அரசனே, உள்ளத்தால் - மனதால், நள்ளாது-நட்புக்கொள்ளாமல், உறுதித் தொழிலாய் - தமது நன்மையை உறுதி செய்யும் செய்கையுடையராய், கள்ளத்தால் - வஞ்சமாக, நட்டார் - சிநேகித்தவரது, கழி - மிகுந்த, கேண்மை - நட்பு, மனத்துக்கண் - மனதினிடத்தில், மாசாய்விடும் - குற்றமாய் முடியும் எ-று.

உள்ளத்தான் நட்டல்-உண்மை நட்புக்கொள்ளுதல். உறுதி-தமக்கே நன்மை செய்வதில் வன்மை தொழிலர் - குறிப்புப்பெயர்; நட்பின் வழியாக நன்மை செய்துகொள்பவர் என்க. தெள்ளுதல்-மலையினின்றும் மணிகளைக் கொழித்தல். நாட - ஆடூஉ முன்னிலை. மாசாவது, உள்ளன்பில்லாதவர் தன் நட்பினால் பயன்பெறுதல். கேண்மை மாசாய்விடும் என்க; அதனால் அதற்கு அஞ்சுக என்பது எச்சம். (8)

129. ஒக்கிய வொள்வாடன் னொன்னார்கைப் பட்டக்கா
லூக்க மழிப்பதூஉ மெய்யாகு—மாக்க
மிருமையுஞ் சென்று சுடுதலா னல்ல
கருமமே கல்லார்கட் டீர்வு.

இ-ள். ஒக்கிய-பகைவரைக்கொல்ல மேல் ஓங்கப்பெற்ற, ஒள் வாள் - ஒளிவீசும் வாளாயுதம், தன் ஒன்னார்கை - தனது பகைவர் கரத்தில், பட்டக்கால் - அகப்பட்டுக்கொண்டால், ஊக்கம்-(பகைவர் பிழைத்துப்போதலன்றி) தனது வலிமையை, அழிப்பதூஉம் - அவ்வாள் அழித்தலும், உண்மையாம் - இம்மையில் மெய்யாகும், ஆக்கம்-கல்லாருடன் நட்பு ஆகுதல், இருமையும் - இம்மை மறுமைகளிலும், சென்று-தொடர்ந்து, சுடுதலால் - வருத்துவதால், கல்லார் கண் - அறிவிலாரிடமிருந்து, தீர்வே - பிரிந்து விலகுதலே, கருமம்-நற்செய்கையாகும் எ-று.

பகைவன் கைப்படும் தன்வாள் அப் பகைவனைக் கொல்வதற்கு மாறாக, இம்மையில் தன்னையே கொல்கிறது; ஆனால் மறுமையில் வீரசுவர்க்கம் எய்தலாம்; தீயார் உறவால் இம்மையில் பழியும் பாவமும், மறுமையில் நரகமும் உண்டாம். உவமப் பொருள்களுள் ஒன்றின் ஒன்று இழிபு கூறுதலின் வேற்றுமையணி. உவமவுரு

பின்றி வருதலின் எடுத்துக்காட் டுவமையணியுமாம். ஓக்கிய - ஓங்கப்பெற்ற; பிறவினை. ஊக்கம், ஈண்டு வலி. அளபெடை, இன்னிசை. ஆக்கம்-ஆகுதல், ஈண்டு நட்பினைக்குறித்தது. தீர்வே கருமம் எனப் பிரிநிலை ஏகாரம் மாறுக. (9)

130. மனைப்பாசங் கைவிடாய் மக்கட்கென் றேங்கி
யெனைத்தூழி வாழ்தியோ நெஞ்சே—யெனைத்துஞ்
சிறுவரையே யாயினுஞ் செய்தநன் றல்லா
லுறுபயனோ வில்லை யுயிர்க்கு.

இ-ள். நெஞ்சே - மனமே, மக்கட்கு - பிள்ளைகளுக்கு, என்று-நன்மையுண்டாக்க வேண்டுமென்று, ஏங்கி-இரக்கங்கொண்டு, மனை-இல்லறத்தின், பாசம்-ஆசைப்பிணிப்பை, கைவிடாய்-விட்டொழிக்க மாட்டாய், எனைத்து ஊழி-எத்தனைகாலம், வாழ்தியோ-இப்பிணிப்பி லிருந்து வாழ்வாயோ, எனைத்தும் சிறுவரையே ஆயினும்-எவ்வளவு சிறிய அளவாகவேனும், செய்த - நாம் செய்த, நன்று அல்லால்-நல்வினை அல்லாது, உயிர்க்கு-நம் உடலை நீத்துச்செல்லும் உயிர்க்கு, உறு பயனோ-பொருந்திய நற்பயனோ, இல்லை-வேறொன்றுமில்லை எ-று.

ஆதலின் தீவினையாகிய மனைப்பாசத்தை விட்டொழிக என்பது குறிப்பு. மனை - ஆகுபெயராய் மனையறத்தைக் குறித்தது. பாசம்-கயிறு, அதைப்போல் பிணித்தல் என்க; ஆகுபெயர். மக்கள்மேற் காதல் துறத்தல் அருமையாதலின் மக்களை விசேடித்து உரைத்தார்; 'மக்கள்' மனைவியையும் உட்படுத்தியது. ஓகாரம்-இரக்கம். வரை-அளவு. நன்று-நல்வினை. (10)

தீவினையச்சம் முற்றிற்று.

இல்லறவியல் முற்றிற்று.

அறத்துப்பால் முற்றிற்று.

# 2. பொருட்பால்

அஃதாவது பொருளைப்பற்றி உரைக்கும் பகுதி. பொருளாவது, அறவழியில் தீவினை நீக்கி ஈட்டுகின்ற பொன், மணி, நெல் முதலியன. அவ்வறத்துள் இல்லறத்துக்கே அது பெரிதும் பயன் படுதலின் இப்பால், அறத்துப்பாலுக்கும், அதன்கண் இல்லற இயலுக்கும் பின்னர் வைக்கப்பட்டது.

## அரசியல்

பொருளின் தன்மை அரசனது நீதிகூறவே விளங்கும் ஆதலின், இவ்வியல் முதற்கண் வந்தது. அரசியலாவது, அரசன் காவலை நடத்தும் தன்மை.

### 14-ஆம் அதிகாரம். கல்வி

அப்பொருளையும் அறத்தையும் செய்தற்கு ஒருவற்கு அறிவைத்தரும் கல்வியே வேண்டுமாதலாலும், சிறப்பாகக் காவல் நடாத்தும் அரசற்கு இன்றியமையாததாலும் இது முதற்கண் வைக்கப்பட்டது.

131. குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகு
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு.

இ-ள். குஞ்சி அழகும்-மயிர் முடியின் அழகும், கொடும்தானை-மடிப்புடைய ஆடையின், கோட்டு அழகும்-கரையின் அழகும், மஞ்சள் அழகும்-மேற்பூசும் மஞ்சளின் அழகும், அழகு அல்ல - அழகு ஆகமாட்டா, நடு நிலைமையால்-நடுவு நிலைமையோடு, யாம் நெஞ்சத்து நல்லம் - நாம் மனதின்கண் நல்லொழுக்கம் உடையோம், என்னும்-என்று கருதச்செய்யும், கல்வி அழகே-கல்வியாலுண்டாகும் அழகே, அழகு-அழகாகும் எ-று.

குஞ்சி, குடுமி, சிகை என்பனபோல் ஆண்மயிரைக் குறிக்கும். அளகம் ஓதி முதலியன பெண்மயிர். கொடுமை, வளைவு; ஈண்டு, மடிப்பும் கோடும் குறித்தது. மயிர், ஏனை உறுப்புக்கும், தானை, ஏனை யணியாடைகட்கும், மஞ்சள், கலவை முதலிய ஏனைமேற் மேற்பூச்சுக்கும் உபலக்ஷணம். இனி, மயிர் ஆணையும், மஞ்சள்

பெண்ணையும், தானை இருவரையும் குறித்தலால், இஃது இருபாலர்க்கும் கல்வி அவசியம் என்றபடி. நல்லம் - குறிப்புவினை. நடுநிலைமை, அறம் முதலியவற்றில் வழாது ஒழுகும் ஒழுக்கம். ஏகாரம், தேற்றத்தொடு பிரிநிலை. (1)

132. இம்மை பயக்குமா லீயக் குறைவின்றாற்
றம்மை விளக்குமாற் றாமுளராக் கேடின்றா
லெம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோன்
மம்ம ரறுக்கு மருந்து.

இ-ள். (கல்வி) இம்மை-இப்பிறப்பின் பயனை, பயக்கும்-தரும், ஈய-பிறர்க்கு அதனைக் கொடுக்க, குறைவு இன்று - (செல்வம்போல்) குறைதல் இல்லை, தம்மை விளக்கும் - அக்கல்வியை உடையாரைப் புகழால் விளங்கச்செய்யும், தாம் உளர் ஆ - தாம் உயிருடன் வாழும் அளவும், கேடு இன்று - தீமை உண்டாதல் இல்லை, ஆல்-ஆகையால், கல்விபோல் - கல்வியைப்போல, மம்மர் - அறியாமையாலுண்டாகும் மயக்கமாகிய நோயை, அறுக்கும் மருந்து - போக்குகின்ற மருந்தினை, எம்மை உலகத்தும் - எவ்வுலகத்திலும், யாம் காணேம்-யாம் காண்கிலோம் எ-று.

இம்மை, பிறவியின் பயன்; ஆகுபெயர். பயனாவது, "கட்டறுத்து வீடுபெறுதல்." ஈதல்-பிறர்க்குக் கல்வி புகட்டுதல். கொடுத்தால் பொருள்குறைதல்போல் கல்வி குறைவதின்று என்பதுதொனி. மம்மர் - அறியாமையாகிய மயக்கம். கல்வியை மருந்தென்றதால், மம்மர் நோய் எனப்பட்டது; ஏகதேச உருவக அணி. (2)

133. * களர்நிலத் துப்பிறந்த வுப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத்தோ ராயினுங் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்.

இ-ள். களர்நிலத்து - இழிந்த உவர்நிலத்தில், பிறந்த - உண்டான, உப்பினை-உப்பை, சான்றோர் - பெரியோர், விளை-விளைகின்ற, நிலத்து - வயல் நிலத்து உண்டாகிய, நெல்லின் - நெல்லைவிட, விழுமிதா - சிறந்ததாக, கொள்வர் - கருதுவார்கள், (அதுபோல) கடை-

---

* " வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே"
என்ற புறப்பாட்டினடிகளை இதனுடன் ஒப்பிடுக.

இழிந்த, நிலத்தோராயினும் - சாதியிற் பிறந்தாராயினும், கற்றறிந்தோரை-கற்றுணர்ந்தவரை, தலைநிலத்து - முதன்மையான விடத்து, வைக்கப்படும் - வைத்துப் பாராட்டத்தகும் எ-று.

நெல்லின்-ஐந்தன் உருபு, விழுமிது-உரிச்சொலடியாகப் பிறந்த குறிப்பு வினைப்பெயர். கடைநிலம்-கடையிடம், ஈண்டுக் குலத்தைக் குறித்தது. கற்றறிந்தோரெனின் அவரை வைக்கப்படும் என்க. தலைநிலம்-தலையிடம். உப்பின் சுவை உணவுக்கு இன்றியமையாதது போல் கல்வியும் என்க. இஃது எடுத்துக்காட் டுவமையணி. (3)

134\. வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பி னரசர் செறின்வவ்வா
ரெச்ச மெனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற.

இ-ள். விச்சை-கல்வி வகைகள், வைப்புழி-சேமித்து வைக்கப் பட்ட (மனமாகிய) இடத்தின்றும், கோள்படா - பிறராற் கவரப்பட மாட்டா, வாய்த்து - தக்கவர் கிடைக்கப்பெற்று, ஈயில் - கொடுக்கப் படின், கேடில்லை - குறைந்து அழிதல் இல்லை, அரசர் - மன்னர்கள், மிக்க சிறப்பின்-தம்மினும் மிகுந்த சிறப்புடைமை கருதி, செறின்-பொறாமைகொண்டு கோபித்தாலும், வவ்வா-அபகரிக்கப்படமாட்டா, (ஆதலின்) ஒருவன் - ஒரு மனிதன், மக்கட்கு - தனது மக்களுக்கு, எச்சம் என - தனக்குப்பின் எஞ்சிய செல்வம் ஆக, செய்வன-தேடி வைப்பன, விச்சை-அக் கல்விப்பொருளுக்கு, மற்று - மாறாக, பிற-வேறு நிலம் பொன் முதலியன, அல்ல-பொருளல்ல எ-று.

வைப்புழி-சேமத்தில் வைக்கப்படும் இடம்; கல்விக்கு மனமே இடம் என்க. கோள்-முதனிலை திரிந்த தொழிற்பெயர். ஈதல்-மாணவர்க்குக் கற்றுக்கொடுத்தல். கற்கத்தகுந்த இலக்கணமுடையவர்க்கே உரைக்கவேண்டுமாதலின் 'வாய்ப்பின்' என்றார். சிறப்பின் காரணமாகச் செறின என்க, அரசனினும் கற்றோன் சிறந்தவனாதலின். எச்சம - எஞ்சுவது, மிகுதிப்படும்பொருள். விச்சை - 'வித்யா' என்னும் வடசொற்றிரிபு; அது பல துறைப்பட்டதாதலின் செய்வன எனப் பன்மைவினை ஏற்றது. பிற-நிலம், பொன் ஆகிய பிறபொருள். இது வேற்றுமையணி. (4)

135\. * கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல—தெள்ளிதி

* புறத்திரட்டு - 512.

ஞராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து.

இ-ள். கல்வி - கல்விகளோ, கரை இல-முடிவில்லன, கற்பவர்-அவற்றைப் படிப்பவராது, நாள்-வாழ்நாளோ, சில-சிலவாம், மெல்ல-விரையாது, நினைக்கின்-ஆராய்ந்தால், பிணிபல-உடற்கு உண்டாகும் நோய்கள் பலவாம், (ஆதலின்) நீர் ஒழிய-நீரை விலக்கி, பால் உண்-பாலை மட்டில் பிரித்து உண்ணும், குருகின் - அன்னத்தைப்போல, தெள்ளிதின்-தெளிவாக, ஆராய்ந்து - நூல்களின் தன்மையை பகுத்தறிந்து, அமைவு உடையவே - கற்றற்குப் பொருந்தியவற்றையே, கற்ப - அறிவுடையோர் கற்பார்கள் எ-று.

பல துறைப்பட்டதாகலின் கல்வி கரையில என்றார். கரை என்றதால், கல்வியைக் கடல் என்க; ஏகதேச வுருவகம். சில நாட்களுள்ளும் மூப்புப்பிணி முதலியன உண்மையால் கற்றற்குரியனவற்றையே கற்க என்றார். அவை துறவினைப் புகட்டுவன முதலியன. குருகின் - தொழிலுவமம். அமைவுடைய - குறிப்பு வினைப்பெயர். பிரிநிலை ஏகாரத்தைப் பிரித்துக் கூட்டுக. நீரும்பாலும் கலந்திருப்பின் பாலைமட்டில் அன்னம் உண்ணும் என்பது நூற்றுணிபு. (5)

136. தோணி யியக்குவான் றொல்லை வருணத்துக்
காணிற் கடைப்பட்டா னென்றிகழார்—காணு
யவன்றுணையா வாறுபோ யற்றேநூல் கற்ற
மகன்றுணையா நல்ல கொளல்.

இ-ள். நூல் கற்ற மகன் - தாழ்நலத்தினனாயினும் பல நூற்களைக் கற்றறிந்தவனது, துணை ஆ-உதவிகொண்டு, நல்ல-நற்பொருள் பயக்கும் நூல்களை, கொளல் - கற்றறிதல், தோணி இயக்குவான்-படகினைச் செலுத்துபவன், தொல்லை வருணத்து - பழமையான சாதிகளுள், கடைப்பட்டான் என்று - தாழ்ந்த குலத்திற் பிறந்தவனென்று, காணின் - அறியினும், இகழார் - அவனை அவமதியாது, அவன் துணை ஆ-அவன் உதவிகொண்டு, ஆறுபோயற்று-ஆற்றினைக் கடத்தலை ஒத்தது எ-று. காணாய்-அசை.

இயக்குவான் - வினைப்பெயர் காணினும் இகழார் என்று சிறப்பும்மை தருக. இகழார் - முற்றெச்சம். துணையாக - ஈறுதொகுத்தல். போயற்று - போயதற்று என்பதன் மரூஉ. கற்றமகன் என்றதால் கல்லாதவன் விலங்கு அனையவன் என்பது குறிப்பு. நல்ல-குறிப்பு வினைப்பெயர். கொளல் - தொழிற்பெயர். கொளல் அற்று என்றது உவமையணி. (6)

137. * தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையா
ரிகலில ரெஃகுடையார் தம்முட் குழீஇ
நகலி னினிதாயிற் காண்பா மகல்வானத்
தும்ப ருறைவார் பதி.

இ-ள். தவல் அரும் - தவறுதல் இல்லாத, தொல் - பழைய, கேள்வி-நூற்கேள்விகளால் வரும், தன்மை-குணங்களை, உடையார்-உடையவர்களும், இகல் இலர்-தமக்குள் பகைமையில்லாதவர்களும், எஃகு உடையார் - கூர்மையாகிய அறிவுடையவர்களும், தம்முள்-(ஆகிய) கற்றறிந்தோருடன், குழீஇ-கூடியிருந்து, நகலின்-மகிழ்தலை விட, அகல்-பரந்த, வானத்து உம்பர்-விண்ணுலகாகிய மேலிடத்தில், உறைவார் - வாசிப்பவராகிய தேவர்களுடைய, பதி-நகரம், இனிது ஆயின் - இன்பம் தருவதாயிருந்தால், காண்பாம் - அதை விரும்பி அடைவோம் எ-று.

கற்றறிந்தோர் சேர்க்கையைவிட விண்ணுலக வாழ்க்கை சிறந்ததன்று என்பது குறிப்பு. தொன்மை - தொன்றுதொட்டு, ஆசிரியர் மாணவர் வழிமுறையாக வருதல். தன்மை-கற்றதனாலாய ஒழுக்கம்; அதனால் இகல் இன்மையும், அறிவுக்கூர்மை உண்மையும் கொள்க. எஃகு, கூரிய ஆயுதம்; அதுபோன்ற அறிவு: உவமவாகுபெயர். குழீஇ-சொல்லிசையளபு. நகல்-மகிழ்ச்சியால் முறுவலித்தல்; இனிதாயின்-இன்மையைக் குறித்தது பதி-அமராவதி. (7)

138. † கனைகடற் றண்சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை
நுனியிற் கரும்புதின் றற்றே—நுனிநீக்கித்
தூரிற்றின் றன்ன தகைத்தரோ பண்பிலா
வீரமி லாளர் தொடர்பு.

இ-ள். கனை-ஒலிக்கும், கடல்-கடலின், தண்சேர்ப்ப - குளிர்ந்த கரையுடைய அரசனே, கற்று அறிந்தார் - நூல்களைக்கற்று அவற்றின் உண்மையை அறிந்தவர்களது, கேண்மை-நட்பு, கரும்பு-கரும்பின், நுனியின் - நுனியிலிருந்து, தின்றற்று - (அடிநோக்கித்) தின்றதை ஒக்கும், பண்பு இலா - கல்வியாகிய குணமில்லாத, ஈரம் இல் ஆளர் - அன்பு இல்லாதவருடைய, தொடர்பு - நட்பு, நுனி நீக்கி-நுனியை ஒழித்து, தூரின்-அடியிலிருந்து, தின்றன்ன - தின்றதை ஒத்த, தகைத்து-தன்மையை உடையது எ-று. அரோ-அசை.

சேர்ப்ப-ஆடூஉ முன்னிலை. கற்றறிந்தார் - கற்றவற்றின் பயனை உணர்ந்தவர்; வினைப்பெயர். கரும்பு நுனியிற் சுவை குறைந்து அடி

* புறத்திரட்டு - 826. † புறத்திரட்டு - 932.

யில் சுவை முதிர்ந்துள்ளது அறிதற்பாலது; * கற்றோர் நட்பு தொடக்கத்தில் சிறுபான்மையாய், நாளேற முதிரும் என்றும், மற்றவர் நட்பு, தொடக்கத்தில் மிக்க உறவும் செல்லச்செல்ல மனக் கசிவும் உண்டு என்றும் உவமையணி. நுனி நீக்கி-நுனியை எடுத்து விட்டு என்றேனும், நுனியில் தொடங்காமல் என்றேனும் கொள்க.

139. † கல்லாரே யாயினுங் கற்றாரைச் சேர்ந்தொழுகி
னல்லறிவு நாளுந் தலைப்படுவர்—தொல்சிறப்பி
னொண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு.

இ-ள். தொல் சிறப்பின் - பழமையான சிறப்பும், ஒள்நிற - ஒளிவீசும் நிறமும் உடைய, பாதிரிப்பூ சேர்தலால் - பாதிரிமலரைச் சார்ந்திருப்பதால், புத்தோடுதான் - அதன் அகவிதழ், தண் நீர்க்கு- அதனொடு பொருந்திய குளிர்ந்த நீருக்கும், பயந்த ஆங்கு - நல் மணத்தைக் கொடுத்ததை ஒப்ப, கல்லாரே ஆயினும்-தாம் கல்லாத வர்களா யிருப்பினும், கற்றாரை-கற்றறிந்தவரை, சேர்ந்து ஒழுகின்- உறவுகொண்டு அவரைப்போல் ஒழுகினால், நாளும் - தினமும், நல் லறிவு-நல்ல அறிவினால், தலைபடுவர்-சிறப்பு அடைவார்கள் எ-று.

புத்தோடு - புதுமை தோடு, புதிய அகவிதழ்; இனிப்புதுமை ஓடு எனப் பிரித்து ஓட்டில்வைத்த நீர் என்றும் உரைப்பர். பூ கற்றோர்க்கும், பூ மணம் அறிவுக்கும், நீர் கல்லார்க்கும் உவமை; உவமையணி. ஆங்கு-உவமவுருபு. ஏகாரம் இழிவு சிறப்பு. அறிவால் தலைப்படுவார் என்க. (9)

140. அலகுசால் கற்பி னறிவுநூல் கல்லா
துலகநூ லோதுவ தெல்லாங்—கலகல
கூஉந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம்
போஒந் துணையறிவா ரில்.

இ-ள். அலகு-அளவு, சால்-மிக்க, கற்பின்-நூற்களுள், அறிவு நூல்-தத்துவம் புகட்டும் ஞானநூற்களை, கல்லாது-கற்காமல், உலக நூல் - உலகத்திற்கே பயன்படும் பிறநூல்களை, ஓதுவதெல்லாம் - கற்பதுமுழுவதும், கலகல - கலகலவென்று, கூஉந்துணை அல்லால்- கூவுந்தன்மை அல்லது, கொண்டு - அவற்றின் உதவியைக்கொண்டு, தடுமாற்றம் - பிறவித்துன்பமாகிய தடுமாறுதலை, போஒந்துணை-நீங் கும் தன்மையை, அறிவார் - அறியவல்லார், இல்-இல்லை எ-று.

---

* நாலடி - 211-ம் ஒப்பிடுக. † புறத்திரட்டு - 523.

கற்பு-கல்வி. அறிவுநூல் - ஞானத்தைப் புகட்டித் துறவுநெறி காட்டும் நூல்; இறைவன் உரைத்த நூல் எனினுமாம்: அவை வேத முதலியனவும், சைன முப்பிடகம் முதலியனவும். உலகநூல் மேல் * "சத்தமுஞ் சோதிடமும்" என்று குறிக்கப்பட்ட நூற்கள். கல கல கூவுதல்-இரட்டைக்கிளவி; பொருட்பேறின்றி ஓசை செய்தல்; எனவே அவை கற்பதன் பயனின்மை பெறப்படும். தடுமாற்றம்-பிறவித்துன்பம்; இப்பொருளின் முன்னரும் † வந்தது அறிக. துணை-தன்மை. கூஉம், போஓம்-செய்யுளிசை நிறைபு. அறிவார்-வினையாலணைந்த பெயர். (10)

கல்வி முற்றிற்று.

## 15 - ஆம் அதிகாரம். குடிப்பிறப்பு

அஃதாவது உயர்ந்த குடியிற் பிறத்தலின் சிறப்பு. நற்குடியுடையாரே கற்றலானும், கல்வியுடையவனை மேற்குலத்தவனாகக் கருதுதலானும், இது "கல்வி" யின்பின் அமைந்தது.

141. உடுக்கை யுலறி யுடம்பழிந்தக் கண்ணுங்
குடிப்பிறப் பாளர்தங் கொள்கையிற் குன்றா
ரிடுக்கண் டலைவந்தக் கண்ணு ‡ மரிமா
கொடிப்புற் கறிக்குமோ மற்று.

இ-ள். இடுக்கண்-துன்பம், தலைவந்தக்கண்ணும் - மிக்கு உண்டாயின (பசித்த) காலத்தும், அரிமா - சிங்கம், கொடிபுல - படர்ந்து செல்லும் புல்லை, கறிக்குமோ - கடித்துத் தின்னுமோ, தின்னாது, (அதுபோல) உடுக்கை-தான் உடுக்கும் ஆடைகளும், வற்றி - கெட்டு வீணாகி, உடம்பு - சரீரமும், அழிந்தக்கண்ணும் - (உணவின்றி) மெலிந்து அழிந்துபோயினும், குடிப்பிறப்பு ஆளர் - நற்குடியிற் பிறந்த உத்தமர், கொள்கையின் - தம்முடைய கோட்பாட்டினின்றும், குன்றார்-குறைந்து மாற மாட்டார்கள் எ-று.

'புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது' என்பது பாவை வழக்கு. உடுக்கை-ஆடை, உலறுதல்-வற்றுதல், உடம்பு அழிதல்-வறுமையினால், அரிமா - அரியாகிய மா என்க. வரிமா பாடமாயின் வரிகளையுடைய விலங்கு (புலி) என்க. கறிக்குமோ: ஓகாரம் எதிர்மறை. இஃது எடுத்துக்காட் டுவமையணி. (1)

---

* நாலடி - 52. † நாலடி - 27, 33.

‡ கண்ணும் வரிமா என்றும் பாடம்.

142. சான்றாண்மை சாய லொழுக்க மிவைமூன்றும்
வான்றோய் குடிப்பிறந்தார்க் கல்லது—வான்றோயு
மைதவழ் வெற்ப படாஅ பெருஞ்செல்வ
மெய்தியக் கண்ணும் பிறர்க்கு.

இ-ள். வான் - ஆகாயத்தை, தோயும் - அளாவி, மை - மேகம், தவழ் - தவழும், வெற்ப-மலையையுடைய அரசனே, சான்று ஆண்மை-நற்குண முடைமையும், சாயல்-மென்மையும், ஒழுக்கம் - நல்லொழுக்கமும், இவை மூன்றும் - ஆகிய இம்முக்குணங்களும், வான் - பெருமை, தோய் - நிறைந்த, குடிப்பிறந்தார்க்கு - நற்குடியிற் பிறந்தார்க்கு, அல்லது-அல்லாமல், பெருஞ்செல்வம்-பெரிய செலவத்தை, எய்தியக் கண்ணும்-அடைந்தபோதிலும், பிறர்க்கு - நற்குடியிற் பிறவாதார்க்கு, படாஅ-அக்குணங்கள் உண்டாகாவாம் எ-று.

சான்று ஆண்மை-நற்குணங்கள் நிறைந்து அவற்றை ஆளுதல், ஆவது நற்குணமுடைமை. சாயல்-மென்மை, உரிச்சொல். மென்மையாவது ஐம்புல நுகர்ச்சியையும் அடக்கும் ஆற்றல். வான்றோய் குடி - புகழால் ஆகாயமளவும் பொருந்தும்குடி. மூன்றும் படாஅ என்க; இசை நிறையளபு. வெற்ப-ஆடூஉ முன்னிலை. (2)

143. * இருக்கை யெழலு மெதிர்செலவு மேனை
விடுப்ப வொழிதலோ டின்ன—குடிப்பிறந்தார்
குன்றா வொழுக்கமாக் கொண்டார் கயவரோ
டொன்றா வுணரற்பாற் றன்று.

இ-ள். இருக்கை - பெரியோரைக் காணின் தம் ஆசனத்தை, எழலும்-விட்டு எழுந்து நிற்றலும், எதிர் செலவும் - எதிர்சென்று அழைத்தலும், ஏனைவிடுப்ப ஒழிதலோடு - மற்றும் அவர்கள் மீண்டு செல்வதற்கு விடைகொடுத்துப் பின்சென்று பிரிதலும், இன்ன - ஆகிய இத்தகையவற்றை, குன்றா - குறையாத, ஒழுக்கம் ஆ - நல்லொழுக்கமாக, குடிப்பிறந்தார்-நற்குடிப் பிறந்தவர்கள், கொண்டார்-கொண்டுள்ளனர், (ஆதலின்) கயவரோடு-கீழ்மக்களோடு, ஒன்றா ஆ-அவர்களையும் ஒரு தன்மையராக, உணரல் பாற்று அன்று - கருதுதல் தகுந்ததல்ல எ-று.

விருந்தினர் முதலியவரை உபசரிக்கும் வித முரைத்தவாறு. இருக்கை - ஆகுபெயர். ஏனை - உணவாதிகள் தருவனவும் கொள்க. இன்ன-குறிப்புப்பெயர். கயவர்-நற்குணம் யாதும் இல்லாதவர். (3)

* புறத்திரட்டு - 1084.

144. * நல்லவை செய்யி னியல்பாகுந் தீயவை
பல்லவர் தூற்றும் பழியாகு—மெல்லா
முணருங் குடிப்பிறப்பி னூதிய மென்னே
புணரு மொருவர்க் கெனின்.

இ-ள். (உயர்குடிப் பிறந்தோர்) நல்லவை செய்யின் - நன்மையானவற்றைச் செய்தால், இயல்பு ஆகும்-அக்குடியின் பெருமைக்கு இயல்பாம், தீயவை செய்யின்-தீயகாரியத்தைச் செய்தால், பல்லவர்-பலதிறப்பட்டவரும், தூற்றும் - இகழும், பழி ஆகும் - பழிப்புக்கு இடமாகும், எல்லாம் உணரும் - நன்மை தீயவற்றைப் பகுத்தறியச் செய்யும், குடிப்பிறப்பின் - நல்ல குலத்தில் பிறத்தலால், ஒருவர்க்கு புணரும் எனின் - ஒருவர்க்கு இவை பொருந்தும் என்றால், ஊதியம் என்னே - அக்குலத்திற் பிறந்ததன் பயன்தான் யாது (இல்லையே) எ-று.

உயர்குடிப் பிறந்தோர் இயல்பினால் நன்மை செய்தலும் தீமை விலக்கலும் உண்டு; நல்லவை செய்தால் புகழ்ச்சியில்லை, தீயவை செய்தால் இகழ்ச்சி உண்டாம்; கீழ்குடிப் பிறந்தோர் நல்லவை செய்யின் புகழும், தீயவை செய்தால் இகழ்ச்சியின்மையும் பெறுகின்றனர்; என்றால் நற்குடிப் பிறப்பால் பயனில்லையே என வஞ்சகப் புகழ்ச்சி காண்க. புணர்ப்பின், ஐந்தனுருபு; ஏதுப்பொருள். இனி, இயல்பாகவும் பழியாகவும் யாவரும் உணரும் குடிப்பிறப்புப் புணரின் அதனினும் ஊதியம் என்னே என்று உரைத்தலும் பொருந்தும். இப்பொருட்கு இன் எல்லைப் பொருளதென்க. (4)

145. † கல்லாமை யச்சங் கயவர் தொழிலச்சஞ்
சொல்லாமை யுள்ளுமோர் சோர்வச்ச—மெல்லா
மிரப்பார்க்கொன் றீயாமை யச்ச மரத்தாரிம்
மாணாக் குடிப்பிறந் தார்.

இ-ள். கல்லாமை அச்சம் - தாம் மேலும் படியாமைக்கு அஞ்சுதல், கயவர் தொழில் அச்சம் - கீழோர் இழிதொழில் செய்தற் குறித்து அஞ்சுதல், சொல்லாமையுள்ளும் ஓர் சோர்வு அச்சம் - பயனில்சொல் கூறுவிடத்தும் தளர்ச்சி யுண்டாமென்று அஞ்சுதல், இரப்பார்க்கு ஒன்று ஈயாமை அச்சம் - இரந்துவருபவர் வேண்டும் யாதொன்றும் தம் வறுமை காரணமாகக் கொடாததால் அஞ்சுதல், எல்லாம்-ஆகிய இவற்றால், இம்மாணாக் குடிப்பிறந்தார் - இத்தகைய

* புறத்திரட்டு - 1085. † புறத்திரட்டு - 1089.

சிறப்பில்லாத (உயர்) குடியிற் பிறந்தவர், மரத்தார் - மரக்கலத்தில் செல்பவரோப்பார் எ-று.

இதுவும் வஞ்சகப் புகழ்ச்சி. உத்தமராதலின் கல்லாமை முதலியவற்றுக்கு அஞ்சுகின்றார் என்க. அவ்வாறு அஞ்சுதல் மரக்கலத்திற் செல்வார் எக்கணமும் உயிர்க்கு அஞ்சுதலை ஒக்கும் என உவமையணியும் கொள்க. கல்லாமை - மேன்மேலும் கல்ல இயலாமை. கயவர் தீத்தொழில் புரிவதால் பிறர்க்கு உண்டாம் இன்னல் கருதி அச்சம் என்க. சொற் சோர்வு - பொய், கோள், கடுஞ்சொல் முதலியன. மரம் - மரக்கலத்துக்கு ஆகுபெயர். (5)

146. * இனநன்மை யின்சொலொன் றீதன்மற் றேனை
மனநன்மை யென்றிவை யெல்லாங்—கனமணி
முத்தோ டிமைக்கு முழங்குவரித் தண்சேர்ப்ப
இற்பிறந்தார் கண்ணே யுள.

இ-ள். முத்தோடு - முத்துக்களுடன், கனம்-சிறந்த, மணி-அரதனங்கள், இமைக்கும் - ஒளிவிடும், முழங்கு - ஒலிக்கின்ற, தண்-குளிர்ந்த, உவரி-கடலின், சேர்ப்ப-கரையையுடைய அரசனே, இனநன்மை-நல்ல நட்பும், இன்சொல் - இனிய சொற்களும், ஒன்று-ஒரு பொருளை, ஈதல் - இரந்தார்க்குக் கொடுத்தலும், ஏனை-ஒழிந்த, மனநன்மை - மனத்தின் தூய்மையும், என்ற இவையெல்லாம் - என்னுமிவையெல்லாம், இற்பிறந்தார் - நற்குடியிற் பிறந்தார், கண்ணே - இடத்தில் மட்டும், உள-இருக்கின்றன எ-று.

நன்மையுடைய இனம் என மாறுக. இனம்-நட்பு. ஒன்று-இரவலர் விரும்பிய ஒன்று. மனநன்மை-மனத்தூய்மை, † இஃது இனத் தூய்மையாலும் செய்வினை தூய்மையாலும் உண்டாமென்பது கருதி அவற்றின் பின் குறித்தார். உவரி - உவர்ப்புடையது, கடல். கண்ணே-ஏகாரம் பிரிநிலை; கயவர்க்கு இவை இல்லை என்றபடி. (6)

147. செய்கை யழிந்து சிதன்மண்டிற் றாயினும்
பெய்யா வொருசிறை பேரி லுடைத்தாகு
மெவ்வ முழந்தக் கடைத்துங் குடிப்பிறந்தார்
செய்வர் செயற்பா லவை.

இ-ள். செய்கை-கட்டுங்கோப்பு, அழிந்து-கெட்டு, சிதல்-கறையான், மண்டிற்றாயினும்-மொய்க்கப்பட்டதாயினும், பேர்இல்-பெரிய வீடு, பெய்யா-மழைநீர் உள்ளே ஒழுகாத, ஒருசிறை-ஒருபக்கத்தை,

* புறத்திரட்டு - 1087. † குறள் - 456.

உடைத்தாகும் - கொண்டிருக்கும், (அதுபோல) எவ்வம் - துன்பம், உழந்தக்கடைத்தும் - அனுபவித்தபோதும், குடிப்பிறந்தார்-நற்குடியிற் பிறந்தவர்கள், செயற்பாலவை - குடிக்கேற்ற செய்யத்தக்கவைகளையே, செய்வர்-தவறாமல் செய்வார்கள் எ-று.

செய்கை - தொழிற்பெயர், ஈண்டு ஆகுபெயர். உழந்தக்கடைத்தும்-வினை எச்சம்; கடை-விகுதி; உம்மை - உயர்வு சிறப்பு. செயற்பாலவை-தம் குடிக்கும் ஒழுக்கத்துக்கும் ஏற்றவற்றைச் செய்தற்குரியவை. பிரிநிலை தொகுத்தல். இஃது எடுத்துக்காட் டுவமையணி.

148. * ஒருபுடை பாம்பு கொளினு மொருபுடை
அங்கண்மா ஞாலம் விளக்குறூஉந்—திங்கள்போற்
செல்லாமை செவ்வனேர் நிற்பினு மொப்புரவிற்
கொல்கார் குடிப்பிறந் தார்.

இ-ள். ஒருபுடை-ஒரு பக்கத்தை, பாம்பு-பாம்பு, கொளினும் - பற்றிக்கொள்ளினும், ஒருபுடை - மற்றொரு பக்கத்தால், அம் - அழகிய, கண் - இடமகன்ற, மா-பெரிய, ஞாலம்-பூமியை, விளக்குறூஉம்-விளங்கச்செய்யும், திங்கள்போல் - முழுமதியைப்போல, குடிப்பிறந்தார் - நற்குடியிற் பிறந்தவர், செல்லாமை-வறுமை, செவ்வன் - செவ்வையாக, நேர் நிற்பினும் - நேர்ந்து எதிர் நின்றாலும், ஒப்புரவிற்கு-ஒப்புரவு செய்தற்கு, ஒல்கார்-தளரமாட்டார் எ-று.

கிரண காலங்களில் ஞாயிற்றையும் மதியையும் மறைக்கின்ற பூமிச்சாயை இராகு கேதுக்களென்னும் பாம்புகளாக உரைத்தல் மரபு ஆதலின், 'பாம்பு கொளினும்' என்றார். பாம்புபோல வறுமை பற்றுதல் என்க. செல்லாமை-மனமொழி மெய்கள் சென்று ஒரு பொருளை முடிக்கும் ஆற்றலின்மை; வறுமை. செவ்வன் நேர் நிற்றலாவது, வறுமை செம்மைபட்டுப் பொருந்தி நிற்றல். உம்மை-உயர்வு சிறப்பு. ஒப்புரவு-† உலகத்தோ டொட்டவொழுகல், குடிப்பிறப்புக்கு மாறாமை; உலகம் ஒப்பிய ஈகை என்றபடி. இஃது உவமையணி. (8)

149. செல்லா விடத்துங் குடிப்பிறந்தார் செய்வன
செல்லிடத்துஞ் செய்யார் சிறியவர்—புல்வாய்
பருமம் பொறுப்பினும் பாய்பரி மாபோற்
பொருமுரண் ணுற்றுத லின்று.

* புறத்திரட்டு - 1086.
† குறள் - 140.

இ-ள். புல்வாய் - கலைமான், பருமம் - கல்லணையை, பொறுப்பினும்-சுமந்தாலும், பாய்-பாயும், பரிமாபோல-குதிரையைப்போல, பொரும் - தாக்கும், முரண் ஆற்றுதல் - போர்செய்யும் வல்லமை உடைமை, இன்று-இல்லை, (அதுபோல) குடிப்பிறந்தார்-நற்குடியிற் பிறந்தார், செல்லாவிடத்தும்-வறுமையால் ஆற்றலில்லாக்காலத்தும், செய்வன-செய்யும் நற்கருமங்களை, சிறியவர்-கீழ்மக்கள், செல்லிடத்தும்-செய்யக் கூடியபோதும், செய்யார்-செய்யார்கள் எ-று.

இதுவும் எடுத்துக்காட்டுவமையணி. செல்லுதல் - பொருள் வலியால் மனமொழி மெய்களால் முடிக்கும் ஆற்றல். அஃதின்மை வறுமை எனப்பட்டது, மேல் * "செல்லாமை" போல, செய்வன-வினையாலணைந்த பெயர். புல்வாய்-மான், காரணப்பெயர்; இது குதிரையைப்போல விரைந்து செல்வதாயினும் போர்த்திறனற்றது என்க. பருமம்-கல்லணை, சேணம். (9)

150. எற்றொன்று மில்லா விடத்துங் குடிப்பிறந்தா
ரற்றுத்தற் சேர்ந்தார்க் கசைவிடத் தூற்றுவ
ரற்றக் கடைத்து மகல்யா றகழ்ந்தக்காற்
றெற்றெனத் தெண்ணீர் படும்.

இ-ள். அகல் யாறு - அகன்ற யாற்றின்கண், அற்றக் கடைத்தும் - நீர் அற்று வற்றியபோதும், அகழ்ந்தக்கால் - தோண்டினால், தெற்றென - விரைவாக, தெண்ணீர் - தெளியநீர், படும் - ஊற்றாகத் தோன்றும், (அதுபோல) எற்று ஒன்றும்-எவ்வகையான பொருள் ஒன்றும், இல்லாவிடத்தும் - இல்லாதபோதும், குடிப்பிறந்தார்-நற்குடியிற் பிறந்தவர்கள், அற்று - வேறுகதி ஒன்றுமில்லாமல், தன் சேர்ந்தார்க்கு - தம்மை நாடி அடைந்தவர்களுக்கு, அசைவிடத்து - அயர்ந்த வேளையில், ஊற்று ஆவர்-ஊன்றுகோலாக உதவுவார் எ-று.

இதுவும் எடுத்துக்காட்டுவமையணி. நீருள்ளவிடத்து யார்க்கும் பயன்பட்டு இல்லாவிடத்து ஊற்றினால் உதவும் நதிபோல பொருளில்லாவிடத்துத் தம்மை யடைந்தார்க் குதவுதலும், உள்ள விடத்துத் தாமே வலிய உதவுதலும் குடிப்பிறந்தார் குணம் என்க. ஒன்றும்-உம்மை, எஞ்சாமைப் பொருளது. தன் சேர்ந்தார் - திணை மயக்கம். அசைவிடத்து-சோர்விடத்து; † "இழுக்கலுடையுழி யூற்றுக்கோலற்று" என்றதும் காண்க. தெற்றென - விரைவுக்குறி. ஊற்று-ஊன்றுகோல் என உருவகப்படுத்தினர் என்னலுமாம். (10)

குடிப்பிறப்பு முற்றிற்று.

---

* நாலடி - 148. † குறள் - 415.

## 16-ஆம் அதிகாரம். மேன்மக்கள்

அஃதாவது மேன்மைக் குணமுடையவர் தன்மையைச் சொல்லுதல். பெரும்பாலும் நற்குடிப் பிறந்தவர்களே இக் குணமுடையாராதலின், குடிப்பிறப்பின் பின் இவ்வதிகாரம் வைக்கப்பட்டது.

151. அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற்—றிங்கண்
மறுவாற்றுஞ் சான்றோரஃ தாற்றார் தெருமந்து
தேய்வ ரொருமா சுறின்.

இ-ள். அம் - அழகிய, கண்-இடமகன்ற, விசும்பின் - ஆகாயத்தில், அகல்-பரந்த, நிலா - நிலாவொளியை, பாரிக்கும்-வீசும், திங்களும்-சந்திரனும், சான்றோரும்-உத்தமர்களும், மன் ஒப்பர்-பெரும்பாலும் தம்மிலொப்பாவார், திங்கள் - சந்திரன், மறு-களங்கத்தை, ஆற்றும் - பொறுத்துக்கொள்ளும், சான்றோர்-உத்தமர்கள், அஃது-அக்களங்கத்தை, ஆற்றார் - பொறுத்துக் கொள்ளாதவராய், ஒரு - தமக்கொரு, மாசு-குற்றம், உறின்-ஊழின்பயனுய் வந்தாலும், தெருமந்து - மனம்வருந்தி, தேய்வர் - அழிவர் எ-று.

சந்திரன் ஆகாயத்தில் விளங்குதல்போல், சான்றோர் நற்குடிப் பிறத்தலும், தன் நிலவால் தண்ணென்றிருத்தலும் இருளை யொழித்தலும்போல், தம்மொழிகளால் குளிர்தலும், அகவிருளைப் போக்குதலும், கருதி 'மன் ஒப்பர்' என்றார். மன்-என்றதால் சிறுபான்மை ஒவ்வாமை கொள்க. *மறு, மதிக்காயின் வளர்தலும் தேய்தலுமாகிய களங்கமும், சான்றோர்க்காயின் ஊழின்பயனாக வரும் பழியும் என்க; சிலேடையணி. உவமை கூறியவற்றுள் ஒன்றின் உயர்வு கூறியதால் இது வேற்றுமையணி. ஆற்றார் - வினைமுற்று, எச்சப் பொருளது. ஒப்பர் - திணைவழுவமைதி. (1)

152. † இசையு மெனினு மிசையா தெனினும்
வசைதீர வெண்ணுவர் சான்றோர்—விசையி
னரிமா வுளங்கிழித்த வம்பினிற் றீதோ
வரிமாப் பிழைப்பெய்த கோல்.

இ-ள். சான்றோர்-உத்தமர்கள், இசையும் எனினும்-தாம் செய்யக் கருதியது முடிக்கக்கூடுமாயினும், இசையாது எனினும் - எளி

* "குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போ லுயர்ந்து"—குறள் - 957.

† புறத்திரட்டு - 695.

தில் முடியாதாயினும், வசைதீர்-பழிப்புக்கிடம் இன்றி, எண்ணுவர்-பெரியதொரு காரியத்தையே செய்யச் சிந்திப்பர், (ஏனெனில்) விசையின் - வேகத்தோடு, நரிமா - நரியாகிய விலங்கின், உளம் - மார்பை, கிழித்த - எய்து கிழித்துவிட்ட, அம்பினின் - அம்பைவிட, அரிமா-சிங்கமென்னும் மிருகம், பிழைப்ப - இலக்குத்தவறிப் பிழைத்துப் போக, எய்த-செலுத்திய, கோல் - அம்பு, தீதோ-தீமையுடையதோ (இல்லை) எ-று.

பெரியோர் முயன்றால் * அரியவற்றையன்றி எளிதில் முடிப்பனவற்றைக் கருதார் என்றபடி. உம்மை, இரண்டும் முறையே உயர்வு இழிவு சிறப்பு. பலன் பெறுவதிலும், முயலும் வகையே சிறந்தது என்க. எண்ணுதல், முடித்தலையும் உட்கொண்டது. நரிமா, அரிமா என்க, இருபெயரொட்டு. உளம்-மனம். ஈண்டு மனம் இருப்பதாகக் கருதும் மார்பு; தானியாகுபெயர். அம்பினின்-ஐந்தனுருபு, எல்லைப்பொருளது. பிழைப்ப எய்த என்க, அகரம் தொகுத்தல் † நரியைத்தவறாது கொல்வதினும் சிங்கத்தைக்கொல்ல முயலுதல் பெருமையாம், அதுபோல் எளிய தொன்றை முடிப்பதிலும் அரியதை முயன்று தவறினும் சிறந்தது என வேறொரு பொருள் தருதலின் வேற்றுப்பொருள் வைப்பணி. ஓகாரம், எதிர்மறை. (2)

153. நரம்பெழுந்து நல்கூர்ந்தா ராயினுஞ் சான்றோர்
குரம்பெழுந்து குற்றங்கொண் டேறா—றுரங்கவறா
வுள்ளமெனு நாரினாற் கட்டி யுளவரையாற்
செய்வர் செயற்பா லவை.

இ-ள். நரம்பு-நரம்புகள், எழுந்து-(உடல் மெலிந்ததால்) மேலே உயர்ந்து தோன்றுமாறு, நல்கூர்ந்தார் ஆயினும்-வறுமை எய்தினவர் எனினும், சான்றோர்-நற்குணத்தினர், குரம்பு - நல்லொழுக்கத்தின் வரம்பினை, எழுந்து - கடந்து, குற்றம் - குற்றமான செய்கைகளை, கொண்டு-மேற்கொண்டு, ஏறார்-மிக்கு நடக்காமல், உரம்-அறிவென்னும் வலிய பொருளையே, கவறா-பற்றுக்கோடாகிய கருவியாகவும், உள்ளம் எனும் நாரினால் - முயற்சி என்னும் கயிற்றினால், கட்டி-மனதைப்பிணித்து, உளவரை-தம் வாழ்நாள் உள்ளவரைக்கும், செய்வர்-நல்லவற்றை இயற்றுவார்கள் எ-று.

---

* "பெருமை யுடையவ ராற்றுவா ராற்றின்
அருமை யுடைய செயல்"—குறள் - 975.

† "கானமுய லெய்த வம்பினில் யானை
பிழைத்தவே லேந்த லினிது"—குறள் - 772.

வறுமையால் பசி மிக்கு உடல் மெலிதலால் என்பும் நரம்பும் மேலே தெரியுமாதலின், * நரம்பெழுந்து என்றார். எழுதற்கு வறுமையே காரணமாதலின், எழுந்து, காரியப்பொருளது, வினை பெச்சம். குரம்பு-ஒழுக்கத்தின் எல்லை. குற்றம்-குற்றமான செய்கை, ஆகுபெயர். கவறு - பனைமட்டை, மற்றொன்றைப் பிணிப்பதற்கு அது பற்றுக்கோடாக உதவுதலின் அதுபோன்ற கருவி என்க. உரம்-வன்மை, ஈண்டு அறிவின் வன்மை. உளவகையால் - ஆயுள் உள்ளவரையும்; இனிப் பொருள் உள்ளவரையில் என்றும் கூறுப. அது சிறப்பின்மையறிக. இஃது உருவகவணி. (3)

154. †செல்வுழிக் கண்ணொருநாட் காணினுஞ் சான்றவர்
தொல்வழிக் கேண்மையிற் றோன்றப் புரிந்தியாப்பர்
நல்வரை நாட சிலநா ளடிப்படிற்
கல்வரையு முண்டா நெறி.

நல்வரை - நன்மைதரும் மலைகளடுத்த, நாட-நாட்டினை உடைய அரசனே, சான்றவர்-மேன்மக்கள், செல்வுழிக்கண்-தாம் செல்கின்ற இடத்தின்கண், ஒருநாள் காணினும் - நல்லொழுக்கத்தினரை ஒரு நாள் கண்டபோதிலும், தொலவழி - பழைய முறைமையில் வந்த, கேண்மையின் - நட்பைப்போல், தோன்ற - காணும்படி, புரிந்து - விரும்பி, யாப்பர் - நட்பினால் தம்முடன் பிணித்துக்கொள்வர், சில நாள் - சிலகாலமாக நீடித்து, அடிபடின் - காலடிபட்டுத் தேய்ந்தால், கல்வரையும்-கல்மலையிலும், நெறி உண்டாம்-வழி உண்டாகும் எ-று.

செல்வுழி - செல்லும் திசையில், இதில் வகரமெய் மெய்யீற் றுடம்படு மெய்யென்பர். தொல்வழி நட்பு - நட்புமுறையில் பலகால் பழகின தன்மை என்றபடி. யாத்தல் - கட்டுதல். கல்வரையுமுண் டாம் நெறி, அதுபோல் பலநாள் பழகினால் அதமருடைய நட்பும் உண்டாம் என்க; அதமர் பண்பினை உய்த்தறிய வைத்தலால் இது பிறிதுமொழிதலணி. கல்வரை என்றது கல்லின் வன்மையும் அது தேய்தலின் அருமையும் காட்ட. மலைக்கு நன்மையாவது, மலைபடு பொருள் தருதலும், நீர்வளம் தருதலும், நாட்டுக்கு அரணாதலும்.

155. ‡புல்லா வெழுத்திற் பொருளில் வறுங்கோட்டி
கல்லா வொருவ னுரைப்பவுங் கண்ணோடி
நல்லார் வருந்தியுங் கேட்பரே மற்றவன்
பல்லாரு ணாணல் பரிந்து.

---

* "நரம்பெழுந் துலறிய நிரம்பா யாக்கை"—புறம்.

† புறத்திரட்டு - 1120. ‡ புறத்திரட்டு - 1131.

இ-ள். எழுத்தின் புல்லா - இலக்கணத்தினைப் பொருந்தாத, பொருள் இல் - பொருளுணர்ச்சியில்லாத, வறுங்கோட்டி - வீணான கூட்டத்தில், கல்லா ஒருவன் - கற்கவேண்டியவற்றைக் கல்லாத ஒருவன், உரைப்பவும்-யாதேனும் உரைக்கின்றவற்றையும், நல்லார்-மேன்மக்கள், வருந்தியும் - அவற்றின் குற்றத்தினிமித்தம் வருத்த முற்றபோதிலும், மற்று அவன்-அவ் அறிவில்லாதவன், பல்லாருள்-கற்றறிந்த பலர்முன்பு, நாணல் - அவமான மடைதலுக்கு, பரிந்து-மனம் இரங்கி, கண் ஓடி - தாக்ஷிணியம் கொண்டு, கேட்பர் - விநய மாகக் கேட்பார்கள் எ-று.

கீழ்மக்கள் அறிவின்மையால் அவமான மடையும்படிச் சொல்லினும் மேன்மக்கள் அவர்களுக்கும் இரக்கம் காட்டுவர் என்றபடி. எழுத்தின் புல்லாக் கோட்டி என்க. எழுத்து - ஆகுபெயர்; இன் - சாரியை. வறுங்கோட்டி, அறிவில்லாதவரும் கூடுதலின். கோட்டி-* குழூஉ, வடசொற்றிரிபு. உரைப்ப - உரைப்பவற்றை. வினையாலணையும்பெயர். கண்ணோட்டம் - இரக்கம். நாணல் - நாணுதல், தொழிற்பெயர்; நாணற்குப் பரிந்து என்க. (5)

156. † கடித்துக் கரும்பினைக் கண்டகர நூறி
இடித்துநீர் கொள்ளினு மின்சுவைத்தே யாகும்
வடுப்பட வைதிறந்தக் கண்ணுங்—குடிப்பிறந்தார்
கூறார்தம் வாயிற் சிதைந்து.

இ-ள். கரும்பினை-கரும்பை, கடித்து-வாயாற் கடித்தும், கண்-கணுக்கள், தகர - உடையும்படி, நூறி - ஆலையிலிட்டு அரைத்தும், இடித்து - கல் முதலியவற்றால் நசுக்கியும், நீர் - சாற்றை, கொள்ளினும் - பிழிந்துகொண்டாலும், (அக்கருப்பஞ்சாறு) இன் - இனிய, சுவைத்தே-மதுரமுடையதே, ஆகும்-ஆம், (அதுபோல) வடுப்பட-குறறமுண்டாக, வைது - ஒருவர் இகழ்ந்து, இறந்தக்கண்ணும் - கடந்துசென்றாலும், குடிப்பிறந்தார் - நற்குடியிற் பிறந்தவர்கள், சிதைந்து-தம் குணம்கெட்டு, தம்-தம்முடைய, வாயில்-வாயினாலே, கூறார்-தீச்சொற்களைச் சொல்லார் எ-று.

கண்-கணு. நூறுதல்-அரைத்தல். சுவைத்து-சுவையுடையது: குறிப்பு ஒருமை வினைமுற்று. வடு - தம் மானத்துக்குப்பழி. இறந்

---

* "வெள்ளைக் கோட்டியும் விரகினி னொழியின்"—சிலப்.
"அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்"—குறள் - 401.
† புறத்திரட்டு - 1088.

தல் - கடந்து செல்லுதல். சிதைந்து-மன மொழி மெய்களில் சிதைவுற்று. வாய்மையும் தூய்மையுமே பேசும் இயல்புடைய தம் வாயால் தீச்சொல் கூறார் என்பது பட 'வாயில்' என மிகைபடக் கூறினார். இஃது எடுத்துக்காட்டுவமையணி. (6)

157. கள்ளார்கள் ளுண்ணார் கடிவ கடிந்தொரீஇ
எள்ளிப் பிறரை யிகழ்ந்துரையார்—தள்ளியும்
வாயிற்பொய் கூறார் வடுவறு காட்சியார்
சாயிற் பரிவ திலர்.

இ-ள். வடு - குற்றம், அறு - அற்ற, காட்சியார் - அறிவுடைய மேன்மக்கள், கள்ளார் - பிறர்பொருளைக் களவு செய்யமாட்டார், கள்ளுண்ணார் - கள்ளைக் குடிக்கமாட்டார், கடிவ - நூல்கள் நீக்கும் தீயனவற்றை, கடிந்து - தாமும் ஒழித்து, ஒரீஇ - விலகி, பிறரை - அயலாரை, எள்ளி - அவமதித்து, இகழ்ந்து - நிந்தித்து, உரையார் - சொல்லாதவராய், தள்ளியும் - தவறியும், வாயில் - வாயால், பொய் கூறார் - பொய் சொல்லமாட்டார், சாயில் - துன்பம் வந்தாலும், பரிவதிலர் - வருந்துவதிலர் எ-று.

கடிவ - இவையிவை தீயவை என்று நீக்குதல் வேண்டுமென நூல்கள் உணர்த்துவன. தள்ளுதல் - தவறுதல். "கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை" * என்றதுபோல. காட்சி - அகத்தின் கண்ணால் காண்பது. அறிவு சாயினும் என இழிவு சிறப்பும்மை தொகுத்தல்.

158. † பிறர்மறை யின்கட் செவிடாய்த் திறனறிந்
தேதிலா ரிற்கட் குருடனாய்த் தீய
புறங்கூற்றின் மூகையாய் நிற்பானேல் யாது
மறங்கூற வேண்டா வவற்கு.

இ-ள். பிறர்-அயலாருடைய, மறையின்கண் - இரகசியச்சொற் கேட்பதில், செவிடாய் - செவிடனாகவும், ஏதிலார் - அயலாருடைய, இல்கண் - மனையாளைக்காணும் இடத்து, குருடனாய்-குருடனாகவும், தீய-கொடிய, புறங்கூற்றின் - புறங் கூறுதலில், மூகையாய் - ஊமையாகவும், திறன் அறிந்து - நல்லொழுக்கத்தின் வகைத்தன்மையை உணர்ந்து, நிற்பானேல்-அவ்வழியில் நிலையாக ஒழுகினால், அவற்கு-அவனுக்கு, யாது அறம்-யாதொரு தருமமும், கூறவேண்டா - (பிற ரெடுத்துச், சொல்லவேண்டுவதின்று எ-று.

---

* குறள் - 290.

† புறத்திரட்டு - 1121. "மூங்கையாய்" என்றும் பாடம்.

மறை - பிறரறியலாகாத மறைவான விடயங்கள். செவிடு, இல்-ஆகுபெயர். இற்கண் குருடு: பிறர் மனைவியைக் காமத்துடன் காண்பதில் என்க. தீயகூற்று என்க, பெயரெச்சம்; தீயனவாகிய கூற்று என்று குறிப்புப் பெயராகவும் கூறுவர். புறங்கூற்று - ஒருவற்குப் பின்னால் அவனை யிகழ்ந்துரைத்தல். திறனறிந்து நிற்பானேல்- மேற்கூறிய நல்லவையன்றி ஏனை நல்லொழுக்கத்தின் தன்மையும் அறிந்து அதன்கண் ஒழுகினால். ஒழுகுதல் அருமையாதலின் நிற்பானேல் என்றார். யாது அறமும் என மாறுக: உயர்வு சிறப்பு. (8)

159. * பன்னாளுஞ் சென்றக்காற் பண்பிலார் தம்முழை
யென்னாணும் வேண்டுப வென்றிகழ்ப—வென்னாணும்
வேண்டினு நன்றுமற் றென்று விழுமியோர்
காண்டொறுஞ் செய்வர் சிறப்பு.

இ-ள். பண்பிலார் - மேன்மைகுண மில்லாதவர், தம்உழை-தம்மிடத்து, பன்னாளும் - பலநாளும், சென்றக்கால் - ஒருவர் சென்றுவரின், என்னாணும் - யாதாகிலும், வேண்டுப - தம்மிடம் விரும்புவார்கள், என்று - என்று கருதி, இகழ்ப - அவர்களை இகழ்வார்கள், விழுமியோர்-மேன்மக்கள், என்னாணும் - யாதாகிலும், வேண்டினும்-வேண்டினாலும், நன்று-நல்லது, (கருவோம்) என்று-என்று கருதி, காண்டொறும் - அவர்களைக் காணுந்தோறும், சிறப்பு - உபசாரம், செய்வர் - செய்வார்கள் எ-று.

இது கீழ்மக்கள் மேன்மக்கள் இயல்பு கூறியது. உழை - ஏழனுருபு, நன்று என்றது, கொடுத்தற்கு இசைதலும், அதற்கு மகிழ்ச்சியுறுதலும் குறித்தது. சிறப்பு - முகமன் உரைத்தல், உபசாரம் செய்தல். (9)

160. உடையா ரிவரென் றொருதலையாப் பற்றிக்
கடையாயார் பின்சென்று வாழ்வ—துடைய
பிலந்தலைப் பட்டது போலாதே நல்ல
குலந்தலைப் பட்ட விடத்து.

இ-ள். இவர் உடையார் என்று - இவர் பொருள் உடையவர் என்று கருதி, ஒரு தலையாக - ஒரே துணிவுடன், பற்றி - பிடித்து, கடையாயர் பின்சென்று - இழிகுணமுடையவர்கள் பின் தொழுது சென்று, வாழ்வர்-உயிர் வாழ்வார்கள், (அவ்விதமின்றி) நல்ல குலம்-சிறந்த குலத்தில் பிறந்தாருடன், தலைப்பட்ட இடத்து - சேர்ந்த

* புறத்திரட்டு - 1133.

போது, உடைய பிலம் - வேண்டியன எல்லாம் பொருந்திய சுரங் கத்தை, தலைப்பட்டது-அடைந்ததை, போலாதே-ஒத்திராதோ எ-று

கீழ்மக்களைச் சேர்வதினும் மேன்மக்களை அடைந்தால் வேண்டி யன அளிக்கும் சுரங்கத்தை அடைந்ததை ஒக்கும் என்றபடி. பொருளை உடையார் என்றும், குணத்தில் கடையார் என்றும் கொள்க. ஒருதலை-நிச்சயம். உடையார்-குறிப்பு வினைப்பெயர். பின் சென்று வாழ்தல் * "தொழுதுண்டு பின் செல்பவர்" என்றது போல். பிலம்-சுரங்கம். தலைப்படல்-அடைதல். இனித்தலை ஏழனுரு பாகக்கொண்டு, படல், அடைதல் எனினுமாம். குலம் - குலத்தி னர்க்கு ஆகுபெயர். போலாதே - உவமை, ஏகாரம் உடன்பாட்டுப் பொருள் தரும் வினா. (10)

மேன்மக்கள் முற்றிற்று.

---

## 17-ஆம் அதிகாரம். பெரியோரைப் பிழையாமை

அஃதாவது பெரியோரிடம் குற்றமுண்டாகும்படி ஒழுகாமை. மேன்மக்கள் குணமறிந்த பின்னரே பிழைபடாது ஒழுகலாமாதலின், இது முன்னதிகாரத்தின் பின் வைக்கப்பட்டது.

161\. † பொறுப்பரென் றெண்ணிப் புரைதீர்ந்தார் மாட்டும்
வெறுப்பன செய்யாமை வேண்டும்—வெறுத்தபி
ணூர்க்கு மருவி யணிமலை நன்னாட
பேர்க்குதல் யார்க்கு மரிது.

இ-ள். அருவி-நீரருவிகள், ஆர்க்கும்-ஒலிசெய்து பாயும், அணி மலை-அழகிய மலைகள் சூழ்ந்த நாட-நாட்டுக்கு அரசனே, பொறுப் பர் என்று எண்ணி-நமது குற்றங்கள் இவர் பொறுத்துக்கொள்வர் என்று கருதி, புரைதீர்ந்தார் மாட்டும் - குற்றம் நீங்கிய பெரியார்க ளிடத்திலும், வெறுப்பன - அவர்கள் வெகுண்டு வெறுக்கத்தக்க வற்றை, செய்யாமை - செய்யாதிருத்தல், வேண்டும் - அவசியமாம், (ஏனெனில்) வெறுத்தபின் - அவர்கள் வெறுப்புற்ற பிறகு, பேர்க் குதல் - அவ்வெறுப்பை மாற்றுதல், யார்க்கும் - எத்தகையார்க்கும், அரிது-முடியாது எ-று.

---

* குறள் - 1033.

† புறத்திரட்டு - 1030. "பேர்த்தரல்" என்றும் பாடம்.

புரைதீர்ந்தார் - குற்றம் நீங்கினவர்; வினையாலணைந்தபெயர். உம்மை-உயர்வு சிறப்பு. இயல்பிற் பொறுப்பவரெனினும் * அவரிடமும் பொறுக்கலாகாதவை செய்யற்க என்றபடி. பேர்க்குதல் - மாற்றுதல். நாட-ஆடூஉ முன்னிலை. (1)

162. † பொன்னே கொடுத்தும் புணர்தற் கரியாரைக்
கொன்னே தலைக்கூடப் பெற்றிருந்து—மன்னோ
பயனில் பொழுதாக் கழிப்பரே நல்ல
நயமி லறிவி னவர்.

இ-ள். பொன்னே - பொன்னையே, கொடுத்தும் - காணிக்கையாகக் கொடுத்தும், புணர்தற்கு அரியாரை-நட்புகொண்டு கூடுதற்கு அருமையான பெரியோர்களை, நல்ல நயம் இல்-சிறந்த இன்பத்தோடு பொருந்துதல் இல்லாத, அறிவின் அவர் - அறிவுடைய கீழ்மக்கள், கொன்னே-ஒன்றும் கொடாமலே, தலைகூடப் பெற்றிருந்தும் - நட்பு கொண்டு சேர நல்வினை பெற்றிருந்தும், அன்னோ - அந்தோ, பயனில் பொழுதா - வீண்காலமாக, கழிப்பரே - போக்குவார்களே (என்ன பேதைமை) எ-று.

பொன்னே-ஏகாரம் உயர்வு சிறப்பு. கொடுத்தும் புணர்தற் கரியார் என்றதால் பொருளாலும் அவர் நட்பு பெறற்கருமை காட்டியது. கொன்னே - பயனின்மை குறிக்கும் இடைச்சொல்; ஈண்டு நட்பை முயற்சியின்றி அடைதலைக் குறித்தது. பெரியாரால் பெறக்கூடிய நன்மொழியும் ஒழுக்கமும் பெறுமையால் பயனில்பொழுது என்றார். கழிப்பரே-ஏகாரம் இரக்கம்; 'அன்னோ'வும் அது. (2)

163. ‡ அவமதிப்பு மான்ற மதிப்பு மிரண்டு
மிகைமக்க ளான்மதிக்கற் பால—நயமுணராக்
கையறியா மாக்க ளிழிப்பு மெடுத்தேத்தும்
வையார் வடித்தநூ லார்.

இ-ள். அவமதிப்பும்-தம்மைத் தாழ்வாக மதித்தலும், ஆன்ற மதிப்பும்-நன்கு மதித்தலும், இரண்டும்- ஆகிய இருவகையும், மிகை மக்களால் - மேன்மக்களால், மதிக்கற்பால - மதித்துக் கூறப்படும் தன்மையுடையன, (அன்றி) நயம் உணரா - பிறரது குணங்களின் நன்மை உணராத, கையறியா - முறைபறியாத, மாக்கள் - அறிவிலி

* குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது.—குறள் - 29.

† புறத்திரட்டு - 1034.

‡ புறத்திரட்டு - 1032. 'மிகன் மக்கள்' என்றும் பாடம்.

கள், இழிப்பும்-இழிவா யுரைத்தலும், எடுத்து ஏத்தும்-குணங்களை விசேடித்துப் புகழ்தலும், வடித்த நூலார் - நூல்களை யாராய்ந்தறிந்தவர், வையார்-மனதிற் கொள்ளார் எ-று.

மதிக்கற்பால - புகழும் இகழும் செய்தற் குரியவர் பெரியோர்களே என்றபடி. பால - குறிப்புப்பன்மை வினைமுற்று. நயம்-குணத்தின் பண்பு. கையறிதல் - இந்தகையார்க்கு இன்ன செய்வதென்று முறையறிதல். உணரா மாக்கள், அறியா மாக்கள் என்க. மாக்கள்-விலங்கின் தன்மையினரெனவே அறிவிலிகள் எனப்பட்டது. சிறியோர் இகழ்தலைப் பெரியோர் கொள்ளார் எனினும், பெரியோர்க்குப் பிழைசெய்தல் கூடாது என்பது குறிப்பு. வடித்த நூலார் - நூல் வடித் துணர்ந்தவர்: வடமொழி முடிபு. வடித்தல்-கற்றாராய்தல். (3)

164. * விரிநிற நாகம் விடருள தேனு
முருமின் கடுஞ்சினஞ் சேணின்று முட்கு
மருமை யுடைய வரண்சேர்ந்து முய்யார்
பெருமை யுடையார் செறின்.

இ-ள். விரி-படம் விரிக்கும், நிறம்-ஒளியுடைய, நாகம்-பாம்பு, விடர் உளது ஏனும்-வெடிப்பு நிலத்துள் ஒளிந்துள்ளது என்றாலும், உருமின்-இடியின், கடும் சினம் - கொடிய கோபத்தை ஒத்த ஓசை, சேண் நின்றும் - ஆகாயத்தில் ஒலிதது நிற்கவும், உட்கும்-அஞ்சும், (அதுபோல) பெருமை உடையார் - மேன்மக்கள், செறின் - கோபித்தனராயின், அருமை உடைய-யாதும் அடைதற்கரிய, அரண்சேர்ந்தும் - காவலுள்ள இடத்தை அடைந்தும், உய்யார் - † அக்கோபத்திற்குத் தப்பி உயிர் வாழமாட்டார் எ-று.

எடுத்துக்காட் டுவமையணி. நாகம் - வடசொல். விடர் - நிலப் பிளப்பு; புற்றுமாம். உரும் இன்-ஆறனுருபு. சினம்-இடியொலிக்கு இலக்கணை. நின்றும் - நிற்கவும் என எச்சத்திரிபு. உம்மை, உயர்வு சிறப்பு; சேர்ந்தும் என்பதும் அது. அடைதற்கருமை என்க. அரண்-காவல், அதை உடைய இடத்துக்கு ஆகுபெயர். (4)

165. ‡ எம்மை யறிந்திலி ரெம்போல்வா ரில்லென்று
தம்மைத்தாங் கொள்வது கோளன்று—தம்மை
அரியரா நோக்கி யறனறியுஞ் சான்றோர்
பெரியராக் கொள்வது கோள்.

* புறத்திரட்டு - 1031.

† " இறந்தமைந்த சார்புடையா ராயினு முய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின் "—குறள் - 900.

‡ புறத்திரட்டு - 1033. நாலடி - 340, குறள் - 429.

இ-ள். எம்மை-எமது சிறப்பை, அறிந்திலீர் - அறிந்தீரல்லீர், எம்போல்வார்-எங்களை நிகர்த்தவர், இல்லென்று-இவ்வுலகில் இல்லை யென்று, தம்மைத்தாம் - தங்களைத்தாமே, கொள்வது - உயர்த்திக் கொள்வது, கோளன்று-கொள்கையன்று, அறன்-தருமத்தை, அறி யும்-உணரும், சான்றோர்-மேன்மக்கள், தம்மை-தங்களை, அரியரா- அரிய குணங்களுடையராக, நோக்கி-கருதி, பெரியரா-பெரியோராக, கொள்வது-ஏற்றுக்கொள்வதே, கோள்-கொள்கை எ-று.

எம்மை - செருக்கால் எழுந்த தன்மைப்பன்மை. கோள் - கொள்கை, ஈண்டுப் பெருமை; முதனிலை திரிந்த தொழிற்பெயர். அரியர்-குறிப்புப்பெயர். அருமையாவது பிறர்க்கு உபகாரியாயிருத் தல். நோக்குதல் - மதித்தல். கொள்வதே எனப் பிரிநிலை ஏகாரம் தந்துரைக்க. (5)

166. நளிகடற் றண்சேர்ப்ப நாணிழற் போல
விளியுஞ் சிறியவர் கேண்மை—விளிவின்றி
அல்கு நிழற்போ லகன்றகன் றோடுமே
தொல்புக ழாளர் தொடர்பு.

இ-ள். நளி - பெருமையுடைய, கடல்-கடலின், தண்-குளிர்ந்த, சேர்ப்ப - துறையையுடைய அரசனே, சிறியவர் - கீழோரது, கேண்மை-நட்பு, நாள் - உதயகாலத்து, நிழற்போல - நிழலைப்போல, விளியும்-குறைபும், தொல்-பழைய, புகழாளர் - கீர்த்தியுடைய பெரி யோர்களின், தொடர்பு - நட்பு, விளிவின்றி - குறைவின்றி, அல்கு நிழற்போல் - தங்குகின்ற உச்சிக்காலத்து நிழலைப்போல, அகன் றகன்று-மேன்மேலும் வளர்ந்து, ஓடும்-நீளும் எ-று.

நளி-* உரிச்சொல். சேர்ப்ப-ஆூஉ முன்னிலை. நாள் - ஈண்டு உதயகாலம். அல்குதல் - தங்குதல்; உதயகாலமுதல் நிழல் குறை தலும் உச்சிவேளையில் நிழல் காலடியில் தங்கி, அதன்பின் வளர்த லும் இயல்பாதலின் அல்குநிழல்-தங்கும் நிழல் எனப்பட்டது. விளி வின்றி அல்கும் என்க. இனி, முற்பகல் பிற்பகல் நிழலென்று உரைப்பாரு முளர். அகன்று: இரட்டித்தது மிகுதிபற்றி. ஓடுதல்- நீளுதல். இது முற்றுவமையணி. (6)

167. † மன்னர் திருவு மகளி ரெழினலமுந்
துன்னியார் துய்ப்பர் தகல்வேண்டா—துன்னிக்

---

* தடவுங் கயவும் நளியும் பெருமை—(தொல் - உரிச்)

† புறத்திரட்டு - 798.

குழைகொண்டு தாழ்ந்த குளிர்மர மெல்லா
முழைதங்கட் சென்றார்க் கொருங்கு.

இ-ள். குழைகொண்டு-தளிர்கள் செழிக்கக்கொண்டு, தாழ்ந்த-கவிந்துள்ள, குளிர்மரம் எல்லாம் - குளிர்தரும் மரங்களெல்லாம், தம்கண்-அம்மரத்தினிடத்து, துன்னி-நிழலுக்காக நெருங்கி, சென்றார்க்கு-அடைந்தவர் யாவர்க்கும், ஒருங்கு உழை-வேற்றுமையின்றி ஒருபடித்தான இடமாம், (அதுபோல) மன்னர் திருவும் - அரசர்களது செல்வமும், மகளிர்-பொது மகளிரின், எழில் நலமும்-வளர்ச்சியொடு கூடிய அழகும், துன்னியார் - அம்மன்னரையும் மகளிரையும் நெருங்கினவர், துய்ப்பர் - அத்திருவையும் நலத்தையும் நுகர்வர், தகல் வேண்டார் - துன்னுபவர் தகுதியுடையவர் என்பது வேண்டுவதில்லை எ-று.

எடுத்துக்காட்டுவமையணி. திரு - செல்வம். பொருளிற் பெரியார் மன்னராதலின், அவர்க்கும் பிழைசெய்தல் கூடாது என்றபடி. மகளிர் - ஈண்டுப் பொதுமகளிர். எழில் - வளர்ச்சி. தகல் - தகுதியுடைமை. திருவும் நலமும் துய்ப்பர் என ஒருவினை முடிபு கொண்டதால் ஒப்புமைக்கூட்ட வணியுமாம். (7)

168. தெரியத் தெரியுந் தெரிவிலார் கண்ணும்
பிரியப் பெரும்படர்நோய் செய்யும்—பெரிய
உலவா விருங்கழிச் சேர்ப்பயார் மாட்டுங்
கலவாமை கோடி யுறும்.

இ-ள். பெரிய - பெரிதாகிய, உலவா -நீர்வற்றாத, இரும் கழி-மிக்க கழியின், சேர்ப்ப - துறையுடைய அரசனே, தெரிய - நன்கு விளங்கும்படி, தெரியும் - ஆய்ந்தறியும், தெரிவு இலார் கண்ணும்-ஆராய்ச்சி இல்லாதவரிடத்திலும், பிரிய - நட்புகொண்டு பின்னர்ப் பிரிந்தால், பெரும்படர் நோய்-மிக்க நினைவினாலாகிய நோயை, செய்யும் - உண்டாக்கும், (ஆதலின்) யார்மாட்டும் - யாவருடனும், கலவாமை-(கூடிப் பிரிவதைவிட) நட்புக்கொள்ளாமையே, கோடி உறும்-பன்மடங்கு நன்மை பொருந்தும் எ-று.

கற்றவற்றையும் பெரியோர் ஒழுக்கத்தையும் ஆராய்ந்தன்றி அறிவு முதிராதாகலின் தெரியத்தெரியும் தெரிவு என்றார். தெரிவு-பண்பு. கண்ணும்-உம்மை, இழிவு சிறப்பு. பிரிய - காரணப்பொருளது. நண்பருடன் பிணங்கிப் பிரிந்ததையே எப்பொழுதும் சிந்தித்து அதனால் மனநோய் கொள்ளுதலால் பெரும்படர்நோய் என்றார். படர்-உள்ளல்; உரிச்சொல். சேர்ப்ப-ஆகுபெயர் முன்னிலை. கலந்து

பிரிதலினும் * கலவாமை கோடியுறும் என்க. மிக்க அளவுக்குக் கோடி என்னும் எண் இலக்கணை. (8)

169. † கல்லாது போகிய நாளும் பெரியவர்கட்
செல்லாது வைகிய வைகலு—மொல்வ
கொடாஅ தொழிந்த பகலு முரைப்பிற்
படாஅவாம் பண்புடையார் கண்.

இ-ள். கல்லாது - படித்தற் குரியவற்றைக் கற்காது, போகிய-வீணே கழிந்த, நாளும்-காலமும், பெரியவர்கண் - மேன்மக்கள்பால், செல்லாது - அவர் குணத்தைக் கற்பதற்குச்சென்று வழிபடாமல், வைகிய-தங்கிய, நாளும்-காலமும், ஒல்வ - தம்மால் இயன்றவற்றை, கொடா அது-இரப்பவர்க்குக் கொடுக்காமல், ஒழிந்த பகலும்-கழிந்த காலமும், உரைப்பின்-விவரிப்பின், பண்புடையார் மாட்டு - நற்குணமும் ஒழுக்கமுமுடையவர்பால், படாஅவாம்-உண்டாகமாட்டா எ-று.

எனவே இவை கீழ்மக்கட்பால் நிகழ்வன என்க. செல்லுதல்-அவரை வழிபடுதற்கு, வைகுதல்-வீணே இருத்தல். நாள், வைகல், பகல்-இவை காலத்தைக் குறித்தன; ஒரு பொருளையே குறித்தலால் பொருள் பின் வருநிலையணி. படுதல்-உண்டாதல். படாஅ, கொடாஅ, முறையே இசைநிறை, இன்னிசை அளபு. (9)

170. பெரியார் பெருமை சிறுதகைமை யொன்றிற்
குரியா ருரிமை யடக்கம்—தெரியுங்காற்
செல்வ முடையாருஞ் செல்வரே தற்சேர்ந்தா
ரல்லல் களைப வெனின்.

இ-ள். தெரியுங்கால் - ஆராயுமிடத்து, பெரியார் - மேன்மக்களது, பெருமை - பெருமைக்குணமாவது, சிறு தகைமை-செருக்கும் தற்பெருமையுமின்றிப் பணிவுடையராயிருத்தல், ஒன்றற்கு - கல்வி முதலியவற்றுள் ஒன்றினுக்கு, உரியார் - உரிமை யுடையவரது, உரிமை - உரிமையாவது, அடக்கம் - மனமொழி மெய்கள் அடங்கியிருத்தல், தற் சேர்ந்தார்-தம்மை நாடி அடைந்தவர்களது, அல்லல்-வறுமைத் துன்பத்தை, களைப எனின்-நீக்குவார்கள் என்றால், செல்வம் உடையாரும்-செல்வத்தைப் படைத்துள்ளவர்களும், செல்வரே-செல்வத்தை உடையவர்களே யாவர் எ-று.

'செல்வர்க்கழகு செழுங்கிளைதாங்குதல்' (நறுந்தொகை) என்றது மறிக. சிறு தகைமை - அற்பத்தனம் எனினுமாம். ஒன்றற்கு

* பசைந்தாரைத், தீர்தலிற் றீப்புகுத லன்று—(நான்மணி.)
† புறத்திரட்டு - 1132.

உரியார் - கல்வி, செல்வம், ஆண்மை முதலியவற்றுள் யாதேனு மொன்றை மிக்கு உடையவர். தற்சேர்ந்தார் - பன்மை வரவேண்டு வது ஒருமையில் வந்தது பால்வழுவமைதி. உடையார் - குறிப்பு வினைப்பெயர். செல்வர் - குறிப்பு வினைமுற்று. (10)

பெரியோரைப் பிழையாமை முற்றிற்று.

---

## 18-ஆம் அதிகாரம். நல்லினஞ்சேர்தல்

அஃதாவது நற்குணமுடையாரினத்தில் சேர்ந்து ஒழுகுதல். நற்குணமாவது, தாமேயன்றித் தம்மைச் சேர்ந்தவரையும் நல் லொழுக்கத்தில் ஒழுகச்செய்தல். பெரியோரைப் பிழையாமல் அவர் நட்பையும் போற்றவேண்டுமாதலின் இது மேலை யதிகாரத்தின் பின் வந்தது.

171. * அறியாப் பருவத் தடங்காரோ டொன்றி
நெறியல்ல செய்தொழுகி யவ்வு—நெறியறிந்த
நற்சார்வு சாரக் கெடுமே வெயின்முறுகப்
புற்பனிப் பற்றுவிட் டாங்கு.

இ-ள். அறியா பருவத்து - நன்மை தீமை அறியலாகாத பிரா யத்தில், அடங்காரோடு - மனமொழி மெய் அடக்கமில்லாதவரோடு, ஒன்றி-சேர்ந்திருந்து, நெறியல்ல-நல்வழி யல்லாதவற்றை, செய்து- இயற்றி, ஒழுகியவும் - ஒழுகியதனால் விளைந்த குற்றங்களும், நெறி அறிந்த - நல்வழியை உணர்ந்த, நல் சார்வு - நல் இனத்தை, சார- சேர்ந்தொழுக, புல் பனி - புல் நுனியில் பொருந்திய பனித்துளி, வெயில் முறுக-சூரியவெப்பம் அதிகரிக்க, பற்றுவிட்ட ஆங்கு - அப் பற்றினைவிட்டு நீங்கியதை ஒப்ப, கெடுமே-அழியும் எ-று.

அறியாப் பருவம்-பகுத்தறிவற்ற வயது. அடங்கார்-சிற்றினத் தார்; வினையாலணையும் பெயர். அல்ல, ஒழுகிய-குறிப்புவினைப் பெயர் கள். நெறி-நூல்கள் விதித்த நடைமுறை. சார்வு-இனம். ஒழுகி யவ் வும் - வகரம், விரித்தல் விகாரம். சார்வு-சாரத்தக்கவர், ஆகுபெயர். கெடுமே - ஏகாரம் தேற்றம். பற்று-பற்றி(த்தங்கி) யிருத்தல். விட் டால் ஆங்கு என வினையெச்ச விகுதி தொகுத்தல், ஆங்கு - உவம வுருபு. இஃது உவமையணி. (1)

---

* புறத்திரட்டு - 580. "நெறியறிந்து" என்றும் பாடம்.

172. * அறிமி னறநெறி யஞ்சுமின் கூற்றம்
பொறுமின் பிறர்கடுஞ்சொற் போற்றுமின் வஞ்சம்
வெறுமின் வினைதீயார் கேண்மையெஞ் ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல்.

இ-ள் அறம்-தருமத்தின், நெறி-வழியை, அறிமின்-அறியுங்கள், கூற்றம்-இயமனுக்கு, அஞ்சுமின்-பயப்படுங்கள், பிறர்-அயலாருடைய, கடுஞ்சொல் - கொடுஞ்சொல்லை, பொறுமின் - பொறுத்துக் கொள்ளுங்கள், வஞ்சம்-பிறர் செய்யும் வஞ்சனையை, போற்றுமின் - வாராதபடித் தடுத்துக்கொள்ளுங்கள், வினை - தீவினை செய்வதில், தீயார்-கொடியவரது, கேண்மை - நட்பினை, வெறுமின் - வெறுத்து நீக்குங்கள், எஞ்ஞான்றும்-எப்பொழுதும், பெரியார் - நன்மக்களது, வாய்ச்சொல்-வாயிற் பிறக்கும் நன்மொழியை, பெறுமின் - பெறுவதற்கு முயலுங்கள் எ-று.

அறநெறி யறிதலாவது, அறிந்து ஒழுகுதல். இயமனை அஞ்சுதல், இறப்புண்மை உணர்ந்து நல்வினை புரிதற்பொருட்டு. கடுஞ்சொல், செவிக்கின்னாச்சொல். பொறுத்தல் - வெகுண்டு கடுஞ்சொல் சொல்லா தடங்குதல். பிறரிடத்தன்றித் தன்னிடமும் வஞ்சம் போற்றுமின் என்க. போற்றுதல் - வாராமற் றடுத்தல். தீவினையார் என்று மாறினுமாம். அறம், முதலியன அமைந்தாலன்றிப் பெரியோர் கேண்மையும் அவர் மொழியும் பெற இயலாது என ஈற்றில் உரைத்தார். எஞ்ஞான்றும்-முன் உரைத்தவற்றுக்குக் கூட்டியுரைப்பினுமமையும். சொல் - நன்மொழி, ஆகியுமாம். பெறுதல், அடைதலோடு அவ்வாறு ஒழுகுதலும் அடங்கிற்று. (2)

173. அடைந்தார்ப் பிரிவு மரும்பிணியுங் கேடு
முடங்குடம்பு கொண்டார்க் குறலாற்—றொடங்கிப்
பிறப்பின்னா தென்றுணரும் பேரறிவி னாரை
யுறப்புணர்க வம்மாவென் னெஞ்சு.

இ-ள். அடைந்தார் - சேர்ந்துள்ள நட்பு உறவின்முறையாரை, பிரிவும்-பிரிதலும், அரு பிணியும்-பொறுத்தற்கு அரிய நோய்களும், கேடும் - பிறதுன்பங்களும், உடம்பு கொண்டார்க்கு - சரீரத்துடன் கூடிய மாந்தர்க்கு, உடங்கு - ஒருசேர, உறலால் - பொருந்துவதால், தொடங்கு-வினை ஆரம்பமுதலாக, பிறப்பு-உலகில் பிறத்தலே, இன்னாது - இனிமை தருவதன்று, என்று உணரும் - என்று உய்த்துணரும், பேர் அறிவினாரை - பெரிய அறிவுடையோரை, என்

* புறத்திரட்டு - 561.

நெஞ்சே - என் மனமே, அம்மா உறப்புணர்க - பெரிதும் நீ பொருந்தச் சேர்வாயாக எ-று.

அடைந்தார்-தம்மை அடைந்தவர்; ஈண்டு, நண்பினர் உறவினர் முதலியோர்; வினைப்பெயர். கொண்டாரும் அது. உம்மை எண் உம்மை உறலால் இன்னு என்க. தொடங்கி-ஆரம்பித்து, வினையின் பயன் தொடங்கி என்றபடி. அம்மா-வியப்புக் குறிச்சொல். யாக்கை நிலையாமை யுணர்ந்து நல்வினைஞ்சேர்க என்றபடி. (3)

174. * இறப்ப நினையுங்கா லின்னா தெனினும்
பிறப்பினை யாரு முனியார்—பிறப்பினுட்
பண்பாற்று நெஞ்சத் தவர்களோ டெஞ்ஞான்று
நண்பாற்றி நட்கப் பெறின்.

இ-ள். பிறப்பினுள்-இப்பிறவியில், பண்பு ஆற்றும்-நற்செயல் செய்யும், நெஞ்சத்தவர்களோடு-மனதை உடையவர்களோடு, நண்பு ஆற்றி-நட்புச்செய்து, நட்கப்பெறின் - அவர்களும் தம்முடன் நட்பு கொண்டால், பிறப்பினை - இழிந்த இப் பிறப்பின் தன்மையை, நினையுங்கால்-நன்கு சிந்தித்தால், இறப்ப இன்னாது எனினும் - மிகவும் இனிமை யில்லாதது என்று தெரிந்தாலும், யாரும் முனியார்-யாரும் வெறுக்கமாட்டார் எ-று.

பிறப்பு இறப்ப இன்னாது என மாறுக. முனிதல்-வெறுத்தல். பண்பு - ஈண்டு நற்செயல். தாம் உள்ளன்புடன் நட்பு கொள்ளுதலோடு அவர்களும் தம்மிடம் நட்புகொள்ளுதல் வேண்டுமென்பது கருதி, நண்பாற்றி நட்கப்பெறின் என்றார். நல்வினைத்தினால் பிறப்பும் சிறப்பெய்து மென்றபடி. (4)

175. † ஊரங் கணநீ ருரவுநீர்ச் சேர்ந்தக்காற்
பேரும் பிறிதாகித் தீர்த்தமா—மோருங்
குலமாட்சி யில்லாருங் குன்றுபோ னிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து.

இ-ள். ஊர் அங்கணம் நீர் - ஊரிலுள்ள சலதாரையின் நீர், உரவு நீர் - சிறப்புடைய (யாறு குளங்களின்) நீரை, சேர்ந்தக்கால்-சேர்ந்து கலந்துவிட்டால், பேரும்-அச்சலதாரை நீரின்பேரும், பிறிதாகி-மாறுபட்டு, தீர்த்தம் ஆம்-புண்ணியதீர்த்தம் ஆகிவிடும், ஓரும்-உணரத்தக்க, குலம்மாட்சி - நற்குடியின் பெருமை, இல்லாரும்-இல் லாத இழிகுணத்தவரும், நலம் மாட்சி - நற்குணமுடன் பெருமை

* புறத்திரட்டு - 581. † புறத்திரட்டு - 557.

பொருந்திய, நல்லாரை-நல்லவர்களாகிய உயர்குடிப் பிறந்தாருடன், சார்ந்து - நட்புகொண்டு, குன்றுபோல் - மலையைப்போல, நிற்பர் - நிலைத்து இருப்பார்கள் எ-று.

அங்கணம், தீர்த்தம்: வடசொல். பேரும்-இழிவு சிறப்பும்மை. ஓரும் மாட்சி என்க; இனி, அசையென்பாரு முளர். இல்லார் - குறிப்பு வினைப்பெயர். குன்றுபோல்: கல்வியால் அளக்கலாகாமையும், பழியின்மையால் அசைவின்மையும், நல்லொழுக்கத்தால் யாவர்க்கும் விளக்கமாயிருத்தலும் கொள்க. இஃது எடுத்துக்காட்டுவமையணி. (5)

176. *ஒண்கதிர் வாண்மதியஞ் சேர்தலா லோங்கிய
அங்கண் விசும்பின் முயலுந் தொழப்படூஉங்
குன்றிய சீர்மைய ராயினுஞ் சீர்பெறுவர்
குன்றன்னார் கேண்மை கொளின்.

இ-ள். ஓங்கிய - உயர்ந்த, அம் கண் - அழகிய இடம் அகன்ற, விசும்பின்-ஆகாயத்தில், ஒண் கதிர்-விளக்கமாகிய கிரணங்களுடைய, வாள்மதியம்-ஒளிமிக்க சந்திரனை, சேர்தலால்-அடைந்திருத்தலால், முயலும் தொழப்படூஉம் - முயலும் யாவராலும் வணங்கப்படும், (அதுபோல) குன்றிய சீர்மையர் ஆயினும் - சிறப்புக் குறைந்தவர்களா யிருந்தாலும், குன்று அன்னார்-கல்வி முதலியவற்றில் மலையையொத்த நன்மக்களது, கேண்மை பெறின் - நட்பினை அடைந்தால், சீர்பெறுவர்-அவரும் தொழத்தக்க சிறப்பு அடைவார்கள் எ-று.

இதுவும் எடுத்துக்காட்டுவமையணி. கதிர்-நிலாப்பிழம்பு. ஒள் கதிர்வாள் மதி என்றது, அதன் மிக்க ஒளியுடைமை குறித்தற்பொருட்டு. உதயமதியைத் தொழுதல் மரபு. சந்திரனிடத்து தோன்றும் களங்கத்தை மறு என்றும், முயல் என்றும், மரம் என்றும் உரைத்தல் கவிமரபு. முயலும், சீர்மையராயினும்: உம்மை, இழிவு சிறப்பு. அளபெடை, இன்னிசை. சீர்மை குன்றியவர் என மாறுக; வடமொழி முடிபு. குன்றன்னார்: மேல், 'குன்றுபோல்' (175) என்றதுபோலக் கொள்க. சீர்-சிறப்பு. (6)

177. †பாலோ டளாயநீர் பாலாகு மல்லது
நீராய் நிறந்தெரிந்து தோன்றாதாந்—தேரிற்
சிறியார் சிறுமையுந் தோன்றாதா நல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து.

---

* புறத்திரட்டு - 558

† புறத்திரட்டு - 559. 'அல்லதை' என்றும் பாடம்.

இ-ள். பாலோடு-பாலுடன், அளாய நீர்-கலந்தநீர், பாலாகும்-பாலேயாகும், அல்லது - அல்லாமல், நீராய்-நீராகவே நின்று, நிறம் தெரிந்து - தன் நிறம்மட்டும் விளங்கி, தோன்றாது - காணப்படாது, (அதுபோல) தேரில் - ஆராயுமிடத்து, நல்ல-நற்குணமுடைய, பெரியார்-பெரியோரின், பெருமையை-பெருமையுடைய நட்பை, சார்ந்து-சேர்வதால், சிறியார் - இழிகுணத்தோருடைய, சிறுமையும் - இழிதன்மையும், தோன்றாது-வெளிப்படாது மறையும் எ-று.

இதுவும் எடுத்துக்காட்டுவமை. அளாய - பெயரெச்சம்; இதில் யகரம், இறந்தகால இடைநிலை. ஆம்-இரண்டும் அசை. நல்ல என்றதால், நற்குணம் என்க. பெருமை-பெருமைதரும் நட்பு. (7)

178. * கொல்லை யிரும்புனத்துக் குற்றி யடைந்தபு
 லொல்காவே யாகு முழவ ருழுபடைக்கு
 மெல்லியரே யாயினு நற்சார்வு சார்ந்தார்மேற்
 செல்லாவாஞ் செற்றார் சினம்.

இ-ள். கொல்லை-காட்டின்கண் உள்ள கொல்லைகளினும், இரும்-பெரிய, புனத்தும்-வயல்களிலும், குற்றி-மரக்கட்டையை, அடைந்த புல்-அடுத்து வளர்ந்த புற்கள், உழவர்-உழவர்கள், உழு-உழுகின்ற, படைக்கு - கலப்பையாகிய கருவிக்கு, ஒல்காவே ஆகும் - அசையாதனவேயாகும், மெல் இயரே ஆயினும்-மென்மையான இயல்புடையவரே (வலியற்றவரே) என்றாலும், நல் சார்வு-நல்வினத்தவரது சார்பாகிய ஆதரவை, சார்ந்தார்மேல் - அடைந்து இருப்பவர்கள்பால், செற்றார் சினம்-பகைகொண்டவர்களது கோபம், செல்லாவாம்-பயன்படமாட்டா எ-று.

கொல்லையும் புனமும் என்க. குற்றி-குறுமை என்னும் பண்பினடியாகப் பிறந்தபெயர். உழுபடை - கலப்பை. மெல்லியர் - வீரத்தன்மை யில்லாதவர், வலியல்லாதவர். சார்ந்தார் - வினையாலணைந்த பெயர். செற்றார்-பகைவர். இதுவும் எடுத்துக்காட்டுவமையணி. (8)

179. நிலநலத்தா னந்திய நெல்லேபோற் றத்தங்
 குலநலத்தா லாகுவர் சான்றோர்—கலநலத்தைத்
 தீவளி சென்று சிதைத்தாங்குச் சான்றாண்மை
 தீயினஞ் சேரக் கெடும்.

இ-ள். நிலம் நலத்தால்-விளை நிலத்தின் வளமையினால், நந்திய-பெருகிய, நெல்லேபோல் - நெல்லைப்போல, குலம்-தாம் நட்புகொள்ளும் நற்குடியாளரின், நலத்தால்-குண நன்மையால், சான்றோர் ஆகு

* புறத்திரட்டு - 560.

வர்-சால்புடையவராக மாறுவார்கள், கலம்-மரக்கலத்தின், நலத்தை-வலிமையை, தீவளி - கடுங்காற்று, சென்று - மிக்குவீசி, சிதைத்தாங்கு-அழித்ததை ஒப்ப, தீயினம் சேர - தீக்குணமுடையார் கூட்டத்தில் சேர்வதால், சான்றாண்மை - சால்புடைய குணம், கெடும்-அழிந்துவிடும் எ-று.

இஃதுவமையணி. நலம்-வளமை, மேன்மை, வலிமை என்னும் பொருளில் வந்தது. நந்துதல்-வளர்தல். 'ஏ' அசை. குலம் - ஆகு பெயர். சான்றாண்மை - கல்வி யொழுக்கங்கள் நிறைந்து அவற்றை ஆளுந்திறன். கலம்-மரக்கலம். இதன்கண் சான்றோர் நட்பின் உயர்வும் தீயோர் நட்பின் தீதும் உரைத்தவாறு. (9)

180. * மனத்தான் மறுவில ரேனுந்தாஞ் சேர்ந்த
இனத்தா லிகழப் படுவர்—புனத்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
எறிபுனந் தீப்பட்டக் கால்.

இ-ள். எறிபுனம் - வெட்டப்பட்ட வனத்தில், தீப்பட்டக்கால்-தீயுண்டாகப்பெறின், புனத்து - அவ் வனத்தில், வெறி - வாசனை, கமழ்-வீசும், சந்தனமும் - சந்தனமரமும், வேங்கையும் - வேங்கை மரமும், வேம்-மற்றைப்பயனில் மரங்களுடன் வேகும், (அதுபோல) மனத்தால் - மனதின்கண், மறு இலரேனும் - களங்கம் இல்லாதவராயினும், தாஞ்சேர்ந்த-தாங்கள் நட்புக்கொண்ட, இனத்தால்-இனத்தின் தீமையால், இகழப்படுவர்-உத்தமரும் இகழப்படுவார்கள் எ-று.

மறு-காமவெகுளி மயக்கங்கள். புனம்-மரச்செறிவு. வீணமரங்களையே எரிக்க முயல்வதில், இடையகப்பட்ட சந்தன வேங்கை மரங்களும் எரிக்கப்படும் என்க. தீயினத்தால் உறும் தீங்கு உரைத்தது; அதனை யொழித்து நல்லினம் சேர்க என்றபடி. இஃது எடுத்துக்காட்டுவமை. (10)

நல்லினஞ்சேர்தல் முற்றிற்று.

## 19-ஆம் அதிகாரம். பெருமை

அஃதாவது செய்யவேண்டுவனவற்றை மன உறுதியுடன் செய்யும் பெருந்தன்மைக்குணம்; அவ்விதம் செய்வதாற் பெறும் புகழுமாம். இவ் இரண்டும் பெரும்பாலும் நல்வினத்தால் உண்டாகுதல் கருதி அதன்பின் வைக்கப்பட்டது.

* புறத்திரட்டு - 579. 'படுப' என்றும் பாடம்.

181. ஈத லிசையா திளமைசே ணீங்குதலாற்
காத லவருங் கருத்தல்லர்—காதலித்
தாதுநா மென்னு மவாவினைக் கைவிட்டுப்
போவதே போலும் பொருள்.

இ-ள். ஈதல் இசையாது-(வறுமையினால் பொருள் முதலியன) கொடுக்க இயலாமலும், இளமை - இளமைப்பருவம், சேண் நீங்குதலால்-நெடுந்தூரத்தில் விலகி விடுவதனாலும், காதல் அவரும்-முன்பு காதல் காட்டி யிருந்தவர்களும், கருத்து அல்லர்-நம்மைக் கருதுதல் இல்லாதவராயினர், காதலித்து - இன்னும் அவர்களை இச்சித்து, ஆதும் - நாம் வாழ்வோம், என்னும் அவாவினை - என்கின்ற விருப்பத்தை, கைவிட்டு - முற்றும் நீக்கி, போவதே - துறவின்கட் செல்வதே, பொருள்-நற்காரியமாகும் எ-று. போலும்-உரையசை.

காதலவர்-உறவின் முறையாரும் மகளிரும், பொருள் நீங்கின் உறவினரும் இளமை நீங்கின் மகளிரும் விரும்புதில்லையாதலின். சேண் - தொலைவு, காலத்தை உணர்த்தியது. கருதது - கருதுதல், தொழிற்பெயர். ஆதும்-ஆகுவோம், வாழ்வோம்-ஏகாரம், பிரிநிலை.

182. இற்சார்வி னேமாந்தே மீங்கமைந்தே மென்றெண்ணிப்
பொச்சாந் தொழுகுவர் பேதையார்—ரச்சார்வு
நின்றன போன்று நிலையா வெனவுணர்ந்தா
ரென்றும் பரிவ திலர்.

இ-ள். பேதையார் - அறிவில்லார், இற்சார்வின்-இல்வாழ்க்கையின்கண் ஏமாந்தோம் - மகிழ்ச்சியடைந்தோம், ஈங்கு - இவ்வுலகில், அமைந்தேம் - யாவும் நிறைவுற்றோம், என்று எண்ணி - என்று நினைத்து, பொச்சாந்து - பின்வரும் துன்பத்தை மறந்து, ஒழுகுவர்- நடப்பர், அச்சார்வு - அவ்வில்வாழ்க்கையாகிய பற்றுக்கள், நின்றன போன்று - நிலைபெற்றனபோலத் தோன்றி, நிலையாவென - நிலைத்திரா என்று, உணர்ந்தார் - அறிந்த பெரியோர், என்றும் - எந்நாளும், பரிவதிலர்-மனம் வருந்துதல் இலர் எ-று.

இல் - இல்வாழ்க்கை, ஆகுபெயர்; அதைச் சார்ந்ததன் பயனை ஏமாந்தேம் என்க. ஏமாத்தல்-இன்புறல். அழியும்பொருளை நம்பினாராதலின் பேதையார் என்றார். உணர்ந்தார்-வினையாலணைந்த பெயர்.

183. மறுமைக்கு வித்து மயலின்றிச் செய்து
சிறுமைப் படாதேநீர் வாழ்மி—னறிஞராய்
நின்றுழி நின்றே நிறம்வேறுங் காரண
மின்றிப் பலவு முள.

இ-ள். நின்ற உழி - உயிர் நின்ற நிலையிலிருந்தே, காரணம் இன்றி-ஒரு காரணமும் இன்றி, நிறம் வேறு ஆம்-இளமை முதலிய அதன் குணங்கள் வேறுபடும், பலவும் உள - இவையன்றிப் பிணி முதலியன பலவும் நேர்தற்கு உள்ளன, (ஆதலின்) மறுமைக்கு-மறுமையின்பத்துக்குக் காரணமான, வித்து - வித்துப்போன்ற நற்செயலை, மயல் இன்றி - மயங்குதல் இல்லாமல், செய்து - தவறாமற் செய்து, சிறுமைபடாதே-பழிக்கு ஆளாகாமல், நீர்-நீங்கள், அறிஞராய்-அறிவுடையவராய், வாழ்மின்-வாழ்வீர்களாக எ-று.

மறுமை - அதன் இன்பத்தின்மேனின்றது. வித்து - வித்துப் போன்ற நற்கருமம், உருவகம். சிறுமை-சிறியோர் தன்மை, ஆவது பழிக்கு இடமாதல்; துன்பம் எனினுமாம். நின்ற உழி - அகரம் தொகுத்தல். நல்வினை செய்தற்கு உடலே கருவி ஆதலின் அது நின்றுழி நின்று மாறும் எனக்கொள்க. நிறம்-வேற்றுமை: இளமை, மூப்பு முதலியன. பல என்றதனால், பிணி, பசி முதலியன கொள்க. பலவும்-உம்மை, இறந்தது தழுவியது. (3)

184. உறைப்பருங் காலத்து மூற்றுநீர்க் கேணி
யிறைத்துணினு மூராற்று மென்பர் - கொடைக்கடனுஞ்
சாஅயக் கண்ணும் பெரியார்போன் மற்றையா
ராஅயக் கண்ணு மரிது.

இ - ள். உறைப்பு - மழை, அருகாலத்தும் - அருமையாகிய (இல்லாத) காலத்திலும், ஊற்று நீர் கேணி - ஊற்று நீருடைய குளத்தை, இறைத்து உணினும் - இறைத்துக் குடித்தாலும், ஊர் ஆற்றும் - ஊரிலுள்ளாரைத் தாங்கும், என்பர் - என்று உரைப்பர் பெரியோர், கொடை கடன் - ஈகையாகிய கடமையும், சாஅயக்கண்ணும் - வறுமையால் தளர்ந்தவிடத்தும், பெரியார்போல் - பெரியவர்கள் (கொடுத்தல்) போல, மற்றையார் - சிறியவர்கள், ஆஅயக் கண்ணும்-பொருளுடன் பொருந்திய இடத்தும், அரிது-கொடுத்தல் அருமையாகும் எ-று.

அரு - அருமையான; இல்லாத என்றபடி. ஊற்று-நீர் ஊறிய பெருக்கு. காலத்தும், உம்மை உயர்வு சிறப்பு. சாயக்கண்ணும் அது. ஊர் - ஆகுபெயர். கொடுத்தல் ஒவ்வொருவர்க்கும் கடமையாதலின் கொடைக்கடன் என்றார். இசைநிறை, இன்னிசையாகிய ஈரளபெடையும் கொண்டன. சாய்தல் - குறைதல். பெரியோரின் செயலுக்கு மாறான சிறியோர் குணமும் உரைத்தலின் பிறிதுமொழிதலணி. (4)

185. உறுபுன றந்துல கூட்டி யறுமிடத்துங்
கல்லூற் றுழியூறு மாறேபோற்—செல்வம் [ச்
பலர்க்காற்றிக் கெட்டுலந்தக் கண்ணுஞ் சிலர்க்காற்றி
செய்வர் செயற்பா லவை.

இ-ள். உறு - மிக்க, புனல்-நீரை, தந்து - கொடுத்து, உலகு-உலகத்தை, ஊட்டி - உண்பித்து, அறுமிடத்தும்-நீரற்ற கோடைக் காலத்திலும், கல் - தோண்டப்படும், ஊற்று உழி - ஊற்றுக்குழி யிடத்து, ஊறும் - சுரந்து கொடுக்கும், ஆறேபோல் - யாறுபோல, செல்வம்-பொருளை, பலர்க்கு - வறியோர் பலருக்கும், ஆற்றி-ஈந்து, கெட்டு - ஊழ்வினையால் செல்வம் கெட்டு, உலந்தக்கண்ணும்-அழிந் தாலும், சிலர்க்கு - சிலருக்காயினும், ஆற்றி - கொடுத்து, செயற்பா லவை-செய்யத்தக்க நன்மைகளை, செய்வர்-தவறாமல் செய்வார் எ-று.

உறு புனல்-மழையில் பெருகி மிகுந்த. உலகு-ஆகுபெயர். நீர் வரவு அறும் இடத்து என்க. கல்-வினைத் தொகைவினை; கல்லுதல்-தோண்டுதல். தருமஞ்செய்தலால் கெட்டு என மயங்குதலை ஒழிக்க, வினைவகையால் கெட்டு எனத் தந்துரைக்கப்பட்டது. செல்வமுற்ற போது பிறர்வேண்டுதன் முன்னர்த் தாமே சென்று பலர்க்கும் கொடுப்பரென்றும், அது குறைந்தபோது, தம்மை அடைந்த சிலர்க் காயினும் இயன்ற அளவு கொடுப்பரென்றும் * கொள்க. செயற்பா லவை-குறிப்புப்பெயர். இஃது உவமையணி. (5)

186. பெருவரை நாட பெரியார்கட் டீமை
கருநரைமேற் சூடேபோற் றோன்றுங்—கருநரையைக்
கொன்றன்ன வின்னா செயினுஞ் சிறியார்மே
லொன்றானுந் தோன்றாக் கெடும்.

இ-ள். பெரு-பெரிய, வரை-மலையடுத்த, நாட-நாட்டையுடைய அரசனே, பெரியோர்கண் - பெரியோரிடத்து உண்டாகும், தீமை-குற்றம், கரும் - பெரிய, நரை - எருதின், மேல் - முதுகின்மேல், சூடேபோல்-இட்டின வடுப்போல, தோன்றும் - விளங்கத்தெரியும், கரும்-பெரிய, நரையை-அவ் இடபத்தை, கொன்றன்ன-கொன்றதை ஒத்த, இன்னா - தீச்செயல்களை, செயினும் - செய்தாலும், சிறியார் மேல் - சிறியவரிடத்து, ஒன்றானும் - அவற்றுள் ஒரு குற்றமும், தோன்றா-விளங்கித் தோன்றாமல், கெடும்-மறைந்துவிடும் எ-று.

நாட-குறிப்பு வினைப்பெயர் விளியேற்றது; ஆடூஉ முன்னிலை. கருமை-பெருமை என்னும் பொருளது. நரை-வெண்மை, பண்பாகு

* நாலடி 130-ம் இதனுடன் ஒப்பிடுக.

பெயராக எருதைக் குறித்தது. சூடு - சூட்டின்வடுக்கு ஆகுபெயர். எல்லாப் பாவத்திலும் உயிர்க்கொலை கொடியதென கொன்றன்ன இன்னாசெயினு மென்றார். (6)

187. * இசைந்த சிறுமை யியல்பிலா தார்கட்
பசைந்த துணையும் பரிவா—மசைந்த
நகையேயும் வேண்டாத நல்லறிவி னார்கட்
பகையேயும் பாடு பெறும்.

இ-ள். சிறுமை - இழிகுணம், இசைந்த - பொருந்திய, இயல்பு இலாதார்கண் - நற்குணம் இல்லாதவரிடத்து, பசைந்த - நட்புடன் கலந்த, துணையும்-அளவும், பரிவு ஆம்-துன்பமேயாகும்; அசைந்த- நடுக்கம் தருவனவாகிய தீச்செயல்களை, நகையேயும் - விளையாட்டாகவும், வேண்டாத - விரும்பாத, நல் அறிவினார்கண் - நற்குணத்துடன் அறிவுமுடைய பெரியோரிடத்துக்கொண்ட, பகையேயும் - பகைமையும், பாடுபெறும்-பெருமை அடையும் எ-று.

நகை - எள்ளல், சிரிப்பு. பரிகாசமாகவும் தீமை செய்தலிலர் என்க. தீயோர் உறவினும் நல்லோர் பகை † சிறந்ததென்றபடி. (7)

188. ‡ மெல்லிய நல்லாருண் மென்மை யதுவிறந்
தொன்னாருட் கூற்றுட்கு முட்குடைமை—யெல்லாஞ்
சலவருட் சாலச் சலமே நலவரு
ணன்மை வரம்பாய் விடல்.

இ-ள். மெல்லிய-மேன்மைத் தன்மையுள்ள, நல்லாருள்-பகைமையில்லா நண்பரிடம், மென்மை-மெல்லிய தன்மையும், ஒன்னாருள்-பகைவரிடத்து, அது இறந்து - அம் மென்மையைத் தவிர்த்து, கூற்று உட்கும்-இயமனும் அஞ்சத்தகும், உட்கு உடைமை-அச்சந் தரும் செய்கையும், எல்லாம் சலவருள் - எக்காரியத்திலும் பொய்யுடையாரிடத்து, சால-பெரிதும், சலமே-பொய்ம்மைப் பாராட்டும், நலவருள் - நல்லோரிடத்தில, நன்மை - நன்மை செய்கையும், வரம்பாய் விடல்-ஆகிய இவை எல்லையான ஒழுக்கமாகுக எ-று.

நல்லோர்க்கு இனமாகவும் அல்லோர்க்கு அவர்க்குத் தகவும் ஒழுகுவதே ஒப்புரவாதலின் இங்ஙனம் கூறினார். ஒன்னார் என்பது கருதி, நல்லார் - பகைவர் என்றும், சலவர் என்பது கருதி நலவர்-

---

* புறத்திரட்டு - 577.

† "பேதைபெருங் கெழீஇ நட்பி னறிவுடையார்
ஏதின்மை கோடி யுறும்"—குறள் - 816.

‡ புறத்திரட்டு - 540.

நல்லோர் என்றும் உரைக்கப்பட்டன. உட்குடைமை - அச்சத்தைத் தரும் கடுஞ்செயல். சலம் - பொய்; பொய்யும் ஓரோவழி * நன்மை பயத்தலின் சலமும் ஏற்கப்பட்டது என்க. விடல் - உடன்பாட்டு வியங்கோள் முற்று, † "மக்கட் பதடி எனல்" என்றதுபோல. மென்மை முதலியன வரம்பாய்விடல் என்ற ஒருவினை முடிபு கொள் ளுதலின் இது கடைவிளக்கணியாம். (8)

189. கடுக்கி யொருவன் கடுங்குறளை பேசி
மயக்கி விடினு மனப்பிரிப்பொன் றின்றித்
துளக்க மிலாதவர் தூய மனத்தார்
விளக்கினு ளொண்சுடரே போன்று.

இ-ள். ஒருவன் - அடுத்துள்ள ஒருவன், கடுக்கி - விரைவாக, கடுங்குறளை - புறங்கூற்றினை, பேசி-உரைத்து, மயக்கிவிடினும்-தம் மனதை மயங்கச் செய்தாலும், மனபிரிப்பு - மனதின்கண் வேறு பாடு, ஒன்று இன்றி - சற்றும் இல்லாமல், துளக்கம் இலாதவர் - மனஅசைவு இல்லாத மேன்மக்கள், விளக்கினுள் - விளக்குத் தண் டின் ஏற்றிய, ஒள்சுடரே போன்று - ஒளிவீசும் சுடர்ப் பிழம்பை ஒத்து, தூயமனத்தர் - தூய்மையான உள்ளத்தினவராவர் எ-று.

கடுக்குதல், கடுகுதல் என்பதன் பிறவினை; விரைதல் என்றபடி. குறளை - ஒருவன் இல்லாதபோது அவனைத்தூற்றி யிகழ்தல். விடி னும்-உம்மை, அவ்வாறு மயங்குதல் எளிதன்று என்ற பொருளது. பிரிப்பு-பண்புப்பெயர். துளக்கம்-அசைவு. மனத்தார்-குறிப்புவினை முற்று. விளக்கு, தண்டுக்குத் தானியாகுபெயர். போன்று-உவமம். சுடரிடம் * மாசுபடிதலின்மைபோல, தூயமனத்தார் என்க மனம் தூயார் என மாற்றினுமாம். (9)

190. முற்றுத்துந் துத்தினை நாளு மறஞ்செய்து
பிற்றுத்துத் துத்துவர் சான்றவ—ரத்துத்து
முக்குற்ற நீக்கி முடியு மளவெல்லாந்
துக்கத்து ணீக்கி விடும்.

இ-ள். சான்றவர் - நிறைகுணமுடையவர், முன்துத்தும்-முத லில் உண்ணுதற்குரிய, துத்தினை-பிடி உணவை, நாளும் - தினமும், அறம்செய்து - பிறர்க்கு உபகரித்து, பின்துத்தி - பின்னால் உண்ண எடுக்கும் பிடி உணவை, துத்துவர் - தாம் உண்பர், அத்துத்து - அவ்வாறு பிறர்க்குத் தந்த உணவு, முக்குற்றம் எல்லாம் - மூவகைக் குற்றங்களெல்லாம், நீக்கி - அணுகாதபடிப் போக்கி, முடியும் அள

* குறள் - 292. † குறள் - 196.

வும் - இறக்கும் வரையிலும், துக்கத்துள் - பல துன்பங்களினின்றும், நீக்கிவிடும் - நீங்கச்செய்யும் எ-று.

துத்து-உண்ணப்படுவது. து-ஊண். முன்னால் உண்ணும் பிடியுணவும், பின்னால் உண்ணும் பிடி உணவும் என்க; "முற்சிகையுண்டாரும்" * என்றதுங் காண்க. உண்பதற்குமுன் அதனைப் பிறர்க்கு ஈந்து பின் உண்ண வேண்டுமென்பது விதி. குற்றம் - காமவெகுளி மயக்கங்கள்; எல்லாம் என்றதால் வினை அகங்கார முதலியனவும் கொள்க. துக்கத்துள்-ஐந்தன் பொருளது. (10)

பெருமை முற்றிற்று.

## 20 - ஆம் அதிகாரம். தாளாண்மை

அஃதாவது மெய்ம்முயற்சி உடைமை. பெருமையுடைய சான்றோர் செய்வனவற்றுக்கு முயற்சியும் வேண்டுதலின் "பெருமை"க்குப் பின் இது வைக்கப்பட்டது.

191. † கோளாற்றக் கொள்ளாக் குளத்தின்கீழ்ப் பைங்கூழ்
கேளீவ துண்டு கிளைகளோ துஞ்சுப [போற்
வாளாடு கூத்தியர் கண்போற் றடுமாறுந்
தாளாளர்க் குண்டோ தவறு.

இ-ள். கோள் - கொள்ளுதற்குரிய நீரை, ஆற்றகொள்ளா-மிகவும் கொள்ளமாட்டாத, குளத்தின் கீழ்-நீர்நிலையின் கீழாக விளையும், பைம்கூழ்போல் - பசிய பயிரைப்போல, கேள்-பொருளுடைய உறவினன், ஈவது உண்டு-கொடுப்பதைப் புசித்து, கிளைகளோ-பிழைத்த சுற்றத்தினரோ, துஞ்சுப - அவ்வுறவினன் கெடத் தாமும் வருந்துவர்; ஆனால், வாள் ஆடு - வாளின்மேல் நின்று ஆடும், கூத்தியர்-கூத்தையுடைய மகளிரது, கண்போல் - கண்கள்போல, தடுமாறும்-பல துறையிலும் மாறிமாறி விரைந்து செல்லும், தாள் ஆளர்க்கு-முயற்சியுடையவர்க்கு, தவறு உண்டோ - கைகூடாமல் தவறுவதும் உண்டோ (இல்லை) எ-று.

கோள் - கொள்ளுதல். நீர் வரவு அதிகமிருப்பினும் அளவுக்கு மேற் கொள்ளலாகாத குணம் என்க; அதுபோற் பொருள் வருவாயும் அதிகமாகக் கொள்ளலாகாத கேள் என்று உவமை கொள்க. நீர் அறப் பயிர் கெடுதல்போல், பொருள்கெட அவனையே நோக்கிப்

* நாலடி - 1. † புறத்திரட்டு - 707.

பிழைத்த கிளைஞரும் கெடுவர் என்க; உவமையணி. கூழ் - உணவு, ஈண்டுப் பயிரைக் குறித்தது. வாளாடு-வாள்மேலாடும் என்றேனும், வாள் கொண்டாடும் என்றேனும் கொள்க. அவரது கண் நாற்றிசையும் பிறழ்ந்து விரைவுடன் தன்னைக் காத்துக்கொள்ள முயறல் போல, தாளாளர் எத்துறையிலும் இன்னல் வாராதபடிக் காத்து முயலுவர் என்க. துஞ்சுதல்-இறப்புக்கு ஈடான துயருறுதல். (1)

192. * ஆடுகோ டாகி யதரிடை நின்றதூஉங்
காழ்கொண்ட கண்ணே களிறணைக்குங் கந்தாகும்
வாழ்தலு மன்ன தகைத்தே யொருவன்றான்
றாழ்வின்றித் தன்னைச் செயின்.

இ-ள். ஆடு - துவளுகின்ற, கோடாகி - சிறிய கொம்பாகி, அதரிடை - வழியிடத்து, நின்றதூஉம் - நின்று வளர்ந்ததும், காழ்கொண்ட - வைரம்கொண்ட, கண்ணே-இடத்தே, களிறு-யானையை, அணைக்கும் - சேர்த்துக்கட்டும், கந்தாகும் - தறியாக வலிமையுறும், (அதுபோல) ஒருவன் - ஒருவன், தாழ்வு இன்றி - தன் நிலையினும் தாழாமல், தன்னைச் செயின் - முயற்சியால் தன்னை யாக்கிக்கொண்டால், வாழ்தலும் - செல்வத்துடன் வாழ்தலும், அன்ன தகைத்தே- அத்தன்மை யுடையதேயாகும் எ-று.

ஆடு கோடு - வினைத்தொகை. நின்றதூஉம் - தன் முயற்சியால் வளர்ந்ததும்; அளபெடை, இன்னிசை. யானைகட்டும் கோடு * வன்மை பெறுவதுபோல் முயற்சியுடையார் பொருளால் பிறரை ஆளும் வன்மை பெறுவர் என்க. களிறு-யானையின் ஆண். தாழ்தல் - தன் நிலையிலும் குறைதல். முயற்சியின் அருமை காட்டச் 'செயின்' என்றார். இஃது உவமையணி. (2)

193. † உறுபுலி யூனிரை யின்றி யொருநாட்
சிறுதேரை பற்றியுந் தின்னு—மறிவினாற்
காற்றொழி லென்று கருதற்க கையினான்
மேற்றொழிலு மாங்கே மிகும்.

இ-ள். உறு புலி - வலிமைமிக்க புலி, ஊன்இரை இன்றி-தான் உண்டற்குரிய அளவில் இறைச்சியாகிய உணவில்லாமல், ஒருநாள்- ஒரு நாளைக்கு, சிறுதேரையும் பற்றி-சிறிய தேரையையும் பிடித்து, தின்னும்-உண்ணும், (அதுபோல) கால்தொழில் என்று - தனக்குக் கிடைத்த ஒன்று காலால் செய்யத்தக்க இழிதொழிலென்று, அறிவினால் கருதற்க-தன் அறிவினால் நினைக்கவேண்டாம், ஆங்கே - அத்

* புறத்திரட்டு - 704. † புறத்திரட்டு - 705.

தொழிலைச் செய்யுமிடத்தும், கையினால் - கையால் செய்யத்தகும், மேல் தொழிலும் - மேன்மையான ஒரு கருமமும், மிகும் - மிகுந்து தோன்றுதல் கூடும் எ-று.

எடுத்துக்காட்டுவமையணி. முயற்சி செய்வதில் சிறியது பெரியதான தொழில் என்று கருதற்க. தேரையும் என்று இழிவு சிறப்பும்மை பிரித்துக் கூட்டுக. கால் தொழில் - காலால் செய்யத் தகும் இழிந்ததொழில். கருதற்க - எதிர்மறை வியங்கோள். கையி னாலும் அறிவினாலும் செய்யும் மேல் தொழில் எனினுமாம். (3)

194. * இசையா தெனினு மியற்றியோ ராற்றா
னசையாது நிற்பதா மாண்மை—யிசையுங்கால்
கண்ட றிரையலைக்குங் கானலந் தண்சேர்ப்ப
பெண்டிரும் வாழாரோ மற்று.

இ-ள். கண்டல்-தாழையை, திரை அலைக்கும் - திரைகள் அலை யச்செய்யும், அம் கானல்-அழகிய கரைச்சோலையும், தண்-குளிர்ந்த, சேர்ப்ப - கடல் துறையுமுடைய அரசனே, இசையாது எனினும் - தான் எடுத்த கருமம் எளிதில் முடியாதென்றாலும், இயற்றி - விடா மல் முயற்சியுடன் செய்து, ஓர் ஆற்றால் - ஒருவகையாலும், அசை யாது-தளராமல், நிற்பது - அக் கருமத்தைச்செய்ய நிலையாக இருத் தலே, ஆண்மையாம் - ஆண் தன்மையாம், (ஏனெனில்) மற்று இசையும் கால்-எளிதில் முடிவதாயின், பெண்டிரும் - பெண்களும், வாழாரோ-மேன்மையொடு வாழ மாட்டாரோ எ-று.

கண்டல் - நெய்தற் செடி வகை. சேர்ப்ப - ஆடூஉ முன்னிலை. அசைவு-தளர்ச்சியடைதல். நிற்றல்-பின்வாங்காமல் நிலைத்திருத்தல். பெண்டிரும் - இழிவு சிறப்பு. ஆண்டன்மையானவை செய்வதே ஆண்மக்கள் கடனாதலின் ஆண்மை என்றார். மற்று - வினைமாற்று. ஓகாரம், எதிர்மறை. (4)

195. † நல்ல குலமென்றுந் தீய குலமென்றுஞ்
சொல்லள வல்லாற் பொருளில்லைத்—தொல்சிறப்பி
னொண்பொரு ளொன்றோ தவங்கல்வி யாள்வினை
யென்றிவற்றா னாகுங் குலம்.

இ-ள். நல்ல குலம் என்றும் - உயர்குலம் என்றும், தீயகுலம் என்றும் - தாழ்ந்தகுலம் என்றும் உரைத்தல், சொல் அளவின் அல் லால்-சொல் அளவில் வழங்குவதன்றி, பொருள் இல்லை-அம்மொழிக்

* புறத்திரட்டு - 708. † புறத்திரட்டு - 706.

குப் பொருட்பேறு இல்லை, தொல் சிறப்பின் - பழைய சிறப்பினை உடைய, ஒள்பொருள் ஒன்றோ-ஒள்ளியபொருள் மட்டிலோ ஒன்று கக் கருதுவது, தவம்-ஒழுக்கமும், கல்வி-கற்ற அறிவும், ஆள்வினை-முயற்சியும், என்ற இவற்றான்-ஆகிய இவற்றினாலும், குலம் ஆகும்-ஒரு குலம் மேன்மையடையும் எ-று.

பொருள் - அர்த்தம், செல்வம். ஒள்பொருளால் - நல்வழியால் ஈட்டிய பொருளுமாம். பொருளால் குலம் உயர்ந்தாலும் சிறப் பின்று என ஒன்றோ என 'ஓ' காரம் வந்தது. தவம் - ஈண்டு ஒழுக்கம். தவ முதலிய உடையார் தோன்றியதால் அக்குலம் உய ரும் என்க. (5)

196. * ஆற்றுந் துணையு மறிவினை யுள்ளடக்கி
ஊக்க முடையா ருணர்வுடையா—ருக்க
முறுப்பினு லாராயு மொண்மை யுடையார்
குறிப்பின்கீழ்ப் பட்ட துலகு.

இ-ள். உணர்வு உடையார்-அறிவுடையவர்கள், ஆற்றும் துணை யும்-தாம் எடுத்தகாரியம் முடியுமளவும், அறிவினை-அக்காரியத்தைக் குறித்துத் தாம் அறிந்தவற்றை, உள் அடக்கி - மனதில் அடங்க வைத்து, ஊக்கம் - தாம் கொள்ளும் முயற்சியையும், உரையார் - மெய்ப்பாட்டினாலும் தெரிவிக்கமாட்டார்கள், உறுப்பினால் - பிறரது உறுப்பிற்றோன்றும் மெய்ப்பாட்டினால், ஊக்கம் ஆராயும் - அவரது மனவலியை ஆராய்ந்தறியும், ஒண்மை உடையார் - ஒள்ளிய அறி வுடையாரது, குறிப்பின்கீழ் - மதிநுட்பத்தின், உலகுபட்டது-உல கம் அடங்கி நடப்பதாகும் எ-று.

அறிவு - ஈண்டுத் தொழிற்பெயர், ஒரு காரியத்தின் தன்மை அறிதல்; புத்தி என்னும் பொருள் சிறப்பில்லை. ஊக்கம் - உணர்வும், மனவலியுமாம். உறுப்பினால்: மனவெழுச்சியால் உறுப்பிற்றோன் றும் வேறுபாடுகள்; ஆவது மெய்ப்பாடு. குறிப்பு - குறிப்பாலேவும் குற்றேவல் எனினுமாம். (6)

197. † சிதலை தினப்பட்ட வால மரத்தை
மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்குக்
குதலைமை தந்தைக்கட் டோன்றிற்றான் பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும்.

---

* புறத்திரட்டு - 606. "ஊற்றம்" என்றும் பாடம்.

† புறத்திரட்டு - 92. 'மறைக்கப் படும்" என்றும் பாடம்.

இ-ள். சிதலை - செல்லினால், தினப்பட்ட - அரிக்கப்பட்ட, ஆல மரத்தை-ஆலமரத்தினை, அதன் - அம்மரத்தினின்றும், வீழ்-இறங்கிய விழுது, மதலையாய் - வலிய பற்றுக்கோடாய், ஊன்றியாங்கு - தாங்கி நின்றாற்போல, தந்தைகண் - தந்தையினிடத்து, குதலைமை-தளர்ச்சி, தோன்றில் - தோன்றுங்காலத்து, தான் பெற்ற - அத் தந்தை ஈன்ற, புதல்வன் - மகன், மறைப்ப - தன் முயற்சியால் மறைக்க, கெடும்-நீங்கிவிடும் எ-று.

மதலை-வலிமை, பற்றுக்கோடு, இச்சொல்லில் மகன் என்னும் பொருளும் தோன்றுதலறிக. சிதலை - மூப்பு முதலியவற்றுக்கும், ஆலம்-தந்தைக்கும், விழுது-மகனுக்கும், தாங்குதல்-மகனது முயற்சிக்கும் உவமையாகக் கொள்க: முற்றுவமையணி. வீழ்-இறங்குதல் என்னும் பொருளது; ஆகுபெயராக விழுதுக்கு வந்ததெனினுமாம். குதலைமை - தளர்ச்சி. மகனது முயற்சியின் பயனாக அக்காரியம் முடிவு பெறுதலின் தந்தையின் தளர்ச்சி மறைந்துவிடும் என்க. (7)

198. ஈனமா யில்லிருந் தின்றி விளியினு
மானந் தலைவருவ செய்பவோ—யானை
வரிமுகம் புண்படுக்கும் வள்ளுகிர் நோன்றா
ளரிமா மதுகை யவர்.

இ-ள். யானை - யானையின், வரிமுகம்-புள்ளியுடைய முகத்தை, புண்படுக்கும் - புண்செய்யும், வள் உகிர்-கூரிய நகத்தையும், நோன்றாள் - வலிய காலையுமுடைய, அரிமா - சிங்கத்தினது, மதுகையவர்-வலிமையுடையவர், ஈனமாய்-தாழ்ந்தநிலை உடையராக, இல்லிருந்து-வீட்டினுள் இருந்து, இன்றி - பொருளொன்று மில்லாது, விளியினும் - இறக்க நேரிட்டாலும், மானம் - இழிவு, தலை வருவ - தம்மிடத்து உண்டாகத்தக்க காரியங்களை, செய்பவோ - செய்வாரோ (செய்யார்) எ-று.

வரி-புள்ளி; புள்ளியுடைமை உத்தமவினத்து யானைக்கு இலக்கணம். இல்லிருந்து விளியினும் என்றதால், யானையைக் கொல்லுமாற்ற லிருந்தும் முயற்சியின் பயனின்மையால் உணவின்றிக் குகையில் புலி இறத்தல்கூடும் எனவும் கொள்க. மானம் - அவமானம்; முதற்குறை. தலைவருவ-முற்பட்டு நிகழ்வன. புண்படுக்கும் வள்ளுகிர் நோன்றாள் என்றதால், எடுத்துக்கொண்ட ஒன்றினை இறுதிமட்டும் வென்றியுடன் முயலும் மதுகையுடையவர் என உரைக்க. (8)

199. தீங்கரும் பீன்ற திரள்கா லுளையலரி
தேங்கமழ் நாற்ற மிழந்தாஅங்—கோங்கு
முயர்குடி யுட்பிறப்பி னென்னும் பெயர்பொறிக்கும்
பேராண்மை யில்லாக் கடை.

இ-ள். தீம்கரும்பு-இனியகரும்பு, ஈன்ற-தந்த, திரள்-திரண்ட, கால்-தாளினையும், உளை - கற்றைபோற் பிடரிமென் மயிருமுடைய, அலரி-பூ, தேங்கமழ் - தேனொடுகூடி வீசும், நாற்றம் - மணத்தை, இழந்தாஅங்கு - இழந்தாற்போல, பெயர் - தன் பெயரை, பொறிக்கும் - நிலைநிறுத்தற் கேதுவான, பேராண்மை - பெரிய முயற்சித் திறமை, இல்லாக்கடை - இல்லாதபோது, ஓங்கும் உயர் - மிகவும் உயர்ந்த, குடியுள்-நற்குடியில், பிறப்பின்-பிறந்திருந்தும், என் ஆம்-யாது பயனுண்டாம் (இல்லை) எ-று.

கரும்பிற் பிறந்தும் அதன் பூவுக்கு மணமில்லாததுபோல், நற்குடியிற் பிறந்தும் முயற்சியின்றேற் பயனில்லை என்க. உவமையணி. உளை-சிங்க முதலியவற்றின் பிடரிமயிர்; அதுபோன்ற அலரி என்க: உருவுவமம். அலரி - அலர்வது, பூ. இழந்தாஅங்கு - செய்யுளிசை நிறைபு. ஓங்கும் உயர் - மீமிசைச் சொல். பிறப்பினும் என்க: உயர்வு சிறப்பும்மை தொகுத்தல். பெயர் பொறித்தல் - புலவரால் புகழப்பட்டு நூல்களிற் பொறிக்கப்படுதல். ஆண்மை - ஈண்டு முயற்சி. (9)

200. *பெருமுத் தரையர் பெரிதுவந் தீயுங்
கருனைச்சோ றார்வர் கயவர்—கருனையைப்
பேரு மறியார் நனிவிரும்பு தாளாண்மை
நீரு மமிழ்தாய் விடும்.

இ-ள். பெருமுத்தரையர் - பெருமுத்தரையரை ஒப்பாகும் செல்வர், பெரிது உவந்து-மிகவும் மகிழ்ந்து, ஈயும்-கொடுக்கும், கருனைச்சோறு - பொரிக்கறியொடு கூடிய சோற்றை, கயவர்-கீழ்மக்கள், ஆர்வர் - விரும்பியுண்பார்கள், கருனையை - அத்தகைய சோற்றின், பேரும் அறியார் - பெயரும் கேட்டு அறியாதவராய், நனிவிரும்பு-மிகவும் விரும்பப்படும், தாளாண்மை - தன் முயற்சியின் பயனைப் பெற்ற, நீரும் - தண்ணீர் மாத்திரமுமே, அமிழ்தாய்விடும் - பெரியோர்க்கு அமிர்தத்தை ஒத்த இனிப்புடையதாகும் எ-று.

* "தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த
துண்ணலி னூங்கினிய தில்"—குறள் - 1065.

பெருமுத்தரையர் - நூலாசிரியர் காலத்திலிருந்த முத்தரையர் என்னும் வள்ளல்: அவர் அரசனுகி ஸ்ரீரங்கம் கோவிலுக்கு அரிய பணிகள் செய்த அன்பர் என்ப; அவரை ஒத்த ஏனைவள்ளல்களைப் குறிப்பதனுல் இஃது உவமையணி. இனி, முத்துக்களுக்குத் தலைவன் என்றும் உரைப்பர். இனி, முப்பெருந்தரையர் என மாற்றி, மூவேந்தராகிய சேரசோழ பாண்டியர் எனினுமாம். வள்ளலாதலின் * பெரிதுவந்தீயு மென்ருர். ஈதல்-நன்னினும் எளியானுக் களித்தல், ஆர்தல் - விருப்பமென்னும் தொனியுமுண்மை யறிக. கயவர், தம் உழைப்பின்றிப் பிறரிடம் பெற்று உண்டலின். பேரும் அறியார் - வறுமையாய் அற்பலாதார் எனினுமாம். அறியார்-வினைமுற்றெச்சம், நீரும்-கூழ்நீர் எனினுமாம். உம்மை-இழிவு சிறப்பு. (10)

தாளாண்மை முற்றிற்று.

---

இரண்டாவது நட்பியல்

இஃது அரசனையும் பிறரையும் சூழ்ந்திருந்து அவர்க்கு அசைவு நேருங்போது உதவும் நட்பினர் இயல்பு கூறும் பகுதி. சூழ்ந்திருப்பவர் உறவினரும் நண்பருமாதலின் அவரது இலக்கணமே கூறப்படும்.

## 21 - ஆம் அதிகாரம். சுற்றந்தழால்

அஃதாவது, தன் சுற்றத்தினரைப் பிரியவிடாமல் சேர்த்துக் கொள்ளுதல். ஒருவனைச் சூழ்ந்திருப்பவருள் நட்பும் உறவும் கொண்டவரே உற்றுழி உதவ முற்படுவாராதலின், இவ்வதிகாரம் நட்பியலில் முதற்கண்ணும், தாளாண்மை யுடையார்க்கன்றிப் பொருளும் சுற்றமும் உண்டாகா ஆதலின், தாளாண்மைக்குப் பின்னுமாக வைக்கப்பட்டது.

201. † வயாவும் வருத்தமு மீன்றக்கா னோவுங்
கவாஅன் மகற்கண்டு தாய்மறந் தாஅங்
கசாஅத்தா னுற்ற வருத்த முசாஅத்தன்
கேளிரைக் காணக் கெடும்.

இ-ள். வயாவும்-கருவுண்டாகியதாலான நோவும், வருத்தமும்-அக் கருவாலும் அதனைச் சுமத்தலாலும் ஆனநோவும், ஈன்றக்கால்

---

* "உள்ளி யுள்ள வெலாமுவந் தீயுமவ் வள்ளியோர்" (கம்ப-பால-ஆற்-5.)
† புறத்திரட்டு - 650.

நோவும் - அக்கருவை உயிர்த்தலால் ஆனநோவும், கவாஅன் - தன் தொடைமீது, மகன் கண்டு - பிறந்தபின் அம்மகனை இட்டுப் பார்த்து, தாய் மறந்தாஅங்கு-ஈன்றவள் * மறந்து போனாற்போல, அசாஅ-தளர்ச்சியினால், தான் உற்ற வருத்தமும்-ஒருவன் அடைந்த மனவருத்தமும், உசாஅத்தன் கேளிரை-தன் நன்மையைக்கேட்கும் உறவினரை, காண-பார்க்குமளவில், கெடும்-நீங்கிவிடும் எ-று.

வயா-கருவுற்ற காலத்தில் பல பொருள்களில் † விருப்பந்தரும் நோய்; இது மசக்கை எனப்படும். கவாஅன் - தொடை, ஈண்டு மடியைக் குறித்தது. மகன் - சிறப்புப்பற்றி ஆண்பால் வந்தது, மகளையும் குறித்தது. அசாஅ-முயற்சியின் இறுதியி லுண்டாகும் அயர்வு, உசாவுதல் - க்ஷேமலாபங்களை வினவுதல், ‡ உரிச்சொல். அத் தளர் வினை நீக்குதல் கேளிரால் கூடுமாதலின் காணக்கெடும் என்றார். அளபெடை மூன்றும் இசைநிறை. இது முற்றுவமை. (1)

202. $ அழன்மண்டு போழ்தி னடைந்தவர்கட் கெல்லா
நிழன்மரம்போ னேரொப்பத் தாங்கிப்-பழுமரம்போற்
பல்லார் பயன்றுய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன்.

இ-ள். அழல் - வெப்பம், மண்டுபோழ்து - மிக்க காலத்தில், அடைந்தவர்கட்கு எல்லாம்-தன்னைச் சேர்ந்தவர்கட் கெல்லாம், நிழல் மரம்போல் - நிழலைத்தரும் மரத்தைப்போல, நேர் ஒப்ப-நேர்மை பொருந்த (ஒரு தன்மையாக), தாங்கி - எடுத்துக் காத்து, பழுமரம் போல்-பழுத்த மரத்தைப்போல, பல்லார் பயன் துய்ப்ப-வேற்றுமையின்றி அடைந்தவரனைவரும் பயனை நுகரும்படி, தான் வருந்தி-தான் துன்பத்திற் பட்டேனும், வாழ்வதே - இல்லறத்தை நடாத்துவதே, நல்ஆண் மகற்கு - நற்குடிப் பிறந்த ஆண்மை உடையவனுக்கு, கடன்-கடமையாகும் எ-று.

இதுவும் முற்றுவமை. அழல் மண்டுபோழ்து - சிலேடை: வெயில் வெப்பம் மிகுந்தபோது என்றும், வினையினால் உண்டாகும் வறுமை முதலிய வெப்பம் மிகுந்தபோதும் என்றும் கொள்க. நேர் ஒப்ப - ஓரமின்றி. தான் வருந்தி - இலை பழம் முதலிய பறித்தலால்

* "......... பொன்னனான் பிறந்த போழ்தே
மருளுடை மாத ருற்ற மம்மர்நோய் மறைந்த தன்றே"—சிந்தா.

† "வயாவென் கிளவி வேட்கைப் பெருக்கம்"—தொல்-உரிச்.

‡ "உசாவே சூழ்ச்சி"—தொல்-உரிச்.

$ புறத்திரட்டு - 651. நாலடி - 167. குறள் - 216.

மரம் வருந்தலும், பிறர்க் குதவுதலில் தன் உடனலமும் கெட வருந்தலும் கொள்க. ஏகாரம் பிரிநிலை. (2)

203. * அடுக்கன் மலைநாட தற்சேர்ந் தவரை
யெடுக்கல மென்னார் பெரியோ—ரடுத்தடுத்து
வன்காய் பலபல காய்ப்பினு மில்லையே
தன்காய் பொறுக்கலாக் கொம்பு.

இ-ள். அடுக்கல் மலை - அடுக்கி வைத்தாற்போன்ற மலைகள் சூழ்ந்த, நாட - நாட்டுக்கு அரசனே, அடுத்து அடுத்து - நெருங்கி நெருங்கி, வன்காய் - வலிய காய்கள், பலபல காய்ப்பினும் - பலபலவாகக் காய்த்தாலும், தன் காய் - அவ்விதம் காய்த்த தன் காய்களை, பொறுக்கலா கொம்பு - சுமக்க முடியாத மரக்கிளை, இல்லையே - இவ்வுலகில் கிடையாது, (அதுபோல) பெரியோர் - நற்குடிப் பிறந்தோர், தன் சேர்ந்தவரை - தம்மை ஆதரிக்குமாறு வேண்டித் தம்பால் அடைந்த சுற்றத்தினரை, எடுக்கலம்-எடுத்து ஆதரியோம், என்னார்-என்று மறுக்கமாட்டார்கள் எ-று.

அடுக்கல்-மலையுமாம். நாட-ஆடூஉ முன்னிலை. தன் சேர்ந்தார்-ஒருமைப்பன்மை மயக்கம்; இவ்வாறு † பிறண்டும் வந்தமை காண்க. அதிகாரம் நோக்கிச் சுற்றம் எனப்பட்டது. எடுத்தல்-விழுந்தவரை எடுத்தல்போலத் தாழ்ந்தவரை உயர்த்துதல். அடுத்தடுத்து, பலபல-நெருக்கத்தையும், அடிக்கடிக் காய்த்தலையும் கருதி இரட்டித்து வந்தன. ஏகாரம்-தேற்றம். இஃது எடுத்துக்காட்டுவமையணி. (3)

204. உலகறியத் தீரக் கலப்பினு நில்லா
சிலபகலாஞ் சிற்றினத்தார் கேண்மை—நிலைதிரியா
நிற்கும் பெரியோர் நெறியடைய நின்றனைத்தா
லொற்கமி லாளர் தொடர்பு.

இ - ள். சிறு இனத்தார் - அற்ப குணத்துச் சுற்றத்தின், கேண்மை-உறவு, உலகு அறிய - உலகம் எல்லாம் தெரியும்படி, தீர கலப்பினும் - பழிதீரக் கலந்திருந்தாலும், நில்லா - நிலைத்திரா, சில பகல்ஆம்-சிலநாட்களே நிலைக்கும், ஒற்கம் இல் ஆளர்-மனத்தளர்ச்சியில்லாத உயர்ந்தோர், தொடர்பு-சுற்றம், நிலைதிரியா - தாம் மேற்கொண்ட துறவுநிலை மாறுபடாது, நிற்கும் - அந்நிலையிலேயே நிலைத்திருக்கும், பெரியோர் - சான்றோர்கள், நெறி - அத் தவநெறியின் பயனை, அடைய நின்ற அனைத்து - அடைதற்குப் பொருந்தியதை ஒக்கும் எ-று. ஆல்-அசை.

* புறத்திரட்டு - 653. † நாலடி - 93, 150.

கேண்மை, தொடர்பு-நட்பு, அதிகாரம் நோக்கி உறவு எனப் பட்டன. துறவொழுக்கத்தின் அருமை காட்ட 'நிலைதிரியா நிற்கும்' என்றார். இஃது உவமையணி. (4)

205. இன்ன ரினைய ரெமர்பிற ரென்னுஞ்சொ
லென்னு மிலரா மியல்பினாற்—றுன்னித்
தொலைமக்க டுன்பந்தீர்ப் பாரேயார் மாட்டுந்
தலைமக்க ளாகற்பா லார்.

இ-ள். இன்னர்-இவர், இனையர்-இத்தன்மை உடையவர், எமர்-தற்போது எமக்கு உறவினர், பிறர் - தற்போது உறவற்றவர், என்னும் சொல் - என்று உரைக்கும் சொல், என்னும் - மிகச் சிறிதும், இலர் ஆம் - இல்லாதவராகும், இயல்பினால் - தன்மையினால், தொலைமக்கள்-தொன்று தொட்டுவரும் சுற்றத்தினரை, துன்னி-நெருங்கி, துன்பம் தீர்ப்பாரே - துன்பத்தை நீக்குபவர்களே, யார்மாட்டும்-எல்லோரிடத்தும், தலைமக்கள் ஆகற்பாலார் - தலைமை வகிப்பவர் ஆகும் தகுதியுடையவர் எ-று.

சுற்றத்தாருள் ஒருசமயம் உறவும் ஒருசமயம் பகைமையும் கொண்டிருப்பின், அன்னவரையும் நீக்காமல் ஆதரிக்கவேண்டும் என்க. எமர் - எம்தமர் என்பதன் மரூஉ. தொலைமக்கள் - தொன்று தொட்டுவந்த உறவின்முறை. தீர்ப்பாரே-ஏகாரம் பிரிநிலை. (5)

206. * பொற்கலத்துப் பெய்த புலியுகிர் வான்புழுக்
லக்காரம் பாலோ டமரார்கைத் துண்டலி
னுப்பிலிப் புற்கை யுயிர்போற் கிளைஞர்மாட்
டெக்கலத் தானு மினிது.

இ-ள். அமரார் - உறவு பொருந்தாத பிறரது, கைத்து-கையிலுள்ளதாகிய, பொன்கலத்து - பொன்னாலாகிய உண் கலத்தில், பெய்த - இடப்பட்ட, புலி உகிர்வான் புழுக்கல் - புலி நகம்போல் வெண்மையும் தூய்மையுமுடைய சோற்றை, அக்காரம் - சருக்கரை, பாலோடு - பால் முதலியவற்றுடன், உண்டலின்-உண்பதைக் காட்டிலும், உயிர்போல் கிளைஞர்மாட்டு - உயிரைப்போன்ற அன்புடைய உறவினர்பால், எக்கலத்தானும்-எத்தகைய இழிய பாத்திரத்திலும், உப்பு இலி புற்கை - உப்பும் இல்லாத புல்லரிசிச்சோறும், இனிது-உண்டல் இனிமை தருவதாகும் எ-று.

கைத்து ஆகிய புழுக்கல் என்க. கைத்து - குறிப்புவினை பெயராக நின்றது. புலியுகிர், சோற்றின் வெண்மைக்குவமம். அக்கார

* புறத்திரட்டு - 652.

மும், பாலும் என எண்ணும்மை தருக. இலி - இல்லாமல், புற்கை யும், கலத்தானும்-உம்மை இழிவு சிறப்பு. முன்னது தொகுத்தல். ()

207. நாள்வாய்ப் பெறினுந்தந் நள்ளாதா ரில்லத்து
வேளாண்மை வெங்கருனை வேம்பாகுங்—கேளா
அபரானப் போழ்தி னடகிடுவ ரேனுந்
தமராயார் மாட்டே யினிது.

இ-ள். வேளாண்மை - உபகாரமாகப் பெறும், வெங்கருனை - விரும்பப்படும் பொரிக்கறி யமுதை, நள்ளாதார் இல்லத்து-உறவின் கலப்பு இல்லாதவர் அகத்தில், நாள்வாய்-உதயகாலத்திலேயே, பெறினும் - கொடுக்கப்பெறினும், வேம்பாகும்-அன்பில்லாமையால் அது வேம்புபோற் கைக்கும், அபரானப் போழ்தின்-பிற்பகலில், அடகு இடுவார் ஏனும்-இலைக்கறியை, இடுவார் ஏனும் - உணவாகத்தரினும், தமர் ஆயார் மாட்டே - உறவினர் இடத்தில் அதைப் பெறுவதே, இனிது-இன்சுவை யுடையதாகும், கேளாய்-இது நீகேள் எ-று.

அதிகார நோக்கி நள்ளாதார், உறவில்லாதவரெனப்பட்டது. உறவினர்க்கு அன்பிருக்குமாதலின் அவர் கையுணவு இனிமையும், மற்றவர் கையுணவு கைப்பும் தருமென்க. நாள்வாய்-உணவுண்பதற் குரியகாலம் என்றபடி. அபரானம் - பிற்பகல், வடசொற் சிதைவு, உண்டிக்குத் தவறியகாலம். வெம்மை, விருப்பம்; * உரிச்சொல். வேம்பு-ஆகுபெயராய் அதன் பண்பாகிய கைப்பினைக் குறித்தது. அடகு-எளிய உணவுக்கும், கருனை-சிறந்த உணவுக்கும் உபலக்ஷணை. மாட்டே-ஏகாரம் பிரிநிலை. (7)

208. முட்டிகை போல முனியாது வைகலுங்
கொட்டியுண் பாருங் குறடுபோற் கைவிடுவர்
சுட்டுக்கோல் போல வெரியும் புகுவரே
நட்டா ரெனப்படு வார்.

இ-ள். முட்டிகை போல - கொல்லனது சம்மட்டியைப் போல, முனியாது - வெறுப்பின்றி ஓயாமல், வைகலும் - நாள்தோறும், கொட்டி - பிறபொருளைச் செப்பனிடடித்து, உண்பாரும் - உண்கின்றவரை யொத்த உறவிலலாதவரும், குறடுபோல் - கொல்லன் குறட்டைபபோல, கைவிடுவர் - விலகி விடுவார்கள், நட்டார் எனப் படுவர்-உறவுடையவர் என்று கருதப்படுபவர், சுட்டுக்கோல் போல-உலையாணிக் கோல்போல, எரியும் புகுவரே - எரிபுகுதலை யொப்ப உடனிருந்து முதவுவர் எ-று.

* வெம்மை வேண்டல்—(தொல்-உரிச்.)

கொல்லன் உலேயில் உழந்து பிழைப்போர் பிறர் வருத்தம் நன்கு அறிந்தும், பிறர்க்கு உதவ முன்வராமல் இருப்பாரை உதாரணம் காட்டினர் என்க. உண்பாரும்-உண்பாரை ஒத்தவரும் என்க. உம்மை, உயர்வு சிறப்பு. குறட்டைக்கொண்டு தீயில் பொருளை இடுதலும், சூட்டுக்கோல் கொண்டு ஒன்றினைத் தீயிலிட்டுக்காய்ச்சி எடுத்தலும் அறிதற்பாலன. குறடு தீயிலணுகி நீங்குதலாகவும், சூட்டுக்கோல் தீயில் உடனிருத்தலாகவும் உரைத்தது தற்குறிப்பேற்றவணி. எரியும் புகுவர்-ஏகதேச வுருவகமுமாம். எரி - எரி ஒத்த துன்பம். எரிபுகுதல் போல்வர் என்க. (8)

209. * நறுமலர்த் தண்கோதாய் நட்டார்க்கு நட்டார்
மறுமையுஞ் செய்வதொன் றுண்டோ—இறுமளவு
மின்புறுவ வின்புற் றெழீஇ யவரோடு
துன்புறுவ துன்புறாக் கால்.

இ-ள். நறுமலர்-வாசம்வீசு மலராற்றொடுத்த, தண்-குளிர்ந்த, கோதாய் - மாலையை யுடையவளே, நட்டார்க்கு - உறவினர்க்கு, நட்டார்-உறவினர், இறுமளவும்-இருவரும் இறக்கும் வரையிலும், இன்புறுவ - இன்ப மடையத்தக்கவற்றில், இன்புற்று - இன்பமடைந்து, எழீஇ - அவருடன் எழுந்துசென்று, அவரொடு - அவருடன், துன்புறுவ - துன்பப்படத்தக்கவற்றில், துன்புறாக்கால் - துன்பமும்படாவிடில், மறுமையும் - மறுபிறப்பிலும், செய்வது - செய்யத்தக்கது, ஒன்றும் உண்டோ-வேறு ஒருதவியும் உண்டோ (இல்லை) எ-று.

கோதாய்-விளி, மகடூஉ முன்னிலை. கோதை - கூந்தல் எனினுமாம்; அதற்கு, மலர் சூடிய கோதாய் என்க. இப்பிறப்பின் மட்டிலும் உறவினர் உதவியும், இறந்தபின் அவர் செய்யக் கூடியதின்மையின் செய்வதொன்றுண்டோ என்றார். மறுமை ஒன்றும் எனமாறுக. எழீஇ - எழுதல், துன்பத்துக்குதவ முற்பட்டெழுதல்; சொல்லிசை யளபு. (9)

210. விருப்பிலா ரில்லத்து வேறிருந் துண்ணும்
வெருக்குக்கண் வெங்கருனே வேம்பாம் - விருப்புடைத்
தன்போல்வா ரில்லுட் டயங்குநீர்த் தண்புற்கை
யென்போ டியைந்த வமிழ்து.

இ-ள். விருப்பிலார் - தன்மீது அன்பு இல்லாதவர், இல்லத்து-வீட்டில், வேறிருந்து - தனியாக இருந்து, உண்ணும் - உண்கின்ற, வெருக்குக்கண் - பூனைக்கண்போலு நிறமுடைய, வெங்கருனே-விருப்

* புறத்திரட்டு - 914.

பந்தரும் பொரிக்கறியுணவும், வேம்பாம் - வேப்பங்காய்போல் கசக்கும், விருப்புடை - தன்மீது அன்புடைய, தன்போல்வார் - தன்னை நிகர்த்தவர், இல்லுள்-வீட்டில், தயங்கு-தெளிந்த, நீர்-நீரையுடைய, தண்-குளிர்ந்த, புற்கை-புல்லரிசிக் கூழும், என்போடு - உடலுக்கும், இயைந்த-பொருந்திய, அமிழ்து - அமிர்தமாகிவிடும் எ-று.

பெருமையும் மரியாதையும் காட்டு நிமித்தம் வேறாக வைத்தல் மரபாதலின் வேறு இருந்து உண்டல் என்றார். வெருகு - பூனை. கண் ஒத்த கருனை என்க; முன்னரும் * 'வெங்கருனை வேம்பாம்' எனவந்தமறிக. தன்போல்வா ரெனவே தன் இனமும் உறவும் கொள்க. தயங்குநீர் புற்கை எனவே சோற்றுப்பருக்கை அற்பமாகி நீர் மிகுந்த கூழ் என்க. என்பு - ஆகுபெயராய் உடலைக் குறித்தது. அமிழ்து - வடசொற்றிரிபு. (10)

சுற்றந்தழான் முற்றிற்று.

## 22-ஆம் அதிகாரம். நட்பாராய்தல்

அஃதாவது உண்மை நண்பினரது பண்பு ஆராய்ந்து அறிதல். உற்றுழி உதவுவாருள் உறவினரைப் போன்றவர் நண்பராதலின் இது சுற்றந்தழாலின் பின் வந்தது.

211. கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மையெஞ் ஞான்று
குருத்திற் கரும்புதின் றற்றே—குருத்திற் [றுங்
கெதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ வென்று
மதுரமி லாளர் தொடர்பு.

இ-ள். கருத்து உணர்ந்து-கற்கப்படுநூல்கள் இவை எனத் தம் கருததால் அறிந்து, கற்றறிந்தார்-அந்நூல்களைக் கற்றுணர்ந்த பெரியோரது, கேண்மை-நட்பு, எஞ்ஞான்றும் - எக்காலத்திலும், குருத்தின் கரும்பு - நுனிக்கரும்பினின்றும் தொடங்கி, தின்ற அற்று - கடித்துத் தின்றாற்போலும், மதுரம் இல்ஆளர்-கல்வியாகிய இனிமையில்லாத ஏனையவரது, தொடர்பு - நட்பு, என்றும் - எப்பொழுதும், குருத்திற்கு எதிர்செல-கரும்பின் குருத்திற்கு எதிர்முகமாகச் செல்லுமாறு, தின்ற அன்னதகைத்து - தின்றாற்போன்ற தன்மையுடையது எ-று. அரோ-அசை.

'கற்க கசடறக் கற்றவை' † என்றது கருதி கருத்துணர்ந்து என்றார். குருத்துக்கரும்பின் என்க. அற்று-குறிப்பு வினைமுற்று.

* நாலடி - 207. † குறள் - 391.

அன்ன குறிப்புப் பெயரெச்சம். ஏகாரம், தேற்றம். கல்வியின் நலம் இனிமையாதலின் மதுரம் என்றார். கரும்பு நுனியினின்றும் அடி வரையில் * சுவைமிகுதல் அறிக. உவமையணி. (1)

212. இற்பிறப் பெண்ணி யிடைதிரியா ரென்பதோர்
நற்புடை கொண்டமை யல்லது—பொற்கேழ்
புனலொழுகப் புள்ளிரியும் பூங்குன்ற நாட
மனமறியப் பட்டதொன் றன்று.

இ-ள். பொன்கேழ் - விளக்கமான நிறத்தையுடைய, புனல் ஒழுக-நீர் அருவி பாய்வதனால், புள் இரியும் - புட்கள் பிரிந்து பறக்கும், பூ குன்ற நாட - அழகிய மலையடுத்த நாட்டிற்கரசனே, இல் பிறப்பு - நட்கப்படுவோர் பிறந்த நற்குடிப்பினை, எண்ணி - நன்கு மதித்து, இடைதிரியார்-இடையில் குணம் மாறமாட்டார், என்பது ஓர் நல்புடை-என்பதாகிய ஒரு நல்ல தன்மையை, கொண்டது அல்லது - கொண்டுள்ளதன்றி, மனம் - மனதின் இயல்பு, அறியப்பட்டது - ஆராய்ந்து அறியக்கூடியதான, ஒன்று அன்று - ஓர் எளிய பொருளல்ல எ-று.

நற்குடிப் பிறந்தார் பெரும்பாலும் நல்லொழுக்க முடையாராதலின் அன்னவரை நட்க. என்றபடி. † 'எனைவகையால் தேறியக் கண்ணும் வினைவகையால் வேறாகும்' மாந்தரும் உண்மையால், மனம் அறியப்பட்டதன்று என்றார். பொன், பொலன்: விளக்கம்; இடைக் குறை. கெழு-நிறம், ‡ உரிச்சொல். நீர்வரவின் ஓசை கேட்டுப் புட்கள் இரியுமென்க. இனிப் பொன்னைக்கொணரும், புனலோசை கேட்டு இரியுமென்று முரைப்பர். நாட-ஆடூஉ முன்னிலை. (2)

213. $ யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்—யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லு மெறிந்தவேன்
மெய்யதா வால்குழைக்கு நாய்.

இ-ள். அறிந்து அறிந்தும்-பலகாலம் பயின்றிருந்தும், யானை பாகனையே - யானை தனக்கு உணவு முதலிய கொடுத்துதவிய பாகனையே, கொல்லும்-சிறுகுற்றம் செய்யினும் கொன்றுவிடும், எறிந்த வேல் - கோபத்தில் தலைவன் வீசிய வேல், மெய் அதா - மெய்யில் தைக்கப்பட்டிருந்தும், நாய் வால் குழைக்கும்-நாய் தன் தலைவனெதி

* நாலடி - 438. † குறள் - 514.

‡ "உருவுங் கெழுவு நிறனு மும்மே"—தொல் - உரிச்.

$ புறத்திரட்டு - 927.

ரில் தன் அன்பும் எளிமையுங்காட்ட வாலைக் குழைக்கும்; ஆகையால், யானை அனையவர்-யானையை ஒத்தவர், நண்பு ஒரீஇ - நட்பினை நீக்கி, நாய் அனையார் கேண்மை - நாயை ஒத்தவரது நட்பினை, கெழீஇ கொளல்-தழுவிக்கொள்ளுதல், வேண்டும்-விரும்பத்தக்கதாம் எ-று.

ஒரீஇ-ஒருவி, கெழீஇ - கெழுவி, சொல்லிசை யளபு. பலகால் உதவிசெய்திருந்தும் ஒருநாள் தீமைசெய்யினும் அத்தீமையையே நினைந்து பழி வாங்குவது யானை என்றும், ஒருநாள் மட்டில் அன்பு காட்டி, பிறகு அதைக்கொல்ல முயன்றும் அன்புகாட்டும் நாய் என்றும் கொள்க. வேண்டும் - வேட்கையுடைமை, வியங்கோள். வேல்-ஏனை யாயுதங்கட்கும் உபலக்ஷணம். ஏகாரம் சிறப்பு, வால் குழைத்தல் - மனமகிழ்ச்சிக்கு அறிகுறி. (3)

214. * பலநாளும் பக்கத்தா ராயினு நெஞ்சிற்
சிலநாளு மொட்டாரோ டொட்டார்—பலநாளு
நீத்தா ரெனக்கை விடலுண்டோ தந்நெஞ்சத்
தியாத்தாரோ டியாத்த தொடர்பு.

இ-ள். பலநாளும் - பல நாட்களாக, பக்கத்தார் ஆயினும் - பக்கத்திலேயே இருந்து பழகினவரெனினும், சிலநாளும் - சிலநாள் அளவுக்கும், நெஞ்சில்-மனதினால், ஒட்டாரோடு-சேராதவர்களுடன், ஒட்டார் - அறிவுடையோர் சேரமாட்டார்கள், தம் நெஞ்சத்து - தம் மனதுடன், யாத்தாரோடு-வேற்றுமையின்றிப் பிணிக்கப்பட்டவர்களுடன், யாத்த - அன்பினால் பிணித்த, தொடர்பு - நட்பினை, பல நாளும்-பல நாட்களாகவும், நீத்தார் என-நீங்கியிருந்தார்கள் என்று, கைவிடல்-அவர்களை நீங்கிவிடுதலும், உண்டோ - உலகில் உண்டோ (இல்லை) எ-று.

பலநாள் பழகியும் சிலநாட்களளவும் உள்ளன்பில்லாதவர் எனச் 'சிலநாளும் ஒட்டார்' என்றார். ஒட்டார்-வினையாலணைந்தபெயர். யாத்தல்-அன்பினால் பிணிப்புறல்; அத்தகைய பிணிப்பின் அருமைகாட்ட யாத்தாரோ டியாத்த தொடர்பு என்றார். உம்மை இரண்டில் முன்னது உயர்வு சிறப்பு, பின்னது இழிவு சிறப்பு. (4)

215. † கோட்டுப்பூப் போல மலர்ந்துபிற் கூம்பாது
வேட்டதே வேட்டதா நட்பாட்சி—தோட்ட
கயப்பூப்போன் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை
நயப்பாரு நட்பாரு மில்.

* புறத்திரட்டு - 928. † புறத்திரட்டு - 913.

இ-ள். கோட்டுப் பூபோல - மரக்கிளைகளில் பூத்த பூவைப் போல, மலர்ந்து - முதலில் மலர்ந்து, பின் கூம்பாது - பிறகு குவி யாமல், வேட்டதே-முதலில் ஒருவரை ஒருவர் விரும்பியதே, வேட் டது - நீடித்து விரும்பியிருத்தல், நட்பு ஆட்சிஆம் - நட்பை ஆளு கின்றதாகும், கயம் - குளத்தில் மலரும், தோட்ட-இதழ்களுடைய, பூப்போல் - பூவைப்போல, முன் மலர்ந்து-முதலில் மலர்ந்து, பின் கூம்புவாரை-பிறகு குவியும் இயல்புடையாரை, நயப்பாரும்-விரும்பு பவரும், நட்பாரும்-நட்புக்கொள்வாரும், இல்-இல்லை எ-று.

கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, புதற்பூ என நால்வகையாம். மரத்தின் மலரும் பூ உதிரும்வரையில் மலர்ந்த நிலையில் இருப்பது போல் நண்பர்கள் நட்புக்கொண்ட நாள்முதல் இறுதிவரையில் நகை முகத்துடன் இருப்பரென்றும், தாமரை முதலிய நீர்ப்பூ ஒரு பொழுதில் மலர்ந்து மறுபொழுதில் கூம்புதல்போல் உள்ளன்பிலா தவர் முதலின் நகைமுகமும், நாள்செல்ல மனக்கசிவு முடையா ரென்றும் உவமைப்பொருள் கொள்க. மலர்தல், கூம்புதல் இரண்டும் சிலேடை: முன்னது இதழ்விரிதலும், நகைமுக முடைமையும்; பின் னது, இதழ் குவிதலும், கடுமுக முடைமையுமாம். தோடு-அகவிதழ், தோட்டபூ என்க, தோட்ட கயம் என்று தோண்டிய குளமென்றும் கூறுப. கூம்புவார் - கூம்புதலொப்பார். (5)

216. * கடையாயார் நட்பிற் கமுகனைய ரேனை
இடையாயார் தெங்கி னனையர்—தலையாயா
ரெண்ணரும் பெண்ணைபோ னிட்டஞான் றிட்டதே
தொன்மை யுடையார் தொடர்பு.

இ-ள். நட்பின் - நட்புக் குணத்தில், கடை ஆயார் - கீழ்ப்பட்ட வர்கள், கமுகு அனையர் - பாக்கு மரத்தை ஒப்பாவார், ஏனை இடை யார் - மற்றை இடைப்பட்டவர்கள், தெங்கின் அனையர் - தென்னை மரத்தை ஒப்பாவர், தலையாயார் - தலைமைப் பட்டவர்களாகிய, தொன்மை உடையார் - பழைமையான நற்குடி யொழுக்கமுடையவ ரது, தொடர்பு-நட்பு, எண்ணரும் - நினைத்தற்கரிய, பெண்ணை-பனை மரம், இட்டஞான்று போன்று - நட்ட அன்றுபோன்று, இட்டதே- நட்புக்கொண்ட தன்மையதே எ-று.

நட்பிற் கடையாயார், இடையாயர் என்க. கமுகு இடைவிடாது நீரிட்டு வளர்ப்பினன்றிப் பயன் தாராதுபோலக் கடையாயார் இடை விடாது பொருள் கொடுப்பினல்லது நட்புக் கொள்ளாரென்றும்,

* புறத்திரட்டு - 929. “நட்பு” என்றும் பாடம்.

தெங்கு இடையிட்டு நீர்விடினும் வளர்ந்து பின் பயன்தருதல்போல், இடைப்பட்டவர் சிற்சில பொழுது உதவினும் நட்புக்கொள்வரென்றும், பனை நட்ட அன்று நீர்விடின் அதுகொண்டே வளர்தல்போல் உத்தமர் ஒருமுறை செய்த நன்றிபாராட்டி நட்புமாறார் என்றும் கொள்க. உவமையணி. நற்குடி உயர்வுபற்றித் தொன்மையுடையார் என்றார். இட்டஞான்று-நட்பட்ட நாள், இட்டது - நட்புக்கொண்ட தன்மை. (6)

217. கழுநீருட் காரட கேனு மொருவன்
விழுமிதாக் கொள்ளி னமிழ்தாம்—விழுமிய
குய்த்துவையார் வெண்சோறே யாயினு மேவாதார்
கைத்துண்டல் காஞ்சிரங் காய்.

இ-ள். கழுநீருள் - அரிசி கழுவிய நீரில் சமைத்த, கார் அடகு ஏனும் - கரிய இலைக்கறியாக இருப்பினும், ஒருவன் - ஒருவன், விழுமிதாக் கொள்ளின்-பிறன் கொடுத்ததை நட்பின் சிறப்பினாற் கொடுத்ததென்று பெற்றால், அமிழ்தாம் - அமிர்தத்தை ஒத்த இனியசுவையுடையதாம், விழுமிய-சிறந்த, குய் - தாளித்த கறிகளுடன், துவை ஆர்-துவையலும் கூடிய, வெண்சோறே ஆயினும்-வெள்ளிய நல்லரிசியுணவே என்றாலும், மேவாதார்-உள்ளன்பு இல்லாதவரது, கைத்து-கையில் உள்ளதாய், உண்டல்-வாங்கி உண்ணுதல், காஞ்சிரங்காய் - எட்டிமரத்தின் காய்போல் கைப்புடையதாகும் எ-று.

இதன் கருத்தை மேல் 207, 210-ம் செய்யுட்களோடும் ஒப்பிடுக. கழுநீர்-வினைத்தொகை. காய்ந்து தீய்ந்த இலைவகை என்பதற்குக் காரடகு என்றார். விழுமம்-சிறப்பு, உரிச்சொல்; முறையே நட்பின் சிறப்புக்கும், சமையல்வகைச் சிறப்புக்கும் வந்தது. குய்-தாளிதம் செய்யும்போது உண்டாம் ஓசை; இலக்கணையாகத் தாளித்த கறிக்கு வந்தது. மேவுதல் - விரும்புதல், * உரிச்சொல்; எனவே மேவார்-உள் அன்பு இல்லாதவர் எனப்பட்டது. ஏகாரம் இரண்டனுள் முன்னையது இழிவு சிறப்பு, பின்னது உயர்வு சிறப்பு. கைத்து-குறிப்பு வினைமுற்று, பெயராக வந்தது. அமிழ்து, காஞ்சிரங்காய்: அவற்றின் சுவையைக் குறித்தன. (7)

218. *நாய்க்காற் சிறுவிரல்போ னன்கணிய ராயினு
மீக்காற் றுணையு முதவாதார் நட்பென்னுஞ் [க்கும்
சேய்த்தானுஞ் சென்று கொளல்வேண்டுஞ் செய்வினை
வாய்க்கா லனையார் தொடர்பு.

* "நம்பு மேவு நசையா கும்மே"—தொல் - உரிச்.

* புறத்திரட்டு - 930.

இ-ள். நாய்க்கால் - நாய்க்காலின், சிறுவிரல்போல்-சிறிய விரல்களைப்போல், நன்கு அணியராயினும்-மிகவும் நெருங்கினவராகினும், ஈக்கால் - ஈயின் காலினது, துணையும்-அளவும், உதவாதார் - உதவி செய்யாதவரது, நட்பு என்னும்-நட்பு என்னபயனைச் செய்யும், செய்-விளை நிலத்தை, விளைக்கும் - விளையச்செய்யும், வாய்க்கால்-நீர்வாய்க்காலை, அனையார் - ஒப்ப உதவுபவரது, தொடர்பு - நட்பை, சேய்த்தானும் - தூரத்தி லிருப்பதானாலும், சென்று - வலியப்போய், கொளல் - பெறவேண்டும் எ-று.

அணியர் - அண்மையானவர். உம்மை, உயர்வு சிறப்பு. சேய்த்தானும் அது. ஈக்கால்-சிறிய அளவைக்குறிக்க வந்தது, முன் "ஈச்சிறகு" * என்றாற்போல. துணையும்-இழிவு சிறப்பு. சென்று-வாய்க்காலின் நீர் தானே சென்று பயிர் விளைத்தல்போல் உதவுபவரென்றும், அந் நண்பர் வாராவிடினும் தானே அவர்கள் பால் வலியச்சென்று நட்புப் பெறுக என்றும் கொள்க. (8)

219. † தெளிவிலார் நட்பிற் பகைநன்று சாதல்
விளியா வருநோயி னன்று—லளிய
இகழ்தலிற் கோற லினிதேமற் றில்ல
புகழ்தலின் வைதலே நன்று.

இ-ள். தெளிவிலார்-தெளிந்த அறிவில்லாதவருடன் கொண்ட, நட்பின்-நட்பைவிட, பகைநன்று-அவருடன் பகையுடைமை நல்லது, விளியா - எவ்வுபாயத்திலும் நீங்காமல், வரும் - நீடித்துவரும், நோயின்-வியாதியைவிட, சாதல்-இறத்தல், நன்று-நல்லது, அளிய-ஒருவன் மனம் நோக, இகழ்தலின்-அவனை இகழ்தலைவிட, கோறல்-அவனைக் கொல்லுதல், இனிது-நல்லது, இல்ல - குணங்கள் இல்லாதவைகளை, புகழ்தலின் - இருப்பதாகச் சொல்லிப் புகழ்வதைவிட, வைதலே நன்று-திட்டுவதே நல்லது எ-று. ஆல், மற்று-அசை.

தெளிவு - அறிவுத்தெளிவு, நட்பாராய்ச்சியில் தேர்வு எனினுமாம். இன்-ஐந்தனுருபு; ஒப்புப்பொருளது. அறிவிலார் பகைமையைவிட அவரது நட்பினால் தீங்கு விளைதல் அதிகமென்க. ‡ தீயிற் புண்ணைவிட வாயினாற் சுட்டது கொடியதாதலின், இகழ்தலின் கோறல் இனிது என்றார். இல்ல-குறிப்புப்பெயர். (9)

220. $ மரீஇப் பலரோடு பன்னாண் முயங்கிப்
பொரீஇப் பொருட்டக்கார்க் கோடலே வேண்டும்

---

* நாலடி - 41. † புறத்திரட்டு - 1230.
‡ குறள் - 129. $ புறத்திரட்டு - 931.

பரீஇ யுயிர்செகுக்கும் பாம்பொடு மின்னா
மரீஇப் பின்னைப் * பிரிவு.

இ-ள். பரீஇ-விரும்பி, உயிர் செகுக்கும்-உயிரை அழிக்கின்ற, பாம்பொடும் - பாம்பினுடனும், மரீஇ - நட்புக்கொண்டிருந்து, பின்னை - அதன் தீக்குணம் அறிந்தபிறகு, பிரிவு - அதனைவிட்டுப் பிரிதல், இன்னா- துன்பம் தரும், (ஆகையால்) பலரோடு-பலருடனும், மரீஇ - பழகி, பல் நாள் - பல நாட்களாக, முயங்கி - கூடியிருந்து, பொரீஇ - அவர் குணமும் தன் குணமும் ஒத்து, பொருள் தக்கார்-நன்குமதிக்கும் குணத்தால் தகுந்தவர்களை, கோடலே - நட்பாகக் கொள்ளுவதே, வேண்டும்-விரும்பத் தகுந்தது எ-று.

மருவி, முயங்கி என மீண்டும் உரைத்ததால் பல்லாற்றானும் † ஆய்ந்தாய்ந்து பார்க்கவேண்டும் ஆகலின்; இல்லாவிடின் பாம் பொடு உறவுபோலும் தான் சாம்துயர் தருமென்க. பொரீஇ-பொருந் துதல், பொருள் - ஈண்டுக் குணம். ஏகாரம் - பிரிநிலை. வேண்டும்-வேட்கை கொள்க; எனவே, விரும்பத்தக்கது எனப்பட்டது. பரீஇ-விரைந்து எனினுமாம். பாம்பொடும் - இழிவு சிறப்பு; அதனுடன் பிரிவும் ‡ இன்னா என மாறினுமாம். அளபெடை நான்கும் சொல் லிசை. மரீஇ-ஈரசையுள் மற்றது இன்னிசை என்க. (10)

நட்பாராய்தல் முற்றிற்று.

## 23-ஆம் அதிகாரம். நட்பிற் பிழைபொறுத்தல்

அஃதாவது ஒருவர் குணங்களை ஆராய்ந்து நட்புக்கொண்ட பின்னர் அந் நண்பரிடம் குறைகள் காணின் அவற்றைப் பொறுத் துக் கொள்ளுதல். அதிகாரமுறைமையும் இதனால் விளங்கும்.

221. $ நல்லா ரெனத்தா நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லா ரெனினு மடக்கிக் கொளல்வேண்டு
நெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கு முண்டு.

* நாலடி - 168. † குறள் - 792.

‡ "விலங்கேயும் தம்மோ டுடனுறைதன் மேவும்
கலந்தாரைக் கைவிடுத லொல்லா—விலங்கருவி
தாஅ யிழியு மலைநாட வின்னாதே
பேஎயோ டானும் பிரிவு"—பழமொழி.

$ புறத்திரட்டு - 941.

இ-ள். நெல்லுக்கு - உணவுக்குப் பயனாகும் நெல்லுக்கும், உமி உண்டு - உமியாகிய சிறுமையுள்ளது, நீர்க்கும் நுரையுண்டு-அருந்துதற்கு வேண்டிய நீருக்கும் நுரையாகிய குற்றம் உள்ளது, பூவிற்கும் - சிறந்த மலருக்கும், புல்இதழ் - அற்பமாகப் பொருந்திய புறஇதழாகிய பயனின்மையும் உள்ளது, ஆகையால், நல்லார் என-ஆராய்ந்து நல்லவர் என்று அறிந்து, நனிவிரும்பி-மிகவும் விரும்பி, கொண்டாரை - நட்பாகக் கொண்டவர்களை, அல்லார் எனினும் - நற்குணம் இல்லாதவர் எனப் பின்னர் அறிந்துகொண்டாலும், அடக்கி-அடங்கச்செய்து, கொளல் - நட்பை நீடித்துக்கொள்ளுதலே, வேண்டும் - விரும்பத் தகுந்தது எ-று.

நல்லார், அல்லார் - குறிப்பு வினைப்பெயர். கொண்டார் - கொள்ளப்பட்டவர். அடக்குதல், அக்குற்றத்தை மேலும் செய்யாதபடி அடக்குதலும், பிறர் அறியாதபடித் தன் மனதில் அடக்குதலும் கொள்க. உணவுக்கு இன்றியமையாத நெல்லும் நீரும், திருமகள் தங்கும் மலரும் முறையே சிறுமையும், குற்றமும், பயனின்மையும் கொண்டிருந்தும் அவை போற்றப்படுதல்போல் நண்பரையும் போற்றுக என்றபடி. இது பிறிதுமொழிதலணி. (1)

222. செறுத்தோ றுடைப்பினுஞ் செம்புனலோ டூடார்
மறுத்துஞ் சிறைசெய்வர் நீர்நசைஇ வாழ்நர்
வெறுப்ப வெறுப்பச் செயினும் பொறுப்பரே
தாம்வேண்டிக் கொண்டார் தொடர்பு.

இ-ள். நீர்-நீரை, நசைஇ - விரும்பி, வாழ்நர் - வாழ்பவர்கள், செறுத்தோறும்-அணைகோலி அடைக்குந்தோறும், உடைப்பினும்-உடைத்துக்கொண்டு சென்றாலும், செம்புனலோடு - செம்மையான நீருடன், ஊடார் - சிறு கோபமும் கொள்ளாதவராய், மறுத்தும்-மீண்டும், சிறைசெய்வர் - அணைகோலி அடைத்துவைப்பர் (அது போல), வெறுப்ப - வெறுக்கத்தக்க குற்றமான செய்கைகளை, வெறுப்ப செயினும் - தானும் நண்பரும் வெறுக்கும்படிச் செய்தாலும், தாம்-தாங்கள், வேண்டி-விரும்பி, தொடர்பு கொண்டார்-நட்புக் கொண்டவர்கள், பொறுப்பரே - பொறுத்துக்கொள்வார்கள் எ-று.

செறுத்தல்-அடக்குதல், வினைத்தொகை வினை. மெய்தோன்றியது, எதுகை நோக்கி; விகாரம். செம்மை, பயிருக்கும் சீவராசிக்கும் உணவாகுதல். ஊடார்-வினைமுற்றெச்சம். நசைஇ-சொல்லிசையளபு. வெறுப்ப-முதலது வினையாலணைந்தபெயர்; பின்னது வினையெச்சம்.

நண்பரும் வெறுக்கும்படி என்க. ஏ-அசை. வாழ்நர் பொறுப்பர் என்று முடிக்க. இஃது எடுத்துக்காட்டுவமையணி. (2)

223. * இறப்பவே தீய செயினுந்தன் னட்டார்
பொறுத்த றகுவதொன் றன்றோ—நிறக்கோங்
குருவவண் டார்க்கு முயர்வரை நாட
வொருவர் பொறையிருவர் நட்பு.

இ-ள். நிறம்-நல்ல நிறமுடைய, கோங்கு-கோங்குமலரில், உருவ வண்டு - அழகிய வடிவுள்ள வண்டுகள், ஆர்க்கும் - ஒலிக்கும், உயர் வரை - உயர்ந்த மலைகள் அடுத்த, நாட - நாட்டையுடைய அரசனே, ஒருவர் பொறை-நண்பருள் ஒருவர் பொறுத்திடுதல், இருவர் நட்பு-இருவருடைய நட்புக்கு ஆதாரமாகும், (ஆதலால்) தன் நட்டார் - தன்னுடன் நட்புடையவர், இறப்ப-மிகவும், தீயவே-தீயவற்றையே, செயினும்-எப்போதும் செய்தாலும், பொறுத்தல் - அப்பிழைகளைப் பொறுத்துக்கொள்ளுதல், தகுவது - தக்கதாகிய, ஒன்று - ஒரு நற் செயல், அன்றோ-அல்லவா எ-று.

இறப்ப - அளவுகடக்க. தீயவே என ஏகாரம் மாற்றுக. தீய-குறிப்பு வினைப்பெயர். அன்றோ, வினு; உடன்பாட்டுப் பொருளில் வந்தது. கோங்கு-மரத்தின் மலர்; முதலாகுபெயர். உருவம்-வடிவம்; நிறமுமாம். நாட-ஆடூஉ முன்னிலை. இஃது ஏதுவணி. (3)

224. மடிதிரை தந்திட்ட வான்கதிர் முத்தங்
கடுவிசை நாவாய் கரையலைக்குஞ் சேர்ப்ப
விடுதற் கரியா ரியல்பிலரே னெஞ்சஞ்
சுடுதற்கு மூட்டிய தீ.

இ-ள். மடி - மடிந்து விழுகின்ற, திரை - அலைகள், தந்திட்ட-கொணர்ந்த, வான்-சிறந்த, கதிர்-ஒளிவிடும், முத்தம் - முத்துக்களை, கடுவிசை - மிகுந்த வேகமுடைய, நாவாய் - கப்பல்கள், கரை-கரையிலே, அலைக்கும் - ஒதுக்கிச் சேர்க்கும், சேர்ப்ப - கரையையுடைய அரசனே, விடுதற்கு - நட்பு விடுதற்கு, அரியார் - கூடாதவர்கள், இயல்பிலரேல் - இயற்கையான நற்குணமில்லாரேயானல், நெஞ்சம்-மனதை, சுடுதற்கு-எரிப்பதற்கு, மூட்டிய-மூட்டப்பட்ட, தீ-நெருப்புக் கொப்பாவர் எ-று.

---

* "தந்தீமை யில்லாதார் நட்டவர் தீமையயு
மெந்தீமை யென்றே யுணர்பதா—மந்தண்
பொருதிரை வந்துலாம் பொங்குநீர்ச் சேர்ப்ப
வொருவர் பொறையிருவர் நட்பு"—பழமொழி.

மடிதிரை - வினைத்தொகை. முத்தத்தை அலைக்கும் என்க. அலைக்கும் நாவாய் வருதலுடைய சேர்ப்ப என்றபடி; இது வடமொழி முடிபு. இயல்பு - நற்குடியாலும் கல்வியாலும் உண்டாய நற்குணம். தீ - தீமை ஒப்பாவர் என்க. நட்புக்கொண்டபின் விடுதற் கருமையாதலின் அரியார் என்றார். (4)

225. * இன்னா செயினும் விடற்பால ரல்லாரைப் [னொடு
பொன்னாகப் போற்றிக் கொளல்வேண்டும்—பொன்
நல்லிற் சிதைத்ததீ நாடொறு நாடித்த
மில்லத்தி லாக்குத லால்.

இ-ள். பொன்னொடு-பொன்போன்ற சிறந்த பொருள்களுடன், நல்இல்-நல்ல வீட்டையும், சிதைத்த - சுட்டெரித்த, தீ - நெருப்பை, நாடொறும் - நாள்தோறும், நாடி-விரும்பித்தேடி, தம் - தத்தமது, இல்லத்தில் - அகத்தில், ஆக்குதலால் - (சமையற்கு) வளர்த்தலால், இன்னா - துன்பச்செயல்களை, செயினும் - செய்தாலும், விடற்பாலரல்லாரை - விடத்தகுதி யல்லாதவர்களை, பொன்னாக - பொன்னைப் போல், போற்றி-விரும்பி மதித்து, கொளல்வேண்டும்-நட்புக்கொள்ளுதல் விரும்பத்தக்கது எ-று.

இல்லத்தைக் கொளுத்திவிடும் நெருப்பின் தன்மையறிந்தும், சமையல் முதலியவற்றின் பயன் கருதி நாடோறும் அதனை நாம் வளர்த்தல்போல, நண்பருள் ஒருவர் தீமை செய்தல்கண்டு அவரது நற்குணம் பாராட்டிப் போற்றுக என்றபடி. பொன் - விலைமிக்க பொருட்கு உபலக்ஷணை. ஆக்குதல்-உண்டாக்கி வளர்த்தல். (5)

226. † இன்னா செயினும் விடுதற் கரியாரைத்
துன்னாத் துறத்த றகுவதோ—துன்னருஞ்சீர்
விண்குத்து நீள்வரை வெற்ப களைபவோ
கண்குத்திற் றென்றுதங் கை.

இ-ள். துன் அரும் - நெருங்குதற்கரிய, சீர் - சிறப்பையுடைய, விண்-ஆகாயத்தையும், குத்தும்-அளாவிய, நீள்-நீண்ட, வரை-மூங்கிலைப் பொருந்திய, வெற்ப - மலைநாட்டையுடைய அரசனே, தம்-தம்முடைய; கை-கையானது, கண்-தமதுகண்ணை, குத்திற்றென்று-குத்தியதென்று, களைபவோ - அதைவெட்டி எறிவார்களோ, (அது போல) இன்னா-துன்பச்செயல், செயினும் - செய்தாலும், விடுதற்கு-

* புறத்திரட்டு - 943. “ இல்லத்த தாக்குத லான் ” என்றும் பாடம்.
† புறத்திரட்டு - 942.

நட்பு விடுவதற்கு, அரியாரை-அரிய நண்பரை, துன்னு - நெருங்காமல், துறத்தல்-கைவிடுதல், தகுவதோ-தகுந்ததோ எ-று.

கையைக் களைபவோ என்க. கை உடலுறுப்பானதுபோல, நண்பரையும் உறுப்புப்போல் கருதுக என்றபடி. வரை-ஆகுபெயர். துன்னு-துன்னாது, ஈறுகெட்ட வினையெச்சம். இஃது எடுத்துக்காட்டுவமையணி. (6)

227. இலங்குநீர்த் தண்சேர்ப்ப வின்னா செயினுங்
கலந்து பழிகாணார் சான்றோர்—கலந்தபின்
றீமை யெடுத்துரைக்குந் திண்ணறி வில்லாதார்
தாமு மவரிற் கடை.

இ-ள். இலங்கு-விளங்குகின்ற, தண் நீர் சேர்ப்ப-குளிர்ந்த நீர் நிறைந்த கரையையுடைய அரசனே, சான்றோர்-குணநிறைந்த பெரியோர், கலந்து - நட்புக்கொண்டு பின்னர், இன்னா செயினும்-தமக்கு அந் நண்பர் துன்பங்களைச் செய்தாலும், பழி - அக்குற்றங்களை, காணார் - கண்டு பாராட்டமாட்டார்கள், கலந்தபின் - நட்புக்கொண்ட பின், தீமை-நண்பரின் தீச்செயல்களை, எடுத்து உரைக்கும்-மிகவும் பாராட்டிப் பிறரறியச் சொல்லும், திண் அறிவு - திட்பமான அறிவினை, இல்லாதார்-இழந்தவராய், தாமும்-தாங்களும், அவரின்-குற்றமிழைத்த அவர்களின், கடை-கடைப்பட்டவராவர் எ-று.

நீர் இலங்குதல்: கடலாயின், கடல் படுபொருள் நல்குதலும், யாறாயின், விளைபொருட் குதவுதல் முதலியனவும். பழி - பழிக்கத் தக்கவை; குற்றம். திண்ணறி வுடையராயிருந்தும், பிறர் குற்றத்தை எடுத்துரைத்தலால், இழந்தவர் எனப்படுவர் என்பதற்கு இல்லாதார் என்றார்; கடை - கடையானவர்; ஆகுபெயர். அவரினும் கடை என்க, கற்றறி மூடராதலின். (7)

228. ஏதிலார் செய்த திறப்பவே தீதெனினு
நோதக்க தென்னுண்டா நோக்குங்கால்—காதல்
கழுமியார் செய்த கறங்கருவி நாட
விழுமிதா நெஞ்சத்து ணின்று.

இ-ள். கறங்கு-ஒலிக்கின்ற, அருவி-மலையருவிகளுடைய, நாட-நாட்டினையாளு மரசனே, ஏதிலார்-அயலார், செய்தது - செய்த குற்றம், இறப்ப-மிகவும், தீதே எனினும் - தீமை பயப்பதென்றாலும், நோக்குங்கால்-வினைப்பயனைக் கவனிக்குங்கால், நோதக்கது-வெறுக்கத்தகுந்தது, என் உண்டாம்-யாது உளது (ஒன்றுமில்லை), (எனின்)

காதல் கழுமியார்-அன்புமிக்க நண்பர், செய்த-இயற்றிய குற்றங்கள், நெஞ்சத்துள் நின்று-மனதிற் பொருந்தி, விழுமிதூஉம்-சிறப்புடைய தாகிவிடும் எ-று.

"அறிவதறிந்தும், பழியோடு பட்டவை செய்தல் வினையான் வரும்" * என்றதால் பிறர் செய்யும் குற்றம் ஊழ்வினையாலெனப் பட்டது; அன்பர் குற்றம் செய்யின் அதைச் சிறப்பாகக் கொள்க என்றபடி. நின்று-பொருந்தி, மனமார என்றபடி. (8)

229. † தமரென்று தாங்கொள்ளப் பட்டவர் தம்மைத்
தமரன்மை தாமறிந்தா ராயி னவரைத்
தமரினு நன்கு மதித்துத் தமரன்மை
தம்மு ளடக்கிக் கொளல்.

இ-ள். தமர் என்று - நட்புக்குரியவர் என்று, தாம் - தம்மால், கொள்ளப்பட்டவர் தம்மை-நண்பராக ஏற்றுக்கொள்ளப்பட்டவரை, தமர் அன்மை-நட்புத்தன்மை இல்லாமை, தாம் அறிந்தார் ஆயின்-தாம் அறிந்துகொண்டாரென்றால், அவரை - அந் நண்பரை, தமரினும்-மற்றை உண்மை நண்பர்களினும், நன்கு மதித்து - மிகுந்த மதிப்புக்காட்டி, தமரன்மை-அவரது நட்பின்மையை, தம்முள்-தம் மனதிலேயே, அடக்கிவிடல்-அடக்கி வைத்துக்கொள்க எ-று.

தமர்-உறவினர். ஈண்டு அதிகார நோக்கி நட்பு எனப்பட்டது. தமரன்மை - நட்புக்குரிய குணம் இன்மை. நண்பர் பிழையை மறைத்து அவரை மதித்தல்; அப்பிழையை மேலும் செய்யமாட்டாரென்றும், தம் ஒழுக்கத்தால் அவரும் திருந்துவரென்றும் கருதி. தமர் என்னும் சொல்லும் பொருளும் அடுத்தடுத்து வருதலின் சொற்பொருட்பின் வருநிலையணி. கொளல்-அல்லீற்று உடன்பாட்டு வியங்கோள். (9)

230. ‡ குற்றமு மேனைக் குணமு மொருவனை
நட்டபி னாடித் திரிவேனேல்—நட்டான்
மறைகாவா விட்டவன் செல்வுழிச் செல்க
அறைகடல்சூழ் வைய நக.

இ-ள். ஒருவனை நட்டபின்-ஒருவனிடம் நட்புக்கொண்ட பிறகு, குற்றமும் - அவன்பால் குற்றங்களையும், ஏனைக்குணமும்-மற்றைக் குறைகளையும், நாடி - ஆராய்ந்து, திரிவேனேல் - பிறர்க்கும் உரைத்துத் திரிந்து வந்தேனென்றால், அறைகடல் - ஒலிக்கின்ற கடல், சூழ் - சூழ்ந்துள்ள, வையம் - இவ்வுலகினர், நக - எள்ளிச் சிரிக்

* நாலடி - 108. † புறத்திரட்டு - 944. ‡ புறத்திரட்டு - 916.

கும்படி, நட்டான்-நண்பனொருவனது, மறை-இரகசிய விடயத்தினை, காவாது - அடக்கிக் காவல்செய்யாமல், விட்டவன் - வெளிப்படுத்திய வன், செல்வுழி-செல்லும் நரகிற்கு, செல்க-செல்லக்கடவேன் எ-று.

ஏனைக்குணம் எனவே, குறைகளும் கொள்க. குற்றத்துக்கு மாறான நற்குணமென்றுரைத்தல் சிறப்பின்மை காண்க. நட்டபின் நாடி * என்றதால், அதற்கு முன்னரே அவ்வாராய்ச்சி வேண்டு மென்க; அது செய்யாமையும், நட்பில் மறை காவாமையும் துன்பம் தருமென்க. நட்டானது மறை என்க. செல்க-வியங்கோள். வையம்-உலகு, ஆகுபெயர். நக-வினையெச்சம்; இனி நகுக என்பதன் இடைக் குறையாகக்கொண்டு உலகம் எள்ளுக எனினுமாம். (10)

நட்பிற் பிழைபொறுத்தல் முற்றிற்று.

## 24-ஆம் அதிகாரம். கூடாநட்பு

அஃதாவது பொருந்தாத நட்பு. பொறுக்கலாகாத குற்றம் செய்பவரது உறவை நீடித்தல் கூடாது என்பது கருதி, நட்பிற் பிழை பொறுத்தலுக்குப் பின் இது வைக்கப்பட்டது.

231. † செறிப்பில் பழங்கூரை சேறணை யாக
விறைத்துநீ ரேற்றுங் கிடப்பர்—கறைக்குன்றம்
பொங்கருவி தாழும் புனல்வரை நன்னாட
தங்கரும முற்றுந் துணை.

இ-ள். கறைக்குன்றம்-கரிய மலைகளினின்றும், பொங்கு அருவி-பெருகுகின்ற நீரருவிகள், தாழும் - வழிந்து ஓடும், புனல்வரை-நீரெல்லையுடைய, நல் நாட - செழிப்புள்ள நாட்டுக்குரியவனே, செறிப்பு இல்-கட்டுக்கோப்பில்லாத, பழங்கூரை-பழைய மேற்கூரை யுடைய வீட்டில், சேறு அணை ஆக - (மாரிக்காலத்தில்) சேற்றை அணையாகச்செய்து, நீர் இறைத்தும்-உள்ளேவிழும் நீரை வெளியில் இறைத்தும், ஏற்றும் - பாத்திரங்களில் ஏந்தியும், தம் கருமம் முற்றும் துணை-தம் நோக்கம் முடியும் அளவும், கிடப்பர் - அவ்வில்லத்தில் வசித்திருப்பார்கள் சிலர் எ-று.

வீட்டுக்கு உறும் விபத்து அறிந்து முன்னரே உதவாதார் தமக் குப் பயன் உண்டாம் அளவுக்கு உழைத்துப் பின் வாளா இருப்பார்;

* "தேரான் றெளிவும் தெளிந்தான்க ணையுறவும்
தீரா விடும்பை தரும்"—குறள் - 510.

† புறத்திரட்டு - 960.

அதுபோன்ற நட்புக்கொண்டவர் தமக்கு நற்பயன் உண்டாம் அள வுக்கு உரிமை பாராட்டிப் பின்னர்ப் பயன்கெட நண்பரையும் கவனி யார்; அன்னாருடன் நட்புக்கூடாது என்க; இது பொருளெச்சம். செறிப்பு - நெருக்கம்; ஈண்டுக் கட்டுக்கோப்பு. கூரை - இலை, வைக் கோல் முதலியவற்றால் அமைந்த எளிய கூரை. ஏற்றல்-கீழே விழாத படிப் பாத்திரத்தில் முகத்தல். நாட-ஆடூஉ முன்னிலை. (1)

232. சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்
மாரிபோன் மாண்ட பயத்ததா—மாரி
வறந்தக்காற் போலுமே வாலருவி நாட
சிறந்தக்காற் சீரிலார் நட்பு.

இ-ள். வால் - வெள்ளிய, அருவி - மலையருவிகளுடைய, நாட- நாட்டையுடைய அரசனே, சீரியார் - சிறப்புடையவர், கேண்மை- நட்பு, சிறந்த-மிகுந்த, சிறப்பிற்றாய்-சிறப்புடையதாய், மாரிபோல்- பெய்யும் மழைபோல, மாண்ட - மாட்சிமைப்பட்ட, பயத்ததாம்-பய னைத்தருவதாம், சீரிலார் நட்பு - சிறப்பில்லாத மற்றவர்கள் நட்பு, சிறந்தக்கால் - சிறப்புற்ற (மிகுந்த) விடத்து, மாரி-அம்மழை, வறந் தக்காற்போலும்-பெய்யாமல் வறட்சியுற்றதை ஒக்கும் எ-று.

சீர்மை - அறிவாலும் ஒழுக்கத்தாலும் சிறப்புடைமை. சிறப் பிற்று-குறிப்பு வினைப்பெயர். மாண்ட-மாண்புடைய. வறத்தல்-பெய் யாது தவறல். சிறந்தக்கால்-மிகுந்தால் என்றபடி. ஏகாரம்-தேற்றல். மழையால் வளமை பெருகுதல்போல் நண்பர் வளம் பெறுதலும், வறட்சியால் உள்ள வளமையும் குன்றுதல்போல் நண்பர் இளைத்த லும் கொள்க. உவமையணி. (2)

233. நுண்ணுணர்வி னாரொடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே யொக்கும் விழைவிற்றா—னுண்ணூ
லுணர்வில ராகிய வூதிய மில்லார்ப்
புணர்த னிரயத்து ளொன்று.

இ-ள். நுண்-நுட்பமான, உணர்வினாரொடு - அறிவினருடன், கூடி - நட்புக்கொண்டு, நுகர்வுடைமை - அந் நட்பின்பயன் நுகர்தல், விண்ணுலகு - தேவலோகத்தின்பத்தை, ஒக்கும்-ஒத்திருக்க, விழை விற்று - விரும்பத்தகும் பயனுடையது, நுண்-நுட்ப, நூல்-நூலை, உணர்விலராகிய - கற்றறியாதவராகிய, ஊதியம்-நற்பயன், இல்லார்- இல்லாதவரை, புணர்தல் - நட்புக்கொள்ளல், நிரயத்துள்-நரக துன் பங்களுள்ளே, ஒன்று-ஒன்றாகும் எ-று.

உணர்வின் நுட்பம்-ஆழ்ந்த உட்கருத்துக்களாய்தல்; நூலின் நுட்பம் - அக்கருத்துக்க ளுடைமை. விண்ணுலகு, நிரயம் - ஆகு பெயர்; அவற்றின் இன்பதுன்ப நுகர்ச்சியைக் குறித்தன. ஊதியம்-பயன். (3)

234. * பெருகுவது போலத் தோன்றிவைத் தீப்போ
லொருபொழுதுஞ் செல்லாதே நந்து—மருகெல்லாஞ்
சந்தனநீள் சோலைச் சாரன் மலைநாட
பந்தமி லாளர் தொடர்பு.

இ-ள். அருகு-அண்மையான இடங்கள், எல்லாம்-யாவும், நீள்-நீண்ட, சந்தனச்சோலை - சந்தன மரங்களின் சோலைகளையும், சாரல்-தென்றற் காற்றையு முடைய, மலைநாட - பொதியின் மலைக்குரிய அரசனே, பந்தமிலாளர் - உள்ளன்பில்லாதவர், தொடர்பு - நட்பு, பெருகுவதுபோல-வளர்வதுபோல, தோன்றி-வெளிக்குத்தோற்றி, வை - வைக்கோலில் பற்றிய, தீப்போல் - தீயைப்போல, ஒருபொழுதும்-ஒருநாளும், செல்லாது-வளராமல், நந்தும்-கெடும் எ-று.

வைக்கோலிற் பற்றிய தீ அதிகம் வளராமல் உள்ளுக்குள் வேகுவதுபோலும், அது பற்றியதனால் வைக்கோல் நீறுகுவது போலும் உண்மை நட்பிலாதவர், நட்பு வளரப்பெறாமல் நட்டாரை யும் அழிப்பர் என்க: உவமையணி. நந்தும் - அழியும். சந்தனச் சோலை பொதியின்மலையில் மிகுதிபற்றி மலை - பொதியிலெனப்பட்டது. அதுபற்றியே சாரல், தென்றல எனப்பட்டது; பக்கமென்று முரைப்பர். பந்தம்-நட்பின பிணிப்பு. (4)

235. செய்யாத செய்துநா மென்றலுஞ் செய்வதனைச்
செய்யாது தாழ்த்துக்கொண் டோட்டலு—மெய்யாக
இன்புறூஉம் பெற்றி யிகழ்ந்தார்க்கு மந்நிலையே
துன்புறூஉம் பெற்றி தரும்.

இ-ள். செய்யாத-செய்ய இயலாத காரியத்தை, நாம் செய்தும்-நாம் செய்து முடிக்கவல்லோம், என்றலும் - என்று சொல்லலும், செய்வதனை - செய்யுங் காரியத்தை, செய்யாது - செய்துமுடிக்காமல், தாழ்த்துக்கொண்டு - நீடிக்கவிட்டு, ஓட்டலும் - காலம் ஓடவிடலும், மெய்யாக - உண்மை நெறியில், இன்புறூஉம்-துறவற இன்பம் நுகரும், பெற்றி-பெருமையை, இகழ்ந்தார்க்கும் - இகழ்ந்து சிற்றின்ப மவாவினவர்களுக்கும், அந்நிலையே - அப்பொழுதே, துன்புறூஉம் - துன்பமடையத்தக்க, பெற்றி- தன்மையை, தரும்-கொடுக்கும் எ-று.

* புறத்திரட்டு - 955.

இக் குணமுடையாருடன் தொடர்பு கூடா நட்பாதலின் விலக்குக என்பது எச்சம். செய்யாத-தம்மாற்றலால் செய்துமுடிக்க முடியாதன; தெரிநிலை வினைப்பெயர். செய்தும்-தன்மைப்பன்மை முற்று. உம்மைகள், எண். செய்வது-செய்ய முடிவது, ஓட்டல் - காலத்தைப் போக்குதல். மெய்யாக இன்புறும் பெற்றி எனவே துறவறம் எனப்பட்டது, அதனையே விசேடமாக இந்நூலிற் போற்றப்படுதலின். துறவினை இகழ்ந்தவர் இறுதியில் துன்பம் எய்துவரெனக. இனிச் சிற்றின்பத்தை இகழ்ந்தவர் என்றுரைத்தல் சிறப்பின்மை உய்த்துணர்க. அளபெடை, இன்னிசை. (5)

236. ஒருநீர்ப் பிறந்தொருங்கு நீண்டக் கடைத்தும்
விரிநீர்க் குவளையை யாம்பலொக் கல்லா
பெருநீரார் கேண்மை கொளினுநீ ரல்லார்
கருமங்கள் வேறு படும்.

இ-ள். ஒருநீர் - ஒருகுளத்து நீரில், ஒருங்கு - ஒருவழிப்பட, பிறந்து - தோன்றி, நீண்டக்கடைத்தும் - வளர்ந்தபோதும், விரி-மலர்ந்த, நீர்-குணமுடைய, குவளையை-நீலோற்பலமலரை, ஆம்பல்-அல்லி, ஒக்கல்லா - ஒத்திருக்கமாட்டா, (அதுபோல) பெரு-சிறந்த, நீரார் - நற்குணமுடையார், கேண்மை-நட்பை, கொளினும் - கொண்டிருந்தாலும், நீர் அல்லார்-நற்குணமில்லாதவர், கருமங்கள்-செய்யுந் தொழில்கள், வேறுபடும்-வேறுபட்டுத் தோன்றும் எ-று.

எடுத்துக்காட் டுவமையணி, ஒவ்வாமையாவது, குவளை சற்றே நீல நிறத்ததாய், ஆம்பல் வெண்ணிறத்தது;" இரண்டும் மாலையில் மலர்ந்தாலும், ஆம்பல் ஞாயிற்றினொளிபட்டதும் குவியும். நீர் - முதலது புனல் என்னும் பொருட்டு, மற்றை மூன்றும் நீர்மை என்னும் பண்பின் சிதைவு. உம்மை, பெரியோர் கேண்மை பெறுவதன் அருமை காட்டியது. (6)

237. முற்றற் சிறுமந்தி முற்பட்ட தந்தையை
நெற்றுக்கண் டன்ன விரலான் ஞெமிர்த்திட்டுக்
குற்றிப் பறிக்கு மலைநாட வின்னாதே
ஒற்றுமை கொள்ளாதார் நட்பு.

இ-ள். முற்று அல்-முதிர்ச்சி பெறாத, சிறுமந்தி - சிறுபெண் குரங்கு, முன் - தன்முன், பட்ட - வரநேர்ந்த, தந்தையை - (இரை கொண்டு வந்த) தந்தையை, நெற்று கண்டன்ன - பயற்ற நெற்றின் அளவைக்கண்டதை ஒத்த, விரலால் - விரல்களால், ஞெமிர்த்திட்டு-நெரித்து, குற்றி-குத்தி, பறிக்கும் - இரையைப்பிடுங்கும், மலைநாட-

மலைகளடுத்த நாட்டுக்குரியவனே, ஒற்றுமை கொள்ளாதார் - மனத்தோடு ஒன்றுபடாதவர், நட்பு இன்னாது - நட்பு இனிமை தருவதன்று எ-று.

முற்றுதல் அல்லாத என்க; இளைய என்றபடி. பயற்ற நெற்றைப்போல் நீண்டவிரல் என்க. தந்தையென்றும் மதியாமல் அதன் கரத்துள்ள இரையை மந்தி வருத்திப் பிடுங்கும் என்பதற்கேற்ப, தம்மினும் சிறந்த நண்பினரை வருத்தி அவர் பொருளைக் கொள்ப என உள்ளுறையுவமம் தோன்றுதலுய்த்துணர்க. இனிப் பறித்தல் விளையாட்டு நிமித்தம் என்று முரைப்பர். மந்தி - குரங்கின்பெண். தந்தை-இருதிணைக்கும் பொது. நாட-விளி, ஆடூஉ முன்னிலை. நட்பு இன்னாதே என்க; ஏகாரம் இரக்கம், அந்நட்பு தீமை பயத்தலின். (7)

238. முட்டுற்ற போழ்தின் முடுகியென் னாருயிரை
நட்டா னொருவன்கை நீட்டேனேல்—நட்டான்
கடிமனை கட்டழித்தான் செல்வுழிச் செல்க
நெடுமொழி வைய நக.

இ-ள். முட்டு உற்ற போழ்தின் - துன்பம் நேர்ந்த இடத்து, நட்டான் ஒருவன்கை-என்னிடம் நட்புக்கொண்டவனிடம், என் ஆர் உயிரை-எனது அரிய உயிரையும், முடுகி-விரைந்து, நீட்டேனேல்-ஒப்புவிக்கேனென்றால், நெடுமொழி - புகழெனும் நீண்ட மொழி நிறைந்த, வையம்-உலகம், நக - சிரிக்கும்படி, நட்டான் கடிமனை-நட்புக்கொண்டவனது காவல்பொருந்திய மனைவியின், கட்டு-கற்பாகிய உறுதியினை, அழித்தான் - கெடுத்தவன், செல்வுழி-செல்லும் இடத்துக்கு, செல்க-செல்லக்கடவேனாக எ-று.

முட்டு-துன்பம். பரவை வழக்கு. நண்பன் துயர் துடைக்கத் தன் உயிரையும் கொடுக்கவேண்டும் என்பது குறிக்க ஆருயிரை நீட்டேனேல் என்றார். கை-ஏழனுருபு. கடி-காவல். கட்டு-காவலுடையது, ஈண்டுக் கற்பு. மனை-ஆகுபெயர். செல்வுழி-ஈண்டு நரகம். ஈற்றடிபோல் "அறைகடல்சூழ் வைய நக" * என வந்ததுங் காண்க. நண்பன் றுயர் களையாமை அவன் மனைவியைக் கற்பழித்தல் போலும் என்றபடி. (8)

239. † ஆன்படு நெய்பெய் கலனு ளதுகளைந்து
வேம்படு நெய்பெய் தனைத்தரோ—தேம்படு
நல்வரை நாட நயமுணர்வார் நண்பொரீஇப்
புல்லறிவி னாரொடு நட்பு.

* நாலடி - 230. † புறத்திரட்டு - 578.

இ-ள். தேம்-தேன், படு-உண்டாகின்ற, நல்-நற்சிறப்புடைய, வரை - மலைகளடுத்த, நாட - நாட்டுக்குரியவனே, நயம் - நட்பின் நன்மை, உணர்வார் - அறிபவராது, நண்பு - நட்பினை, ஒரீஇ - விட்டு விலகி, புல்-அற்ப, அறிவினேரொடு - அறிவுடையாருடன், நட்பு-நட்புக்கொள்ளுதல், ஆன் - பசும்பாலில், படு - உண்டாகும், நெய் - நெய்யை, பெய் - பெய்திருந்த, கலனுள் - கலத்தில், அது - அந்த நெய்யை, களைந்து - எடுத்துவிட்டு, வேம்பு அடு-வேப்பங்கொட்டை காய்ச்சிய, நெய் - நெய்யை, பெய்த அனைத்து - பெய்து வைத்த தொக்கும் எ-று.

ஆன்படு நெய் நயமுணர்வார்க்கும், வேம்படு நெய் புல்லறிவாளர்க்கும் உவமையாகக் கொள்க. உவமையணி. ஆன்-பசு, அதன் பாலைக் குறித்தது. படுதல் - உண்டாதல். இனிப் பசு சம்பந்தமான பால் என்றுமாம். வேம்பு அடுநெய் என்க; வேப்பங்கொட்டையைக் காய்ச்சி இறக்கிய நெய்: இது வேப்பெண்ணெய் என வழங்கும். தேன்-அதன் கூட்டுக்குத் தானியாகுபெயர். நாட-ஆடூஉ முன்னிலை. வரைக்கு நன்மை, மலைபடுபொருள் தருதல். பெய்தனைத்து அகரம் தொகுத்தல். (9)

240\. உருவிற் கமைந்தான்க ணூராண்மை யின்மை
பருகற் கமைந்தபா னீரளா யற்றே
தெரிவுடையார் தீயினத்தா ராகுத னாகம்
விரிபெடையோ டாடிவிட் டற்று.

இ-ள். உருவிற்கு - வடிவழகுக்கு இடமாக, அமைந்தான்கண்- பொருந்திய ஒருவனிடம், ஊர் ஆண்மை - ஊரினை அடக்கி ஆளும் திறமை, இன்மை-இல்லாத குணம், பருகற்கு அமைந்த-அருந்துவதற்குப் பொருந்திய, பால்-பாலில், நீர் - தண்ணீர், அளாய அற்று- கலந்த அத்தன்மை உடையது, தெரிவு உடையார் - அறிவுடையவர், தீ இனத்தார் ஆகுதல்-தீக்குணமுடையோர் இனத்தில் சேர்ந்திருத்தல், நாகம்-உயர்ந்த நாகப்பாம்பு, விரிபெடையோடு - பெட்டை விரியன் பாம்போடு, ஆடி-கலந்து, விட்டற்று-நீங்கினற்போலும் எ-று.

உவமையணி. உடலின் புறத்தழகு மட்டிலிருந்து ஆண்மையும் வீரமும் இன்றேற் பயனின்று என்றபடி. உரு - வடிவழகு; ஆண்மை - வீரம்; இனி, முறையே நற்குணம் என்றும், உபகார குணம் என்றும் பொருள் கூறுவாருமுளர். பாலில் நீர் கலந்தால் பாலின்சுவை கெடுதலுடன் நீரின் நிறமும்கெடும், அதுபோல் ஆண்மையின்றே லழகும் பயனில்லை என்றபடி. அறிவுடையார்

தீயினத்தை விலக்குதல் வேண்டுமென்க. ஆடி - இடக்கர். விடுதல்- கலந்து விலகுதல். நாகம் விரியன் பெடையுடன் மருவின் இறந்து படுமென்பது துணிபாதலின், விடுதல் அருமை என்க. அற்று- குறிப்பு வினைமுற்று. ஏ-அசை. (10)

கூடாநட்பு முற்றிற்று.

நட்பியல் முற்றிற்று.

---

மூன்றாவது இன்பவியல்

அஃதாவது மனதின்கண் மகிழ்ச்சியை அடைதல். அம் மகிழ்ச்சி பொருளாலும், உறவினர் நண்பினராலும் பெறப்படுவ தால், இது, பொருட்பாலில் நட்பியலுக்குப் பின் வைக்கப்பட்டது.

## 25-ஆம் அதிகாரம். அறிவுடைமை

அஃதாவது கல்வி கேள்விகளாலாகிய அறிவொடு பொருந்தி யிருத்தல். அறிவு, கல்வி கேள்விகளாலும், நல்லோர் நட்பினாலும் பெறப்படுவதாலும், அறிவுடைமையே இன்பத்தின் நுகர்ச்சியாதலா லும், இது 'நட்பு'க்குப் பின்னரும், இன்பவியலின் முதற் கண்ணும் அமைந்துள்ளது.

241. *பகைவர் பணிவிட நோக்கித் தகவுடையார்
தாமேயு நாணித் தலைச்செல்லார் காணா
யிளம்பிறை யாயக்காற் றிங்களைச் சேரா
தணங்கருந் துப்பி னரா.

இ-ள். அணங்கு-வருத்தம் செய்யும், அரு-கொடிய, துப்பின்- வலியுடைய, அரா - பாம்பு, இளம்பிறை - இளையபிறைச் சந்திரனா யிருக்கும்போது, திங்களை - சந்திரனை, சேராது - வருத்துவதற்கு நெருங்காது, (அதுபோல) தகவு உடையார் - தகுந்த அறிவுடையார், பகைவர்-தம்முடன் மாறுபட்டவர், பணிவு இடம் நோக்கி-தாழ்ந்து இருக்கும் காலத்தைக் கவனித்து, தாமேயும் நாணி-தம்மில் தாமே வெட்கமுற்று, தலை செல்லார் - அவரை அடக்குவதற்கு எதிர்த்துச் செல்லமாட்டார், காணாய்-இதனை அறிக எ-று.

எடுத்துக்காட் டுவமையணி. கிரணகாலங்களில் † சந்திரனை மறைக்கும் பூமிச்சாயையை இராகு கேதுக்களென்னும் பாம்புக

---

* புறத்திரட்டு - 1113. † நாலடி - 148. உரை காண்க.

ளாக உரைத்தல் புராணவரலாறு; முழுமதிகாலத்திலேயே கிரணம் பற்றுதல் அறிதற்பாலது. தகவுடையார் - அதிகார நோக்கி அறிவுடையாரென்க. பகைவர்-அவருடன் மாறுபட்டவர். இடம்-ஈண்டுக் காலம். நாண், எளிய நிலையில் இருக்கும்போது எதிர்க்க நினைவதால் என்க. காணாய்-முன்னிலை, அசையுமாம். (1)

242. * நளிகடற் றண்சேர்ப்ப நல்கூர்ந்த மக்கட்
கணிகல மாவ தடக்கம்—பணிவில்சீர்
மாத்திரை யின்றி நடக்குமேல் வாழூர்
கோத்திரங் கூறப் படும்.

இ-ள். நளி-பெரிய, கடல் - கடலின், தண்-குளிர்ந்த, சேர்ப்ப-கரையையுடைய அரசனே, நல்கூர்ந்த - வறுமையடைந்த, மக்கட்கு-மனிதர்க்கு, அணிகலமாவது-அணிதற்குரிய ஆபரணமாவது, அடக்கம்-அடங்கியிருத்தல், பணிபுஇல்-அடக்கமில்லாத, சீர்-தன்மையில், மாத்திரையின்றி-அளவு இன்றி வரம்பு கடந்து, நடக்குமேல்-ஒழுகுவானாகில், வாழும் - அந்தகையவன் வாழும், ஊர் - ஊரினரால், கோத்திரம்-தன் குலம், கூறப்படும்-இழிந்து சொல்லப்படும் எ-று.

நளி-உரிச்சொல். சேர்ப்ப - ஆடூஉ முன்னிலை. சீர்மை-தன்மை. மாத்திரை - அளவு: வரம்பு; அது கடத்தலாவது அடக்கமின்மை. அடக்கமுடைமையே அறிவுடைமையாதலின் இவ்வதிகாரத்தில் வைக்கப்பட்டது. கோத்திரம்-குலம்: வடசொல். (2)

243. எந்நிலத்து வித்திடினுங் காஞ்சிரங்காழ் தெங்காகா
தென்னாட் டவருஞ் சுவர்க்கம் புகுதலாற்
றன்னாற்றா னாகு மறுமை வடதிசையுங்
கொன்னாளர் சாலப் பலர்.

இ-ள். எந்நிலத்து - எந்த நிலத்தில், வித்து இடினும் - விதை போட்டாலும், காஞ்சிரம் - எட்டியின், காழ் - விதை, தெங்கு ஆகா-தென்னைமரம் ஆகமாட்டா, தென்னாட்டவரும் - தென்திசை யுள்ளவரும், சுவர்க்கம் புகுதலால் - (நல்வினைப்பயனால்) சுவர்க்கலோகம் சேர்வதினால், தன்-ஒருவனது, ஆற்றான்-முயற்சியினாலே, மறுமை-மறுமையில் நற்கதி, ஆகும் - பொருந்தும்; வடதிசையும் - வடதிசையிலும், கொன் ஆளர் - அறஞ்செய்யாது வீணே கழிப்பவர், சால பலர்-மிகவும் பலர் உளர் எ-று.

தென்னாடு - இயம திசையாதலின் அந்நாட்டினர் துறக்கமெய்துதலருமை என்றும், வடநாடு - புண்ணிய பூமியாக அங்குள்ளவர்

* புறத்திரட்டு - 124.

துறக்கமே பெறுவர் என்றும், வழங்கும் கொள்கையை மறுத்தபடி; அவரவர் அறிவினால் துறக்கமெய்தலன்றி, நிலத்தினியல்பால் பெறுவதில்லை என்க. காழ்-வன்மையுடையது: ஈண்டு விதை. திசையினும் என்க. உம்மை முறையே இழிவு, உயர்வு சிறப்புக்கள். கொன்-பயனின்மை. (3)

244. * வேம்பி னிலையுட் கனியினும் வாழைதன்
தீஞ்சுவை யாதுந் திரியாதா—மாங்கே
யினந்தீ தெனினு மியல்புடையார் கேண்மை
மனந்தீதாம் பக்க மரிது.

இ-ள். வாழை - வாழைப்பழம், வேம்பின் இலையுள்-வேப்பிலையில், கனியினும் - பழுத்தாலும், தன் - தனது, தீஞ்சுவை - இனிய மதுரம், யாதும்-எவ்வளவும், திரியாது-வேறுபடாது, ஆங்கு-அது போல, இனம் - தாம் நட்புக்கொள்ளும் இனம், தீது எனினும் - தீமைபயப்பதாயினும், இயல்பு உடையார் - நற்குணமுடையவரது, கேண்மை-உறவு, மனம்-உள்ளம், தீது ஆம்-கொடியதாகும், பக்கம்-தன்மை, அரிது-அருமையாகும் எ-று.

இயற்கையில் நல்லறிவுடையவர், தீயோர் உறவால் கெடுவதிலர் என்றபடி. உவமையணி. ஆங்கு-உவமவுருபு. வாழை - பழத்துக்கு முதலாகு பெயர். உம்மை-இழிவு சிறப்பு. (4)

245. † கடல்சார்ந்து மின்னீர் பிறக்கு மலைசார்ந்து
முப்பீண் டுவரி பிறத்தலாற் றத்த
மினத்தனைய ரல்ல ரெறிகடற்றண் சேர்ப்ப
மனத்தனையர் மக்களென் பார்.

இ-ள். எறிகடல் - அலைகளை வீசும், தண் சேர்ப்ப - குளிர்ந்த துறையுடைய அரசனே, கடல்சார்ந்தும்-உப்பு நீருடைய கடலையடுத்தும், இன் நீர்-இன்சுவையுடைய நீர், பிறக்கும் -ஊற்றின்கண் உண்டாகும், மலைசார்ந்தும்-இனிய அருவி நீருடைய மலையை யடுத்தும், உப்பு ஈண்டு உவர்-உப்புச்சுவை மிகுந்த உப்புநீர், பிறத்தலால்-உண்டாவதால், மக்கள் என்பார்-மக்கள் எனப்படுவோர், தத்தம்-நட்புக் கொண்ட தமது தமது இனத்தினரை, அனையர் அல்லர்-ஒத்தவரல்லர், மனத்து அனையர்-அறிவின் தன்மையே உடையவராவார் எ-று.

உவரி - உவர்ப்புடைய நீர்; காரணப்பெயர். இனம் - கூட்டம். சேர்ப்ப - ஆடூஉ முன்னிலை. மனம் - அறிவு; அந்தக் கரணமாகிய

---

* புறத்திரட்டு - 538. † புறத்திரட்டு - 539.

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பவற்றுள் ஒன்றற்கொன்றன் பெயர் வழங்குதல் மரபாதலால். உம்மை - சிறப்பு, முன்னது இழிவு, பின்னது உயர்வு. தற்குறிப்பேற்றவணி; ஏதுவணியுமாம். (5)

246. பராஅரைப் புன்னை படுகடற்றண் சேர்ப்ப
ஒராஅலு மொட்டலுஞ் செய்பவோ நல்ல
மருஉச்செய்தி யார்மாட்டுந் தங்கு மனத்தார்
விராஅஅய்ச் செய்யாமை நன்று.

இ-ள். பரு அரை-பருத்த அரையுடைய, புன்னை-புன்னைமரங்கள், படு - பொருந்தின, தண்கடல் சேர்ப்ப - குளிர்ந்த கடற்றுறையுடையவனே, தங்கு மனத்தார்-நற்குணத்தில் தங்கிய மனத்தினர், யார் மாட்டும் - எத்தகையாரிடத்தும், நல்ல மருஉ செய்து - மிகுந்த நட்பினைப் பாராட்டி, ஒராஅலும் - பின்னர் மனம் வேறுபட்டுப் பிரிதலும், ஒட்டலும் - மீண்டும் சேர்தலும், செய்பவோ - செய்வார்களோ, (செய்யார்) விராஅஅய் செய்யாமை - ஆராயாது கலந்து நட்புக்கொள்ளாதிருத்தலே, நன்று-நன்மை தருவதாகும் எ-று.

பராஅரை-பருமை அரை; இது பண்புத்தொகைச் சந்திமுடிபு வேற்றுமை என்பார் * நச்சினார்க்கினியர். அரை-மரத்தின் கிளைகள் பிரிதற்குக் கீழுள்ள பகுதி. புன்னை - நெய்தனிலத்துமரம். மருஉ-மருவுதல்; முதனிலை திரிந்த தொழிற்பெயர், நட்பு என்ற பொருள் தர நின்றது; அளபு, சொல்லிசை. ஏனை யளபெடை இசைநிறை. இனி, செய்தியார் எனக்கொண்டு நற்குணத்துச் செய்கையினர் என்று பொருள் கூறுவது சிறப்பின்று. செய்து - உகரம் திரிந்து குற்றிகரமாயிற்று. செய்யாமை-கூடிப் பிரிதலினும் கூடாதிருத்தல்.

247. † உணர வுணரு முணர்வுடை யாரைப்
புணரப் புணருமா மின்பம்—புணரின்
றெரியத் தெரியுந் தெரிவிலா தாரைப்
பிரியப் பிரியுமா நோய்.

இ-ள். உணர உணரும்-நன்மை தீமைகளை அறியும்படி ஆராயும், உணர்வு உடையாரை - அறிவினை யுடையவரை, புணர-நட்புக்கொள்ள, இன்பம் புணருமாம்-பலவித இன்பங்களும் பொருந்தும், தெரிய தெரியும் - நூற்பொருள்களை அறியும்படி ஆராயும், தெரிவு இலாதாரை-அறிவில்லாதவரை, புணரின்-ஆராயாமல் நட்புக்கொள்

---

* திருமுருகாற் - 10. நச் - உரை.

† புறத்திரட்டு - 582.

ளின், பிரிய-பிறகு நீங்குமளவில், நோய் பிரியும்-அவருறவால் உண்டாகிய துன்பமும் நீங்கும் எ-று.

பகுத்தறிவே அறிவாதலின் உணரவுணரும் என்றார். அறிவற்றவருடனும் கூடிப்பிரிதல் துன்பம் எனினும், பிரிதல் அவசியம் என்றபடி. ஆம், இரண்டும் அசை. இதன்கண் சொற்பொருட்பின் வருநிலையணி யுள்ளதறிக. (7)

248. * நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானுந் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானு நிலையினு
மேன்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்.

இ-ள் தன்னை நல் நிலைக்கண் - தன்னை நல்ல (உயர்ந்த) நிலையிலேயே, நிறுப்பானும் - நிறுத்த வல்லவனும், தன்னை நிலை கலக்கி-தன் நிலையிலும் தன்னைக் கலங்கச்செய்து, கீழ் இடுவானும் - கீழ்ப்பட்ட நிலைமையில் வைப்பவனும், நிலையினும் - தன் நிலைமையிலும், மேல் மேல் உயர்த்து நிறுப்பானும் - மேலும் மேலும் உயர்ந்த நிலைமையில் உயரச்செய்து நிறுத்தவல்லவனும், தலை ஆகச் செய்வானும்-யாவர்க்கும் உயர்ந்து தலைவனாகச் செய்யும் ஆற்றலுடையவனும், தான்-தானேயன்றிப் பிற னொருவ னன்று எ-று.

ஒருவன் உயர்வதும் தாழ்வதும் தன் அறிவினாலும், அஃதின்மையாலும் எனறபடி. நிறுப்பான் முதலியன வினையாலணைந்த பெயர்; உம்மை - எண்ணும்பொருளன. நிலையினும்-உம்மை உயர்வு சிறப்பு. (8)

249. கரும வரிசையாற் கல்லாதார் பின்னும்
பெருமை யுடையாருஞ் சேற—லருமரபி
னோத மரற்று மொலிகடற் றண்சேர்ப்ப
பேதைமை யன்ற தறிவு.

இ-ள். ஓதம் அரற்றும் ஒலிகடல் - அலைகள் மிக ஒலிக்கின்ற கடலின், தண்சேர்ப்ப-குளிர்ந்த துறையுடையவனே, கரும வரிசையால்-ஒருகாரியம் (எய்துதற்பொருட்டு) முறையுடன், கல்லாதார் பின்னும் - கற்றறிவில்லாதவர் பின்னாலும், பெருமை உடையாரும் - கற்றறிந்த பெருமை உடைய பெரியோரும், சேறல் - செல்லுதல், அரு மரபில்-அரிய முறைமையினால் (நோக்க) பேதைமை அன்று, அஃது அறிவு-அஃது அறிவுடைமையாகவே கொள்ளப்படும் எ-று.

* புறத்திரட்டு - 536.

கருமவரிசை - ஒரு காரியத்தின் பயனை அடையும் முறையில் என்றபடி; ஊழ்வினைப்பயனுறலெனினுமாம். உம்மை-முறையே இழிவு உயர்வு சிறப்புக்கள். அருமரபின் என்றதால், இயன்றவரை அப் பயனும் கருதிச் செல்லாமை சிறப்பாகும் என்க. 'அஃது அறிவு' என்பதில் ஆய்தம் தொகுத்தல், செய்யுள் விகாரம். (9)

250. * கருமமு முள்படாப் போகமுந் துவ்வாத்
தருமமுந் தக்கார்க்கே செய்யா—வொருநிலையே
முட்டின்றி மூன்று முடியுமே லஃதென்ப
பட்டினம் பெற்ற கலம்.

இ-ள். கருமமும்-பொருள் செய்வதற்கமைந்த காரியத்தையும், உள்படா-உடன்பட்டுச் செய்து, போகமும்-அப்பொருளால் அடையும் இன்பத்தையும், துவ்வா - நுகர்ந்து, தக்கார்க்கே - கொடுக்கத் தகுந்தவர்களுக்கே, தருமமும் செய்யா-ஈகையும் புரிந்து, மூன்றும்-ஆகிய இம் முச்செயலும், முட்டு இன்றி-தடையின்றி, ஒரு நிலையே-ஒரு தன்மையாக இப் பிறவியிலேயே, முடியுமேல் - நிறைவேறு மாறல், அஃது-அந் நிலைமை, பட்டினம் பெற்ற கலம்-வேற்று நாட்டில் வணிகஞ்செய்து உரிய பட்டினத்தை அடையப்பெற்ற மரக் கலம், என்ப-என்று உரைப்பார்கள் எ-று.

அறம்பொருளின்பங்களைச் செய்தல் அறிவுடைமை என்றபடி. அறத்துக்கும் இன்பத்துக்கும் பொருளே அவசியமாதலின், கருமம் - பொருள்செய்யும் கருமம் எனப்பட்டது. படா முதலியன, உடன்பாட்டு வினையெச்சம். உம்மை-எதிரது இறந்தது தழுவியன. தக்கார் - கல்வி முதலியவற்றால் தகுந்தவர் எனினுமாம். ஏகாரம்-தேற்றம். ஒருநிலை-தன்மை; இரட்டுறமொழிதலால் இப் பிறவியில் எனப்பட்டது. கடற் சென்ற கலம் மீளுதல் அருமையாதலின் ஊதியத்துடன் மீளுதல் மிக விரும்பத்தக்கது என்க. (10)

அறிவுடைமை முற்றிற்று.

## 26 - ஆம் அதிகாரம். அறிவின்மை

அஃதாவது அறியவேண்டுவனவற்றை அறியாமை. அறிவுடைமை கூறி அதனையே எதிர்முகமாக விளக்குதலின் அதன்பின் இது வைக்கப்பட்டது.

* புறத்திரட்டு - 63.

251. * நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை
பண்ணப் பணைத்த பெருஞ்செல்வ—மெண்ணுங்காற்
பெண்ணவா யாணிழந்த பேடி யணியாளோ
கண்ணவாத் தக்க கலம்.

இ-ள். ஆண் இழந்தபேடி - ஆண்டன்மையை இழந்துவிட்ட பேடியானவள், பெண் அவாய் - பெண்டன்மையை விரும்பி, கண் அவாத் தக்க கலம்-கண்கள் விரும்பத்தகுந்த அழகிய அணிகலன் களை, அணியாளோ - தரித்துக்கொள்ள மாட்டாளோ, (ஆதலால்) எண்ணுங்கால் - நன்கு சிந்தித்தால், நுண் உணர்வு இன்மை-நுட்ப மான அறிவு இல்லாமையே, வறுமை - ஒருவற்கு வறுமையாகும், அஃது உடைமையே - அவ்வறிவு உடைத்தாயிருத்தலே, பண்ண பணைத்த - மிகவும் வளர்ந்த, பெரும் செல்வம் - பெரிய செல்வ மாகும் எ-று.

பேடி அணியும் கலன்கள் ஏனை மகளிரைப்போல் அழகு சிறப் பேனும் இன்ப நுகர்ச்சியேனும் தரவல்ல அல்லன: அதுபோல நுண்ணறிவில்லாதவன் செல்வம், அழகும் அச் செல்வத்தின் நுகர்ச் சியும் தரவல்லன அல்ல என்க. எடுத்துக்காட் டுவமையணி. பண் ணப் பணைத்த - சின்னஞ் சிறுத்த என்பதுபோல் அடுக்குத்தொடர். அறிவினால் செல்வம் வளர்தலன்றி யழிதலின்மையின் பணைத்த பெருஞ் செல்வமென்றார். ஆண், பெண் - அவற்றின் தன்மையைக் குறித்தன; † "பெண்காமுற் றற்று" என்றதுபோல. ஆண்மை யிழந்த காரணத்தாற் பெண்மையவாவி என்க. கலம்-அணிகலம். (1)

252. பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் பாடழிந்.
தல்ல லுழப்ப தறிதிரேற்—றொல்சிறப்பி
னாவின் கிழத்தி யுறைதலாற் சேராளே
பூவின் கிழத்தி புலந்து.

இ-ள். பல் - பலவகைப்பட்ட, ஆன்ற-அகன்ற, கேள்வி - நூற் களைக்கேட்ட அறிவின், பயன் உணர்வார் - பயனை வாழ்க்கையிலும் கண்டு அறிந்தவர்கள், தம்பாடு - தமது பெருமை, அழிந்து-பொரு ளின்மையாற் கெட்டு, அல்லல் - வறுமையில், உழப்பது - வருந்துவ தன் காரணத்தை, அறிதிர் ஏல் - அறிய விரும்புவீராயின், தொல் சிறப்பின் - பழமையான மேன்மையுடைய, நாவின் கிழத்தி - நாவுக் குரியவளாகிய சரசுவதி, உறைதலால்-உணர்வுடையாருடன் வசித்த

* "அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்"—குறள் - 430.

† குறள் - 402.

லால், பூவின் கிழத்தி - தாமரை மலர்க்குரிய இலக்குமி, புலந்து - கோபம் கொண்டு, சேராள் ஏ-அந்தோ சேரமாட்டாள் எ-று.

கல்வி யறிவுடையவர் பொருளின்றி வருந்துதற்கு அவரது ஊழ்வினையே காரணமாயிருக்க, வேறொரு காரணம் கற்பித்தலால், இஃது ஏதுத்தற்குறிப் பேற்றவணி. நாமகள் - கல்விக்குரியவள், பிரமன் நாவிலும் கற்றோர் நாவிலும் உறைபவளென்பது மரபு. பூவின் கிழத்தி-இலக்குமி, பொருளுக்குரியவள். தாமரை மலரிலும், திருமால் மார்பிலும் உறைபவள். பிரமன் திருமாலுந்தியிற் பிறந்தானதலின், பூமகளும் நாமகளும் மாமி மருகியராக, மாமிக்கும் மருகிக்கும் ஒற்றுமையிராது என்னும் உலகவழக்குப் பற்றியும், ஒரு பெண் இருப்புழி மற்றொருபெண் புலத்தல் இயல்புபற்றியும், புலந்து சேராள் என்றார். அறிவே செல்வமாதலின் பொருள் என்று தனியே வேண்டுவதில்லை என்பது குறிப்பு. ஆன்ற - அகன்ற என்பதன் மரூஉ. கற்றலுடன் உலகானுபவமும் வேண்டுமென்பது காட்டப் பயனுணர்வார் என்றார். கிழத்தி - கிழமையடியாகப் பிறந்த பெண்பாற் பெயர். இதற்கு ஆண்பால் கிழவன். ஏகாரம்-இரக்கம். (2)

253. கல்லென்று தந்தை கழற வதனையோர்
சொல்லென்று கொள்ளா திகழ்ந்தவன்—மெல்ல
எழுத்தோலை பல்லார்முன் னீட்ட விளியா
வழுக்கோலைக் கொண்டு விடும்.

இ-ள். தந்தை - தகப்பனார், கல் என்று - படிப்பாய் என்று, கழற - தன் புதல்வனுக்கு அறிவுறுத்த, அதனை - அச்சொல்லை, ஓர் சொல் என்று-உறுதி பயக்கும் மொழி என்று, கொள்ளாது - கருதி மேற்கொளாமல், இகழ்ந்தவன்-இகழ்ந்து இளமையிற் கல்லாதவன், பல்லார்முன் - சபையின்கண் பலர் முன்பு, எழுத்து ஓலை - எழுதப் பட்ட ஓலையாலாகிய நூலை, மெல்ல நீட்ட-மெதுவாக ஒருவன் கைநீட்டிக்கொடுக்க இளியா - அவனை யிகழ்ந்து நகைத்து, வழுக்கோலை - அவனை அடித்தலாகிய குற்றத்திற்குத் தன் கைக்கோலை, கொண்டு விடும் - எடுத்துக் கொள்வான் எ-று.

கற்றறிவில்லாதவன் மூர்க்கனாவன் என்றபடி. கல்-ஏவல்வினை. கழறுதல் - அறிவுண்டாகும்படி இடித்து உரைத்தல். இகழ்ந்தவன் என இறந்தகாலத்திற் கூறியதால் இளமையில் எனப்பட்டது. மரியாதை கருதி மெல்ல நீட்டியது என்க. எழுத்தை உடைய ஓலை என்க; ஆகுபெயராய் நூலை உணர்த்தியது. இனி, ஓலையே எனினுமாம். இளித்தல் - இகழ்ந்து பல்லைக்காட்டி நகுதல்; அது பொருட்

செருக்கினால் என்க. விளியா-கோபித்து எனப் பிறரும் உரைப்பர். அடிக்க ஓங்கியதால் வழுக்கோல் என்றார். கொண்டுவிடும் - தேற்றப் பொருளது, * "தவ்வையைக் காட்டிவிடும்" என்றதுபோல. (3)

254. † கல்லாது நீண்ட வொருவ னுலகத்து
நல்லறி வாள ரிடைப்புக்கு—மெல்ல
விருப்பினு நாயிருந் தற்றே யிராஅ
துரைப்பினு நாய்குரைத் தற்று.

இ-ள். கல்லாது-கற்கவேண்டிய நூற்களைக் கற்காமல், நீண்ட-உருவத்தில் வளர்ந்த, ஒருவன் - ஒருமனிதன், உலகத்தில் - இவ்வுலகில், நல் அறிவாளர் இடை - கற்றறிந்த நல்லறிவுடையவர் சபையினிடை, புக்கு-புகுந்து, மெல்ல - வாய்மூடி, இருப்பினும் - இருந்தாலும் அச்செய்கை, நாய் இருந்த அற்று-நாய் உட்கார்ந்து இருக்கும் தன்மைபோன்றது, இராஅது-அவ்வாறு வாய்மூடியிராமல், உரைப்பினும்-யாதாயினும் கூறினாலும், நாய் குரைத்த அற்று-நாய் குரைக்கும் தன்மைபோன்றது எ-று.

அறிவு வளர்ச்சியில்லாமல் உடல் வளர்ச்சியின் இழிபுகாட்ட வளர்ந்த என்றார். புக்கு என்றதால் சபையினர் அனுமதியின்றிப் புகுதலாகக் கொள்க. மெல்ல இருத்தல்-வாய்திறவாது சும்மா இருத்தல். அறிவிலார் கூற்றுப் பொருட்பேறின்மையால் குரைத்தற்று என்றார். அறிவிலாரின் இழிவைக் காட்ட இழிபொருள் விழையும் நாயினை உவமித்து இருமுறை கூறினார். உவமையணி. இதில் எள்ளல் நகைச்சுவை உய்த்துணர்க. (4)

255. புல்லாப்புன் கோட்டிப் புலவ ரிடைப்புக்குக்
கல்லாத சொல்லுங் கடையெல்லாங்—கற்ற
கடாஅயினுஞ் சான்றவர் சொல்லார் பொருண்மேற்
படாஅ விடுபாக் கறிந்து.

இ-ள். புன்புல்லா-அற்ப அறிவு பொருந்தாத, கோட்டி-சபையிலுள்ள, புலவர் இடைபுக்கு-கற்றறிந்த புலவரின் இடையில் வலியச் சென்று, கடை எல்லாம் - கடையாயினவர் எல்லாம், கல்லாத - தாம் கல்லாதவற்றையும், சொல்லும் - எடுத்து உரைக்கும், சான்றவர் - அறிவும் குணமும் நிறைந்தவர்கள், கடாஅயினும் - பிறர் வினவினாலும், கற்ற - தாம் கற்றவற்றின், பொருள்மேல் - விடயங்களில், படாஅ - பொருந்தாமல், விடுபாக்கு - மனம் நீங்குதல், அறிந்து - உணர்ந்து, சொல்லார்-சொல்லாமலிருப்பர் எ-று.

---

* குறள் - 168. † புறத்திரட்டு - 519.

புன்புல்லாக்கோட்டி என மாற்றுக. புக்கு - மேலைப் பாட்டிற் போல. கடை - ஆகுபெயர். இஃது அஃறிணையாதலாலும், இழிபு தோன்றவும் சொல்லும் என்ற அஃறிணை வினைபெற்றது. கல்லாத, கற்ற-வினைப்பெயர். ஐயம் தரும் ஒன்றை விளக்கும்படி வினுவினும், ஆன்றவர் கொள்கை அறிதற்கும் அடக்கத்தினாலும் சோர்வஞ்சியும் * சொல்லார் என்க; சபையஞ்சியன்று. இனிப் புன்கோட்டி எனக் கூட்டியும், புல்லறிவினர்க்குப் பொருள் புலப்படாமல் விடுவதறிந்து சொல்லார் என்றும் பொருளுரைப்பர்; இப்பொருட்கு, புலவர் என்றது இகழ்ச்சி. கடா அயினும் - இன்னிசை யளபு. படாஅ, இசைநிறை. விடுபாக்கு-விடுதல்; ஈண்டுத் தொழிற்பெயர். (5)

256. † கற்றறிந்த நாவினர் சொல்லார்தஞ் சோர்வஞ்சி
மற்றைய ராவார் பகர்வர் பனையின்மேல்
வற்றிய வோலை கலகலக்கு மெஞ்ஞான்றும்
பச்சோலைக் கில்லை யொலி.

இ-ள். பனையின்மேல் - பனைமரத்தின்மேல், வற்றிய ஓலை-நீர் உலர்ந்தவோலை, கலகலக்கும் - கலகலவென்று ஒலிக்கும், எஞ்ஞான்றும்-எக்காலத்திலும், பச்சோலைக்கு - உலராத பச்சோலைக்கு, ஒலி-ஓசை, இல்லை-இல்லை, (அதுபோல) கற்று - கற்கவேண்டியவற்றைக் கற்று, அறிந்த - உணர்ந்த, நாவினர் - சொல்வன்மை யுடையவரும், தம் சோர்வு - தமது சொற்களில் சோர்வு உண்டாமோ என, அஞ்சி-பயந்து, சொல்லார் - அளவுக்கு மீறிச் சொல்லார், மற்றையராவார்-ஏனைக் கல்லாதவர், பகர்வர்-விடயங்களை ஆராயாது தமக்குத் தோன்றியவாறெல்லாம் கூறுவர் எ-று.

நாவினர் எனவே, சொல்வன்மை யுடையவர் என்க. அவரும் அஞ்சிச் சொல்லார் என உயர்வு சிறப்பும்மை தொகுத்தல். சோர்வு-சொற்குற்றம் பொருட்குற்ற முதலியன. இழிபுகாட்ட மற்றையவர் என்றார். கலகலக்கும்-ஒலிக்குறி, இரட்டைக்கிளவி. நீர் வற்றியது போல் அறிவுவற்றிய கல்லார் என்றும், பச்சோலைபோல் செம்மை யறிவுடையவர் எனவும் உவமைகொள்க; எடுத்துக்காட்டுவமை. இங்ஙனம் மாற்றி உபமானம் கொள்வதால் இஃதெதிர் நிரனிறைப் பொருள்கோள். (6)

257. ‡ பன்றிக்கூழ்ப் பத்தரிற் றேமா வடித்தற்றா
னன்றறியா மாந்தர்க் கறத்தா றுரைக்குங்காற்

* நாலடி - 256. † புறத்திரட்டு - 125.
‡ புறத்திரட்டு - 978.

குன்றின்மேற் கொட்டுந் தறிபோற் றலைதகர்ந்து
சென்றிசையா வாகுஞ் செவிக்கு.

இ-ள். நன்று-நன்மையை, அறியா-அறியாத, மாந்தர்க்கு-புல்லறிவாளர்க்கு, அறத்து ஆறு - தருமத்தின் நெறியை, உரைக்குங்கால் - எடுத்துச் சொல்லுமிடத்து, பன்றிகூழ் பத்தரில் - பன்றியுண்பதற்குக் கூழ்வார்க்கும் தொட்டியில், தேமா-இனிய மாம்பழச் சாற்றினை, வடித்த அற்று - பிழிந்ததை ஒக்கும், (அன்றியும் அம்மொழி) குன்றின்மேல்-பாறைக் குன்றின்கண், கொட்டும்-அடிக்கப்படும், தறிபோல் - கட்டுத் தறிபோல், தலை தகர்ந்து - தலை சிதறி, செவிக்கு - அவர்களது செவியில் சென்று, இசையா ஆகும்-போய்ப் பொருந்தாமல் வீணாய்க் கழியும் எ-று. ஆல்-அசை.

எடுத்துக்காட் டுவமையணி. பன்றி கூழேயன்றி நறுங்கனிச் சுவை யறியாவாறு இழிந்தவர் தீநெறியன்றி நன்னெறி யறியார் என்றபடி. அறியா-கல்வி, கேள்வி, ஒழுக்கத்தால் நன்னெறியறியாத. தேம்-இனிமை, மா-மரம், பழத்துக்கும் ஈண்டு அதன் சாற்றுக்கும் வருதலின் இருமடியாகு பெயர். தறியின் கூர் மழுங்குதல்போல் சொல்லும் பயனின்றிப்போம் என்க. செவிக்கு-ஏழனுருபு மயக்கம்.

258. * பாலாற் கழீஇப் பலநா ளுணக்கினும்
வாலிதாம் பக்க மிருந்தைக் கிருந்தன்று
கோலாற் கடாஅய்க் குறினும் புகலொல்லா
நோலா வுடம்பிற் கறிவு.

இ-ள். பலநாள் - பல நாட்களாக, பாலால் - பாலினால், கழீஇ-கழுவி, உணக்கினும்-உலர்த்தினாலும், வாலிது ஆம்-வெள்ளிய நிறமாகின்ற, பக்கம்-தன்மை, இருந்தைக்கு-கரிக்கு, இருந்தன்று-இருந்ததில்லை, (அதுபோல) கோலால் - கோலினால், கடாய் - அடித்து, குறினும்-செவிக்குள் குத்தித் தள்ளினும், நோலா - முற்பிறப்பில் தவம் செய்திலாத, உடம்பிற்கு - உயிரேந்திய உடலிற்கு, அறிவு - நல்லுணர்வு, புகல் ஒல்லா-உள்ளே புகமாட்டா எ-று.

எடுத்துக்காட்டுவமை. உம்மை இரண்டும் உயர்வு சிறப்பு. கழீஇ-சொல்லிசை யளபு. கடாஅய்-நிறையசை. இருந்தன்று-எதிர்மறை இறந்தகால முற்று. குறுதல் - செவியினுட் செல்லக் குத்துமாறு உரைத்தல். நோன்மை-ஈண்டுத்தவம். தவத்தானன்றி நல்லறிவுண்டாதலின்மையால் நோலா என்றார். இழிபுதோன்ற உடம்பு என வந்தது. (8)

* புறத்திரட்டு - 975.

259. *பொழிந்தினிது நாறினும் பூமிசைதல் செல்லா
இழிந்தவை காமுறூஉ மீப்போ—லிழிந்தவை
தாங்கலந்த நெஞ்சினார்க் கென்னாகுந் தக்கார்வாய்த்
தேன்கலந்த தேற்றச்சொற் றேர்வு.*

*இ-ள். பொழிந்து-தேனைச்சொரிந்து, இனிது நாறினும்-இனிமையான மணத்தை வீசினாலும், பூ-பூவின் தேனை, மிசைதல் செல்லாது - உண்ணுதல் பொருட்டுச் சொல்லாமல், இழிந்தவை - துன்மணம்வீசும் பொருள்களை, காமுறூஉம் - விரும்புகின்ற, ஈபோல்-ஈயைப்போல, இழிந்தவைதாம்-இழிகுணங்கள், கலந்த-பொருந்திய, நெஞ்சினார்க்கு-மனத்தையுடைய அறிவிலார்க்கு, தக்கார் வாய்-மேலோரது வாயினின்றும் பிறக்கும், தேன் கலந்த - தேன்போலு மினிய, தேற்றம் சொல் - தெளிவுதரும் சொற்களின், தேர்வு-துணிவு, என் ஆம்-என்ன பயனைச்செய்யும் (செய்யாது) எ-று.*

*அறிவிலார் பண்பை விளக்க ஈயை உவமித்தார். பூ - அதன் தேனுக்கு இடவாகுபெயர். இழிந்தவை-இடக்கரடக்கல், காமுறூஉம்-காமம் மரூஉம் என்பதன் விகாரம்; அளபெடை, இன்னிசை. வாயை மலராகவும் மொழியைத் தேனாகவும் ஏகதேச வுருவகமாகக் கொள்ளினுமாம். இஃது உவமையணி.* (9)

260. *கற்றா ருரைக்குங் கசடறு நுண்கேள்வி
பற்றாது தன்னெஞ் சுதைத்தலான்—மற்றுமோர்
தன்போ லொருவன் முகநோக்கித் தானுமோர்
புன்கோட்டி கொள்ளுமாங் கீழ்.*

*இ-ள். கீழ்-கீழ்மகன், கற்றார்-கற்றறிந்தவர், உரைக்கும்-சொற்பொருள் பொருந்தப் போதிக்கும், கசடு அறு நுண் கேள்வி-குற்றம் நீங்கிய நுட்பமான கேட்டற்குரிய கல்வியை, தன்நெஞ்சு பற்றாது-தன் மனதில் உட்கொள்ளாமல், உதைத்தலால் - அவர்மீது பொறாமையால் உந்துவதனால், மற்றும் ஓர் தன்போல் ஒருவன் - மற்றும் தன்போல் கீழ்மகனை ஒருவனை, முகம் நோக்கி-முகத்தை பார்த்து, தானும்-அக்கீழ்மகனும், ஓர் புன்கோட்டி கொள்ளும் - அற்பமான இழிந்த சொற்பொழிவு செய்வான் எ-று. ஓர், ஆம்-அசை.*

*அறிவிலான் இழிபுகாட்டக் கீழ் என அஃறிணையாலுரைத்தார். கல்விக்குக் கசடு, ஐயந்திரிபு. கேள்வி - கேட்டறியும் கல்வி. உதைத்தல்-உந்துதல், தூண்டுதல்; இனி, கேளவியைப் பற்றாது உதறித் தள்ளுதலென்று முரைப்பர். முகம் நோக்கி - எதிர்முகப்படுத்தி. தானும்-கற்றாரைப்போல் தானும். கோட்டி - அவைக்களம், ஆங்கு உரையாடலைக் குறித்தலின் ஆகுபெயர்.* (10)

அறிவின்மை முற்றிற்று.

## 27-ஆம் அதிகாரம். நன்றியில் செல்வம்

அஃதாவது நன்மைதாராத செல்வம்: அறிவில்லாதவர் செல்வமே நற்பயன் தாராமையால், இஃது 'அறிவின்மை'யின் பின் வந்தது.

261. * அருகுள தாகிப் பலபழுத்தக் கண்ணும்
பொரிதாள் விளவினை வாவல் குறுகா
பெரிதணிய ராயினும் பீடிலார் செல்வங்
கருதுங் கடப்பாட்ட தன்று.

இ-ள். அருகுளது ஆகி-சமீபத்தில் உள்ளதாய், பல பழுத்தக் கண்ணும் - பல பழங்களைப் பழுக்கப்பெற்றவிடத்தும், பொரிதாள் விளவினை - பொருக்குள்ள அடிக்கட்டையுடைய விளாமரத்தினை, வாவல் குறுகா - வௌவால்கள் பழத்தினிமித்தம் நெருங்கமாட்டா, (அதுபோல்) பெரிது அணியர் ஆயினும் - மிகவும் சமீபத்திலுள்ளவரெனினும், பீடு இலார்-பெருமையில்லாதவரது, செல்வம்-பொருள், கருதும் - எளியர்க் குதவப்படுமென்று நினைக்கும், கடப்பாட்டது அன்று-முறைமையினை யுடையதல்ல எ-று.

எடுத்துக்காட்டுவமை. வாவல் - எளியார்க்குவமை. விளங்கனி வாவற்குத் தவிர ஏனையவற்றுக்குப் பயன்படுதல்போல் பீடிலார் பொருள் எளியோர்க்கன்றித் தூர்த்தர் முதலாயினர்க்குப் பயன்படுமென்க. 'அருகலது' பாடமாயின், உடன்பட்டு வினைப்பெயர்; அ-சாரியை என்க. உம்மை - உயர்வு சிறப்பு, அணியர் - குறிப்பு வினைப்பெயர். (1)

262. † அள்ளிக்கொள் வன்ன குறுமுகிழ வாயினுங்
கள்ளிமேற் கைநீட்டார் சூடும்பூ வன்மையாற்
செல்வம் பெரிதுடைய ராயினுங் கீழ்களை
நள்ளா ரறிவுடை யார்.

இ-ள். அள்ளிக்கொள்வ அன்ன - கைகளால் எடுத்துக்கொள்வதுபோன்ற அழகுடைய, குறு-சிறிய, முகிழ ஆயினும் - அரும்புகளை யுடையனவாயினும், சூடும் - அணியத்தகும், பூ அன்மையால்- மலர் அல்லாமையால், கள்ளிமேல - கள்ளிச்செடியின்மேல், கைநீட்டார்-அதன் பூக்களைப்பறிக்கக் கைகளை நீட்டமாட்டார், (அதுபோல) செல்வம் - பொருள், பெரிது-மிகவும், உடையராயினும் - உடையவ

---

* புறத்திரட்டு - 1141. 'அருகலதாகி' என்றும் பாடம்.

† புறத்திரட்டு - 1142.

ராலும், கீழ்களை-கீழ்மக்களை, அறிவுடையார் - விவேகமுடையார், நள்ளார்-விரும்பிச் சேரார் எ-று.

இதுவும் எடுத்துக்காட் டுவமையணி. அழகின் மிகுதியால் எடுத்துக்கொள்ள விரும்புதல் என்பதற்கு அள்ளிக்கொள்வ அன்ன என்றார்; அகரம் தொகுத்தல். கொள்வ-தொழிற்பெயர். கீழ்கள் - மேல் * "கீழ்" என்றதுபோல. கைநீட்டுதல், பறித்தற்கு. (2)

263. † மல்கு திரைய கடற்கோட் டிருப்பினும்
வல்லூற் றுவரில் கிணற்றின்கட் சென்றுண்பர்
செல்வம் பெரிதுடைய ராயினுஞ் சேட்சென்று
நல்குவார் கட்டே நசை.

இ-ள். மல்கு-மிக்க, திரைய-அலைகளையுடைய, கடல்-கடலின், கோடு-கரையில், இருப்பினும்-வசித்திருந்தாலும், வல்லூற்று-வலிய நீரூற்றையுடைய, உவர்இல்-உப்பில்லாத, கிணற்றின் கண்-கிணற்றினிடத்து, சென்று - வெகுதூரத் திருப்பினும்போய், உண்பர்-நீரையுண்ணுவார், (அதுபோல) செல்வம்-(அருகில் இருக்கும் கீழோர்) செல்வத்தை, பெரிது-மிகவும், உடையராயினும்-உடையவராலும், சேண் - தூரத்தில், சென்றும் - சென்றாகிலும், நல்குவார்கட்டே - கொடுக்கும் நன்மக்களிடத்தே, நசை - ஒருவர்க்கு விருப்பம் உண்டாகும் எ-று.

இதுவும் அது. திரைய - குறிப்புப் பெயரெச்சம். உவரில் கிணறு - நன்னீர்க்கிணறு. வல்லூற்று எனவே - இடையிடையிட்டு ஊறும கிணறென்க. உவர்ப்புடைமையே கடல் பயன்படாமைபோல் கீழோரின் அறிவின்மையே அவர் பொருள் பயனின்மை பயக்குமென்க. ஏகாரம் பிரிநிலை. சென்றும்-உம்மை இழிவு சிறப்பு; ஏனையிரண்டும் உயர்வு. (3)

264. ‡ புணர்கடல்சூழ் வையத்துப் புண்ணியமோ வேறே
உணர்வ துடையா ரிருப்ப—வுணர்விலா
வட்டும் வழுதுணையும் போல்வாரும் வாழ்வரே
பட்டுந் துகிலு முடுத்து.

இ-ள். உணர்வது உடையார்-உணர வேண்டியவற்றை அறிந்த பெரியோர், இருப்ப - பொருளின்றி வறிஞராய் இருக்க, உணர்வு இலா - அத்தகைய அறிவில்லாத, வட்டும் வழுதுணையும் - சூதாடு

* நாலடி - 260. † புறத்திரட்டு - 1144.

‡ "இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு"—குறள் - 374.

காயும் வழுதுணைஞ்செடியும், போல்வாரும் - ஒத்திருப்பவர்களும், பட்டும் துகிலும் - பட்டாலும் பிறவாலுமாகிய ஆடையை, உடுத்து-தரித்து, வாழ்வரே - பொருளுடன் வாழ்கின்றார்களே, (ஆகலால்) புணர்கடல் சூழ் - அலைகள் கூடிய கடல்சூழ்ந்த, வையத்து - உலகத்தில், புண்ணியமோ வேறு ஏ - பொருள் அடைதற்காகிய நல்வினைப் பயனோ வேறு வகையாயுள்ளது எ-று.

புண்ணியம் - பொருளடைவதற்காகிய ஆகூழ். சூதாட்டத்தில் வட்டுகளென்னும் காய்கள் வெட்டுப்படினும் மீண்டும் ஆட்டத்தில் சேர்க்கப்படுதல்போல், பெரியோரால் சிறுமைப்படினும் மானமின்றி அவர்முன் வருவாரும், வழுதுணங்காய் நற்சுவையுடைய இலை காய்களுடன் மறைவில் செழித்துக்காய்த்து அழிவதுபோல, அறிவிலார் பொருள் பெற்றும் நல் விடயத்துக்குப் பயன்படாது கெடும் என்றும் உவமை கொள்க. பட்டும் துகிலும் ஏனை அணிகலன்களுக்கும் உபலக்ஷணம். (4)

265. * நல்லார் நயவ ரிருப்ப நயமிலாக்
கல்லார்க்கொன் றாகிய காரணந்—தொல்லை
வினைப்பய னல்லது வேனெடுங் கண்ணாய்
நினைப்ப வருவதொன் றில்.

இ-ள். வேல் - வேல்போலும், நெடும் - நீண்ட, கண்ணாய்-கண்களை யுடையவளே, நயவர் - நற்குணமுடையராய், நல்லார் - நல்லறிவுடையவர்கள், இருப்ப-வறிஞராயிருக்க, நயமிலா-நற்குணமில்லாத, கல்லார்க்கு - கற்றறிவில்லார்க்கு, ஒன்று - ஒருபொருள், ஆகிய - பொருந்திய, காரணம் - காரணம் யாதெனில், தொல்லை - பழைய, வினை-நல்வினையினது, பயன் அல்லது-பயனல்லாமல், நினைப்ப-ஒருவன் நினைக்க, வருவது-அதனால் வரத்தக்கது, ஒன்று-வேறொன்று, இல்-இல்லை எ-று.

நயவராகிய நல்லார் என மாறுக. நல்லார், கல்லார் எனவே, கற்றறிந்தவர், அல்லாதவரெனப்பட்டது. தொல்லை வினைப்பயன்-ஈண்டு ஆகூழ். கண்ணாய் - மகடூஉ முன்னிலை. ஒன்று - காரணம், பொருள் என்ற இருபொருள்தர வந்தது. சிந்தனையால் அறியத்தக்க காரணம், அதனால் பெறத்தக்க பொருள் என்று பொருள் கொள்க. (5)

266. நாறாத் தகடேபோ னன்மலர்மேற் பொற்பாவாய்
நீறாய் நிலத்து விளியரோ—வேறாய

* புறத்திரட்டு - 465.

புன்மக்கள் பக்கம் புகுவாய்நீ பொன்போலு
நன்மக்கள் பக்கந் துறந்து.

இ-ள். நாறு-மணமில்லாத, தகடேபோல் - புற இதழைப்போலும், நன்மலர்மேல்-நல்ல தாமரைமேல் இருக்கும், பொன் பாவாய்-பொன்னாலாகிய பதுமைபோலழகிய இலக்குமியே, பொன்போலும்-பொன்னைப்போல நற்பலன் தரும், நல் மக்கள் பக்கம் - நற்குணமுடையவரிடமிருந்து, துறந்து - நீங்கி, வேறு ஆய-அவர்க்கு மாறுபட்ட, புன்மக்கள் பக்கம் - இழிகுணமுடையவர்பால், நீ புகுவாய்-நீ போய்ச்சேரும் குணமுடையாய், (ஆதலின்) நிலத்து-இவ்வுலகில், நீ-நின் ஆட்சி, நீறு ஆய்-சாம்பலாக, விளி - கெடக்கடவது எ-று.

உத்தமர் வீழ்தலும், அதமர் வாழ்தலும் வினைப்பயனாயினும், பொருளால் இவை நிகழ்வதால், அப்பொருட்குத் தேவதையாகிய இலக்குமியைப் பழித்தபடி. மலரின் புறவிதழ் மணமின்மைபோல், தாமரையினுள் உறையும் இலக்குமிக்கு நற்குணமின்று என்க. பாவை-உவமவாகுபெயர். நீ விளி-நின் ஆட்சி கெடுக என்க. ஆட்சியாவது, பொருளின் ஆதிக்கம். வேறாய-நன்மக்கட்கு வேறாய. புகுவாய்-முன்னிலை ஒருமை வினைப்பெயர். ஏ, அரோ-அசை. (6)

267. நயவார்க ணல்குரவு நாணின்று கொல்லோ
பயவார்கட் செல்வம் பரம்பப் பயின்கொல்
வியவாய்காண் வேற்கண்ணா யிவ்விரண்டு மாங்கே
நயவாது நிற்கு நிலை.

இ-ள். வேல் கண்ணாய் - வேல்போலும் கண்களையுடையாய், நயவார்கண் - உதவிபுரியும் நற்குணமுடையவரிடத்து உள்ள, நல்குரவு- வறுமை, நாண் இன்றுகொல் - நாணம் இல்லாததோ, பயவார்கண்-பிறர்க்கு உதவி செய்யாதவரிடத்து உள்ள, செல்வம்-பொருள், பரம்ப-விடாமல் பரவுதற்கு ஏற்ற, பயின்கொல்-பிசினோ, இ இரண்டும் - இத்தகைய வறுமையும் செல்வமுமாகிய இரண்டும், ஆங்கே-அவை சேர்ந்த இடத்தில், நயவாது-நன்மை தாராமல், நிற்கும் நிலை-நிற்கின்ற நிலைமையை, வியவாய்காண்-நீ வியந்துபார் எ-று.

பிறர்க்குக் கொடுக்க மனம் இருந்தும் பொருளின்மையால் நாண் உண்டாயிற்று. பயின்-பிசின், எங்கும் பரவாமல் பூசிய இடத்தில் இருத்தலால், யார்க்கும் கொடுபடாமல் இருக்கும் ஈயார் செல்வத்துக் குவமையாயிற்று. ஆங்கு - நயவார், பயவார் என்றவர்களைக் குறித்தது. காண்-முன்னிலை யசை. கண்ணாய்-மகடூஉ முன்னிலை. (7)

268. வலவைக ளல்லாதார் காலாறு சென்று
கலவைக ளுண்டு கழிப்பர்—வலவைகள்
காலாறுஞ் செல்லார் கருனையாற் றுய்ப்பவே
மேலாறு பாய விருந்து.

இ-ள். வலவைகள் - நாணிலிகள், அல்லாதார் - அல்லாத நாண முடைய உத்தமர், கால் ஆறு சென்று - வறுமையால் காலால் நெடு வழிசென்று, கலவைகள் - இரந்துபெற்ற கலப்புணவை, உண்டு- அருந்தி, கழிப்பர் - காலம் கழிப்பார்கள், வலவைகள் - நாணில்லாத வர்கள், கால் ஆறும் செல்லார்-பொருளுடைமையால் காலால் நடந்து வழிச் செல்லாதவராய், ஆறுமேல் பாய - நெய், பால், தயிர் ஆறு போல் மேலும் மேலும் பெருக, இருந்து - இல்லத்திலேயே தங்கி, கருனையால் துய்ப்ப - பொரிக்கறியுடனே சிறந்த உணவாதிபோகங் களை நுகர்வார்கள் எ-று.

இது பயனில் செல்வத்தின் இழிபு கூறியது. ஆறு - வழி. கலவை, இரந்துபெற்ற உணவு பலவகைப்பட்டன ஆதலின். துய்ப்ப என்றதால் உணவோடு ஏனைப்போகங்களும் கொள்க. ஆறு - நெய் முதலியன மேலும் ஆறுபோல் பெருக என்க. இருந்து-இரவலரை சேர்க்காமல் வீட்டினுள் தங்கி. (8)

269. * பொன்னிறச் செந்நெற் பொதியொடு பீள்வாட
மின்னொளிர் வானங் கடலுள்ளுங் கான்றுகுக்கும்
வெண்மை யுடையார் விழுச்செல்வ மெய்தியக்கால்
வண்மையு மன்ன தகைத்து.

இ-ள். பொன் நிறம் - பொன்போலும் நிறமுடைய, செந்நெல்- செந்நெற்பயிர், பொதியொடு-கதிர்களுடன், பீள்வாட-இளங்கருவும் வாடிப்போக, மின்-மின்னல், ஒளிர்-விளங்கும், வானம்-மேகம், கட லுள்ளும் - நிலத்தை ஒழிந்துக் கடலிடத்தும், கான்று உகுக்கும்- நீரை வேறுபடுத்திச் சொரியும், வெண்மையுடையார் - வெள்ளறி வுடையார், விழுசெல்வம் - சிறந்த செல்வத்தை, எய்தியக்கால் - அடைந்தால், வண்மையும் - அவர்களுபகாரச் செய்கையும், அன்ன தகைத்து-அத்தன்மை யுடையதாம் எ-று.

பொதி-நெல்விளைந்த கதிர்; பீள்-முற்றும் வெளிப்படாத நிலையி லுள்ள அதன்கரு, மழைநீரைப் பயிர் பெற்றால் உலகினர்க் குண வாகும், கடல்பெறின் எப்பயனுமில்லை; நல்லோர் உதவிபெறின்

* புறத்திரட்டு - 1145.

பலர்க்கும் பயனும், தீயோர் பெறின் தீமையே விளையும் என்க. உவமையணி. வான்-இடவாகுபெயர், அம்-சாரியை. (9)

270. * ஓதியு மோதா ருணர்விலா ரோதாது
மோதி யனையா ருணர்வுடையார்—தூய்தாக
நல்கூர்ந்துஞ் செல்வ ரிரவாதார் செல்வரு
நல்கூர்ந்தா ரீயா ரெனின்.

இ-ள். உணர்வு இலார் - பகுத்தறிவில்லாதவர், ஓதியும் - பல நூலைப் படித்திருப்பினும், ஓதார் - படியாதவராவர், உணர்வு உடையார்-பகுத்தறிவுடையவர், ஓதாதும்-படியாதிருந்தும், ஓதி அனையார்-படித்தவரை ஒப்பாவர், தூய்து ஆக-மனம் பரிசுத்தமாக, இரவாதார்-இரந்துண்ணுதவர், நல்கூர்ந்தும்-வறுமை யுற்றாலும், செல்வர்-பொருளுடையவராவார்கள், செல்வரும்-பொருளுடையாரும், ஈயார்எனின்-இரப்போர்க்குக் கொடாராகில், நல்கூர்ந்தார்-வறியவராவர் எ-று.

கல்வியின்பயன் அறிவும், செல்வத்தின்பயன் ஈகையுமாதலின் அப்பயன் அடையாவிடத்து, கல்வியும் செல்வமும் பெற்றிருந்தும் பயனில்லை என்றபடி. உள்ளத் தூய்மையால் இரத்தலில்லை என்க. ஓதியும், செல்வரும் - உயர்வு சிறப்பும்மை; ஏனைய, இழிவு சிறப்பு. இஃது எதிர் நிரனிறைப் பொருள்கோள். (10)

நன்றியில் செல்வம் முற்றிற்று.

இன்பவியல் முற்றிற்று.

---

## நான்காவது துன்பவியல்

அஃதாவது மனதிற்குத் துன்பத்தை விளைப்பனவற்றை உரைக்கும் பகுதி. மேலுரைத்த இன்பவியலுக்கு மறுதலை யாதலின் அதன்பின் இது வைக்கப்பட்டது.

## 28 - ஆம் அதிகாரம். ஈயாமை

அஃதாவது கையில் உடைய பொருளைத் தக்கார்க்குக் கொடுக்காமை. அங்ஙனம் கொடாதபொருள் நன்றியில் செல்வமேயாதலின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

271. நட்டார்க்கு நள்ளா தவர்க்கு முளவரையா
லட்டது பாத்துண்ட லட்டுண்ட—லட்ட

* புறத்திரட்டு - 1148.

தடைத்திருந் துண்டொழுகு மாவதின் மாக்கட்
கடைக்குமா மாண்டைக் கதவு.

இ-ள். அட்டு உண்டல்-சமைத்துண்டு வாழ்தலாவது, நட்டார்க்கும் - உறவினர் நண்பர்களுக்கும், நள்ளாதவர்க்கும் - ஏனை விருந்தினர்க்கும், அட்டது-சமைத்ததை, உள-தமக்குள்ள, வரையால்-அளவுக்கேற்ப, பாத்து உண்டல்-பகுத்துண்ணுதலாம், அட்டது-சமைத்ததை, அடைத்து-யாரும் புகாவண்மை கதவை அடைத்து, இருந்து உண்டு-தாம் மட்டில் தனித்திருந்து புசித்து, ஒழுகும் - நடக்கின்ற, ஆவது இல்-நன்மை ஆகப் பெறுதல் இல்லாத, மாக்கட்கு-அறிவிலிகளுக்கு, ஆண்டைக்கதவு - துறக்க வாயிற் கதவு, அடைக்கும் - அடைக்கப்படும் எ-று.

நட்டார், நண்பரோ டுறவினரையும் கொள்க. நள்ளார் - முன் பறிந்திலாத விருந்தினர். அட்டது-ஒருமைப்பெயர்; பலவகைக் கறிகளன்றி ஒரே வகையான உணவு என ஈவோரின் ஏழ்மையைக் குறித்தது. பாத்து - பகுத்து. உண்ணும்போது பிறரை விலக்க இம்மையில் இவர் கதவை அடைத்ததுபோல இவருக்குத் துறக்கத்தின் கதவும் அடைபடும் என்க. அடைக்கும்-பிறவினைப்பொருளில் வந்தது.

272. * எத்துணை யானு மியைந்த வளவினாற்
சிற்றறஞ் செய்தார் தலைப்படுவர்—மற்றைப்
பெருஞ்செல்வ மெய்தியக்காற் பின்னறிது மென்பா
ரழிந்தார் பழிகடலத் துள்.

இ-ள். எத்துணையானும்-எவ்வளவாகிலும், இயைந்த-பொருந்திய, அளவினால் - அளவால், சிறு அறம் - சிறிய தருமத்தை, செய்தார்-செய்தவர்கள், தலைப்படுவர்-மேன்மை யடைவார்கள், மற்றை-அறத்துக்குதவாத வேறாகிய, பெரும்-பெரிய, செல்வம் - பொருளை, எய்தியக்கால் - அடைந்தால், பின் - மூப்பில், அறிதும் - அறத்தை அறிந்து செய்வோம், என்பார்-என்று கருதியிருப்போர், பழி-பழிக்கத்தகும், கடலத்துள் - துன்பமாகிய கடலில், அழிந்தார்-முழுகிக் கெட்டவராவார் எ-று.

எத்துணையானும் - உம்மை, இழிவு சிறப்பு. செய்தார், அழிந்தார்-வினையாலணைந்த பெயர். மற்றை-பிறிது; அறத்துக்குதவாதது. எய்தியக்கால்-எய்துவது அருமை குறித்தது. அறிதும்-மேல் † "மற்றறிவாம்" என்றதுபோல. அழிந்தார் - துணிவுபற்றி இறந்ததின்

* நாலடி - 19. † நாலடி - 19.

வந்த காலவழுவமைதி. பழிகடலத்துள்-வினைத்தொகை. கடல் துன் பத்துக் குவமவாகுபெயர். இனிப் பழியாகிய கடல் எனக் கொண்டு, வலிமிகாமை செய்யுளின்ப நோக்கி எனினுமாம். அத்து-சாரியை. (2)

273. * துய்த்துக் கழியான் றுறவோர்க்கொன் றீகலான்
வைத்துக் கழியு மடவோனை—வைத்த
பொருளு மவனை நகுமே யுலகத்
தருளு மவனை நகும்.

இ-ள். துய்த்து-தானும் நுகர்ந்து, கழியான்-நாளைக்கழியாதவனுகவும், துறவோர்க்கு-துறவிகளுக்கு, ஒன்று-ஒரு சிறு பொருளேனும், ஈகலான் - கொடுத்துதவாதவனுகவும், வைத்து - பொருளைத் தேடிச் சேமித்துவைத்து, கழியும்-இறக்கும், மடவோனை - அறிவில்லாதவனுகிய, அவனை - அவ்வுலோபியை, வைத்த - அவ்வாறு தேடி வைக்கப்பட்ட, பொருளும் - செல்வமும், நகும் - எள்ளிச் சிரிக்கும், உலகத்து-உலகத்தில் விளங்கும், அருளும் - கருணை என்னும் குணமும், அவனை-அத்தகையவனை, நகும் - எள்ளிச் சிரிக்கும் எ-று.

கழியான், ஈகலான் - எதிர்மறை வினைப்பெயர். கழியும் - இறக்கும். பெறற்கரும் பொருளைப்பெற்றும் அதன் பயனை யடையாமையால் 'மடவோன்' என்றார். தானும் நுகராததால் செல்வமும், பிறர்க்குதவாததால் அறமும் நகும் என்க. வைத்த-பிறவினை. இழிபுநோக்கி அவனை அவனை என அடுக்கிவந்தன. ஏ-இரக்கப் பொருளது. (3)

274. † கொடுத்தலுந் துய்த்தலுந் தேற்ற விடுக்குடை
உள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வ மில்லத்
துருவுடைக் கன்னியரைப் போலப் பருவத்தா
லேதிலான் றுய்க்கப் படும்.

இ-ள். கொடுத்தலும் - பிறர்க்கு ஈதலும், துய்த்தலும் - தான் நுகர்தலும், தேற்ற-செய்தல் தெளியாத, இடுக்கு உடை - உலோப குணமுள்ள, உள்ளத்தான் - மனமுடையவன், பெற்ற - அடைந்த, பெரும் செல்வம் - பெரிய செல்வம், இல்லத்து - மனையிடத்து, உருவுடை-அழகுடைய, கன்னியரை போல-கன்னிப் பருவமுற்ற பெண் களைப்போல, பருவத்தால் - அநுபவித்தற்குரிய காலத்தில், ஏதிலான் - அயலானுல், துய்க்கப்படும் - அநுபவிக்கப்படும் எ-று.

இடுக்கு - கொடாமல் பற்றும் குணம்; பற்றுள்ளம், மேல் ‡ 'இடுக்குற்றுப் பற்றினும்' என்றதுபோல, உள்ளத் திடுக்குடை

* புறத்திரட்டு - 237. † புறத்திரட்டு - 1143. ‡ நாலடி - 93.

யான் என வடமொழி முடிபு கூறினுமாம். கன்னியர் - மணமாகாத மங்கைப் பருவத்தினர். பருவத்தால் - பருவத்தில்; உருபு மயக்கம். ஏதிலான்-நாயகன்; ஈன்றவனுக்குப் * பயன்படாமல் ஏதிலானுக்குப் பயனுதலின், கன்னியர் உலோபியின் செல்வத்துக் குவமிக்கப்பட்டனர்; உவமையணி. (4)

275. † எறிநீர்ப் பெருங்கட லெய்தி யிருந்து
மறுநீர்ச் சிறுகிணற் றூறல்பார்த் துண்பர்
மறுமை யறியாதா ராக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை.

இ - ள். எறி - அலைகளையெறியும், நீர் - மிக்க நீரையுடைய, பெரும்-பெரிய, கடல்-கடற்கரையை, எய்தியிருந்தும்-அடைந்திருந்தும், அறுநீர் - அற்று அற்றுச் சுரக்கும் நீருடைய, சிறு - சிறிய, கிணறு-கிணற்றின், ஊறல்-நீரூற்றை, பார்த்து-தேடிக்கண்டு, உண்பர்-அந்நீரைப் பருகுவார்கள், (ஆதலின்) மறுமை-மறுமைப்பயனை, அறியாதார்-அறிந்து அறம் செய்யாதவர்களது, ஆக்கத்தின் - செல்வத்திலும், சான்றோர் - நற்குணமிக்கவர்களுடைய, கழி-மிக்க, நல்குரவே-வறுமையே, தலை-முதன்மையுடையது எ-று.

பெருங்கடல், சிறுகிணறு - முரண்தொடை. அறுநீர் - சிறிது சிறிதாக ஊறுகின்ற நீர். ஊறல்-ஆகுபெயர். உண்பர் எனவே பிறிது மொழிதலணியால் இரப்போர் வறியோராயினும் கீழோரிடம் செல்லாது சான்றோர்பாற் செல்வர் என்க. மறுமை அறிதல் - மறுமையின் பயன் உணர்ந்து ஏற்ற அறம்புரிதல். ஏகாரம்-பிரிநிலை, சிறப்புமாம். ஈற்றடிகள்-ஏதுவணி. (5)

276. ‡ எனதென தென்றிருக்கு மேழை பொருளை
எனதென தென்றிருப்பென் யானுந்—தனதாயிற்
றானு மதனை வழங்கான் பயன்றுவ்வான்
யானு மதனை யது.

இ - ள். எனது எனது என்று - எனக்குரியது எனக்குரியதென்று, இருக்கும்-நினைந்திருக்கின்ற, ஏழை - உலோபியாகிய அறிவில்லாதவனது, பொருளை - செல்வத்தை, யானும் - நானும், எனது

* "ஏழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறக்கினும் யாழ்க்கவைதா மென்செய்யும்
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே"—(பாலைக்கலி)

† நாலடி - 263. ‡ புறத்திரட்டு - 238.

எனது என்று-எனக்குரியது எனக்குரியதென்று, இருப்பேன்-நினைந் திருப்பேன், தனது ஆயின்-அப்பொருள் அவ்வுலோபிக்குரியதாகில், தானும் - அவ்வுலோபியும், அதனை - அப்பொருளை, வழங்கான் - கொடுக்குமுரிமையிருந்தும் கொடாதவனாய், பயன் - அதன் பலனை, துவ்வான் - நுகருமுரிமை யிருந்தும் நுகராதவனா யிருக்கிறான், யானும் - நானும், அதனை - அப்பொருளை, அது - அவ்விதமாகவே கொடுத்தலும் நுகர்தலுமின்றி யிருக்கிறேன் எ-று.

பொருள் பெற்றிருந்தும் அதனைக் கொடுத்தலும் நுகர்தலு மில்லாவிடில் இன்மைக்கு ஈடாகும் என்றபடி. பொருளின் சிறப்பறி யாமை கருதி ஏழை என இகழ்ந்தார். இதன்கண், பிறர்கண் காணும் பேதைமை காரணமான எள்ளல் நகைச்சுவை காண்க. (6)

277. * வழங்காத செல்வரி னல்கூர்ந்தா ருய்ந்தா
ரிழந்தா ரெனப்படுத லுய்ந்தா—ருழந்ததனைக்
காப்புய்ந்தார் கல்லுதலு முய்ந்தார்தங் கைந்நோவ
யாப்புய்ந்தா ருய்ந்தார் பல.

இ-ள். வழங்காத-பிறர்க்குக் கொடாத, செல்வரின்-பணமுடை யவரினும், நல்கூர்ந்தார் - வறிஞர்கள், உய்ந்தார் - பல துன்பங்களி னின்றும் பிழைத்தவராவர், (எங்ஙனமெனில்) இழந்தார் எனப்படு தல்-பொருளை இழந்தனர் என்று உரைக்கப்படுதலினின்றும், உய்ந் தார் - பிழைத்தனர், உழந்து - மெய்வருந்தி, அதனை காப்பு - அப் பொருளைக் காவல் செல்வதினின்றும், உய்ந்தார் - பிழைத்தனர், கல் லுதலும் - அதனைச் சேமிக்குமாறு நிலத்தைத் தோண்டுவதிலும், உய்ந்தார்-தப்பினார், தம் கைநோவ யாப்பு - தம் கைவருந்த அதனை இறுகப்பிடித்தலினும், உய்ந்தார்-தப்பினார், பல உய்ந்தார்-இன்னும் பலவற்றினின்றும் தப்பினாராவர் எ-று.

பொருளிருந்தும் கொடாமையால் அதனை இழந்ததற்கிணை † என்பதற்கு 'எனப்படுதல்' என்றார். இனி, இழத்தல்-கள்வர், தாயத் தார் ஆகியவரால் எனினுமாம். காப்பு - தொழிற்பெயர். கல்லுதல், புதைக்கும் வண்ணம். இறுகப் பிடித்தலே ஈயாமை யாதலின், அத னால் கைந்நோவுண்டாம் எனத் தன்மை நவிற்சியணி காண்க. யாப்பு- பிணிப்பு. ஈகையிலாச் செல்வர்க்குள்ள துன்பம் வறிஞர்க்கில்லை யாத லின் வறிஞரே மேம்பட்டவரென்றபடி. இது சொற்பொருட் பின் வருநிலையணி. (7)

* புறத்திரட்டு - 239. " உய்ந்தபல " என்றும் பாடம்.
† நாலடி - 9.

278. தனதாகத் தான்கொடான் றாயத் தவருந்
தமதாய போழ்தே கொடாஅர்—தனதாக
முன்னே கொடுப்பி னவர்கடியார் தான்கடியான்
பின்னை யவர்கொடுக்கும் போழ்து.

இ-ள். தனதாக-செல்வம் தனக்குரியதாயிருக்க, தான் - தான், கொடான்-பிறர்க்குத் தருமஞ் செய்யான், தமதாய போழ்தே-அவன் இறப்ப அப்பொருள் தங்களுக்குரியதான காலத்தே, தாயத்தவரும்-தாயாதிகளும், கொடாஅர்-பிறர்க்குக் கொடுக்கமாட்டார், முன்னே-தானிறக்குமுன், தனதாக - தனக்குரியதா யிருந்தபோது, கொடுப்பின் - கொடுத்திருப்பின், அவர் - அத்தாயாதிகள், கடியார் - விலக்க மாட்டார், பின்னை-தானிறந்தபின், அவர் - அத்தாயாதிகள், கொடுக்கும்போழ்து - தருமஞ்செய்யுங் காலத்தில், தான் கடியான்-இறந்த அவனும் விலக்கமாட்டான் எ-று.

தனது, தமது - பொருள்; குறிப்பு வினையாலணையும் பெயர். கொடாஅர்-அளபெடை, இசைநிறை. கடிதல் - சினங்கொண்டு தடுத்தல். முன்னே, பின்னை - இறப்பதன் முன்னும் பின்னும். தருமஞ் செய்தலைத் தடுத்தல் எவருமிலர், ஆதலின் ஈயாமை தீது என்றபடி.

279. இரவலர் கன்றாக வீவாரா வாக
விரகிற் சுரப்பதாம் வண்மை—விரகின்றி
வல்லவ ரூன்ற வடியாபோல் வாய்வைத்துக்
கொல்லச் சுரப்பதாங் கீழ்.

இ-ள். இரவலர் - யாசகர், கன்றாக - கன்றை ஒப்ப, ஈவார்-கொடுப்பவர், ஆஆக - பசுவை ஒப்ப, விரகில்-மன எழுச்சியுடன், சுரப்பது - உவந்து கொடுப்பது, வண்மை - ஈகைக்குணமாம், விரகு இன்றி-மனஎழுச்சி இல்லாமல், வல்லவர்-வலியவர், ஊன்ற-அழுத்தி வருத்த, வடி - பாலைவடிக்கின்ற, ஆபோல் - பசுவைப்போல, வாய் வைத்து-வாயினால், கொல்ல-வசை மொழிகளால் இரவலர் வருத்த, சுரப்பதாம்-பயன் தருவது, கீழ் - கீழ்மைக் குணமாம் எ-று.

இஃது உவமையணி; விரகு-மன எழுச்சி; உற்சாகம். கன்றை உள்ளுந்தோறும் பாலைச்சொரியும் * பசுப்போல், இரவலர் நிலை கருதவும் தாமே வழங்கும் சான்றோர் என்க. வண்மையாற் பெறப்படுதலால் சுரப்பின்றிப் பால் தருதலின் 'வடிஆ' என்றார். வாய்வைத்து-வாயினாற் றுன்பம் பொருந்தச்செய்து, † "வாயினாற் சுடுவது ஆறா

* "மேதி, கன்றுள்ளிக் கனைப்புச் சோர்ந்த பால்" - (கம்ப-பால-நாட்-13.)
† குறள் - 120.

மல்" இறத்தற் கொத்த துயர் தருதலின் கொல்ல என்றார். இனி, வாய்வைத்து-பல உபாயங்கள் செய்து என்றும், கருவிகளால் துன் புறுத்தி என்றும் உரைப்பர். கீழ்-கீழ்மை. (9)

280. * ஈட்டலுந் துன்பமற் றீட்டிய வொண்பொருளைக்
காத்தலு மாங்கே கடுந்துன்பங்—காத்தல்
குறைபடிற் றுன்பங் கெடிற்றுன்பந் துன்பக்
குறைபதி மற்றைப் பொருள்.

இ-ள். ஈட்டலும்-பொருளைச் சேமித்தலும், துன்பம்-துயரம், மற்று-பின்னர், ஈட்டிய - தேடிச்சேமித்த, ஒள்பொருளை - சிறந்த பொருளை, காத்தலும் - பிறர் கொள்ளாவிதம் காப்பாற்றுதலும், ஆங்கே-அவ்விதமே, கடும-மிக்க, துன்பம் - துயரம், காத்தல்-பாது காப்பு, குறைபடில்-குறையின், துன்பம்-துயரம், கெடில்-செல்வமே அழியின், துன்பம் - துயரம், (ஆதலின்) மற்றை பொருள் - இத் தகைய பொருள், துன்பக்கு - பலவகைத் துயரத்திற் கெல்லாம், உறைபதி-இருப்பிடமாம் எ-று.

பொருளுக்கு ஒண்மையாவது நல்வழியால் ஈட்டலும், அறம் இன்பமடைதற்கு உதவுதலும். கெடுதல்-அழிதல். பதி-இடம், வட சொல். துன்பக்கு-அத்துச்சாரியை தொகுத்தல். (10)

ஈயாமை முற்றிற்று.

---

## 29-ஆம் அதிகாரம். இன்மை

அஃதாவது, நுகர்தற்குரிய செல்வ முதலியன இல்லாத நிலை யாகிய வறுமை. ஈயாமையின் பயனாக ஒருவன் மறுமையில் அடை வது வறுமையாதலின் இது மேலையதிகாரத்தின் பின் வந்தது.

281. அத்திட்ட கூறை யரைச்சுற்றி வாழினும்
பத்தெட் டுடைமை பலருள்ளும் பாடெய்து
மொத்த குடிப்பிறந்தக் கண்ணுமொன் றில்லாதார்
செத்த பிணத்திற் கடை.

இ-ள். அத்து இட்ட-தைக்கப்பட்ட, கூறை-கிழிந்த ஆடையை, அரைசுற்றி - இடையில் தரித்து, வாழினும் - உயிர் வாழ்ந்தாலும்,

---

* புறத்திரட்டு - 1147. " ஒண்பொருள்
செய்வமென் பார்க்குந் துயிலில்லை யப்பொருள்
காப்பார்க்கு மில்லைத் துயில்"—(நான்மணி)

பத்து எட்டு - பத்தேனும் எட்டேனுமாகிய பொருளை, உடைமை-ஒருவன் கொண்டிருத்தல், பலருள்ளும் - உலகினர் அனைவரிடையி லும், பாடு எய்தும்-பெருமையை அடைவான், ஒத்தகுடி-உலகமதிப் புக்கு ஏற்ற குலத்தில், பிறந்த கண்ணும் - பிறந்திருந்தபோதிலும், ஒன்றும் இல்லாதார் - சிறிதளவாயினும் ஒருபொருளை இல்லாதவர், செத்தாருள் - திடீரென இறந்துவிட்டவர், பிணத்தில் - பிரேதத் தினும், கடை - கடைப்பட்டவராவர் எ-று.

ஒருவற்கு இன்றியமையாதனவற்றில் உண்டியும் உடையும் சிறந்தனவாதலின், அவ்வுடையும் கிழிந்து தைக்கப்பட்டதென வறு மையின் கொடுமை குறித்தது. அத்து - சிவப்பு எனக்கொண்டு, சிவப்பேறிய காவிதரித்த துறவிக்கும் பொருள் வேண்டுமென உரைத்தல் சிறப்பின்மையறிக. கூறை-கூறுசெய்தது; ஆடை. அரை-ஆகுபெயர். பத்து, எட்டு-எண்ணலளவாகுபெயர்; ஈண்டுச் சிறுமை கருதியன. பிறப்பொத்த விடத்தும் பொருளின்மை கீழ்மை என் றார் என்க. பிணமாயின் இறந்தபின் சிறப்புடன் இடுகாடு உய்க்கப் பெறும், வறிஞர் அதுவும் பெறார் என்க. கடை-ஆகுபெயர். (1)

282. நீரினு நுண்ணிது நெய்யென்பர் நெய்யினும்
யாரு மறிவர் புகைநுட்பந்—தேரி
னிரப்பிடும்பை யாளன் புகுமே புகையும்
புகற்கரிய பூழை நுழைந்து.

இ-ள். நீரினும் - நுட்பமான நீரைவிட, நெய் நுண்ணிது-நெய் நுட்பமுடையது, என்பர்-என்று சொல்வர், நெய்யினும்-அந்நெய்யை விட, புகை நுட்பம்-புகை நுட்பமுடைமை, யாரும்-யாவரும், அறி வர்-அறிவார்கள், தேரின்-ஆராயில், புகையும்-புகைதானும், புகற்கு-நுழைதற்கு, அரிய - அரிதான, பூழை - துவாரங்களிலும், இரப்பு-வறுமையாகிய, இடும்பையாளன் - துன்பத்தை உடையவன், நுழை ந்து புகும்-நுழைந்து புகுந்து செல்வான் எ-று.

நுட்பம் - நுழைதற் கருமை. புகை நுழையாவிடமும் வறிஞர் இரக்கு நிமித்தம் நுழைவர் என்றபடி. பூழை-புழை: நீட்டல் விகா ரம். இரப்பு-வறுமை. ஏகாரம், இறக்கம். (2)

283. * கல்லோங் குயர்வரைமேற் காந்தண் மலராக்காற்
செல்லாவாஞ் செம்பொறி வண்டினங்—கொல்லைக்
கலாஅற் கிளிகடியுங் கானக நாட
விலாஅஅர்க் கில்லைத் தமர்.

---

* புறத்திரட்டு - 1164.

இ-ள். கொல்லை-தினைப்புனத்தில் மேயும், கிளி-கிளிகளை, கலாஅல் - கற்களைக்கொண்டு, கடியும் - (காவல்செய்யும் குறச்சிறுமியர் எறிந்து) ஓட்டும், கானகம் - காட்டரணுடைய, நாட - நாட்டுக்குரியவனே, கல்-கற்களால், ஓங்கு உயர்வரைமேல்-மிக்க ஓங்கிய மலையின் மேல், காந்தள்-காந்தட்பூ, மலராக்கால் - பூக்காவிடில், செம்பொறி-சிவந்த புள்ளிகளுடைய, வண்டு இனம் - வண்டின் கூட்டம், செல்லாவாம்-மலரை விரும்பிச்செல்லமாட்டா, (அதுபோல) இலாஅர்க்கு-பொருள் இல்லாதவர்க்கு, தமர்-தம்மை நாடிவரும் உறவினர், இல்லை-இல்லையாம் எ-று.

எடுத்துக்காட் டுவமையணி. காந்தள், ஏனைமலர்கட்கும் உபலக்ஷணம். கலாஅல், இலாஅர் - அளபெடை, இசைநிறை. கலால்-கல்லால்; தொகுத்தல் விகாரம். கிளிகடியும் கானகம் - வடமொழி முடிபு. குறிஞ்சியில் கிளியைக்கடிந்து கவண் எறிதல் வழக்கம். "குழைகொண்டு கோழி எறியும் வாழ்க்கையர்" என்பதற் கேற்ப, கல்லால்-மணிகளால் என உரைப்பினுமாம். நாட-ஆடூஉ முன்னிலை.

284. உண்டாய போழ்தி னுடைந்துழிக் காகம்போற்
றொண்டா யிரவர் தொகுபவே—வண்டாய்த்
திரிதருங் காலத்துத் தீதிலிரோ வென்பா
ரொருவரு மிவ்வுலகத் தில்.

இ-ள். உடைந்த உழி - உயிர் நீங்கி உடல் சிதைந்தபோது, காகம்போல் - அதை உண்ணவரும் காகங்களைப்போல, உண்டாய போழ்தின் - செல்வம் உண்டாகப் பெற்றிருந்தபோது, தொண்டு - அடிமைத் தொழில்செய்ய, ஆயிரவர் - ஆயிரக்கணக்கில் பலர், தொகுப - வந்து ஒருவனை கூடுவார்கள், வண்டு ஆய் திரிதரும் காலத்து - அவனே வண்டுபோல உணவின் பொருட்டுப் பலவிடம் திரிகின்றபோது, தீது இலிரோ-நீவிர் துன்பமின்றிச் சுகமாயிருக்கின்றீரா, என்பர் - எனக் குசலம் வினவுபவர், இவ்வுலகத்து ஒருவரும் இல்-இவ்வுலகத்தில் ஒருவரும் இல்லை எ-று.

உடைதல் - சரீரம் அழிதல். பிணத்தை நச்சும் இழிய காகம் பணத்தை நச்சும் மாக்கட்கு உவமையாயிற்று. வண்டு தேனிமித்தம் பல பூக்களிற் செல்வதுபோல், வறுமையால் இரக்கும் நிமித்தம் பலரிடம் வறிஞர் செல்வர் என்க; உவமையணி. * தீது இலிரோ-

* "எதுவினை யிடரிலை யினிதுநும் மனையும்" (கம்ப-பால-திருவவ-135) என்னும் இராமபிரான் மொழியும் காண்க.

குசலம் வினவும் வசனம். பன்மை-மரியாதைப் பன்மை. ஆயிரவர்-ஒரு பெருந்தொகைக்கு இலக்ஷணை. (4)

285. * பிறந்த குலமாயும் பேராண்மை மாயுஞ்
சிறந்ததங் கல்வியு மாயுங்—கறங்கருவி
கன்மேற் றழூஉங் கணமலை நன்னாட
இன்மை தழுவப்பட் டார்க்கு.

இ-ள். கறங்கு-ஒலிக்கும், அருவி-ஆறுகள், கல்மேல்-கல்லின் மேல், தழூஉம் - தழுவினாற்போற் பாயும், கணம் - கூட்டமான, மலை - மலைகளடுத்த, நல் நாட-நல்ல நாட்டுக்குரியவனே, இன்மை - தரித்திரம், தழுவப்பட்டார்க்கு - பிடிக்கப்பட்டவர்க்கு, பிறந்த-தாம் பிறந்த, குலம் - மேற்குலப் பெருமையும், மாயும் - கெடும், பேர்-பெரிய, ஆண்மை-ஆண்டன்மையும், மாயும்-கெடும், சிறந்த-மிகுந்த, தம்-தமது, கல்வியும்-கல்வியறிவும், மாயும்-கெடும் எ-று.

குலம் - குலப்பெருமை; ஆகுபெயர். ஆண்மை-அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்பவையுமாம். கல்வியும் - உம்மை இறந்தது தழுவியதோடு உயர்வு சிறப்பு. கல்லைத் தழுவுதலாவது, தழுவியது போல் இடையறாது நீர்வரவு உடைமை. நாட, ஆடூஉ முன்னிலை. (5)

286. † உள்கூர் பசியா லுழைநசைஇச் சென்றார்கட்
குள்ளூ ரிருந்துமொன் றாற்றா தா—னுள்ளூ
ரிருந்துயிர் கொன்னே கழியாது தான்போய்
விருந்தின னாதலே நன்று.

இ-ள். உள் - வயிற்றினுள், கூர்-மிக்க, பசியால்-பசிநோயால், உழை - தன்னிடத்து, நசைஇ - உதவி விரும்பி, சென்றார்கட்கு - வந்து அடைந்தவர்களுக்கு, உள் ஊர் இருந்தும்-தான் ஊருக்குள்ளே வசித்து இருந்தும், ஒன்று - ஒருதவியும், ஆற்றாதான் - செய்ய இயலாத வறியவன், உள்ஊர் இருந்து - அவ்வூரிலேயே இருந்து, உயிர்-தன்னுயிர் வாழுநாளை, கொன்னே - பயனில்லாமல், கழியாது - போக்காமல், தான்போய் - தான் வேறிடத்துக்குச் சென்று, விருந்தினன் ஆதலே - விருந்தினனாகுதலே, நன்று - நல்லது எ-று.

உள்-ஈண்டு, வயிறு. கூர்-உரிச்சொல். நசைஇ-சொல்லிசையளபு. இருந்தும் - உயர்வு சிறப்பு, இல்லறத்திலுள்ளவன் விருந்தினரை ஓம்புதல் கடனாதலால், அதுசெய்ய இயலாவிடின், இல்லறம் துறந்து இரக்கும் நிமித்தம் தானும் விருந்தினனாதல் சிறப்பு என்றபடி.

---

* புறத்திரட்டு - 1165. 'கழூஉம்' என்றும் 'தவழும்' என்றும் பாடம்.
† புறத்திரட்டு - 1116. 'சென்றாருக்' கென்றும் பாடம்.

விருந்து-புதுமை, புதிதாக ஓரிடத்துக்குச் செல்பவன்; ஆகுபெயர். உயிர்-உயிர் வாழ்நாள்; ஆகுபெயர். ஆதலே, பிரிநிலை ஏகாரம். (6)

287. * நீர்மையே யன்றி நிரம்ப வெழுந்ததங்
கூர்மையு மெல்லா மொருங்கிழப்பர்—கூர்மையின்
முல்லை யலைக்கு மெயிற்றாய் நிரப்பென்னு
மல்ல லடையப்பட் டார்.

இ-ள். கூர்மையின் - கூர்மையுடைய காரணத்தால், முல்லை - முல்லையரும்பை, அலைக்கும் - வருத்தும், எயிற்றாய்-பற்களை யுடையவளே, நிரப்பு என்னும் - வறுமையென்னும், அல்லல் - துன்பம், அடையப்பட்டார்-சேரப்பட்டவர், நீர்மையேயன்றி-நற்குணங்களே யன்றி, நிரம்ப எழுந்த - உள்ளம் நிறைய எழுந்த, தம் கூர்மையும் - தம்முடைய அறிவின் நுட்பத்தையும், எல்லாம்-மற்றுமுள்ள சிறப்புக்கள் யாவும், ஒருங்கு-ஒருமிக்க, இழப்பர்-இழந்துவிடுவர் எ-று.

நீர்மையே, ஏகாரம் உயர்வு சிறப்பு. கூர்மையின் - இன், ஐந்தனுருபு, ஏதுப்பொருளது. கூர்மையாவது-வெண்மை, அழகு, இவற்றின் மிகுதல். முல்லை-மலருக்கு ஆகுபெயர். அலைக்கும்-உவமவுருபு. எயிற்றாய்-மகடூஉ முன்னிலை. நிரப்பு-நிரம்பிய தன்மை; அதன் மறுதலைப் பொருள்தர நின்றது, எதிர்மறை யிலக்கணை. (7)

288. † இட்டாற்றுப் பட்டொன் றிரந்தவர்க் காற்றாது
முட்டாற்றுப் பட்டு முயன்றுள்ளூர் வாழ்தலி
னெட்டாற்றுச் சென்று நிரைமனையிற் கைநீட்டுங்
கெட்டாற்று வாழ்க்கையே நன்று.

இ-ள். இட்டு ஆற்றுள் - சிறுமையாகிய வறுமையின் வழியில், பட்டு - அகப்பட்டு, ஒன்று - ஒருகவளை, இரந்தவர்க்கு - யாசித்தவர்க்கு, ஆற்றாது-கொடுக்க இயலாது, முட்டு ஆற்றுள்பட்டு-துன்பமாகிய வறுமை நெறியிலேயே தாமும் அகப்பட்டு, முயன்று - தம் உணவுக்கே முயற்சிகொண்டு, உள் ஊரில் - தம் ஊரினகத்திலேயே, வாழ்தலின் - வாழ்ந்திருப்பதினும், நெடுஆறு சென்று - நீண்ட வழி நடந்துபோய், நிரைமனையில்-அயலூரில் வரிசையான இல்லங்களில், கைநீட்டும் - இரத்தற்குக் கையை நீட்டுகின்ற, கெட்ட ஆற்று-தீமை

---

* "குடிப்பிறப் பழிக்கும் விருப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையு மாணெழில் சிதைக்கும்......
பசிப்பிணி யென்னும் பாவி......"—(மணிமேகலை)

† இதனுடன் நாலடி-286. ஒப்பிடுக. நிறைமனையில் என்றும் பாடம்.

பயக்கும் நெறியான, வாழ்க்கையே - அவ்விழிந்த வாழ்க்கையே, நன்று - நல்லதாகும் எ-று.

இட்டு-சிறுமை, * "ஆகா றளவிட்டி தாயினும்" என்றதுபோல; இரக்கும் எளிமையாகிய சிறுமை தருவது வறுமையாதலால் அப் பொருள் கூறப்பட்டது. இரந்தோர்க்கு ஈயாத துன்பமும் வறுமை தருதலின் முட்டாறு என்றார். முட்டு - துன்பம; † "முட்டுற்ற போழ்தின்" என்றதுபோல. கைநீட்டும் வாழ்க்கை என்க: தன்மை நவிற்சியணி. கெட்ட ஆறு; அகரம் தொகுத்தல். ஏகாரம் பிரிநிலை.

289. கடகஞ் செறிந்ததங் கைகளால் வாங்கி
அடகு பறித்துக்கொண் டட்டுக்—குடைகலனா
உப்பிலி வெந்தைதின் றுள்ளற்று வாழ்பவே
துப்புரவு சென்றுலந்தக் கால்.

இ-ள். துப்புரவு-நுகர்தற்குரிய பொருள்கள், சென்று-விலகி, ஒழிந்தக்கால் - வினைப்பயனாய் நீங்கினகாலத்து, கடகம் செறிந்த - கடகம் தரித்திருந்த, தம் கைகளால் - தமது கைகளினால், வாங்கி-தூறுகளை வளைத்திழுத்து, அடகு - கீரை இலைவகைகளை, பறித்துக் கொண்டு - பறித்து எடுத்துச்சென்று, அட்டு - சமைத்து, குடை கலன் ஆ-பனங்குடையே உண்கலனாக, உப்பு இலி-உப்பு இல்லாமல், வெந்தை - வேகவைத்ததாகிய அடகினை, தின்று - புசித்து, உள்-மனதின் ஊக்கம், அற்று - அழிந்து, வாழ்பவே - உயிர் வாழ் வார்கள் எ-று.

கடகம்-நகை விசேடம், ஏனைக்கலன்களுக்கும் செல்வத்துக்கும் உபலக்ஷணம். செறிந்த - முன் செறியப்பட்டிருந்த. குடை - நுங்கு குடைந்தெடுக்கப்பட்ட ‡ பனங்காய். உப்பிலியாகிய வெந்தை எனினு மாம். உணவின் எளிமைகாட்ட $ உப்பிலி என்றார். உள்-ஆகுபெயர். ஏ - இரக்கம். (9)

290. [] ஆர்த்த பொறிய வணிகிளர் வண்டினம்
பூத்தொழி கொம்பின்மேற் செல்லாவா—நீத்தருவி
தாழா வுயர்சிறப்பிற் றண்குன்ற நன்னாட
வாழாதார்க் கில்லைத் தமர்.

---

* குறள் - 478. † நாலடி - 238.

‡ "தோணல முண்டு துறக்கப் பட்டோர்
வேணீ ருண்ட குடையோ ரன்னர்"—(கலித்தொகை)
என்றதும் காண்க. $ நாலடி - 206.

[] புறத்திரட்டு - 1167. நாலடி - 283. நீர்த்தருவி என்றும் பாடம்.

இ-ள். அருவி - நீர் அருவி, நீத்து தாழா - நீர்வற்றித் தாழ்தல் இல்லாத, உயர் சிறப்பின் - உயர்ந்த சிறப்புடைய, தண் குன்றம் - குளிர்ந்த மலையடுத்த, நல் நாட-நல்ல நாட்டுக்கரசனே, ஆர்த்த-உடல் முழுவதும் நிரம்பிய, பொறிய-புள்ளியுடையனவாகிய, அணி-அழகு, கிளர்-விளங்கும், வண்டு இனம்-வண்டுக் கூட்டங்கள், பூத்து-பூக்கள் மலர்ந்து, ஒழி - உதிர்ந்துவிட்ட, கொம்பின்மேல் - கொம்புகளின் மேல், செல்லாவாம் - போகாவாம், (அதுபோல) வாழாதார்க்கு-செல்வராய் வாழாதவர்க்கு, தமர்-இனத்தார், இல்லை-உளராகார் எ-று.

எடுத்துக்காட் டுவமையணி. பொறிய - குறிப்பு வினைப்பெயர்; பொறியவாகிய வண்டு என்க. பூத்து ஒழிகொம்பு - மலர்கள் உதிரப் பெற்ற கொம்பு. நீத்துத்தாழா என மாறுக. மழைக்காலத்தின் மட்டில் நீர்ப் பெருக்குடைய யாறுபோலல்லாது எந்நாளும் நீருடைய தென உயர் சிறப்பின் என்றார். இனி, நீர்த்து என்ற பாடத்துக்கு நல்ல தன்மை என்றும் நீருடைமை என்றும் பொருள் கொள்ப. (10)

இன்மை முற்றிற்று.

---

## 30-ஆம் அதிகாரம். மானம்

அஃதாவது தம் நிலையில் தாழாமையும், தாழ்வு நேருமிடத்து உயிர் வாழாமையுமாம். இன்மை காரணமாகவே தாழ்மை யுண்டாதலின், இன்மையுற்ற காலத்தும் மானத்துடன் வாழ்தல் அவசியம் என அதற்குப் பின் இது வைக்கப்பட்டது.

291. * திருமதுகை யாகத் திறனிலார் செய்யும்
பெருமிதங் கண்டக் கடைத்து—மெரிமண்டிக்
கானந் தலைப்பட்ட தீப்போற் கனலுமே
மான முடையார் மனம்.

இ-ள். திரு - செல்வம், மதுகையாக - தமக்கு வலிமையாகப் பொருந்த, (அதனால் செருக்குற்று) திறன் இலார்-தக்க நற்குணமில்லாதவர், செய்யும் - இழைக்கும், பெருமிதம் - எல்லை மிகுந்த செய்கையை, கண்ட கடைத்தும் - பார்த்தபொழுதும், மானம் உடையார் மனம் - மானத்தை யுடையவரது மனம், எரி மண்டி - எரிதலோடு பொருந்தி, கானம் - காட்டில், தலைபட்ட - பற்றி எழுந்த, தீபோல்-நெருப்பைப்போல, கனலும்-கொதிக்கும் எ-று.

---

* புறத்திரட்டு - 1091.

திருவின்மதுகை என்க. பெருமிதம்-மிதம் கடந்தது. கடைத்தும்-ஏழனுருபுப் பொருளது. எரி-தொழிற்பெயர். ஏ-இரக்கம். திறனிலார் செய்கையால் தமக்கும் மானக்குறைவு உறுமோ என அஞ்சி மானமுடையார் வருந்துவர் என்க. (1)

292. * என்பா யுகினு மியல்பிலார் பின்சென்று
தம்பா டுரைப்பரோ தம்முடையார்—தம்பா
டுரையாமை முன்னுணரு மொண்மை யுடையார்க்
குரையாரோ தாமுற்ற நோய்.

இ-ள். என்பாய் - வறுமையின் கொடுமையால் எலும்பளவாகி, உகினும்-உடல் சிதையினும், இயல்பு இலார்-நற்குணமில்லார், பின் சென்று-பின்னுற்போய், தம் பாடு-தாம் படுகின்ற துயரை, உரைப்பரோ-சொல்லுவாரோ (சொல்லார்), தம்உடையார்-தமக்கியல்பாகிய மானமுடையவர், தம் பாடு - தமது துயரை, உரையாமை முன் - வாயாற் சொல்வதின்முன், உணரும் - அறிந்துகொள்ளும், ஒண்மையுடையார்க்கு - அறிவுடைய நல்லோர்க்கு, தாம்உற்ற - தாமடைந்த, நோய் - வறுமைநோயை, உரையாரோ - சொல்லாரோ, (சொல்வர்) எ-று.

வறுமையால் உடல் மெலிந்து என்பின் அளவாய் உகினும் என்க. உம்மை - உயர்வு சிறப்பு. இயல்பு இலார், இயல்பு உடையார் என்க. இயல்பு, நற்குணமும் மானமும். பின் - இடத்தைக் குறித்தது. பாடு-படுதல், ஆவது துயர்; முதனிலை திரிந்த தொழிற்பெயர். முன்-காலமுன். உணர்தல்-முகம் கண்களால் ஆகிய மெய்ப்பாட்டால்.

293. † யாமாயி னெம்மில்லங் காட்டுதுந் தாமாயிற்
காணவே கற்பழியு மென்பார்போ—ணிப்
புறங்கடை வைத்தீவர் சோறு மதனுன்
மறந்திடுக செல்வர் தொடர்பு.

இ-ள். யாம் ஆயின் - வறியராகிய எம்மை நாடிவந்தால், எம் இல்லம் காட்டுதும்-நாடிவந்த அவ்வறிஞருக்கு வீடு முழுவதும் காட்டுவோம், தாம் ஆயின் - செல்வர்களாயின், காணவே - பிறர் பார்த்தலுமே, கற்பு அழியும் என்பார்போல் - தம் மனைவியரின் கற்பும் கெடும் என்று கருதுபவர்போல, நாணி-மனதில் வெட்கி, புறம்கடை வைத்து - வந்தவரை வீட்டின்வாயிலில் உட்காரவைத்து, சோறும் ஈவர்-உணவும் கொடுப்பர், அதனுல்-ஆகையால், செல்வர் தொடர்பு-பொருளுடையவர் நட்பினை, மறந்திடுக-அறவே மறந்துவிடு எ-று.

---

* புறத்திரட்டு - 1094.

† புறத்திரட்டு - 1092. 'மறந்தீக' என்றும் பாடம்.

யாம்-வறிஞரை உட்படுத்திய கவிமொழி. இல்லம், வீட்டினையும் இல்லாளையும் கொள்க, விருந்தினரை எதிர்கொண்டு உபசரித்தல் மனைவியுடன் செய்யவேண்டுவது விதியாதலின். கற்பழியும் என்று செல்வரே கருதுவதால், இது தற்குறிப்பேற்றவணி. தக்க இடத்தில் உணவைத் தரவேண்டுமென்ற குறிப்படக்கிச் சோறும் என உயர்வு சிறப்பும்மை தந்தார். (3)

294. * இம்மையு நன்றா மியனெறியுங் கைவிடா
தும்மையு நல்ல பயத்தலாற்—செம்மையி
னானங் கமழுங் கதுப்பினாய் நன்றேகாண்
மான முடையார் மதிப்பு.

இ-ள். நானம் - கஸ்தூரி, செம்மையின் - நன்றாக, கமழும் - மணக்கும், கதுப்பினாய் - கூந்தலையுடையவளே, மானம் உடையார்-மானமுள்ளவர்களது, மதிப்பு-கொள்கையும் செயலும், இம்மையும்-இப்பிறப்பிலும், நன்று ஆ - நன்மை தருவதாய், இயல்-இயல்பாகிய, நெறியும்-நல்லொழுக்க வழியும், கைவிடாது-சிறிதும் விடாமல், உம்மையும் - மறுபிறப்பிலும், நல்ல-புண்ணியபலன், பயத்தலால் - தருதலால், நன்றுஏ - நன்மையேயாகும், காண் - நீ கண்டறிக எ-று.

மதிப்புப் பயத்தலால் நன்று என்க. மதிப்பு-மனக்கொள்கை, கருதியபடிச் செய்யும் செய்கையும் கொள்க. இனி, மதிப்பு - மானமுடையார் பிறரை நன்குமதித்தல் என்றும், அவரைப் பிறர் நன்கு மதித்தல் என்றும் பொருளுரைப்பர். கதுப்பு - கபோலமுமாம். இம்மை, மறுமை,—அவற்றின் பயனாய புகழும் துறக்கமும். நன்று ஆக, ஈறு தொகுத்தல். நல்ல-குறிப்புப்பெயர். (4)

295. † பாவமு மேனைப் பழியும் படவருவ
சாயினுஞ் சான்றவர் செய்கலார் சாத
லொருநா ளொருபொழுதைத் துன்ப மவைபோ
லருநவை யாற்றுத லின்று.

இ-ள். சான்றவர் - மானம் நிறைந்த பெரியோர், சாயினும் - இறக்கவேண்டியதாயினும், பாவமும் - மறுமையில் தொடரும் பாவமும், ஏனை-மற்றை, பழியும்-இவ்வுலகத்திலுண்டாகும் நிந்தையும், பட-உண்டாக, வருவ - நேரும் காரியங்களை, செய்கலார் - செய்யமாட்டார், (ஏனெனில்) சாதல் - இறப்பு என்பது, ஒருநாள் ஒருபொழுதை-ஏதோ ஒருநாளில் ஒருவேளையில நேரும், துன்பம்-துயர

* புறத்திரட்டு - 1090. 'நன்றும்', 'இசைநெறியும்' என்றும் பாடம்.
† புறத்திரட்டு - 1122.

மாகும், அவைபோல் - அக்காரியங்கள் போல, அருநவை-நீக்கற்கரிய குற்றங்களை, ஆற்றுதல்-உண்டாக்குதல், இன்று-இல்லை எ-று.

பாவமும் பழியுமாகிய காரியங்களைப் பயக்க வருவன என்க. வருவ - வினையின்பெயர். அவை செய்யாமையாற் சாயினும் என்க; உம்மை, உயர்வு சிறப்பு. அவை - 'வருவ'. நவை - பாவம் பழியாகிய குற்றங்கள். பொழுதை-ஐயீற்றுக் குற்றுகரம். இஃது ஏதுவணி. (5)

296. * மல்லன்மா ஞாலத்து வாழ்ப வருளெல்லாஞ்
செல்வ ரெனினுங் கொடாதவர்—நல்கூர்ந்தார்
நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத் தரையரே
செல்வரைச் சென்றிரவா தார்.

இ-ள். மல்லல் - வளப்பமுடைய, மாஞாலத்து-பெரிய உலகத்தில், வாழ்பவருள் எல்லாம் - வாழ்பவரெல்லாருள்ளும், செல்வர் எனினும் - செல்வமுடையவரா யிருப்பினும், கொடாதவர் - இரப்பார்க்கு ஈயாதவர், நல்கூர்ந்தார் - தரித்திரமுடையவரே யாவர், நல்கூர்ந்தக்கண்ணும் - தரித்திரமடைந்தும், செல்வரை - பொருளுடையவரிடத்து, சென்று-போய், இரவாதார் - இரந்துண்ணாதவர், பெருமுத்தரையரே - பெருமுத்தரையரேயாவர் எ-று.

மல்லல் - உரிச்சொல். எல்லாருள்ளும் என மாறுக. உம்மை முறையே உயர்வு இழிவு சிறப்புக்கள். கொடாதவர், இரவாதார்-வினையின் பெயர். பெருமுத்தரையர் - செல்வர் என்றபடி; மேல் 200-ம் செய்யுளுரை காண்க "செல்வத்தின் பயனே யீதல்" † ஆதலின் ஈகையில்லாவிடத்துச் செலவரும் ஏழையர் என்றும், வறுமையுற்றும் இரத்தல் செய்யாவிடத்துச் செல்வர் என்றும் கொள்க. (6)

297. ‡ கடையெலாங் காய்பசி யஞ்சுமற் றேனை
இடையெலா மின்னாமை யஞ்சும்—புடைபரந்த
விற்புருவ வேனெடுங் கண்ணாய் தலையெல்லாஞ்
சொற்பழி யஞ்சி விடும்.

இ-ள். புடை-பக்கங்களில், பரந்த-பரவியிருக்கின்ற, வில்-வில்லொத்த, புருவம் - புருவங்களையும், வேல் - வேலொத்த, நெடும்-கூர்மையான, கண்ணாய் - கண்களையு முடையவளே, கடை எலாம் - கீழ்மக்களெல்லாம், காய் - வருத்தும், பசி-பசிக்கு, அஞ்சும்-அஞ்சுவார்கள், ஏனை-ஒழிந்த, இடை எலாம் - இடையாயினவர் எல்லாம், இன்னாமை - துன்பத்திற்கு, அஞ்சும் - பயப்படுவார்கள், தலை எல்லாம்-

* புறத்திரட்டு - 1186. † புறம்.
‡ புறத்திரட்டு - 1114. 'இன்னாத வஞ்சும்' என்றும் பாடம்.

தலையாயினவர்களெல்லாம், சொல்பழி - பிறர் சொல்லுகின்ற நிந்தனைக்கு, அஞ்சிவிடும்-மிகவும் அஞ்சுவார்கள் எ-று. மற்று-அசை.

குணத்தாலும் ஒழுக்கத்தாலும் கடை இடை தலை என்க. இன்றைமை, வறுமையுமாம். கண்ணாய் - குறிப்பு வினையின்பெயர், விளி ஏற்றது; மகடூவு முன்னிலை. கடை முதலியன சொல்லளவில் அஃறிணையாதலின் அஞ்சும் என அஃறிணை வினைபெற்றது. (7)

298. * நல்லர் பெரிதளியர் நல்கூர்ந்தா ரென்றெள்ளிச்
செல்வர் சிறுநோக்கு நோக்குங்காற்—கொல்லன்
னுலையூதுந் தீயேபோ லுள்கனலுங் கொல்லோ
தலையாய சான்றோர் மனம்.

இ-ள். நல்லர்-முன்பு நல்லவர், பெரிது-மிகவும், அளியர்-கருணையுடையவர், நல்கூர்ந்தார்-இப்பொழுது வறுமையடைந்தார், என்று-என்று சொல்லி, எள்ளி-இகழ்ந்து, செல்வர்-செல்வமுடையவர், சிறுநோக்கு-குறும்பார்வை, நோக்குங்கால் - பார்க்கும்போது, தலையாய-தலைமையாகிய, சான்றோர் மனம் - மானம் நிறைந்தவர் நெஞ்சம், கொல்லன்-கருமானுடைய, உலை-உலைக்களத்து, ஊதும்-ஊதி எழுப்பப்படும், தீயேபோல் - தீயைப்போல, உள் - உள்ளுக்குள்ளே, கனலும்-கொதிக்கும் எ-று.

நல்லர், அளியர், நல்கூர்ந்தார்-குறிப்பு வினையின்பெயர்; முன்னிரண்டும் இறந்த காலத்தையும், பின்னது நிகழ்காலத்தையும் குறிப்பால் காட்டியன. எள்ளி-வறுமையைக்கண்டு இகழ்ந்து; சிறுநோக்கமும் அது. தீயேபோல்-உவமை. ஏகாரம் அசை. கனலுதல், அவமானம் பொறுக்கலாகாமையால். (8)

299. † நச்சியார்க் கீயாமை நாணன்று நாணாளு
மச்சத்தா னுணுத னணன்று—மெச்சத்தின்
மெல்லிய ராகித்தம் மேலாயார் செய்தது
சொல்லா திருப்பது நாண்.

இ-ள். நச்சியார்க்கு - தம்மை விரும்பி வந்தவர்க்கு, ஈயாமை - விரும்பியபொருளைக் கொடாதிருத்தல், நாண் அன்று - நாணப்படும் செய்கையன்று, நாள் நாளும் - நாளுநாளுமே, அச்சத்தால் - அஞ்சுதக்கனவற்றுக்கு அஞ்சுவதால் உண்டாம், நாணுதல்-வெள்குதலும், நாண் அன்று - நாணப்படும் செய்கையன்று, எச்சத்தில் - பொருட்குறைவினால், மெல்லியராகி - தாம் மெலிந்து வறியவராகியிருப்ப, தம் மேலாயார்-தம்மினும் குணத்தாலும் பொருளாலு மேம்பட்டவர்,

* புறத்திரட்டு - 1093. † புறத்திரட்டு - 1150.

செய்தது-செய்த உதவியை, சொல்லாது இருப்பது-வெளியுரைத்து நன்றிபாராட்டாதிருத்தலே, நாண்-நாணத்தகும் செய்கையாம் எ-று.

ஈயாமையும் நாணுதலும் நாணுயினும், பொருளின்மையாலும், ஆன்றோர் விதியாலும்அவை நிகழ்தலால் நாணன்று என்க. ஆன்றோர் விதியாவது: பழி, பாவம், அரவம் முதலியவற்றுக்கு அஞ்சுதல் வேண்டுமென்பது. செய்தது - செய்த உதவி. * செய்ந்நன்றி கொல்லின் உய்வில்லையாதலின் நாணத்தகு செயலென்றார். (9)

300. † கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
இடம்வீழ்ந்த துண்ணு திறக்கு—மிடமுடைய
வானகங் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மான மழுங்க வரின்.

இ-ள். கடமா - யானையை, தொலைச்சிய - கொன்ற, கான்-காட்டில், உறை-வசிக்கும், வேங்கை-பெரும்புலி, இடம் - தான் கொன்றவற்றில் இடதுபக்கத்தில், வீழ்ந்தது - வீழ்ந்ததை, உண்ணது-தின்னுமல், இறக்கும் - சாகும், (அதுபோல) விழுமியோர் - பெரியோர், இடம் உடைய - செல்வத்தையுடைய, வானகம் - தெய்வலோகமே, கையுறினும் - தம் கைவசப்படுவதானும், மானம் அழுங்கவரின் - மானங்கெட வருவதானல், வேண்டார்-அதனை விரும்பார் எ-று.

எடுத்துக்காட் டுவமையணி. கடம் மா - மதமுடைய மிருகம், யானை, காரணப்பெயர்; காட்டுப்பசு என்று முரைப்பர். இறத்தல், இடம் வீழ்ந்ததை உண்ணின் மானம் சிதையுமெனக்கருதி, அதனை உண்ணது பசிமிக்கு இறத்தல். இடம்-பொருள், ‡ "இடனில் பருவத்தும்" போல. (10)

மானம் முற்றிற்று.

## 31 - ஆம் அதிகாரம். இரவச்சம்

அஃதாவது மானம்கெட ஒருவரிடம் ஒரு பொருளை இரந்து பெறுதற்கு அஞ்சுதல். மானம் உடையார் அது செய்யாராதலின் மேலை யதிகாரத்தின் பின்வந்தது.

301. நம்மாலே யாவரிந் நல்கூர்ந்தா ரென்ஞான்றுந்
தம்மாலா மாக்க மிலரென்று—தம்மை
மருண்ட மனத்தார்பின் செல்பவோ தாமுந்
தெருண்ட வறிவி னவர்.

* குறள் - 110. † புறத்திரட்டு - 1096. ‡ குறள் - 218.

இ-ள். இந் நல்கூர்ந்தார் - வறுமையையுற்ற இவர், நம்மாலே-நாம் கொடுத்தலால், ஆவர் - பிழைப்பவராவர், எஞ்ஞான்றும்-எந்நாளும், தம்மால்-தம்முயற்சியால், ஆம்-அடையும், ஆக்கம் - பயனாகிய செல்வம், இலர் என்று - இல்லாதவர் என நினைத்தும் உரைத்தும், தம்மை-தம்மில், மருண்ட-மயங்கிய, மனத்தார்பின்-மனது உடைய அற்பரின்பின், தெருண்ட - தெளிந்த, அறிவினவர்களும்-அறிவினையுடையவர்களும், செல்பவோ - சென்று இரப்பார்களோ எ-று.

ஆதல்-ஆகுதல், பிழைத்தல் ஆக்கம் - பண்புப்பெயர்; ஈண்டு முயற்சியின் பயன். இரத்தல் தீவினையின் பயனென்றும் இரந்தார்க்கு ஈதலே நல்வினை என்றும் உணராது இகழ்தலின் மருண்ட மனத்தார் என்க. செல்பவோ-வினா, எதிர்மறைப் பொருளது. (1)

302. * இழித்தக்க செய்தொருவ னார வுணலிற்
பழித்தக்க செய்யான் பசித்த றவறோ
விழித்திமைக்கு மாத்திரை யன்றோ வொருவ
னழித்துப் பிறக்கும் பிறப்பு.

இ-ள். ஒருவன்-ஒரு மனிதன், அழித்து - உடலையொழித்து, பிறக்கும்-மீண்டும் வேறுடலுடன் பிறக்கின்ற, பிறப்பு-பிறத்தலின் குணம், விழித்து-மூடியகண் விழித்து, இமைக்கும்-இமைகொட்டும், மாத்திரையன்றோ - அளவினை யுடையதல்லவோ, (ஆதலின்) ஒருவன்-ஒரு மனிதன், இழித்தக்க செய்து - இழிதற்கேற்ற இரத்தலைச் செய்து, ஆர-வயிறு நிரம்ப, உணலின் - உண்பதைவிட, பழித்தக்க-பழிக்கத்தக்க இரத்தலை, செய்யான் - செய்யாதவனாய், பசித்தல்-பசித்திருத்தல், தவறோ-குற்றமாகுமோ (இல்லை) எ-று.

இஃது ஏதுவணி. இழித்தக்க, பழித்தக்க, வினையின்பெயர், இரத்தலைக் குறித்தன. செய்யான-முற்றெச்சம். விழித்திமைக்கும் மாத்திரை - இமைப்பொழுது. அழித்தல் - உடலைவிட்டு நீங்குதல். இரந்துண்பதினும் பசியோடிருத்தல சிறந்தது என்றபடி. (2)

303. † இல்லாமை கந்தா விரவு துணிந்தொருவர்
செல்லாரு மல்லர் சிறுநெறி—புல்லா
அகம்புகுமி னுண்ணுமி னென்பவர்மாட் டல்லான்
முகம்புகுத லாற்றுமோ மேல்.

இ-ள். இல்லாமை - வறுமையே, கந்தா - பற்றுக்கோடாக, இரவு-ஏற்று உண்ணும் நெறியை, துணிந்து - மனவுறுதிகொண்டு,

* புறத்திரட்டு - 1095. † புறத்திரட்டு - 1174.

ஒருவர்-ஒருவர், சிறுநெறி - அற்பமான அந்நெறியில், செல்லாரும் அல்லர்-போகாமலும் இரார், புல்லா - தழுவிக்கொண்டு, அகம் - எம் மனைக்கு, புகுமின் - வாருங்கள், உண்ணுமின் - என் அகத்தில் உண்ணுங்கள், என்பவர்மாட்டு அல்லார்-என்று இனியமொழியோடழைப் பவரிடத்தல்லது, முகம் - நன்முகத்துடன், புகுதல் - செல்லுதல், மேல் - மேல்மக்கள், ஆற்றுமோ - மற்றவரிடம் செல்ல இசைவரோ (மாட்டார்) எ-று.

கந்து-பற்றுக்கோடு; காரணமுமாம். துணிந்து-பல்லாற்றானும் ஆய்ந்து மனவுறுதிகொண்டு. தாமெடுத்த அருஞ்செயலொன்றை முடிக்குமளவும் இரந்தேனும் உயிர்வாழக் கருதித் துணிந்து என்க. சிறுநெறி - ஈண்டு இரத்தல். முகம் புகுதல் - சிரித்த முகத்துடன் இரக்க உட்புகுதல். (3)

304. † திருத்தன்னை நீப்பினுந் தெய்வஞ் செறினு
முருத்த மனத்தோ டுயர்வுள்ளி னல்லா
லருத்தஞ் செறிக்கு மறிவிலார் பின்சென்
றெருத்திறைஞ்சி நில்லாதா மேல்.

இ-ள். தன்னை - தன்னைவிட்டு, திரு-இலக்குமி, நீப்பினும்-நீங்கினும், தெய்வம் - ஊழ்வினை, செறினும் - கோபித்து வருத்தினும், உருத்த - ஊக்கமகொண்ட, மனத்தோடு-மனத்தினால், உயர்வு-தன் மேன்மையை, உள்ளின் அல்லால்-நினைப்பதல்லது, அருத்தம்-செல்வத்தை, செறிக்கும - உலோபத்தினால புதைத்துவைக்கும், அறிவிலார் பின் - அறிவில்லாதவரின் பின்னாக, சென்று - தொழுதுபோய், எருத்து இறைஞ்சி - தலையிறக்கங்கொண்டு, மேல் - மேன்மகன், நில்லாது - இரத்தற்கு நிற்கான் எ-று.

திருநீத்தல் - வறுமையுறல். உருத்த - இரவின்கண் அச்சங்கொண்டு மனவூக்கங்கொண்ட என்றபடி. எருத்து-பிடரி, கழுத்தை வளைத்து (தலைகுனிந்து) நின்று என்றபடி. தன்மை நவிற்சியணி. (4)

305. ‡ கரவாத திண்ணன்பிற் கண்ணன்னார் கண்ணு
மிரவாது வாழ்வதாம் வாழ்க்கை—யிரவினை
உள்ளுங்கா லுள்ள முருகுமா லென்கொலோ
கொள்ளுங்காற் கொள்வார் குறிப்பு.

---

* "உண்ணீருண் ணீரென் றுபசரியார் தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும்"—(ஔவைப்பாட்டு)

† புறத்திரட்டு - 1185

‡ புறத்திரட்டு - 1181. குறள் - 1061.

இ-ள். கரவாத-கொடுத்தலில் வஞ்சனை செய்யாத, திண்-வலிய, அன்பின் - அன்பினால், கண் அன்னார் கண்ணும் - கண்ணையொத்தவரிடத்தும், இரவாது-ஏற்காமல், வாழ்வதாம் - வாழும் வாழ்க்கையே, வாழ்க்கை - வாழ்க்கை எனப்படும், (ஏனெனில்) இரவினை-இரத்தலை, உள்ளுங்கால்-நினைக்கும்போது, உள்ளம் உருகும் ஆல்-மனமுருகும் ஆதலால், கொள்ளுங்கால் - கொடுப்பதை ஏற்கும்பொழுது, கொள்வார்-ஏற்பவர், குறிப்பு - மனக்குறிப்பு, என்கொலோ - என்னவோ எ-று.

உறுப்புக்களிற் சிறந்த கண்போல், மனிதரிற் சிறந்த ஈகையாளர் என்க. உம்மை - உயர்வு சிறப்பு. நினைத்தலும் * உள்ளம் உருகுமென்னின், யாசித்துப் பொருளைப் பெறும்போது அம்மனம் என்ன நினைக்கும் என்றபடி. கொள்வார் - வினையின்பெயர். இஃது ஏதுவணி. (5)

306. † இன்னா வியைக வினிய வொழிகென்று
தன்னையே தானிரப்பத் தீர்வதற்—கென்னைகொல்
காதல் கவற்று மனத்தினாற் கண்பாழ்பட்
டேதி லவரை யிரவு.

இ-ள். இன்னா - ஊழின் வலியால் துன்பங்கள், இயைக - நமக்குப் பொருந்துக, இனிய ஒழிக-இன்பம் தருவன விலகுக, என்று-என்று மனதிற்கொண்டு, தன்னையே தான்நிரப்ப - தனக்குத்தானே தேறி நிரம்பப் பெறுவதால், தீர்தற்கு - மனத்துயர் நீங்குவதன் நிமித்தம், காதல் கவற்றும் மனத்தினால் - ஆசையால் கவலைப்படும் உள்ளத்தினால், கண் பாழ்பட்டு - கண்கள் ஒளிகெட்டு, ஏதிலவரை-அன்னியரை, இரவு-இரத்தல், என்னை கொல்-எதனிமித்தம் எ-று.

இன்னா இனிய உறுதல் ஊழினால் ஆதலின் அவற்றின் மாறுபாட்டுக்கு மனம் கவலாதிருப்பின் மனத்துயர் கழியுமென்றால் உடலை யோம்புவதன் நிமித்தம் இரத்தல் வேண்டாமென்றபடி. இன்னா, இனிய-குறிப்புப்பெயர். கவற்றும்-பிறவினை. (6)

307. ‡ என்றும் புதியார் பிறப்பினு மிவ்வுலகத்
தென்று மவனே பிறக்கலான்—குன்றின்
பரப்பெலாம் பொன்னொழுகும் பாயருவி நாட
இரப்பாரை யெள்ளா மகன்.

---

* "இரவுள்ள வுள்ள முருகும்"—குறள் - 1069.

† புறத்திரட்டு - 1182. ‡ புறத்திரட்டு - 1183.

இ-ள். குன்றின் - மலையின், பரப்பு எலாம் - பரந்த இடமெல்லாம், பொன் ஒழுகும் - பொன்னைக் கொழிக்கும், பாய் அருவி- விரைந்துபாயும் அருவிகளுடைய, நாட-நாட்டுக்குரியவனே, இ உலகத்து-இந்த உலகில், புதியார் - புதியவராக, என்றும் - நாடோறும், பிறப்பினும்-பிறந்தாலும், இரப்பாரை எள்ளா - வறிஞராய் இருப்பவரை இகழாத, மகன் அவனே-சிறந்தவனாகிய ஒருவனே, என்றும்- எப்போதும், பிறக்கலான்-பிறப்பில்லாதவனாவன் எ-று.

நாடோறும் பலர் பிறப்பினும், இரப்பார்க் கிரங்குபவன் அப் பிறவியினின்றும் தவிர்வான் என்றபடி. மகன் அவனே என்க; மகன்- சிறந்தவன்; சுட்டுச் சிறப்புப்பற்றியது. ஒழுகும்-பிறவினைப் பொருளது. குறிஞ்சிநாட்டுப் பொன்னைக் கொழிக்கும் அருவி என்க. (7)

308. புறத்துத்தன் னின்மை நலிய வகத்துத்தன்
னன்ஞான நீக்கி நிறீஇ—யொருவனை
ஈயா யெனக்கென் றிரப்பானே லந்நிலையே
மாயானோ மாற்றி விடின்.

இ-ள். தன் இன்மை-தனது வறுமை, புறத்து-புறமாகிய உடலிடத்து, நலிய - பசியால் வருந்துவதால், அகத்து-அகமாகிய மனதில், தன் நல்ஞானம் நீக்கி-தனது நல்லறிவு நீங்கப்பெற்று, நிறீஇ- அறிவின்மையை நிறுத்தி, ஒருவனை - செல்வமுடைய ஒருவனை, எனக்கு ஈயாய்-எனக்கு இதுகொடு, என்று இரப்பானேல் - என்று யாசிப்பானாகில், அந்நிலையே - அந்த நிலையிலேயே, மாற்றிவிடின் - பொருளுடையவன் மறுத்துவிட்டால், மாயானோ - மானம்பொறாமல் இறந்துபோகானோ எ-று.

இரத்தலினும் இரந்து மறுக்கப்பெறுதல் இழிபு என்றபடி. நலிய-காரணப்பொருளின் வினையெச்சம். நிறீஇ-சொல்லிசை யளபு. நிலையே-காலத்தின் விரைவைக் கருதியது. மாற்றுதல் - மறுத்தல். ஓ, இரக்கமும் வினாவும். (8)

309. * ஒருவ ரொருவரைச் சார்ந்தொழுக லாற்றி
வழிபடுதல் வல்லுத லல்லாற்—பரிசழிந்து
செய்யீரோ வென்னானு மென்னுஞ்சொற் கின்னாதே
பையத்தான் செல்லு நெறி.

இ-ள். ஒருவர்-எளிய ஒருவர், ஒருவரை - பொருளுடைய மற்றொருவரை, சார்ந்து-அடுத்து, ஒழுகல் ஆற்றி-அவர் விருப்பின்படி

* புறத்திரட்டு - 1184.

நடந்துகொண்டு, வழிபடுதல் - வணங்கியிருத்தல், வல்லுதல் அல்லால்-வல்லவராயிருத்தல் அல்லது, பரிசு அழிந்து-தமது பெருமை கெட்டு, என்னுநும் செய்யீரோ - எவ்வகையிலேனும் யாதேனும் உதவி செய்யமாட்டீரோ, என்னும் சொற்கு-என்று (பொருளுடையாரை) யணுகி உரைக்கும் மொழியினும், மையய-துன்பம் பொருந்த, தான் செல்லும்நெறி-தான் வறுமையில் செல்லும்வழி, இன்னாதே-துன்பம் தருவதோ எ-று.

ஒருவரை அடுத்து வாழ்தலும் இழிவு என, சார்ந்தொழுகலாற்றி வழிபடுதல் வல்லுநர் என்றார். வழிபடுதல்-யாதேனும் இழிய பணியும்செய்து பிழைத்தல். செய்யீரோ - இரத்தல் குறிப்பு. இன்னாதே-எதிர்மறைவினா. மையய-மைதலடியாகப் பிறந்த குறிப்பு வினை எச்சம். (9)

310, பழைமைகந் தாகப் பசைந்த வழியே
கிழமைதான் யாதானுஞ் செய்க—கிழமை
பொறாஅ ரவரென்னிற் பொத்தித்தந் நெஞ்சத்
தறாஅச் சுடுவதோர் தீ.

இ-ள். பசைந்த வழியே-ஒருவரிடம் நட்புக் கொண்டதன் வழியாக, பழைமை கந்தாக-பழைய உறவை பற்றுக்கோடாக, கிழமைதான்-அவ்வளவின் உரிமையே பாராட்டி, யாதானும் செய்க - யாதேனும் உதவிசெய்யக்கடவர், (ஏனெனில்) அவர் - பொருளுடையார் கிழமை-அந் நட்புரிமையை, பொறாஅர் என்னில்-ஏற்றுப் பொறுத்துச் சுமந்து உதவிசெய்யமாட்டார் எனில், (அச்செய்கை) தம் நெஞ்சத்து-வறிஞராகிய நண்பர் மனதில், பொத்தி-கொளுத்தப்பெற்று, அறாஅ - நீங்காது, சுடுவது ஓர்தீ - எரிப்பதாகிய ஒரு கொடியதீ ஆகும் எ-று.

ஒருநாட் கூடினும் நண்பரைக் கைவிடலாகாதாகலின் பசைந்த வழியே என்றார். பசைதல்-நட்புக்கோடல். கிழமை-நட்பின் உரிமை. பொறுத்தல் - கடமையை ஏற்றொழுகுதல்; ஆவது, உதவுதல். அளபெடை இரண்டும், இசைநிறை. செய்க-ஒருவகை வியங்கோள். (10)

இரவச்சம் முற்றிற்று.

துன்பவியல் முற்றிற்று.

## ஐந்தாவது பொதுவியல்

அஃதாவது மேலுரைத்த இன்பதுன்பங்களுக்குப் பொதுவாகிய இயல்.

## 32-ஆம் அதிகாரம். அவையறிதல்

அஃதாவது கற்றறிந்தவர் குழூஉவின் குணமறிந் தொழுகுதல். அவையையறியின் இன்பமும், அறியாததால் துன்பமும் தருதலால், ஈரியலுக்கும் புறனுரையாகப் பொதுவியல் அமைந்தது. இனி இரவுக்கஞ்சுபவர் மானமுடையா ராதலாலும், அவரே அவையின் பெருமை யறிவாராதலாலும் இஃது இரவச்சத்தின் பின்வந்தது.

311. * மெய்ஞ்ஞானக் கோட்டி யுறழ்வழி விட்டாங்கோ
ரஞ்ஞானந் தந்திட் டதுவாங் கறத்துழாய்க்
கைஞ்ஞானங் கொண்டொழுகுங் காரறி வாளர்முன்
சொன்ஞானஞ் சோர விடல்.

இ-ள். மெய்ஞானம்-உண்மையான அறிவுடைய, கோட்டி-புலவர் குழுவினில், உறழ்வழி - சேர்கின்ற விதத்தை, விட்டு - நீங்கி, ஆங்கு-அவ்விடத்திலேயே, ஓர் அஞ்ஞானம் தந்திட்டு-அறிவின்மையைக் காட்டும் சொற்களைக்கூறி, அது - அம்மொழியையே, ஆங்கு-அக்குழுவில், அற - முற்றும், துழாய் - பரவச்செய்து, கைஞானம்-சிறிய அறிவினை, கொண்டு ஒழுகும் - மேற்கொண்டு நடந்துகொள்ளும், கார் அறிவு ஆளர்முன் - இழிந்த அறிவினர் முன்பு, சொல் ஞானம் - சொல்லி விளக்கத்தகும் அறிவுரையை, சோர விடல்-பெரியோர் தளரவிடத்தகும் எ-று.

மெய்ஞ்ஞானம் உண்மையறிவு. சொல் ஞானம் - பெரியோர் உரைத்துவந்த அறிவுரையுமாம். கோட்டி - குழூவு. அறிவினர் வழி விட்டு விலகி அற்பவறிவுடன் உரையாகும் சபையில் நல்லுரை பயன்படாது, ஆதலின் சோரவிடுக என்றபடி. கருமை-ஈண்டு இழிவினைக் கூறியது. இது சொற்பொருட்பின் வருநிலையணி. (1)

312. நாப்பாடஞ் சொல்லி நயமுணர்வார் போற்செறிக்குந்
தீப்புலவற் சேரார் செறிவுடையார்—தீப்புலவன்
கோட்டியுட் குன்றக் குடிபழிக்கு மல்லாக்காற்
றோட்புடைக் கொள்ளா வெழும்.

* புறத்திரட்டு - 824.

இ-ள். நா பாடம் - சிந்தனை இன்றி வாய்க்குவந்த பாடங்களை, சொல்லி - எடுத்துரைத்து, நயம் உணர்வார்போல் - நன்மைப்பொருளைக் கற்றறிந்தவரைப்போலவே, செறிக்கும்-தானும் பலரைக் குழுவும்படிச் செய்யும், தீ புலவன் - நன்மையற்ற புலமையுடையவனை, செறிவு உடையார் சேரார் - அறிவு மிகுந்தவர் சேரமாட்டார்கள், (ஏனெனில்) தீ புலவன்-நன்மையற்ற புலவன், கோட்டியுள் - புலவர் அவையில், குடிகுன்ற - எப்புலவர் நற்குடியின் பெருமையும் குறையும்படி, பழிக்கும் - நிந்தித்துப் பேசுவான், அல்லாக்கால் - இல்லாவிடில், தோள்புடை கொள்ளா - தோட்களைப் புடைத்துக்கொண்டு, எழும்-தாக்குவதற்குச் சினந்து எழுவான் எ-று.

நாப்பாடம், ஆசிரியர் உரைத்தவற்றை மனதிற் கொள்ளாது நாவினால் மட்டில் உருவேற்றிய பாடம்; அது பயனின்று என்க. செறித்தல்-குழுஉக்கூட்டுதல். புலமை-அறிவு; அதன் தீமையாவது, பயனின்மை. தோட்புடைத்தல், சண்டைக்கு அறை கூவுதல்போல். கொள்ளா-உடன்பாட்டு எச்சம். இஃது ஏதுவணி. (2)

313. * சொற்றாற்றுக் கொண்டு சுனைத்தெழுதல் காமுறுவர்
கற்றாற்றல் வன்மையுந் தாந்தேறார்—கற்ற
செலவுரைக்கு மாறறியார் தோற்ப தறியார்
பலவுரைக்கு மாந்தர் பலர்.

இ-ள். சொல்தாறுகொண்டு - சொல்லாகிய முட்கோலைக் கருவியாகக்கொண்டு, சுனைத்து - வாதத்தில் தினவுகொண்டு, எழுதல் காமுறுவர்-அவையில் பேசுவதற்கு முற்படுதலை விரும்புபவர்களாய், கற்ற ஆற்றல் வன்மையும் - தாம் எதிர்க்கும் புலவர் கற்றறிந்த ஆற்றலையும் பேசும் வன்மையையும், தாம் தேறார் - தாம் உணராதவர்களாய், கற்ற-தாம் கற்றவற்றையும், செல உரைக்கும் ஆறு அறியார்-அவையினர் கருத்திற் செல்லுமாறு எடுத்தோதும்வழியும் தெரியாதவர்களாய், தோற்பது அறியார் - அதனால் தாம் வாதத்தில் இழத்தலும் உணராதவராய், பல உரைக்கும் - பலபலவற்றைப் பொருத்தமின்றிக் கூறும், மாந்தர்-மக்களும், பலர்-பலர் உளர் எ-று.

தாறு - மாடுதுரத்தும் முட்கோல்; சொல்தாறு - உருவகம்; அதைக்கொண்டு அவை ஏறுதல் அறிவின்மை என்றபடி. கற்ற ஆற்றல்-அகரம் தொகுத்தல். காமுறுவர் முதலியன, முற்றெச்சம். மாந்தரும் என்ற உயர்வு சிறப்பும்மை தொகுத்தல். (3)

---

* புறத்திரட்டு - 825.

26

314. கற்றதூஉ மின்றிக் கணக்காயர் பாடத்தாற்
பெற்றதாம் பேதையோர் சூத்திர—மற்றதனை
நல்லா ரிடைப்புக்கு நாணாது சொல்லித்தன்
புல்லறிவு காட்டி விடும்.

இ-ள். கற்றதூஉம் இன்றி - கற்கவேண்டிய முறையில் ஆசிரியரை யடுத்துக் கற்றதொன்றுமில்லாமல், கணக்காயர் பாடத்தால்-உபாத்தியாயர் பிறர்க்குரைத்த பாடத்தை, பெற்றது ஆம் ஓர் சூத்திரம்-கேட்டு அறியப்பெற்றதாகிய ஒரு சூத்திரத்தின் மூலத்தை, பேதை - அறிவிலி யொருவன், நல்லார் இடைபுக்கு-நல்ல அறிவினர் அவையினிடை புகுந்து, நாணாது - தன் அறிவின்மைக்கு நாணாது, சொல்லி-அச்சூத்திரத்தை உரைத்து, தன் புல் அறிவு காட்டிவிடும்-தன்னுடைய அற்ப அறிவினை வெளிப்படுத்திவிடுவான் எ-று.

ஓராசிரியரை யடுத்துத் தனியாகக் கற்பதன்றிப் பொதுவாக அனைவர்க்கும் ஓதும் இடத்தில் கற்பதால் பயனின்று என்பது பெறப்படும். பெற்றது ஆகும் சூத்திரம் என்க. பேதை-பண்பாகு பெயர். நாணுதல், தன் அறிவின்மைக்கு. நல்லார் - ஈண்டு அவை, ஆகுபெயர். கணக்கு-எண்ணும் எழுத்தும்; ஆயர்-ஆள்பவர்; ஆசிரியர் என்றபடி. மற்று-அசை. (4)

315. வென்றிப் பொருட்டால் விலங்கொத்து மெய்கொள்
கன்றிக் கறுத்தெழுந்து காய்வாரோ - டொன்றி [ளார்
உரைவித் தகமெழுவார் காண்பவே கையுட்
சுரைவித்துப் போலுந்தம் பல்.

இ-ள். விலங்கு ஒத்து - மிருகத்தை ஒப்ப, வென்றி பொருட்டால் - தம்மை எதிர்ப்பாரை வெல்வது கருமமாகக் கொண்டு, மெய்கொள்ளார்-உண்மைக் கருத்தை மனதிற் கொள்ளாதவராய், கன்றி கறுத்து - மிகவும் சினங்கொண்டு, எழுந்து - எதிர்க்கத் துணிந்தெழுந்து, காய்வாரோடு - மனம் சீற்றங்கொண்ட கீழோருடன், ஒன்றி-ஓரவையில் உடன் இருந்து, உரை வித்தகம்-தம் சொல்லின் வன்மையை, எழுவார் - காட்ட முற்படுபவர், கையுள் - தமது அகங்கையில், சுரைவித்துபோலும் தம்பல் - சுரைக்காயின் விதைகள் ஒத்த தமது பற்களையே, காண்பவே-பார்க்கப் பெறுவார்கள் எ-று.

எவ்வாற்றானும் தன் பகையை ஒழிக்க முயலும் விலங்குபோல் என்க. கீழோரின் சினத்தின் மிகுதியைப் பல சொற்களால் உரைத்தார். வித்தகம் - சிறப்பு. காண்ப, தம் உரையின் பயனாக; ஏகாரம் இரக்கத்தோடு தேற்றம். கீழோரால் அடிக்கப்பெற்றுப் பல்லும் சிந்தப்பெறுவர் என்பது ஈற்றடியின் குறிப்பு; பிறிது மொழிதலணி. (5)

316. * பாடமே யோதிப் பயன்றெரித றேற்றாத
மூடர் முனிதக்க சொல்லுங்கால்—கேடருஞ்சீர்ச்
சான்றோர் சமழ்த்தனர் நிற்பவே மற்றவரை
யீன்றாட் கிறப்பப் பரிந்து.

இ-ள். பாடமே ஓதி - கற்கவேண்டியவற்றின் மூலபாடமட்டிற் படித்து, பயன்-அவற்றின் பொருளை, தெரிதல்-அறிதல், தேற்றாத - தெளியாத, மூடர் - அறிவில்லாதவர், முனிதக்க - கேட்போர் வெறுக்கத் தக்கவைகளை, சொல்லுங்கால் - அவையிற் சொல்லும்போது, கேடு அருஞ்சீர்-கேடில்லாத சிறப்புடைய, சான்றோர்-அறிவுடையோர், அவரை-அவ்வறிவில்லாரை, ஈன்றாட்கு-பெற்ற தாய்க்காக, இறப்ப-மிகவும், பரிந்து - இரங்கி, சமழ்த்தனர் நிற்ப - அவர்களை அவமதிக்க நாணி நிற்பார்கள் எ-று.

பாடம்-மூலபாடம். இனிப் பலகால் படித்தும் பயனறியாதவர் எனினுமாம். சமழ்த்தனர்-முற்றெச்சம். ஈன்றாட்குப்பரிதல், அவள் மனம் நோகும் என; ஏதுத் தற்குறிப்பேற்றவணி. (6)

317. பெறுவது கொள்பவர் தோள்போ னெறிபட்டுக்
கற்பவர்க் கெல்லா மெளியநூன்—மற்றம்
முறிபுரை மேனிய ருள்ளம்போன் றியார்க்கு
மறிதற் கரிய பொருள்.

இ-ள். பெறுவது-தம் உடலைவிற்றுப் பெறுவதை, கொள்பவர்-பெற்றுக்கொள்ளும் பரத்தையராது, தோளபோல் - தோட்களைப் போல, நெறிபட்டு-வழிபட்டு, நூல் - சாத்திரங்கள், கற்றவர்க்கெல்லாம் - அவற்றைப் படிப்பவர்களுக்கெல்லாம், எளிய - அடைதற்கு எளியவாம், மற்று-அன்றி, அ முறிபுரை மேனியர் - தளிரை ஒத்த அழகின்மேனியையுடைய அவ்வேசியராது, உள்ளம்போல்-மனதைப் போல, பொருள்-அந்நூற்களின் உட்கருத்து, யார்க்கும் அறிதற்கு அரிய-எத்தகையோர்க்கும் அறிந்துகொள்வதற்கு அருமையானவை எ-று.

பொருள் கொடுத்தோர்க்கெல்லாம் வேசியர்தோள் எளிய; ஊக்கத்துடன் படித்தோர்க்கெல்லாம் நூலின் மூலபாடம் எளியனவாம்; அவரது மனதை அறிதல் அருமைபோல, நூலின் உட்கருத்தறிதலும் அருமை: உவமையணி. தோள்-இடக்கர், நெறிபட்டு-சிலேடை; வேசியர்க்காயின், வருவோர் மனவழிபட்டு என்றும், நூற்காயின், கற்குமுறைபட்டு என்றும் கொள்க. முறி, மென்மை அழகு இவற்றால் மேனிக்குவமம். எளிய, அரிய-குறிப்பு வினைமுற்று. (7)

* புறத்திரட்டு - 823. நாலடி - 155.

318. புத்தகமே சாலத் தொகுத்தும் பொருடெரியா
ருய்த்தக மெல்லா நிறைப்பினு—மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே பொருடெரிந்து
தேற்றும் புலவரும் வேறு.

இ-ள். புத்தகம் - நூற்களை, சால - மிகவும், தொகுத்தும் - சேர்த்துவைத்தும், பொருள் - அவற்றின் பொருள்களை, தெரியார்-கற்று அறியாதவராய், உய்த்து - கொணர்ந்து, அகம் எல்லாம்-வீடு முழுவதும், நிறைப்பினும்-நிறைத்து வைத்தாலும், அவற்றை-அப் புத்தகங்களை, போற்றும் புலவரும்-பாதுகாக்கும் புலவரும், வேறு-வேறுவார், பொருள் - அவற்றின் உட்பொருளை, தெரிந்து - தாமும் அறிந்து, தேற்றும் - பிறர்க்கும் உரைக்கும், புலவரும்-அறிஞரும், வேறு-வேறுவார் எ-று.

நூற்களைச் சேமித்து வைத்தலினும் அவற்றைக் கற்றுணர்தலே சிறந்தது என்றபடி. தெரியார்-முற்றெச்சம். புலவர்-அறிஞர், முன்னது இகழ்ச்சிக்குறிப்பு. வேறே - தேற்றேகாரம், ஈற்றடிக்கும் கூட்டுக. (8)

319. *பொழிப்பகல நுட்பநூ லெச்சமிந் நான்கிற்
கொழித்தகலங் காட்டாதார் சொற்கள்—பழிப்பி
னிரையாமா சேர்க்கு நெடுங்குன்ற நாட
வுரையாமோ நூலிற்கு நன்கு.

இ-ள். ஆமா-காட்டுப்பசுக்களை, நிரை சேர்க்கும்-வரிசையாகச் சேரச்செய்யும் செழிப்புடைய, நெடும் குன்ற நாட - நெடிய குன்றுகளுடைய நாட்டுக்குரியவனே, பொழிப்பு அகலம் நுட்பம் எச்சம் இந்நான்கின் - பொழிப்புரை, அகலவுரை, நுட்பவுரை, எச்சவுரை என இந்நான்கு வகைபாலும், கொழித்து-விளக்கி, நூல் அகலம் காட்டாதார் - ஒரு நூலின் அகன்றபொருளைக் காட்டலாகாத புலவரின், சொற்கள்-உரைகள், நூலிற்கு-அந்நூலுக்குக் கூறும், பழிப்பு இல் உரை நன்கு ஆமோ-குற்றமில்லாத உரையாக நன்கு பொருந்துமோ (பொருந்தா) எ-று.

பொழிப்பு - சூத்திரத்தின் மூலபொருள்; அகலம்-அதன் விரிவான விளக்கம்; நுட்பம - அதன்கண் ஆழ்ந்துகிடக்கும் கருத்து; எச்சம் - இவை எஞ்சிய ஏனைப் பொருள்விளக்கம்: வேறு வகையாக உரைப்பாருமுளர். இவ்வாறு உரைப்பதே உரை என்றும், இவை

* புறத்திரட்டு - 755.

உரைக்கும் ஆற்றலுடையாரே அவைக் கேற்றவரென்றும் கொள்க. உரை-ஆகுபெயர். (9)

320. இற்பிறப் பில்லா ரெனைத்துநூல் கற்பினுஞ்
சொற்பிறரைக் காக்குங் கருவியரோ—விற்பிறந்த
நல்லறி வாளர் நவின்றநூ றேற்றுதார்
புல்லறிவு தாமறிவ தில்.

இ-ள். இல்பிறப்பு இல்லார்-உயர்குடியிற் பிறவாதவர், எனைத்து நூல் கற்பினும்-எத்தகையநூலைக் கற்றாலும், பிறர்சொல்லை - அவையின்கண் பேசும் பிறரது சொல்லின் குற்றத்தை, காக்கும் - மறைத்துக் காப்பாற்றும், கருவியரோ-சாதனமுடையவரோ, இல் பிறந்த-நற்குடியிற் பிறந்த, நல் அறிவாளர் - நல்லறிவுடைய மேலோர், நவின்ற - இயற்றிய, நூல்-நூலின் பொருளை, தேற்றுதார் - தெளியாதவரது, புல்லறிவு - அற்பவறிவை, தாம் அறிவது இல் - அவர் தாமுமறிந்து பிறர்க்கு மறிவிப்பதில்லை எ-று.

எனைத்து நூல் - அறிவினைப்புகட்டு நூலாயினு மென்றபடி. பிறர்சொல்லை என மாறுக. சொல் - சொல்லின் குற்றம். காத்தல்-அவையின்கண் பிறரறியாதபடி மறைத்தல். கருவி-அடக்கம், அறிவு முதலிய சாதனங்கள். அறிதல்-பிறரறியச்செய்தல். தாம் அறிந்தும் அறியாதபடி (கண்டுகொள்ளாமல்) இருத்தல் என்றபடி. (10)

அவையறிதல் முற்றிற்று.

பொதுவியல் முற்றிற்று.

---

## ஆறுவது பகையியல்

அஃதாவது ஒருவற்கு உட்பகையாயிருப்பவை. இன்ப துன்பங்களுக்கு உட்பகையே காரணமாதலின், அவற்றுக்கும் அவற்றின் புறனடையாகிய பொதுவியலுக்கும் பின் இது வந்தது.

## 33-ஆம் அதிகாரம். புல்லறிவாண்மை

அஃதாவது இழிந்த அறிவுடைமை. அவையை யறியமாட்டாதவன் புல்லறிவாளனே யாதலின் இது மேலை யதிகாரத்தின் பின் வந்தது.

321. அருளி னறமுரைக்கு மன்புடையார் வாய்ச்சொற்
பொருளாகக் கொள்வர் புலவர்—பொருளல்லா

வேழை யதனை யிகழ்ந்துரைக்கும் பாற்கூழை
மூழை சுவையுணரா தாங்கு.

இ-ள். அருளின் - உயிர்கள்பால் கருணையால், அறம்-தருமங்களை, உரைக்கும்-அறிவுறுத்தும், அன்புடையார் - உள்ளன்புடைய பெரியோரின், வாய்ச்சொல் - வாயின்சொல்லை, பொருளாக-பயன்தரு பொருளாக, புலவர் - அறிவுடையோர், கொள்வர் - ஏற்றுக்கொண்டு ஒழுகுவார்கள்; பொருளல்லா - ஒரு பொருளாகவும் மதிக்கப்படாத, ஏழை-அறிவிலான், மூழை-அகப்பை, பால்கூழ் சுவையை-பாலாலாகிய சோற்றின் சுவையை, உணராதாங்கு - அறியாததுபோல, அதனை - அச்சொல்லை, இகழ்ந்துரைக்கும்-இகழ்ந்து சொல்லுவான் எ-று.

மன்பதை உய்யும்பொருட்டு அவர்கள்பால் கருணைகொண்டு அறமுரைக்கும் என்க. அருள்-யாவரிடத்தும் காரண காரியமின்றி இயல்பின் எழும் அன்பு. அன்பு-சுற்றமுதலாயினாரிடத்து உண்டாகும் பிரியம். பாற்கூழ்-சுவைமிக்க உணவுக்கு உபலக்ஷணம். கூழ்ச் சுவையை என மாறுக. ஆங்கு-உவமவுருபு. (1)

322. அவ்விய மில்லா ரறத்தா றுரைக்குங்காற்
செவ்விய ரல்லார் செவிகொடுத்துங் கேட்கலார்
கவ்வித்தோ றின்னுங் குணுங்கர்நாய் பாற்சோற்றின்
செவ்வி கொளறேற்றா தாங்கு.

இ-ள். தோல்-சாரமில்லாத தோலை, கவ்வி தின்னும்-கடித்துத் தின்னும், குணுங்கர் நாய்-புலையருடைய நாய், பால்சோற்றின்-பால் கலந்த அன்னத்தின், செவ்வி - சுவையை, கொளல் - கொள்ளுதல், தேற்றாது ஆங்கு-தெளியாததுபோல, அவ்வியம் - பொறாமை முதலிய தீக்குணம், இல்லார்-இல்லாத மேலோர், அறத்து ஆறு - தருமவழியை, உரைக்குங்கால் - சொல்லும்போது, செவ்வியர் அல்லார்-நல்லறிவில்லாதவர், செவிகொடுத்தும்-காதுகொடுத்தும், கேட்கலார்-கேட்கமாட்டார் எ-று.

புலையர் நாய் நற்சுவையறியாததுமன்றிச் சாரமற்றுப் புலால் வீசும் தோலையே விரும்புதல்போற் புல்லறிவாளர் நற்பொருள் உணராமையன்றித் தீப்பொருளையே நாடுவர் என்றபடி; உவமையணி. அவ்வியம்-ஏனைத் தீக்குணங்கட்கு முபலக்ஷணம். செவிகொடுத்தும்-உம்மை, இழிவு சிறப்பு. (2)

323. இமைக்கு மளவிற்றம் மின்னுயிர்போ மார்க்க
மெனைத்தானுந் தாங்கண் டிருந்தும்—இனைத்துணையு

நன்றி புரிகல்லா நாணின் மடமாக்கள்
பொன்றிலென் பொன்றுக்கா லென்.

இ-ள். இமைக்கும் அளவில் - இமைப்பொழுதில், தம் இன்னுயிர் - தமது இனியவுயிர், போம் மார்க்கம் - நீங்கிவிடும் உபாயத்தை, எனைத்தானும் - எல்லாவகையாலும், தாம் கண்டிருந்தும் - தாம் பார்த்தும் அறிந்துமிருந்தும், தினைத்துணையும் - தினையளவேனும், நன்றி-நற்செயலை, புரிகல்லா - செய்தலில்லாத, நாண் இல்- வெட்கமில்லாத, மடமாக்கள் - அறிவில்லா மனிதர்கள், பொன்றில் என்-இறந்தாலென்னபயன், பொன்றுக்கால் என்-இறக்காமல் வாழ்ந்தாலென்னபயன் எ-று.

மார்க்கம் - உபாயம்; சிறுபிணி, நச்சுப்பொருள் தீண்டுதல் முதலிய காரணம்பற்றி இறத்தலால் உபாயம் என்றார். தமது உயிர்- தமக்கினியராகிய மனைவி மக்களின் உயிரும் கொள்க. பயனின்றி வீணே தம் நாளைக் கழித்ததற்கு நாணுமை என்க. அவர் இருந்தாலும் இறந்தாலும் பயனிலலை என்றபடி. (3)

324. *உளநாள் சிலவா லுயிர்க்கேம மின்றாற்
பலர்மன்னுந் தூற்றும் பழியாற்—பலருள்ளுங்
கண்டாரோ டெல்லா நகாஅ தெவனொருவன்
றண்டித் தனிப்பகை கோள்.

இ-ள். உளநாள் - உயிருடன் வாழ்ந்துள்ள நாட்கள், சில ஆல்- சிலவாதலாலும், உயிர்க்கு - தன்னுயிர்க்கு, ஏமம் - காவல், இன்று ஆல்- யாதும் இல்லாமையாலும, பலரும் - பலரும், மன் தூற்றும் - தன் ஒழுக்கத்தைக்கண்டு மிகவும் தூற்றுகின்ற, பழி ஆல்-பழியுடைமையாலும், பலருள்ளும் - தம்முடனிருப்போர் பலருள்ளும், கண்டாரோடு எல்லாம் - கண்டவர் எதிர்ப்பட்டவர்களுடனெல்லாம், நகாஅது-கலந்து மகிழாது, தண்டி - விலகி, ஒருவன் - ஒருவன், தனி- தனித்திருந்து, பகை - பகைமையை, கோள் - கொள்ளுதல், எவன்- என்ன பயன்கருதி எ-று.

ஆல் - எச்சப்பொருளன; அசையுமாம். பலரும் மன் தூற்றும் என மாறுக. தூற்றுதல், ஒழுக்கக் குறைவும் பலருடனும் கலவாமையும் கருதி. நகாஅது-இசைநிறையளபு. கோள் - தொழிற்பெயர்.

325. எய்தி யிருந்த வவைமுன்னர்ச் சென்றெள்ளி
வைதா னொருவ னொருவனை—வைய
வயப்பட்டான் வாளா விருப்பானேல் வைதான்
வியத்தக்கான் வாழு மெனின்.

* புறத்திரட்டு - 991.

இ-ள். எய்தியிருந்த-சான்றோர் கூடியிருந்த, அவை முன்னர்-சபையின்கண், ஒருவன் சென்று-ஒருவன் அடைந்து, ஒருவனை-மற்றொருவனை, எள்ளி - இகழ்ந்து, வைதான் வைய - திட்டினன் திட்டவும், வயப்பட்டான்-அவ்வாறு இகழப்பட்டவன், வாளா-செயலற்று, இருப்பானேல் - இருப்பானானால், வைதான் - அவனை வைதவன், வாழும் எனின்-வாழ்வான் என்றால், வியத்தக்கான்-அவன் அதிசயப் படத் தக்கவன் எ-று.

முன்னர் - இடப்பொருளது. வைதான் வைய - மிகவும் திட்ட என்றபடி, "உண்ணலு முண்ணேன்" * என்றதுபோல. வய - வைய, முதற்போலி. வாளா - எதிர்த்து மொழிதலின்றி என்றபடி. வாழும் எனின் - வாழ்தல் இல்லை, அவ்விதமன்றி வாழ்ந்தால் என்றபடி. விய - முதனிலைத் தொழிற்பெயர். (5)

326\. மூப்புமேல் வாராமை முன்னே யறவினையை
ஊக்கி யதன்கண் முயலாதா—னூக்கிப்
புறத்திரு போகென்னு மின்னாச்சொ லில்லுட்
டொழுத்தையாற் கூறப் படும்.

இ-ள். மூப்பு-கிழத்தனம், மேல் வாராமை முன்னே-நெருங்கி வருவதன் முன்னே, அறம் வினையை - அறமாகிய செய்கையை, ஊக்கி - மேற்கொண்டு, அதன்கண் - அவ் அறத்தை, முயலாதான்-முயற்சி செய்யாதவன், இல்லுள்-தன் அகத்தில், தொழுத்தையால்-வெள்ளாட்டியால், நூக்கி-தள்ளப்பட்டு, புறத்து-வீட்டின் புறத்தே, இரு போகு என்னும்-இருப்பாய் போவாய் என்று சொல்லும், இன்னாச்சொல் - கொடுஞ்சொல், கூறப்படும் - சொல்லப்படுவான் எ-று.

இளமையிலேயே அறஞ்செய்க என்பார் மூப்பின்முன் என்றார். இல்லின் புறத்திரு, புறத்துப்போகு எனக் கூட்டுக. தொழுத்தை-பெண்பால். தொழுத்தையும் என இழிவு சிறப்பும்மை தொகுத்தல்.

327\. † தாமேயு மின்புறார் தக்கார்க்கு நன்றாற்றா
ரேமஞ்சார் நன்னெறியுஞ் சேர்கலார்—தாமயங்கி
யாக்கத்துட் டூங்கி யவத்தமே வாழ்நாளைப்
போக்குவார் புல்லறிவி னார்.

இ-ள். புல் அறிவினார் - அற்ப அறிவினையுடையவர், தாமேயும் இன்பு உறார் - தமக்குள்ள பொருளைத் தம்மட்டிலேனும் நுகரமாட்டார், தக்கார்க்கும் - அறிவு ஒழுக்கங்களில் தகுந்தவர்க்கும், நன்று ஆற்றார் - நன்மை உண்டாகக் கொடுத்தல் செய்யார், ஏமம்சார் நல்

* கலித்தொகை. † புறத்திரட்டு - 989. 'ஏமஞ்சால்' என்றும் பாடம்.

நெறியும் - மறுமைக்குக் காவல்சார்ந்த நல்ல ஒழுக்கத்திலும், சேர்கலார்-அடையமாட்டார், ஆக்கத்துள்-செல்வத்தின்கண், தாம் மயங்கி-தாம் மயக்குற்று, தூங்கி-அதன் நுகர்ச்சியில் அழுந்தி, வாழ்நாளை-ஆயுட்காலத்தை, அவத்தமே போக்குவர்-பயனின்றிக்கழிப்பர் எ-று.

நன்று-ஈண்டு அறம். ஆக்கம்-ஆகுதல்; ஈண்டு, பொருள். மயங்கித்தூங்கி - இன்பத்தில் மயக்கமுற்றுப் பிறவற்றை மறந்து. அவத்தம் - பயனின்மை. (7)

328. * சிறுகாலை யேதமக்குச் செல்வுழி வல்சி
இறுகிறுகத் தோட்கோப்புக் கொள்ளா - ரிறுகிறுகிப்
பின்னறிவா மென்றிருக்கும் பேதையார் கைகாட்டும்
பொன்னும் புளிவிளங்கா யாம்.

இ-ள். தமக்கு செல்வுழி-இறந்தபின் தாம்செல்லும் மறுமைக்குத் தமக்கு வேண்டிய, வல்சி - நல்வினையாகிய உணவை, சிறுகாலையே-இளமைப் பருவத்திலேயே, இறுக இறுக-உறுதிபொருந்த, தோள்கோப்பு-தோளிற்கட்டிய கட்டுச்சோறாக, கொள்ளார்-அமைத்துக் கொள்ளாதவர்களாய், இறுகி இறுகி - பொருளைச் சிக்கெனப் பிடித்து, பின் அறிவாம் என்று இருக்கும் - பின் அறத்தை அறிந்து செய்வோம் என்று வாளா இருக்கும், பேதையார் - அறிவிலிகள், கைகாட்டும் - (இறக்கும் தறுவாயில் வாயாற்பேச இயலாது) கைச்சைகையால் காட்டுகின்ற, பொன்னும்-பொன்னுருண்டையும், புளிவிளங்காய் ஆம் - (அருகிலுள்ளார்க்குப்) புளிப்பேறிய விளங்காய் ஆகவே தோன்றும் எ-று.

இறக்கும்போது பொருள் வைத்ததுண்டாயின் சொல்க எனச் சுற்றத்தார் கேட்ப, வாய்திறந்துபேசவும் இயலாது, தான் சேமித்து வைத்த பொன் உருண்டை இருப்பதைச் சைகையாற் காட்டவும், அது காணும் உறவினர் இறப்பவன் † விளங்காய் விரும்பினான் என்று பொருள் கொள்வர்; ஆதலின் சேமித்துவைத்தலிற் பயனின்று என்றபடி. தோள் கோப்பு - மேல் 20-ம் பாட்டிற்போல. பின்னறிவாம்-மற்றறிவாம் ‡ என்றாற்போல. இறுகிறுக, இறுகிறுகி, அடுக்கு; அகர இகரங்கள் தொகுத்தல். (8)

* பழத்திரட்டு - 988.

† "கையாற் பொதித்துணையே காட்டக் கயற்கண்ணா ளதனைக்காட்டா
ளையா விளாம்பழமே யென்கின்றீ ராங்கதற்குப் பருவமன்றென் [லாம்
செய்கோ வெனச்சிறந்தாள் போற்சிறவாக் கட்டுரையாற் குறித்தவெல்
பொய்யே பொருளுரையா முன்னே கொடுத்துண்டல் புரிமின்கண்டீர்"
(சிந்தாமணி)

‡ நாலடி - 19.

329. † வெறுமை யிடத்தும் விழுப்பிணிப் போழ்து
மறுமை மனத்தாரே யாகி—மறுமையை
ஐந்தை யனைத்தானு மாற்றிய காலத்துச்
சிந்தியார் சிற்றறிவி னார்.

இ-ள். வெறுமையிடத்தும்-வறுமையுற்ற காலத்திலும், விழு-துன்பந்தரும், பிணிபோழ்தும் - நோயுற்ற காலத்திலும், மறுமை-மறுபிறப்பிற் குறுதியான தருமஞ்செய்யும், மனத்தாரேயாகி - மனமுடையவராகி, ஆற்றியகாலத்து - செல்வம் உற்றுச் செய்யக்கூடிய காலத்து, ஐந்தை அனைத்தானும் - கடுகின் அளவாகிலும், மறுமையை - மறுமைக்குரிய தருமத்தை, சிறு அறிவினார் - புல்லிய அறிவுடையவர், சிந்தியார்-நினையார் எ-று.

வெறுமை-செல்வம் குறைந்தநிலை; வறுமை. விழுமம்-உரிச்சொல். ஐந்தை - சிறுகடுகு; ஈண்டு, சிறுமை அளவுக்கு வந்தது. ஆற்றிய காலம்-வறுமையும் நோயும் இல்லாமல் அறம் செய்யக்கூடிய காலம். துன்பம் உற்ற காலத்தில் அறத்தை நினைத்தலும் இன்பம் உற்ற காலத்தில் அதனை மறத்தலும் புல்லறிவாளர் செய்கை என்றபடி. (9)

330. என்னேமற் றிவ்வுடம்பு பெற்று மறநினையார்
கொன்னே கழிப்பர்தம் வாழ்நாளை—யன்னோ
வளவிறந்த காதற்றம் மாருயி ரன்னார்க்
கொளவிழைக்குங் கூற்றமுங் கண்டு.

இ-ள். அளவிறந்த - எல்லை கடந்த, காதல் - ஆசையையுடைய, தம்-தமது, ஆர் உயிரன்னார்-அரிய உயிருக்கொப்பானவரை, கொள-கொண்டுபோக, இழைக்கும்-முயற்சி செய்யும், கூற்றம்-இயமனது செயலை, கண்டும் - பார்த்திருந்தும், அன்னோ - ஐயோ, இவ்வுடம்பு-இவ்வுடலை, பெற்றும் - பெற்றிருந்தும், அறம் - தருமத்தை, செய்ய நினையார் - எண்ணாதவராய், கொன்னே - பயனில்லாமல், தம் - தம்முடைய, வாழ்நாளை-ஆயுள் நாளை, கழிப்பர் - போக்குவர், என்னே-என்ன கருதியோ எ-று. மற்று-அசை.

இவ்வுடம்பு-அறம் செய்தற்கு ஏற்ற இம்மானிட வுடல். பெற்றும் கண்டும் நினையார் என முடிக்க. கொன்னே-பயனின்மை குறிக்கும் இடைச்சொல். உயிரன்னார்-மனைவி மக்கள் நண்பர் முதலியோர். கூற்றம், ஈண்டு அவன் செயல், ஆவது உயிரைக் கவர்தல். கண்டும் என உம்மை பிரித்துக் கூட்டுக. (10)

புல்லறிவாண்மை முற்றிற்று.

† புறத்திரட்டு - 990.

## 34-ஆம் அதிகாரம். பேதைமை

அஃதாவது புல்லறிவும் இல்லாமல் யாதொன்றும் முழுவதும் அறியாத தன்மை. அதிகார முறைமையும் இதனால் விளங்கும்.

331. * கொலைஞ ருலையேற்றித் தீமடுப்ப யாமை
நிலையறியா தந்நீர் படிந்தாடி யற்றே
கொலைவல் பெருங்கூற்றங் கோட்பார்ப்ப வீண்டை
வலையகத்துச் செம்மாப்பார் மாண்பு.

இ-ள். கொலை-கொலை செய்வதில், வல்-வலிய, பெருங்கூற்றம்-பெரியயமன், கோள்-அவரவர் உயிரைக்கொள்ளும் சமயம், பார்ப்ப-எதிர் பார்த்திருப்ப, ஈண்டை-இவ்வுலகத்து, வலையகத்து-வாழ்க்கையெனும் வலையிற் சிக்கி, செம்மாப்பார்-இறுமாந்திருப்பவர், மாண்பு-பெருமை, யாமை-ஆமையை, கொலைஞர் - கொல்பவர், உலையேற்றி-உலைநீரில் போட்டு, தீமடுப்ப - அதனடியில் தீமூட்ட, நிலையறியாது-தான் இறக்கும் நிலைமையறியாது, அந்நீர் - அந்நீரிலே, படிந்து - மூழ்கி, ஆடியற்று-அவ்வாமை விளையாடினாற்போலும் எ-று.

உவமையணி. உலையேற்றல், சமைத்தற் பொருட்டு. வலை-இல்வாழ்க்கைக்கு உருவகம். செம்மாத்தல் - இன்புற்றுச் செருக்குதல். மாண்பு - பெருமை; இகழ்ச்சிக் குறிப்பு; இது பிறகுறிப்பு வகையிற் படும். • (1)

332. பெருங்கட லாடிய சென்றா ரொருங்குட
னோசை யவிந்தபி னாடுது மென்றற்றா
லிற்செய் குறைவினை நீக்கி யறவினை
மற்றறிவா மென்றிருப்பார் மாண்பு.

இ-ள். இல் - வீட்டிற்கு, செய் - செய்யவேண்டிய, குறைவினை நீக்கி-காரியக் குறைகளைத்தீர்த்து, மற்று-அதன் பின்பு, அறவினை-தருமச்செயலை, அறிவாம் - அறிந்து செய்வோம், என்று இருப்பார்-என்று நினைத்துக் காலம்போக்குபவரது, மாண்பு-பெருமையானது, பெருங்கடல் - பெரிய கடலில், ஆடிய - குளித்தற் பொருட்டு, சென்றார் - சென்றவர்கள், ஓசை உடன் - ஒலியுடன் அலையும், ஒருங்கு அவிந்தபின்-ஒருசேர அடங்கின பிறகு, ஆடுதும்-குளிப்போம், என்றற்று-என்றுரைத்தற்போலும் எ-று.

குறைவினை - இல்லிற்குச் செய்தற் கமைந்தவற்றுள் குறைந்திருப்பவை. குறையும் கடலோசையும் அவிதலில்லை என்றபடி.

* புறத்திரட்டு - 979.

ஆடிய - "செய்பிய" என்னும் எச்சம் ஆதலின் வல்லினம் இயல்பாயிற்று. மற்றறிவாய்-மேல் 19-ம் செய்யுளிற் போலவும், மாண்பு-331-ல் போலவும் கொள்க. இதுவும் உவமையணி. (2)

333. குலந்தவங் கல்வி குடிமைமூப் பைந்தும்
விலங்காம லெய்தியக் கண்ணு—நலஞ்சான்ற
மையறு தொல்சீ ருலக மறியாமை
நெய்யிலாப் பாற்சோற்றி னேர்.

இ-ள். குலம்-நற்குலப் பிறப்பும், தவம் - விரதவொழுக்கமும், கல்வி - கல்வியும், குடிமை - செல்வததாலாகிய குடிவளமும், மூப்பு-வயது முதிர்ச்சியும், ஐந்தும்-ஆகிய இவ்வைந்தும், விலங்காமல்-தவறாமல், எய்தியக்கண்ணும்-ஒருவனடையப்பெறினும், நலம்-நன்மை, சான்ற-மிகுந்த, மையறு - குற்றமற்ற, தொல் - பழைய, சீர்-சிறப்புடைய, உலகம் - ஒப்புரவென்னும் உலகநடையை, அறியாமை - அறியாதிருத்தல், நெய் இலா-நெய்யில்லாத, பால்சோற்றின் - பால் போலும் வெண்மையான சோற்றுக்கு, நேர்-ஒப்பாகும் எ-று.

நற்குல முதலியன இருந்தும் ஒப்புரவின்றேற் பயனில்லை என்றபடி. குடிமை-குடிவளம். * "உலகத்தோ டொட்டவொழுகல்" என்றது கருதி, உலகம்-உலகநடை எனப்பட்டது; ஆகுபெயர். இனி, மறுமையுலகு என்றும் பொருளுரைப்பர். பால்போன்ற சோறு என்க: வெண்ணிறத்துக்கு மட்டில உவமை. இதுவும் உவமையணி.

334. கன்னனி நல்ல கடையாய மாக்களிற்
சொன்னனி தாமுணரா வாயினு—மின்னினியே
நிற்ற லிருத்தல் கிடத்த லியங்குதலென்
றுற்றவர்க்குத் தாமுதவ லான்.

இ-ள். சொல்-பெரியோர் கூறும் சொற்களை, தாம்-கற்கள்தாம், நனி - மிகவும், உணராவாயினும் - கடையாயினர்போல் அறியாவிடினும், கடையாய-கீழான, மாக்களில் - அறிவிலிகளைவிட, கல் - அந்தக்கற்கள், நனி-மிகவும், நல்ல-சிறந்தனவாம், (ஏனெனில்) இன்னினியே - தம்மை அடைந்த அவ்வப்பொழுதே, நிற்றல்-தம்மேல் நிற்பதற்கும், இருத்தல் - உட்காருதற்கும், கிடத்தல் - படுத்தலுக்கும், இயங்குதல்-நடத்தலுக்கும், என்று உற்றவர்க்கு - கருதிவந்து அடைந்தவர்க்கு, தாம் - கற்கடாம், உதவலான் - கருவியாக உதவி புரிதலால் எ-று.

* குறள் - 140.

கல் உணராவாயினும் உதவலான் நல்ல, மாக்களின் நல்ல, என வினை முடிவுசெய்க. நல்ல-குறிப்பு வினைப்பெயர். சொல் உணராமை கல்லுக்கும் கடையாயினர்க்கும் பொருந்தும், ஏனைய பொருந்தா ஆதலின் கல் நல்ல என்க; வேற்றுமையணி. தம் இடத்து உதவி பெறவும், நிற்கவும், இருக்கவும், கிடக்கவும், செல்லவும் கடையாயினர் உதவார் என்க. இன்னினி-அடுக்கி. (4)

335. * பெறுவதொன் றின்றியும் பெற்றானே போலக்
கறுவுகொண் டேலாதார் மாட்டுங்—கறுவினாற்
கோத்தின்னா கூறி யுரையாக்காற் பேதைக்கு
நாத்தின்னு நல்ல சுனைத்து.

இ-ள். பெறுவது-தன்னாலடையக்கூடிய பெரும்பயன், ஒன்று இன்றியும் - ஒரு சிறிதும் இல்லாவிடினும், பெற்றானேபோல - அப்பயனை உடையவனைப்போலவே, கறுவுகொண்டு - கோபங்கொண்டு, ஏலாதார் மாட்டும்-தம்மொடு இணங்காதாரிடத்தும், கறுவினால்-அந்த கோபத்தினால், கோத்து-அவர்கள் சொல்லாத வார்த்தைகளைச் சேர்த்துக்கொண்டு, இன்னா-துன்பம்தரும் சொற்களை, கூறிஉரையாக்கால்-மிகவுஞ் சொல்லாவிடில், பேதைக்கு - அறிவில்லாதவனுக்கு, நா-நாவை, நல்ல-நன்மையாகிய, சுனைத்து - தினவெடுத்து, தின்னும் - அரிப்பதுபோலும் எ-று.

பெறுதல் - தன்னால் பெறப்படும் பொருள் முதலிய உதவி. ஏலாதார் - நண்பரல்லாதவர்; தம்மிடம் விரோதம் கொண்டவர்கள் கூறியதையும் கூறாததையும் சேர்த்துப் பிறரிடம் உரைத்தல் கீழோர் இயல்பு என்றபடி. கூறி உரைத்தல - கோத்துச்சொல்லி அவற்றின் கருத்து இது என விளக்கி உரைத்தல். சுனைத்துத் தின்னும்-தினவெடுத்து நாவை யரிக்கும் என்க. இஃது ஒருவகைத் தற்குறிப் பேற்றவணி. இதில் எள்ளல் சுவை காண்க. (5)

336. தங்கண் மரபில்லார் பின்சென்று தாமவரை
எங்கண் வணக்குது மென்பவர்—புன்கேண்மை
நற்றளிர்ப் புன்னை மலருங் கடற்சேர்ப்ப
கற்கிள்ளிக் கையிழந் தற்று.

இ-ள். நல் தளிர்-இளைய தளிருடைய, புன்னை-புன்னைமரங்கள், மலரும்-அலரும், கடற்சேர்ப்ப - கடற்கரை யுடையவனே, தங்கண்-தம்மிடத்து, மரபு - நல்லொழுக்கம், இல்லார் - இல்லாதவர்களின், பின்சென்று-பின்போய், தாம்-தாம், அவரை - அவர்களை, எங்கண்-

* புறத்திரட்டு - 976.

எம்மிடத்து, வணக்குதும்-வணங்கி இருக்கச்செய்வோம், என்பவர்-என்பவர்களுடைய, புன்கேண்மை-இழிய நட்பு, கல்-கல்லை, கிள்ளி-கிள்ளி, கையிழந்தற்று-கையை இழந்ததை யொக்கும் எ-று.

மரபு - அடக்க முதலிய நல்லொழுக்கம்; இனம் எனினுமாம். என்பவர் - வினையின்பெயர். ஒருதலை நட்பாதலின் புன்கேண்மை யென்றார். அவ்வித நட்பினால் கல்லைக்கிள்ளின் கைஇழத்தல்போன்ற துன்பமுறும் என்றபடி; உவமையணி. சேர்ப்ப-ஆடூஉ முன்னிலை.

337. * ஆகா தெனினு மகத்துநெய் யுண்டாகிற்
போகா வெறும்பு புறஞ்சுற்றும்—யாதுங்
கொடாஅ ரெனினு முடையாரைப் பற்றி
விடாஅ ருலகத் தவர்.

இ-ள். அகத்து - ஒரு கலத்தினுள், நெய் உண்டு ஆகின் - நெய் இருக்கப்பெறின், ஆகாது எனினும் - அது தமக்கு உணவாகப் பொருந்தாவிடினும், எறும்பு - எறும்புகள், போகா புறம் சுற்றும்-அக்கலத்தைவிட்டுப்போகாமல் வெளிப்புறத்தைச்சுற்றிவரும், (அது போல) யாதும் கொடாஅர் எனினும்-யாதொன்றும் கொடுக்கமாட்டா ரெனினும், உடையாரை-பொருள் உடையவர்களை, பற்றி-சேர்ந்து, உலகத்தவர் விடாஅர்-உலகத்தினர் விட்டு நீங்கமாட்டார்கள் எ-று.

இது பேதைமையாதலின் விடுக என்றபடி. கொடாஅர், விடாஅர், இசைநிறை யளபு. உடையவர், பொருளுடையவர்; † "உடையார் முன்" என்றதுபோல். இது தற்குறிப்பேற்றவணி. (7)

338. ‡ நல்லவை நாடொறு மெய்தா ரறஞ்செய்யா
ரில்லாதார்க் கியாதொன்று மீகலா—ரெல்லா
மினியார்தோள் சேரா ரிசைபட வாழார்
முனியார்கொ ரும்வாழு நாள்.

இ-ள். நாள்தொறும் - ஒவ்வொருநாளும், நல்அவை - நல்லோர் அவையை, எய்தார்-அடையமாட்டார், அறம்செய்யார்-அறம் செய்ய மாட்டார், இல்லாதார்க்கு-எளியவர்க்கு, யாது ஒன்றும் - அவருக்கு வேண்டிய யாதொரு பொருளும், ஈகலார்-கொடுத்தலிலர், எல்லாம்-எல்லா நலமுமுடைய, இனியார்தோள்-இனிய தம்மனைவியர் தோள்களை, சேரார்-தழுவமாட்டார்கள், இசைபட - புகழுண்டாக, வாழார்-வாழார்கள், தாம் வாழுநாள்-இத்தகையோர் தாமுயிர்வாழ் நாட்களை, முனியார்கொல்-அந்தியகாலத்தில் வெறுக்கார்களோ எ-று.

---

* புறத்திரட்டு - 177. போகாதென்றும் பாடம்.
† குறள் - 395. ‡ புறத்திரட்டு - 977.

அவை எய்தார் - பெரியோர் குழுவில் அடைந்து அவர் நன் மொழியின் பயனெய்தார். அறம் - தருமமேயன்றித் தமக்குரிய கடமையும் உட்படுத்தியது. இல்வாழ்வான் இசையுடன் வாழ்தல் வேண்டுமாதலின் அதனை யீற்றில் வைத்தார். தோள்சேர்தல் - இடக்கர். இனி, இரட்டுறமொழிதலாக, தீயார் அவையும், மறச்செயலும், வீணர் முதலியார்க் குதவியும், பரத்தையர்தோள் சேர்தலும், பழி படு வாழ்க்கையும் செய்வர் எனவும் கொள்க. (8)

339. விழைந்தொருவர் தம்மை வியப்ப வொருவர்
விழைந்திலே மென்றிருக்குங் கேண்மை—தழங்குரற்
பாய்திரைசூழ் வையம் பயப்பினு மின்னாதே
யாய்நல மில்லாதார் மாட்டு.

இ-ள். ஆய் நலம் - ஆராய்தற்குரிய நற்குணம், இல்லாதார் மாட்டு-இல்லாத பேதையரிடம், விழைந்து-விரும்பி, ஒருவர் தம்மை வியப்ப-ஒருவர் அப்பேதையரைப் போற்றி உரைக்க, ஒருவர் - அப் பேதையர், விழைந்திலேம் என்று இருக்கும் - யாம் நும்மை விரும்பினேமில்லை என்று கூறி நட்புப் பாராட்டாமலிருக்கும், கேண்மை - ஒருதலை நட்பு, தழங்கு குரல் - முழங்கும் ஒலியுடைய, பாய்திரை சூழ் - பாயும் அலையுடைய கடல்சூழ்ந்த, வையம் - உலகமே, பயப்பினும்-அந்நட்பின் பயனாகப்பெறினும், இன்னாதே-துன்பத்தையே தரும் எ-று.

வியத்தல் - பாராட்டிப் புகழ்தல். கேண்மை - ஒருதலை நட்பு. தழங்குகுரல், விகாரம். திரை-சினையாகுபெயர். இன்னாதே-ஏகாரம் தேற்றத்தோடு இரக்கம். கேண்மை பயப்பினும் இன்னாது என்க.

340. கற்றனவுங் கண்ணகன்ற சாயலு மிற்பிறப்பும்
பக்கத்தார் பாராட்டப் பாடெய்துந் தானுரைப்பின்
மைத்துனர் பல்கி மருந்திற் றணியாத
பித்தனென் றெள்ளப் படும்.

இ-ள். கற்றனவும் - தான் கற்றவற்றையும், கண் அகன்ற சாயலும்-மிகுதியான ஐம்புலநுகர்ச்சியின் மென்மையையும், இல் பிறப்பும்-உயர்குலப் பிறப்பையும், பக்கத்தார்-அடுத்துள்ளவர், பாராட்ட-புகழ்ந்துரைக்க, பாடு எய்தும் - ஒருவன் பெருமை அடைவான்; தான் உரைப்பின் - அவ்விதமின்றி இக்குணங்களைத் தனக்குத் தானே புகழ்ந்துரைத்தால், மைத்துனர் பல்கி - பல மைத்துனர்கள் மிகுந்து சூழ்ந்து, மருந்தில் தணியாத பித்தன் என்று - மருந்தினு

லும் அடங்காத பைத்தியம் உடையவன் என்று, எள்ளப்படும்-யாவ ராலும் இகழப்படுவான் எ-று.

பக்கத்தார்-அயலார். பாடு-பெருமை. சாயல் - ஐம்புலன்களால் நுகர்வதற்கு ஏற்ற மெல்லியதன்மை; உரிச்சொல். மைத்துனர் - மனைவியின் சகோதரர், மாமன் அத்தை புதல்வர்: இவர் ஏளனம் செய்வதற்கு உரியவர்; ஈண்டு, ஆகுபெயராய் ஏளனம் செய்யும் நண்பர்களைக் குறித்தது. தற்புகழ்வோன் பித்தன் என்றபடி. இதில் எள்ளல் சுவைகாண்க. (10)

பேதைமை முற்றிற்று.

## 35-ஆம் அதிகாரம். கீழ்மை

அஃதாவது கீழ்மக்களின் தன்மை. அறிவிலாதவரே கீழ்மக்களாதலின் இது பேதைமையின் பின் வைக்கப்பட்டது.

341\. கப்பி கடவதாக் காலைத்தன் வாய்ப்பெயினுங்
குப்பை கிளைப்போவாக் கோழிபோன்—மிக்க
கனம்பொதிந்த நூல்விரித்துக் காட்டினுங் கீழ்தன்
மனம்புரிந்த வாறே மிகும்.

இ-ள். காலை - உண்ணுதற்குரிய வேளையில், கடவது ஆ-போதுமான அளவில், கப்பி - தானியத்தை, தன் வாய் - தனது வாயில், பெயினும்-போடப்பெறினும், குப்பை-குப்பையை, கிளைப்பு-கிண்டுதலை, ஓவா - ஒழியாத, கோழிபோல் - கோழியைப்போல, மிக்க - மிகுந்த, கனம் பொதிந்த-மேன்மை பொருந்திய, நூல்-தருமநூற் பொருளை, விரித்துக் காட்டினும் - விரிவாக விளக்கினும், கீழ்-கீழ்மகன், தன் மனம்-தனது மனம், புரிந்த-விரும்பிய, ஆறே-வழியே, மிகும்-மிக்குச் செல்வான் எ-று.

கப்பி-தானிய நொய். காலை - உதயமுமாம். கீழ் - பண்பாகு பெயர். கப்பி நூலுக்கும், வாய்பெய்தல் விரித்துரைத்தலுக்கும், குப்பை கிளைத்தல் மனம் புரிந்தவாறு செல்லுதற்கும், கோழி கீழ்மகனுக்கும் உவமை; உவமையணி. (1)

342\. காழாய கொண்டு கசடற்றார் தஞ்சாரற்
றாழாது போவா மெனவுரைப்பிற்—கீழ்தா
னுறங்குவா மென்றெழுந்து போமாமஃ தன்றி
மறங்குமா மற்றொன் றுரைத்து.

இ-ள். காழ்ஆய - உறுதியான வன்மை, கொண்டு - மனதுட் கருதி, கசடு அற்றார்தம் சாரல்-குற்றம் அற்ற மனதினரது பக்கல், தாழாது போவாம் - காலம் தாழ்த்தாமல் செல்வோம், என உரைப் பின்-என அறிந்தவனொருவன் சொல்லி அழைத்தால், கீழ்தான்-கீழ்மகன் ஒருவன், உறங்குவாம் - நாம் அங்குச்செல்லாமல் உறங்கு வோம்வா, என்று எழுந்துபோமாம் - என்றுரைத்து அவ்விடத்தி னின்றும் எழுந்து செல்வானும், அஃது அன்றி - அவ்விதமன்றி, மற்றொன்று உரைத்து - மொழிமாற்றாக வேறொன்று சொல்லி, மறங்குமாம்-மறக்கச் செய்வான் எ-று.

காழ்ஆய-உறுதியான பொருள்கள்; நல்லுபதேசம், தீமை உற்ற விடத்து உதவி, முதலியனவும் கொள்க. "துப்புடையாரை அடைவ தெல்லாம் சோர்விடத்துத்துணை யாவரென்றே" * எனப் பெரி யார் பணித்ததுங் காண்க. இனி உறுதியான நூல்களை அறிந்துள்ள கசடற்றார் என்றும் பொருளுரைப்பர்; 'கசடற்றார்' என்றதில் நூலறிவும் அடங்கியதால் அவ்வுரை சிறப்பின்மையறிக. கீழ்-பண் பாகுபெயர். உறங்குவாம் - அழைத்தவனையும் உளப்படுத்திய பன்மை. மறங்குதல் - மறக்கச்செய்தல், பிறவினைப்பொருளில் வந் தது; மறுக்கும் என்று முரைகூறுவர். (2)

343. † பெருநடை தாம்பெறினும் பெற்றி பிழையா
தொருநடைய ராகுவர் சான்றோர்—பெருநடை
பெற்றக் கடைத்தும் பிறங்கருவி நன்னாட
வற்றா மொருநடை கீழ்.

இ-ள். பிறங்கு-விளங்கும், அருவி - மலையருவிகளுடைய, நல்-நல்ல, நாட-நாட்டுக்குரியவனே, பெருநடை - பெருஞ்செல்வம், தாம் பெறினும் - தாங்கள் பெற்றாலும், சான்றோர் - நற்குணம் நிறைந்த வர்கள், பெற்றி - முன்னிருந்த தன்மையில், பிழையாது - வேறு படாது, ஒரு நடையராகுவர் - ஒரே தன்மையான நோக்கமுடைய ராவர்; கீழ் - கீழ்மகன், பெருநடை - பெருஞ்செல்வத்தை, பெற்றக் கடைத்தும்-அடைந்த உடனே, ஒருநடை - முன்னைக்கு மாறுபட்ட ஒழுக்கத்தில், வற்றாம்-வல்லவனுவான் எ-று.

நடை - செல்வம், ஒழுக்கம். ஒழுக்கமாவது பிறரிடம நடந்து கொள்ளும் தன்மை. மாறுபடுதல்-முன் அடங்கியிருந்த விடத்துச் செருக்குக்காட்டுதல், அன்பிருந்தவிடத்துச் சினம் காட்டுதல் முதலி யன. வற்று-வல்லது. குறிப்புவினைப்பெயர். கீழ் - பண்பாகுபெயர்; இழிபு கருதி வற்று என்ற அஃறிணை வினைபெற்றது. (3)

* பெரிய திருமொழி. † புறத்திரட்டு - 1198.

344. * தினையனைத்தே யாயினுஞ் செய்தநன் றுண்டாற்
பனையனைத்தா வுள்ளுவர் சான்றோர்—பனையனைத்
தென்றுஞ் செயினு மிலங்கருவி நன்னாட
நன்றில நன்றறியார் மாட்டு.

இலங்கு-விளங்கும், அருவி - மலையருவிகளை உடைய, நல்நாட- சிறந்த நாட்டுக்குரியவனே, தினையனைத்தேயாயினும் - தினையின் அளவேயானாலும், செய்த நன்று - ஒருவன்செய்த உதவியை, உண்டால்-தாம் அடையப்பெற்றால், சான்றோர்-நற்குணம் நிறைந்த பெரியோர், பனையனைத்தா-பனையின் அளவாக, உள்ளுவர் - நினைப்பார்கள், என்றும் - எப்பொழுதும், பனையனைத்தும் செயினும்-பனையின் அளவு உதவிசெய்யினும், நன்று அறியார்மாட்டு - செய்நன்றி அறியாதவர்கள்பால், நன்று இல-நற்பயன் பெறமாட்டார் எ-று.

தினை, பனை சிறுமைக்கும் பெருமைக்கும் எடுத்துக்காட்டிய அளவை; மேல் 105-ஆம் செய்யுளின் உரையும் காண்க. நன்று- உதவி. உண்ணுதல் - உண்ணுதலை யொப்பப் பயன்பெறுதல். நாட- ஆடூஉ முன்னிலை. (4)

345. பொற்கலத் தூட்டிப் புறந்தரினு நாய்பிற
ரெச்சிற் கிமையாது பார்த்திருக்கு—மச்சீர்
பெருமை யுடைத்தாக் கொளினுங்கீழ் செய்யுங்
கருமங்கள் வேறு படும்.

இ-ள். பொற்கலத்து - பொன்னாலாகிய உண்கலத்தினின்றும், ஊட்டி-நல்ல உணவை உண்பித்து, புறந்தரினும் - காப்பாற்றி வந்தாலும், நாய் - நாயானது, பிறர் - அயலாருடைய, எச்சிற்கு - எச்சிற் சோற்றுக்கு, இமையாது - கண்ணிமையாமல், பார்த்திருக்கும்-எதிர் பார்த்துக்கொண்டிருக்கும், அச்சீர் - அத்தன்மைபோல, பெருமையுடைத்தா - பெருமையுடையவனாக, கொளினும் - ஒரு கீழ்மகனைக் கொண்டாலும், கீழ்-அக் கீழ்மகன், செய்யும் கருமங்கள் - செய்யும் காரியங்கள், வேறுபடும்-பெருமைக்கு வேறுபட்டிருக்கும் எ-று.

நாய் சிறப்புடன் போற்றப்படினும் தன் இயல்பான குணம் மாறாமைபோல் கீழ்மகன் பெருமையாகக் கருதப்படினும் தன் இழிகுணத்தில் மாறமாட்டான் என்றபடி; உவமையணி. புறந்தருதல்- "ஈன்று புறந்தருதல் என்றலைக்கடனே" † என்றாற்போல. எச்சில்- உண்டதன் எஞ்சியபகுதி. சீர்-உவமவுருபு. உம்மை-உயர்வு சிறப்பு.

* புறத்திரட்டு - 114. கொள்ளுவர் என்றும் பாடம்.

† புறம்.

346. * சக்கரச் செல்வம் பெறினும் விழுமியோ
ரெக்காலுஞ் சொல்லார் மிகுதிச்சொ—லெக்காலு
முந்திரிமேற் காணி மிகுவதேற் கீழ்தன்னை
யிந்திரனு வெண்ணி விடும்.

இ-ள். விழுமியோர் - உயர்ந்தோர், சக்கரன் செல்வம்-இந்திர போகத்தை, பெறினும்-அடையப்பெற்றாலும், மிகுதிச்சொல்-நெறி கடந்த சொல்லை, எக்காலும் - எந்நாளும், சொல்லார் - சொல்லமாட்டார்கள், கீழ் - கீழ்மகன், எக்காலும் - எப்பொழுதாகிலும், முந்திரி மேல் - முந்திரிப் பொன்னுக்குமேல், காணி - காணிப்பொன், மிகுவ தேல் - மிகுந்து நிற்கப்பெற்றால், தன்னை இந்திரனு - தன்னைத் தேவேந்திரனுகவே, எண்ணிவிடும்-நினைத்துவிடுவான் எ-று.

சக்கரன்-இந்திரன்; திருமாலுமாம். இந்திரபோகமாவது - நவ நிதியுடைமை, துன்பம் இறப்பின்மை முதலியன. இனி, சக்கரம்-பூமி என்றும், ஆக்கினு சக்கரம் என்றும் கொண்டு, சக்கரவர்த்திப் பதவி என்று முரைப்பர். பெறினும்-உயர்வு சிறப்பு. மிகுதிச்சொல், "கீழாய" † சொற்கள். காணி, முந்திரி-எண்கள், முறையே 64-ல் ஒன்றும், 256-ல் ஒன்றுமாம்; இவை ஆகுபெயராய் அவ் அளவின் பொன்னைக் குறித்தன. (6)

347. ‡ மைதீர் பசும்பொன்மேன் மாண்ட மணியழுத்திச்
செய்த தெனினுஞ் செருப்புத்தன் காற்கேயா
மெய்திய செல்வத்த ராயினுங் கீழ்களைச்
செய்தொழிலாற் காணப் படும்.

இ-ள். மைதீர் - குற்றம் அற்ற, பசும்பொன்மேல் - பசிய பொன்னின்மேல், மாண்ட - மாட்சிமையுடைய, மணி-நவமணிகளை, அழுத்தி - பதித்து, செய்தது எனினும்-செய்ததானாலும், செருப்பு தன் காற்கேயாம் - செருப்பு ஒருவனது காலில் அணிவதற்கே யுரியதாம், (அதுபோல) எய்திய செல்வத்தாராயினும் - செல்வம் பொருந்தியவர்களாகினும், கீழ்களை - கீழ்மக்களின் குணத்தை, செய்தொழிலால் - அவர்கள் செய்யும் இழிதொழிலால், காணப்படும் - அறியக் கூடும் எ-று.

பசுமை - பொன்னின் தூய்மையும் நிறமும். எய்திய செல்வத்தர்-செல்வம் எய்தியவர் என முன்பின் கூட்டுக; வடசொன் முடிபு.

* புறத்திரட்டு - 1198.
† நாலடி - 70. ‡ புறத்திரட்டு - 1200.

பொன்னும் மணியும்பெற்ற செருப்புப்போல் செல்வம்பெற்ற கீழ்கள் கீழ்ப்படியிலேயே வைக்கத்தக்கவர் என்றபடி; எடுத்துக்காட்டுவமையணி. (7)

348. * கடுக்கெனச் சொல்வற்றுங் கண்ணோட்ட மின்று
மிடுக்கண் பிறர்மாட் டுவக்கு—மடுத்தடுத்து
வேக முடைத்தாம் விறன்மலை நன்னாட
வேகுமா மெள்ளுமாங் கீழ்.

இ-ள். விறல்-வெற்றியும், மலை-மலைகளையடுத்த, நல்நாட-சிறந்த நாட்டையுடையவனே, கீழ் - கீழ்மகன், கடுக்கென - கடுமையாக, சொல் - சொல்வதில், வற்றும் - வல்லவனாவான், கண்ணோட்டம்-இரக்கம், இன்றும் - இல்லாதவனாவான், பிறர்மாட்டு - அயலாரிடத்துண்டாகும், இடுக்கண் - துன்பத்திற்கு, உவக்கும் - மகிழ்ந்திருப்பான், அடுத்து அடுத்து - மேலுமேலும், வேகம் உடைத்து ஆம்-கோபங்கொள்ளுவான், ஏகும்-கண்ட இடம் செல்லுவான், எள்ளும்-சென்று பிறரை இகழுவான் எ-று.

இது கீழ்மகன் இயல்பு கூறியது; தன்மை நவிற்சியணி. இடுக்கண்-துன்பத்தினால் இடுங்கிய கண் உடைமை. விறல்-வெற்றி. இது நாட என்பதின் ஆண்பாலைத் தழுவியது; இனி, பெருமையென்று மலைக்கு அடைமொழியாக்குவதுமாம். வற்று-மேல் 343-ம் செய்யுளிற்போல. (8)

349. பழைய ரிவரென்று பன்னாட்பின் னிற்பி
னுழையினிய ராகுவர் சான்றோர்—விழையாதே
கள்ளுயிர்க்கு நெய்தற் கனைகடற் றண்சேர்ப்ப
வெள்ளுவர் கீழா யவர்.

இ-ள். கள்-மதுவை, உயிர்க்கும்-பொழியும், நெய்தல்-நெய்தற்பூவையுடைய, கனை-ஒலிக்கும், தண் - குளிர்ந்த, கடற்சேர்ப்ப-கடற்கரையுடையவனே, சான்றோர்-குணம் நிறைந்தவர், உழை-தம்பால், பன்னாள் - பலநாளும், பின் நிற்பின் - ஒருவர் வழிப்பட்டு நின்றால், இவர் பழையர் - இவர் பழைய நண்பினர், என்று - என்று கருதி, இனியர் ஆகுவர் - இனிமையுடையவராகுவர், கீழாயவர்-கீழானவர், விழையாதே - அவ்விதம் வழிபடுவோரை விரும்பாமல், எள்ளுவர் - அவரை இகழ்வார் எ-று.

பழையர்-பழைய நண்பினர். நெய்தலையுடைய சேர்ப்பு என்க. விழைந்து வந்தவரை எள்ளுதல் கீழோர் குணம் என்றபடி. (9)

* புறத்திரட்டு - 1201.

350. கொய்புற் கொடுத்துக் குறைத்தென்றுந் தீற்றினும்
வையம்பூண் கல்லா சிறுகுண்டை—ஐயகே
ளெய்திய செல்வத்த ராயினுங் கீழ்களைச்
செய்தொழிலாற் காணப் படும்.

இ-ள். ஐய - அரசனே, கேள் - கேட்க, கொய்புல் - அறுத்த புல்லை, குறைத்து - துண்டித்து, என்றும் - எப்பொழுதும், கொடுத்து - தின்னக்கொடுத்து, தீற்றினும் - ஊட்டினாலும், சிறுகுண்டை - சிறிய எருதுகள், வையம் - இரதத்தை, பூண்கல்லா - பூண்டிழுக்கும் ஆற்றலற்றனவாம், (அதுபோல) எய்திய செல்வத்தாராயினும் - செல்வம் பொருந்தியவர்களாயினும், கீழ்களை - கீழ்மக்களின் குணத்தை, செய்தொழிலால் - இவர்கள் செய்யும் இழிதொழிலால், காணப்படும் - அறியக்கூடும் எ-று.

வையம் - தேர்; ஒருவகைப் பண்டியுமாம். சிற்றுருவின நல்லுணவு ஊட்டப்பெறினும் பெரிய வையத்தை இழுக்கா என்றபடி. ஈற்றடிகள் மேல் 347-ம் செய்யுளிலும் வந்துள்ளன; இதுவும் எடுத்துக்காட் டுவமையணி. (10)

கீழ்மை முற்றிற்று.

## 36 - ஆம் அதிகாரம். கயமை

அஃதாவது நற்குணம் சிறிதுமில்லாது கீழாரினும் இழிந்த கயவரது குணம் உரைத்தல். அதிகாரமுறையும் இதனால் விளங்கும்.

351. ஆர்த்த வறிவின ராண்டிளைய ராயினுங்
காத்தோம்பித் தம்மை யடக்குப—மூத்தொறூஉந்
தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோற்
போத்தறார் புல்லறிவி னார்.

இ-ள். ஆர்த்த - கல்வி கேள்விகளால் நிறைந்த, அறிவினர் - அறிவினையுடையவர், ஆண்டு - வயதில், இளையராயினும் - சிறியவராயிருந்தாலும், தம்மை - தம் மனமொழி மெய்களை, காத்து ஓம்பி - தீவழிச் செல்லாது தடுத்துப் பாதுகாத்து, அடக்குப - ஐம்பொறிகளையும் அடக்கிக் கொள்வார்கள், புல் அறிவினார் - அறிவில்லாதவர், மூத்தொறூஉம் - முதிர்ந்து வளருந்தோறும், தீத்தொழிலே - தீமையாகிய தொழிலிலேயே, கன்றி - முதிர்ந்து, திரிதந்து - அதில் திரிந்து, எருவைபோல் - கொறுக்கைத் தண்டுபோல், போத்து - உட்டுளைக்குற்றம், அறார் - நீங்கார் எ-று.

ஆர்த்த - ஆர்ந்த; வலித்தல் விகாரம். மனமொழி மெய்களை யோம்பலும், பொறிகளை யடக்குதலுமென்க. இளையோர் மூதறிவுடைமை, இளம்வயதிற் கரிகாலன் நரைமுடித்து வழக்குத் தீர்த்ததனு லறியப்படும். அளபெடை-இன்னிசை. எருவை - செடிவிசேடம். போத்து - உள்தொளை. இனி எருவை, கழுகு என்றும், போத்து-குற்றம் என்றும் பொருள் கொள்ளினுமாம். (1)

352. செழும்பெரும் பொய்கையுள் வாழினு மென்றும்
வழும்பறுக்க கில்லாவாந் தேரை—வழும்பில்சீர்
நூல்கற்றக் கண்ணு நுணுக்கமொன் றில்லாதார்
தேர்கிற்கும் பெற்றி யரிது.

இ-ள். தேரை - தவளைகள், செழும் பெரும்-செழித்த பெரிய, பொய்கையுள்-தடாகத்துள், என்றும் வாழினும் - எந்நாளும் வாழ்ந்தாலும், வழும்பு - தம் உடம்பின்மேலுள்ள வழுவழுப்பான அழுக்கை, அறுக்ககில்லா ஆம் - நீக்கிக்கொள்ளும் ஆற்றலற்றனவாகும், வழும்பு இல் - குற்றம் இல்லாத, சீர் நூல் - சிறப்புடைய நூற்களை, கற்றக்கண்ணும்-கற்றிருந்தாலும், நுணுக்கம்-நுட்பமான வறிவு, ஒன்று இல்லாதார் - ஒன்றில்லாதவர், தேர்கிற்கும்-அந்நூற்களின் பொருளை அறிந்துகொள்ளும், பெற்றி அரிது - தன்மை அருமையாகும் எ-று.

வழும்பு - குற்றம், தவளைக்காயின் வழுவழுப்பான மாசு. நுணுக்கம் - நுட்பம், நுட்பமான அறிவுக்கு ஆகுபெயர். தேர்தல்-அறிந்து நூலின்பயன் கொள்ளுதல். கில் - ஆற்றலுணர்த்துவது. இஃது எடுத்துக்காட் டுவமையணி. (2)

353. * கணமலை நன்னுட கண்ணின் றொருவர்
குணனேயுங் கூறற் கரிதாற்—குணனழுங்கக்
குற்ற முழைநின்று கூறுஞ் சிறியவர்கட்
கெற்று லியன்றதோ நா.

இ-ள். கணமலை - கூட்டமாகிய மலைகளடுத்த, நல்நாட-நல்ல நாட்டுக்குரியவனே, கண் இன்று - ஒருவர் பின்னின்று, ஒருவர் - ஒருவருடைய, குணனேயும் - நற்குணத்தையும், கூறற்கு-சொல்லுதற்கு, அரிது - அருமையாகும், (எனினும்) குணன் - அவரது நற்குணம், அழுங்க-கெட, குற்றம்-குற்றங்களை மட்டில், உழைநின்று-அவரருகில நின்று, கூறும் - சொல்லும், சிறியவர்கட்கு - அறிவிலார்க்கு, நா எற்றால் இயன்றதோ - நாவு தசையினாலன்றி வேறு எப்பொருளா லாகியதோ (அறியேம்) எ-று.

---

* புறத்திரட்டு - 1202. 'இயன்றது கொல்' என்றும் பாடம்.

கண் இன்று - கண்முன் இன்றி, புறஞ்க என்றபடி. இன்று - இன்றி, வினையெச்சம் ஈறு திரிந்தது. குணனேயும் - உம்மை உயர்வு சிறப்பு. நற்குணமும் கூறற்கஞ்சுதல் - வேறாகக் கருதுவரோ என்று கருதி. எற்று-எத்தன்மையது; குறிப்புமுற்று. ஓகாரம், வினவுடன் வியப்பு. (3)

354. கோடேந் தகலல்குற் பெண்டிர்தம் பெண்ணீர்மை
சேடியர் போலச் செயறேற்றார்—கூடிப்
புதுப்பெருக்கம் போலத்தம் பெண்ணீர்மை காட்டி
மதித்திறப்பர் மற்றை யவர்.

இ-ள். கோடு ஏந்து - பக்கங்கள் உயர்ந்து, அகல் அல்குல் - அகன்ற அல்குலையுடைய, பெண்டிர் - குலமகளிர், சேடியர்போல - தமக்குப் பணிசெய்யும் தாதியர்போல, தம்பெண் நீர்மை - தமது பெண்தன்மை, செயல் - வெளித்தெரியும்படி அழகுசெய்தல், தேற்றார்-அறியார்; மற்றையவர்-ஏனை விலைமகளிர், புது புனல்போல-புது நீர் வெள்ளத்தைப்போல, பெண்நீர்மை காட்டி-தம் பெண்ணலமெல்லாம் வெளித்தெரியக்காட்டி, மதித்து - தம்மைப் பிறஆடவர் மதிக்கும்படி நடந்துகொண்டு, கூடி - அவருடன் கலந்து, இறப்பர் - தம் ஒழுக்கத்தைக் கடந்து நடப்பார்கள் எ-று.

* "கன்னிய ரல்குற் றடமெனயார்க்கும் படிவருங் காப்பின" தாதலின், அல்குற் பெண்டிர்-கற்புடைய குலமகளிர் எனப்பட்டது. மற்றையவர்-விலைமகளிர். பெண்நீர்மை-பெண்மைக்குரிய உடனலம். கூடி - இடக்கரடக்கல். புதுப்புனல்-வருகையில் மிக்க ஆரவாரமும் பொலிவும், யாவர்க்கும் துய்த்தற்கெளிமையும், அது பாய்ந்தபின் பழைய நீரையும் கொண்டுபோதலும்போல், விலைமகளிர் மிக்க ஆரவாரமும் அழகுப் பொலிவும், பொருள் கொடுத்தாரனைவர்க்கு மெளிமையும், தம்மை யடைந்தவர் செல்வமுழுவதும் கவர்ந்து வறுமையாக்கலும் என்க; உவமையணி. ஆன்றோர் குலமகளிரைப்போல் புறவழகின்றி யிருப்பர்; கயவர் விலைமகளிரைப்போல் புறப்பகட்டாற் பொருள் பறிப்பர் என்னும் கருத்துப் பிறிதுமொழிதலணியால் பெறப்படும். மதித்து-மதிக்கச்செய்து; பிறவினை. (4)

355. † தளிர்மேலே நிற்பினுந் தட்டாமற் செல்லா
வுளிநீரர் மாதோ கயவ—ரளிநீரார்க்
கென்னுனுஞ் செய்யா ரெனைத்தானுஞ் செய்பவே
இன்னங்கு செய்வார்ப் பெறின்.

---

* பால - கம்ப - நகர - 14. † புறத்திரட்டு - 1203.

இ-ள். கயவர்-கீழ்மக்கள், தளிர்மேலே-மிகவும் மெல்லிய தளிரின்மேலே, நிற்பினும்-பொருந்தி நின்றாலும், தட்டாமல்-பிறர் தட்டித் தள்ளாமல், செல்லா-உள்ளிறங்காத, உளிநீரர்-உளியின் குணத்தை யுடையவர், அளிநீரார்க்கு-தம்மிடம் இரக்கமே குணமாகக்கொண்ட சான்றோர்களுக்கு, என்னும் - எவ்வகையிலும், செய்யார் - உதவி செய்யார், இன்னாங்கு-தமக்குத் துன்பத்தையே, செய்வார்-செய்யும் கீழ்மக்களை, பெறின் - அடையப்பெற்றால், எனைத்தானும் - எவ்வளவாகிலும், செய்ப-உதவி செய்வார்கள் எ-று. மாது ஓ-அசை.

கூர்மையுற்ற உளி பிறர் முயற்சியாலேயே துண்டிப்பதுபோல, * கயவரும் பிறர் தூண்டுதலால் தீமை புரிவர்; உவமையணி. தமக்கு நன்று செய்வோர்க்குத் தீமையும், தீமை புரிவோர்க்கு நன்மையும் செய்வர் என்றபடி. செய்வார்-பெயர். (5)

356. மலைநல முள்ளுங் குறவன் பயந்த
விளைநில முள்ளு முழவன் சிறந்தொருவர்
செய்தநன் றுள்ளுவர் சான்றோர் கயந்தன்னை
வைததை யுள்ளி விடும்.

இ-ள். குறவன்-வேடன், மலைநலம் - தான் வசிக்கும் மலையின் வளமையை, உள்ளும் - கருதிச் சிந்திப்பான்; உழவன் - பயிர்செய்வோன், பயந்த - தனக்குப் பயன்றந்த, விளைநிலம் - விளைநிலத்து வளமையை, உள்ளும் - கருதிச் சிந்திப்பான்; சான்றோர் - குணம் நிறைந்தவர், சிறந்த-சிறப்புடைய, ஒருவர் செய்த - ஒருவர் தமக்குச் செய்த, நன்று - நன்மைகளை, உள்ளுவர் - கருதிச் சிந்திப்பர், கயம்-கீழ்மகன், தன்னை வைததை - தன்னை ஒருவன் இழிந்துரைத்ததையே, உள்ளிவிடும்-எப்பொழுதும் சிந்தித்திருப்பன் எ-று.

குறவன் - குன்றவன் என்பதன் மரூஉ. உள்ளுதல் - மேலும் வளத்தைப் பெருக்கச் சிந்தித்தல். உள்ளிவிடும்-மேல் "உள்ளத்தானுள்ளி" † என்றதுபோல. கயம்-கயவன், பண்பாகுபெயர். (6)

357. ‡ ஒருநன்றி செய்தவர்க் கொன்றி யெழுந்த
பிழைநூறுஞ் சான்றோர் பொறுப்பர் கயவர்க்
கெழுநூறு நன்றிசெய் தொன்றுதீ தாயி
னெழுநூறுந் தீதாய் விடும்.

* "தொட்டக்கான் மாழ்குந் தளிர்மேலே நிற்பினுந்
தட்டாமற் செல்லா துளி"—(பழமொழி)

† நாலடி - 64. ‡ புறத்திரட்டு - 1204.

இ-ள். சான்றோர் - நற்குணம் நிறைந்தவர், ஒரு நன்றிசெய்தவர்க்கு-ஒரு சிறிய உதவிசெய்தவர்தம் பால், ஒன்றி எழுந்த-தொடர்ந்து தோன்றிய, பிழைநூறும் - நூறு குற்றங்களாயினும், பொறுப்பர்-பொறுத்துக்கொள்வார்கள், கயவர்க்கு-கீழ்மக்களுக்கு, எழுநூறு நன்றிசெய்து-முன்பு எழுநூறு நன்மைகளைச் செய்திருந்து, ஒன்று தீதுஆயின் - பின்னர் ஒருசெய்கை குற்றமாகிவிடில், எழுநூறும் - முன்செய்த எழுநூறு நன்மைகளும், தீது ஆய்விடும்-குற்றமாகவே மாறிவிடும் எ-று.

நூறு, எழுநூறு-பெரும் எண்ணிக்கைக்கு இலக்கணை. உம்மை-முறையே இழிவு உயர்வு சிறப்பு. செய்தவர்க்கு - செய்தவர்பால்; உருபு மயக்கம். ஒன்றி-ஒன்றின்பின் ஒன்றாக. (7)

358. * ஏட்டைப் பருவத்து மிற்பிறந்தார் செய்வன
மோட்டிடத்துஞ் செய்யார் முழுமக்கள்—கோட்டை
வயிரஞ் செறிப்பினும் வாட்கண்ணாய் பன்றி
செயிர்வேழ மாகுத லின்று.

இ-ள். வாள்கண்ணாய் - வாள்போலுங் கண்களையுடையவளே, கோட்டை - கொம்பினிடத்து, வைரம் செறிப்பினும்-பூண் கட்டினாலும், பன்றி செயிர் வேழம் ஆகுதல்-பன்றி கோபமிக்க யானையாக மாறுதல், இன்று - இல்லை, (அதுபோல) ஏட்டை பருவத்தும்-தாம் வறுமையுற்ற காலத்தும், இல்பிறந்தார் - நற்குடியிற் பிறந்தவர், செய்வன-செய்யும் நற்செயல்களை, மோட்டிடத்தும் - செல்வம் பெற்றுயர்ந்த காலத்திலும், முழுமக்கள்-அறிவிலிகள், செய்யார்-செய்ய மாட்டார்கள் எ-று.

ஏட்டை-வறுமை. மோடு-உயர்வு; பொருளால் வந்த உயர்வு. முழுமக்கள் - உடல்வளத்தில் முழுமையானவர், அறிவின் வளர்ச்சியற்றவர் என்றபடி. இகழ்ச்சிக்குறிப்பு. கண்ணாய்-மகடூஉ முன்னிலை. கோட்டை - கோட்டின்கண், உருபு மயக்கம். செயிர் - போரின்கண் கோபம். யானையைப்போல் பன்றிக்கும் கோடு (பற்கள்) இருப்பினும் அதைப்போற் போர்செய்யும் ஆற்றல் பன்றிக்கில்லை என்றபடி. (8)

359. † இன்றாது மிந்நிலையே யாது மினிச்சிறிது
நின்றாது மென்று நினைத்திருந்—தொன்றி
யுரையின் மகிழ்ந்துதம் முள்ளம்வே றாகி
மரையிலையின் மாய்ந்தார் பலர்.

---

* நாலடி - 149, 184. † புறத்திரட்டு - 178.

இ-ள். இன்று - இன்றே, ஆதும் - செல்வம்பெறுவோம், இந் நிலையே-இப்பொழுதே, ஆதும் - செல்வத்தைப் பெறுவோம், இனி-இனிமேல், சிறிது நின்று-சிறிதுகாலம் கழிந்து, ஆதும் என்று-அப் பொருளை அடைவோமென்று, நினைத்து - கருதி இருந்து, ஒன்றி-அறம்செய்யாது வாளா இருந்து, உரையின் மகிழ்ந்து-ஒன்றன்பின் ஒன்றாகச் சொல்லில் மகிழ்ந்து, தம் உள்ளம்-பொருள் பெருமையால் பின்பு தம்முடைய மனம், வேறு ஆகி - வேறுபட்டு, மரை இலையின்-தாமரையிலைபோல், மாய்ந்தார் - பயனின்றி அழிந்தவர், பலர் - பலராவர் எ-று.

ஆதும்-ஆகுவோம். இன்றோ, பின்றோ பொருள் பெறுவோம், பெறின் அறம் செய்வோமென அறமும் செய்யாது, பின்னர் எண்ணியனவும் கிடைக்காமல் அழிவர் என்றபடி. மரை-தாமரை, முதற் குறை; குளத்தில் பசியதாயிருந்து வாடி அழிதற்குமட்டில் உவம மாயிற்று. இன்-உவம உருபு. (9)

360. நீருட் பிறந்து நிறம்பசிய தாயினு
மீரங் கிடையகத் தில்லாகு—மோரு
நிறைப்பெருஞ் செல்வத்து நின்றக் கடைத்து
மறைப்பெருங்க லன்னா ருடைத்து.

இ-ள். நீருள் பிறந்து - தண்ணீரில் தோன்றி, நிறம் பசியது ஆயினும்-பசிய நிறமுடையதாயிருந்தாலும், கிடையகத்து - சடையினுள்ளிடத்தில், ஈரம் இல்லாகும் - ஈரமில்லாததாகும், (அதுபோல) நிறை - நிறைந்த, பெரும் செல்வத்து - பெரிய செல்வத்தில், நின்ற கடைத்தும் - பொருந்தியிருப்பினும், அறை பெரும் கல் அன்னார் - பாறையாகிய பெருங்கல்லை ஒப்பானவரை, உடைத்து - இவ் உலகம் உடையது எ-று. ஓரும் - அசை.

கிடை - ஒருவகைச்செடி. நீரிலிருந்தும் ஈரம்பெறாத கிடை போல, செல்வத்திலிருந்தும் அதன் பயனாகிய ஈகைக்குணமில்லாத கயவர் என்க: எடுத்துக்காட்டுவமையணி. நிறைப்பெரும் வினைத் தொகை வினை; எதுகைநோக்கி வலிமிகுந்தது. அறை-பாறை. கல் போல் வன்மனமுடையவர். ஓரும்-மேல் 72-ம் செய்யுளிற்போல.

கயமை முற்றிற்று.

பகையியல் முற்றிற்று.

## ஏழாவது பன்னெறியியல்

அஃதாவது ஒன்றுடனொன்று இயைபின்றிப் பலவகைப் பட்டவற்றை உரைக்கும்பகுதி. பொருட்பாலில் உரைத்தவற்றுள் எஞ்சியவை பல நெறிகளைப் புகட்டுவனவாய் இவ்வியல் அமைந்தது.

## 37-ஆம் அதிகாரம். பன்னெறி

அஃதாவது பல நெறிகளைக்கூறுவது. இது பொருட்பாலுக்கே புறனடையாக அமைந்ததாலும் மேலுரைத்த காரணத்தாலும், பொருட்பாலின் ஈற்று அதிகாரமாக வைக்கப்பட்டது.

361. * மழைதிளைக்கு மாடமாய் மாண்பமைந்த காப்பா
யிழைவிளக்கு நின்றிமைப்பி னென்னும்—விழைதக்க
மாண்ட மனையாளை யில்லாதா னில்லகங்
காண்டற் கரியதோர் காடு.

இ-ள். மழை திளைக்கும் - மேகம் தவழும், மாடமாய் - மேல் நிலையுடையதாய், மாண்பு அமைந்த - பெருமை பொருந்திய, காப்பாய்-காவலுடையதாய், இழை-மணிகளிழைத்த, விளக்கு-தூண்டா விளக்குக்கள், நின்று இமைப்பின்-நிலைபெற்று ஒளிவிடினும், விழைதக்க - விரும்பத்தக்க, மாண்ட - நற்குண நற்செய்கைகளால் மாண்புடைய, மனையாளை - மனைவியை, இல்லாதான் இல்லகம் - அடையப்பெறாதவனது வீடு, என் ஆகும் - என்ன பயன்படும், காண்டற்கு - அது கண்ணாற் பார்க்கவும், அரியது ஓர்காடு - கடுமையாகிய ஒரு காடாகும் எ-று.

மழைதிளைக்கும் மாடம் - வீட்டின்மேல் நிலை உயர்வை விளக்கியது. மழைக்கும் மாடத்துக்கும் தொடர்பு காட்டியதால் இது தொடர்புயர்வு நவிற்சியணி. காப்பு-கள்வர் முதலியோர் புகாதபடிக் காவல். இழை விளக்கு-வினைத்தொகை: இதனாற் செல்வப்பெருக்கு உரைத்தபடி. அணிகலன் விளக்குப்போல் விளங்குமென்று முரைப்பர்; சிறப்பின்மை யுணர்க. இமைப்பினும் என உயர்வு சிறப்பும்மை தொகுத்தல். இல்லாகிய அகம் என்க. விருந்தினர் முதலியோர்க்கிடம் இன்மையாற் காடு என்றார்; உருவகம். (1)

362. † வழுக்கெனைத்து மில்லாத வாள்வாய்க் கிடந்து
மிழுக்கினைத் தாம்பெறுபவாயி—னிழுக்கெனைத்துஞ்

* புறத்திரட்டு - 71. குறள் - 52, 53.

† புறத்திரட்டு - 83. தாம் பெறுராயி னென்றும் பாடம்.

செய்குறுப் பாணி சிறிதேயச் சின்மொழியார்
கையுறுப் பாணி பெரிது.

இ-ள். அ சின்மொழியார் - சிலவாகிய இனிய மொழிபேசும் அம்மகளிர், வழுக்கு எனைத்தும் இல்லாத - குற்றம் சிறிதும் இல்லாத, வாள்வாய்-வாளேந்தியவர் காவலில், கிடந்தும்-அடங்கி இருந்தும், இழுக்கினை - தம கற்பொழுக்கத்துக்குக் குற்றத்தினை, பெறுப ஆயின் - அடைந்தனரென்றால், இழுக்கு எனைத்தும் - குற்றத்தைச் சிறிதளவேனும், செய்கு உறு-செய்தலில்லாத, பாணி சிறிதே-காலம் சிறிதேயாகும், கைஉறு - கற்பொழுக்கத்திற் பொருந்தாத, பாணி பெரிது-காலம் மிகுந்ததாகும் எ-று.

வழுக்கு - குற்றம். வாள்-காவற் குபலக்ஷணை. வாட்குற்றமாவது, காவல் பிழைபடுதல். வாய்-ஏழனுருபு. கற்பின் குற்றமாவது-கற்பிழந்து தீநெறிச் செலலல். மனத்தாலும் கற்பின் பண்பு கெடுமாதலின் சிறைவாள் காக்கும் * காப்புப்பயனில்லை என்றபடி. இழுக்குச் செய்யாமை - கற்புநெறியில் மனமொழி மெய்களால் நிற்றல். கை - ஒழுக்கம். சிலமொழி - சிலவாகிய மென்மொழி; குதலையுமாம். சுட்டு, இகழ்ச்சிக் குறிப்பில் வந்தது. ஏகாரம்-இரக்கம். (2)

363. † எறியென் றெதிர்நிற்பாள் கூற்றஞ் சிறுகாலை
அட்டில் புகாதா ளரும்பிணி—யட்டதனை
யுண்டி யுதவாதா ளில்வாழ்பே யிம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை.

இ-ள். எறி என்று-(கணவன் கோபித்தபோது முரண்செய்து) அடியென்று, எதிர் நிற்பாள்-எதிர்ந்து நிற்பவள், கூற்றம்-கூற்றுவனவாள், சிறுகாலை-அதிகாலையில, அட்டில் - மடைப்பள்ளியில், புகாதாள் - சமையல் செய்யச் செல்லாதவள, அரும்பிணி - பொறுத்தற்கரிய வியாதியாவாள், அட்ட அதனை - சமைத்ததை, உண்டி - உணவாக, உதவாதாள் - கணவனுக்கு அளிக்காமல் தானே உண்பவள், இல் வாழ் பேய் - வீட்டில் வாழ்கின்ற பேய் ஆகுவாள், இம்மூவர் - இத்தகைய மூவகைப் பெண்டிரும், கொண்டானை-மணந்த நாயகனை, கொல்லும் படை-உயிர் பறிக்கும் ஆயுதங்களாவார்கள் எ-று.

எறி-ஏவல்வினை. அடு இல் எனப்பிரிக்க;. சமையல் செய்யுமிடம். வெகுண்டு எதிர்ப்பவள் மானத்தைக் கெடுப்பாளெனக் கூற்றமென்றும், உரியவேளையில் சமைக்காவிடில் நோய் உறுமாதலின் அரும்

* குறள் - 57.

† புறத்திரட்டு - 82. ‘இம்மூன்றும்’ என்றும் பாடம்.

பிணி என்றும், நாயகன் பசியை நோக்காது தன்பசியே கருதுதலின் பேயென்றும் உருவகப்படுத்தினர்; "படை"யும் உருவகமாம். கொண்டான் - வினையின் பெயர். (3)

364. கடியெனக் கேட்டுங் கடியான் வெடிபட
வார்ப்பது கேட்டு மதுதெளியான்—பேர்த்துமோ
ரிற்கொண் டினிதிருஉ மேமுறுத லென்பவே
கற்கொண் டெறியுந் தவறு.

இ-ள். கடி என - பயனின்மை கருதி இல்வாழ்க்கையை விலக்குக என்று, கேட்டும்-சான்றோர் சொல்லக்கேட்டும், கடியான்-அதனை நீக்காதவனாய், வெடிபட - வெடித்தல்போலோசை உண்டாக, ஆர்ப்பது-சாப்பறை ஒலிப்பதை, கேட்டும்-கேட்ட பிறகும், அது தெளியான்-இல்வாழ்க்கையின் இழிவு தெளியாதவனாய், பேர்த்தும்-மூத்தவள் இறப்ப மீண்டும், ஓர் இல்கொண்டு-ஒரு மனைவியை மறுமுறை மணந்துகொண்டு, இனிது இருஉம் - மகிழ்ச்சியோடு இருக்கும், ஏமுறுதல் - மயக்கம், கல்கொண்டு - கல்லைக்கொண்டு, எறியும்-தன் மேல் தானே வீசிக்கொள்ளும், தவறு என்ப - குற்றமுடையது என்று பெரியோர் சொல்லுவர் எ-று.

கடி-மேல் 56-ம் செய்யுளிற்போல. வெடிபட எனவே பிணப்பறை எனப்பட்டது. பேர்த்தும்-முதல் மனைவி யிறப்ப மீண்டும். இல் - இல்லாள்; ஆகுபெயர். இருஉம் - இருவும், சொல்லிசையளபெடை. தவறு ஒத்தது எனறபடி. (4)

365. * தலையே தவமுயன்று வாழ்த லொருவர்க்
கிடையே யினியார்கட் டங்கல்—கடையே
புணராதென் றெண்ணிப் பொருணசையாற் றம்மை
யுணரார்பின் சென்று நிலை.

இ-ள். ஒருவர்க்கு - ஒருவருக்கு, தவம் - தவவொழுக்கத்தில், முயன்று வாழ்தல் - முயற்சிசெய்து உயிர்வாழுதல், தலையே - சிறந்ததேயாகும், இனியார்கள் - (முடியாவிடின்) குண ஒழுக்கங்களில் இனிய மனைவியருடன், தங்கல் - இல்லறத்தில் பொருந்திவாழ்தல், இடையே - இடைப்பட்டதேயாம், புணராது என்று - தமக்குப் பொருள் பொருந்தாதென்று, எண்ணி - கருதி, பொருள் நசையால்-செல்வத்தின்பால் இச்சையால, தம்மை உணரார் பின்சென்று-தமது பெருமையினை அறியாதவரது பின்போய், நிலை-இரந்து நிற்கும் நிலை, கடையே-தாழ்ந்ததேயாம் எ-று.

* புறத்திரட்டு - 71.

வீடுபேற்றுக் குதவுவதால் தவம் சிறந்ததென்றும், அதன்கண் ஒழுகலாதார்க்கு இல்லறம் ஏற்றதென்றும் கொள்க. பொருளையே விரும்பிப் பிறரை இரந்துவாழ்தல் இழிபு என்றபடி. தவம் தலையெனவே, இல்லறம் இடை என்றும், இனியார்-மனைவியர் என்றும் உரைக்கப்பட்டன. பொருள் தமக்குப் புணராதென்றறிந்தும் பிறர் பின்சென்று என்க. பின் செல்லல், இரத்தனிமித்தம். (5)

366. கல்லாக் கழிப்பர் தலையாயார் நல்லவை
துவ்வாக் கழிப்ப ரிடைகள் கடைக
ளினிதுண்ணே மாரப் பெறேம்யாஅ மென்னு
முனிவினாற் கண்பா டிலர்.

இ-ள். தலையாயார் - முதன்மையானவர்கள், கல்லா-அறிவுபுகட்டும் பலநூலைக்கற்று, கழிப்பர்-தம் வாழ்நாள் கழிப்பார்கள், இடைகள் - இடைப்பட்டவர்கள், நல்லவை - நல்வழியில் ஊதியம்பெற்ற பொருளை, துவ்வா-உண்டு, கழிப்பர்-காலங்கழிப்பார்கள், கடைகள்-கீழோர், யாஅம் இனிது உண்ணேம்-யாம் விரும்பிய இனிமையானவற்றை உண்டிலேம், ஆர பெறேம்-நிறையச் செல்வம்பெற்றிலேம், என்னும் - என்று நினைக்கும், முனிவினால் - வெறுப்பால், கண்பாடு இலர்-உறங்குதலு மில்லாதவராவர் எ-று.

கல்லா, துவ்வா - செய்யா என்னும் வினையெச்சம். உண்ணேம், பெறேம் - வெறுப்பில் எழுந்தன. யாஅம் - இசைநிறையளபு. கண்பாடு-உறக்கம்; பாடு-படுதல், தொழிற்பெயர். (6)

367. செந்நெல்லா லாய செழுமுளை மற்றுமச்
செந்நெல்லே யாகி விளைதலா—லந்நெல்
வயனிறையக் காய்க்கும் வளவய லூர
மகனறிவு தந்தை யறிவு.

இ-ள். செந்நெல்லால் - சாலிநெல்லினால், ஆய - உண்டாகிய, செழுமுளை-செழிப்பான முளை, மற்றும்-பின்னும், அச்செந்நெல்லே யாகி - அச் சாலிநெற் பயிராகவே, விளைதலால் - விளைவதனால், அந்நெல்-அச் செந்நெல்லே, வயல் நிறைய - கழனி முழுவதும் நிறையும்படி, காய்க்கும் - முளைத்துக் கதிரீனும், வளம் வயல் - வளமையான கழனிசூழ்ந்த, ஊர்-ஊர்களையுடையவனே, தந்தையறிவு-தகப்பனது அறிவே, மகன் அறிவு-மகனது அறிவாக விளங்கும் எ-று.

செந்நெல் - சாலிநெல், நெல்வகையில் சிறந்தொன்று. முளை - தொழிலாகுபெயர். செந்நெல் காய்க்கின் செந்நெல் ஆவதுபோல்,

தந்தையின் அறிவே மகனுக்கும் பொருந்தும்; ஏதுவணி. காய்த்தல்-கதிரீனுதல். (7)

368. உடைப்பெருஞ் செல்வருஞ் சான்றோருங் கெட்டுப்
புடைப்பெண்டிர் மக்களுங் கீழும் பெருகிக்
கடைக்கா றலைக்கண்ண தாகிக் குடைக்கால்போற்
கீழ்மேலாய் நிற்கு முலகு.

இ-ள். உடைபெரும் செல்வரும் - வழிமுறையாகப் பெரும் செல்வமுடையவரும், சான்றோரும் - நற்குணம் நிறைந்த பெரியோரும், கெட்டு-தம் நிலைமாறி, புடை பெண்டிர் மக்களும்-சார்பின்வந்த வைப்புப் பெண்டிர்களின் புதல்வரும், கீழும் - குணத்தில் தாழ்ந்தவரும், பெருகி - செல்வத்திலும் பெருமையிலும் உயர்ந்து, கடைக்கால் - காற்புறத்தது, தலைகண்ணது ஆகி - தலைப்புறத்தில் அமைவதாகி, குடைகால்போல்-குடையின் காம்புபோல, உலகு-இவ்வுலகின் பொருள்கள், கீழ்மேல் ஆய் நிற்கும் - கீழ்மைக்குரியது மேன்மையுடன் பொருந்தியிருக்கும் எ-று.

"உடைப்பெருஞ் செல்வர்" என்றார் புறத்தினும்; தொன்று தொட்டு வழிமுறையாக உடைமை என்க. செல்வர் அப்பொருள் இழத்தலும், மக்கள் அதனை அடைதலும், சான்றோர் குணமாறுதலும், கீழோர் பெருமையுறுதலும் கொள்க. புடை பெண்டிர்-பெர்ருளின் சார்பாகவந்த வைப்பாட்டிகள். கால் - இடவாகுபெயர். குடை திறந்து பிடிக்கும்போது, காம்பு கீழுள்ளது மேலாக வுயர்வது போல என்க; உவமையணி. (8)

369. இனியார்தந் நெஞ்சத்து நோயுரைப்ப வந்நோய்
தணியாத வுள்ள முடையார்—மணிவரன்றி
வீழு மருவி விறன்மலை நன்னாட
வாழ்வின் வரைபாய்த னன்று.

இ-ள், மணிவரன்றி-மணிகளை வாரிக்கொண்டு, வீழும் அருவி-பாய்ந்து விழுகின்ற யாற்றையும், மலை - மலையையும் உடைய, விறல் நல்நாட - வெற்றிபொருந்திய நல்ல நாட்டுக்குரியவனே, இனியார்-தம் மனதுக்கினிய நண்பர், தம் நெஞ்சத்து நோய் - தமது மனதில் பொதிந்த நோய்போன்ற துன்பத்தை, உரைப்ப - சொல்லவும், அந்நோய்-அத்துன்பத்தை, தணியாத-மாற்றவிரும்பாத, உள்ளம் உடையார்-வலிய மனமுடையவர், வாழ்வின் - வாழ்வதைவிட, வரைபாய்தல் - மலையிலேறி வீழ்ந்திறத்தல், நன்று-நன்மையாகும் எ-று.

இனியார் - பண்பினடியாகப் பிறந்தபெயர். நோய் - துன்பம். உடையார் - வினையின்பெயர். விறல்நாட என்க: மேல் 348-ம் செய்யுளிற்போல. மலையின்மேல் பயனின்மையால் யாற்றின்வழி வீழும் மணியேபோல, உலகிலிருந்தும் பயனின்மையால் வரையினின்றும் பாய்தல் என உள்ளுறையுவமம் தோன்றுதல் காண்க. (9)

370. புதுப்புனலும் பூங்குழையார் நட்பு மிரண்டும்
விதுப்பற நாடின் வேறல்ல—புதுப்புனலும்
மாரி யறவே யறுமே யவரன்பும்
வாரி யறவே யறும்.

இ-ள். புது புனலும் - புதுநீர்ப் பெருக்கும், பூம்குழையார் - அழகிய குழையுடைய வேசியரது, நட்பும் - உறவும், இரண்டும்- ஆகிய இவ்விரண்டும், விதுப்பு அற - மனதில் விருப்பமின்றி(ப் பொதுப்பட), நாடின்-ஆராயின், வேறு அல்ல-அவை வேறுபட்டன அல்ல, (ஏனெனில்) மாரி அறவே - மழைபொழிவது நீங்க, புதுபுனலும் - புதுநீர்ப்பெருக்கும், அறும் - அற்றுப்போம், வாரி அறவே-பொருளின்வரவு நீங்கவே, அவர் அன்பும்-அவ்வேசியரது உறவும், அறும்-அற்றுப்போம் எ-று.

மழையினால் புதுநீரும், பொருள் கொடுத்தலால் வேசியருறவும் உண்டாம்; ஆதலின் மழையும் பொருளும் கெட, முறையே நீரும் உறவும்கெடும் என்றபடி; எடுத்துக்காட்டுவமையணி. விருப்பு வெறுப்பின்றி யாதும் ஆராய்தல் வேண்டுமாதலின் விதுப்பற என்றார். * "காமஞ்செப்பாது கண்டதுமொழிமோ" என்றதுங் காண்க. வாரி-வளம், செல்வம். ஏகாரம்-முற்றுப்பொருளது. (10)

பன்னெறி முற்றிற்று.

பன்னெறியியல் முற்றிற்று.

பொருட்பால் முற்றிற்று

---

* குறுந்தொகை - 2.

# 3. காமத்துப்பால்

அஃதாவது இன்பத்தைப்பற்றி உரைக்கும் பகுதி. காமம்- ஐம்புலன்களால் * மகளிரிடம் அடையும் இன்பம்; அஃது ஒத்த எழிலும் பண்பும் பிறவும் பொருந்திய தலைவனும் தலைவியும் நுகரும் பண்பு. இது புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என ஐவகையா யுணர்த்தப்பெறும். அவற்றில் முதலிரண்டிலும் ஏனைய அடங்குதலின் புணர்ச்சி, பிரிவு இரண்டனையே சிறப்பாக ஓதுதல் மரபு. இவை முறையே களவு கற்பு எனப்படும். களவாவது-கொடுப்பாரும் அடுப்பாருமின்றித் தலைவனும் தலைவியும் தம்முள் கண்டு காதல் முற்றிக் கூடுதல்; கற்பாவது - கொண்டவனையன்றிக் கடவுள் இல்லை எனக் கற்றொழுகுதல். களவொழுக்கம் இறுதியில் வரைவுற்றுக் கற்பொழுக்கமாகு மென்க.

## முதலாவது இன்பதுன்பவியல்

அஃதாவது இன்பத்தையும் துன்பத்தையும் ஒருசேர அடைவது. பொதுமகளிர் உறவால் முதலில் இன்பமும், உடனே துன்பமும் பெறுதல் வெளிப்படை.

## 38 - ஆம் அதிகாரம். பொதுமகளிர்

அஃதாவது யாவர்க்கும் இணங்கும் பொதுப்பட்ட பெண்டிர். இவர் இன்பதுன்பத்தை ஒருமிக்கத் தருவது கருதி, இப்பாலில் முதற்கண்ணும், மேலையதிகாரத் திறுதியில் பொதுமகளிர் குணம் உரைத்தமையால் அரிமா நோக்காக அதன் பின்னும் இது வந்தது

371. * விளக்கொளியும் வேசையர் நட்பு மிரண்டுந்
துளக்கற நாடின்வே றல்ல—விளக்கொளியு
நெய்யற்ற கண்ணே யறுமே யவரன்புங்
கையற்ற கண்ணே யறும்.

இ-ள். விளக்கு ஒளியும்-விளக்கின் ஒளியும், வேசையர் நட்பும்- பொதுமகளிர் உறவும், இரண்டும் - ஆகிய இவ்விரண்டும், துளக்கு அற நாடின் - குற்றமின்றி ஆராயின், வேறு அல்ல - அவை ஒன்றுக்கொன்று வேறுபட்டன அல்ல, (ஏனெனில்) விளக்கு ஒளியும்- விளக்கின் ஒளிதான், நெய் அற்ற கண்ணே - அதிலிட்ட தைலம்வற்

* "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுள"—குறள் - 1101.

றிய இடத்து, அறுமே - அற்றுப்போம், கை-கைப்பொருள், அற்ற கண்ணே-கொடுத்தல் நீங்கிய இடத்து, அவர் அன்பும் - அவ்வேசிய ரது அன்பும், அறும்-அற்றுப்போம் எ-று.

துளக்கு - மேல் * ''விதுப்பு'' என்றதுபோல. கை - கைப் பொருட்கு ஆகுபெயர். கண்ணே-ஏகாரம், அற்ற மாத்திரையில் என விரைவுப் பொருளது. அறுமே-இரக்கப் பொருளது. (1)

372. அங்கோட் டகலல்கு லாயிழையா ணம்மொடு
செங்கோடு பாய்துமே யென்றாண்மன்-செங்கோட்டின்
மேற்காண மின்மையான் மேவா தொழிந்தாளே
காற்கானோய் காட்டிக் கலுழ்ந்து.

இ-ள். அம் கோடு அகல் அல்குல்-அழகிய பக்கங்கள் உயர்ந்து அகன்றஅல்குலையும், ஆய் இழைபாள்-ஆய்ந்தணியும் ஆபரணம் பூண் டவளுமாகிய பொதுமகள், செங்கோடு பாய்துமே-(நாம் பிரிவதினும்) செவ்விய மலைபுச்சிமேலிருந்து இருவருமாய்ப் பாய்ந்திறப்போமாக, என்றாள்மன் - என்று (நான் செல்வமுற்றிருந்தபோது) பெரிதும் உவந்து கூறினாள்; காணம் இன்மையான் - பின்னர் என்னிடம் பொருள் இல்லாததால், செங்கோடு மேல் - அச்செவ்விய மலையின் மேல், மேவாது-விருப்பின்றி என்னுடன் வாராமல், கால் கால்நோய் காட்டி - தன் காலின்கண் வாதநோயுள்ளதாகக் குறிப்பிட்டுக்காட்டி, கலுழ்ந்து - நான் செல்வதற்குப் பொய்யாக அழுது, ஒழிந்தாள்- என்னை விட்டு விலகினாள் எ-று.

காதற் கைமிக்குத் தலைவியைக்கூடப் பெருமையாலும், அரசற் குக் குற்றஞ் செய்தலால் அரசனாணையாலும், அவமானம் உற்றுழித் தன் பெருமையைப் போற்றுவதற்கும் வரைபாய்தல் அக்காலத்து வழக்கம் எனப் புலனாகின்றது. பொதுமகளும், தன்னிடம் வந்தவன் தன்னைப்பிரிந்து வரைபாய வேண்டுபவனாயின், அவனைப் பிரிதலி னும் அவனுடன் வரைபாய்வேனெனப் பொய் பாராட்டினாள் என்க. காணம் - பொருள். கால் - உடலுறுப்பு; காற்று; முன்னது எண்ண ளவையாகுபெயர், பின்னது, காற்றின் பரியாய பெயராகிய வாதம் என்னும் நோய்க்கு இலக்கணை. மேவுதல் - இரட்டுற மொழிதலால் விருப்பமும் உடன் செல்வதும் கொள்ளப்பட்டது. அல்குல் அகற்கி அவளது பரத்தைமைக்குணம் விளக்கிற்று. (2)

373. † அங்கண் விசும்பி னமரர் தொழப்படுஞ்
செங்கண்மா லாயினு மாகமன்—றங்கைக்

* நாலடி - 370. † புறத்திரட்டு - 1040.

கொடுப்பதொன் றில்லாரைக் கொய்தளி ரன்னார்
விடுப்பர்தங் கையாற் றொழுது.

இ-ள். அம்கண் விசும்பின் - அழகிய இடமகன்ற விண்ணுல கத்து, அமரர் தொழப்படும் - தேவர்கள் வணங்கும் சிறப்புடைய, செம்கண்மால் ஆயினும் ஆக - சிவந்த கண்களையுடைய திருமாலே யாயினும் ஆகுக, தம்கை - தமது கையில், கொடுப்பது ஒன்று இல்லாரை - கொடுப்பதற்கு ஏற்றபொருள் ஒன்றும் இல்லாமல் வருபவரை, கொய் தளிர் அன்னார் - கொய்யும் தளிர்போன்ற மேனி யுடைய பொதுமகளிர், தமகையால் தொழுது - தம் கைகொண்டு கும்பிட்டு, விடுப்பர்-தம் அகத்தினின்றும் வெளிச்செல்ல வழிகாட்டி அனுப்பிவிடுவர் எ-று.

அழகிலும் பெருமையிலும், வீரத்திலும் ஆற்றலுடைய திரு மாலே பொருளின்றிவரின் பொதுமகளிர் ஏற்கமாட்டார் என்றபடி; உம்மை - உயர்வு சிறப்பு. * கண் - ஏனையுறுப்பின் அழகுக்கு மிலக் கணை. அழகிற்கு மயங்கிய இச்சையையும் கொய்தெறியு மியல்பினர் என்னும் உள்ளுறை தோன்றக் 'கொய்தளி ரன்னார்' என்றார். மன்- அசை. (3)

374. † ஆணமி னெஞ்சத் தணிநீலக் கண்ணார்க்குக்
காணமில் லாதார் கடுவனையர்—காணவே
செக்கூர்ந்து கொண்டாருஞ் செய்த பொருளுடையா
ரக்கார மன்னா ரவர்க்கு.

இ-ள். ஆணம் இல் நெஞ்சத்து-அன்பில்லாத மனத்தையுடைய, அணி நீலம்-நீலோற்பலம்போலும், கண்ணார்க்கு-அழகிய குவளைமல ரொத்த கண்களையுடைய பொதுமகளிர்க்கு, காணம் இல்லாதார்- பொருள் இல்லாத அன்பர்கள், கடு அனையர்-நஞ்சுக் கொப்பாகுவர், காணவே - யாவருங்காண, செக்கு ஊர்ந்து கொண்டாரும்-செக்கைச் செலுத்தும் இழிதொழிலாரும், செய்த பொருளுடையார்-அவ்வகை யில் உண்டாக்கிய செல்வமுடையவரே, அவர்க்கு - அவ் விலைமக ளிர்க்கு, அக்காரம் அன்னார்-சருக்கரைக் கொப்பாவார் எ-று.

இல்லாதார், உடையார் - வினையின் பெயர்; பொதுமகளிரை விழைந்துசெல்லும் காதலர். காணவே-இடைநிலைத் தீவகமாய் மூன் னும் கூட்டினுமாம். செக்கூர்தல், இழிதொழிற்கு இலக்கணை. (4)

* "செங்கண் டிருமுகத்துச் செல்வத் திருமால்" —திருப்பாவை-30.
† கொண்டானும்' என்றும் பாடம்.

375. பாம்பிற் கொருதலை காட்டி யொருதலை
தேம்படு தெண்கயத்து மீன்காட்டு—மாங்கு
மலங்கன்ன செய்கை மகளிர்தோள் சேர்வார்
விலங்கன்ன வெள்ளறிவி னார்.

இ-ள். பாம்பிற்கு-தன்னைப் பிடிக்கவரும் பாம்பிற்கு, ஒருதலை காட்டி-ஒரு புறத்தைக் காண்பித்து, ஒருதலை - மற்றொரு புறத்தை, தேம்படு-இனிமை பொருந்திய, தெண் கயத்து - தெளிந்த நீருடைய தடாகத்தில், மீன்-மீனுக்கு, காட்டும் - காண்பிக்கும் தன்மையுடைய, மலங்கு அன்ன - விலாங்கு மீனையொத்த, செய்கை - செய்கையினை யுடைய, மகளிர்-விலைமாதர், தோள் - தோட்களை, விலங்கு அன்ன - மிருகங்களை யொத்த, வெள்ளறிவினார் - வெண்மையான அறிவுடையவர், சேர்வார்-அணைவார்கள் எ-று.

விலாங்குமீன் தன்னைக் கவர வரும் பாம்புக்கும் மீனுக்கும் ஒவ்வொரு புறத்தைக் காட்டி, இரண்டினின்றும் தப்புவதுபோல, விலைமகளும் தன்னை யணைய வருபவர்க்கு ஒவ்வொரு வகையாக உபாயமுரைத்து விலகுவாள் என்றபடி; வினைபற்றிய உவமையணி. தலை-பக்கம்; சிரசென்று முரைப்பர். தேம்படுதல் - இனிமை தருதல். தோள் சேர்வார்-இடக்கரடக்கல். * வெண்மை அறிவு-அறிவின்மை.

376. பொத்தநூற் கல்லும் புணர்பிரியா வன்றிலும்போ
னித்தலு நம்மைப் பிரியல மென்றுரைத்த [ஞ்சே
பொற்றொடியும் போர்த்தகர்க்கோ டாயினா ணன்னெ
நிற்றியோ போதியோ நீ.

இ-ள். நல் நெஞ்சே - நல்ல மனமே, நூல் - நூலிற் கோக்கப்பட்ட, பொத்த கல்லும் - துளைத்த மணிகளும், புணர்பிரியா-சேர்ந்திருத்தல் பிரியாத, அன்றிலும்போல்-அன்றிற் பறவைகளும்போல, நித்தலும் நம்மை பிரியலம்-எந்நாளும் நம்மைவிட்டுப் பிரிந்திரோம், என்று உரைத்த - என்று பொருளோடிருந்த அக்காலத்தில் சூள் உரைத்த, பொற்றொடியும் - பொன் வளையலையணிந்த விலைமகளும், போர்தகர்கோடு - போர்செய்யும் குணத்து ஆட்டுக்கடாவின் கொம்புகளாக, ஆயினாள் - பொருள் குறைந்த இப்போது மாறிவிட்டாள்; ஆதலின், நீ நிற்றியோ - இனி நீ என்னிடத்து நிற்கிறாயோ, போதியோ-அன்றி அவளிடத்திற் போகிறாயோ, அறியேன் எ-று.

---

"வெண்மை யில்லைபல் கேள்வி மேவலால்" (கம்ப-பால-நாட்டு-53)
"வெள்ளைக் கோட்டியும் விரகினி னொழிமின்"—(சிலப்)

இது நெஞ்சறிவுறூஉ. நாலும் மணியும்போலும் அன்றிலும் போலும் பிரியலம் என்க; இது விலைமகள் கூற்று. அன்றில் ஆணும் பெண்ணும் ஒன்றை ஒன்று பிரிதலின்றி, அவ்விதம பிரியின், அதனையாற்றாது இறந்துபடுமெ என்பது கவிமரபு. பொற்றொடி-அன் மொழித்தொகை. தகர்க்கோடு பின்புறம் திருகி முறுக்கேறி எதிர்ப் படும் யாட்டைக் குத்தும் இயல்பினது; அதுபோல் முன்னுரைத்த தற்கு மாறுபட்டுத தன் காதலனை எதிர்க்கும் வேசி என்க. (6)

377. ஆமாபோ னக்கி யவர்கைப் பொருள்கொண்டு
சேமாபோற் குப்புறூஉஞ் சில்லைக்க ணன்பினை
ஏமாந் தெமதென் றிருந்தார் பெறுபவே
தாமாம் பலரா னகை.

இ-ள். ஆமாபோல் - காட்டுப் பசுவைப்போல, நக்கி-இன்புறப் பரிசித்து, அவர்கை பொருள்கொண்டு - தன்னை யணைந்தவர் கையி லுள்ள பொருளைக் கவர்ந்துகொண்டு, சேமாபோல - இடபமாகிய மிருகம்போல, குப்புறூஉம்-குதித்தோடும், சில்லைக்கண் - தூர்த்தை யாகிய பொதுமகளின், அன்பினை - இச்சையை, ஏமாந்து - மெய் யென்று மயங்கி யேமாந்து, எமது என்று இருந்தார் தாம் - இவள் காதல் எமக்கே யுரியது என்று நம்பி இருந்தவர்களே, பலரால் நகை பெறுப-பலராலும் இகழ்ந்து நகைக்கப்பெறுவர் எ-று.

ஆமா நக்கப்பெற்றான் முதலில் இன்புற்றுப் பின்னர் இறப் பான், அதுபோல் வேசியாறுறவால் முதலில் இன்பமும் பினபு அழிவுமடைவர் என்றபடி. சேமா - இருபெயரொட்டு. குப்புறல்- குதித்தோடுதல், அதுபோல் அவளும் ஆசை வளர்ததிவிட்டு விலகு வாள் என்க; இனிக குப்புறபபடுதத லெனினுமாம. சில்லைக்கண் - சில்லையின; உருபுமயக்கம. நகை - நகைக்கப்படுதல்: தொழிற்பெயர். ஏகாரம்-இரக்கம். ஆம்-அசை. (7)

378. *ஏமாந்த போழ்தி னினியார்போன் றின்னாராய்த்
தாமார்ந்த போதே தகர்க்கோடா—மாணேக்கிற்
றங்நெறிப் பெண்டிர் தடமுலை சேராரே
செந்நெறிச் சேர்துமென் பார்.

இ-ள். ஏமாந்தபோழ்தின் - தாம ஆசைகாட்டியதால் மயங்கிய காலத்தில், இனியார் போன்று - அவர்க்கினிமை யளிப்பவர்போ லிருந்து, தாம் ஆர்ந்தபோதே - பொருளிழந்தபின் தாமாகவே விரும்பிவந்த காலத்தில், இன்னாராய் - இனிமையற்றவராய், தகர்

---

* புறத்திரட்டு - 1042.

கோடுஆம்-ஆட்டுக்கடாவின் முறுக்கேறிய கொம்புகளாக மாறிவிடும், மான்நோக்கின் - மான்போலும் பார்வையுடைய, தம்நெறி - தமக்கே யுரிய தீயவழியிலொழுகும், பெண்டிர் - விலைமகளிரது, தடமுலை-பருத்த முலைகளை, செம் நெறி சேர்தும் என்பார் - செவ்வையான துறவறத்தை அடைவோமென்று சேர்ந்தொழுகக் கருதுபவர், சேரார்-அணையார் எ-று.

பொருளுள்ளபோது தாமே வலிய அழைத்தலும், அஃதில்லாவிடத்து மறுத்தலும் வேசியர்க்கு இயல்பு என்றபடி. இனிமை, இன்பந்தருதலில். தகர்க்கோடு-மேல் 376-ல போல. தம்நெறி - பரத்தையர்க்கே உரித்தாய்ப் பலரை விழைபும் தீநெறி. தடமுலை - * "அகலல்குற்" போல் பரத்தைமை உணர்த்தியது. (8)

379. † ஊறுசெய் நெஞ்சந்தம் முள்ளடக்கி யொண்ணுதலார்
தேற மொழிந்த மொழிகேட்டுத்—தேறி
யெமரென்று கொள்வாருங் கொள்பவே யார்க்குந் [ர்
தமரல்லர் தம்முடம்பி னர்.

இ-ள். ஒள் நுதலார் - ஒளியுடைய நெற்றியினையுடைய விலைமாதர்கள், ஊறுசெய நெஞ்சம்-தாம் பொருளீட்டப் பிறர்க்குத் துன்பம்செய்யும் எண்ணத்தை, தம்முள் அடக்கி-வெளிக்காட்டாமல் தம் மனதில் அடக்கி, தேறமொழிந்த - தம்மை விரும்பியவர் தெளிந்து நம்புமாறு சொல்லிய, மொழிகேட்டு-வார்த்தையைக் கேட்டு, தேறி-அதனை உண்மையெனத் தெளிந்து, எமர் என்று - அவ் விலைமாதரையே எமது சுற்றம் என்று, கொள்வாரும் கொள்ப-கருதிக்கொள்ளுவார்களும் அவ்விதம் கொள்ளுவர், (எவரெனில்) யார்க்கும் தமர் அல்லர்-பிறரெவர்க்கும் உறவில்லாதவராய், தம் உடம்பினர் - தம் உடல் பிறர்க்கன்றித் தமக்கே உரியதாக உடையவர் எ-று.

உடம்பினர் கொள்வாரும் கொள்ப என்க. ஊறு-பிறர் பொருளைக்கொள்ள முயல்வதால் பிறர்க்கு உண்டாக்கும் துன்பம். நெஞ்சம் - ஆங்கு எழும் எண்ணம்; ஆகுபெயர். ‡ "அன்பிலாரெல்லாம் தமக்குரிய" ரென்பதன் கருத்து நோக்கி, தம் முடம்பினர் - உள்ளன்பில்லாதவர் எனப்பட்டது; அவருடல் பிறக்குப் பயன்படாமையாலும், அவர்க்கு உறவினர், நண்பினர் வேறு இன்மையாலும் 'தமரல்லர் தம்முடம்பினர்' என்றார் என்க. தம்மைப்போல் உள்ளன்பும் உறவும் அற்ற வேசியரை எமர் எனக் கொண்டார் என்ற கவிநயம் உய்த்துணர்க. (9)

* நாலடி - 372. † புறத்திரட்டு - 1043. ‡ குறள் - 72.

380. * உள்ள மொருவ னுழையதா வொண்ணுதலார்
கள்ளத்தாற் செய்யுங் கருத்தெல்லாந்—தெள்ளி
யறிந்த விடத்து மறியாராம் பாவஞ்
செறிந்த வுடம்பி னவர்.

இ-ள். ஒள் நுதலார்-ஒள்ளிய நுதலையுடைய பரத்தையர், உள்ளம் ஒருவன் உழையதா - தம் இச்சை வேறொருவன் பாலதாகவும், கள்ளத்தால் செய்யும்-தம்மை யப்போதடைந்தவரிடம் வஞ்சனையாக அன்புடைமைபோல் செய்கின்ற, கருத்து எல்லாம் - நினைவு முற்றிலும், தெள்ளி அறிந்த இடத்தும்-தெளிவாக ஆராய்ந்து அறிந்திருந்தபோதிலும், பாவம் செறிந்த உடம்பின் அவர் - தீச்செயல்களே உறுப்புக்களாக மிகச்செறிந்த உடலுடையவர்கள், அறியாராம்-அவர்பால் சிற்றின்பம் கருதி அறியாதவர்போல் ஒழுகுவராம் எ-று.

முதலிரண்டடிகளால் இவர் † "இருமனப் பெண்டிர்" என்பது பெறப்படும். உள்ளம்-ஈண்டு, இச்சை ஆகுபெயர். உம்மை இழிவு சிறப்பு. உடம்பினவர்-தீவினையே உருவெடுத்தவ ரென்றபடி. அறியாராம் - அவர்பால் இன்பம் விழைந்ததால் அவர்களது அன்பின்மை கண்டும் காணாதபடி ஒழுகுதல்; மேல் ‡ "அறிவதில்" என்றதுபோல. ஆம்-இகழ்ச்சிப் பொருளது. (10)

போதுமகளிர் முற்றிற்று.

இன்ப துன்பவியல் முற்றிற்று.

---

## இரண்டாவது $ இன்பவியல்

அஃதாவது இன்பத்தைப்பற்றி யுரைக்கும் பகுதி. துன்பமின்றிக் கலப்பிலா இன்பம் கற்புடை மனைவியரிடமே பெறப்படுமாதலின் அதன் பண்பே யீண்டு உரைக்கப்பட்டது. இன்பதுன்பத்துக்கு மறுதலை யாதலின் மேலை யியலுக்குப் பின் வந்தது.

### 39-ஆம் அதிகாரம். கற்புடைமகளிர்

அஃதாவது கற்புடைய மகளிரது தன்மை. பொதுமகளிர் கூட்டம் தீயதாதலானும், கற்புடைய மனைவியர் கூட்டமே விழையத்தக்கதாதலானும், இது மேலை யதிகாரத்தின் பின் வந்தது.

---

* புறத்திரட்டு - 1041. † குறள் - 920. ‡ நாலடி - 320.

$ இன்பவியல், பொருட்பாலில் பொருளைப் பற்றியதென்றும், இவ்வியலில் காமத்தைப் பற்றியதென்றும் வேற்றுமை உய்த்துணர்க.

381. அரும்பெறற் கற்பி னயிரா ணியன்ன
பெரும்பெயர்ப் பெண்டி ரெனினும்—விரும்பிப்
பெறுநசையாற் பின்னிற்பா ரின்மையே பேணு
நறுநுதலா ணன்மைத் துணை.

இ-ள். பெறல் அரும்-பெறுதற்கரிய, கற்பின்-கற்புடைய, அயி ராணி அன்ன - இந்திராணியை நிகர்த்த, பெரும் பெயர்-பெரிய புக ழுடைய, பெண்டிர் எனினும் - மனைவியாகிலும், விரும்பி - அவளது அழகைக்கண்டு காமுற்று, பெறும் நசையால் - அவள் நலனை அடை யும் விருப்பத்தோடு, பின் நிற்பார் - வழிபட்டுப் பின் நிற்பவர், இன் மையே பேணும்-இல்லாமையையே விரதமாகக் கொண்டொழுகும், நறுநுதலாள் - நறிய நெற்றியையுடைய நங்கையே, நன்மை துணை- நாயகனுக்குரிய நன்மையான துணையாவாள் எ-று.

பெறலரும் என மாறுக. கற்பு - தாய் தந்தையரால் கணவன் முதலியவரிடம் ஒழுகும் விதம் கற்பிக்கப்பட்டது. அயிராணி-இந்தி ரன் மனைவி: நகுடன் என்பவன் இந்திரபதவி அடைந்து அவளை அடைய விரும்பியபோது, தன் நாயகனையேயன்றி அவனை விரும் பாது விலக்கிய கற்புடையவள். அவளைப்போல் கற்பு, அழகு செல்வ முடைய பெண்டிர் என்க. விருப்பம்-பிறர்காணத் தன்னை அலங்கரித் தலாலும், பிற புருடர் காண்பதற்கும் நெருங்குவதற்கும் எளியளாய் ஒழுகுதலாலும் உண்டாகியது என்க. (1)

382. குடநீரட் டுண்ணு மிடுக்கட் பொழுதுங்
கடனீ ரறவுண்ணுங் கேளிர் வரினுங்
கடனீர்மை கையாறாக் கொள்ளு மடமொழி
மாதர் மனைமாட்சி யாள்.

இ-ள். குடநீர்-ஒரு குடநீர்மட்டில், அட்டு உண்ணும்-காய்ச்சிப் புசிக்கும், இடுக்கண்பொழுதும்-வறுமைக்காலத்திலும், கடல் நீர்-கட லின் நீர்முற்றும், அற - வற்றும்படி, உண்ணும் - உண்ணத்தகும், கேளிர் - பெருங்கூட்டமான உறவினர், வரினும் - விருந்தாக வந் தாலும், கடன் நீர்மை - தனது கடமையாகிய குணங்களையே, கைஆறுஆ கொள்ளும் - ஒழுக்க நெறியாக மேற்கொள்ளும், மட மொழி-மடப்பமான சொல்லையுடைய, மாதர்-மனைவியே, மனை-மனை வாழ்க்கைக்குத் தக்க, மாட்சியாள் - பெருமையுடையவளாவள் எ-று.

குடநீர் தவிற உண்பதற்கு வேறொன்று மில்லா இடுக்கண் என்க. இடுக்கண் - துன்பம், உபசாரவழக்கு. உண்ண - கடல்நீர்

உண்ணும்; கேளிரின் தொகை குறித்தது. மாதர் - காதலை யாக்கு பவள்; * உரிச்சொல், ஒருமைப்பெயர்; மாதரார்-பன்மை. (2)

383. † நாலாறு மாறாய் நனிசிறிதா யெப்புறனு
மேலாறு மேலுறை சோரினு—மேலாய
வல்லாளாய் வாழுமூர் தற்புகழு மாண்கற்பி
னில்லா ளமர்ந்ததே யில்.

இ-ள். நால் ஆறும் ஆறு ஆய் - நான்கு பக்கங்களிலும் வழி யுடையதாய், நனி சிறிது ஆய்-உள்ளிடம் மிகச் சிறியதாய், எப்புற னும்-எல்லாப் பக்கங்களிலும், மேல் ஆறும் - மேற்புறத்தினின்றும், மேல்-தன்மேல், உறைசோரினும்-மழை நீர்சொரிந்து விழுந்தாலும், மேல் ஆய-மேன்மையாகிய அறங்களை, வல்லாள் ஆய்-செய்யும் ஆற்ற லுடையவளாய், வாழும் ஊர் தன்புகழும் மாண் கற்பின் - அவள் வாழுமூரினர் அவளைப் போற்றும்படியான மாண்புடைய கற்பிலக் கணமுடைய, இல்லாள்-மனைவி, அமர்ந்ததே இல் - விருப்பத்துடன் பொருந்தியதே மனையாகும் எ-று.

வீட்டிற்கு நாற்புறமும் புகும் வழியிருத்தல் அக்காலத்திலும் வழக்கம்போலும். சிறுமையும் உறைசோர்தலும் வறுமையைக் குறித்தன. மேலாய-மேன்மையானவை; ஈண்டு, அறம், விருந்தோம் பல் முதலியன. ஊர்-ஆகுபெயர். ஏகாரம்-பிரிநிலை. (3)

384. ‡ கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவா
ளுட்குடையா ளூர்நா ணியல்பினா—ளுட்கி
யிடனறிந் தூடி யினிதி னுணரு
மிடமொழி மாதராள் பெண்.

இ-ள். கட்கு இனியாள் - கண்ணுக்கு இனிய உருவமுடையவ ளாய், காதலன் காதல்வகை-நாயகன் விருப்பத்துக்கேற்ற வகையில், புனைவாள்-தன்னை அலங்கரித்துக்கொள்பவளாய், உட்கு உடையாள்- பிறரிடம் அச்சமுடையவளாய், ஊர் - ஊரார் செய்கைக்கு, நாண் இயல்பினாள்-நாணுகின்ற குணமுடையவளாய், உட்கி - காதலனுக்கு அஞ்சி, இடன் அறிந்து-சமயமறிந்து, ஊடி-அவனோடு பிணங்கி, இனி தின் உணரும் - இன்பமுண்டாகும்படிச் சமயமறிந்து அவ்வூடல் தெளியும், மடமொழி - வஞ்சனையற்ற மொழியுடைய, மாதராள்- பெண்ணை, பெண்-கற்புடைய மனைவியாவாள் எ-று.

---

* "மாதர் காதல்"—தொல் - உரிச்.

† புறத்திரட்டு - 70. அமைந்ததே என்றும் பாடம்.

‡ புறத்திரட்டு - 69.

காதல்வகை-அவ்வப்போது நாயகன் விரும்பும் ஆடையாபரண கோலங்கள். உட்கு-அச்சம்; ஏனை மடம், நாணம், பயிர்ப்புக்கும் உப லக்ஷணம். ஊர் நாண்-ஊரினர் அறநெறிக்கு மாறுபட்ட வொழுக்கத் திற்கு நாணுதல். ஊடுதல்-கலவியிற் சிறு பிணக்கு; இஃது இன்பம பெருக்கும் சாதனங்களுள் ஒன்று; இது நீடிக்காவண்ணம் உடனே உணர்ந்து கூடுதல் வேண்டுமென்பார், இனிதின் உணரும் என்றார். இடனறிந்து உணரும் என்று பின்னும் கூட்டுக. மாதராள் - காதலை எழுப்புகின்றவள். (4)

(விலைமகட் பழித்த குலமகள் கூற்று)

385\. எஞ்ஞான்று மெங்கணவ ரெந்தோண்மேற் சேர்ந்தெழினு
மஞ்ஞான்று கண்டேம்போ னாணுதுமா—லெஞ்ஞான்று
மென்னை கெழீஇயினர் கொல்லோ பொருணசையாற்
பன்மார்பு சேர்ந்தொழுகு வார்.

இ-ள். எஞ்ஞான்றும் - ஒவ்வொருநாளும், எம் கணவர் - எம் முடைய நாயகர், எம் தோள்மேல் சேர்ந்து எழினும்-எமது தோட் களைத் தழுவி எழுந்தாலும், அஞ்ஞான்று கண்டேம்போல் - மணம் புரிந்த அந்தநாளில் அவருடன் இன்பத்தைக் கண்டாற்போல, நாணு தும் - வெட்க முறுவோம், (என்றால்) எஞ்ஞான்றும் - எந்நாளும், பொருள் நசையால்-பொருள் சேர்க்கும் இச்சையால், பல்மார்பு-பல ருடைய மார்புகளையும், சேர்ந்து ஒழுகுவார் - தழுவிய தீயவொழுக் கத்தில் நடக்கும் வேசியர், என்ன கெழீஇயினர் கொல் - என்ன உரிமை யுடையவரோ எ-று. ஆல், ஓ-அசை.

தோள்சேர்தல் - இடக்கரடக்கல். ஒவ்வொருநாளும் நுகரும் இன்பம் புதுமையாகத் தோன்றவும், அதனால் நாயகனைக்காண வெள்குவர் என்க. அஞ்ஞான்று-மணம்புரிந்தநாள். காணுதல், இன் பத்தை நுகர்தல். கெழீஇயினர்-உரிமையுடையவர்; உரிமை-நாணாது இன்பநுகரும் பெற்றி; இது சொல்லிசையளபு. (5)

386\. உள்ளத் துணர்வுடையா னோதிய நூலற்றால்
வள்ளன்மை பூண்டான்க ணொண்பொரு—டௌ்ளிய
ஆண்மகன் கையி லயில்வா ளனைத்தரோ
நாணுடையாள் பெற்ற நலம்.

இ-ள். வள்ளன்மை பூண்டான்கண் ஒள்பொருள்-ஈகைக் குண த்தை மேற்கொண்டவ னிடத்துள்ள ஒள்ளிய செல்வம், உள்ளத்து உணர்வு உடையான்-மனதில் நல்லறிவுடையவன், ஓதிய நூல் அற்று- கற்றறிந்த நூலின் தன்மையது; நாண் உடையாள் - நாண முதலிய

குணங்களுடையவள், பெற்ற நலம் - அடைந்துள்ள கற்பின் நலம், தெள்ளிய ஆண்மகன் - பலருள் தேர்ந்தெடுக்கப்பெற்ற ஆண்மை யுடைய வீரன், கையில் அயில்வாள் அனைத்து-கையிலேந்திய கூரிய வாளாயுதத்தை ஒக்கும் எ-று. ஆல், அரோ-அசை.

உணர்வு - அறிவு. அறிவுடையவனுக்குக் கற்றநூற் பயன்படு மாறு, கொடையாளியின் செல்வமும் பயன்படுமென்க. வீரன் கரத் தேந்தியவாள் அவற்குப் பெருமையும் பொலிவும் தருவதுடன், அவனை எதிர்த்தாரை யூறுசெய்யும்; அதுபோல், நாணுடையவள் கற்புநலன் அவட்கு அழகும் பெருமையும் தருதலுடன் கற்புக் கிழுக்குக் கருதுவோரை யழிக்கும் என்றபடி. நாண்-ஏனை மகடூஉக் குணங்கட்கு முபலக்ஷணம். (6)

(பரத்தையரோ டொழுகிவந்த தலைமகனைத் தலைவி புலந்துரைத்தது)

387. கருங்கொள்ளுஞ் செங்கொள்ளுந் தூணிப் பதக்கென்
றொருங்கொப்பக் கொண்டானு மூர்-ஒருங்கொவ்வா
நன்னுதலார்த் தோய்ந்த வரைமார்ப னீராடா
தென்னையுந் தோய வரும்.

இ-ள். ஊரன் - சிற்றூர்த்தலைவன் ஒருவன், கரும் கொள்ளும்- கறுத்த கொள்ளையும், செம்கொள்ளும்-சிவந்த கொள்ளையும், ஒருங்கு ஒப்ப-வேற்றுமையின்றி ஒரு நிகராக, தூணிப்பதக்கு என-தூணிப் பதக்கு என ஓரளவாக, கொண்டான் ஆம் - வாங்கிக்கொண்டானும், (அதுபோல) ஒருங்கு ஒவ்வா-எம்முடன் ஒழுக்கத்தில் ஒரு தன்மை யான ஒப்புமையில்லா, நல நுதலார்-நல்ல நுதலையுடைய வேசியரை, தோய்ந்த-கலந்த, வரைமார்பன் - மலையொத்த மார்பினையுடைய என் தலைவன், நீர் ஆடாது - தன் மாசுநீங்கக் குளிக்காமல், என்னையும் தோயவரும் - குலமகளாகிய என்னையும் அங்ஙே அணையவருவான் எ-று.

கொள்ளிற் சிறந்தது தாழ்ந்ததென வேற்றுமையறியாது ஒரு தன்மையதாக வாங்குவதுபோல, விலைமகள் குலமகள் என்ற வேற் றுமை பாராட்டாமல் சேரவருவான் என்க. தூணி, பதக்கு-முகத்த ளவைகள், முறையே நான்கு, இரண்டு மரக்கால்கள். ஆம்-இகழ்ச் சிக் குறிப்பு. ஒவ்வாமை - கற்பொழுக்கத்தாலும் காதலாலும். நீரா டித் தூய்மையுடனன்றி யணையலாகாதென்றபடி; இஃது ஊடல். பரத்தையர்பால் ஒழுகி மீண்டுவரும் தலைவன் பள்ளியிற்புகத் தலைவி உரைத்ததாகவேனும், கலவிப்பொழுதில் ஊடல் சுவைதோன்ற

உரைத்ததாகவேனும் கொள்க. இது மருதத் திணையாதலின், ஊரன், கொள், பதக்கு, தூணி எனக் கருப்பொருள்கள் வந்தன. (7)

(தூதுவந்த பாணற்குத் தலைவி வெகுண்டுரைத்தது)

388. * கொடியவை கூறாதி பாணநீ கூறி
னடிபைய விட்டொதுங்கிச் சென்று—துடியி
னிடக்கண் ணனையம்யா மூரற் கதனால்
வலக்கண் ணனையார்க் குரை.

இ-ள். பாண - பாணனே, கொடியவை - எம் தலைவன் வருவா னென்ற கொடிய சொற்களை, கூறாதி - எம்மிடம் சொல்லாதே, ஊரற்கு - ஊரனாகிய எம் நாயகனுக்கு, யாம் துடியின் இடக்கண் அனையம்யாம்-யாம் உடுக்கையின் இடப்புறத்தைப் போன்றிருக்கின் றோம், அதனால்-அதனாலே, நீகூறின்-நீ உரைப்பதாயின், அடிபைய இட்டு - இவ்விடத்தினின்றும் மெள்ள உன் அடிகளைப் பெயர்த்து வைத்து, ஒதுங்கி சென்று-பதுங்கிப்போய், வலக்கண் அனையார்க்கு-அவ்வுடுக்கையின் வலப்புறத்தைப்போன்ற பரத்தையர்க்கு, உரை - சொல்வாயாக எ-று.

பரத்தையர் மாட்டுப்பிரிந்த தலைமகன் தன் குற்றமுணர்ந்து தலைவியின் புலவியைமாற்றத் தூதாகப் பாணனையனுப்பத் தலைவி வெகுண்டுரைத்தபடி. தலைமகன் பரத்தையரைவிட்டுப்பிரிந்து வருத லருமையாதலின் வருவான் என்றது கொடியவை எனக் கொடியவை என்றாள். அவன் வருகை பரத்தையர்க்கே உரைத்தல் வேண்டு மெனச் 'சென்றுரை' என்றாள். பையச் செல்லுதல், தலைவியிடம் வந்தது பரத்தையர் அறியின் வெகுள்வராதலின். துடியின் இடக் கண் அடிபடாது பயன்படாமைபோல் தலைவியும், வலக்கண் அடி பட்டுப் பயன்படல்போல் பரத்தையரும். யாம் - குலமகளிரினம். பாணன் - பாடடுப்பாடும் இழிகுலத்தவன். பாணன் தலைவன் தலை வியர்க்குத் தூதுசெல்பவன். மருதத்திணை; இது புலவி. பாணன், ஊரன்-மருதநிலமக்கள். (8)

(பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகனைப் புலவாததேன்னை என
வினவிய தோழிக்குத் தலைவி கூறியது)

389. சாய்ப்பறிக்க நீர்திகழுந் தண்வய லூரன்மீ
தீப்பறக்க நொந்தேனும் யானேமற்—றீப்பறக்கத்
தாக்கி முலைபொருத தண்சாந் தணியகல
நோக்கி யிருந்தேனும் யான்.

* நாலடி - 390.

இ-ள். சாய்பறிக்க - கோரையைப்பிடுங்கிய மாத்திரையில், நீர் திகழும்-நீர் நிறைந்து விளங்கும், தண்வயல்-குளிர்ந்த வயலையுடைய, ஊரன்மீது-சிற்றூரினனாகிய என் நாயகன்மேல், ஈ பறக்க-ஈ பறந்து போகவும், மனம்நொந்தேனும்-மனம் மிகவும் நொந்தவளும், யானே-நானே, தீ பறக்க - காமத் தீப்பொறி பறக்கும்படி, முலை-பரத்தையர் தமது முலைகளால், தாக்கி பொருத-மோதிக் கலவிப் போர்செய்த, தண்சாந்து அணி அகலம் - குளிர்ந்த சந்தனத்தைப் பூசிய மார்பின் நிலை, நோக்கி இருந்தேனும் - பார்த்து வாளா இருந்தவளும், யான்-நானே எ-று.

சாய்-ஒருவகைப்புல்; அதன்கீழ் நீர் திகழ்தல், நீர்நில வளமை குறித்தது. ஈப்பறக்கவும் ஆற்றேன், பரத்தையர் முலையால் தீப் பறக்கத் தாக்கவும் ஆற்றியிருந்தேன் என்றபடி. முலைபொருதல்-இடக்கரடக்கல். தீ - காமத்தீ, தண் சாந்தணிந்தும் தீப்பறத்தல், காமத்தின் மிகுதி காட்டியது. சாந்து, பரத்தையர் பூசியது. இது தலைவிகூற்று. இதுவும் நெய்தற்றிணை. சாய், ஊரன், கருப்பொருள்கள். பரத்தையரிடம் தன் நாயகன் சென்றதைப் பொறுத்தது தன் காதல் மிகுதியாலும் கற்பின் திறத்தாலும் என்க. (9)

(தலைவி பாணனோடு வெகுளல்)

390. * அரும்பவிழ் தாரினா னெம்மருளு மென்று
பெரும்பொய் யுரையாதி பாண—கரும்பின்
கடைக்கண் ணனையநா மூரற் கதனா
லிடைக்கண் ணனையார்க் குரை

இ-ள். பாண-பாணனே, அரும்பு அவிழ் - மலர்முகை விரியும், தாரினான் - மாலையையுடைய எம் தலைவன், எம் அருளும் என்று - எமக்கருள் செய்வானென்று, பெரும்பொய்-பெரியதொரு பொய்யை, உரையாதி-எம்மிடம் சொல்லாதே, ஊரற்கு - சிற்றூரினனாகிய எம் நாயகனுக்கு, கரும்பின் கடைக்கண்-கரும்பினது கடையிடத்துள்ள கணுக்களை, அனையம் - ஒத்திருக்கின்றோம், அதனால் இடைக்கண் அனையார்க்கு - அதனால் அக்கரும்பின் நடு இடத்தை ஒத்திருக்கும் பரத்தையர்க்கு, உரை-சொல்வாயாக எ-று.

இது மேல் 388-ம் செய்யுளை ஒத்தது. திணையும் துறையும் அவை. அருளுதல் - பண்டைக்காத லுடைமைபோல் காட்டித் தலைமகளை நாடி வருதல். பெரும்பொய் - தலைமகள்பால் நினைவு மீதூரப்

* நாலடி - 388.

பரத்தையரைப் பிரிந்து வருகின்றேனென்னும் மொழி. கரும்பின் கடைக்கணு இனிப்பின்மை முன்னரும் உரைக்கப்பட்டது. அரும்பவிழ்-உதாரினன் எனவே அன்பு நெகிழ்ந்த மனமுடையவனென்ற உள்ளுறை பொருளும் கொள்க. (10)

கற்புடைமகளிர் முற்றிற்று.

---

## 40 - ஆம் அதிகாரம். காமநுதலியல்

அஃதாவது இல்லறத்தில் காம இன்பத்தை நுகரும் பகுதியைக் குறித்துரைத்தல். இவ்வின்பம் கீழாய பரத்தையரொழியத் தலையாய கற்புடை மனைவியுடன் பெறுவதே சிறப்பாதலின் இது மேலையதிகாரத்தின் பின் வந்தது.

(தலைமகற்கு வாயில்நேர்ந்த தோழி தலைமகள்
புலவி நீங்கச் சொல்லியது)

391. முயங்காக்காற் பாயும் பசலைமற் றூடி
யுயங்காக்கா லுப்பின்றாங் காமம்—வயங்கோத
நில்லாத் திரையலைக்கு நீள்கழித் தண்சேர்ப்ப
புல்லாப் புலப்பதோ ராறு.

இ-ள். வயங்கு ஓதம் - விளங்கும் கடலொலி, நில்லா-அடங்காமல், திரை அலைக்கும்- அலைவீசும், நீள் கழி-நீண்ட கழிகளின், தண் சேர்ப்ப-குளிர்ந்த கரையையுடையவனே, முயங்காக்கால்-காதலர்கள் புணராவிடில், பசலை - நிறவேறுபாடு, பாயும் - மெய்யில் மிக்குப் பரவும், ஊடி-சிறு கோபங்கொண்டு, உயங்காக்கால் - வருந்தாவிடில், காமம்-காமநுகர்ச்சி, உப்பு இன்றாம் - சுவையற்றதாகும், (ஆதலின்) புல்லா-கூடி, புலப்பது - பின் ஊடுவது, ஓர் ஆறு - சுவையுடன் காமநுகர்வதற்கு ஒருவழி யின்பமாம் எ-று. மற்று-அசை.

பரத்தையர் நிமித்தம் பிரிந்த தலைவன் பின்னர்த் தோழியின் உதவியால் தலைவியை யடையவும், தலைவியின் கோபமின்னும் மாறாததால் அக்கோபத்தை மாற்றுவதற்குத் தோழி உரைத்ததென்க. திணை-மருதம், ஊடல். கழி-மருதநிலத்தது. முயங்குதல்-இடக்கர். பசலை - பிரிந்த மகளிர்க்குப் பிரிவினால் உண்டாகும் நோயின் வேறுபாடு; சுணங்கு என்றும், தேமல் என்றும் வழங்கப் படும். உப்பு - * இன்பச்சுவை. உணவுக்கு உப்பு இன்றியமையா

* "உப்பமைந்தற்றாற் புலவி"—(குறள் - 132)

தது போல் கூடலுக்கு ஊடலும் இன்றியமையாதது என்க. ஊடுதலே இன்பமெனினும் † கூடுதல் அதற்கின்பம் என்பது பெரும்பாலும் உலகவழக்கமாயிருக்கக் கூடியபின் ஊடுதலும் இன்பநுகர்ச்சிக்கு ஒருவழி; ஆதலின் இவ்வூடலை நீக்கி முயங்கிப் பின் ஊடுக எனத் தலைவியைத் தெருட்டினாள் என்க. வயங்கோதச் சேர்ப்ப என்றதால் பரத்தையர் மாட்டொழுகியதால் உண்டாகிய அலர் உடையவன் என்றும் உள்ளுறை கொள்க. (1)

(பருவங்கண்டாற்றாளாகிய தலைவி தோழிக் குரைத்தது)

392. தம்மமர் காதலர் தார்சூ ழணியகலம்
விம்ம முயங்குந் துணையில்லார்க்—கிம்மெனப்
பெய்ய வெழிலி முழங்குந் திசையெல்லா
நெய்த லறைந்தன்ன நீர்த்து.

இ-ள். தம் அமர் - தம்மை விரும்பும், காதலர்-தலைவரது, தார் சூழ் அணியகலம்-மாலையணிந்த அழகிய மார்பை, விம்ம முயங்கும்-மகிழ்ச்சியாற் பருக்கும்படித் தழுவும், துணையில்லார்க்கு - அத் தலைவரையில்லாத மாதர்க்கு, எழிலி - மேகம், இம் என - இம்மென்னு மொலியுடன், பெய்ய முழங்கும் - பொழிந்து ஒலிக்கும், திசையெல்லாம் - திக்குக்களெல்லாம், நெய்தல் அறைந்த அன்ன - சாப்பறை அறைந்தாற்போன்ற, நீர்த்து-தன்மையுடையதாம் எ-று.

இது கற்பின்முல்லை. எழிலி-முல்லைக்கருப் பொருள். கார்காலத்தில் மீள்வதாக சொல்லிப்பிரிந்த தலைவன் குறித்தகாலத்தில் வாராமையால், தலைவி வருந்தியுரைத்தல். இது * கூறுமெல்லை, எழிலி முழங்கவும், எத்திசையும் அவ்வொலிகேட்கவும், அதுகேட்டும் தலைவன் வாராமையால் தானே இறப்பதாகவும், அதற்கு மேகம் சாப்பறை யறைவதாகவும் கருதினாள் என்க. அமர்தல் - விரும்புதல். விம்மும்படி முயங்கும் என்க. இம்-ஒலிக்குறிப்பு. பெய்ய - பெய்து, வினையெச்சத்திரிபு. திசை-திசையிலெழும் ஓசை; ஆகுபெயர். (2)

(தலைமகள் செலவுடன்படாமையைத் தலைமகற்குத்
தோழி சொல்லியது)

393. கம்மஞ்செய் மாக்கள் கருவி யொடுக்கிய
மம்மர்கொண் மாலை மலராய்ந்து பூத்தொடுப்பாள்
கைம்மாலை யிட்டுக் கலுழ்ந்தா டுணையில்லார்க்
கிம்மாலை யென்செய்வ தென்று.

---

† குறள் - 1330.

இ-ள். கம்மம் செய் மாக்கள் - கம்மியத் தொழில் செய்பவர், கருவி ஒடுக்கிய - தம்முடைய கருவிகளை வேலைமுடிவில் அடக்கி விட்ட, மம்மர்கொள் மாலை - மயக்கங்கொண்ட மாலைப்பொழுதில், மலர் ஆய்ந்து - மலர்க்களை தெரிந்து எடுத்து, பூ தொடுப்பாள் - பூமாலை தொடுக்கும் என் தலைவி, துணை இல்லார்க்கு-காதல் இல்லாதவர்க்கு, இம்மாலை-இந்தமாலை, என் செய்வது என்று - என்னபயன் தருவதென்று, கைமாலை-தன் கையிலிருந்த மாலையை, இட்டு கலுழ்ந்தாள்-நிலத்திலெறிந்து அழுதாள் எ-று.

களவொழுக்கத்தில் அமைந்த தலைவன் ஒரு வினையின்பொருட்டு வெளிநாடு ஏகுவதற்கு, தலைமகளின் சம்மதியைத் தோழியின் மூலமாகக் கேட்கவும் அவள் அதற்கிசையாமையைத் தோழி குறிப்பாகக் கூறுகின்றாள். மாலையில் பூத்தொடுக்கும் என் தலைவி, தன் காதலன் பிரிந்தபின் அம்மாலை என்னபயன் என்று பிரிவதன் முன்னமே வருந்தினாள். ஆதலின் நீ செல்லற்க என்றாள் என்க. கம்மம்-கம்மாளத்தொழில்; அது செய்வாரும் வினைமுற்றி மாலையில் மனை நாடுவார் என்றபடி. மம்மர்-காமக்களிப்பின் மயக்கம். * "மருண்மாலை" என்றார் பிறரும். நாயகன் வனப்புக்கேற்ற மலராய்ந்து என்க. (3)

(வினைமுற்றிமீண்ட தலைமகன் பாகன் கேட்பச்சொல்லியது.)

394. செல்சுடர் நோக்கிச் சிதரரிக்கண் கொண்டநீர்
மெல்விர லூழ்தெறியா விம்மித்தன்—மெல்விரலி
னாள்வைத்து நங்குற்ற மெண்ணுங்கொ லந்தோதன்
றோள்வைத் தணைமேற் கிடந்து.

இ-ள். செல் சுடர் நோக்கி-மறையும் சூரியனைப் பார்த்து, (அதனால்) சிதர் அரி கண் - சிந்திய செவ்வரிபரந்த கண்களில், கொண்ட நீர்-நிறையத்தங்கிய நீரை, மெல்விரல் - தனது மெல்லிய விரலால், ஊழ்தெறியா விம்மி-முறைமுறையாக வழித்தெறிந்து அழுது, தன் மெல் விரலின் - தனது மெல்லிய விரலால், நாள் வைத்து - (நாம் பிரிந்த) நாட்களை வைத்தெண்ணி, அணைமேல் - படுக்கையில், தன் தோள் வைத்து கிடந்து - தனது தோட்களைத் தலையணையாக வைத்துப் படுத்து, அந்தோ-ஐயோ, நம் குற்றம் எண்ணுங்கொல்-நம்முடைய குற்றங்களை நினைப்பாளோ எ-று.

ஒரு வினை கருதிப் பிரிந்த தலைமகன் அது முடிந்து ஊருக்கு மீண்டு வரும்போது, வழியில் தன் தலைவியின் ஆற்றாத நிலையைத்

* சிலப்—கானல்வரி.

தான் நினைந்து அதனைத் தானூர்ந்துவரும் தேர்ப்பாகனுக்கு உரைத்தது. செல்சுடர்-மாலைச்சூரியன்; பிரிந்த காதலர்க்குத் துன்புறுத்துவனவற்றுள் மாலையும் ஒன்று ஆகலின் மாலையைக்கண்டு அழுவாள் என்க. ஊழ்-முறைமை; ஒன்றன்பின் ஒன்றாய்க் கண்ணீர் சிந்தும் முறை. குற்றம் - பிரிந்ததும், குறித்தநாளில் திரும்பாமையும். விம்மி - அழுகை என்னும் மெய்ப்பாடு. இனித் தாமதிப்பின் அவள் இறப்பள் ஆதலின் பாக விரைக என்பது எச்சம். (4)

(தலைமகன் றானுற்றதைப் பாங்கற்குச் சொல்லியது)

395. கண்கய லென்னுங் கருத்தினாற் காதலி
பின்சென்ற தம்ம சிறுசிரல்—பின்சென்று
றூக்கி யெழுந்து மெறிகல்லா வொண்புருவம்
கோட்டிய வில்வாக் கறிந்து.

இ-ள். சிறுசிரல் - சிறிய சிச்சிலிக்குருவி, (காதலி) கண் கயல் என்னும் கருத்தினால் - நான் காதலித்தவளது கண்கள் சேல்மீன் என்னும் எண்ணத்தினால், காதலி பின்சென்றது-(அவற்றைக் கொத்திபுண்ண) அவள் பின்றொடர்ந்து சென்றது; பின்சென்றும்- அவ்வாறு தொடர்ந்துபோகியும், ஊக்கி எழுந்தும் - உறுதியுடன் முயன்றும், ஒள்புருவம் - அவளது ஒள்ளிய புருவம், கோட்டிய - வளைக்கப்பட்ட, வில்வாக்கு அறிந்து - வில்லின் வாங்கிய (வளைந்த) நிலை கண்டுணர்ந்து, எறிகல்லா-அக்கண்களைக் குத்தி எறியமாட்டாது, அம்ம-என்ன விந்தை எ-று.

தலைமகன் தன் காதலை எழுப்பிய தலைவியின் அழகின் பெருமையையும் அதனால் தான் அடைந்த துன்பத்தையும் தனது நண்பனுக்கு விரித்துரைத்தபடி. கண் புருவங்களின் அழகு உரைப்பவே ஏனையவற்றையும் உரைத்தவாறு. கண்ணையும் புருவத்தையும் கயல், வில் என்று மயங்கியதால் இது மயக்கவணி. சிரல் - மீன்கொத்திப் புள். எறிகல்லாது-ஈறு தொகுத்தல. வாக்கு-வாங்குதல; முதனிலைத் தொழிற்பெயர். வில் வாங்குதல-வில்லை வளைத்தல். (5)

(தன்மகள் போகிய சுரத்தருமைக்கு நற்றாய் இரங்கல்)

396. அரக்காம்ப னாறும்வா யம்மருங்கிற் கன்னோ
பரற்கான மாற்றின கொல்லோ—வரக்கார்ந்த
பஞ்சிகொண் டூட்டினும் பையெனப் பையெனவென்
றஞ்சிப்பின் வாங்கு மடி.

இ-ள். அரக்கு ஆம்பல் நாறும் - செவ்வல்லிப் பூப்போலும் மணம்வீசும், வாய் - வாயையும், அம் மருங்கிற்கு - அழகிய இடை

யிணையுமுடைய என் மகட்கு, அரக்கு ஆர்க்க - செந்நிறம் தோய்ந்த, பஞ்சிகொண்டு - செம்பஞ்சுக் குழம்புகொண்டு, ஊட்டினும்-முன்பு பூசினாலும், பையென பையென என்று - (அதற்கு நொந்து) மெல்லென மெல்லென என்று கூறி, அஞ்சி-பூசப்படுவதற்குமஞ்சி, பின் வாங்கும் - இளைத்துப் பின்வாங்கிய, அடி-அவளுடைய பாதங்கள், பரல்கானம் - பருக்கைக் கற்களையுடைய காட்டுவழிபோக, அன்னோ - அந்தோ, ஆற்றின கொல்லோ-பொறுத்தனவோ எ-று. ஓ-அசை.

களவொழுக்கத்திற் காதலன்பின் சுரத்தின் வழியாகச் சென்ற தன் மகளது அருமை நினைந்து இவளால் அக்கொடிய வழியில் நடக்கலாகுமோ என ஈன்ற தாய் இரங்கி வருந்தினது. சுரம்-பாலைவனத்து வழி. வாயையுடைய மருங்குல் என்க; மருங்குல்-சினையாகு பெயர். கானம் - கானத்துநெறி. அரக்கு-செவ்வரக்கு, நிறத்தைமட்டிற் குறித்தது. பஞ்சி - செம்பஞ்சுக் குழம்பு; இதனை மகளிர் அடிகட்கு மென்மையும் அழகும் உண்டாகப் பூசுவது; அதன் வெம்மையும் ஆற்றாது பையென என்றாள் என்க. வாங்குதல - பின்னிழுத்துக் கொள்ளுதல். அடி ஆற்றுங் கொல் என்க. உம்மை-உயர்வு சிறப்பு.

(தலைமகள் பிரிவுடன் படாமையைத் தோழி
தலைமகற்குச் சொல்லியது)

397. ஓலைக் கணக்க ரொலியடங்கு புன்செக்கர்
மாலைப் பொழுதின் மணந்தார் பிரிவுள்ளி
மாலை பரிந்திட் டழுதாள் வனமுலைமேற்
கோலஞ்செய் சாந்தந் திமிர்ந்து.

இ-ள். மணந்தார் - களவின் மணந்த காதலர், பிரிவு - பிரிந்து செல்வதை, உள்ளி-மனதில நினைந்து, ஓலை கணக்கர்-ஓலையெழுதும் கணக்கரது, ஒலி அடங்கும்-ஓசை ஒடுங்கும்படியான, புன் செக்கர்-புல்லிய செவ்வானமுடைய, மாலைப்பொழுதில - மாலைக்காலத்திலே, மாலை - தான் சூடிய பூமாலையை, பரிந்து இட்டு - வருத்தமுற்றுக் கழற்றி எறிந்தும், வனம் முலைமேல்-அழகிய முலையின்மேல், கோலம் செய்சாந்தம் - தொய்யிலெழுதிய சந்தனத்தை, திமிர்ந்து - அழித்தும், அழுதாள்-புலம்பினாள் எ-று.

இது மேல் 393-ம் செய்யுளோடு ஒப்புமையுடையது. மாலைப் பொழுதில் வினைசெய்பவர் ஓய்வாதலின் ஒலியடங்குமாலை என்றார். புன்மாலை, பிரிந்தார்க்குத் துயர்செய்தலின். பிரிவு-இனிமேற் பிரிதல்; கோலம் - தொய்யிலால் பெற்ற அழகு; இது மெய்யுறு புணர்ச்சி

யின்பொழுது * தலைவனால் தலைமகளது முலைமீது எழுதுவது. இஃதன்றியே அவளது முலை அழகுடையன என வனமுலை என்றார். பிரிவினை நினைந்து, நாயகன் செய்த கோலத்தையும் வெறுத்தாள் என்றபடி. மணந்தார்-களவிற் சேர்ந்தவர்; வினையின் பெயர். (7)

(உடன்போக்குப் பொருந்தின தலைமகள்
தோழிக்குச் சொல்லியது)

398. கடக்கருங் கானத்துக் காளைபின் னாளை
நடக்கவும் வல்லையோ வென்றி—சுடர்த்தொடீஇ
பெற்றா னொருவன் பெருங்குதிரை யந்நிலையே
கற்றா னஃதூரு மாறு.

இ-ள். சுடர்தொடீஇ - ஒளிவிடும் வளையலணிந்த என் தோழி! கடக்க அரும் கானத்து - யாவராலும் கடந்து செல்வதற்கரிய காட்டில், காளைபின் - காளைபோலும் என் காதலன்பின், நாளை நடக்கவும் வல்லையோ - நாளைக்கு நடந்தேகவும் வலிமை யுடையவளோ நீ, என்றி-என்று என்னை வினவினாய்; பெரும் குதிரை - பெரியதொரு குதிரையை, பெற்றான் ஒருவன்-அதையடைய பெற்றவனாகிய ஒருவன், அந்நிலையே-அதையடைந்த அப்பொழுதே, அஃது ஊரும் ஆறு கற்றான்-அதனை ஊர்ந்து செலுத்தும் வகையும் கற்றவனாவான் அன்றோ எ-று.

இதுவும் பாலை. காதலனுடன் சுரம் கடந்து செல்லச் சம்மதித்த தலைவி, அவனுடன் செல்வதெளிதே என்றபடி. குதிரைகொண்டவன உடனே அதனையூரும திறனும் அறிதல்போல் உடன்போகத் துணிந்த நான் சுரங்கடக்கவும் வல்லேன் என்றபடி; பிறிதுமொழிதலணி. காளை-ஆகுபெயர். தொடீஇ-அளபெடை, விளியுருபு. (8)

(மகளைப்போக்கிய நற்றாய் கவன்றுரைத்தது)

399. முலைக்கண்ணு முத்து முழுமெய்யும் புல்லு
மிலக்கணம் யாது மறியேன்—கலைக்கணம்
வேங்கை வெரூஉ நெறிசெலிய போலுமென்
பூம்பாவை செய்த குறி.

இ-ள். முலைக் கண்ணும்-(எனது மகள் தன்) முலைக்கண்களும், முத்தும்-முத்துமாலைகளும் அழுந்துமாறு, முழுமெய்யும்-என் உடல் முழுமையும், புல்லும் - தன்னுடலோடு முன்பு தழுவிக்கொண்ட,

* "விரும்பிநீ யென்றோ ளெழுதிய தொய்யிலும்"—கலித் - 18
"உருத்தெழு வனமுலை யொளிபெற வெழுதிய
தொய்யில்"—குறுந் - 276.

இலக்கணம்-அடையாளம், யாதும்-எதுவும், அறியேன்-அப்போது அறிந்திலேன்; என் பூம்பாவை - அழகிய பதுமைபோன்ற என் மகள், செய்த குறி - காட்டிய இவ் அடையாளம், கலைகணம் - மான் கூட்டங்கள், வேங்கை வெரூஉம்-வேங்கையைக்கண்டு பயந்தோடும், நெறி - காட்டு வழியில், செலியபோலும் - செல்வதன் நிமித்தம் போலும் எ-று.

தலைவனுடன் போதற்குத் துணிந்த தலைமகள், தன அன்னையுடனுறை உரைத்த குறிக் குறைமுறையாகத் தழுவிப் பிரிந்தாள்; அதன் குறிப்பை அப்போது அறியாத அன்னை அவள் சென்றபின் உணர்ந்து வருந்தினாள் என்க. பாலைத்திணை; பிரிவு. இலக்கணம் - குறி. வேங்கையைக் கலை வெரூஉம் என்க; சொல்லிசை அளபெடை. செலிய - "செய்யிய" வினையெச்சம். பாவை-ஆகுபெயர். புல்லுதல்-தழுவுதல், * தானே வலியத்தழுவியது, உடனே விட்டுப்பிரிதலை நினைந்து. (9)

(தலைமகள் பிரிவாற்றாமையைத் தோழிக்குச் சொல்லியது)

400. கண்மூன் றுடையானுங் காக்கையும் பையரவு
மென்னீன்ற யாயும் பிழைத்ததென்—பொன்னீன்ற
கோங்கரும் பன்ன முலையாய் பொருள்வயிற்
பாங்கனூர் சென்ற நெறி.

இ-ள். பொன் ஈன்ற-பொன் போலும் சுணங்குபூத்த, கோங்கு அரும்பு அன்ன - கோங்குமலரின் முகையை ஒத்த, முலையாய்-முலைகளையுடைய தோழியே, பொருள்வயின் - பொருள் ஈட்டும் நிமித்தம் பிரிந்த, பாங்கனூர் சென்ற நெறி - நாயகன் சென்றவழியே எனது துயர்க்குக் காரணமாயிருக்க, கண்மூன்றுடையானும்-மூன்று கண்களையுடைய சிவபிரானும், காக்கையும் - காகமும், பை அரவும் - படமுடைய இராகுவெனும் பாம்பும், என் ஈன்ற - என்னைப்பயந்த, யாயும் - அன்னையும், பிழைத்தது என் - எனக்குப் பிழைசெய்தது என்னை (இல்லையே) எ-று.

இதுவும் பாலை, பிரிவு. பொருள்வயிற் பிரிந்த தலைவனை நினைந்து வருந்தும் தலைவியின் துயராற்றாத தோழி மன்மதனையும் குயிலையும்

---

* "குறுக வந்து குவவுநுத னீவி
மெல்லெனத் தழீஇயினே னாக வென்மகள்
நன்னா ராகத் திடைமுலை வியர்ப்பப்
பல்கான் முயங்கினள் மன்னே"—அகம் - 49.

மதியையும் அன்னையையும்பழிக்க, தலைவி, அவர் சென்ற வழியில்லை யாயின் பிரிவில்லை, ஆதலின் மன்மதன் முதலியோரைக் குறை கூறுதல் தகாது என்றாள் என்க. பிரிவுற்ற காலத்தில் மன்மதன் தனது அம்புகளாலும், குயில் தன் குரலாலும், மதி தன் தண்ணிய நிலவாலும் துன்பத்தை அதிகப்படுத்துவரென்றும், கூடியகாலத் தில் இவையே இன்பந்தருவன என்றும் கொள்க. மன்மதனை எரித் துப் பின்னர் அவனை உயிர்ப்பித்ததால் சிவனும், தன் கூட்டில் பொரித்து வெளிப்பட்ட குயிலைத் தன்னினமன்று எனக் கொல்லாது விடுப்பதால் காகமும், மதியை விழுங்கியும் மீண்டும் அது நிலாவ விடுத்த இராகுவும், தலைவி பிறந்த அப்பொழுதே அவளைக் கொல் லாது வளர்த்த அன்னையும் நிந்தனைக்காளாயினார் என்றபடி. கண் மூன்றுடையான் - முக்கண்ணன். பொன் - பசலை, தேமல்; ஆகு பெயர். முலையாய்-விளி. பாங்கனார்-காதலன். நெறியன்றிப் பிழைத்த தென் எனக் கூட்டுக. (10)

நாலடியார் முற்றியது.

---

## பிழைத்திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 32 | 34 | நச்சினார்க்கனர் | நச்சினார்ககினியர் |
| 59 | 25 | பசைந்தரைத், | பசைந்தாரைத் |
| 81 | 12 | நுகர்ச்சியாதலின் | நுகர்ச்சியுண்டாதலின் |
| 89 | 23 | இரும்பு, | இரும்பு- |
| 106 | 28 | நதிபோல | நதிபோல, |
| 122 | 29 | குனறன்னர் | குன்றன்னார் |
| 128 | 32 | பகைவர் | பகைவரல்லாதவர் |
| 143 | 35 | உருவுங் | குருவுங் |
| 152 | 33 | என்னும் | ஏனினும் |
| 172 | 21 | உடன்பட்டு | உடன்பாட்டு |
| 248 | 33 | தலைமகள் | தலைமகன் |

# நாலடியார்

## செய்யுள் முதற் குறிப்பு


| செய்யுள் | பக்கம் | செய்யுள் | பக்கம் | செய்யுள் | பக்கம் |
|---|---|---|---|---|---|
| அகத்தாரே | 31 | இசையுமெனினு | 152 | உணரவுணரு | 247 |
| அக்கேபோ | 123 | இடம்பட | 116 | உண்டாய | 284 |
| அங்கண்-ணக | 151 | இடும்பைகூர் | 107 | உண்ணானொளி | 9 |
| அங்கண்-ணம | 373 | இட்டாற்றுப் | 288 | உபகாரஞ் | 69 |
| அங்கோட் | 372 | இமைக்கு | 323 | உயிர்போயார் | 50 |
| அச்சம் | 81 | இம்மியரிசித் | 94 | உருவிற்கமை | 240 |
| அடுக்கன்மலை | 203 | இம்மைபயக்கு | 132 | உருவுமிளமையு | 102 |
| அடைந்தார்ப் | 173 | இம்மையு | 294 | உலகறியத் | 204 |
| அத்திட்ட | 281 | இரவலர் | 279 | உளநாள் | 324 |
| அம்பலய | 87 | இருக்கை | 143 | உள்கூர் | 286 |
| அம்புமழலு | 89 | இரும்பார்க்குங் | 122 | உள்ளத்தா | 92 |
| அரக்காம்ப | 396 | இலங்குநீர் | 227 | உள்ளத்துணர் | 386 |
| அருகுள | 261 | இல்லமிளமை | 53 | உள்ளமொருவ | 380 |
| அரும்பவிழ் | 390 | இல்லாமை | 303 | உறக்குந் | 38 |
| அரும்பெறல் | 34 | இல்லாவிடத்து | 91 | உறற்பால | 104 |
| அரும்பெறற் | 381 | இழித்தக்க | 302 | உறுபுலி | 193 |
| அருளினற | 321 | இழைத்தநா | 6 | உறுபுனறந் | 185 |
| அலகுசால் | 140 | இளையா | 65 | உறைப்பருங் | 184 |
| அவமதிப்பு | 163 | இறப்பச்சிறி | 99 | ஊக்கித்தாங் | 57 |
| அவ்விய | 322 | இறப்பநினை | 174 | ஊரங்கணநீ | 175 |
| அழன்மண்டு | 202 | இறப்பவே | 223 | ஊருளொழுந்த | 90 |
| அள்ளிக்கொள் | 262 | இற்சார்வி | 182 | ஊறியுவர்த்தக்க | 47 |
| அறம்புகழ் | 82 | இற்பிறப்பில் | 320 | ஊறுசெய் | 379 |
| அறிமினற | 172 | இற்பிறப்பெண்ணி | 212 | எஞ்ஞான்று | 385 |
| அறியாப்பருவத் | 171 | இனநன்மை | 146 | எத்துணையானு | 272 |
| அறியாருமல்ல | 108 | இனியார்தந் | 369 | எந்நிலத்து | 243 |
| அறிவ | 74 | இன்பம் | 79 | எம்மையறிந்திலி | 165 |
| அறுசுவை | 1 | இன்னாது | 359 | எய்தியிருந்த | 325 |
| ஆகாதெனி | 337 | இன்றுகொ | 36 | எறிநீர்ப் | 275 |
| ஆடுகோடாகி | 192 | இன்னாரினைய | 205 | எறியென் | 363 |
| ஆட்பார்த் | 20 | இன்னாசெயினு | 76 | எற்றென்று | 150 |
| ஆணமி | 374 | இன்னா - விடற் | 225 | எனக்குத்தா | 15 |
| ஆமாபோ | 377 | இன்னா - விடு | 226 | எனதெனா | 276 |
| ஆர்த்தபொறிய | 290 | இன்னாவியைக | 306 | எனபாயினு | 292 |
| ஆர்த்தவறிவின | 351 | ஈட்டலுந் | 280 | என்றும்புதியார் | 307 |
| ஆவாநாமாக்க | 32 | ஈண்டுநீர் | 109 | என்னானு | 5 |
| ஆவேறுருவின | 118 | ஈதலிசையா | 181 | என்னேமற் | 330 |
| ஆற்றுந்துணையு | 196 | ஈனமா | 198 | எட்டைப்பரு | 358 |
| ஆன்படுநெய் | 239 | உடாஅது | 10 | எதிலார்செய்த | 378 |
| இசைந்த | 187 | உடுக்கை | 141 | எமாந்தபோழ்தி | 378 |
| இசையாதெனினு | 194 | உடைப்பெருஞ் | 368 | எற்றகை | 98 |
| இசையாவொரு | 111 | உடையா | 160 | ஒண்கதிர் | 176 |

| செய்யுள் | பக்கம் | செய்யுள் | பக்கம் | செய்யுள் | பக்கம் |
|---|---|---|---|---|---|
| ஒருநன்றி | 357 | கற்றனவுங் | 340 | சொற்றளர்ந்து | 13 |
| ஒருநீர்ப் | 236 | கற்றுருரைக்குங் | 260 | சொற்றாற்றுக் | 313 |
| ஒருபுடை | 148 | கனைகடற் | 138 | தக்காருந் | 112 |
| ஒருவரொருவ | 309 | கன்னனி | 334 | தக்கோலந் | 43 |
| ஒக்கியவொள் | 129 | காணிற் | 84 | தங்கண் | 336 |
| ஓதியுமோதா | 270 | காதலார் | 73 | தண்டாச் | 62 |
| ஓலைக்கணக்க | 397 | காலாடுபோ | 113 | தமரென்று | 229 |
| கடகஞ் | 289 | காவாதொருவன் | 63 | தம்மமர் | 392 |
| கடக்கருங் | 398 | காழாய | 342 | தம்மையிகழ்ந்தமை | 58 |
| கடமா | 300 | குஞ்சியழகுங் | 131 | தம்மையிகழ்வாரை | 117 |
| கடல்சார்ந்து | 245 | குடநீரட்டுண் | 382 | தலையேதவ | 365 |
| கடித்துக் | 156 | குடருங் | 46 | தவலருந் | 137 |
| கடிப்பிடு | 100 | குலந்தவங் | 333 | தளிர்மேலே | 355 |
| கடியெனக் | 364 | குற்றமு | 230 | தனதாகத் | 278 |
| கடுக்கியொரு | 189 | கூர்த்துநாய் | 70 | தாஞ்செய் | 120 |
| கடுக்கெனச் | 348 | கேளாதே | 30 | தாமேயு | 327 |
| கடையாயார் | 216 | கொடியவை | 388 | தாழாத்தளரா | 14 |
| கடையெலாங் | 297 | கொடுத்தலுங் | 274 | தான்கெடினுங் | 80 |
| கட்கினியாள் | 384 | கொய்புற் | 350 | திருத்தன்னை | 304 |
| கணங்கொண்டு | 25 | கொலைஞருலை | 331 | திருமதுகை | 291 |
| கணமலை | 353 | கொல்லை | 178 | தினைத்துணைய | 105 |
| கண்கய | 395 | கொன்னே | 55 | தினையனைத்தே | 344 |
| கண்மூன்றுடையா | 400 | கோடேந் | 354 | தீங்கரும் | 199 |
| கப்பிகடவதா | 341 | கோட்டுப்பூ | 215 | துகடீர் | 2 |
| கம்மஞ்செய் | 393 | கோதையருவி | 71 | துக்கத்துட் | 121 |
| கரவாததிண் | 305 | கோளாற்றக் | 191 | துய்த்துக் | 273 |
| கருங்கொள்ளுஞ் | 387 | சக்கரச் | 346 | துன்பமே | 60 |
| கருத்துணர்ந்து | 211 | சாய்ப்பறிக்க | 389 | துன்பம்பலநா | 54 |
| கருமமு | 250 | சான்றாண்மை | 142 | தெண்ணீர்க் | 44 |
| கருமவசைக | 249 | சான்றோரென | 126 | தெரியத்தெரியு | 168 |
| கரும்பாட்டிக் | 35 | சிதலைதினப் | 197 | தெளிவிலார் | 219 |
| கல்லாக்கழிப் | 366 | சிறுகாபெருகா | 110 | தோணியியக்கு | 136 |
| கல்லாதுநீண்ட | 254 | சிறுகாலை | 328 | தோற்போர்வை | 42 |
| கல்லாதுபோகிய | 169 | சீரியார் | 232 | தோற்றஞ்சான் | 7 |
| கல்லாமை | 145 | செந்நெல்லா | 367 | நச்சியார்க் | 299 |
| கல்லாரே | 139 | செம்மை | 85 | நடுக்குற்றுத் | 93 |
| கல்லெறிந் | 66 | செய்கையழிந்து | 147 | நடுவூருள் | 96 |
| கல்லென்று | 253 | செய்யாத | 235 | நட்டார்க்கு | 271 |
| கல்லோங்கு | 283 | செல்சுடர் | 394 | நட்புநா | 12 |
| கல்விகரையில | 135 | செல்லா | 149 | நம்மாலே | 301 |
| கழிந்தா | 49 | செல்வர்யா | 8 | நயவார்க | 267 |
| கழுநீருட் | 217 | செல்வுழிக் | 154 | நரம்பெழுந்து | 153 |
| களர்நிலத்து | 133 | செழும்பெரும் | 352 | நரைவரு | 11 |
| கள்ளார்கள் | 157 | செறிப்பில் | 231 | நல்லகுல | 195 |
| கற்றதூஉ | 314 | செறுத்தோ | 222 | நல்லர்பெரிதளி | 298 |
| கற்றறிந்த | 256 | சென்றே | 24 | நல்லவைசெய்யி | 144 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| நல்லவைநா | 338 |
| நல்லாரெனத் | 221 |
| நல்லார்நயவ | 265 |
| நல்லாவின் | 115 |
| நளிகடற்றண்-நல் | 242 |
| நளிகளற்றண்-நா | 166 |
| நறுமலர்த் | 209 |
| நன்னிலைக் | 248 |
| நாப்பாடஞ் | 312 |
| நாய்க்காற் | 218 |
| நார்த்தொடுத் | 26 |
| நாலாறு | 383 |
| நாள்வாய்ப் | 207 |
| நாறுத்தகடே | 266 |
| நிலநலத்தா | 179 |
| நிலையாமை | 52 |
| நின்றன | 4 |
| நீரினுநுண் | 282 |
| நீருட்பிறந்து | 360 |
| நீர்மையே | 287 |
| நுண்ணுணர்வினு | 233 |
| நுண்ணுணர்வின் | 251 |
| நெடுங்கால | 68 |
| நெருப்பழற் | 124 |
| நேரல்லார் | 72 |
| நேர்த்து | 64 |
| பகைவர்பணி | 241 |
| படுமழை | 27 |
| பண்டமறியார் | 48 |
| பரவாவெளிப்படா | 88 |
| பராஅரைப் | 246 |
| பருவமெனைத் | 18 |
| பலநாளும் | 214 |
| பல்லாரறிடப் | 86 |
| பல்லாவு | 101 |
| பல்லான்ற-பா | 252 |
| பல்லான்ற-வீய | 106 |
| பழமைகர்தாகப் | 10 |
| பழையபரிவ | 349 |
| பனிபடு | 17 |
| பன்றிக்கூழ்ப் | 257 |
| பன்னூஞ் | 159 |
| பாடமே | 316 |
| பாம்பிற்கொரு | 375 |
| பாலாற்கழீஇ | 258 |
| பாலோடளாய | 177 |
| பாவமு | 295 |
| பிறந்தகுல | 285 |
| பிறர்மறை | 158 |
| புக்கவிடத் | 83 |
| புணர்கடல் | 264 |
| புதுப்புனலும் | 370 |
| புத்தகமே | 318 |
| புல்லாப்புன் | 255 |
| புல்லாவெழுத்திற் | 155 |
| புறத்துத்தன் | 308 |
| புன்னுனிமே | 29 |
| பெயற்பான் | 97 |
| பெரியவர் | 125 |
| பெரியார்பெருநட் | 77 |
| பெரியார்பெருமை | 170 |
| பெருகுவது | 234 |
| பெருங்கட | 332 |
| பெருநடை | 343 |
| பெருமுத் | 200 |
| பெருவரைநாட | 186 |
| பெறுவது | 317 |
| பெறுவதொன் | 335 |
| பொத்தநூற் | 376 |
| பொழிந்தினிது | 259 |
| பொழிப்பகல | 319 |
| பொறுப்பரென் | 161 |
| பொற்கலத்துப் | 206 |
| பொற்கலத்தூட்டி | 345 |
| பொன்னிறச் | 269 |
| பொன்னே | 162 |
| மக்களாலாய | 37 |
| மடிதிரை | 224 |
| மதித்திறப் | 61 |
| மரீஇப்பல | 220 |
| மலைநலமுள் | 356 |
| மலைமிசைத் | 21 |
| மல்குதிரைய | 263 |
| மல்லன்மா | 296 |
| மழைதிளைக்கு | 361 |
| மறுமைக்கு | 183 |
| மறுமையு | 95 |
| மறற்றிவா | 19 |
| மனத்தான் | 180 |
| மனைப்பாசங் | 130 |
| மன்றங்கறங்க | 23 |
| மன்னர்திருவு | 167 |
| மாக்கேழ் | 41 |
| மாண்டகுணத் | 56 |
| மாற்றுராய் | 67 |
| மானவருங்கல | 40 |
| முட்டிகை | 208 |
| முட்டுற்ற | 238 |
| முயங்காக்காற் | 391 |
| முலைக்கண்ணு | 399 |
| முல்லைமுகை | 45 |
| முற்றற்சிறு | 37 |
| முற்றுத்தூங் | 190 |
| முன்னரே | 92 |
| மூப்புமேல் | 326 |
| மெய்ஞ்ஞானக் | 311 |
| மெய்வாயகண் | 59 |
| மெல்லியநல் | 188 |
| மைதீர்பசும் | 347 |
| யாஅருலகத் | 119 |
| யாஅரொருவ | 127 |
| யாக்கையை | 23 |
| யாமாயி | 293 |
| யானையனையவர் | 213 |
| யானையெருத்தம் | 3 |
| வடுவிலா | 114 |
| வயாவும் | 201 |
| வலவைக | 268 |
| வழங்காத | 277 |
| வழுக்கெனைத்து | 362 |
| வளம்பட | 103 |
| வற்றிமற் | 73 |
| வாழ்நாட் | 22 |
| வானிடுவில்-கட-வா | |
| விரிநிற | 164 |
| விருப்பிலா | 210 |
| விழைந்தொரு | 339 |
| விளக்குப் | 51 |
| விளக்கொளி | 371 |
| வினைப்பயன் | 39 |
| வெறியயர் | 16 |
| வெறுமை | 329 |
| வென்றிப் | 315 |
| வேம்பினிலை | 244 |
| வேற்றுமை | 75 |
| வைகலும் | 39 |
| வைப்புழிக் | 134 |

MADRAS